# ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு

முதல் தொகுதி

எஸ். ஜெயசீல ஸ்டீபன்

புதுவை மொழியியல் பண்பாட்டு
ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

# ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு

## முதல் தொகுதி

(கி.பி. 1760 - 1762)

# ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு

ஆராய்ச்சிப் பதிப்பு

முதல் தொகுதி

[கி.பி. 1760 - 1762]

பதிப்பாசிரியர்
எஸ். ஜெயசீல ஸ்டீபன்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

வெளியீட்டு எண் : 14

முதற்பதிப்பு : 2000

ISBN - 81- 85452 - 13 - x

© : புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

*வெளியீட்டாளர்* : புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
19, சின்னசுப்பராயப்பிள்ளை வீதி,
புதுச்சேரி – 605 001.
இந்தியா

*நூல் வடிவமைப்பு* : ஏ.வி. கம்பியூட்டர்ஸ்
26, சுப்புராயன் தெரு, தாகூர் நகர்,
புதுச்சேரி – 605 008.

*அச்சிட்டோர்* : குமாரி பிரிண்டர்ஸ்
36, திருநாவுக்கரசு வீதி
விசுவநாதன் நகர்
முத்தியாலுப்பேட்டை
புதுச்சேரி–605 003.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வாழ்த்துரை | ... | VII |
| 2. | அணிந்துரை | ... | XI |
| 3. | என்னுரை | ... | XIII |
| 4. | பதிப்புரை | ... | XV |
| 5. | சுருக்கக் குறியீட்டு விளக்கம் | ... | XIX |
| 6. | ஆய்வுரை | ... | XXI |
| 7. | நாட்குறிப்புச் சுவடியின் மூலம் | ... | 1 |
| 8. | ஆய்வுக் குறிப்புகள் | ... | 178 |
| 9. | இணைப்புகள் | ... | 189 |
| 10. | அருஞ்சொற்பொருள் | ... | 193 |
| 11. | ஆய்வடங்கல் | | |
| 12. | சொல் அகராதி | | |

நாள் : 02 - 06 - 2000

**ப. சண்முகம்**
முதலமைச்சர்
புதுவை அரசு

# வாழ்த்துரை

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் புதுச்சேரியிலுள்ள மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை ஆராய்ச்சி செய்வதற்காகப் புதுவை அரசால் ஏற்படுத்தப்பட்ட ஓர் உயர் ஆராய்ச்சி நிறுவனமாகும். இந்த ஆய்வு நிறுவனம் கல்வியாளர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பயன்படும்வகையில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருவதோடு புதுவை மக்களுக்குப் பயன்படும் வகையிலும் பல பயனுள்ள பணிகளைச் செய்து வருகிறது. புதுவைக் கவிஞர்களுடைய படைப்புகளை உலகறியச் செய்யும் வகையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல், புதுவைக் கலைக் களஞ்சியம் உருவாக்குதல் போன்ற பணிகளும் இங்கு நடைபெற்று வருவதை அறிகிறேன்.

புதுவையின் **18–**ஆம் நூற்றாண்டு வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு உதவியாக உள்ள நாட்குறிப்புகளைப் பதிப்பித்தல் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது பாராட்டத்தக்கதாகும். இதற்கு முன்னர் ஆனந்தரங்கர் நாட்குறிப்பை மறுபதிப்புச் செய்து வெளியிட்ட இந்நிறுவனம் தற்போது ரங்கப்ப திருவேங்கடம்பிள்ளை அவர்களுடைய நாட்குறிப்பையும் வெளியிடுவது புதுவைக்குப் புகழ் சேர்ப்பதாக அமையும்.

இந்த நாட்குறிப்பின் சுவடிகளைப் பல்வேறு இடங்களுக்குச் சென்று சேகரித்துப் பதிப்பித்த பதிப்பாசிரியர் முனைவர் ஜெயசீல ஸ்டீபன் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்நாட்குறிப்பை வெளியிட்டுள்ள புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகள் சிறக்க வாழ்த்துகிறேன்.

நாள் : 30 - 05 - 2000

**ந. ரங்கசாமி**
சுற்றுலா மற்றும் கல்வி அமைச்சர்
புதுவை அரசு

सत्यमेव जयते

# வாழ்த்துரை

ஒரு நாட்டின் சமூக அரசியல் வரலாற்றை அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுகள், செப்பேடுகளைப் போன்றே நாட்குறிப்புகளும் முக்கியமான தரவுகளாகக் கருதப்படும். அரசர்களால் எழுதப்பட்ட வரலாறும், வெளிநாட்டவரின் பார்வையில் எழுதப்பட்ட வரலாறும் நாட்குறிப்புகளின் வழியாக அறியப்படும் வரலாறும் வெவ்வேறு தன்மையானவை. நாட்குறிப்பை ஆவணங்களாக எடுத்துக் கொள்ளும்பொழுது அந்நாட்குறிப்பை எழுதியவரின் சமூக அரசியல் செல்வாக்குப் போன்றவற்றையும் கருத்தில் கொள்ளவேண்டும். அந்தவகையில் கி.பி. **1760** வரையிலான ஆனந்த ரங்கர் நாட்குறிப்பு அவர் தம் காலத்தில் அரசியல் தலைமையிடம் உள்ள நெருக்கத்தையும், அதேவேளையில் பொதுமக்களுடைய வாழ்க்கை நடைமுறைகளையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. இந்த நாட்குறிப்புத் தொகுதிகளில் எட்டு மட்டும் மறுபதிப்புச் செய்து ஏற்கெனவே புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் வழியாக வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நான்கு தொகுதிகளைப் பதிப்பிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் கி.பி.**1760**–க்குப் பின் இருபத்தோரு ஆண்டுக்கால வரலாற்றை அறிந்துகொள்ள உதவுவது ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை அவர்களுடைய இந்த நாட்குறிப்பாகும். இந்த நாட்குறிப்பின் சிறப்பு புதுச்சேரி ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்பதாகும். அத்தோடு ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை அவர்களும் அரசின் எந்தப் பணியிலும் இல்லாமல் நாட்குறிப்பு எழுதியிருப்பதால் இதனுடைய உள்ளடக்கம் சற்று வேறுபட்டதாகவும், அதேநேரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது.

**18**–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பயன்படும் வகையில் அமைந்த இந்த நாட்குறிப்பின் முதல் இரண்டு தொகுதிகளை முனைவர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் பல்வேறு நூலகங்களிலுள்ள சுவடிகளை ஆராய்ந்து பதிப்பித்துள்ளார். இந்தத் தொகுதிகளைப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுப் புதுவைக்குப் புகழ் சேர்த்துள்ளது.

அச்சில் வெளிவராத ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பை ஆய்வுப் பதிப்பாகப் பதிப்பித்த முனைவர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்களையும் இந்தப் பதிப்பு வெளிவருவதற்கு உதவிய வல்லுநர் குழுவையும், இதற்கான ஏற்பாடுகளைச் செய்த புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தையும் பாராட்டுகிறேன்.

ந. ரங்கசாமி
*(ஒப்பம்)*

நாள் : 26 - 05 - 2000

**ந. இராஜசேகர்,** இ.ஆ.ப.
கல்விச் செயலர்
புதுவை அரசு

सत्यमेव जयते

# அணிந்துரை

ஆனந்தரங்கப் பிள்ளையின் வாரிசான திருவேங்கடம் பிள்ளை (ஆனந்தரங்கரின் தம்பி மகன்) ஆனந்தரங்கரைப் போன்றே நாட்குறிப்பை எழுதியுள்ளார். புதுச்சேரியின் வரலாற்றில் திருவேங்கடம் பிள்ளையின் வரலாறு ஓர் ஒளிமிகுந்த அத்தியாயமாகும். ஆனந்தரங்கரின் நாட்குறிப்பைத் தொடர்ந்து நமக்குக் கிடைக்கும் மேலும் ஒரு வரலாற்று நாட்குறிப்பு இது.

திருவேங்கடம் பிள்ளை 1760ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7ஆம் நாள் தொடங்கி 1781ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் வரை எழுதிய நாட்குறிப்புகள் புதுச்சேரியின் வரலாற்றுப் பெட்டகங்களாகும். ஆங்கிலேயரின் 1761ஆம் ஆண்டு புதுச்சேரி முற்றுகைக்குப் பின்பு தரங்கம்பாடியிலிருந்து புதுச்சேரிக்கு 1765ஆம் ஆண்டு திரும்பிய பின்னர், தாம் கண்ட, கேட்ட, அனுபவித்த நிகழ்ச்சிகளைப் பதிவு செய்திருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இவரது நாட்குறிப்பின் முதல் பதிப்பு வெளிவருவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தொகுதியில் முதல் ஆறுவருடக் குறிப்புகளே இடம் பெற்றுள்ளன. எஞ்சியுள்ள குறிப்புகள் இனிவரும் ஆண்டுகளில் வெளிவரலாம்.

1846ஆம் ஆண்டு கலுவா மொபார் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு, புதுவை அரசின் முயற்சியால் இப்போதுதான் வெளியாகிறது. எனவே இதுவரை வெளியிடப்படாமல் உள்ள காகிதச் சுவடிகளை முனைவர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் திரட்டி ஓர் ஆய்வுப் பதிப்பாக உருவாக்கியுள்ளார். இந்நூல் வெளியீட்டுத் திட்டத்திற்குப் பேராசிரியர் செ.வை. சண்முகம், முனைவர் ஆலாலசுந்தரம், திரு. செபஸ்தியான் ஆகிய மூவர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப் பெற்றது. இக்குழுவில் இடம் பெற்றவர்கள் இந்தப் பதிப்புக்குரிய சுவடிகளைப் படித்துப் பார்த்துத் தங்கள் கருத்துக்களை வழங்கினார்கள். இதில் ஒத்த கருத்து இல்லாததால் மூன்றாவது வல்லுநரின் கருத்தைக் கோரவேண்டிய நிலை ஏற்பட்டது. மூன்றாவது வல்லுநராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் கதிர்வேலு அவர்கள் வரலாற்றுத் தரவுகள் அடங்கிய இந்நூலை வெளியிட இறுதி ஆலோசனை வழங்கினார்.

திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பில் 18ஆம் நூற்றாண்டின் சமூக பண்பாட்டுச் செய்திகளும், வரலாற்றுச் செய்திகளும் அடங்கி உள்ளன. மாணவர்களுக்கும், மொழியியல் அறிஞர்களுக்கும் மிகவும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்நூல் வெளிவருவதற்கு உழைத்த பதிப்பாசிரியர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் சுவடிகளை ஆராய்ந்து, சான்றுகளைத் தொகுத்து, இந்நூலை உருவாக்கித் தந்திருக்கிறார். நுட்பமான சரித்திரச் சான்று, பொருத்தமான ஆய்வுக் குறிப்புகள், இதுவரை அறியப்படாத செய்திகள் இந்நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. எனவே, இப்பதிப்பு வெளிவருவதற்கு உழைத்த முனைவர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுப் பதிப்பைப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

ந. இராஜசேகர்
*(ஒப்பம்)*

# என்னுரை

இந்த நூலின் ஆராய்ச்சிப் பணியானது கல், முள் உள்ள கரடுமுரடான பாதையில் நான் நடந்து வந்த அனுபவம் தான். பூதக்கண்ணாடி உதவியுடன் சுவடியைக் கண் வலிக்கப் பார்த்து, கைவலிக்க எழுதிப் பல வருடங்கள் கழிப்பது சிரமமாக இருந்தது. பெருங்கவி பாரதி படைத்த பாஞ்சாலி சபதத்தின் முகவுரையில் குறிப்பிட்டுள்ள "காரியம் மிகப் பெரியது ; என் திறமை சிறிது" என்ற வரிகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் நான் படித்தது என் நினைவில் நிலையாக நிற்கின்றது. அதனால் துன்பம் இருப்பினும் இனிமை என்னைவிட்டு அகலவில்லை. இளம்பருவத்திலேயே என் ஆசான்கள் எனக்குத் தமிழ் மீது ஆர்வம் ஏற்படச் செய்தார்கள். அதனால் தொன்போஸ்கோ பள்ளியில் பயின்ற காலத்து, பள்ளிக்கல்வி இறுதியாண்டில், தமிழில் முதல் மதிப்பெண் பெற்று, (வரலாற்றுப் பாடத்தில் இரண்டாம் மதிப்பெண் பெற்றபோதிலும்,) சிறப்புப் பரிசாகத் திருக்குறள் நூலினைப் பெற்றேன். இளங்கலைப் பட்டப்படிப்பில் தமிழ், ஆங்கிலம் மற்றும் வரலாறு ஆகிய மூன்று பாடங்களிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். பின்னர் பல்கலைக்கழகத்தில் வரலாற்று ஆராய்ச்சிக்காகப் போர்ச்சுக்கீசியம், டச்சு, பிரெஞ்சு ஆகிய மொழிகளைக் கற்பதில் ஆர்வம் காட்டியபோதிலும், தமிழ்க் கல்வெட்டுக்களையும், சுவடிகளையும் ஆராய்ந்தேன். ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்புச் சுவடியை அப்போதுதான் நான் காணநேரிட்டது. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் ஆணையர் அவர்கள் அங்குள்ள சுவடியைப் படியெடுக்கவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் அனுமதி வழங்கினார்கள். திரு அந்துவான் அவர்கள் பாரீசு நகல்களைப் பெற உதவினார். புதுச்சேரி இந்தியத் தேசிய ஆவணக் காப்பகத் துணை இயக்குநர் அவர்கள் அங்குள்ள நாட்குறிப்புச் சுவடியை வழங்கி ஆராய்ச்சிக்கு உதவினார். பிரெஞ்சு ஆய்வு நிறுவன முன்னாள் நூலகர் (மறைந்த) திரு சண்முகம் அவர்கள், அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள சுவடியை வழங்கிப் படியெடுக்க உதவினார். புதுச்சேரி ரோமன் ரோலண்ட் நூலகர் (பழைய மற்றும் அரிய நூல்கள் பகுதி) மற்றும் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன நூலகர்கள் தொடர்புடைய நூல்களை வழங்கினார்கள். திருமதி குமுதா ராஜசேகரன் மற்றும் நண்பர் ராஜசேகரன் ஆகியோர் சலிப்பில்லாத உழைப்பு, பொறுமை, மிகுந்த கவனமும் கொண்டு செவ்வனே கணினித் தட்டச்சு மற்றும் வடிவமைப்புப் பணியினை மேற்கொண்டனர். மேற்சொன்ன அனைத்து நிறுவனத்தாருக்கும், உதவிய அனைவருக்கும் எனது நன்றி.

மாண்புமிகு கல்வியமைச்சர் எஸ்.பி. சிவக்குமார் அவர்கள் இந்த ஆராய்ச்சித் திட்டத்திற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்து அவ்வப்போது பணியின் நிலைமைகளை ஆர்வமாகக் கேட்டறிந்தார்கள். எனவே அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு ந. இராஜசேகர், (இ.ஆ.ப., கல்வித்துறைச் செயலர்) அவர்கள் தக்க நடவடிக்கைகளை அரசாங்க அளவில் மேற்கொண்டு தாமதமின்றி ஆராய்ச்சித் திட்டத்தினை முடிக்க உதவினார்கள். முனைவர் எல். இராமமூர்த்தி, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொறுப்பு) அவர்கள் இந்நூலைச் செம்மையாய் வெளியிட ஆர்வம் காட்டினார்கள். எனவே இவர்கள் இருவருக்கும் பெரிதும் நன்றியுடையேன். பேராசிரியர் செ.வை. சண்முகம், பேராசிரியர் எஸ். கதிர்வேலு, திரு செபஸ்தியான் மற்றும் முனைவர் ஆலாலசுந்தரம் ஆகியோர் குழுவில் இடம் பெற்று ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைப்பு நல்கினார்கள். இவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை நன்முறையில் அச்சிட்ட குமாரி அச்சகத்தாருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நூல் அறிவுசான்ற ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்கவும், வரலாற்றைப் படைக்கவும் அவர்கள் பார்வைக்குப் பணிவுடன் அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

# பதிப்புரை

சென்னை, புதுச்சேரி மற்றும் பாரீசு நகரிலுள்ள ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பின் காகிதக் கையெழுத்துச் சுவடிகள் ஒப்பீடு செய்யப்பட்டு இந்தத் தமிழ்ப் பதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சுவடிக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகள் கிடைப்பதாலும், உதவியாளரின் வழி படியெடுத்தலால் பெறப்பட்ட சுவடிகளாக இருப்பதாலும், மீண்டும் படியெடுக்கச் செய்தமையால் சுவடிகள் பல்கிக் காணப்படுகின்றன. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆவணப் பதிப்பு அமைப்பு முறை சிறந்ததாகக் கருதப்பட்டு, இந்நாட்குறிப்புப் பதிப்பில் கையாளப்பட்டுள்ளது.

## சந்தியமைப்பு

18 ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை சிறப்பாக வளர்ச்சி பெறாத காலத்தில் தமிழ்ச் சொற்கள் சேரவும், விலகவும் எழுதப்படும் முறைகள் குறித்து நம்மால் விவரமாக அறிய முடியவில்லை. எனவே அந்த நூற்றாண்டைச் சேர்ந்த இந்த நாட்குறிப்பு நூல் பதிப்பில் விசேடமாகச் சில விதிமுறைகளைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவற்றைக் கீழே காணலாம்.

1. சொற்றொடர்களைச் சந்தி பிரித்துக் காட்டுதல் பெரும்பாலும் பொருள் தெளிவு கருதியே செய்யப்பட்டுள்ளது.
2. இரட்டைக் கிளவியும், அடுக்குத் தொடரும் ஆகிய சொற்கள் சேர்த்தே எழுதப்பட்டுள்ளன.
3. நிலை மொழி, வரு மொழி ஆகிய இரண்டுக்கும் எண்ணின் பெயர்களாகப் பெருக்கும் நிலையில் பொருள்தரும் சொற்கள் சேர்த்தே எழுதப்பட்டுள்ளன.
4. வேற்றுமை உருபுகள் தனித்து நின்று பொருள்தரா இடைச்சொற்கள் ஆதலின், அவை பெயர்ச் சொற்களோடு இணைத்தே எழுதப்பட்டுள்ளன.
5. வினா மற்றும் ஆச்சரியத்தை வெளிப்படுத்தும் சொற்கள் நிலைமொழியினின்று விலக்கி எழுதப்பட்டுச் சம்பந்தப்பட்ட குறிகள் இடப்பட்டுள்ளன
6. தொகைநிலைத் தொடர்கள் சேர்த்து எழுதப்பட்டுள்ளன.
7. பெரும்பாலும் வினையுடன் இணைந்து வரும் உவம உருபுகள் இணைத்து எழுதப்பட்டுள்ளன.

## நிறுத்தக்குறியீட்டு விளக்கம்

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் தமிழில் நூல்கள் அச்சிடப்பட்டு வெளிவந்தமை நாம் அறிந்த உண்மையே. எனினும் நம்மவர்களால் முன்னரே பின்பற்றப்படாத நன்மை பயக்கும் நிறுத்தக் குறியீடுகள் நாளடைவில் தமிழ்

அச்சுப் பதிப்பில் இன்றியமையாதனவாயின. இந்த நாட்குறிப்புப் பதிப்பில் இத்தகைய நிறுத்தக் குறியீடுகள் தேவையா எனக் கருதுவதில் வியப்பொன்றும் இல்லை. நாட்குறிப்பின் வழியே தமிழ்ச் சொற்களை எளிதில் பிரித்துப் பொருள் உணர முடியாததாலும் அவற்றைப் படிக்கும்போது பெரிதும் இடர்ப்பாடு ஏற்படுவதாலும் கடினமான சந்திகளைப் பிரித்துப் பொருள் புலப்பாட்டிற்கு ஏற்ப இணைத்து உரிய இடங்களில் பல குறியீடுகள் வழங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தப் பதினெட்டாம் நூற்றாண்டு நாட்குறிப்பைப் பதிப்புச் செய்யுங்கால் படிப்பவர்களது நலம் ஒன்றையே கருதி, நாட்குறிப்பைப் படித்த அளவிலேயே ஓரளவு பொருள் உணரச் செய்யும்வகையில் சில நிறுத்தக் குறியீடுகளை உபயோகித்து உள்ளேன். இந்த நிறுத்தக் குறியீடுகள் பொருள் புலப்பட்டுக் கருத்தை வெளிப்படுத்தும் வண்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் குறியீடுகள் பயன்படுத்தப்படும் முறைகள் பின்வருமாறு :

**(அ). காற்புள்ளி**

1. பெயர்கள் பல அடுக்கி வருமிடங்கள்
2. உம்மைகள் அடுக்கி வருமிடங்கள்
3. முற்றெச்சங்கள் அடுக்கி வருமிடங்கள்
4. பெயரெச்சம் அடுக்கி வருமிடங்கள்

**(ஆ). அரைப்புள்ளி**

தனித்தனிக் கருத்தை விளக்கி நிற்கும் தொடர்களைக் காட்டும் இடங்கள்

**(இ). முக்காற்புள்ளி**

ஒருவரை விளித்து ஒன்றனைக் கேட்டு அறிவிக்குமாறு வரும் இடங்கள்

**(ஈ). முற்றுப்புள்ளி**

கருத்து முற்றுப்பெறும் போது ஒவ்வொரு வரியின் இறுதியிலும் வரும் இடங்கள்.

**(உ). வியப்புக் குறி**

வியப்பைப் புலப்படுத்தும் இடங்கள்.

**(ஊ). வினாக்குறி**

1. வினாப் பொருள் நிகழுமிடம்
2. வினாச் சொல் கொண்ட கருத்து முற்றுமிடத்தே வருதல்.

### (எ). தொடர்புள்ளிகள்

கையெழுத்துச் சுவடியில் விடுபட்டுள்ள சொற்களுக்குப் பன்னிரெண்டு தொடர்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

### (ஏ) இடைக்கோடு

நகலில் சொற்றொடர் முற்றுப்பெறாத நிலையை உணர்த்த ஆறு இடைக்கோடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### (ஐ) பிறைவளைவு

சில இடங்களில் தோற்றத்திற்கேற்றாற் போல எழுத்துக்கள் பலவகையான பிறைக் குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

[ ] நகலில் இருந்த எழுத்துக்கள் தெளிவாகத் தெரியாமல் அல்லது அழிந்துபோன, சிதைந்துபோன இடத்து

( ) நகலில் வார்த்தை சுருக்கங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்து

〈 〉 நகலில் விடுபட்டு அல்லது தவறாக எழுதப்பட்டுள்ள இடத்து, சரியாக எழுதப்படாமல் உள்ள போது

{ } நகலில் தேவையில்லாமல் எழுதப்பட்டு மற்றும் அதிகமாக எழுத்து இருக்குமிடத்து

[[ ]] நகலில் விட்டுப்போன பகுதியைக் குறிப்பது

பாரீசிலுள்ள ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்புச் சுவடி நகலைக் காணும்போது எழுத்தர் ஒருவரே நாட்குறிப்பை நகலெடுத்து எழுதியிருப்பது தெரிகிறது. அதில்வரும் எண்ணற்ற திருத்தங்கள் எதுவார் ஆரியேல் நியமித்த சரிபார்ப்பவர்களாலும், ஆரியேலாலும் சரிசெய்யப்பட்டதற்குச் சான்றாகத் தனது பெயரைச் சுருக்கெழுத்தாக ஆரியேல் கொடுத்துள்ளார். படி செய்தோரின் தவறுகள் தாளின் ஓரத்தில் எழுதப்பட்டுள்ளதையும் நாம் காண்கிறோம்.

ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பின் சில பகுதிகளில் அவர் எழுதியிருப்பது முழுமையாக முடிக்கப்படவில்லை. முந்தைய நாள் எழுதுவதை முடிக்காமல், அடுத்தநாள் பணியினை ஆரம்பிக்க வாய்ப்பில்லை. எனவே கண்டிப்பாகப் படியெடுப்போரால் இந்த நாட்குறிப்புப் பகுதிகள் விடுபட்டிருக்க வேண்டும். அதற்கான காரணம் சுவடிகள் பழுதாகி இருக்கலாம் என்பதும் தெளிவாகிறது. நாட்குறிப்பு நகல்கள் எழுதும்போது இடைவெளி இன்றி எழுதப்பட்டுள்ளது. சொற்கள் சங்கிலித் தொடர்போல வந்துள்ளன. உம்மைத் தொகையைப் பயன்படுத்தி (உம் என்ற சொல் இல்லாமல்) அடுத்த வாக்கியங்களின் தொடர்ச்சியைக் குறிப்பிடும்

வழக்கத்தையும் நாட்குறிப்பாளர் கையாண்டுள்ளார். சுவடி பெயர்த்தெழுதலில் சில பிழைகள் ஏற்பட்டுள்ளன. ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்குப் போகும்போது சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. இது மூலச் சுவடியில் உள்ளதோ அல்லது வழக்கமோ என்று நினைத்தால் எல்லாப் பக்கங்களிலும் இவ்வாறு இல்லாமல் சிற்சில பக்கங்களில் மட்டுமே வருவதால் இதைப் பிழையே என முடிவு செய்ய நேர்ந்தது. நாட்குறிப்பின் நகலில் எழுத்துக் குறைவும் ஏற்பட்டுள்ளது. நகலெடுத்தோரின் அயற்சியாலோ, கவனக்குறைவாலோ விடுபட்டு இருந்தபோதிலும் மூல ஏடுகள் இல்லாததால், (எல்லாம் நகல்களாக இருப்பதால்) எழுத்துக் குறைவைச் சரிசெய்ய முடியாத நிலை ஏற்பட்டது. குறில், நெடில் வித்தியாசம் இல்லாததால் ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு (குறிப்பாக பிரெஞ்சு ஆய்வு நிறுவன நகலில்) இல்லாததாலும் குறில் நெடில் மயக்கங்கள் ஏற்படுகின்றன. இதனைச் சீர்செய்ய இந்த இடங்களில் கவனமாகப் பொருள் கொண்டு நாட்குறிப்புகள் கையாளப்பட்டுள்ளன. மேலும் புள்ளி மயக்கத்தைத் தவிர்க்க தக்க எழுத்துக்களின் மேல் புள்ளியிட்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்குறிப்புச் சுவடி அன்றைய அளவில் உள்ளவாறு (ஊர் பெயர்கள் உள்பட) மாற்றமின்றி அச்சிடப்பட்டுள்ளது.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| ௵ | – | வருடம் |
| ௴ | – | மாதம் |
| ௳ | – | தேதி |
| மு | – | முதல் |
| ௸ | – | மேற்படி |
| ௧ | – | ஒன்று |
| ௨ | – | இரண்டு |
| ௩ | – | மூன்று |
| ௪ | – | நான்கு |
| ௫ | – | ஐந்து |
| ௬ | – | ஆறு |
| ௭ | – | ஏழு |
| ௮ | – | எட்டு |
| ௯ | – | ஒன்பது |
| ௰ | – | பத்து |
| ௱ | – | நூறு |
| ௲ | – | ஆயிரம் |
| வ | – | கால் |
| இ | – | அரை |
| ஙு | – | முக்கால் |
| BNP | – | Bibliothéque Nationale de Paris |
| FL | – | Folio |
| IFP | – | Institut Français de Pondichéry |
| IOLR | – | India Office Library and Records, London |
| MSS | – | Manuscripts |
| NAIP | – | National Archives of India, Pondicherry |
| TNSA | – | Tamil Nadu State Archives, Chennai |

# ஆய்வுரை

தமிழகத்தில் தங்கி மறைபரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த இயேசு சபை குருக்களில் பிரெஞ்சைத் தாய்மொழியாகக் கொண்ட அருள்திரு ழான் வெனோன் புஷே அடிகள், (1655–1732) ஐரோப்பாவிலிருந்த துஹால்த் அடிகளாருக்கு 18 டிசம்பர் 1714 ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில், தாம் ஒரு தமிழ் இலக்கணச் சுவடியைப் பெற்றதாகவும், அதை அனுப்பிவைத்ததாகவும் தெரிவித்துள்ளார்[1]. இதே ஆண்டிலேயே தெசியே தெ கெராலே என்பார், தான் விலைக்கு வாங்கிய சில தமிழ்ச் சுவடிகளையும் அவற்றுடன் சில செடிகளின் விதைகளையும் பிரான்சு நாட்டுக்கு அனுப்பிவைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்[2]. இவ்வாறு அனுப்பப்பட்ட தமிழ்ச் சுவடிகள் பாரீசு நகரைச் சென்றடைந்தன. பிரான்சு மன்னரின் நூலகராகப் பணிபுரிந்த பிஞ்ஞோ (1682–1743) என்பார் அந்நாட்டு இயேசு சபை குருக்களை இந்தியாவைப் பற்றிய ஆராய்ச்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ளத் தூண்டினார். மேலும் இந்தியாவில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சு மொழி பேசும் குருக்கள், சுவடிகளைப் பெற்றுப் பிரான்சு மன்னரின் நூலகத்திற்கு அனுப்பிவைக்கவும் 1719 ஆம் ஆண்டு வேண்டுகோள் விடுத்தார்[3]. இந்தத் தருணத்தில் புதுச்சேரியில் இயேசு சபை குருக்களின் தலைவராகப் பணியாற்றிய எத்தியே லெகாக் அடிகள் பல இலக்கிய, இலக்கணச் சுவடிகளைப் படியெடுக்கப் போதுமான அளவு காகிதங்களையும், நிதி உதவிகளையும் வழங்கப் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் கோரினார். இத்தகைய சுவடிகளைச் சேகரிக்கும் பணிக்குத் தேவையான செலவுத் தொகையினைப் பிரெஞ்சு வாணிபக் கம்பெனியார் முதலில் செலவு செய்துவிட்டு, பிரான்சு மன்னருக்குத் தெரிவிக்கும்போது, அந்தத் தொகை முழுவதையும் அந்தந்த ஆண்டுகளில் பிரெஞ்சு வாணிபக் கம்பெனிக்கு மன்னர் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் அனைத்துச் சுவடிகளிலும் இரண்டு நகல்கள் தயாரிக்கப்படவேண்டுமென்றும், ஒன்று பாரீசு மன்னரின் நூலகத்திற்கும், மற்றொன்று இயேசு சபையாருக்கும் வழங்கப்படவேண்டும் என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் இயேசு சபை குருக்கள் புதுச்சேரியில் பல எழுத்தர்களை நியமித்துச் சுவடிகள் படியெடுக்கும் பணியில் ஈடுபட்டனர்[4].

தயாரிக்கப்பட்ட பல காகிதக் கையெழுத்துச் சுவடிகள், ஜனவரி 1729 ஆம் ஆண்டு லெகாக் அடிகளாரால், புதுச்சேரியிலிருந்து பிரான்சுக்குச் சென்ற கப்பலில் முதன் முதலாக அனுப்பிவைக்கப்பட்டதாக நாம் அறிகிறோம்[5]. மேலும் புதுச்சேரியிலிருந்து விலைக்குப் பெறப்பட்ட சில தமிழ் ஓலைச் சுவடிகளும் பாரீசிலுள்ள மன்னரின் நூலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக, அருள்திரு ழான்கல்மெட் (1693–1740) அடிகளார் தாம் எழுதிய 26 ஆகஸ்ட் 1730 ஆம் ஆண்டு கடிதத்தில் குறிப்பிடுகிறார்[6]. நான்கு வேதங்கள் அடங்கிய ஓலைச்சுவடிகள் விலைக்கு வாங்கப்பட்டு அனுப்பப்பட்டதாக அருள்திரு லெகாக் அடிகள் பாரீசிலுள்ள மன்னரின் நூலகர் அருள்திரு சூசியே அடிகளாருக்கு எழுதிய 28 செப்டம்பர் 1732 ஆம் ஆண்டுக் கடிதத்தில் சொல்லப்பட்டுள்ளது[7]. மேலும் இயேசு சபையாரின் 1734–1735 ஆம் ஆண்டு அறிக்கைகளில் சேகரிக்கப்பட்ட பல சுவடிகள் வடமொழியிலும், தமிழிலும்,

வங்காளத்திலும் எழுதப்பட்டவை என்றும், பாகவத புராணம், இராமாயணம், மகாபாரதம், உபநிடதங்கள் போன்றவை இந்தப் பட்டியலில் அடங்கும் என்றும் சொல்லியுள்ளமை இவண் மிகவும் குறிப்பிடத்தக்கது[8]. இவ்வாறு பிரெஞ்சு மொழிபேசும் இயேசு சபை மதகுருமார்கள், இந்தியச் சுவடிகளைச் சேகரிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டியதால், ஆண்டுதோறும் அனுப்பிவைக்கப்பட்ட இத்தகைய சுவடிகளின் எண்ணிக்கை, அதிகமாகியது. 1729 ஆம் ஆண்டு முதல் 1735 ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் மட்டும் அனுப்பப்பட்ட சுவடிகளின் எண்ணிக்கை மொத்தம் 287 ஆகப் பெருகியது என்று தெரிகிறது[9]. அருள்திரு லெகாக் அடிகள், அருள்திரு பிஞ்ஞோ அடிகளாருக்கு எழுதிய கடிதத்திலிருந்து சுவடிகள் பற்றிய விரிவான விவரங்களை நாம் காணமுடிகிறது. இதுவுமன்றி மறைபரப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இயேசு சபை குருக்கள் தாங்கள் தயாரித்த பிரெஞ்சு–தமிழ் இலக்கணச் சுவடி ஒன்று புதுச்சேரியில் இருந்ததாகவும், அந்தச் சுவடியைப் பியேர் தெலா லேன் என்பார் மூலம் பாரீசுக்கு அனுப்பியதாகவும் சொல்லப்பட்டுள்ளது[10]. இவ்வாறு படியெடுக்கப்பட்ட சுவடிகள், விலைக்கு வாங்கப்பட்ட சுவடிகள் மற்றும் இயேசு சபை குருக்கள் புதுச்சேரியில் தயாரித்த நூல்கள் பாரீசு நகரை வந்தடைந்தன. எனவே அனைத்துச் சுவடிகளின் பட்டியல் ஒன்று தேவையெனக் கருதி, அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு 1739 ஆம் ஆண்டு பிரான்சிலிருந்து வெளியிடப்பட்டது[11]. பிரான்சு நாட்டில் அச்சிடப்பட்ட பிரெஞ்சு நூல்கள் புதுச்சேரி நகரில் பல பிரெஞ்சுக்காரர்கள் வசம் இருந்ததாகவும், பலர் நூல்களைப் படிக்கும் பழக்கம் கொண்டிருந்ததாகவும் ஆனந்த ரங்கப்பிள்ளை நாட்குறிப்பு மூலம் நாம் அறிகிறோம்[12]. இதுவுமன்றி ஆர்வமுள்ள சில தமிழர்கள் அந்தப் பிரெஞ்சு நூல்களை விலைக்குப் பெற்றுப் படித்துப் பயன்பெற்ற செய்தியை முத்து விஜய திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பின் மூலம் நாம் அறியமுடிகிறது[13]. இவ்வாறு இரண்டு மாறுபட்ட நாகரிகங்களான தமிழ், பிரெஞ்சு இரண்டும் ஒன்றை ஒன்று சந்தித்ததினால் அறிவுப் பரிமாற்றம் நடந்தது.

1.1. நாளடைவில் புதுச்சேரியில் சுவடிகள் திரட்டும் பணி பெருமளவில் பாதிக்கப் பட்டது. இதற்குப் பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையே ஏற்பட்ட போர்களும், அரசியல் தலையீடுகளும், வாணிபப் போட்டியும் முக்கியமான காரணங்களாகக் கொள்ளலாம். புதுவை நகரத்தை ஆங்கிலேயர்கள் 15 ஜனவரி 1761 ஆம் ஆண்டு முற்றுகையிட்டுக் கைப்பற்றினார்கள். அப்போது பிரெஞ்சுக் கம்பெனி ஆவணங்களெல்லாம் தரங்கம்பாடிக்குப் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்பட்டன[14]. இயேசு சபை மத குருமார்களை நகரைவிட்டு வெளியேற்றியதால் அவர்களும் இதர இடங்களுக்குச் சென்றனர். பதினைந்தாம் லூயி மன்னரின் ஆணைப்படி 1764 ஆம் ஆண்டு இயேசு சபை பிரான்சு நாட்டில் தடைசெய்யப்பட்டதால் சுவடிகள் திரட்டும்பணி முற்றுப் பெறலாயிற்று. பின்னர் உலகெங்கும் இயேசு சபை குருக்கள் மறைபரப்புப் பணி செய்யப் பாப்பரசர் பதினைந்தாம் கிளமெண்ட் 1773 ஆம் ஆண்டு தடைசெய்து ஆணை பிறப்பித்தார். இதற்குப் பின்னர் ஆறாம் பத்திநாதர், 30 செப்டம்பர் 1776 ஆம் ஆண்டு பிறப்பித்த ஆணையின்படி புதுச்சேரியின் மறைபரப்புத் தளம் பியேர் பிரிகோ என்ற அடிகளாரின் தலைமையில் செயல்பட ஆரம்பித்தது[15].

இவ்வாறு புதுச்சேரியின் திருச்சபை பாரீசு வேதபோதக சபை குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டதால் 18 செப்டம்பர் 1778 ஆம் ஆண்டு முதல் இந்தச் சபை குருக்கள் மறைபரப்பும் பணியில் ஈடுபட்டனர். புதுச்சேரி நகரத்தைக் கைப்பற்றி

ஆங்கிலேயர்கள் 1778–1785 மற்றும் 1793–1815 ஆகிய ஆண்டுகளில் ஆட்சிபுரிந்தனர்[16]. இந்த அரசியல் சூழ்நிலைகளினால் மதகுருமார்களின் சுவடிகள் திரட்டும் பணி நடைபெறவில்லை. இருப்பினும் தமிழர்கள் தத்தம் வசமுள்ள சுவடிகளைப் பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

1.2 புதுச்சேரி நகரில் 1778 ஆம் ஆண்டிலேயே ஓர் அச்சகம் செயல்பட்டு இருந்ததைப் பிரெஞ்சு ஆவணங்கள் மூலம் நாம் அறிகிறோம். புதுவை ஆளுநரின் 20 ஜூன் 1778 ஆம் ஆண்டு ஆணையில் விதி எண் 36 மற்றும் 37–ல் போலீஸ் அதிகாரி உத்தரவு இல்லாமல் புதுச்சேரியில் நூல்களோ, செய்தி அறிக்கைகளோ அச்சிடக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது[17]. இந்த அச்சகத்தின் தோற்றம் மற்றும் செயல்பாடுகள் குறித்துக் கூடுதல் விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. புதுச்சேரி நகரம் 1815 ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரர்கள் வசம் மீண்டும் ஒப்படைக்கப்பட்ட பின்புதான், ஆர்வமுள்ள சில தமிழர்கள், தமிழ்ச் சுவடிகளை அச்சிட்டு வெளியிட முனைந்தனர். புதுவையில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் எழுதிய ஆதிகாலச் சரித்திரச் சங்கிரகம் என்ற நூல் 1823 ஆம் ஆண்டு சென்னையில் அச்சாகியது[18]. இதைப்போன்று புதுச்சேரியில் வாழ்ந்த நயினியப்ப முதலியார் (1779–1845) என்பார் பல சுவடிகளின் பயனை அறிந்தமையால், *தஞ்சைவாணன் கோவை, நேமிநாதம், சூடாமணி நிகண்டு, நாலடியார்* போன்ற நூல்களை 1836, 1836, 1839 மற்றும் 1844 ஆம் ஆண்டுகளில் சென்னையிலிருந்த அச்சுக்கூடங்களில் பதிப்புச் செய்து வெளியிட்டார்[19]. இவ்வாறு சுவடிகளிலிருந்து நூல்களாக வெளிவந்தவை சென்னை அச்சுக்கூடங்களையே நம்பி இருந்தன.

1.3. புதுவையில் பிரெஞ்சு அரசு, அச்சகம் ஒன்றை 1816 ஆம் ஆண்டு நிறுவியது. அரசாங்கச் சட்டங்கள், ஆணைகள், அறிவிப்புகள் இந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு நகரம் முழுவதும் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டன. 1823 ஆம் ஆண்டு முதல் பிரெஞ்சு அரசாங்கத்தார் வார இதழ் ஒன்றை ஆரம்பித்துப் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டனர். *'Archives administratives'* என்ற பெயரில் இந்த இதழ் வெளியாகியது[20]. பின்னர் தமிழ் எழுத்துக்களும் அச்சு வார்க்கப்பட்ட பின்னர் 1828 ஆண்டு முதல் *'Bulletin des actes administratifs des etablissements francais dans le inde'* எனப் பெயர் மாற்றப்பட்டுத் தமிழிலும் செய்திகள் வெளியிடப்பட்டன[21]. பிரான்சு நாட்டைவிட்டுக் கடல்கடந்து வந்து இந்தியாவில் தங்கிய ஐரோப்பிய வாசகர்கள் பிரெஞ்சு நூல்களைப் படித்து மகிழ்வதற்காக நூலகம் ஒன்றை புதுச்சேரியின் ஆளுநராக இருந்த தெபோசின் தே ரிச்மோன் 16 மே 1827 ஆம் ஆண்டு திறந்தார்[22]. பெரும்பாலான நூல்கள் இங்குப் பிரெஞ்சு மொழியிலேயே இருந்தபடியால் தமிழர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது புலனாகிறது. நாளடைவில் தமிழ் வாசகர்களும் இந்த நூலகத்தில் உள்ள நூல்களைப் படித்துப் பயன்பெறலாம் எனக் கருதியமையால் 8 டிசம்பர் 1837 ஆம் ஆண்டு ஆணைப்படி தமிழர்களும், இந்தியர்களும் இந்த நூலகத்தைப் பொழுதுபோக்கான நேரத்தில் உபயோகிக்க அனுமதி வழங்கப்பட்டது[23]. இத்தகைய புதிய உத்திகளால் ஆர்வமுள்ள மக்கள் பிரெஞ்சு மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளையுமே பேசவும், எழுதவும், படிக்கவும் முனைந்தனர். இதனால் சிறப்பாய்ப் பொது அறிவும், தகவல் பரிமாற்றங்களும் வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்பட்டது.

மற்றொரு வார இதழ் *'ல இம்பார்சியல் தே பாண்டிச்சேரி'* என்ற பெயரில் 1838 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுப் பிரெஞ்சு மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டது. இதுவே புதுச்சேரியில் தனியாரால் தொடங்கப்பட்ட முதல் இதழ். இதன் ஆசிரியராக குர்ரீ என்பார் செயல்பட்டார். அரசாங்கச் சட்டங்கள், அறிவிப்புகள், ஆணைகளை இலவசமாக வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்விதழுக்குப் பிரெஞ்சு அரசு அனுமதி அளித்தது[24]. 1838 ஆம் ஆண்டிலேயே *'இந்திய ஞாயிறு'* என்ற வார இதழ் தொடங்கப்பட்டது[25]. *'ல இம்பார்சியல் தே பாண்டிச்சேரி'* இதழுக்கு விதித்த நிபந்தனைகளையே இந்த இதழுக்கும் பிரெஞ்சு அரசு விதித்தது. புதுவையில் வாழ்ந்த வெங்கட்டராயர் என்பார் இந்த இதழ் ஆசிரியராகச் செயல்பட்டார். லட்சுமணன் என்பார் நிறுவிய முதல் தமிழ் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு இந்த இதழ் வெளியாகியது[26]. இவ்வாறு தொழில்நுட்பப் பரிமாற்றம் ஏற்பட்டதினால் தமிழ் மொழி, அச்சுக்கலை மூலமாகப் புதுச்சேரியில் வளர வாய்ப்புக்கிட்டியது.

1.4. 1840 ஆம் ஆண்டு பொன்னார் என்ற கத்தோலிக்க குரு புதுச்சேரியில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவப் பிரெஞ்சு அரசாங்கத்திடம் கோரியதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இது சன்ம விராக்கினி மாதா கோயிலைச் சார்ந்த அச்சுக்கூடம் எனப் பெயர் பெற்று ரோம் நகரிலிருந்த பாப்பரசரின் ஒப்புதலுடன் நூல்களை அச்சிட்டு வந்தது. பாரீசு வேதபோதக சபையைச் சார்ந்த குருக்களில் அருள்திரு துப்புயி அடிகளார் (1806–1874) அச்சுக்கூடப் பொறுப்பை ஏற்றார்[27]. புதுச்சேரியில் தமிழ் நூல்களின் வெளியீட்டு வளர்ச்சிக்கு இந்த மாதா அச்சுக்கூடம் பெரிதும் உதவியது. பெரும்பாலும் கிறிஸ்தவச் சமய நூல்களே முன்னுரிமை பெற்றுத் தொடக்கத்தில் அச்சிடப்பட்டு வந்தன[28]. நாளடைவில் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களும் வெளியாயின[29]. துப்புயி அடிகளாரோடு இணைந்து பணிபுரிய அருள்திரு முசே அடிகள் (1808–1888) பணிக்கப்பட்டார். இருவரும் சேர்ந்து தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்து பல இலக்கண, இலக்கிய நூல்களை அச்சிட்டுப் பரந்த நோக்கத்துடன் செயல்பட்டு வந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. இங்கு வெளியான நூல்கள்[30] தமிழர்களின் அறிவுவேட்கையைத் தூண்டின என்றால் அது மிகையாகாது. இவ்வாறு தமிழர்களின் திறமையை வளர்க்கவும், வெளிப்படுத்தவும் இதழ்கள் ஆற்றிய பணி முக்கியமானது. அக்காலத்தில் புதுச்சேரியில் இயங்கிய பல அச்சகங்களும், நூல்களை அச்சிட்டுத் தமிழ்த் தொண்டுக்கும், வளர்ச்சிக்கும் உதவிய செயல் அரியது, பெரியது.

1.5. பிரெஞ்சு அரசாங்கமும், பாரீசு வேதபோதகச் சபையைச் சார்ந்த குருக்களும் தமிழில் ஆர்வம் காட்டி நூல்கள் மற்றும் இதழ்களைப் பதிப்புச் செய்துவந்த தருணத்தில், புதுவையில் சில பிரெஞ்சுக்காரர்கள் தமிழ்ச் சுவடிகளைத் திரட்டுவதில் ஆர்வத்தோடு ஈடுபட்டார்கள். புதுவையில் வருவாய்த் துறை அதிகாரியாகப் பணிபுரிந்த ஆர்மோ கலுவான் மொபார் மூலம் 1846 ஆம் ஆண்டு ஆனந்தரங்கப் பிள்ளை சந்ததியார்களின் வீட்டில் தமிழில் எழுதிய நாட்குறிப்புகள் அவருக்குக் காண்பிக்கப்பட்டதாக நாம் அறிகிறோம். அவர் மூலத்தில் இருந்து உடனே நகல்கள் எடுக்க நடவடிக்கை மேற்கொண்டார்[31]. இந்தப் பணிகள் முடிக்கப்பட்ட பிறகு அந்த நாட்குறிப்பு நகல்களைத் தம்வசமே வைத்துக்கொண்டார். பதினாறு பக்கங்கள் கொண்ட ஓர் கட்டுரையைப் புதுச்சேரியிலிருந்து எழுதி 1849 ஆம் ஆண்டு அவர் வெளியிட்டார்[32]. இதில் திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு மூன்று பதிவேடுகளாக இருந்தமை சொல்லப்பட்டுள்ளது.

**1.6.** புதுச்சேரியிலிருந்த தமிழ்நாட்குறிப்புகள் மீது எதுவார் ஆரியேல் என்ற தமிழ் அறிந்த பிரெஞ்சுக் கடற்படை அதிகாரிக்கு ஆர்வம் வந்தது. இவர் இந்த நாட்குறிப்புகளின் மூலங்களை ரங்கப்பிள்ளை வீட்டுச் சந்ததியார்களிடமிருந்து 1849 ஆம் ஆண்டு பெற்றுப் பல நபர்களை அமர்த்தி நகல் எடுக்கும் பணியிலும், சரிபார்க்கும் பணியிலும் ஈடுபடுத்திச் சுவடிகளைத் திரட்டினார்[33]. மேற்படி திரட்டிய சுவடிகள் அனைத்தும் பாரீசு தேசிய நூலகத்திற்கு அன்னாரின் மறைவுக்குப் (23 ஏப்ரல் 1854 ஆம் ஆண்டு) பின்னர் அனுப்பிவைக்கப்பட்டன. எதுவார் ஆரியேலால் சேகரிக்கப்பட்ட சுவடிகளின் எண்ணிக்கை மொத்தம் 573 என்றும், இத்தகவல் 1866 ஆம் ஆண்டு தேசிய நூலகத்தில் பெறப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது[34]. இதில் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்புச் சுவடியும் ஒன்று.

1.7. பிரெஞ்சு அறிஞர் ழுலியேன் வென்சான் என்பார், கும்பகோணம் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்த உ.வே. சாமிநாத ஐயர் (1855–1942) அவர்களுக்கு ஏப்ரல் 1891 ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தின் மூலம் பாரீசிலுள்ள தமிழ்ச் சுவடிகள் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார்[35]. மேலும் வென்சான் அனுப்பிய பட்டியலில் *மணிமேகலை* ஓலைச் சுவடி பாரீசில் இருப்பதாகவும், *சிலப்பதிகாரம்* அங்கு இல்லை என்றும் அறிந்தார். புதுவையில் வாழ்ந்த வீரராகவ கவி இயற்றிய *வில்லைப் புராணம்* (வில்லியநல்லூர்ப் புராணம்) இருப்பதை அறிந்த உ.வே. சாமிநாத ஐயர் அதனைப் பதிப்பிக்க 1902 ஆம் ஆண்டு நகல் ஒன்றினைப் பெற்றார். அந்த நகலின் துணைகொண்டு அவர் வில்லைப் புராணத்தைப் பதிப்பித்ததாக நாம் அறிகிறோம்[36]. இவ்வாறு இலக்கியங்களையும், புராணங்களையும் பதிப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டபோதிலும், நாட்குறிப்புகள் இருப்பது தெரியவந்தும் அவற்றைப் பதிப்பிக்க உ.வே. சாமிநாத ஐயர் ஆர்வம் கொள்ளவில்லை. இவ்வாறு சுவடி வடிவிலேயே இருந்த ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பைப் பதிப்பித்து வெளியிட, தமிழில் ஆர்வம் உடைய சிலர் அக்கறைகாட்டித் தேடித் திரட்ட முயன்றனர். இனி அவர்களின் முயற்சிகளைப் பற்றியும், அவை வெற்றி பெறாமல் போனமை பற்றியும் அறிய முற்படுவோம்.

## 2. சுவடி படிக்க முயன்றோரும், பதிப்பிக்கும் பணி முற்றுப் பெறாமையும்

2.1. காகிதக் கையெழுத்துச் சுவடி வடிவிலுள்ள திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பைப் பார்த்த, படித்த சிலர் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ழுலியேன் வென்சான் என்னும் இந்தியவியல் அறிஞர் பாரீசு தேசிய நூலகத்தில் இருந்த, எதுவார் ஆரியேல் அனுப்பிவைத்த நாட்குறிப்பு நகல்களைப் பார்வையிட்டுத் தன் கருத்தைக் கீழ்க்கண்டவாறு வெளியிட்டார். "ஆனந்தரங்கப் பிள்ளை நாட்குறிப்பைப் படிக்கும்போது ஏற்படும் அக்கறை திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பைப் படிக்கும்போது ஏற்படவில்லை". ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பில் சில பக்கங்களை மட்டுமே பார்த்து நிறுத்திக்கொண்டுள்ளது இவரது அறிக்கையின் மூலம் தெரியவருகிறது[37].

2.2. சென்னையைப் பிரெஞ்சுக்காரர்கள் 1746 ஆம் ஆண்டு முற்றுகையிட்டுப்பின் நடந்த போரில் ஆங்கிலேயர்களை வென்றதும், டியூப்ளே தீட்டிய இதர திட்டங்களைப் பற்றிய விவரங்களை அறிந்திட அக்கறை காட்டி 1904 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு ஆனந்தரங்கர் நாட்குறிப்புகளை மொழிபெயர்ப்புச் செய்ய முனைந்தது. முதல் உலகப்போர் தொடங்கிய நேரத்திலும், போதுமான நிதி ஆதாரங்கள் இராணுவச் செலவிற்குத் தேவைப்பட்ட நிலையிலும், ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு மொழிபெயர்ப்பினைத் தொடர்ந்து 1928 ஆம் ஆண்டு வரை நடத்தி ஆங்கிலத்தில் நூலை சென்னை அரசாங்கத்தார் வெளியிட்டார்கள். இதே சமயத்தில் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பினையும் அவர்கள் நகலெடுத்தபோதிலும், புதுச்சேரி நகரையும், கோட்டையையும், கிராமங்களையும் ஆங்கிலேயர்கள் அழித்த செய்திகள் அதில் இருந்ததால் மேற்படி ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பை வெளியிட முன்வராமல் தயக்கம் காட்டினார்கள் என்று இப்போது சுவடியைப் படித்து அதிலிலுள்ள விவரங்கள் மூலம் நாம் அறிகிறோம்.

2.3. 1939 ஆம் ஆண்டு ழுவான் துப்ரேலின் அழைப்பின்பேரில் சென்னையிலிருந்து புதுச்சேரி வந்த பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி, ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையின் நாட்குறிப்புகளைப் பார்வையிட்டதாகக் குறிப்பிடுகிறார். ஆனந்த ரங்கப் பிள்ளை நாட்குறிப்பு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டதைப் போல, திருவேங்கடம் பிள்ளையின் நாட்குறிப்பினையும் அச்சிட வேண்டும் என்ற ஒருமித்த கருத்து இருந்ததாகத் தான் வெளியிட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையின் முன்னுரையில் நீலகண்ட சாஸ்திரி தெரிவிக்கிறார்[38]. நாளடைவில் இரண்டாம் உலகப்போர் காரணமாக ழுவான் துப்ரேல் பிரான்சு நாட்டிற்கு 1944 ஆம் ஆண்டு சென்றுவிட்டதாகக் குறிப்பிட்டு அதனால் எந்தவிதமான நடவடிக்கைகளும், முடிவான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், அதனால் திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு நகல் சென்னையிலிருந்து புதுச்சேரிக்குக் கலுவா மொபார் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கிறார்.

2.4. புதுவையில் வாழ்ந்த புகழ்பெற்ற வழக்கறிஞர் ஞானு தியாகு தனது 8 மே 1940 ஆம் ஆண்டுக் கடிதத்தில் பேராசிரியர் சீனிவாஸாச்சாரி அவர்களுக்குத் திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு பற்றிச் சொல்லும்போது இந்த நாட்குறிப்பு நகல் ஒன்று திரு. கலுவா மொபார் அவர்கள் வசம் இருப்பதாகவும், அதைப் பதிப்பும், மொழிபெயர்ப்பும் செய்யவேண்டியது அவசியம் என்று சொல்லித் தம் கருத்தைக் கீழ்க்கண்டவாறு வெளியிடுகிறார்[39].

> "ஓராண்டுக் காலம் சுவடியைப் படித்தேன். நாட்குறிப்பேடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஒவ்வொரு சொல்லையும் மூன்று முறை படித்தால்தான் புரிந்துகொள்ள முடியும். ஆனால் சுவடியில் அதிக சாரம் இல்லை. தமது பெரியப்பாவைப் போல் முக்கியமான பணிகளைத் திருவேங்கடம் பிள்ளை செய்யவில்லை. தமது பெரியப்பாவிற்கு வரவேண்டிய பாக்கிகளை வசூல் செய்வதிலேயே காலத்தைக் கழித்துள்ளார். இதன் தொடர்பாகப் பல ஐரோப்பியர்களை அவர் சந்தித்துள்ளார். ஆனால் இவர்கள் முக்கியமான செய்திகளை இவருக்குக் கொடுக்கவில்லை".

குடும்பச் செய்திகள், கொடுக்கல் வாங்கல், பாக்கி வசூல் போன்ற செய்திகளுக்கிடையே ஆழமான வரலாறு, பொருளாதாரம், கலை, கலாச்சாரம், சமூகம், மதம், பழக்கவழக்கங்கள் பற்றிய செய்திகளை நாட்குறிப்பின் உள்ளே சற்று நுழைந்திருந்து படித்திருந்தால் ஞானு. தியாகு கண்டுகொண்டிருப்பார். ஆனந்தரங்கப் பிள்ளை கைப்பிரதியைப் படித்துப் புரிந்துகொண்டு மொழி பெயர்க்க ஆங்கிலேயர்கள் இருபத்து நான்கு ஆண்டுகளுக்குமேல் செலவிட்டுள்ளனர். ஞானு. தியாகு ஓராண்டுக் காலத்தில் எந்த அளவு படித்திருக்க முடியும் என்று அறியமுடியவில்லை.

**2.5** 1761 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் புதுச்சேரி முற்றுகைக்குப் பின்பு தமிழர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தரங்கம்பாடியில் அகதிகளாகத் தங்கிய காலக்கட்டத்தில், வரலாறு எழுத நமக்கு ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இந்தச் சமயத்தில் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு எழுதியதால் இவரது நாட்குறிப்புச் சுவடி வரலாற்று ஆய்வாளர்களுக்கும், வரலாற்றின்மேல் ஆர்வம் உள்ளவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகிறேன். ஆனந்தரங்கப் பிள்ளை, பிரெஞ்சுக் கம்பெனியின் தரகர், ஆளுநர் டியூப்ளேயின் அந்தரங்க உதவியாளர், வர்த்தகர், பிரெஞ்சுக் கம்பெனிக் கிராமங்களின் மொத்தக் குத்தகையாளர், இந்திய அரசர்களின் நண்பர் என்ற பல தகுதிகளின் அடிப்படையில் பல செய்திகளைச் சேகரித்துத் தன் நாட்குறிப்பில் எழுதினார். வீரா நாயக்கர் சத்திர நீதிமன்ற நயினார் பதவியில் இருந்தபோது தகவல்களைச் சேர்த்து நாட்குறிப்பு எழுதினார். ஆனால் ரங்கப்ப திருவேங்கடம்பிள்ளைக்கு இப்படிப்பட்டதோர் அந்தஸ்து இல்லையென்றாலும் ஆனந்தரங்கப் பிள்ளையின் குடும்பத் தலைவர், வாரிசுதாரர் என்ற முறையிலும், தஞ்சை மராட்டிய அரசருடனும், தரங்கம்பாடியில் இருந்த டேனீஷ்காரர்களுடன், பிரெஞ்சுக்காரர்கள் கொண்டிருந்த தொடர்பினாலும் பலவிதத் தகவல்கள் கிடைத்ததைக் கொண்டு தனது நாட்குறிப்பை எழுதியுள்ளார். எனவே அவர் தரும் செய்திகளை ஆராய்தல் வரலாற்றுக்கு உரம் ஊட்டும் என்ற தூண்டுதலின்பேரிலும் இந்த நாட்குறிப்புச் சுவடிப்பதிப்பு இன்றியமையாததாகிறது. இவ்வாறு பல சமயங்களில் இச் சுவடியைப் பதிப்பிக்க அறிஞர்கள் முயற்சி மேற்கொண்ட போதிலும், நிலவிய சூழ்நிலைகளின் காரணமாகக் காலம் தாழ்த்தப்பட்டுக் கிடப்பிலேயே இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

## 3. ரங்கப்ப திருவேங்கடம்பிள்ளை நாட்குறிப்புத் தேர்ந்தெடுத்தலும் மீட்டுருவாக்கமும்

**3.1.** பாரீசிலுள்ள நகலில் ஆனந்தரங்கரின் தம்பி மகன் அப்பாவு என்ற திருவேங்கடம் பிள்ளை 7, அக்டோபர் 1760 ஆம் ஆண்டு *ஸ்ரீ ராமஜெயம், கிருஷ்ண சகாயம்* என்ற சொற்களைப் பயன்படுத்தித் தன் நாட்குறிப்பை எழுதத் தொடங்குவதைக் காண்கிறோம்[40]. ரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பில் கிருஷ்ண பகவானை அழைக்கும் வசனங்கள் எங்கும் இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும் புதுச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றிய பின்பு அப்பாவு என்ற ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை புதுச்சேரியிலிருந்து தரங்கம்பாடிக்குச் சென்று தங்கி, அங்கும் நாட்குறிப்பு எழுதுகிறார். நாட்குறிப்பேடு முதல் புத்தகம் முடிந்து அடுத்த நாட்குறிப்பேடு புதிதாக

எழுத ஆரம்பிக்கும் நாளான 12, ஐப்பசி சித்திரபானு (24 அக்டோபர் 1762) ஆண்டில் எழுத ஆரம்பிக்கும்போது மேற்சொன்ன வாசகங்களாகிய *ஸ்ரீ ராமஜெயம், கிருஷ்ண சகாயம், கிருஷ்ணா, கிருஷ்ணா* என்று குறிப்பிட்டே எழுத ஆரம்பிக்கிறார்[41]. இந்த வாசகங்களின் அடிப்படையில் தான் அப்பாவு திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பின் முதல் நாள் முடிவு செய்யப்படுகிறது. எனவே ரங்கப் பிள்ளை நாட்குறிப்பின் இறுதித் தொகுதியானது 24 செப்டம்பர் 1760 வரை தான் இருக்க வேண்டும். ஆங்கிலப் பதிப்பில் உள்ள 12 ஜனவரி 1761 முடிய உள்ள பகுதிகள் தவிர்க்கப்பட வேண்டும். அப்பாவு என்ற ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பை ஆனந்தரங்கரின் நாட்குறிப்போடு சேர்ப்பதோ, வெளியிடுவதோ முறையாகாது. ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையின் வரலாற்று உடையை ஆனந்த ரங்கப் பிள்ளைக்கு அணிவிக்கக் கூடாது. சிலர் விக்கிரம வருஷம் ஐப்பசி மாதம் 19-ம் நாள் (7 அக்டோபர் 1760) அப்பாவு பயணம் புறப்பட்டது என்று சொல்லப்பட்ட விவரத்தின் அடிப்படையில் அப்பாவு என்ற திருவேங்கடம் பிள்ளையும் பயணமானார் என்று முடிவு செய்கின்றனர்[42]. இதில் குறிப்பிட்டுள்ள அப்பாவு என்ற நபர் (குழந்தையம்மாளின் கணவர்) வேறு ஒருவரே அன்றி, ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை அல்லர். காரணம் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை புதுச்சேரியை விட்டு 27 பிப்ரவரி 1761 ஆம் ஆண்டு தரங்கம்பாடிக்குப் பயணமானார் என்று தன் நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளது கவனிக்கப்பட வேண்டும்[43]. எனவே இந்தக் காலத்திற்குரிய நாட்குறிப்பு அப்பாவு என்ற ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையால் எழுதப்படவில்லை என்று சொல்லப்படுவது முற்றிலும் சரியன்று. மேலும் ஆனந்தரங்கப் பிள்ளை உடல் நலமில்லாமல் இருந்தபோது இறுதி நாட்களில் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையே அருகில் இருந்து உதவி செய்துள்ளார்.

தற்போது பாரீசிலுள்ள நாட்குறிப்பு 10 ஜனவரி 1761 முதல் 12 ஜனவரி 1762 வரையுள்ள பகுதி 1901 ஆம் ஆண்டு புதுச்சேரியில் கண்டுபிடிக்கப்பட்டுப் புதுச்சேரி நூலகர் நகலெடுத்து ழுலியோன் வின்சான் அவர்களுக்கு அனுப்பினதாகவும், அவர் அதை 8 ஏப்ரல் 1901 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டதாகவும், பின்பு இந்த நாட்குறிப்புப் பகுதியை 26 ஏப்ரல் 1901 ஆம் ஆண்டு தேசிய நூலகத்தில் சேர்த்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாரீசிலுள்ள சுவடி எண் 154 Bis-ல் சுவடி எண்ணில் ஆனந்தரங்கரின் மோசமாகிக் கொண்டிருந்த உடல்நிலை பற்றியும், மரணப்படுக்கையில் அவர் பட்ட துன்பங்கள் பற்றியும், திருவேங்கடம் பிள்ளை கடற்கரைக்குச் சென்றதைப் பற்றியும், வீடு திரும்பிய பின்பு படுக்கையில் இருந்த ஆனந்தரங்கப் பிள்ளைக்குப் புதுச்சேரி நகரில் நடந்த சம்பவங்களைச் சொன்னதைப் பற்றியும் உள்ளது. பாரீசு சுவடி எண் 158-ல் குறிப்பிடாத விவரங்கள் (11 ஜனவரி 1761 தேதியது), பாரீசு சுவடி எண் 154-ல் உள்ளது. ரங்கப் பிள்ளை 12 ஜனவரி 1761-ல் மரணமடைந்த செய்தி பாரீசு சுவடி எண் 158-ல் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் சுவடி எண் 154-ல் மரணத்துக்குப் பின் நடந்த ஈமச் சடங்குகள் மற்றும் இதர விவரங்கள் 16 ஜனவரி 1761 வரை சொல்லப்பட்டுள்ளன. மேற்சொன்ன அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டு எழுதியுள்ளவர் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையே.

3.2. ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு (1760-1781) நகல்களில் பாடவேறுபாடுகள் உள்ளன. எனவே விடுபட்டவற்றை நிரப்பி மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட ஓர் சுவடிப் பதிப்பு தேவை என நான் கருதினேன். பாரீசு நகல் அநேகமாக

முழுமையான நகல் என்பதால் இதனை மூலச்சுவடியாக வைத்து ஒப்பிடும் பணி அவசியம் என முடிவு செய்தேன். கீழ்க்கண்ட எண்களையுடைய பக்கங்கள் பாரீசு நகலில் இருந்தாலும், இதர நகல்களில் இல்லை. அவைகளைத் தொகுத்து முதல் தொகுதி வெளியிடுவது முக்கியம். அந்த விடுபட்டப் பக்கங்களின் விவரங்கள் வருமாறு:

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11 | 19 | 35 | $45^{v}$ | $58^{v}$ | $66^{v}$ | 81 | 90 |
| $1^{v}$ | $11^{v}$ | $19^{v}$ | $36^{v}$ | 46 | 59 | $67^{v}$ | $81^{v}$ | $90^{v}$ |
| 2 | 13 | 20 | 37 | $46^{v}$ | 62 | 73 | 82 | 91 |
| $2^{v}$ | $13^{v}$ | $20^{v}$ | $37^{v}$ | 47 | $62^{v}$ | $73^{v}$ | $82^{v}$ | $91^{v}$ |
| $4^{v}$ | 14 | $23^{v}$ | 38 | $47^{v}$ | 63 | 74 | 83 | 98 |
| 5 | $14^{v}$ | 24 | $38^{v}$ | 54 | $63^{v}$ | $74^{v}$ | 84 | $98^{v}$ |
| $5^{v}$ | 15 | $24^{v}$ | 39 | 55 | 64 | 75 | $84^{v}$ | $99^{v}$ |
| 6 | $15^{v}$ | 25 | $39^{v}$ | $55^{v}$ | $64^{v}$ | $75^{v}$ | $86^{v}$ | 100 |
| $6^{v}$ | 16 | $25^{v}$ | 41 | 56 | 65 | 79 | 87 | $100^{v}$ |
| 7 | $16^{v}$ | 30 | $41^{v}$ | $56^{v}$ | $65^{v}$ | $79^{v}$ | $87^{v}$ | 101 |
| 10 | $17^{v}$ | 31 | 42 | 57 | 66 | 80 | 88 | |
| $10^{v}$ | 18 | 34 | $42^{v}$ | $57^{v}$ | 80 | $80^{v}$ | $89^{v}$ | |

ஆனந்தரங்கப் பிள்ளை அவர்களின் நாட்குறிப்பு (1736–1760) அடிப்படையில் பெரும்பாலும் வரலாறு எழுதப்பட்டுவந்த நிலைமாற **1993** ஆம் ஆண்டு பதிப்பு செய்யப்பட்ட வீரா நாயக்கரின் நாட்குறிப்பு (1778–1792) ஆராய்ச்சிக்கு உதவி வருகிறது. இந்நிலையில் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை அவர்களின் நாட்குறிப்பு காகிதக் கையெழுத்துச் சுவடிவடிவிலேயே இருந்ததால் அதனைப் பிரசுரிக்கும் பணியினை நான் மேற்கொண்டேன். 1761 ஆம் ஆண்டு புதுச்சேரியை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பின்பு நடந்த நிகழ்வுகளையும், பிரெஞ்சுக்காரர்களின் நிலைமையையும், புதுவை வாழ் மக்களின் அல்லல்களையும், முதன்மைச் சான்றுகளாக ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை குறிப்பிட்டுள்ளபடியால் அறிவெல்லையின் இடையீடுகள் இப்போது நிரப்பப்படும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பின் மூலம் மராட்டியர், முகலாயர், ஆற்காட்டு நவாபு, மைசூர் ஹைதர் அலி, ஹைதராபாத் நிஜாம், தஞ்சை மராட்டியர், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், டேனீஷ்காரர்கள் ஆகியோர்களைப் பற்றிய பல தகவல்களை நாம் அறிகிறோம். வரலாறு, அரசியல் உறவு, தனித்தனிச் சாதிக்கூட்டங்கள், சமூகநிலை, வாணிகம், பொருளாதார நிலை ஆகியவற்றை நாம் அறிய முடிகிறது. ரங்கப்ப திருவேங்கடம்

பிள்ளை நாட்குறிப்பின் மூலபாடம் கொடுத்துப் பதிப்பித்தல் ஆய்வாளர்களுக்கு அகச்சான்றாகப் பெரிதும் பயன்படும் என்ற கருத்திலும் புதுவை வரலாற்றைச் சிறப்பாய் எழுத முடியும் என்ற நோக்கத்திலும், தமிழர் அனைவரும் சுவைக்குமாறு செய்யவேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடும் இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 4. ரங்கப்ப திருவேங்கடம்பிள்ளை வாழ்க்கைக் குறிப்பு

**4.1.** ஆனந்தரங்கப் பிள்ளையின் குடும்ப வாரிசுதாரரான ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை 15–ஆம் நாள் பிப்ரவரி மாதம் 1737 ஆம் ஆண்டு (19 மாசி நள) வியாழக்கிழமை பிறந்தார். இவரின் பிறந்த ஜாதகம் ரங்கப் பிள்ளை அவர்களால் குறிக்கப்பட்டுள்ளது[44]. அன்னாரது தந்தை பெயர் திருவேங்கடம். (இவர் ஆனந்தரங்கப் பிள்ளையின் உடன்பிறந்த தம்பியாவார்). தாயார் பெயர் காளத்தியம்மாள். ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையை அப்பாவு என்ற செல்லப்பெயரில் ஆனந்தரங்கப் பிள்ளை அழைக்கிறார். பதினெட்டு வயதில் தன் தகப்பனாரை (8 செப்டம்பர் 1754–இல்) இழந்த பின்னர் தனது பெரியப்பாவாகிய ஆனந்தரங்கப் பிள்ளையின் அரவணைப்பிலேயே வளர்க்கப்பட்டார். தன் தகப்பனார் இறந்த பதினாறாம் நாள் சடங்குகளை 23 செப்டம்பர் 1754–இல் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையே நடத்தினதாக தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்[45]. ரங்கப் பிள்ளையின் சொந்த மகன்களான அண்ணாசாமி மற்றும் அய்யாசாமி ஆகியவர்களை விட, அப்பாவு என்ற திருவேங்கடம் வயதில் மூத்தவராய் இருந்தபடியினால் நல்ல கல்வி புகட்டவும், வியாபார விஷயங்களைத் தொடர்ந்து நடத்திடவும் தன்னுடனே அவரைச் சிறப்பாக வளர்த்ததாக அறிய முடிகிறது. ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையின் சகோதரி பெயர் திரிபுரசுந்தரி. இந்தத் தங்கை 11 அக்டோபர் 1740–ஆம் ஆண்டு பிறந்துள்ளார். ஆனால் மற்றொரு சகோதரியின் பெயர் கிடைக்கப் பெறவில்லை.

**4.2** அப்பாவு திருவேங்கடத்தின் நடத்தை மற்றும் குணநலன்களைப் பற்றி அறியமுடிகிறது. 30 ஜனவரி 1755–இல் புதுச்சேரி கவர்னர் குத்தேயு அவர்கள் சொல்லுகிறபோது "திருவேங்கடம் திறமையானவன். அவன் நன்னடத்தை கொண்டவன்" என்றும், மற்றோர் இடத்தில் ஆனந்தரங்கப் பிள்ளை அவர்களிடமே சொல்லும்போது "உன் இளைய தம்பி மகன் புத்திசாலி, அறிவாளி, திறமையானவன். அவனது நடத்தை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்றும் குறிப்பிடுகிறார்.

புதுவை ஆளுநர் டியூப்ளே அவர்களுக்கு 16 நவம்பர் 1749 ஆம் ஆண்டு அப்பாவு திருவேங்கடம் பிள்ளையை ஆனந்தரங்கப் பிள்ளை அறிமுகம் செய்யும்போது திருவேங்கடம் பிள்ளைக்குப் பிரெஞ்சு படிக்கவும், எழுதவும் தெரியும் என்று சொல்கிறார். அவருடைய பிரெஞ்சு மொழி அறிவை ஆவணங்களைப் பிரெஞ்சிலிருந்து தமிழுக்கு (21 ஏப்ரல் 1760) மொழி பெயர்த்ததிலிருந்து நாம் அறிகிறோம். மேலும் அவர் போர்ச்சுகீசியம், பாரசீகம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசத் தெரிந்தவராக இருந்ததை ரங்கப்பிள்ளை நாட்குறிப்பிலிருந்து அறிகிறோம். அன்னாருக்குச் சோதிடக் கலையும் நன்கு தெரியுமென்பது அவர் எழுதிய நாட்குறிப்பின் மூலம் வெளிப்படுகிறது.

**4.3** திருவேங்கடம் பிள்ளையின் திருமண ஏற்பாடுகளை ஆனந்தரங்கப் பிள்ளையே கவனித்துள்ளார். அவரது திருமணப்பந்தல் கால்நடும் விழா 17 ஜூன் 1755–இல் நடந்துள்ளது. அச்சமயம் மாப்பிள்ளை ஊர்வலம் புறப்பட்டபோதும், வந்தடைந்தபோதும் பதினைந்து துப்பாக்கிக் குண்டுகள் முழங்கியுள்ளன. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பன்னீர் மற்றும் பான்சுப்பாரி வழங்கப்பட்டுள்ளது. கனகவல்லி என்ற பெண்ணை 18 ஜூன் 1755–இல் புதன்கிழமை திருமணம் செய்துள்ளார். அன்னாரது திருமணத்திற்கு ரூபாய் இரண்டு லட்சம் செலவு ஆனதாக ஆனந்தரங்கப் பிள்ளை குறிப்பிடுகிறார்.

மதுரகவிராயர் என்ற புலவர் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையின் திருமணத்தில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். அப்போது அவர் பாடியதாவது[46]:

சோதிமதிக் குடைகவரியால வட்டம்
துவசமவுதா கிரிபேரிகைகள் சட்டம்
கோதில்பசுஞ் சிவிகையம் பாரித்திட்டம்
குமாரபாணங்கள் வஜீரென்னும் பட்டம்
நீதியொடு நிஜாமலிகான் அளிக்கப்பெற்று
நிலைகொளுமா நந்தரங்க ராயர்வாழ்வே
மேதினியோர் துதிக்கும் வஜாரதராய
விஜய திருவேங்கடமா லாடீரூசல்.

திருவேங்கடம் பிள்ளையின் மனைவிக்கு 8 செப்டம்பர் 1756–இல் சீமந்தம் நடந்துள்ளது. இதன் பின்னர் மங்காத்தாள் என்ற பெண்ணை அவர் பெற்றெடுத்தார். புலவர் மதுரகவிராயர் குழந்தையை முதன்முதலாகத் தொட்டிலிடும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். அப்போது அவர் பாடியதாவது[47] :

செஞ்சிநக ரார்க்காடு, கன்னூர் கடப்பைமுகில்,
சீர்ப்பை வெங்கடகிரி மைசூர்
செகநாத புரிகாசி விஜயாபுரங்கதிர்
செம்பொன் மதில் சூழ்ந்த டில்லி
தஞ்சைநகர் தென்மதுரை நெல்வேலி வெண்டிரைத்
தண்குமரி மலையாளமும்
தனித்தனி புரக்கு முடிமன்னவரெலா மலர்த்
தாமரைச் செங்கை கூப்பி
யஞ்சலிசெய்தே பணியுமாசாட்சிபுரி விஜய
வாநந்த ரங்க ராயன்
அருள்புதல்வனாம் விஜய திருவேங்கடக்குரிசில்
அக மகிழ்ந்தினிதளித்த
வஞ்சியே விஞ்சுவன கிஞ்சுக மதிக்குமிதழ்
மணிவாயின் முத்த மருளே
மங்கலஞ் சேர்வதன மங்கை நாயகவல்லி
மணிவாயின் முத்த மருளே

இரண்டாவது பெண் குழந்தையைக் கனகவல்லி அம்மாள் 3 ஜூன் 1758–இல் பெற்றெடுத்தாள்[48]. மேலும் முத்துவிஜய திருவேங்கடம் என்ற மகன் ஒருவன் பின்பு பிறந்ததாகவும் பிரெஞ்சு ஆவணங்கள் மூலம் நாம் அறிகிறோம்.

4.4 ஆனந்தரங்கப் பிள்ளை ஒரு வர்த்தகர் ஆனபடியினால் திருவேங்கடத்தை இளமையிலேயே தனது வியாபாரத்தில் ஈடுபடுத்திப் பயிற்சி கொடுத்துள்ளார். 11 பிப்ரவரி 1755–இல் குதிரை ஏலம் நடக்கும் இடத்தில் இருந்து பணிகளைக் கவனிக்க உத்தரவிட்டுள்ளார். பாப்பய்ய பிள்ளை உடல்நலக்குறைவாக இருந்தபோது 5 மார்ச் 1755–இல் குருவப்பச் செட்டியுடன் சென்று பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி விஷயமாக ஏற்றுமதி செய்யக்கூடிய துணிகளைச் சரிபார்க்கும் பணியைக் கவனிக்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மேலும் 2 ஏப்ரல் 1755ஆம் ஆண்டு அன்னார் நிலபுல மேலாண்மைகளைக் கவனித்து 200 பகோடாக்களைப் புதுச்சேரிக் கவர்னருக்குச் செலுத்தியதாக நாம் அறிகிறோம். இதுவுமன்றி 23 ஏப்ரல் 1756ஆம் ஆண்டு 500 பகோடாக்களை நிலபுல மேலாண்மைப் பணிகளுக்காக மீண்டும் செலுத்தியதாகத் தெரிகிறது. புதுச்சேரி ஆளுநர்களான லெரி மற்றும் குத்தேயு பல சமயங்களில் திருவேங்கடம் பிள்ளையை அணுகிப் பிரெஞ்சுக் கம்பெனிக்குத் தேவையான பணத்தைக் கடனாகக் கொடுக்கத் தொல்லை செய்துள்ளார்கள். ஆனால் பணம் கொடுக்காத நிலையில் இவரைக் கைது செய்துள்ளதும் தெரியவருகிறது.

அப்பாவு என்று செல்லமாக அழைக்கப்பட்டாலும் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை என்று பிரெஞ்சு ஆவணங்களில் குறிப்பிடப்படுகிறார்[49]. இவருக்கு வந்த தமிழ்க் கடிதங்களிலும், (பிரெஞ்சு ஆய்வு நிறுவனச் சுவடியில் உள்ளன) ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை என்றே அழைக்கப்படுகிறார். அவர் ஆனந்தரங்க திருவேங்கடம் பிள்ளை என்று (23 நவம்பர் 1789 ஆம் தேதியிட்ட கடிதத்தில்) கையொப்பமிடுகிறார். அவரது கையெழுத்தை உறுதிப்படுத்தும் வகையில் வேறொரு தமிழ் ஆவணத்தில் உள்ள ஒரு தகவலை இங்குக் குறிப்பிடலாம்[50]. "புதுவை மாநகரம் சாவடி நீதி சன்னிதானத்துக்கு, நீதி துரையவர்கள் சமூகத்துக்கு, ஆனந்த ரங்கப் பிள்ளை அவருக்குத் தம்பி மகனுமாய், சுதந்தரக்காரனுமாய், தமிழருக்குத் தலைவனுமாய் யிருக்குற, திருவேங்கடம் பிள்ளை மகா வணக்கத்துடனே எழுதிக் கொள்ளும் விண்ணப்பம்" என்று உள்ளது.

4.5 ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை 28 ஆகஸ்ட் 1769–இல் பிரெஞ்சுக் கம்பெனியின் குடுத்தியேராகப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்[51]. பின்னர் 10 பிப்ரவரி 1776–இல் இந்தியர்கள் அனைவரின் தலைவராகப் பிரான்சு நாட்டு மன்னரால் நியமிக்கப்பட்டுள்ளார்[52]. மேலும் 5 அக்டோபர் 1776–இல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபார முகவராகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்[53]. பிரெஞ்சுக் கம்பெனியின் ஆணைகளைப் பல சாதியார்களுக்கு எடுத்துச் சொல்லவும், தேவைப்படும்போது அவர்கள் எல்லாரையும் ஒன்றாகக் கூட்டவும், ஒற்றுமையாக அவர்களை வழிநடத்தவும் வேண்டிய பொறுப்பு அளிக்கப்பட்டதாக அந்த ஆணை மூலம் தெரியவருகிறது. 16 டிசம்பர் 1776 ஆம் ஆண்டு புதுவையிலுள்ள தங்கசாலையின் இடைத்தரகராகச் செயல்பட இவர் அனுமதிக்கப்பட்டு, புதுவை நகரத் தங்கசாலையில் எந்த அளவு வேண்டுமானாலும் நாணயங்களை அச்சிடவும், வெளியிடவும் பிரான்சு நாட்டு மன்னரால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது[54]. பிரான்சிலிருந்து மன்னரின்

ஆணை புதுச்சேரி வந்தபோது ஆளுநர் பெல்கூம் என்பாரது முன்னிலையில் திருவேங்கடம் பிள்ளை இந்தியர்களின் தலைவராக (Chef des Indiens et des Malabars) 3 நவம்பர் 1778–இல் பதவியேற்றுள்ளார்[55]. ஆங்கிலேயர்கள் 1778–இல் புதுச்சேரியை, தளபதி சர். ஹெக்டர் மன்றோ தலைமையில் முற்றுகையிட்டபோது, உணவுப் பொருட்களைத் தட்டுப்பாடின்றிப் புதுச்சேரி நகரில் வழங்கும் பணியினைத் திருவேங்கடம் பிள்ளை செய்துள்ளார். மேலும் தினசரிக் கூலியாட்களைப் பணியில் அமர்த்தி, வேலைகளைக் கவனிக்க ஏற்பாடுகள் செய்ததோடு மட்டுமல்லாமல் தனது சொந்தச் செலவிலேயே சிப்பாய்களின் படை ஒன்றையும் அமைத்துத் தானே சம்பளமும் கொடுத்துள்ளார்[56]. புதுச்சேரி நகரக் கோட்டையை அப்போது பாதுகாக்க இவர் உதவியதாகத் தெரிகிறது. புதுச்சேரியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், 17 அக்டோபர் 1785–இல் பிரெஞ்சுக்காரர்கள் வசம் நகரை மீண்டும் ஒப்படைத்தனர். அதே ஆண்டு அக்டோபர் 8 ஆம் தேதி திருவேங்கடம் பிள்ளையின் பணிகள் பாராட்டப்பட்டு பிரெஞ்சுக் கம்பெனிப் பதவியில் நியமிக்கப்பட்டார்[57]. இந்தியர்களுக்கு இடையே இருந்த சாதிப்பூசல்களைக் குறிப்பாக வலங்கை, இடங்கை சாதிகளுக்கு இடையே ஏற்பட்ட வழக்குகளைப் பெறவும், கேட்கவும், பிரெஞ்சுக் கவர்னருடன் கலந்தாலோசிக்கவும் பின்னர் முடிவுக்குக் கொண்டுவந்து தீர்த்துவைக்கவும், அவருக்கு அதிகாரம் அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. புதுவைப் பட்டணத்தில் நீதி செலுத்தும் பொருட்டு முனிசிபல் சங்கம் ஏற்படுத்தப்பட்டபோது திருவேங்கடம் பிள்ளையை 1785–இல் தமிழர்த் தலைவராக (Chef des Malabars) ஆளுநர் நியமித்தார். பின்பு 31 ஆகஸ்டு 1786–இல் குடுத்தியேராகவும் தொடர்ந்து நியமிக்கப்பட்டுள்ளார்[58]. தமிழரைச் சேர்ந்த காரியங்களுக்கு முன் நின்று பேசும்படி அப்போது அவர் கோரப்பட்டுள்ளார். புதுவை நகரில் மகாநாட்டார்கள் மகாநாடு கூட்டும் வழக்கம் திருவேங்கடம் பிள்ளையின் இல்லத்திலேயே நடைபெற்றதாகவும் தெரிகிறது.

தனது வியாபாரத்தில் குறிப்பாகக் கோவா, கொழும்பு மற்றும் ஜகார்த்தா ஆகிய இடங்களிலிருந்து வரும் சாராயத்தைப் புதுவையில் விற்றுக் கணக்குகளை வரவு வைத்தது 1775 முதல் 1777 வரை குறிக்கப்பட்டுள்ளது[59]. அரசுக்கு இதில் வரியும் இவரால் செலுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. சேதராப்பட்டு என்ற கிராமம் 22 டிசம்பர் 1785 ஆம் ஆண்டு இவரது பணியைப் பாராட்டிக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது[60]. இந்தக் கிராமத்தின் ஆண்டு வருமானமாக இவர் ஐம்பது நட்சத்திரப் பகோடாக்களைப் பிரெஞ்சு அரசாங்கத்திற்குச் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரும் 1787 முதல் 1791 வரை செலுத்தியுள்ளார்[61]. ஆங்கிலேயரின் புதுச்சேரி முற்றுகையின்போது பிரெஞ்சு ஆளுநர் தமக்குத் தேவையான சிப்பாய்கள், கூலியாட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் கிடைக்க திருவேங்கடம் பிள்ளையையே முழுமையாக நம்பி இருந்துள்ளார். பிரெஞ்சுக் கம்பெனியின் விவகாரத்தில் இந்தியர்களின் தலைவராக நியமிக்கப்பட்டு உள்நாட்டு வணிகர்களின் மீதான முழுக்கட்டுப்பாடும் கொடுக்கப்பட்டுச் சுதந்திரமாக அவர் செயல்பட்டுள்ளார் என்றும் தெரிகிறது. மேலும் 1 ஆகஸ்டு 1788 ஆம் ஆண்டு கொசிஞ்சி ஆளுநரால் தமிழர்களின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்ற அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்[62]. இறுதியில் 7 பிப்ரவரி 1791 ஆம் ஆண்டு திங்கட்கிழமை இறந்ததாக அறிகிறோம்[63].

## 5. ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையின் நாட்குறிப்புச் சுவடி உள்ள இடங்களும் நகல்களும்

**5.1** பாரிசிலுள்ள தேசிய நூலகத்தில் உள்ள Mss. Indien எண் 155 முதல் 157 முடிய ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பைக் கொண்டுள்ளது. இந்த மூன்று பதிவேடுகள் 345 x 225 மில்லி மீட்டர் அளவைக் கொண்டன. ஆரியேல் அவர்கள் மே, 1849 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 1850 வரை நகல் எடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. ரத்தினம் என்ற எழுத்தரால் நகல் எடுக்கப்பட்டதாகவும், தியாகநாதன் மற்றும் தயிரியநாதன் என்ற எழுத்தர்கள் எழுதிய நகல்களைச் சரிபார்த்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.

| *தொகுதி எண்* | *தாள்கள்* | *காலம்* |
|---|---|---|
| 155 | 431 | 1 ஏப்ரல் 1761 – 4 அக்டோபர் 1765 |
| 156 | 603 | 5 அக்டோபர் 1765– 14 அக்டோபர் 1773 |
| 157 | 192 | 15 அக்டோபர் 1773– 15 ஏப்ரல் 1781 |

**5.2** சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் மூன்று பதிவேடுகள் உள்ளன. இவை 33.5 x 21.5 சென்டி மீட்டர் அளவை உடையன. கருப்பு மையில் எழுதப்பட்டுத் திருத்தங்கள் சிவப்பு மையினால் செய்யப்பட்டுள்ளன. இவை 11 ஏப்ரல் 1762 முதல், 25 ஜூன் 1768 வரையுள்ள காலங்களுக்கு உட்பட்டவை. அவற்றின் விவரம் வருமாறு :

| *தொகுதி எண்* | *பக்கங்கள்* | *காலம்* |
|---|---|---|
| 186 | 1–155 | 11 ஏப்ரல் 1762 – 3 நவம்பர் 1762 |
| 186ஏ | 156–254 | 4 நவம்பர் 1762 –21 டிசம்பர் 1763 |
| 186ஏ | 1–61 | 1 ஜனவரி 1764 – 3 ஜூன் 1764 |
| 186பி | 62–219 | 26 செப்டம்பர் 1764 –25 ஜூன் 1768 |

**5.3.** புதுச்சேரி இந்திய தேசிய ஆவணக் காப்பகத்தில் பதினெட்டாம் நூற்றாண்டு ஆவண எண் 9 என்று குறிக்கப்பட்டு ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை எழுதிய நாட்குறிப்பு உள்ளது. இந்த நாட்குறிப்புப் பகுதிகள் ஜனவரி 1764 முதல் ஜூன் 1764 வரையுள்ள காலங்களுக்கு உட்பட்டது. இந்த நகல்கள் பழுதடைந்து உள்ளதைச் சீர்செய்த பின்பு பக்கங்களை மாற்றி மாற்றி வைத்துள்ளனர். இந்த விவரங்கள் கீழ்வருமாறு :

| *பக்கங்கள்* | *நாட்குறிப்புக் காலம்* |
|---|---|
| 1–8 | 11 ஜூன்–11 ஜூலை 1764 |
| 9–16 | 10 மே–10 ஜூன் 1764 |
| 17–18 | 17 ஜூன்–11 ஜூலை |
| 19 | 10 மே–10 ஜூன் 1764 |

| | |
|---|---|
| 20–22 | 11 ஜூன்–11 ஜூலை 1764 |
| 23–26 | 10 மே–10 ஜூன் 1764 |
| 127–142 | 10 மே–10 ஏப்ரல் 1764 |
| 143–154 | 9 ஏப்ரல்–9 மே 1764 |
| 155–156 | 9 பிப்ரவரி–9 மார்ச் 1764 |
| 159 | 9 ஏப்ரல்–9 மே 1764 |
| 172 | 10 மே–10 ஜூன் 1764 |
| 173 | 9 பிப்ரவரி–9 மார்ச் 1764 |
| 183 | 11 ஜனவரி–8 பிப்ரவரி 1764 |

நாட்குறிப்புகளில் ஏற்கெனவே தமிழில் எண்கள் இருந்துள்ளதை நாம் காணமுடிகிறது. இந்த ஆவணங்கள் பழுதுபார்க்கப்பட்ட பின்பு புதிய அரபு எண்களைப் பயன்படுத்தியுள்ளனர். தமிழில் உள்ள எண்கள் வரிசைக்கிரமமாக வைக்கப்படாமல் பக்கங்கள் மாற்றி மாற்றி வைத்துத் தைக்கப்பட்டு உள்ளன. இந்தக் குழப்பம் சரிசெய்யாத நிலை இன்றும் உள்ளது.

5.4. பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்திலுள்ள நகல் 23x35 சென்டி மீட்டர் அளவு உடையது. இந்த நகலில் மெய் எழுத்துகளுக்குப் புள்ளியில்லை. கூட்டு எழுத்துக்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்கள் மட்டும் பெரிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த நாட்குறிப்பு நகல் விஷு வருஷம் புரட்டாசி மாதம் 4 ஆம் நாள், புதன்கிழமை (16 செப்டம்பர் 1761) முதல் பங்குனி மாதம் 31 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை (8 ஏப்ரல் 1762) வரை உள்ளது.

## 6. நாட்குறிப்புச் சுவடி எழுத்து முறையும், மொழியியல் ஆய்வும்

6.1. டி, ஷு போன்ற கூட்டெழுத்துக்கள் பாரிசு மற்றும் புதுச்சேரி நாட்குறிப்பு நகல்களில் உள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் மொழி பயின்ற வீரமாமுனிவர் (1680–1764) தமக்கு ஏற்பட்ட அனுபவ இடர்ப்பாடுகளைத் தமிழ் எழுத்துக்களின் வரி வடிவைப் பற்றி நான்கு இடங்களில் குறிப்பாகக் கொடுந்தமிழ் லத்தீன் இலக்கணம் (1728), தொன்னூல் விளக்கம் (1730), சதுரகராதி (1732), தமிழ்–லத்தீன் அகராதி (1744) ஆகியவற்றில் தம் கருத்தைத் தெரிவிக்கின்றார்[64]. எழுத்துச் சிக்கலைப் பற்றிக் குறிப்பிடும்போது அவை மூன்று வகைப்படும் என்று குறிப்பிட்டு முறையே ரகர வேறுபாடு, எகர–ஒகரக் குறில்–நெடில் வேறுபாடு மற்றும் மெய் எழுத்துக்கள் புள்ளி பெறாது வருதல் ஆகியன என்று தெளிவுபடுத்துகிறார். வீரமாமுனிவர் காலத்தை ஒட்டி ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை வாழ்ந்தவர் ஆதலால் அவர் சொல்கின்ற நடைமுறை நாட்குறிப்பில் உள்ளதா என்றும் அவர் ஏற்படுத்திய எழுத்துச் சீர்திருத்தத்தின் தாக்கம் பற்றியும் காண்போம்.

i) ா என்ற எழுத்து மேலே கோடிட்டால் அது ரகரமாக வழங்கும் முறையும், மேலே கோடிடாவிடில் அது நெடிலாக வழங்கும் முறையும் சென்னையிலுள்ள ஆவணக்காப்பக நாட்குறிப்பு நகலில் காணப்படுகிறது.

ii) எகர, ஒகரக் குறில் மீது கோடு மட்டும் இடப்பட்ட வழக்கம் சென்னை நகலில் மட்டும் காணப்படுகிறது. வீரமாமுனிவர் கொண்டிருந்த எகர, ஒகர வேறுபாட்டுச் சீர்திருத்தத்தை எந்த நாட்குறிப்பிலும் காணமுடிவதில்லை. பிரெஞ்சு நிறுவன நகலிலும், பாரீசு நகலிலும் கெ, கே, கொ, கோ (ஒற்றைச் சுழி, இரட்டைச் சுழி) ஆகிய குறில், நெடில் வேறுபாட்டை காண முடிவதில்லை. இதிலிருந்து வீரமாமுனிவரது முறை தமிழர்களால் பெருமளவில் ஏற்கப்படவில்லை என்பது புலனாகிறது.

iii) குறிலை, நெடிலாகப் படிக்கும் மயக்கம் ஒழிந்து தெளிவு ஏற்பட வீரமாமுனிவர் சீர்திருத்தம் செய்தாலும் அது எந்தவொரு நாட்குறிப்புப் பிரதியிலும் காணப்படவில்லை

iv) எழுத்து முறையில் மெய் எழுத்துக்களுக்குப் புள்ளியிடும் பழக்கம் பதினெட்டாம் நூற்றாண்டில் இல்லாததால், மெய் எழுத்துக்கள் புள்ளி பெறாது வரும் முறை மட்டுமே எல்லா நாட்குறிப்பு நகல்களிலும் காணப்படுகிறது.

v) முடிவாக, உயிர்மெய்யாக வரும் எகர ஒகரங்களில் வரும் ெ என்ற கொம்பு, நெடிலைச்சுட்ட கே, கோ போல மேலே சுழி பெறுவதும், சுழி பெறாத வழி, கெ, கொ போலக் குறிலாக வழங்குவதும் ஒகார நெடிலும் கீழே சுழி பெறுவதும் வீரமாமுனிவர் செய்த சீர்திருத்தம். இந்தச் சீர்திருத்தத்தின் தாக்கங்கள் நாட்குறிப்பு நகலெடுப்போரிடம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அளவிலும் கையாளப்படாதது குறிப்பிடத்தக்கது.

**6.2.** ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பில் வரும் சில சொற்களில் குறிப்பாக நான்கு கப்பல், மூணு கப்பல் எனக் குறிப்பிடும்போது ஒருமைக்கும், பன்மைக்கும் வேறுபாடு இல்லை என்று நாம் கருதவேண்டியுள்ளது. நாட்குறிப்பினை ஆராயுங்கால் நகல்களை எழுதும்போது சுவடியைக் காதால் கேட்டுச் எழுதிச் சந்திப் பிழை ஏற்பட்டதா அல்லது பார்த்து எழுதுங்கால் தம் அறிவுக்கேற்ப நகலெடுப்போர் சொற்களை மாற்றியமைத்ததால் நிகழ்ந்ததா என்று அறியமுடியவில்லை. இருப்பினும் நாட்குறிப்பில் உள்ள பல சொற்களின் அடிப்படையில் மொழியியல் ஆய்வினை நாம் மேற்கொள்ளலாம். அவற்றின் நெடுங்கணக்கு வரிசை கீழ்வருமாறு :

i) அகரம் இகரமாதல்: வஞ்சனை – வஞ்சினை.

ii) சில சொற்களில் வரும் அ–இ ஆக மாறுதல், குறிப்பாகத் தொடர்ந்துவரும் எழுத்து இ ஆக இருந்தால். எடுத்துக்காட்டாகப் பூசணி–பூசிணி, தேவடியாள்–தேவிடியாள்.

iii) வடமொழியிலிருந்து தமிழுக்குச் சொற்களைக் கடன் வாங்குமிடத்து உச்சரிப்பில் அ–எ ஆக மாறும். பலம்–பெலம், கதி–கெதி, தண்டம்–தெண்டம்.

iv) இ கரம் யிகரமாக மாறுதல் : இரண்டு–யிரண்டு, இந்த – யிந்த.

v) இடையில் வரும் இ எழுத்து அ மற்றும் உ ஆக மாறுதல். கயிறு–கயறு, குடிக்கூலி–குடக்கூலி, அடிமை–அடுமை.

vi) ஈ – யீ காரமாக மாறுதல் : ஈழம் – யீழம்.

vii) எ கரம், யெ காரமாக எழுதப்பட்டுள்ளது : எருது – யெருது, எப்பேர்ப்பட்ட – யெப்பேர்ப்பட்ட, எங்கள் – யெங்கள்.

viii) ஏ – யே காரமாக மாறுதல் : ஏடு – யேடு, ஏழு – யேழு.

ix) ஆரம்பத்தில் உள்ள ஐ எழுத்தைத் தொடர்ந்து மெய் எழுத்து வரும்போது அ என்று மாறுதல். ஐந்து–அஞ்சு, ஐம்பது–அம்பது.

x) சொற்களின் ஆரம்ப ஒ சில சமயங்களில் உ ஆக மாறுதல். (ஆனால் உ அல்லது ஐ கொண்டிருந்தால் மட்டுமே) கொடு–குடு, தொகை–துகை.

xi) தகரம், சகரமாக எழுதப்பட்டுள்ளது. த்த என்ற எழுத்து ச்ச என்று மாறுதல். (இ அல்லது ஐ முன்னால் வந்தால்) மிதித்த–மிதிச்ச, படித்த–படிச்ச, கழித்த–கழிச்ச, அழைத்த–அழைச்ச, நியமித்த–நியமிச்ச, சம்மதித்து– சம்மதிச்சு, நசித்து–நசிச்சு.

xii) நகரத்திற்கு னகரம் மயங்கியுள்ளது. நாகூர் – னகூர், நாகப்பட்டணம்–னகப்பட்டணம், நாள்–னள், நாயக்கர்– னயக்கர், நாடு–னடு, நாட்டாமை–னட்டாமை, நயினர்–னயினர்.

xiii) சில சொற்களில் ந் என்ற எழுத்து ஞ் ஆக மாறுகிறது. (முன்னால் இ, ஐ, இருந்தால்) இடிந்த–இடிஞ்ச, பிரிந்த–பிரிஞ்ச.

xiv) மொழி முதல் யகரம் மறைந்து ஆ என்று வருதல். யானை–ஆனை, யாண்டு–ஆண்டு, யார்–ஆர்.

xv) யகர ஒற்று இகரச் சாரியையுடன் எழுதப்பட்டுள்ளது: தை–தையி

xvi) முதலிலும், இடையிலும் ரகரம் றகரமாக நாட்குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. ராமலிங்கம்–றமலிங்கம், ராசா–றசா, கிராமம்–கிறமம், தர்மம்–தற்மம், ரொம்ப–றெம்ப, வீரராம–வீரறாம.

xvii) றகரம் தகரமாக எழுதப்பட்டுள்ளது: மற்றும்–மத்தும், பெற்ற–பெத்த, முற்றிலும்–முத்திலும்

xviii) ன்று என்பது ண்ணு ஆக மாறுதல். ஒன்று–ஒண்ணு, மூன்று–மூணு, கன்று–கண்ணு.

காலத்துக்குக் காலம் தமிழ்மொழி மாற்றம் அடைந்துவந்து பரிணாம வளர்ச்சியைக் கண்டிருந்தாலும் பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின்னரே பேச்சுத் தமிழ் முழுக்க முழுக்கத் தமிழ் உரைநடையில் இடம் பெற்றுள்ளது. வரலாற்று மொழியியல் நோக்கில் நாட்குறிப்பினை அணுகும்போதுதான் தமிழ்மொழியின் மாற்றத்தை அறியமுடிகிறது.

**6.3.** ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பில் பயன்படுத்தப்பட்ட பிரெஞ்சு சொற்கள் (பிற மொழி) பேச்சுமொழியில் கலந்து அதனால் தமிழ் உரைநடை வளர்ச்சி ஏற்பட்டதற்குரிய சான்றாகக் கொள்ளலாம். தமிழ் உச்சரிப்பில் பிரெஞ்சுப் பெயர்ச் சொற்கள்பற்றியும், அவற்றோடு இணைகின்ற ஒட்டுக்கள் பலவற்றைப்பற்றியும் வாக்கியங்களில் காணப்படும் பல்வேறு சொற்களின் முறைவைப்புப் பற்றியும் தனியே ஆராய வேண்டி இருக்கிறது. மேலும் நாட்குறிப்பாளர்கள் நாட்குறிப்பு எழுதும்போது தமிழ்மொழியில் உள்ள ஒலிவடிவமைப்புப் பாணியில் அல்லது வரிவடிவமைப்புப் பாணியில் இதர பிரெஞ்சு சொற்களைக் கையாண்டார்களா என்ற விரிவான ஆய்வும் தேவை.

| **தமிழ் உச்சரிப்பு** | **பிரெஞ்சுச் சொல்** | **பொருள்** |
|---|---|---|
| மொடுத்தியே | Mortier | பீரங்கி |
| ரசீயம் | Ration | பங்கீடு |
| சக்கிறத்தார் | Sécrétaire | செயலாளர், காரியதரிசி |
| ஒடுதி | Ordre | வரிசைக்கிரமம், உத்தரவு |
| கப்பித்துலசாம் | Capitulation | நிபந்தனைகள் கொண்ட ஒப்பந்தம் |
| மறெனர் | Marins | மாலுமி |
| துவான் | Douane | சுங்கச் சாவடி |
| மத்தலோது | Matelot | கப்பலோட்டி |
| சுப்பிரீயோர் | Supérieur | மேலதிகாரி |
| சொல்தாதுகள் | Soldats | போர்வீரன் |
| அபித்தாம் | Habitants | குடியிருப்பவர்கள் |
| அம்பிலுயர் | Employes | வேலையாட்கள் |
| புருஷ்வா | Bourgeois | பணக்காரன் |
| கும்பினிர் | Compagnie | கம்பெனி |
| காடுது | Garde | மெய்க்காப்பாளன் |
| சாம்பிறா | Chambre | தங்கும் அறை |
| ரெப்பு சாம்பலுடனே | Chambre de Repos | ஓய்வெடுக்கும் அறை |
| கொன்சேலியேர் | Conseiller | ஆலோசனை கூறுபவர் |
| பமீயி | Famille | குடும்பம் |
| இசுப்பித்தால் | Hospital | மருத்துவமனை |
| ழுய்ஸ்த்தீஸ் | Justice | நீதி, நியாயம் |
| பெத்திஷாம் | Petition | விண்ணப்பம், மனு |
| மெம்முவார் | Mémoires | நினைவுக்குறிப்பு |
| கப்பித்தான் | Capitaine | தலைவன் |

| | | |
|---|---|---|
| மையோரும் | Maire | நகரத்தந்தை |
| சாம்புரு | Chambre | அறைக்குள்ளே |
| பிறகேத்து | Frégate | போர்க்கப்பல் |
| லீவ்ரே | Livre | புத்தகம், சுவடி |
| படுத்திக்கொல்லேர் | Particulier | குறிப்பிட்ட |
| சினால்கள் | Signal | அடையாளக்குறி |
| கும்மாந்தான் | Commandant | படைத்தலைவன் |
| குமுசாறுகள் | Commissaire | விசாரணை அதிகாரி |
| சுமாரில் | Summer | வேனிற் காலம் |
| சன்லூயி | St. Louis | புனித லூயிஸ் |
| போம்பு | Bombe | வெடிகுண்டு |
| பிறிசனோராய் | Prisonnier | போர்க்கைதிகள் |
| ஈந்தை | Inde | இந்தியா |
| ஒப்பிசேர் | Officier | அதிகாரி |
| துருப்பாத்து | Tributaire | கப்பம் கட்டுகிற |
| பசுப்போர்த்து | Passeport | கடவுச்சீட்டு |
| சிகுந்து | Second | இரண்டாவது |
| பம்பூறு | Pomp | ஆடம்பரம் |
| குடுத்தியோர் | Courtier | தலைவன் |
| போத்தேல் | Boutille | புட்டி |
| சோமும் | Somme | கூட்டுத்தொகை |
| போயிண்டர் | Pointeur | துப்பாக்கி சுடும் ஆள் |

6.4. நாட்குறிப்பில் பிரெஞ்சுச் சொற்கள் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டு இருந்தாலும், சில போர்ச்சுக்கீசியச் சொற்களும் புதுச்சேரி மக்களின் பேச்சு வழக்கில் இருந்துள்ளன என்பதைக் காணமுடிகிறது.

| தமிழ் உச்சரிப்பு | போர்ச்சுக்கீசிய சொல் | பொருள் |
|---|---|---|
| சகலாத்து | Escarlota | துணி |
| சாவி | Chave | திறவுகோல் |
| பீப்பாய் | Pipa | பீப்பாய் |
| வேவு | Veu | உளவு |
| குசினி | Cozinha | சமயலறை |
| சாக்கு | Saco | சாக்கு |
| கோவர்ணதோர் | Governador | ஆளுநர் |
| வீதுரு | Vidro | கண்ணாடி |

நாட்குறிப்பாளர்கள் பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும்போது, தாய்மொழியில் ஒலி இயல்புக்கு ஏற்றவகையிலே மாற்றி அச்சொற்களைத் தமதாக்கிக் கொள்ளும்பாணியில் எழுதியிருக்கிறார்கள். இந்தப் பிறமொழிச் சொற்களின் உச்சரிப்புகளைக்கூடத் தம் போக்கிற்கு ஏற்பத் தமிழில் ஒலிக்க முற்பட்டிருக்கிறார்கள். இவ்வாறான இந்திய–பிரெஞ்சுக் கருத்துப் பரிமாற்றத்தின்போது ஐரோப்பிய மொழிச் சொற்களைத் தமிழ் ஏற்காமல் இருக்க முடியவில்லை.

**6.5.** முகமதியர்களின் அரசியல் ஆதிக்கத்தினால் பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பாரசீகம் மற்றும் அரபுச் சொற்கள் பேச்சுத் தமிழில் கலந்துவிட்டன. நிர்வாகம் தொடர்பான பாரசீகம் மற்றும் அரபுச் சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே மாறிவிட்டன. இருப்பினும் பெருமளவில் தமிழர்கள் பாரசீகமோ, இந்துஸ்தானியோ, அரபு மொழியோ அறியவில்லை. பேச்சுத் தமிழிலும், எழுத்துத் தமிழிலும் இஸ்லாமியச் சொற்கள் இரண்டறக் கலந்துள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டு நாட்குறிப்புகள் மூலம் புலனாகிறது.

| தமிழ் உச்சரிப்பு | அரபுச் சொல் |
|---|---|
| மகமை | Muhimm |
| தாக்கீது | Takid |
| பாக்கி | Baqi |
| அமுல் | Amul |
| ரொக்கம் | Raqm |
| நசீர் | Nazir |
| முன்சீப்பு | Munsif |
| ராசி | Razi |
| வக்கீல் | Wakil |
| சன்னது | Sanad |
| மாப்பு | Muaf |
| சலாம் | Salam |
| சாய்பு | Sahib |
| நகரா | Naqara |
| முஸ்தீது | Mustaidd |
| காயம் | Kaum |
| ரொக்கம் | Roque |

| தமிழ் உச்சரிப்பு | பாரசீகச் சொல் |
|---|---|
| குல்லா | Kulah |
| கொத்துவால் | Kotwal |
| ரசீது | Rasid |
| பிறாது | Faryad |
| தர்பார் | Darbar |
| திவான் | Diwan |

| | |
|---|---|
| யாதஸ்து | Yad-dasht |
| காகிதம் | Kaghidh |
| சிப்பாய் | Sapiahi |
| துப்பாக்கி | Tupak |
| பீரங்கி | Frangi |
| சவாரி | Suwari |
| நங்கூரம் | Langar |
| தம்பூர் | Tambur |
| சாமான் | Saman |
| ஜல்தி | Jaldi |
| லஸ்கர் | Lascar |

| தமிழ் உச்சரிப்பு | இந்துஸ்தானிச் சொல் |
|---|---|
| தொப்பி | Topi |
| பாகை | Pag |
| டொலி | Doli |
| லக்கோடா | Lakhoda |
| உண்டி | Hundi |
| தமுக்கு | Dhamk |
| பேட்டி | Bheti |
| டங்கா | Danka |
| சீட்டு | Chitthi |
| ராத்தல் | Rattal |
| குத்தகை | Kuttai |
| சுபேதார் | Subadar |

6.6. வடமொழிச் சொற்கள் திருவேங்கடம் பிள்ளையால் தமிழில் பெருமளவில் எழுத்து மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ளன.

| தமிழ் உச்சரிப்பு | வடமொழிச் சொல் |
|---|---|
| உபயம் | Ubhaya |
| கலசம் | Kalasa |
| காரியம் | Karya |
| சந்தானம் | Santhana |
| சேவகம் | Sevaka |
| தர்மம் | Dharma |
| தனம் | Dhana |
| நியாயத்தார் | Nyayastha |
| காலம் | Kala |
| சுங்கம் | Sunga |
| பயணம் | Prayana |

| | |
|---|---|
| மச்சம் | Matsya |
| உபேஷை | Ubesha |
| சம்பிரமம் | Samprama |
| ஸ்திரீகள் | Stree |
| ஸ்லோகம் | Sloka |
| தோஸ்தரம் | Sthothra |

பல நூற்றாண்டுகளாகச் சமஸ்கிருதத்திலிருந்து சொற்களைக் கடன் வாங்கும் பழக்கம் தமிழில் இருந்தபடியால் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசியம், அரபு, பாரசீகம், இந்துஸ்தானி ஆகியவற்றிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கத் தடையில்லாமல் இருந்துள்ளமை இதன்மூலம் தெரிகிறது. முடிவாகச் சொல்லப்போனால், தொல்காப்பியர் காலத்திலேயே இடத்திற்கு இடம் பேச்சு மொழி வேறுபட்டு இருந்துள்ளது. அந்தப் பேச்சு மொழிச் சொற்களைத் திசைச் சொற்கள் என்று தொல்காப்பியர் கூறுகிறார்[65]. எனவே புதுச்சேரி நகரில் பதினெட்டாம் நூற்றாண்டில் பேச்சு மொழி பிரெஞ்சுக்காரர்களின் வருகையினால் மாறியுள்ளது என்பது புதிதல்ல. புதுச்சேரியின் வட்டார வழக்கினை ஆராய்வதற்கு இந்தத் தமிழ் நாட்குறிப்புகள் பெரிதும் உதவும்.

## 7. ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு வாயிலாக அறியலாவன

### 7.1. குடும்பச் செய்திகள்

- ஆனந்தரங்கப் பிள்ளை அவர்கள் 12 ஜனவரி 1761 ஆம் ஆண்டு காலை (தை 3 திங்கட்கிழமை) இறந்தார்.
- ஆனந்த ரங்கரின் மகன் அண்ணாசாமி 13 செப்டம்பர் 1761 ஆம் ஆண்டு (2 புரட்டாசி) மரணம் அடைந்தார்.
- தம் மனைவி காளத்தியம்மாள் (9 சித்திரை, சித்திரபானு) 18 ஏப்ரல் 1762–இல் மரணமடைந்தமை.
- அண்ணாசாமி காலமாகிவிட்டபடியால் அய்யாசாமி மூலம் ரங்கப் பிள்ளை அவர்களுக்கு மாசிகம் ஐப்பசி மாதம் 22ஆம் நாள் நடத்தினார்.
- புதுச்சேரியை விட்டுத் திருவேங்கடம் பிள்ளை 27 பிப்ரவரி 1761 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை (20 மாசி விஷு வருஷம்) தரங்கம்பாடிக்குப் பயணமாகி அங்குச் சென்று தங்கினார்.
- ஆனந்தரங்கப் பிள்ளை குடும்பத்தார் இரண்டாயிரம் பகோடாக்கள் ஆங்கிலேயருக்குக் கொடுத்த பின்னரே புதுச்சேரியை விட்டுப் புறப்பட முடிந்தது. அவர்கள் தரங்கம்பாடிக்கு எடுத்துச்செல்ல முயன்ற வீட்டுப் பொருள்கள் அனைத்தும் ஆங்கிலேயரால் வழியில் கைப்பற்றப்பட்டுச் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டன. இந்தப் பொருள்களைப் பெற்றுத்தரப் பிரெஞ்சு அதிகாரி திரு. இலாசு அவர்கள் இரண்டு சதவீதம் கமிஷனாகக் கேட்டார் என்றும் முத்துப் பிள்ளை என்பவர் சென்னைக்குச் சென்று கைப்பற்றிய பொருள்களைப் பெற்றுவர அனுப்பப்பட்டார் என்றும் திருவேங்கடம் பிள்ளை குறிப்பிடுகிறார்.

- தஞ்சை வர்த்தகர் காசி பொக்கன்தாசு மரணமடைந்தமை.
- தஞ்சை மன்னர் பிரதாப சிங்கு மரணமடைந்த தகவல் சொல்லி அவரது மனைவியர் இருவர் உடன்கட்டை ஏறுதல்.

## 7.2. புதுச்சேரிச் செய்திகள்

- பசுமாடுகள், எருதுகள் எல்லாம் புதுச்சேரியில் இருந்து ஏற்றிச் செல்லப்படுதல்.
- திருவேங்கடம் பிள்ளை வீட்டுக்குரிய நிலங்களைப் பயிரிட்டு வந்த அனைவருக்கும் கடிதம் எழுதி, குத்தகைப் பணம் கேட்டல்.
- 21 மார்ச் 1764–ஆம் ஆண்டு புதுச்சேரியில் உள்ள வீடுகளை எல்லாம் கொளுத்துதல் மற்றும் குழந்தைகள் இறந்தமை, பசு தீயில் வெந்தமை பற்றிக் குறிப்பிட்டு, மக்கள் ரூபாய் நூறு கொடுத்துக் கோட்டைக்கு வெளியே இருந்த புதுச்சேரி ஆங்கிலேயத் தலைவனுக்கு மனு செய்தல்.
- பிரெஞ்சுக்காரர் காலத்தில் புதுச்சேரியில் நடந்த பிரச்சனைகளைத் தீர்க்கப் புதுச்சேரி பிரெஞ்சு ஆலோசனைக் குழுவிற்கு மட்டுமே அதிகாரம் உண்டு என்று ஆணை பிறப்பித்துத் தரங்கம்பாடியில் தங்கியிருக்கும்போது இவற்றைப் பற்றிப் பேசக்கூடாது என்று தெரிவித்தல்.
- 3 நவம்பர் 1764–ஆம் ஆண்டு புதுச்சேரியைச் சுற்றியுள்ள கிராமங்களில் பயிர், செடி கொடிகளை அழித்துக் கொள்ளையிட்டு மக்களை ஊரைவிட்டுத் துரத்தித் துன்பம் தருவித்தல்.
- பிரெஞ்சுக்காரர் வசம் புதுச்சேரியை மீண்டும் ஒப்படைத்தல் பற்றி முகமது அலிகான் 7 பிப்ரவரி 1765–இல் தஞ்சை மன்னருக்குக் கடிதம் எழுதுதல். மேலும் பிரெஞ்சு ஆளுநர் முசே லாசு அவர்கள் 6 பிப்ரவரி அன்று சென்னைக்குக் கப்பலில் வந்து சேர்ந்த தகவல் பற்றி அறிவித்தல்.
- ரசல் என்ற ஆங்கிலேயர் தரங்கம்பாடிக்கு வந்து பிரெஞ்சுக்காரரை 9 பிப்ரவரி 1765–இல் சந்தித்துப் புதுச்சேரியை ஒப்படைத்தல் பற்றி விவாதித்தல்.
- புதுச்சேரியில் துபாசி, அம்மட்டன், வண்ணான், கொல்லன், சித்தாள் ஆகியவர்களுக்குக் கூலி மற்றும் சம்பளங்கள் நிர்ணயிக்கப்பட்டு அந்த விவரங்களைக் கூறித் தமுக்குப் போடுதல்.
- பிரெஞ்சுக்காரர்கள் வசம் புதுச்சேரி மீண்டும் ஒப்படைக்கப்பட்டு ஒன்பது மாத காலமாகியும், தமிழர்கள் குடிசை மட்டும் போட்டிருப்பதால், 13 ஜனவரி 1766–ஆம் ஆண்டு வீடுகள் கட்டவேண்டுமென்று கோருதல். மற்றும் வீடுகட்டத் தேவையான அளவு வந்து சேர்ந்த மரங்களை வாங்காமல் சென்னைப்பட்டணத்துக்கு அனுப்பியது ஏன் என்று பிரெஞ்சு ஆளுநர் முசே லாசு, தமிழர்களை வினவுதல்.
- புதுச்சேரியில் விற்கப்படும் பொருட்களின் விலையை நிர்ணயம் செய்தல். குறிப்பாக ஆட்டுக்கறி, கோழிக்கறி, புளி மற்றும் பலசரக்குச் சாமான்களின் விவரம் கூறுதல்.

- பிரெஞ்சு ஆளுநர் லாசு அவர்கள் புதுச்சேரியில் தங்காமல் வங்காளத்திலேயே தங்கித் தனியே வியாபாரம் செய்தல் பற்றிக் குறிப்பிட்டு அவருக்கும் முசே துலோராமுக்கும் இடையே உள்ள பிரச்சனைகளைப் பற்றித் தெரிவித்தல்.
- புதுச்சேரிக்கு விறகு, கரி, கருப்பட்டி, காய்கறிகள் முதலியவற்றை அனுப்பாமல் இருக்க ஆற்காட்டிலிருந்து நவாபு ஆணை பிறப்பித்துப் பாளையக்காரர்களுக்கு ஒலை அனுப்புதல்.
- அழிசிப்பாக்கத்துக் கிராமத்தாருக்கும், சிங்ககிரி கோவில் கிராமத்தாருக்கும் இடையே கோவில் குளத்தில் மீன் பிடித்தலில் குத்தகைப் பிரச்சனை தொடர்பாக.
- வழுதாவூரிலிருந்து புதுச்சேரிக்குப் புடவைகள் வருவதற்கு ஆயம் வசூலிக்கத் தடை நீங்குதல்.
- புதுச்சேரியில் கழுதைகள் வயலிலேயோ, சாலையிலேயோ மேயக்கூடாது என்றும் தெருக்களில் கண்டால் குறிபோடப்படும் என்றும் தமுக்குப் போடுதல்.
- புதுச்சேரி ஆயுதக் கிடங்கிலிருந்து பாதிரியார் கோவிலை அடுத்துள்ள முசே திலார்சு வீடு வரை புகைபிடித்து வரக்கூடாது மற்றும் தீவட்டி பிடித்துவரக்கூடாது என்றும் தமுக்குப் போட்டு லாந்தர்கூடு கண்ணாடி விளக்கு மட்டும் பிடித்துவர அனுமதி வழங்கி, இதை மீறுபவர்களுக்குப் பத்து வராகன் அபராதம் விதித்தல்.
- முன்னாள் புதுச்சேரி ஆளுநர் டியூப்ளே இடித்துத் தள்ளிய இந்துக் கோவிலைக் கட்ட மனு ஒன்றை இந்துக்கள் பிரெஞ்சு ஆளுநருக்கு வழங்கியதைக் குறிப்பிட்டுக் கோவில் கட்ட இடம் கேட்டும், திருவிழா நடத்த அனுமதிகோரியும், வலங்கைச் சாதியார் புகையிலைக் கிடங்கிலும், செட்டிகள் கம்பெனிக் கிடங்கிலும் கூட்டம் போட்டு விவாதித்தல்.
- புதுச்சேரிக் கோட்டையை இடித்த பின்பு எங்கெல்லாம் கல் இருக்கிறதோ அங்கெல்லாம் யாரும் குத்தகை எடுக்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்து ஆஸ்பத்திரி அருகில் உள்ள இடத்திலும், கொத்தளங்கள் அருகில் உள்ள இடத்திலும் மற்றும் சுத்துக்கோட்டை மதில் ஓரமும் ஒருவரும் வீடுகட்டக் கூடாது என்று ஆணை பிறப்பித்தல்.
- 3 ஏப்ரல் 1767–ஆம் ஆண்டு புதுச்சேரியில் வேதபுரீஸ்வரர் கோவில் கட்ட பிரெஞ்சு ஆளுநர் அனுமதி வழங்கியதோடு, தர்மராசா கோவில், பிள்ளையார், பெருமாள், வீரபத்திரர் ஆகிய கோவில்களுக்கும் அனுமதி வழங்குதல்.

## 7.3. அரசியல் செய்திகள்

- வேலூர் கோட்டையை ஆற்காடு நவாபு முகமது அலிகான் கைப்பற்றி முர்த்தாசா அலிகானைச் சிறைபிடித்தார். ஆங்கிலேயர்கள் அவரை ராய மஹாலில் சிறை வைத்தார்கள். மேலும் முர்த்தாசா அலிகானிடம் ரூபாய் இருபது லட்சம் பணம் கேட்டார்கள்.
- சலாபத்து சங்கு மற்றும் பசாலத்து சங்கு ஆகியோரின் ராஜதந்திர நடவடிக்கைகள் பற்றிக் கூறுகிறார்.
- சாமராயன் வருடாந்தரக் குத்தகையை எட்டு லட்ச ரூபாயிலிருந்து ஒன்பது லட்சமாக உயர்த்தியமை. ஆற்காட்டிலிருந்து சீமை அமுல்தாரர்களை அனுப்பியமை.

- புலித்தேவனைச் சந்திக்க ஆங்கிலேயக் கவர்னர் பிக்கட்டு அழைப்பு விடுதல்.
- திருநெல்வேலிச் சீமையிலுள்ள இடங்களில் சண்டை நடைபெறுதல் பற்றிய செய்திகள்.
- அரியலூர் பாளையக்காரர் மரணம் பற்றியும், அந்தச் சமஸ்தானத்தில் புதியவர் ஒருவர் பதவி ஏற்றல் சம்மந்தமாக.
- கடப்பை சுபேதார் தமது இடத்திற்கு நெல் அனுப்பிவைக்கக் கோரிச் சீட்டுக் கேட்டல்.
- சேதுபதி மன்னர் இறந்ததைக் குறிப்பிட்டு அந்த ஆதீனத்துக்குப் புதிதாக மன்னரை நியமித்துப் பட்டம் கட்டுதல்.
- விழுப்புரம் நாட்டாண்மைக்காரர் குடிமக்களுக்கு அதிகத் தொல்லை கொடுத்ததால் ஆற்காட்டிலேயிருந்து நவாப்பின் ஆட்கள் வந்து சாணிக்கூடையைத் தலைமீது வைத்து, எருக்கமாலையைக் கழுத்தில் போட்டு, உடம்பில் சேற்றைப் பூசி பட்டணப்பிரவேசம் நடத்தி ஊரைவிட்டுத் துரத்துதல்.
- ராபர்ட் பால்க் என்பவர் 14 நவம்பர் 1763–இல் ஆங்கிலேயக் கவர்னராகப் பதவி ஏற்பு.
- 27 ஜுலை 1764–ஆம் ஆண்டு முகமது ஈசேப்புகானின் படை இறைவாசநல்லூர், திருவண்ணாமலை ஆகிய ஊர்களைக் கொள்ளையிடுதல்.
- நிசாமல்லிகான் ராஜமகேந்திரபுரம், ஸ்ரீகாகுளம் ஆகிய இடங்களைக் கைப்பற்றி நெல்லூர் வந்து சேர்ந்து தங்கியிருத்தல்.
- உடையார்பாளையம் பாளையக்காரர் தரங்கம்பாடிக் கம்பெனியாருக்கு எழுதி சேஷாசல செட்டி மூலம் மயில் குஞ்சு, காட்டுக்கோழி ஆகியவற்றைப் பரிசளித்துத் துப்பாக்கி, வெடிமருந்து, ஈயம் ஆகியவற்றைக் கேட்டது தொடர்பாக.

## 7.4. டேனிஷ் கம்பெனிச் செய்திகள்

- டேனிஷ் கம்பெனிக்குச் சொந்தமான தோட்டங்கள் தில்லையாடியிலும், பொறையாரிலும் இருந்தன.
- கம்பெனியார் சரக்குகளை ஏலம் போட நாகூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தமுக்குப் போடுதல்.
- தரங்கம்பாடிக் கம்பெனிக்குக் கொடுக்கவேண்டிய நிலுவைத் தொகைக்குச் சாமிநாத செட்டியின் சொத்துக்களான வீடு, கிடங்கு, கடை, நிலம், சாமான்கள் ஆகியவற்றின் விலை மதிப்பு நடந்தது தொடர்பாக.
- கம்பெனிக்கு நிலுவைப் பணம் தரவேண்டிய நிலையில் வர்த்தகர் ஒருவர் இறந்ததால் அவரது பிணத்தை எடுக்கவிடாமல் தாமதம் பண்ணி இரண்டு பேர் உத்தாரம் கொடுத்த பின்னர் பிணத்தை எடுத்தல்.

### 7.5. டச்சுக் கம்பெனிச் செய்திகள்

- நாகப்பட்டினத்திலிருந்த டச்சுக் கவர்னர் தலைமைத் துபாசி ஒருவரை நியமிக்கப் பதினைந்தாயிரம் பகோடாக்கள் கேட்டதாகவும் அந்த நபர் பணம் கொடுக்க முடியாத நிலையில் அவரைக் கைது செய்து சிறையிட்டதாகவும் ஆயிரம் பகோடாக்கள் செலுத்திய பின்பே விடுதலை செய்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.
- டச்சுக் கம்பெனியில் உத்தியோகம் தமிழருக்குக் கொடுத்தல் தொடர்பாக பத்தாவிலேயிருந்து வந்த ஆணை பற்றிக் கூறுதல்.
- காக்கிநாடா, பாலக்கொல்லு ஆகிய இடங்களில் உள்ள கோமுட்டிச் செட்டிகள் அங்குள்ள டச்சுக் கம்பெனி கப்பித்தான் கொடுத்த தொல்லையைப் பற்றி எடுத்துச் சொல்ல நாகப்பட்டினம் வந்து அங்குள்ள டச்சுக் கவர்னரைச் சந்தித்து விளக்குதல்.

### 7.6. பிரெஞ்சுக் கம்பெனிச் செய்திகள்

- ஆனந்தரங்கப் பிள்ளைக்குப் பிரெஞ்சுக் கம்பெனியிலிருந்து வரவேண்டிய நிலுவைப் பாக்கி பதின்மூன்று லட்சம் ரூபாய் உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது.
- பிரெஞ்சுக்காரர்கள் மைசூரிலுள்ள ஹைதர்அலிக்குப் படை உதவி செய்து சம்பளம் பெறுதல்.
- பிரெஞ்சுக்காரர்கள் தஞ்சை மன்னருக்குப் படை உதவி செய்து சம்பளம் பெறுதல் மற்றும் அங்குள்ள முசே முதாவு இராணுவத் தளபதிக்கு மாதச் சம்பளமாக மாதம் ரூபாய் நாலாயிரம் வழங்குதல்.
- காரைக்காலைச் சேர்ந்த நாலு மாகாணமும், பிரெஞ்சுக்காரர் வசம் சேருதல்.

### 7.7. இராணுவச் செய்திகள்

- பிரெஞ்சுக் கைதிகள் நாகப்பட்டினம், பொறையாறு, கடலூர், பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நாகப்பட்டினத்தில் இருந்த பிரெஞ்சுக் கைதிகள் கப்பல் மூலம் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், சிலர் தரைமார்க்கமாக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டு அருகில் உள்ள கருங்குழிக் கோட்டையிலிருந்து 200 பிரெஞ்சு ராணுவ வீரர்கள் தப்பியோடி விட்டார்கள்.
- திருச்சிக் கோட்டையிலிருந்து பிரெஞ்சுக் கைதிகள் தப்பியோட முயன்றபோது தடுக்கப்பட்டார்கள்.
- தரங்கம்பாடியில் தங்கியிருந்த பிரெஞ்சுக் கைதிகள் அல்லாதாருக்கு மாத அலவன்சாக ரூபாய் 500 வழங்கப்பட்டது.

- படகுகள் மூலம் பீரங்கி, குண்டு, கயிறு, மருந்து, துப்பாக்கி ஆகியவை நாகப்பட்டினத்துக்கு அனுப்பப்பட்டு அவை வாஞ்சியூர் அருகே கரை ஒதுங்குதல்.
- தஞ்சை மன்னருக்கு உதவிட, பிரெஞ்சு ராணுவத்துக்குப் பாற்காரர், அம்மட்டன், வண்ணான் மற்றவர்கள் உள்பட ஆட்களைச் சேகரித்தல் மேலும் முசே முதாவு தலைமையில் படையை அனுப்புதல்.
- முகம்மது ஈசேப்புகான் மதுரையிலிருந்து தரங்கம்பாடிக்குத் துப்பாக்கிகள் வாங்க ஆட்களை அனுப்பியமை.
- கப்பலில் மொரிஷியஸ் நாட்டிலிருந்து துப்பாக்கிகள் வந்து அவற்றை மைசூரிலிலுள்ள பிரெஞ்சுப் படைக்கு அனுப்பிவைத்தல்.
- தஞ்சை மன்னருக்குக் கோமுட்டி வர்த்தகர்கள் துப்பாக்கிகளை விற்பது தொடர்பாக.
- தஞ்சை மன்னர் நானூற்று நாற்பத்து நான்கு துப்பாக்கிகள் வாங்குதல் பற்றிக் குறிப்பிட்டுச் சேஷாசல செட்டி, குருமூர்த்தி செட்டி தஞ்சாவூருக்கு எடுத்துச் செல்லுதல். மேலும் அதிகமாகப் பதினெட்டுத் துப்பாக்கிகளைத் தங்களோடு கொண்டு சென்று விற்க முயலுதல்.
- கான்சாய்பு மதுரையிலிருந்து தஞ்சை மன்னருக்குக் கடிதம் எழுதிப் பிரெஞ்சுக்காரரை இராணுவ உதவிக்கு அனுப்பக்கோரி மற்றும் அவர்களுக்குச் சம்பளமும் வழங்கச் சம்மதித்தல்.
- முகம்மது ஈசேப்புகானின் இராணுவச் சேகரிப்புக்குப் பிரெஞ்சுக்காரர்கள் முசே முதாவு தலைமையில் பணம் பெற்றது தொடர்பாக.
- முசே இக்கிலு தலைமையில் பிரெஞ்சுக்காரர்களை இராணுவத்துக்குச் சேர்த்து மைசூரிலுள்ள ஹைதர் அலி படைக்கு ஆள் அனுப்புதல்.
- ஆங்கிலேயர் கப்பலில் சொல்தாதுகள், சிப்பாய்கள், மருந்து, குண்டு ஏற்றிக்கொண்டு தொண்டி மற்றும் அதிராம்பட்டினம் துறைமுகம் போய்ச் சேர்ந்து மதுரையில் நடைபெறும் சண்டைக்கு அனுப்புதல்.
- பிரெஞ்சுக்காரர்கள் நூற்று இருபது துப்பாக்கிகள் வாங்கியதைப் பற்றிக் குறிப்பிடுதல்.
- நாகப்பட்டினத்திலிருந்து கொழும்புவிற்கு மூவாயிரம் சிப்பாய்களை அனுப்பி அவர்களுக்குத் துப்பாக்கியும் கொடுத்து, சம்பளமும் கொடுத்து அனுப்பினது தொடர்பாக.
- தரங்கம்பாடிக் கோட்டையில் பிரெஞ்சுக்காரர்கள் ஆறு பீப்பாய் வெடிமருந்து வாங்கியது சம்பந்தமாக.
- சீன நாட்டு பீரங்கி மூன்றைத் தரங்கம்பாடியில் பிரெஞ்சுக்காரர்கள் வாங்கியது தொடர்பாக.

- இலங்கையில் கண்டி நாட்டு அரசரின் தூதுவர் பிரெஞ்சுக்காரர்களிடம் இராணுவ உதவியைக் கோரி வருதல் மற்றும் தூதுவர் நாகூரில் தங்கிச் சோனகன் ஒருவன் மூலம் பேச்சுவார்த்தைக்குத் தரங்கம்பாடிக்கு அழைத்து வருதல்.
- முகம்மது அலிகான் படைத்துணைக்காகத் தஞ்சை மன்னர் தம் படையை அனுப்புதல்.

## 7.8. சமூக- கலாச்சாரச் செய்திகள்

- முகமது அலி நவாபுப் படைகள் கொடுத்த தொல்லையினாலும், நடத்திய கொள்ளையினாலும் பிராமணப் பெண்களும், செட்டியார் வீட்டுப் பெண்களும் இறந்து போனார்கள்.
- தொம்பரவர் கழைக்கூத்து மற்றும் குறவஞ்சி தாவீதின்பேரில் நாடகம் மலையப்ப வித்வான் இயற்றியது, தேரடி வீதியில் இரவு பதினோரு மணிக்கு ஆரம்பித்துக் காலை நாலரை மணிக்கு முடிந்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மேலும் எருக்கட்டாஞ்சேரியில் பாகவதக் கூத்து நடந்ததையும் குறிப்பிடுகிறார். டென்மார்க்கு நாட்டு ஆளுநரும் நாடகம் கண்டு மகிழ்ந்ததைத் தெரிவிக்கிறார்.
- சாத்தங்குடியில் கிறிஸ்தவக் கோயிலில் பாதிரியார் செய்த பிரசங்கம் பற்றிச் சொல்லி கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையை விளக்குதல்.
- கிறிஸ்தவர்கள் தலைப்பாகையை அணியாமல் கத்தோலிக்கப் பாதிரியார் கோவிலுக்கு வரச்சொன்னதால் பிரச்சனைகள் ஏற்பட்டுக் கிறிஸ்தவர்கள் கோவிலுக்குப் போகவில்லை. இதுதொடர்பாக மயிலாப்பூரிலுள்ள ஆயரிடமிருந்து ஆணை வரவில்லை என்பதால் சாதிக்கு நாலுபேர் கூடிக் கையெழுத்துப் போட்டு மனு கொடுத்தல்.
- சம்பா கோவில் கட்ட கிறிஸ்தவப் பாதிரியார்கள் வரி போட்டமையால் கிறிஸ்தவர்கள் ஆயிரம் வராகன் பிரித்து 21 மார்ச் 1766–இல் கொடுத்தல் பற்றிக் கூறிக் கிறிஸ்தவப் பறையருக்குக் கோவிலில் இருக்க இடம் சிறியதாக உள்ளதாகச் சொல்லி அதிக இடம் ஒதுக்கப் பாதிரியார்கள் கேட்டபோது உயர்சாதிக் கிறிஸ்தவர்கள் பிரச்சனையைக் கிளப்ப, கோவில் அஸ்திவாரம் பிரித்துப் போட்டபடி இருக்கும் நிலையில் உயர்சாதி பிள்ளை மற்றும் முதலியார் கிறிஸ்தவர்கள் தங்களுக்கென வேறு ஒரு கோயில் கட்ட முடிவு செய்து, கோவிலில் பூசை வைத்து வழிபாடு நடத்த ஒரு பாதிரியை அனுப்பினால் தனியே சம்பளம் தருகிறோம் என அறிவித்தல்.
- சம்பாக் கோவில் கட்டும் பிரச்சனை தொடர்பாக உயர்சாதிக் கிறிஸ்தவர்கள் கோவிலுக்குப் போகாததால் பதினோரு முக்கிய கிறிஸ்தவப் பிரமுகர்களைக் கைது செய்து, காவலிட்டு நூறு வராகன் அபராதம் விதித்தனர்.
- செப்டம்பர் மாதம் எட்டாம் நாள் அரியாங்குப்பத்திலுள்ள கிறிஸ்தவர் கோவிலில் நடைபெறும் திருவிழாவைப் பற்றிக் குறிப்பிட்டு அங்குக் கோவில் கட்டப்படாததினாலே உயர்சாதிக் கிறிஸ்தவர்களுக்கும், பாதிரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு இருப்பதினால் பஜனை பாடுவதற்கும், திருவிழா நடைபெறுவதற்கும் பறையர்களை வைத்துச் சிறப்பாய் விழா கொண்டாடியமைத் தொடர்பாக.

- பல வருடமாகத் திருமெய்ஞ்ஞானம் என்ற ஊரிலுள்ள கோவிலில் தேரோட்டம் நடைபெறாதது பற்றிக் குறிப்பிட்டு தற்போது நல்லதம்பி பிள்ளை நானூறு வராகன் செலவு செய்து தேரோட்டம் நடைபெற்றமை தொடர்பாக.
- திருமண ஊர்வலத்தில் வாணவேடிக்கைகளைப் பயன்படுத்தியமை பற்றிக் குறிப்பிட்டுச் சேஷாசல செட்டி வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் புல்லாங்குழல் வாசிக்க ஆளுநரின் அனுமதி பெற்றதைப் பற்றி.
- தரங்கம்பாடியிலுள்ள ஈஸ்வரன் கோவில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 2 மார்ச் 1764–இல் நடந்ததைப் பற்றியும் அதற்கு வைத்தீஸ்வரன் கோவில் தம்பிரான் வருகை புரிந்தது பற்றியும்.
- ஊரிலே எப்போதும் இல்லாத வாடிக்கையாகத் தட்டான் ஒருவன் திருமணத்திற்குப் பல்லக்கு ஏறி ஊர்கோலம் வரத் தரங்கம்பாடி டேனிஷ் துரை அனுமதி வழங்கியது.
- ஒரு திருமணம் நடக்கப் பிரச்சனை ஏற்பட்டு வழக்கு தாக்கீது செய்தல் பற்றிக் குறிப்பிட்டு பிராமணர்களை வினவியபோது, மற்றவர்கள் சாதி முறை தெரியாது என்று சொல்லி மனுவியாக்கியான சாஸ்திர முறைப்படிக்கு அவர்கள் தம் கருத்துக் கூற, ஊரில் நடக்கும் திருமணங்களில் சாதிக்குச் சாதி உள்ள பேதங்கள் பற்றி விளக்குதல்.
- தரங்கம்பாடியில் இருந்து புதுச்சேரிக்கு வந்து சேர்ந்த பிறகு திருவேங்கடம் பிள்ளை அவர்கள் பெரிய புது வீடு கட்டி முடிக்காததால், வெள்ளாளத் தெருவில் உள்ள தன் வீட்டில் பொங்கல் பண்டிகை கொண்டாடுதல்.
- புதுச்சேரியில் நடைபெற்ற ஓர் திருமண ஊர்வலத்தில் பிரச்சனை ஏற்பட்டுக் கம்மாளருக்கும், கோமுட்டிச் செட்டிகளுக்கும் இடையே சண்டை ஏற்படுதல்.

## 7.9. வாணிபச் செய்திகள்

- தஞ்சை மன்னருக்குச் சேஷாசல செட்டி துப்பாக்கி விற்றல், ஹைதர் அலிக்குச் சேஷாசல செட்டி துப்பாக்கி விற்றல், திருவம்பல செட்டி ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து வியாபாரம் செய்தல். சொந்தமாகக் கப்பல் வைத்திருந்து தொழிலில் முன்னேறுதல்.
- தஞ்சாவூர் நாணயங்களாகப் பெற்றதை வராகனாகவும், ரூபாயாகவும் நாகப்பட்டினத்தில் மாற்றுதல், பணம் மாற்றுதலில் உள்ள கமிஷனை ரங்கராயர், காசிபொக்கன்தாசு, ராம செட்டி மகன் பகிர்ந்து கொள்ளுதல்.
- ஆங்கிலேயரின் கப்பல் பரங்கிப்பேட்டை ஆற்றில் பழுது பார்க்கும் வேலை நடைபெறல்.
- மொரிஷியஸ்சிலிருந்து செம்புப் பொடி, செம்புத் தகடு, காரீயம், வெள்ளி, பவளம் முதலிய சரக்குகள் கப்பலில் வந்த தகவல் பற்றிக் கூறுதல்.
- பசிராவிலிருந்து வந்த கப்பல் பம்பாய் துறைமுகத்தை அடைந்தபோது அதிலுள்ள சரக்குகளான வெள்ளி, இரும்பு மற்றும் பவளம் பற்றி விளக்குதல்.
- தரங்கம்பாடி டேனிஷ் கம்பெனியின் ஆலோசனைக் குழுவிற்குக் காகிதம் அனுப்பிப் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவிடவும் அவர்கள் கப்பலுக்கு வேண்டிய சாமான்கள் வழங்கிடவும் கோரி விண்ணப்பித்தல்.

- தரங்கம்பாடியிலிருந்து புறப்படும் கப்பலில் விறகு, பூசணிக்காய், தண்ணீர், வெங்காயம் முதலியவற்றை ஏற்றினர்.
- தரங்கம்பாடியில் பிரெஞ்சுக்காரர்கள் பவளம், செம்புத்தகடு முதலியவற்றை விற்று புடவை தினுசுகள் வாங்குதல் மற்றும் ரொக்கப்பணம் கொடுத்தும் பல துணிகளைப் பெறுதல்.
- நாகப்பட்டினத்திலிருந்து தரங்கம்பாடிக்கு வந்து, ஊரிலிருக்கிற சர்க்கரை எல்லாம் ஒரேநாளில் கப்பல்காரர்கள் வாங்குதல். மேலும் புடவை ஒரு மூட்டையும் வாங்கியது மற்றும் கடையிலுள்ள பொருள்களின் விலைப்பட்டியல் பற்றி விவரித்தல்.
- வங்காளத்திலேயிருந்து டென்மார்க் கப்பலில் சாராயம், அரிசி முதலியவை தரங்கம்பாடிக்கு வந்து சேருதல்.
- பரங்கிப்பேட்டைக்கு மலேசியாவிலுள்ள கேடா என்ற துறைமுகத்திலிருந்து கப்பலில் சரக்குகள் ஏற்றிவருதல்.
- தரங்கம்பாடிக்கும், மலபாருக்கும் இடையே நடைபெறும் வாணிபம் பற்றி விளக்குதல்.
- சென்னைக்கும், வங்காளத்திற்கும் இடையே நடைபெறும் வாணிபம் பற்றிக் கூறுதல்.
- பலவகையான செம்பு தரங்கம்பாடித் துறைமுகத்திற்குக் கப்பலில் வந்து இறங்குதல் பற்றிச் சொல்லி, கம்பிச் செம்பு, மப்பாகைச் செம்பு, தகட்டுச் செம்பு ஆகியவற்றின் இறக்குமதி பற்றிக் கூறுதல்.
- தரங்கம்பாடிக்கும், வங்காளத்திற்கும் இடையே நடைபெற்ற அரிசி வியாபாரம் பற்றிக் கூறி, தேவையான காற்று இல்லாததால் கடலில் சென்ற சுலுப்பு பரங்கிப்பேட்டைத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தொடர்பாக.
- சீனாவிலுள்ள மக்காவு துறைமுகத்துக்கும், தரங்கம்பாடிக்கும் இடையே உள்ள கப்பல் போக்குவரத்து வாணிபம் தொடர்பாக.
- தரங்கம்பாடிக்குக் கப்பலில் வந்த பொருள்களை விற்க நாகூர் வர்த்தகர்கள் முன்வருதல் பற்றியும், விற்ற பொருள்களுக்குக் கால்பங்கு சதவிகிதம் தரங்கம்பாடி டேனிஷ் துரை அவர்களுக்குக் கொடுத்தது சம்பந்தமாக.
- தரங்கம்பாடிக்குக் கப்பலில் பட்டு நூல் வந்து இறங்குதல்.
- டென்மார்க் கப்பல் கேரளாவிலிருந்து மிளகு ஏற்றிக் கொண்டு தரங்கம்பாடிக்கு வந்து சேருதல்.
- வங்காளத்திலிருந்து அரிசி ஏற்றுமதி செய்து டென்மார்க் கப்பல் தரங்கம்பாடிக்கு வந்து சேருதல்.
- பத்தாவிலேயிருந்து செம்பு, இரும்பு, ஈயம் மற்றும் பவளம் நாகப்பட்டினத்திற்கு வந்த கப்பலிருந்து இறங்குதல்.
- பர்மாவிலுள்ள பைகோ துறைமுகத்திலிருந்து செம்பு, குதிரை ஆகியவை கப்பலில் வந்து சென்னையில் இறங்குதல்.

- பிரெஞ்சுக் கப்பல் மொரிஷியஸ்சிலிருந்து கோழிக்கோடு துறைமுகத்திற்கு வந்து சேருதல் பற்றிக் குறிப்பிட்டு அதில் வந்த கடிதங்களையும், சரக்குகளையும் தரங்கம்பாடிக்கு அனுப்பி வைத்தல்.
- பிரெஞ்சுக்காரர்கள் பவழ வியாபாரத்தில் ஈடுபடுதல்.
- தரங்கம்பாடியில் ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகள் விதித்தல் தொடர்பாக.
- சீனாவுக்குப் போகிற பிரெஞ்சுக் கப்பல் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தபோது இருபத்து மூன்று பீப்பாய்களில் 1,38,000 பத்தாக்கு வெள்ளி இறக்குமதி செய்தல்.
- வங்காளத்திலேயிருந்து புதுச்சேரிக்கு வந்த கப்பலில் அரிசி, நெய், கடுகு எண்ணெய், கோணி முதலியவை இறக்குமதி செய்தல்.
- புதுச்சேரியிலிருந்து மோக்கா, அச்சை துறைமுகங்களோடும் மற்றும் மொரிஷியஸ் தீவுடனும் பிரெஞ்சுக் கடல் வாணிபம் புத்துயிர் பெற்று நடைபெறுதல் தொடர்பாக.
- வையாபுரிப் பிள்ளை சுங்கவரி செலுத்தாமல் நெல் விற்றபடியால் கண்டுபிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டார். இதனால் ஊரைவிட்டுத் துரத்த டேனிஷ் ஆளுநர் ஆணைபிறப்பித்தார்.
- காரைக்காலைச் சார்ந்த பத்துக் கிராமங்களிலும் ஆயம் மற்றும் தீர்வை செலுத்தத் தேவையில்லை என்று தமுக்கு 18 பிப்ரவரி 1765–இல் போடப்பட்டது.
- 1766–ஆம் ஆண்டு புகையிலை மீது சுங்கவரி வசூலிக்க நான்கு பேருக்குக் குத்தகை வழங்கப்பட்டது. அவர்கள் தங்கள் பணியினைச் செம்மையாகச் செய்தபடியால் சுங்கவரி வசூலிக்கும் பொறுப்பு மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

## 7.10. பொதுச் செய்திகள்

- காவேரி நதியில் வெள்ளம் வந்து கரைபுரண்டு ஓடுதல்.
- நாகப்பட்டினத்திலுள்ள வெளிப்பாளையத்தில் வீடு, குடிசைகள் தீப்பற்றி எரிதல் தொடர்பாக.
- காவிரி நதியில் வெள்ளம் வந்து தரங்கம்பாடி ஆற்றின் முகத்துவாரம் அடைபட்டதால் ஊரெல்லாம் வெள்ளக்காடாக இருந்தது தொடர்பாக.
- பிராமணன் ஒருவன் மலைப்பாம்பு விழுங்குவதிலிருந்து தப்பித்தல்.

ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளையின் நாட்குறிப்பில் மேற்சொன்ன பல செய்திகள் உள்ளன. பொதுவாக இவை தென்னிந்திய வரலாற்றைச் சரியாக எழுதுவதற்கும் குறிப்பாகப், புதுச்சேரியின் இருண்டகால வரலாற்றை (1760–1766) அறிவதற்கும் மிகத் துணையாக அமைகின்றன.

# அடிக்குறிப்புகள்


1. Archive Provinciae Parisensis Societatis Jesu, Paris, Mss. Index. 3, J.V. Bouchet letter to Du Halde,dated 18 December 1714.
2. Archives des Missions Etrangers de Paris, Paris, Mss. vol. 959, fl. 357.
3. Jean Filliozat, "La naissance et l'essor des L' Indianissme", in *Loghpratandah,* Leiden, 1974, p. 222.
4. Jean Marie Lafont, "Les Indes des Lumieres de 1610 a 1840" in *Passeurs d' Orient,* Paris, 1990, pp. 13-27.
5. H. Omont, *Missions archeologiques francais aux XVII^e et XVIII^e siecles, Documents Publiees,* Paris, 1902, pp. 828-851.
6. Madurai Province Jesuit Archives, Shembaganur, India, Mss. Documents Bertrand, vol. III, Document No. 309. S. Jeyaseela Stephen, *Portuguese in the Tamil Coast: Historical Explorations in Commerce and Culture,* Pondicherry, 1998, p.354.
7. முன் சுட்டியது, Documents Bertrand, vol. III, Document No. 320.
8. Jean Marie Lafont, முன் சுட்டியது, பக்கம், 20-21.
9. முன் சுட்டியது.
10. Bibliotheque Nationale Paris, Mss. Tamoul, 189, Vinson in *Revue Lingui Philo Comparee,* XXXII, 1889, p. 101, n.42.
11. *Catalogues des manuscrits de la bibliotheque du roi* (in Latin) Paris,1739.
12. *The Private Diary of Ananda Ranga Pillai,* Vol. v, p. 174.
13. எஸ். ஜெயசீல ஸ்டீபன், முத்து விஜய திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு, புதுச்சேரி 1999, நாட்குறிப்பு பதிவு 18–19 மே 1795, பக்கம் 261, 262.
14. Alfred Martineau, *Lettres et conventions des Gouverneurs de Pondichery avec different Princes Hindous,* 1666-1793, Pondicherry, 19111-14, pp.297-305.
15. E.R. Hambye, *History of Christianity in India: Eighteenth Century,* vol. III, Bangalore, 1997.
16. S. Jeyaseela Stephen, "Urbanism and the Chequered existence of the Indo-French Town of Pondicherry, 1674-1793" in *Revue Historique de Pondichery,* vol. XIX, 1996, pp.29-64.

17. Gnanou Diagou, *Arrets du Conseil Superierur de Pondichery,* Tomo III, 1775-1778, Pondichery, 1937, p. 458.

18. மா.ச. சம்பந்தன், அச்சும் பதிப்பும், சென்னை 1997, பக்கம் 130.

19. முன்சுட்டியது, பக்கம் 161–162. நாலடியார் ரிக்கார்டு அச்சுக்கூடத்திலும், நேமிநாதம் சரஸ்வதி அச்சுக்கூடத்திலும் சென்னையில் அச்சிடப்பட்டது. காண்க. பக்கம் 323. சூடாமணி நிகண்டு நூலின் அணிந்துரை பொன்னுசாமி முதலியாரால் எழுதப்பட்டுள்ளது.

20. Romain Rolland Library, Pondicherry, (Reserved Collections) *Archives Administratives,* (hereafter AA) (1823-1827, 4 vols), (old number, J.93) vol. 1. 1823. அ.மா. சாமி, 19–ஆம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள், சென்னை 1995. பக்கம் 57.

21. Romain Rolland Library, Pondicherry, *Bulletin des Actes Administratifs* (hereafter BAA) (1827-1872, 37 vols), 1827, Vol.1. p.1; p. 72.

22. AA, 1827, p.83.

23. BAA, 1838, p. 14, 20.

24. முன் சுட்டியது.

25. BAA, 1838, p. 128.

26. முன் சுட்டியது.

27. Adrian Launay, *Histoire des Missions del' Inde,* 4 vols, Paris, 1895-1898.

28. இராசமாணிக்கம், வீரமாமுனிவர் தொண்டும், புலமையும், சென்னை 1996, பக்கங்கள் 25–26. நூலின் வரிசைப்பட்டியலைக் காண்க. பக்கங்கள் 74, 76.

29. *Missions Etrangers & Langues Orientales: Bibliographie de 1680 jusque a 1996,* Paris, 1997, pp. 69-76.

30. **புதுச்சேரியில் வெளியான தமிழ் நூல்களின் பட்டியல் :**

வேத விளக்கம், 1842, 1847, 1868.

லுத்தேரியனித்தியல்பு, 1842, 1847, 1850.

பேதகமறுத்தல், 1842, 1855, 1868. (139 பக்கங்கள்)

வேதியர் ஒழுக்கம், 1843, 1847.

ஞானமுயற்சி, 1843, (335 பக்கங்கள்).

கொடுந்தமிழ் இலக்கணம், (1843).

ஆதிச்சுவடி, 1844 (18 செ.மீ., 91 பக்கங்கள்), 1862.

பிராஞ்சு இலக்கண நூல் சுருக்கம், (19 செ.மீ., 160 பக்கங்கள்), 1845.

இலத்தீன் பிராஞ்சு தமிழ் அகராதி, 1846.

ஆத்துமவுத்தியான, 1847. புதுவை மறைமாவட்ட ஆயர் அனுமதியுடன் இந்நூல் வெளியிடப்பட்டது. புதுவையைச் சார்ந்த முத்துசாமிப் பிள்ளை தம் முன்னோர் கையெழுத்தாய் எழுதிப் படித்து வந்த செபங்கள், மந்திரங்கள், பிரார்த்தனைகள் ஆகியவற்றை இந்த நூலில் வெளியிட்டுள்ளார்.

இலக்கண நூலாதாரம், (19 செ.மீ., 80 பக்கங்கள்), 1846, 1849.

இலக்கணச் சுருக்கம், 1849.

பிரெஞ்சு தமிழ் அகராதி, 1850.

பரமார்த்த குரு கதை, 1851.

தேம்பாவணி முதல் காண்டம், 1851.

தேம்பாவணி இரண்டாம் காண்டம், 1852.

தேம்பாவணி மூன்றாம் காண்டம், 1853.

தமிழ் பிரெஞ்சு அகராதி, (23 செ.மீ., 1,113 பக்கங்கள்), 1855–1862. இந்த நூலின் ஆசிரியர்கள் அருட்திரு முசே மற்றும் துப்புயி அடிகளார் சொற்பொருளோடு அமையாது ஒவ்வொன்றிற்கும் மேற்கோள் விளக்கம் முதலியவற்றையும் குறிப்பிட்டு விளக்கம் தந்திருப்பது இந்தத் தமிழ் பிரெஞ்சு அகராதியின் சிறப்பாகும்.

ஞானாமிர்த தடாகம், (788 பக்கங்கள்), 1858.

ஞானக் கண்ணாடி, 1858.

இலக்கணச் சுருக்கம், (180 பக்கங்கள்), 1860.

ஞான உபதேசச் சுருக்கம், 1861.

பாலர் பொக்கிஷம், (266 பக்கங்கள்), 1861.

கிறிஸ்துநாதர் அனுசாரம், (390 பக்கங்கள்), 1863.

படங்களால் விளக்கப்பட்ட ஞானஉபதேசம், (21 பக்கங்கள்), 1863.

பூமி சாஸ்திர சுருக்கம், (19 செ.மீ., 575 பக்கங்கள்), 1863.

பஞ்சதந்திரக் கதை, (149 பக்கங்கள்), 1865.

திவ்விய மாதிரிகை, 1870.

சதுரகராதி, 1872.

பிரெஞ்சு தமிழ் அகராதி, (22 செ.மீ., 1,250 பக்கங்கள்), 1875.

வினோத வாசக கதைகள், (96 பக்கங்கள்), 1885.

பாலர் சுவடி மூன்றாம் பாடம், (236 பக்கங்கள்), 1896.

31. எஸ்.ஜெயசீல ஸ்டீபன், தமிழில் நாட்குறிப்புகள்; செய்தி இதழ்களின் முன்னோடிகள், (18 ஆம் நூற்றாண்டு), புதுச்சேரி 1999, பக்கங்கள் 24, 25.

32. முன்சுட்டியது.

33. Julien Vinsion, *Manuel de la Lingue Tamoule,* Paris, 1903, p. xxvii.

34. முன்சுட்டியது. பக்கம் xxvii.

35. உ.வே. சாமிநாத ஐயர், (பதிப்பாசிரியர் எஸ். கலியாணசுந்தரனார்), என் சரித்திரம், சென்னை 1990. பக்கங்கள் 940, 942.

36. உ.வே. சாமிநாத ஐயர், வில்லைப் புராணம், சென்னை, 1940. பக்கம் 9.
37. Julien Venson, *Les Francais dans L' Inde Dupleix et Labourdonnais*, Paris, 1894.
38. K.A. Nilakanta Sastri, "New Pages from Ananda Ranga Pillai's Diary", *Journal of the Madras University*, vol.xiv, No.2, Madras 1942, pp.1-16.
39. C.S. Srinivasachari, *Ananda Ranga Pillai: The Pepys' of French India*, Madras, 1940, see p. xxii.
40. BNP, Mss. Indien, No. 158, fl. 11.
41. TNSA, Madras, Mss. *Public Department, Sundries*, vol.186, fl.150.
42. Alala Sundaram, R. *The Colonial World of Ananda Ranga Pillai*, Pondicherry, 1998. p.4-3. See, n.1.
43. TNSA, Madras, Mss. *Public Department, Sundries*, vol.186 B, நாட்குறிப்பு பதிவு தாரண வருஷம், மாசி மாதம் 25 ஆம் நாள் (4 மார்ச் 1765).
44. BNP, Mss.Indien, No. 151, fl. 4.
45. H. Dodwell, *The Private Diary of Ananda Ranga Pillai*, Madras, Vol. IX, pp. 4-7 & 34.
46. ந. சுப்பிரமணியன், ஆனந்தரங்கன் கோவை, சென்னை, 1955. பக்கம் XXI. ந. சுப்பிரமணியன் ஆனந்த ரங்கப்பிள்ளையின் இரண்டாவது குமாரன் திருவேங்கடம் பிள்ளை எனக் குறிப்பிட்டுள்ளது சரியல்ல.
47. ந. சுப்பிரமணியன் முன்சுட்டியது பக்கம் XXII.
48. H. Dodwell, op.cit, vol. IX, p. 189.
49. எஸ்.ஜெயசீல ஸ்டீபன், தமிழில் நாட்குறிப்புகள்; செய்தி இதழ்களின் முன்னோடிகள், (18 ஆம் நூற்றாண்டு), புதுச்சேரி 1999, பக்கங்கள் 56 - 57.
50. Edmond Gaudart, *Catalogue des Manuscrits des Anciennes Archives de l' Inde Francaise Pondichery*, Pondichery, vol. VII, Document No. 5388, p. 6.
51. National Archives of India, Pondicherry, (NAIP) Mss. Eighteenth Century Documents, Document No. 27, fl. 1. Dated 23rd November 1789.
52. முன்சுட்டியது. கூடுதல் விவரங்களுக்கு, S. Jeyaseela Stephen, "Urbanism and the Chequered Existence of the Indo-French Town of Pondicherry, 1674-1793" in *Revue Historique de Pondichery*, vol. XIX, 1996, pp. 29-64.
53. Edmond Gaudart, op.cit, vol. VII, p.7.
54. முன்சுட்டியது. கூடுதல் விவரங்களுக்கு, S. Jeyaseela Stephen, " Un Inedit de L' histoire de Pondichery: Le Journal de Thiruvengadam Pillai", *Le Trait d' Union*, July, 1995, p. 5.
55. Edmond Gaudart, *op.cit.*, vol. VII, Document No. 5388, p. 5.

56. A. Krishnasami Pillai, "The Family of Ananda Ranga Pillai: Some Geneological Data", in *Revue Historique de Pondichery,* vol. X, 1992, pp. 21-30, Document No. 6. p. 26.

57. A. Krishnasami Pillai, *op.cit,* Document No. 7, pp. 26-27.

58. Edmond Gaudart, *op.cit,* tomo. I, Document No. 874, p. 333; Gnanou Diagou, *Arrets du Conseil Superieur de Pondichery,* 1785-1789, Pondichery, 1936, vol. IV, Document No. 55, p. 57; Document No. 232, p. 166.

59. Gnanou Diagou, *op.cit,* tomo III, Document No. 111. p. 63.

60. Edmond Gaudart, *op.cit,* tomo. I, Document No. 874, p. 333.

61. Edmond Gaudart, *op.cit,* tomo. II, Document No. 1815, pp. 299.

62. Edmond Gaudart, *op.cit,* tomo. VII, Document No. 5388, p. 5.

63. ஓர்சே. மா.கோபாலகிருஷ்ணன், இரண்டாம் வீரா நாயக்கர் நாட்குறிப்பு, 1778–1792, சென்னை 1992, பக்கம் 231–232.

64. Meenakshi Sundaram, *The Contributions of European Scholars to Tamil,* Madras, 1974. செ.வை. சண்முகம், எழுத்துச் சீர்த்திருத்தம், அண்ணாமலை நகர், 1978. சா. ராசமாணிக்கம், வீராமாமுனிவர் தொண்டும், புலமையும், சென்னை, 1996, பக்கம் 17. பா.வளனரசு, தேம்பாவணித் திறன், 1988.

65. தொல்காப்பியம், சொல்லதிகாரம், (400) "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தில் தற்குறிப்பனவே திசைச் சொற்கிளவி".



ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை
[1737 – 1791]

18 FEB 2003

BNP: Mss.Indien. No. 158, fls.11– 14.

# கிஷ்ண சகாயம்

## யாதஸ்து[1]

விக்கிறம ஸ்ரீ புரட்டாசி மீ உயரு உ செவ்வாய்கிழமை

மத்தியானம், காளத்தியம்மாள், குழந்தை, தயங்கம்பாடிக்கு மதாம் லாசு பின்னுலே பயணமாய்ப் போனது.

அற்பசி மீ மு. உ அண்ணுசாமி முதலாகிய பேர் பயணம் பிறப்பட்டது. யச. உ விஷித் தெ ஷெணரால்[2]. யகூ. உ அப்பாவு பயணம் பிறப்பட்டுது. கார்த்திகை மீ உயஎ. உ சோமவார னுள். சாயங்காலமே யிங்கிலிசுக்காரன் தென்னந்திட்டு மோற்சா[3], செல்லான் தோட்டத்து மொற்சாவுல பீரங்கி சுட துவக்கினுர்கள். நேத்து ராத்திரி பதினஞ்சு னுழிகைக்கு மேல், மேற்கே கருப்பந் தோட்டத்து மோற்சாவுலேயும், வடக்கே வண்ணுந்துரை மோற்சாவுலேயும், பீரங்கியும், மொடுத்தியேயும்[4] சுட ஆரம்பிச்சார்கள். ஙய. உ முசே புசெத்து தோட்டத்து மோற்சாவுலேயும், பீரங்கியும் மொடுத்தியேயும் சுட ஆரம்பிச்சார்கள். மார்கழி மீ ச. உ சோமவார னுள். சாயங்காலமே னுலு மணிக்கு -ற - பிள்ளையவர்கள், கால் ஞேவு நிமித்தியம் கந்தப்ப முதலியார் வீட்டுக்கு போனுர்.

உயக. உ வியாழக்கிழமை. ருத்திரி எட்டு மணிக்கு மேல், மறுனுள் காலமே அஞ்சு மணி மட்டும், பெருங் காத்து மழையும் அடிச்சு, ஊருள்ள மரங்ளெல்லா முறிஞ்சு விழுந்து கொடிமரம் முறிஞ்சு, பட்டணமெல்லாம் காடு போலாச்சுது. கடலின் பேரிலேயிருந்து இங்கிலீசுக்காறர் கப்பல் பதினுலும், சுலுப்பு ஒண்ணு [3] நாலு கப்பல் முழுகிப் போய், மூணு கப்பல் கரை ஒதுங்கி, நாலு கப்பல், கம்பம் பாய்மரம் முறிஞ்சு, மொட்டையாய் குறை கப்பலும் சுலுப்புமா, யின்ன யிட மென்னு தெரியாமல் போச்சுது.

உயங. உ காலமே -ற - பிள்ளையவர்கள் கந்தப்ப முதலி வீட்டை விட்டு வந்து சேர்ந்தார். உயச உ. வெள்ளக்காறருக்கு ரசியம்[5] தென்னங்குத்தது ஆரம்பிச்சது. உயஅ உ. ருத்திரி சலங்கும் பேரிலே, ருசா அல்லிகான் பயணமாய் போய் விட்டான்.

தை மீ முஉ சனிவாரனுள். காலமே அம்பலவ செட்டி தோட்டத்து மோற்சாவுலே பீரங்கியு மொடுத்தியேயும் சுட ஆரம்பிச்சான். தை மீ ந. உ. [3] சனேர், யக. சோமவாரம். ருத்திரி ஞழிகை அஞ்சுக்கு மகா றாஸ ஸ்ரீ பிள்ளையவர்கள் வைகுண்ட பிறாபத்தியானுர். தை மீ ச உ. சோணுசல பிள்ளை, நயினுர், லெறி துபாசி எல்லாச்சி, அப்பு முதலி மகன் அழகப்பன், கும்பினிதோர், கந்தப்பன் மகன், மன்னப் பெருமாள் முதலி, முச்சியநம்புலு, முடிப்பிறி முத்துக்குமரன் பின்னும் நம்முட வீட்டு மனுஷருடனும் கூட ஸ்நானம் பண்ணிவிச்சு செய்ய வேண்டிய சடங்குகள் செய்து, பல்லக்கிலெடுத்துக் கொண்டு, மாரியம்மன் கோயில் தெரு, கீரைத் தோட்டத்தில் சந்தனக் கட்டையோடுந் தகனம் பண்ணிவிச்சோம். ஒன்பது, பத்து மணி உண்டு. அந்த பிருந்தியத்தில் கருப்பந்தோட்டத்து மோற்சாயிலேயிருந்து குண்டுகள் விஸ்தாரமாய் வந்துக் கொண்டிருந்தது. அந்தனுள் பட்டடணத்திலேயிருந்த தமிழர் மேலே எழுதுப்பட்ட பேர் மாத்திரம் அல்லாமல் வேரேயில்லை. வீட்டுக்கு வந்தோம். காலமே முசே லெறியுடனே, சாமி போய் காலம் பண்ணி போனது சொன்னதுக்கு அவர் சொன்னது. சாமியுடய சித்தம் அப்படியிருந்துப் போச்சுது. அடக்கம் பண்ணி போட்டு நீங்களெல்லாரும் யிண்ணைக்கி தானே யெந்த வழியாகிலும் பாத்துக்கொண்டு போங்கோள் எண்ணு சொன்னுர். முசே லாலி, முசே லெறி, முசே பொலே உடனே சொன்னதுக்கு ரொம்ப அங்கலாச்சார்கள். அப்படியிருக்க, முசெ லெறி யிது சந்துக்கட்டு என்று, சக்கிறத்தார்[6] முசெ துலோராமை அனுப்பி, சீமா மூலம் காகித பத்திரம் கணக்குகளை முஸ்திரிக்கச் சொன்னுன். அவனும் அவன் ஒடுதி[7] பிறகாரம் வந்து சொன்னுன். நாங்களா வலிய கணக்குகள் யிருக்கிற யிடமெல்லாம் முத்திரை போடுவிச்சோம். சோணுசல பிள்ளை சாப்பாடு கொண்டு வந்து போட்டார். பிள்ளை யவர்களை கண்டு பேச வந்த சுங்கு சேஷாசல செட்டியுடனே, தண்டுலேயிருக்கிற[8] சிதம்பரனுத பிள்ளையுடனே பிள்ளையவர்கள் காலம் பண்ணிப்போன சேதி சொல்லச் சொல்லி அனுப்பிவிச்சோம். மன்ன பெருமாள் முதலி வீட்டில் வச்ச, உக்காசிலும்பி முஸ்தீதை, வெள்ளக்காரன் செவுரேறிக் குதிச்சு வந்து எடுத்துக்கொண்டு ஓடிப்போனுன். ஷவானீய வீட்டுக்கு சாமான் யெடுத்தனுப்பச்சே சானும் மது கிடங்கு கோட்டை மீறிக்கொண்டு கிளிக்கூண்டு அண்டையிலே, குண்டு வந்து விழுந்துது. ஊரிலேயிருந்த ருசேந்திர அய்யன், புகையிலை கிடங்கு பாப்பு பிள்ளை வரயில்லை. ருத்திரி படகேறி போய்விட்டார்கள்.

உஉ. நம்முட வீட்டிலே யிருந்த தென்ன மரத்தை வெட்ட வந்த சொல்தாதுகள் ரு. பேருக்கு ஒரு ரூபாய் கொடுத்து நம்முட வீட்டிலிருக்கற மனுஷரைக் கொண்டு வீட்டும் பேரிலே சாயாமல் வெட்டிவிச்சுக் கொடுத்தோம்.

ரு.உ. நயினுருங் கூட கீரைத் தோட்டத்துக்குச் சஞ்சயனத்துக்குப் போய் செய்ய வேண்டிய சடங்குகள் செய்து பிற்பாடு வீட்டுக்கு வந்தோம். சோணுசலப் பிள்ளை, கற்னல் கூட்டு[9], வெங்கடாசலய்யன் முன்னிலையில், ஆயிரம் ரூபாய் குடுத்து வெளிப்பட்டுப் போனுன். சாயங்காலம், மன்ன பெருமாள் முதலியை வச்சுக் கொண்டு, தலைக்கட்டிக் கொண்டு பாக்கு போட்டுக் கொண்டோம். அசோகத் தோப்பு அண்டையிலேயிருக்கிற நடவாவிக்கு யிப்புறம், மோற்சா போட்டு, ருத்திரி எட்டு மணிக்கு துப்பாக்கிக்காறரும், துப்பாக்கி சண்டை குடுத்தான். ரு.உ. முசே லெறியை போய் கண்டு, றெம்ப உபசாரமாய்ச் சொன்னத்துக்கு, எல்லாம் கேட்டு, நீங்கள் யினி யிருக்கப் போகாது. யிருந்தால், என்ன மோசம் வருமோ தெரியாது. ஆகையால் எந்த வழியாகிலும் பாத்துக் கொண்டு போங்கோளென்று சொன்னுர்.

முசே லல்லியை போய்க் கண்டு காலம் பண்ணிப்போன சேதி சொல்லி அங்காலாச்சத்துக்கு அவரும் அங்காலாச்சு, யினி செய்ய வேண்டிய தென்னயிருக்குது? சாமியுடய சித்தத்துப்படியே முடிஞ்சுது என்னு உபசாரம் சொன்னுர். நீங்களிருக்கச் சொன்னபடியினுலே நாங்களிருந்தோம். யில்லாவிட்டால் அப்போ தானே போய்விடுவோம். யிப்போ ஆனுல் போறதுக்கு, வழி ரெம்ப சங்கடமா யிருக்குது யென்னு சொன்னதுக்கு, நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுக்கும் கூட கபித்துலசாமிலே[10] பேசுரேும். நீங்கள் சிந்தனே பண்ணத் தேவையில்லே. போங்களென்னு சொன்னுர். முசே கில்லியார், முசே பொலோவைக் கண்டதுக்கு அவரும் உபசாரம் சொன்னுர். கோட்டையிலே நடந்த உத்தரவுகளேச் சொன்னேும். அதுக்கு அவர்கள் சொன்னது. முசே லல்லியை நம்பப் போகாதென்னு சொன்னுர்கள்,

சா. ௳. யிவர்கள் சொல்லுகுறது யிப்படி யிருக்குறபடியினுலே, யிதை நம்பப் போகாதென்னு யோசனே பண்ணி நயனுர் முன்னிலேயாய் வேறவனேயைக்[11] கண்டு பேசினதற்கு, படகு கிறயம் னூத்தன்பது ரூபாய்; தரங்கம்பாடி கொண்டுபோய் விடுகிறத்துக்கு நானூத்தன்பது றூபாய் கொடுக்கவேணுமென்னு பேசினத்துக்கு சம்மதித்து, அறுநூறு றூபாய் நயினுர் கையிலே குடுத்தோம். அதை வாங்கிக் கொண்டு பட்டணவர் வூரிலேயில்லே. ரெண்டு பேரிருக்குறுர்கள். அவர்களோடுங்கூடப் பத்து பேர் மறனெரை[12], சண்டை முஸ்தீதுடனே, ரெஷத்து[13] பண்ணி தாறேனென்று சொல்லி அனுப்பிவிச்சான். நயினுரும் வந்து சொன்னுன். நாங்களும் பயண முஸ்தீதாய் முசே றெயன், வசம் வீடுகளும் தட்டுமுட்டு சாமான்களும் அவன் வசம் ஒப்பிச்சு சிலவுக்கு குடுத்து ஒரு சிறு சகதுவும் வீட்டிலே வச்சுப்போட்டு ஒரு தினசரி தை(ஸ்தர்)[14] மூட்டையும், மூணு ஞலு கத்தியும் கடாரியுமாய் வெளிப் பிறப்பட்டு, முசே பொலோவை அனுப்பிவிச்சுக் கொண்டு, துவான்[15] வாசப்படிக்கு தென்னண்டை கொத்தளத்தண்டையிலே, சுக்குல பக்ஷம், திதி தெசமி ஆனபடியினுலே, நிலவு அஸ்தமானம் யிருபது ஞழிகை மட்டும், அந்தக் காலத்திலிருந்து, யிருட்டின உடனே, படகும் பேரிலே நாங்கள் பத்து பேரும் ஆயுத முஸ்தீதுடனே, பதினஞ்சு மத்தலோதும்[16], ரெண்டு பட்டணவரும் ஏறி, படகு தண்ணியிலே தள்ளினுல், ரெண்டாளலேக்கு அப்பிறம் போகாமல் கரை ஒதுக்கிச்சுது. ரெண்டு மணி பரியந்திரம், வெள்ளக்காறராலே ஆன மட்டுக்கும் தண்ணியிலே தள்ள தள்ள, மறுபடியும் மறுபடியும், கரை ஒதுக்குறபடியினுலே, வெள்ளக்காறர் குடிச்ச வெறிகளிலே யிறுக்குறபடியினுலேயும், கடலோரமானபடியினுலேயும் படகுலே தண்ணி ரெம்புனபடியினுலே, படகுலே வச்ச கத்தி கடாரிகளெல்லாம் நனேஞ்சு வுருவிண்டு, காலின் கீழே அகப்பட்டு படகு சாயுறபோது, ஒருத்தர் பேரிலே ஒருத்தர் விழுந்து, கட்டிக்கொண்டிருந்த பிடவைகளெல்லாம் நனேஞ்சு, தினசரி தைத்ஸ்தரமெல்லாம்[17] நனேஞ்சி, யிப்படி அவஸ்தைபடுகிறதினுலேயும், பொழுது வெடியிற காலமாகிற படியினுலேயும், ஒருத்தர் ஒருத்தராய், சலங்கும் பேரிலிருந்து, தாழயிறங்குறத்துக்குப்பட்ட அவஸ்தையை, காகிதத்திலே எழுதி முடியாது. நனேஞ்ச வஸ்திரமும், சரீரம் உப்புக்கசுவுடனே, கடலோரத்து வாசப்படி அண்டையிலே யிருக்கிற துவானிலே வந்து, பிடவை வேறே கட்டிக்கொண்டு, கொண்டுபோன பலகாரத்தை கொஞ்சம் சாப்பிட்டு, கடல் உப்புத் தண்ணியினுலே வாயைக் கொப்பளித்துக் கொண்டு, சத்து ஆசுதாவாய் படுத்துக் கொண்டு யிருக்கச்சே, ஞலு மணி நேரத்திலே, துவான் வாசப்படியிலே வெளிச்சங் கண்டுது. யின்னேரத்திலே வெளிச்சங் காண, காறணமேது என்னு பாற்க்குமளவில், பீரங்கி மருந்துகளே கொண்டு வந்து,

அகழியிலே கரைத்துப்போட்டு போனூர்கள். யிந்தனுள் சாயங்காலம், யிங்கரேசுக் காரரண்டை கப்பித்துலசாம் பேசப் போன, சம்பாக்கோவில் பாதிரி சேஷட்டர்[18] முசே கொடுத்தேன், முசே திபுவா, யிவர்கள் போனூர்கள். யினிமேல் என்ன நடக்குமோ தெரியாது.

எ. ஃ. சுக்கிறவாரம். யிந்தனுள் காலமே, கதவு திறந்த உடனே வீட்டை வந்து சேந்தோம். அப்படி யிருக்கச்சே, முன்னுள் குருவாரம், தண்டுலே யிருக்கப்பட்ட, மேஸ்தர்[19] பிக்கட்டு, மேஸ்தர் கற்னல்[20] கோட்டண்டை, கபித்துலசாம் பேசத்தக்கதாக போன, சம்பா கோவிலு பாதிரி சுப்பெரியோர்[21] ............ முசே கொடுத்தேன், முசே திபுவா, யிவர்கள், கவில் பேசப் போன சொல்தாதுகள்[22], றெம்பக் காசிப்பட்டிருக்கிறூர்கள். ஆகையால், அவர்களை கயிது பண்ணுமல், வெளிகாவல் பண்ணி, தீனி போட்டு வச்சுக்கொண்டு, கப்பலிலே யேத்தி, சீமையிலே கொண்டுபோய் விட்டுவிடவும், முசே லல்லி முதலாயிருக்கப்பட்டத் துரைத்தனக்காறருடைய தட்டுமுட்டுகளை விட்டுவிடவும், பின்னும் அபித்தாம்[23], அம்பிலுயெர், புருஷ்சுவா[24] யிவர்கள், வெகு ஞளாய் சம்பளமில்லாமல் சேவிச்சுயிருக்கிறூர்கள். ஆகையால் அவர்கள் தட்டுமுட்டும் கொள்ளையிடாமலும் பின்னும் ஊரிலே யிருக்குற தமிழரை ஒண்ணுஞ் செய்யாமலும், ஊரை கொள்ளையிடாமலும், கும்பினீர்[25] தட்டுமுட்டு என்ன உண்டோ, அதை எடுத்துக் கொள்ளவும், கோட்டையிடியாமலும் பேசினதுக்கு எல்லா உடம்படிக்கையும் சம்மதிச்சு, கோட்டையை மாத்திரம் யிடிச்சுப் போடுவோமெண்ணு பேசி யிருக்குது. ஆனல் சீமைக்கு எழுதி அனுப்பிவிச்சு, சீமையிலே யிருந்து உத்தரவு வருகிற மட்டுக்கும், யிடிக்கக் கவையில்லே எண்ணு பேசினதாகவும், அதுக்கு அவர்களிருந்து கொண்டு, நல்லது; எல்லாம் முசே லல்லி எந்த பிறகாரம் சொல்லுகுருரோ, அந்தப்படி அவர் மனசுப்படி நடப்பிக்குறேம். நீங்கள் போங்கள். நாங்கள் வந்து முசே லல்லியை கண்டு பேசுகுறேமென்னு சொன்னதாகவும், அதும் பேரிலே காலமே, ஊரே வந்துவிட்டார்கள் என்கிறதாகச் சொல்லிக்கொண்டார்கள்.

அப்படியிருக்கச்சே, ஏழரை மணி நேரத்துக்கு, மேஸ்தர் கற்னல் கோட்டும், றெண்டு மூணு பெரிய மனுஷரும், அன்பது காடுதுகுதிரைக்காறரும்[26], னூறு சொல்தாதும் வந்து வில்லியநல்லூர் வாசப்படியிலே, சொல்தாதுகளை நிறுத்திப்போட்டு, குதிரையுடனே கூட உள்ளே னுழைஞ்சு, கோட்டைக்கு வெளியிலே குதிரைகளை நிறுத்திப்போட்டு, கோட்டைக்குள்ளே கொவற்ணமாவுலே முசே லல்லி சாம்பிருவிலே[27] னுழஞ்சவுடனே, முசே லல்லி றொப்புசாம்பறுடனே[28] கட்டிலின் பேரிலே படுத்துக் கொண்டிருக்கச்சே, மேஸ்தர் கற்ணல் கோட்டவர்கள் வந்து, பேட்டி பண்ணிக்கொண்டு, அண்டையிலே யிருக்குற நாற்காலியின் பேரிலே உற்காந்து, சத்து நேரம் இருவரும் பேசியிருந்து வெளியிலே வந்தார். அங்கே முசே லெறி முதலான கொன்சேலியர்[29], கத்தி கட்டிக்கொண்டு, வெள்ளி ரேக்கு போட்ட கொன்சால் கூடுகுற சாலையிலே கும்பலாயிருக்குறவர்களண்டையிலே வந்தார். வந்தவுடனே, ஒருத்தருக்கொருத்தர் ஆசாரம் பண்ணிக்கொண்டு, முசே லெறி, முதலாக கத்தியை கழத்தி, மேஸ்தர் கற்னல் கோட்டவர்கள் கையிலே குடுத்தவுடனே, கற்னல் கோட்டவர்கள், கத்தியை கையிலே வாங்கி, மறுபடியும் உங்கள் கையிலேதானே யிருக்கட்டு என்கிறதாக குடுத்தார்.

*முற்றும்*

**BNP: Mss. Indien. No. 154 bis. fls. 257-260**
**NAIP: Eighteenth Century Records, Document No.436, fls.3712-3725**

## விக்கிறம ௵ தை ௴ க ௳ சனிக்கிழமை: சதஎளசாயக ஆண்டு, சனேர் ௴ ௰ ௳

இந்தனுள் காலத்தாலே ஆறு மணிக்கி, முசே லெறி துபாசி, யெல்லாச்சியாப் பிள்ளை வந்து, மகாருசா ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு, சின்ன முதலி தன்னுடை பெமீலுக்களை[30] வெளியே அனுப்பிவிக்க, நேத்து ருத்திரி பிறயத்தனம் பண்ணிவிச்சதாகவும், அதுக்கு ஒரு சலங்கும் தயாறு பண்ணிக்கொண்டு, அதலே தட்டு முட்டுகளும் யேத்திப் போக, அதுக்கு ஒரு கடுதாசியும் குடுக்கவேணும் யென்கிறதாய்ச், சொன்னுரேண்ணு சொன்னுன். அதன்பேரிலே நாம் கோட்டைக்குப் போய், ஒரு படகு, கடலுக்கு அமத்தவும் வேணுமெண்ணு, கோட்டைக்கிப் போனேம். அங்கே சின்ன முதலி சொன்னது. சலங்கை யின்னம் பாய் கட்டி பயணப்பட்டு போகயில்லே. ஆனுல், யிண்ணைய தினம் பிறப்பட்டுப் போமென்னும் சொன்னுன். அதன் பிறகு நாம் முசே வாலார்முவிடம் போயி சொன்னது. ரொம்ப பெரிய சலங்கு ஒண்ணு, ஏராளமான தட்டுமுட்டும், சாமானுகளெல்லாம் ஏத்தத் தக்கினதாக யிருக்கிற, சலங்கு ஒண்ணு அழைப்பிச்சுக் குடுக்க வேணுமெண்ணு, முசே வாலர்முவை கேட்டோம். அதுக்கு அவர் சொன்னது. அவ்வளவு பெரிய சலங்கை உங்களுக்கு கூடாது. அதுவும் முசே லாலி உத்தாரம் ஆனுல் பின்னே ஒரு படகு அமத்தினுலும், அதைத் தள்ள மக்குவா[31] கிடைக்கமாட்டார் யெண்ணு சொன்னுன். ஆனுல், நாம் கடலோரம் போய் விசாரிப்போமா? யெண்ணு போனவிடத்திலே, ருத்திரி போகுற சலங்கும் ஒண்ணு முஸ்தீது பண்ணிக் கொண்டு, முசே பிளாக்கூறு அவ்விடத்திலேயிருந்து கொண்டிருந்தான். அவனேக்கண்டு பேசினயிடத்திலே, ஒரு மனுஷராகிலும் யேத்தக்கூடாதெண்ணு சொன்னுன். அவ்விடத்திலே ஒரு கப்பல் பிலோத்தான் வந்தான். அவன், தானும் சிறுது பேர் வெள்ளக்காறர்களும் யேறத்தக்கதாக ஒரு சலங்கும் ஒண்ணு விலே பேசி சலங்குக்கு யென்ன கிறையமும் யேறுகிற சிலவு தானும் குடுக்கிறதாகவும், யெட்டுப் பேர் மறினேர்களும் அவர்கள் நாலு அஞ்சு பேர் மாத்திரம் யேரத்தக்கதாகவும், திட்டப்படுத்திக் கொண்டு பனிரெண்டு மணிக்கு ருசா ஸ்ரீ பிள்ளை அவர்களுடனே சொன்னதாகவும், அவர்களும் சரீரம் சொஸ்தி யிருக்கிறதை பாத்துக்கொண்டு, சலங்கின் பேரிலேயானுல் சரீரம் தாளமாட்டாது. கரை வழியாய் போறதுக்கு யென்ன யத்தினமோ, அந்தத் தனம் பாக்கிறதேயல்லாமல், சலங்குக்கு யெத்தினம் பண்ணத் தேவையில்லே, வெள்ளக்காறருடனே சேர்ந்த சம்மதிக்கி சீக்கிறமாய்ப் போயி சொல்லிப் போங்களென்று சொன்னுர். சாப்பாடு மூணு மணிக்கு சாப்பிட்டு மூணு மணிக்கி அந்த வெள்ளேக்காறனே கடலோரம் போய் தேடிக்கொண்டு, கடலோரத்துக்குப் போகச்சே, கோட்டைக்கி தென்னண்டையிலே யெதிரே வந்து அவர் சொன்னது. நான் போய், யென்னுடை கூட, அவர்களுடனே யோசனே பண்ணி நீங்கள் வருகிறபடியினுலே சந்தடியாகாதெண்ணு யெல்லோரையும் கழிச்சுவிட்டு, நாங்கள்

நாலுபேர் மாத்திரம் வரத்தக்கதாயி திட்டப்படுத்தி, சலங்கும் விலே தீத்து முசே லாலியவர்களை போயி உத்தராம் கேட்டதுக்கு, ஒரு வேளை கப்பல் வந்து சலங்கு வேறே யில்லை ஆகையினாலே சலங்கு குடுக்க கூடாதே யெண்ணு சொன்னார். அதனாலே பயணம் நிண்ணு போச்சுது யெண்ணு சொன்னார். அதுக்குத் தக்க உத்திரவாகச் சொல்லிப் போட்டு வளவுக்கு வந்துவிட்டோம்.

## விக்கிறம ௵ தை ௴ ௨ ௳ ஆதிவாரம் ஞாயிதிக்கிழமை: சதளளசாயக ஆண்டு, சனோர் ௴ யக ௳

இந்தனாள் காலமே, மகாருசா.ஸ்ரீ பிள்ளையவர்கள் யெழுந்திருந்து, பல் துலக்கிவிட்டுப் போட்டு, நடுச்சாலையிலே நாற்காலியிலே உற்க்கார்ந்து கொண்டுயிருந்து, ரெண்டு மணிநேரம் மட்டுக்கும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்புறம் படுத்துக்கொண்டார். பதினொறு மணிக்கு யெழுந்திருந்து அவர் எங்களைக் கூப்பிட்டு சொன்னது. எனக்கு யென்னத்தினாலேயோ ரொம்பவும் சரீரம் பலயீனமாயிருக்கிறது, என்னமோயென்னு தெரியாது யென்னு சொன்னார். பின்னையும், என்னுடைய சுவாசம் எப்படியிருக்குதுண்ணு கேட்டார். அதுக்கு நாம் சொன்னது. வழக்கம் போலே தானிருக்குதுண்ணு. தாங்கள் கொஞ்ச நாளாய் மனதுக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபடியினாலேயும், அதனாலே சாப்பாடும் சரியாய் யெடுத்துக் கொள்ளாமலிருந்தினாலேயும், சரீரம் ரொம்பவும் பலயீனமாயிருக்குதெண்ணு காணுது. ஆகாரம் யில்லாதினாலேயும், சரீரம் ரொம்பவும் மெலிந்து, பலயீனம் யெண்ணும் சொல்லிக்கொண்டு பேசிக் கொண்டிருக்கச்சே, வெள்ளைக்காறர்கள் வந்து, நம்முடைய வீட்டிலேயிருக்கிற தென்னமரத்தையும் வெட்றதுக்காக வந்தார்கள். அதனாலே, துரைகளண்டை போயி, அவங்களுக்கு விசேஷம் சொல்லி, வீட்டிலே கேழ்விப்பட்டபடிக்கு, அவர்களுக்கு நாலு ரூபாயி இனாம் குடுத்துப்போட்டு, மனுஷரையும் வைச்சு, வீட்டின் பேரிலே விழாதபடிக்கு வெட்டி, வைத்துப் போடவேணுமெண்ணு........

மத்தியானம் ஒரு மணிக்கி ஸ்ரீ பிள்ளையவர்கள் கொஞ்சம் சாப்பிட்டார்கள். பிற்பாடு படுத்துக் கொண்டார். சாயங்காலம், சரீரமானால் ரொம்பவும் ஆயாசமாயிருக்குது. நித்திரை பிடிக்கயில்லை. நாக்கு உலர்ந்து போகுது தாகம் காணுதுயெண்ணு சொன்னார். அப்படியானால் கருக்கு போடுவோம் யெண்ணு சொன்னதுக்கு, நல்லது போடுங்கோ யெண்ணு சொன்னார். ருத்திரி யெட்டு மணிக்கு கருக்கும் வாங்கிக் கொண்டார். திரும்பவும் பத்து மணிக்கு ருத்திரியிலே யெங்களை அழைச்சு கருக்கு சாப்பிட்டதும் தாகம் அடங்கயில்லை. தண்ணீர் குடிப்போமாண்ணு கேட்டார். தண்ணீர் சாப்பிடப் போகாதென்னும், யின்னும் ஒரு கருக்கு வைச்சு சாப்பிட்டால் தாவலே யெண்ணு சொன்னோம். நல்லது. அப்படிதான் கொண்டு வாருங்கோளெண்ணு சொன்னார். மறுபடியும் ஒரு கருக்கு வைச்சுக் கொடுத்தோம். பின்னும் சத்துநேரத்திலே, யின்னும் தாகம் அடங்கயில்லை. நல்ல தண்ணீர் குடிப்போமா யெண்ணு கேட்டார். குடிக்கப் போகாது யென்னு பாக்குப் போட்டுக் கொண்டால் தேவலை, போட்டுக் கொள்ளுங்கோண்ணு சொன்னோம். போட்டுக் கொண்டால் திரவமேயில்லை. வாண்டாம் யெண்ணு சொன்னார். ஆனால் ரெண்டு நாழிகை பொறுத்து வென்னீராகிலும் குடிக்கலாமெண்ணு சொன்னோம். நல்லது. கொளத்துக்கு வருகுது போலேயிருக்குது.

பெட்டி யெடுத்துக் கொண்டு வைக்கச் சொன்னுர். அப்படியே பெட்டியைக் கொண்டு வந்து தாழ்வாரத்திலே வைத்த பிற்பாடு, குளத்துக்கு யிருந்து, கால் சுத்தம் பண்ணிக்கொண்டு, நாற்காலியின் பேரிலே வந்து உற்க்காந்தார். யிதுக்குள்ளே கண்ட ஆயாசம் யெழுதி முடியாது. அப்போ, யெங்களை அழைச்சு இப்போ குளத்துக்கு போனேனே, சீவன் போயி வந்தது. குளத்துக்கு யிருக்கச்சே ஆசனத்திலே நெருப்பாயிருந்துது. செத்துப் போற பேருக்கு அப்படிருக்குமோண்ணு கேட்டார். காங்காயினுலே கண்டு யிருக்கவேணுமெண்ணு சொன்னுர். இன்னம் விசாரியுங்கள் யெண்ணு சொல்லிப் போட்டு, போயி படுத்துக்கொண்டார். பிற்பாடு, ரெண்டு மணிக்கு நாக்கு ரொம்ப உலர்ந்து போகுது. தாகம் காணுது. ஆயாசம் ரொம்ப காணுது. சரீரம் நிற்கமாட்டாது போலேயிருக்குது. உங்களுக்கேற்க என்னமாய்த் தோணுதெண்ணு கேட்டார். சயித்தியம் கண்டிருக்கிது போலே காணுது. ஆனபடியினுலேயே ஆரையாகிலும் அழைச்சுக் கொண்டு வந்து, நல்ல மருந்து அதாவது விபூதியாவது, சிந்தாமணி யென்கிற மருந்தாவது குடுக்கச் சொல்ல வேணும்யெண்ணு சொன்னேம். நல்லது யெண்ணு முஸ்தீது பண்ணிக் கொண்டுவந்து குடுக்கச் சொல்லு யெண்ணு சொன்னுர். அதின்பேரிலே, நல்ல தேன் அகப்படாதபடியினுலே, சேஷாசல செட்டி கையிலே போயி வாங்கிக் கொண்டு வந்து, விசாரிச்சு அழைப்பித்துக் கொள்ளுகிறதுக்குப் போயிருக்கிறதினுலே, அது வருகுறதுக்குள்ளாக, நம்முடைய வீட்டிலே யிருக்கிற தேனும் கொஞ்சம் லவங்கமும் கலந்து பிசெஞ்சுக் கொண்டுபோய், அவருக்குக் குடுக்கத்தக்கின்தை யெடுத்துக் கொண்டு போனேம். அப்போ ஸ்ரீ பிள்ளையவர்கள் யெம்மாத்திரம் மணியுண்டு யெண்ணு கேட்டார். அதுக்கு நாங்கள் சொன்னது. இன்னேறம் அஞ்சு மணி வேளை இருக்குமெண்ணு சொன்னேன். அதின்பேரிலே மருந்து சாப்பிடுறதை நிறுத்தி வைத்துப் போடுவோம். பொழுது விடியட்டும். பாத்துக் கொள்ளுவோமண்ணு சொன்னுர். பின்னேயும் சேஷாசல செட்டியும் அழைச்சனுப்பிவிச்சு காண்பிச்சு, அமிழ்தத்தை சாப்பிடாமல் சும்மா வையுங்கோளென்று சொன்னுர்.

## விக்கிறம ஸ்ரீ தை மீ௳ ௩ ௨ சோமவாரம்: சதளளசாயக ஆண்டு, சனேர் மீ௳ ௰௨ ௨

இந்தனுள் சூரிய உதயமானவுடனே, மகா ருசா ஸ்ரீ பிள்ளையவர்கள், இசுப்பித்தால்[32] முத்தியப் பிள்ளையும், சேஷாசல செட்டியையும் அழைத்துக் கொண்டு வரச் சொல்லிவிப்போமா வெண்ணு கேட்டோம். நல்லது. அழைப்பிக்க சொல்லேண்ணு சொன்னுர். அந்தப்படிக்கு அழைச்சு வரச் சொல்லி, அவர்களண்டை மனுஷனை அனுப்பி வச்சேன். ஆனுல், யிப்போ ருத்திரி யிருக்குறதைப்பாக்கிலும் யிப்போ ரெம்ப லகுவாயிருக்குது. தந்த சுத்திப் பண்ணிக் கொள்ளுவோமாண்ணு சொன்னுர். அப்போ பலன் வந்து, இசுப்பித்தால் முத்தப் பிள்ளை வரச்சொன்னுர். தந்த சுத்திப்பண்ணி[33] கூடத்துக்கு கனப்பையின் பேரிலே வந்திருந்துகொண்டு, தந்தவனம் பண்ணிக்கொண்டார். அப்போ பலன் வந்துது. இசுப்பித்தால் முத்தப் பிள்ளை வெளியே பிறப்பட்டுப் போயி அஞ்சாறு நாளாச்சுதேயெண்ணு சொன்னுர். யிப்படி யிருக்கச்சே, சேஷாசல செட்டி வருகிறதைக் கண்டு அவருடனே பிள்ளையொண்ணு சொல்லுவிக்க வேணுமெண்ணு, யிவர் வீட்டுக்கு நாம் போறதுக்கு பல்லக்குகாரரை அழைத்து வரப் போருளேண்ணு சொல்லுங்கோளேண்ணு சொன்னுர். அப்டியிருக்கச்சே, சேஷாசல செட்டியும் வந்தார்.

வந்து நாற்காலியின் பேரிலே உற்க்காந்தார். பிற்பாடு ருத்திரி சாப்பிடயில்லையா? வெண்ணு கேட்டார். சாப்பிட்டேனுண்ணு சொன்னுர். ஆனுல் கையை பாருமென்னு கையை நீட்டினுர். எனக்கு நாடி தெரியாதென்னு சொன்னுர். அப்படியா? உம்முடைய வளவுக்கு வருகுறதுக்கு பல்லக்குகாறர் வருகுருர்கள். உள்ளே சீக்கிறதுக்கு போயி கட்டில் பூட்டினதெல்லாம் முஸ்தீது பண்ணி வையுமெண்ணு சலுதியாய்[34] போகச் சொன்னுர். அவரும் அப்படியே முஸ்தீதுப் பண்ணுகிறேண்ணு போயி விட்டார். பிற்பாடு அவருக்கு நாடி தெரியாதே. அவருடனே சொல்ல வேண்டியதென்ன யிருக்குது. பின்னையாகிலும் நாடி தெரிந்தவர்களாயிருந்தால் அனுப்பியுங்கோளெண்ணு சொன்னுர். அப்போ விசாரிக்குமிடத்திலே, சரவண முதலிக்கி கொஞ்சம் தெரியுமென்னு சொன்னுர்கள். பிறப்பாடு, அவரை அழைச்சு வரச்சொல்லி, தன்னண்டை கூப்பிட்டு, அவனிடம் தன்னுடைய நாவை நீங்கள் தொட்டுப் பாருங்கோ யென்னு சொன்னதாகவும், அப்போ சத்து திரவம் குறைந்து வருகிறது. ஆனுல் நேத்து ராத்திரி யிருந்த வரட்சை யிப்போ யில்லை யென்னும் சொன்னுரென்னு சொன்னேன். ஆகையினுலே நான் கொஞ்சம் மருந்து சாப்பிடலாமாண்ணு கேட்டார். நல்லது. ருத்திரி முஸ்தீது பண்ணுணது சாப்பிட்டால் தேவலை யெண்ணு சொன்னேன். அதிலே யென்ன யிருக்குது. அமிழ்தத்தை சாப்பிட்டா மாத்திரம் செத்துப் போறவன் யிருப்பானு? அமிழ்தம் சாப்பிடாமண்ணு செத்துப் போகாதவன் செத்துப் போவானு? பிற்பாடு பாத்துக் கொள்ளுவோமெண்ணு சொல்லி படுத்துக் கொண்டார்.

பிற்பாடு பத்து மணிக்கு, சின்ன முதலி வந்து, பெண்டுகளைக் கொண்டு போயி விட்டுப் போட்டு வருகிறேன். சிதம்பரனுத பிள்ளைக்கு காகிதம் குடுத்திருந்தைக் கொண்டு போயி அவர் கையிலே குடுத்து, அவர் மாரிபத்திலேயாகிலு,ம் பின்னை யார் மாரிபத்திலேயாகிலும், வழி திட்டப் படுத்திக் கொண்டு, நாளைய தினம் வந்து சேருகுறேன் யெண்ணு சொன்னுன். அந்த சேதி பிள்ளையவர்களுடனே சொன்னேன். நல்லது. சிதம்பரனுத பிள்ளைக்கு யெழுதுகிற காகிதத்திலே, உமக்கு யெத்தனை மனுஷரை அனுப்பிவிச்சும் ஒண்ணுக்கும் நீர் கவைப்படுத்தாமலிருக்கிறீர். இனிமேல் யென்னை நீர் பார்க்க மாட்டீரெண்ணும் யிது கண்டிப்பான உத்திரவாக யெழுதி யனுப்பிவியுங்களேண்ணு சொன்னுர். அப்படியே யெழுதி, ஒப்பம் போட வேண்டியதற்கு கொண்டு வந்து குடுத்தேன். படுத்திருந்தவர் யெழுந்திருந்து, உற்க்காந்து கொண்டு, ரெண்டு கதவையும் திறந்து விடச் சொல்லி மூக்குக் கண்ணுடியும் போட்டுக் கொண்டு, அந்தக் கடுதாசியிலே, யிதுவே கடைசி கடுதாசியாய் பாத்துக் கொள்ளுமென்னு, யெழுதியும் கையெழுத்துப் போட்டார். நான் கடுதாசியைப் பாத்து என்ன யிப்படி யெழுதியிருக்கிருர்ணு யெண்ணிக் கொண்டு, அந்தக் கடுதாசியை லக்கோடாப் பண்ணி, சரவண முதலி கைலே குடுத்து அனுப்பிவிச்சோம். பிற்பாடு சரீரம் ரொம்ப ஆயாசம்--------

**IFP: Mss. ET.FR.No.131. Fragment du manuscrit presume original du journal de Tiruvengadam Pillai, nevue d' Ananda Ranga Pillai 1761 etc copies diverses, fls. 1–68**

## விஷ ௵ புரட்டாசி ௴ ச ௳ புத்வாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் ௴ யசா ௳

இந்தனுள் காலமே, சென்னப்பட்டணம், சதிரங்கப்பட்டணம்............ புதுச்சேரி, கூடலூர், திருப்பாபுலியூர், வெங்கடம்மாள்பேட்டை, சீகாழி, நாகப்பட்டணம் பின்னும் நமதுடவர்கள் எங்கெங்........... அங்கே அவர்களுக்கெல்லாம் நாம் காகித பத்திரம், ஒலே, தாள், எழுதி அங்கே............ மனுஷரை அனுப்பினோம். சென்னப்பட்டணத்துக்கு முத்தப்பன்கிறவன் காகிதம் எழுதி வெங்கட பிள்ளை கையிலே குடுத்து மறுகாகிதம் வந்து, ............ மனேச்சீட்டும் சென்னப்பட்டணத்து கடன் சீட்டுகளும்[35], குடுத்த தட்டுமுட்டுகளுக்கு சவாது எழுதிக் குடுக்கணுமுனு, நாணு தான் பத்திரிகையும் குடுத்து, அவர் கையிலே றெசீதும் வாங்கினோம்.

## விஷ ௵ புரட்டாசி ௴ ரு ௳ குருவாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் ௴ யஎ ௳

இந்தனுள் எழுத வேண்டிய சேதி யில்லே.

## விஷ ௵ புரட்டாசி ௴ சா ௳ சுக்ரவாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் ௴ யஅ ௳

இந்தனுள், அண்ணுசாமி காலம் பண்ணிப் போனதுக்கு அண்ணய தரிசனம் வந்தவர்கள் போக, சிறிது வற்த்தக குடிகள் வந்து மெனவிப் போட்டு போனும்.

## விஷ ௵ புரட்டாசி ௴ எ ௳ சனிவாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் ௴ யகூ ௳

இந்தனுள் எழுத வேண்டிய சேதிகளில்லே.

## விஷ ௵ புரட்டாசி ௴ அ ௳ ஆதிவாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் ௴ உய ௳

இந்தனுள் எழுத வேண்டிய அதிசெய சேதி யில்லே.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ கூ உ சோமவாரனுள்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் மீ உக உ

இந்தனுள் காலமே, சாம்பசிவ சாஸ்திரியாருக்கு சரீரம் சொஸ்தமில்லாத படியினலே, டொலி[36] முஸ்தீது பண்ணி எடுத்தனுப்பிவிச்சோம். திருவாலங்காடு மட்டும் மனுஷரையும் அனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ யக உ புத்வாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் மீ உங உ

இந்தனுள் சாயங்காலம், வெங்கட்டம்மாள் பேட்டையிலிருந்து சிதம்பரனுத பிள்ளையும், நம்ம முத்து சாம்பசிவ பிள்ளையும், புதுசோலை பிள்ளையும், மெச்சிய பிள்ளை குமாரனும் சிறுது பெண்டுகளும், பின்னும் சிறுது பேர்கள் ரெண்டு குதிரையுடனே வந்தார்கள்.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ யரு உ ஆதிவாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் மீ உஎ உ

இந்தனுள் சாயங்காலம், சிதம்பர பிள்ளை, அண்ணுசாமி காலம் பண்ணி போனதுக்கு விசாரிக்க வந்தார். தில்லையாடியிலிருந்து ரெண்டு பேரும் வந்தான். அவர்களுக்கெல்லாம் விடுதியும், [3] மத்தது விசாரிக்கச் சொல்லி வெங்கட்டருயருக்கு உத்தாரம் கொடுத்தோம். இவர் வந்தவர் முன்னுலே நம்ம அண்டையிலே செட்டிச் சிவன் பெண்ணுத்தூர் சாமாருயன் அவன் பேருக்கு............ திருவதி[37] ............ யிசாறு வாங்கி வந்ததாகவும், ............ பண்ணிக் கொண்டு தம்முடைய காரிங்களுக்கு சேத்து சொல்லிக் கொண்டதாகவும், அப்படியே அனுகூலம் பண்ணி தாரேுமென்ருப்போல சொன்னுர்கள்.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ யகா உ சோமவாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் மீ உஅ உ

இந்தனுள் காலமே, அண்ணுசாமிக்கு............ கூட பாத்தியப்பட்டு............ வேண்டியதோ சீக்கிரம்............ துபாசி கந்தப்ப முதலியாருட குமாரனும் வந்த அவர், சிறுது னேரம் பத்து ஞழிகைக்கு மேல் செய்யவேண்டிய மத்தது செய்து போட்டு குருதக்ஷிணைகளைக் குடுத்துப்போட்டு கூடாரத்திலே வந்து குடுத்ததை குடுத்து, அங்கேயிருந்து பிறப்பட்டு, வீட்டுக்கு வந்தவர்களுக்குக்கெல்லாம் பிராமணுள் வீட்டுலேயும், வீட்டுலேயும், போனதுக்கு எழுதி அனுப்பிவிச்ச காகிதத்துக்கு, பதில் உபசாரமாய் காகிதமெழுதி அனுப்பிவிச்சார்.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ யஎ உ மங்களவாரம்: சதளளசாயக ஆண்டு, செயித்தெம்பர் மீ உகூ உ

இந்தனுள் காலமே, சிதம்பரனுத பிள்ளை தம்பி............ குமாரனும் இவர்கள்............ வந்தவர்களும் அவரவருக்கு அனுப்பிவிச்சு............ அண்ணுசாமி காலம் பண்ணிப்போன

ஆதிவாரம் போயிட்டு பஞ்சமியானபடியினலே யிருந்தண்டைக்கு தோஷமுண்டான படியினலே முடிய முஸ்திது பண்ணி ஞளது சாயங்காலம் எட்டு நாழிகைக்கும் இருக்கிறவர்கள் வசம்பண்ணினேம். நேராக ஆறு மணிக்கு போற போது வராது சொன்னது என்னவென்ஞல் நம்முட சங்கதி சகல பிறஸ்தாபம் பண்ணி நேத்துக்கு எண்ணு சொன்னதாகவும், பேரிலே............ இவர்கள் சொன்னது............ இப்பவும் நீர் உங்களெல்லாருக்கும் இச்சங்கதிகளெல்லாம் சொல்லி, ருசா அவர்கள் சொன்னது. ............ வெகுமானமும் அனுப்பிவிச்சுக்கு பூரணமாய் பேசி குடுத்ததாக சொன்னதாக வந்து பேசி ............ விடுதிக்குப் போனர்.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ௳ உய ௳ சுக்கிறவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ௳ உ ௳

இந்தனள் விந்தையாய் சேதிகளொண்ணும் கேழ்விப்படவில்லே.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ௳ உக ௳ சனிவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ௳ ங ௳

இந்தனள் ருத்திரிக்கு, சென்னப்பட்டணத்திலே யெழுதி யனுப்பின............ யிலிருந்து............ கொடுத்தபடி காகிதம் கொண்டு வந்து குடுத்தான். யிதிலேயிருந்த தலப்பு நம்முட தட்டுமுட்டு எடுத்து வர............ இந்த ஞாயம் கோவர்ணதோர்[38] அவர்களுடனே சொல்லி கொண்டார்கள்............ அவருடனேயும் சொல்லியிருக்குரேம். அவரும்............ சொல்லச் சொல்லி இருக்குருரென்னு சொன்ன இவன், ஆனல் நானும்........... காகிதம் குடுக்குறேன் அதை குடுங்கோளென்னு சொன்ஞர். நல்லதென்னு அவர் குடுத்த காகிதத்தை கொண்டு போய், முசே லெறி யவர்கள் குடுத்து, நானும் சிறுது விஷயம் சொன்னேன். அவர் சொன்னது. கேட்டனுப்பிவிச்ச தட்டுமுட்டு தம்முட கையிலெ இருக்கிற சரக்கிற்கு குடுத்து யிருக்குதென்னு சொன்ஞர். நீங்கள் போய் அந்த ஆளைக் கேட்டு, அவர்கள் சொல்லுகிறதை அறிஞ்சுக் கொண்டு ............ போட்டு கொள்ளுங்களென்று சொன்ஞர் ............அவர்களே கேழ்குறது இதுவரை தமக்குகென்னு தாம் குடுக்குரென்கிறதாக சொல்லிக்கொண்டு வந்தார்கள். இப்போ அவர்களைப்போய் கேழ்க்கச் சொன்னதை உண்டானல், எந்த விதத்தினல் அவர்கள் கேழ்க்குறது அய்யாவென்று சொன்னத்துக்கு, அவர் சொன்னது. அவர்கள் இப்போ அப்படி சொல்லுகுருர்களே நமக்கு............ முடிக்கிறதுக்கு நாமென்ன செய்வோமென்று சொன்ஞர். ஆனால் யிந்த ஞாயதுக்காக எழுதி போட்டது. எந்த ஞாயத்திலே எடுத்து கொள்ளுகிறீர்களென்று அறிஞ்சு கொண்டாலும் நல்லதென்னு செய்யுரேம். அவர்கள் ஞாயத்துடனே நடந்ததில்லே ஆகையால் ஞனுமெழுதி அனுப்புகிறதில்லே ............ என் காரியம். அனேக காரியம் விட்டு விட்டு வருகுரேமெண்ணு சொன்ஞர். ஆனல் இவர்களே நம்பி வந்தோமே, உத்தாரம் குடுத்தால் ஊருக்குப் போறேனென்னு சொன்ஞன்............ செய்வோம் நீங்கள் சுஷ்தீதுக்கு[39] பெத்திசாம்[40] போட்டுக் கொண்டாலே கொண்டு போங்கள்............ நீங்கள் போடுகிறத வைத்து பெரிய காரியத்துக்கு போடாமல் விட்டு............ போடமாட்டோம். நீங்கள் தானே சுஷ்தீதுக் ............ சொன்ஞர். இந்த சேதியை முசே லெனுவாருடனே கண்டு பேசினேன்.

எனக்கு அப்படித்தான்............ சொன்னல் அவர்கள் குடுக்குறது முண்டானல் குடுக்கிருர். இல்லாவிட்டால் எடுத்துக் கொள்ளுங்களேன்னு சொல்லுற ஞாயம் நீங்கள் சொல்லுங்கோள். நடந்த சங்கதிகளெல்லாம் சொல்லுறேன் யிதில் ஞாயம் உண்டு யில்லே என்கிறது சொல்லுவார்களென்று சொன்னன். இந்த சங்கதிகளெல்லாம் அறிவேன். அவர்களே கேக்குறதுண்டு. அவர் ஞாயம் தாளுகவே இருக்கட்டும். இருக்குற சுஷ்தீதுக்கு பெத்திசாம் போட்டு அறிய வேண்டியதெல்லாம் சொல்ல யில்லே என்னு சொன்னர். அப்படிப்போட்டு அறிந்து அவர்கள் சொல்லுகுறதை வந்து சொல்லுகுறெனென்னு சொன்னன். இவர்கள் பெலயீனப்பட்டு குடு என்று விட்டதிலே பெரிய ........... யிருக்குற மேஸ்தர் கெபிரியை கண்டு பேசினதுக்கு அவர் சொன்னது. எங்க எசமானுடைய பிச்சையும் மத்தவிசயமாய் சீமைக்கு எழுதி யிருக்குருர்கள். இவர்கள் உத்தரவு வரநாட்செல்லும். வந்த பிற்பாடு தெரியுமென்னு யிழுப்பிலே உத்தரவு சொன்னர். ஆகையால்............ பெத்திசாம் போட்டு நடக்கிற சேதியின்னலெ அனுப்பிவிக்குறதென்னு எழுதியிருந்தது. அல்லாமல் பொம்ம ராசபாளேயத்துக்கு அவர்கள் முன்னுலே நம்முடதுக்கு நூத்துக்கு........... கிராமம் தான் பத்திரிகை யெழுதி குடுத்திருந்ததுக்கு............ அனுப்பினன்............ அரக்கும் சவ்வாதும் எழுதி, அங்கேயிருக்கிற பேர்களுக்கு காகிதமுமெழுதின தென்னவென்னுவது........... எப்படி தெரியப்பட்டதுண்ணு சொல்லி, கால தாமீஷமில்லாமல் காரிய அனுகூலம் பண்ணி, சீக்கிறமா அனுப்பிவிக்கவும், ருமருய........... பேர் எழுதி அனுப்பிவிச்சோம். அவர் சொல்லச்சே தெரியுமென்றும் தமக்கு ரெண்டு........... அனுப்பிவிச்சோமென்னும் எழுதி அப்படி............ நாள் கால தாமிஷமாயிருந்த தல்லாமல் சுறுக்குலே கவை அனுக்கூலம் பண்ணிக் கொண்டு, கிராமத்துக்கு............ நம்முடத்துக்கு ............ வெகுமதியும் நடத்தக்கதுக்கு வேண்டியதென்னு சொல்லி அனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ புரட்டாசி மீ உஉ ௨ ஆதிவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ ச ௨

இந்தனள், அண்ணுசாமி[41] காலம் பண்ணி போனதுக்கு வந்திருந்த சிதம்பரனுத பிள்ளே, காலமே அனுப்பிவிச்சுக் கொண்டு கொட்டுபாளேயத்துக்குப் போனர். சாயங்காலம் சவுபாக்கியவதி நன்னச்சியும்[42] பொன்னச்சியும்[43] போனள். இந்தனள் கேழ்விப்பட்ட சேதியென்ன வென்ருல், தஞ்சாவூரிலே முன்னள் துளசி மகாருசா அவர்கள், ........... க்கு சமாதானமாய், மாருஞசி அய்யர், போன வருஷம் தொண்டமான் சீமைக்குப் போய், அங்கேயிருந்து ஸ்ரீரங்கத்துப் போய் சேந்திருந்தவருக்கு, மகாருசா அவர்கள் சமாதானம் பண்ணி தகவலுங் குடுத்து, அந்தறங்கத்திலே நம்பிக்கைத் தொன்ய பண்ணி அழைச்சனுப்பவிச்சப்படியினுலே, மாருஞசி அய்யர் மூணும் மீ உயரு ௨ புத்வாரனள் ஸ்ரீரங்கமண்டை பிறப்பட்டு, கோவிலடிக்கி[44] வந்திருந்து, ஆயுத பூசை பண்ணிக் கொண்டு, மறுனள் விசயதசமி யண்ணேக்கு உதையத்திலே பிறப்பிட்டு, சாமத்துக்கு திருவையாத்துக்கு வந்தார். அந்த சேதி மகாருசா கபுறு ஆன உடனே முன்னூறு குதிரை எதிராக அனுப்பிவிச்சு, அதின்பேரிலே காடுவருயர் அவர்களேயும், வறுதா கிஷ்ணசெட்டியையும், திருவையாறு மட்டுக்கும் அனுப்பிவிச்சார். அவர்களே திருவையாருக்கு போய், காவேரி கரையினலே, அவருக்குச் சொல்ல வேண்டிய பரசார்களெல்லாம் நம்பிக்கை பண்ணி கொடுத்து, அழைச்சு வந்து

பதினஞ்சு நாழிகைக்கு, மகருசா சம்பாஷிச்சு சாமத்திலே கொண்டு போய் விட்டான். அங்குப் போனவுடனே பொன் பூவும், வெள்ளிப் பூவும் பாதத்திலே போட்டு, சாஷ்டாங்கமாய் தெண்டன் பண்ணி, உடனே துளசி மகாருசா அவர்களுக்கு அந்தபடியே பொன்னும் வெள்ளியும் போட்டு, தெண்டன் பண்ணி வருங்கட்டு, அந்தியருத்துக்கு போய், அவர் தாயாரையும் தெண்டன் பண்ணி போட்டு, அங்காலே சாப்பிட்டு, விசையதெசமிக்கு அம்பு போடுகுறதுக்கு மகாருசாவுட கூட வரும் ஒரு குதிரையேறிக் கொண்டு கூடப்போய் திரும்பி வரச்சே, துளசி மகாருசாவும், காடுவருயனும், மானேசியப்பாவும் ஒரு றதத்தின் பேரிலேயும் மகாருசா அவர்கள் பல்லக்கும் பேரிலேயும், சகல சம்பிறமத்துடனே அரமணைக்கு வந்தப் பிறபாடு, மகாருசா அவர்கள் மாருஞசி அய்யாவுக்கு பச்செக்கல், கடகம் பதக்கம், சீறப்பனி முதலான வஸ்திரங்களும் குடுத்து, இரஞக சுலத்துக்கு குதிரையும் வெகுமானம் குடுத்து கம்பீரமானபடி போக டொலியும்........... மத்த காரிய கர்ணங்களெல்லாம் ........... அனுப்பிவிச்சார்கள். அவரும் சகல சம்பிறமத்துடனே [போன]தாக கேழ்விபட்டோம்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ௳ உஉ ௳ மங்களவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ௳ யங ௳

இந்தஞள் விந்தையான சேதிகளொண்ணும் கேழ்விப்பட்டில்லே.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ௳ உ ௳ புத்வாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ௳ யச ௳

இந்தஞள் மத்தியானம், பத்து மணிக்கு .எ. ஞச்சன பிள்ளே பெண்சாதி ருகவம்மாளும், அவள் தங்கையாரும், ஞச்சன பிள்ளே மச்சினன் கந்தப்ப பிள்ளேயும், ஒரு டொலியும் சேவுகர் பொப்பருண்டர், கூலிக்காறர் பதினஞ்சு இருபது பேர்களுடனே, அண்ணுசாமி காலம் பண்ணி போனதுக்கு வீமஞயக்கன் பாளேயத்திலிருந்து விசாரிக்க வந்தவர்கள், பயணம் அனுப்பிவிச்சுக் கொண்டு, மத்தியானம் முத்த பிள்ளேயவர்கள் வீட்டிலே சாப்பிட்டு, சாயங்காலம் கந்தப் பிள்ளேயவர்கள் வீட்டிலிருந்து பயணம் பிறப்பட்டு போனர்கள். அவர்களுக்கு வழிச் சிலவுக்கு படி, மதத்ததும் குடுத்து ஞச்சன பிள்ளே யவர்களுக்கு கத்தி யில்லே. கேட்டு வாங்கி வரச்சொன்னர்களெண்ணு கேட்டிருந்தார்கள். அவர்களுக்கு சயிபு பெரிய கத்தி ஒண்ணு குடுத்து அனுப்பிவிச்சோம். பயணமாகிப் போனர்கள். இந்தஞள் சென்னப்பட்டணத்திலே யிருந்து முத்தப் பிள்ளேயவர்கள், புரட்டாசி மீ௳ உயச ௳ யெழுதின காகிதம், அங்காடி கும்பினிச் சேவுகன் கொண்டு வந்து கொடுத்தான். அந்தக் காகிதத்தில் யெழுதி யிருந்த மத்தலிப்பு யென்னமென்றல், தட்டுமுட்டு சங்கதிக்கு, குமுசலுக்கு பித்திசாம் போடுகுறதுக்கு கப்பல் பயணமாய் போறப்படியினலே போடுகுறதுக்கு கூட்டில்லே. கப்பல் பயணமாய் போனபிறகு போடுகுரேம். முன் புரட்டாசி மீ௳ உயச ௳ வெள்ளிக்கிழமை, சாயங்காலம் ஆறு மணிக்கு, சென்னப்பட்டணத்துக்கு துரைத்தனம், மேஸ்தர் கெவுணர் பாலுக்கும், செனருல் மேஸ்தர் ஆற்ணெட்டும் வந்திறங்குனர்கள். கெவுணர் பிக்கட்டு யிருக்கிற மட்டுக்கும் அவர் தொரைத்தனம் பண்ணுறது. அவர் சீமைக்கு போன பிறகு இவர்கள் துரைத்தனம் பண்ணுகிறதுவெண்ணு சொல்லுகிருர்கள். இங்கே யிருந்து சீமைக்கு

யெழுதுறதென்ஞல் முசே கொதே அவர்களுக்கும், முசே புசியவர்களுக்கும் யெழுதி அனுப்பிவிச்ச காகிதம் முசெ ருப்பிலவர்கள் கையிலே குடுத்து, அவர்களுக்கு சொல்ல வேண்டிய சங்கதிகளெல்லாம் சொல்லி கொடுத்தாகவும், ஒரு சேவகன் கையிலே கும்பினியாருக்கும் முசெ கொதே அவர்களுக்கும் கோந்துதெ குமாரன் முற்செனுக்கும் இவர்களுக்கெழுதின மெம்முவாறும்[45], கொந்............ம் குடுத்து, அவருக்கு சொல்ல வேண்டிய சங்கதி ............ ன்னதும் சீமைக்குப் போற, கொவர்ணதோர் ............ மோருசேன், முசேலெனுவார் இவர்களுக்கும், நம்முட ............ யென்னமாச்சே பேச வேணும். அந்தப்படி சொ............ லற் இனிமேல் இவடத்திலே நடக்க வேண்டிய ............ காகிதம் எழுதி குடுத்தாகவும், இதுகளெல்லாம் மனுஷன் வந்து சொல்லச்சே தெரிய வரும்படி பிருஞ்சிலே யெழுதினேன்னும், புரட்டாசி மீ உயச உ செவ்வாய்கிழமை, ஒதையமாக ஒரு ஞழிகைக்கு கொவர்ணதோர் முசெ லெறி அவர்கள் முகத்துவாரத்தண்டையிலே போய் படகேறி ஆறு மணிக்கு கப்பலேறினதாகவும் மைத்த கொன்சலியேர் முதலாகிய பேர்களெல்லாம், முன்னும் பின்னுமாய் ஏறி போனதாகவும், இவர்கள் ஏறின கப்பல் சாயங்காலம் ஞலு மணிக்கு யெடுத்தாகவும், இதல்லாமல் ருசாம பாளையத்துக்கு காகிதமும், தான பத்திரிகைக்கு சவாதும் அனுப்பிவிச்சோம். அதுவும் நம்முடயவனுக்குத் தக்கதாக குடுத்து, ஞகலிங்கம் கையிலே நாமே முத்திரைப் போட்டு, குடுத்த சீட்டும், கணக்கும் முத்திரையைப் பிரிச்சு, அதிலே றகுநாத வெங்கிட கிஷ்ணப்பிள்ளை கையெழுத்து கணக்கு யிருந்துதே, அதைக் கொண்டு போய் வெங்கிட கிஷ்ணப்பிள்ளை கையிலே குடுத்து, உடமையையெடுத்து சரி பார்த்துக் கொண்டு, மறுபடி முத்திரை போடச்சொல்லி வாங்கி வைச்சுக் கொண்டு, அதை ஞகலிங்கம் கையிலே குடுத்து விட்டு, தட்டுமுட்டு குடுக்கிறதுக்கு தகருறு சொல்லிக் கொண்டிருக்கிறதாக கேழ்விப்பட்டோம். நல்லது. இப்படி நடந்தால் ஞமே வில்லங்கமாகயல்லாமல்[46] உத்தரவாதம் பண்ண வேணும். நடக்குற காரியத்தை பாற்போமென்று யெண்ணிக் கொண்டு ஞகலிங்கம் நமக்கு எழுதிக் குடுத்த சீட்டுக்கு நகலெழுதி, வெங்கிட கிஷ்ணபிள்ளை கையிலே குடுத்து, ஞகலிங்கம் கூடயிருக்கச்சே இப்படியே றகன மூத்தியைக் கலைச்சு திருபட்டளவாய் அவன் கொண்டு வந்து கணக்கு குடுத்தால் நீ யெப்படி குடுக்குறோமென்ணுவீர். யினிமேல் எங்களையில்லாமல் குடுக்கத் தேவையில்லை. குடுத்தால் நீர் உத்தரவாதம் பண்ணுவீரென்னும் சொல்லியிருக்க, அப்போ அவன் சொன்ன வியாச்சியமும், ஞகலிங்கம் பேசின பேச்சும் அனேகமுண்டு. கடையிலே உங்களை அல்லாமல் குடுக்க யில்லையென்னு சொன்ஞர். இப்படியிருக்க, சாவடிக் கப்பித்தான்[47] துபாசியுடனே சொல்லி, கப்பித்தானுக்கு சொல்லி, வாங்கிக் கொள்ளத்தக்கதாக சொன்ஞர்கள். அந்தச் சேதி கேட்டு, அந்த நகலைக் காண்பிச்சு, இந்த ஞாயம் படிக்கி அவருக்கும் சொல்லி நிறுத்திப் போட்டோம். இன்னம் பிறேத்தனம் பண்ணிக் கொண்டு திரியுருன். இதுக்கு வெங்கடாசல பிள்ளையும், அவன் தம்பி சீத்தாராமனும் இத்தனையும் நடப்பிக்குறது. ஆஞல் அவன் கையிலே குடுக்காமல் பத்திரம் பண்ணிப் போட்டோம். இதுனளவில் நடந்த கதைகள் யேகமுண்டு. இந்த சங்கதிகளெல்லாம் நாச்சின பிள்ளை கேட்டு, காகித பத்திர மனுப்பி விச்சார். அவருக்கும் இது சங்கதிகள் எழுதி அனுப்பிவிச்சோம். காலத்துக்கடுத்துதக்கதாக இந்த ஞகலிங்கமும் யெதிர வியாச்சியமும் யேற வச்சுது. இதெல்லாமல் ஞன் வந்து சொல்லச்சே தெரிய வருமென்னும், ஞனும் சா............ தக்கதாக யிருக்கிறேனென்னும் யெழுதியிருந்துது. ............ முத்தபிள்ளைவர்களுக்கு காகிமெழுதி அனுப்பின ............ னம்முட தட்டுமுட்டை எடுத்துக் கொள்ளு ............ படியிஞலே, இதுவரைக்கும்

காப்பியத்திலே பார்க்குற மனுஷர்களாய் சொல்லுகிறுர்கள் பெலத்துக்கு பேசுகிறது யில்லாத............ யெடுத்துக் கொள்ளுகிறதுக்கு, சிறுது ஞாயம் ............ எடுத்துக் கொள்ள வேணும். அதுக்கு குமிசெலுக்கு பித்திசாம் போட்டு, அவர்கள் சொல்லுகிற ஞாயத்துப்படிக்கி, கொமுசெலியேர் கையெடுத்துப் போட காகிதம் வாங்கச் சொல்லியும் யின்னபடிக்கு நாம் பேசுகிறதுக்கு யிடமுண்டு. பண்ணிக் கொள்ளச் சொல்லியும், ஞகலிங்கத்து சம்மதியுடனே சேதத்துக்கு அவன் வியாச்சியமும்[48] பேசுகிறதுக்கு ஞாயத்தின்படிக்கு சீட்டு ஞட்டு கணக்குகள், பிடவை, சீலெகள், வெண்கலத் தட்டு முட்டுகள், கொண்டு வந்து குடுக்குறேமென்று சீட்டெழுதிக் குடுத்திருக்க, அவன் முத்திரையைக் கலைச்சு, வெங்கிடகிஷ்ணண் கையிலே இருக்குற தட்டுமுட்டை குடுக்கச் சொல்லிக் கேழ்க்கவும், அவர்கள் குடுக்குறேமென்கிறதுக்கு என்ன ஞாயமிருக்குது. இப்பவும் நான் அவன் கையிலே முத்திரை படிக்கி ஒப்படச்சிருக்கிற சீட்டு ஞட்டு கணக்குகள், பிடவை, சீலெ, வெண்கல தட்டுமுட்டு என்னவுண்டு, அதுகளெ வாங்கிக் கொண்டு வெங்கிடகிருஷ்ணபிள்ளெ வசத்திலே யிருக்கிற தட்டுமுட்டுகளெ ஞகலிங்கத்தையும் கூட வச்சுக் கொண்டு, வாங்கிக் கொண்டு, ஞகலிங்கத்தையும் இவடத்துக்கு அழைச்சுக் கொண்டு வந்தால் பேசிக் கொள்ள வேண்டியதுகள் பேசிக் கொள்ளலாமெண்ணும், இது சங்கதிகளுக்கும்............ ஞச்சின பிள்ளெயவர்களுக்கும் எழுதி அனுப்பியிருக்கிறேம். அவரும் மனுஷரை அனுப்பிவிப்பார். இது சங்கதிகளுக்கு அவர்களெயும் கூட வச்சுக் கொண்டு எப்படி பேச வேணுமோ அப்படி பேச வேண்டியதென்னும், இதுகளுக்குத் தகருறு யென்னுல், துரைகள் பரியந்த ⟨ா⟩ ம் பேசச் சொல்லியும், இது சங்கதிகளுக்கு அந்தபடி வெங்கிடாசல பிள்ளெ, வெங்கிடகிஷ்ணபிள்ளெ, ஞகலிங்கத்துக்கும் காகிதமெழுதி யிந்தக் காகிதமெல்லாம் ருகவம்மாள் பின்னுலே, போற சேவுகர் வெங்கிடபதி கையிலே குடுத்து, சென்னப்பட்டணத்திலே முத்தப் பிள்ளெ கையிலே குடுக்கச் சொல்லி அனுப்பிச்சோம்

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ ங உ குருவாரம்: சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ யரு உ

இந்தனுள், முத்துமல்லா ரெட்டியாருக்கும், முத்துவெங்கிட்டராம ரெட்டியாருக்கும், குலசேகரம் வெங்கிட ஞருணப் பையருக்கும், ருச கோபால ஞயக்கனுக்கும், சக்கஞய பிள்ளெக்கும், ருமாசி பண்டிதருக்கும் அண்ணுசாமி காலம் பண்ணி போன சேதிக்கு காகிதமெழுதி எமக்கு மகன், பிள்ளெ, மருமகன் ............ மனுஷன் கையிலெ குடுத்து அனுப்பிவிச்சோம். முத்துமல்லா ............ திருப்பள்ளி கிஷ்ணபிள்ளெக்கும் நம்முட காலி மாட ............ குடுக்கச் சொல்லி எழுதி குடுத்தோம்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ எ உ சோமவாரம்: சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ யகூ உ

இந்தனுள் சாயங்காலம் செங்கழுனீர்ப்பட்டு பாளெயத்திலிருந்து, சாராயக்கிடங்கு திருபறளி பழனி கிஷ்ண பிள்ளெயும், சென்னப்பட்டணம் வெங்கடாசல பிள்ளெ கூடப் பிறந்த கந்த பிள்ளெ தமையன் வேல்பிள்ளெ பெண்சாதியும், றணமப் பிள்ளெ பெண்சாதியும் வந்தார்கள். புதுச்சேரியிலிருந்து துபாசி எல்லப்பிள்ளெ சித்தப்பன் மகன் ருமனுதன்

வந்து சொன்னதென்ன வென்றல், முன் புரட்டாசி மீ௳ உயரு ௳ புத்வாரம் சாயங்காலம், முசெ லெறி முதலாகிய பிறிசெனர் சென்னபட்டணத்தில் இங்கிலீசுக் கப்பலேறி, சீமைக்குப் போறவர் கப்பலிலே வெள்ளைக் கொடிப் போட்டுக் கொண்டு வந்து, புதுச்சேரி துறை பிடிச்சுது. ஒரு லாங்கு போட்டுலே, முசெ லெறி அவர்களும் பின்னையும் ரெண்டொருத்தரும், கோட்டைக்குத் தென்னண்டையிலே, உப்பளத்து மணல் மேட்டும் பேரிலே, வந்திறங்கி, சத்திருந்து இருபது மாடு மட்டும் ஏத்திக் கொண்டு மறுபடியும் கப்பலெறிப் பாயெடுத்து[49] போனன்கிறதாக வந்து சொன்னன்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ௳ கூ ௳ சோமவாரம்: சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ௳ உக ௳

இந்தனுள் காலமே, நாகப்பட்டணத்து அறுணசல செட்டியைப் பயணம் பண்ணி, சக்குலுனயக்கர் குமாரன் சின்ன னயக்கருக்கும், ஆதிகேசவப் பெருமாள் பிள்ளைக்கும், காகிதமெழுதிக் குடுத்து அனுப்பிவிச்சோம். சின்ன னயக்கருக்கு எழுதின காகிதத்திலே அண்ணசாமிக்கு கறமாந்திரம்[50] பண்ணினது, அவடத்து சேதிகளுக்கும் உபசாரம் யெழுதி அனுப்பிவிச்சோம். ஆதிகேசவ பெருமாள் பிள்ளைக்கு யெழுதின வயணம். நாகப்பட்டணம் போய் சேந்த பிற்பாடு ஒரு சேதியும் எழுதி அனுப்பாமல் போனனென்னும், இனிமேலாகிலும் அடிக்கடி எழுதி அனுப்பிவிக்கச் சொல்லியும் உபசாரமாய் எழுதி அனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ௳ யங ௳ ஆதிவாரம்: சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ௳ உரு ௳

ருத்திரி ஏழு மணிக்கு, முத்தைய ............ குடியிருந்து, யெட்டு மணிக்கு அனுப்பிவிச்சுக் கொண்டு வந்தாரெண்ணும் னளயத்தினம் தீபாவளிப் பண்டிகை ............ சொல்லத்தக்கதாக வந்தார். எண்ணத்தில் ............

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ௳ யச ௳ சோமவாரம்: சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ௳ உசா ௳

இந்தனுள் மத்தியானம், சென்னப்பட்டணத்திலேயிருந்து முத்த பிள்ளை அனுப்பின காகிதம் போயிண்டன் கொண்டு வந்து குடுத்தான். அந்த காகிதத்தில் எழுதியிருந்த வயணம். தட்டுமுட்டு சங்கதிக்கு குமுசெலியெர், திறெகி யெண்கிறவர் நாம் குடுத்த பித்திசாம் வாங்கி வச்சுக் கொண்டு இந்த ஞாயம் குமுசலிலே நாம் நண்ணப் பேசி, உங்கள் காரியம் அனுகூலம் பண்ணிக் குடுக்குறோம். நீங்களாய் பித்திசாம் போட்டால் இருக்கட்டும். இன்னம் ஒரு வேளை ஆகட்டுமெண்ணு மெதுவு பண்ணுவார்கள். ஒரு பெரிய மனுஷன் பிராஞ்சுக்காறன் முன்னிலையாய்ப் போட்டால், அவிழ்த்துப் பாற்க வேண்டியிருக்கும். அப்போ, இந்த ஞாயம் யெப்படி பேச வேணுமோ, அப்படி பேசுகுறோமெண்ணு சொன்னர். பின்னையும் குமுசலியெர் ஆட்களையும், தருனேர் இவர்களையும் கண்டு பேசியிருக்கிறேம். கெவுணர் பாலிக்கும் செனறல் லார்னெட்டுக்கும், எச்சரிச்சு பித்திசாம் நடந்த ஞாயம் எழுதிவிச்சு, ங. ௳ வியாழக்கிழமை காலமே, கொண்டு போனவிடத்திலே, செனறல் லார்னெட்டு, ஆற்காட்டுக்கு பகலைக்கு

மேலாக பயணமாயிருந்தார் ஆனபடியினுலே எட்டு நாளைக்குள்ளாக வருவார். வந்தவுடனே குடுத்துப் பேச வேணும். இப்ப குடுத்தாலும் நான் வந்த பிற்பாடு ஆகட்டுமெண்ணு சொல்லப்போருணெண்ணு துபாசி சொன்னுன். விசாரிக்குமிடத்தில் எட்டு ஞளைய உருப்படி முஸ்தீத்து மாத்திரம் கொண்டு போருர். நல்லது. அப்படியே ஆகட்டுமெண்ணு வந்துவிட்டேன். ஆகையால் இன்னம் நாலு ஞளிருந்து கவையாகும் படியாய்ப் பாத்துக் கொண்டு வருகிறேன் என்கிறதாக யெழுதியிருந்தது. இந்த காகிதம் ஷி *மீ* ரு ௨ எழுதினது.

இந்தனுள் சாயங்காலம் முன் ஆவணி *மீ* சென்னபட்டணம் அய்யத்தம்பி வெங்கிடாசல பிள்ளை ரெண்டு காடி மாடும், வெள்ளி முஸ்தீதுடனே பேசி, ஒரு வெள்ளைக் குதிரை ஒண்ணும், நமக்கு வெகுமானமாக அனுப்பியிருந்த குதிரையும் பேரிலே ஏறிக்கொண்டு, கொட்டுபாளையத்திலே, வடக்கு வரும்படி பாளையக்காறன், ருமனுயக்கர் தளவாயாய் யிருக்கப்பட்ட ராமபத்திர பிள்ளை வீட்டுலே யிறங்கி யிருக்கிற, சவுபாக்கியவதி நண்ணுச்சியை பாத்து வருவொமென்கிறதாக பிறபட்டவுடனே, தயங்கம்பாடி கோட்டைக்கு எசமானுன தினமாற்க[51] பெரிய துரையும், மையொறும்[52], ரெண்டு பேரும் ரெண்டு குதிரையும் பேரிலே ஏறிக்கொண்டு, பிறையாத்திலெயிருக்கிற கும்பினீர் தோட்டத்திலேயிருந்து சவாரி பிறப்பட்டார்கள். அவர்களைக் கண்டு குதிரையை நிறுத்தி நிண்ணு ஆசாரம் பண்ணினேன். அவர்களும் குதிரையை நிறுத்தி நிண்ணு ஆசாரம் பண்ணினுர்கள். அவர்கள் மேற்கு முகமாக சவாரி போனுர்கள். ஞனும் கொட்டுபாளையத்துக்கு போய் ஏழு மணி வேளைக்கி வீட்டுக்கு வந்தேன். வந்தவுடனே நானிணைச்சது. புது குதிரையின் பேரிலே முதமுதலே ஏறிப் பிறப்படவுடனே ............ குதிரையுடனே எதிர்பட்டதும் பிறபு வர்றனுலே குதிரை மகா நெத்தியா ............ னுவுத்தியம் பண்ணினதும் பாத்தால் இனிமேல் சவுக ............ வேணுமென்கிறதாக யோசனை பண்ணினேன் ............ இந்த கஷ்டக்காலத்தை சுறுக்குலே போக்கடி ............ எதிருச்சு கொண்டு வருகுறேன். அய்யத்தம்பி ............ பிள்ளை அனுப்பின குதிரை முன்னூறு ரூபா பொறும் ............ திப்பு மாடு ரெண்டும் அறுபது ரூபாய் பொறும். நம்முட திருவேங்கடபுரம் அக்கிரூரத்துக்கு சொரொத்திரியமாக[53] நாற்பது வருஷமாய் நடந்து வந்த சேதுராப்பட்டு, புதுச்சேரிக் கோட்டையை இங்கிலீசுக்காரர் பிடிச்சுக் கொண்டபடியினுலே கோட்டையை சுத்தியிருக்கப்பட்ட கிருமங்களையும் சேதுராப்பட்டையும் கைப்பற்றிக் கொண்டார்கள். நாமும் அவடம் யிருக்குறத்துக்கில்லாமல் இவடம் வந்து விட்ட படியினுலேயும், வெகுநாளாய் நடந்து வந்த படியினுலேயும் விடப் போகாததெதுக்கு மேல்படி கிருமம் மணியம்[54] சாமினுத பிள்ளை கையிலே. இப்ப வழுதாவூர், வில்லியனூர், வானூர் இதுகள் அமில்[55] வாங்கி வந்த முன் பிருஞ்சுக்காறர் ஞளையிலே நம்மண்டையிலே அமில் பண்ணிக் கொண்டிருந்த அய்யன் சாஸ்திரியாருக்கும், வில்லியநல்லூர் சீமை ஞட்டு சிவனு ரெட்டியாருக்கும், ராமு ரெட்டியாருக்கும் சில்லறை ஞட்டார் சீனுவாச ரெட்டி, கொண்டா ரெட்டியாருக்கும் தற்மத்துடனே சேந்தது பிராமனுளுக்கு. வெகுஞளாய் நடந்து வந்தபடியினுலே எப்போதும் முன்பின் நடந்த பிறகாரம், நடப்பிச்சுக் குடுக்க வேண்டியதென்னும், முன் மேலே எழுதப்பட்ட பேர்களுக்கு காகிதங்களெழுதிக் குடுத்து பயணம் பண்ணி அனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ யரு உ மங்களவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ உஎ உ

கந்தப்ப முதலியார் தமையன், பூமியப்ப முதலியார் குமாரன், கந்தப்பனென்கிறவனுக்கு, மது மேக ஒழுக்கும், நீரிழிவும் பேரிலே கண்டு, வெகுனாளாய் ரெம்ப உபாதியாயிருந்து, நேத்து ருத்திரி பரமபதம் அடஞ்சான். அவனுக்கு ஆறு வயது ஆண் பிள்ளை ஒண்ணு. அவன் தகப்பன் பூமியப்ப முதலியார் மரக்காணத்தில் யிருக்கினுனென்று சொன்னுர்கள். ஆகையால் இந்தனுள் காலத்துக்கு ............ பண்ணத்தக்கதாக எருக்கட்டாஞ்சேரிக்கு போய் ச ............ ச்சிருப்போட்டு பதினெரு மணிக்கு வீட்டுக்கு வந்தோம்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ யசா உ புத்வாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ உஅ உ

இந்தனுள் காலமே, கொட்டுப்பாளையத்திலிருந்து சவுபாக்கியவதி நன்னுச்சி வந்தாள். சாயங்காலம் மதாம் பெடுத்தலெமி நாளைக் காலமே வந்து கண்டு பேசிக் கொண்டுப் போகச் சொன்னதாகவும் துபாசி வந்து சொன்னுன். உடனே நான் யோசனை பண்ணது ஒண்ணு, ............ யிடமே வந்து அழைக்க வேணும். யில்லாவிட்டால் .ள். பிள்ளையவர்கள் ஞளையக் குடுக்கல் வாங்கல் சம்மன்[56] (மேற்படி) அழைக்க வேணுமெண்ணும் யோசனை பண்ணினேன்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ யஎ உ குருவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ உகூ உ

இந்தனுள் காலமே, சாராயக்கிடங்கு திருபறளி கிஷ்ண பிள்ளை, செங்கல்பட்டுக்கு போய், சென்னபட்டணத்துக்கு போற படியினுலே, அவன் கையிலே முத்தப் பிள்ளைக்கு மனுவும், லிங்கத்தானமும் கூட அனுப்பிவிச்சோம். கூட வந்த பெண்டுகளும் அனுப்பிவிச்சுக் கொண்டு யெங்க மாட்டுக்காற ருமன்ன கையிலே யானைக்கார ஞயனுக்கும், முத்து வெங்கிட்ட ரெட்டியாருக்கும் காகித மெழுதி குடுத்து அனுப்பிவிச்சோம். நேத்திக்கு தயங்கம்பாடி கோட்டையிலே மதாம் பெடுத்தலெமியிடத்தில் போனபோது அவள் அன்னேரம் ஷாம்பூராக்குள்ளே[57] உடுத்திப் பாத்துக் கொண்டிருந்த படியினுலே, சாலையிலே நாற்காலியும் பேரிலே உற்க்காந்து கொண்டிருந்தேன். அப்போ ஒரு பெடுத்தலமி சேவுகன் முசெ தெசி என்கிறவன் வெளியிலேயிருந்து வந்தான். வந்தவுடனே அவனுக்காசாரம் பண்ணினேன். அவனும் ஆசாரம் பண்ணிப் போட்டு சாம்பிறுவுக்குள்ளே போனுன். அப்போ மதாம் பெடுத்தலமி உடுத்திக் கொண்டு, மருமகனிருக்கிற சாம்பிறு[58] வாசப்படி யண்டையிலே போய், அவனும், இவளும் அவடத்திலேயிருந்து நடுச்சாலையிலே போனுர்கள். நான் போய் ஆசாரம் பண்ணிணேன். அவளும் ஆசாரம் பண்ணி நாற்காலியும் பேரிலே உற்காரச் சொல்லி போட்டு, தாங்களும் உற்க்காந்தார்கள். அப்போ பேசிக் கொண்டிருக்கச்சே, எனக்கு றங்கப்பன் கொடுக்க வேண்டிய பணத்துக்கு சம்மதி பண்ணக் கவையில்லையா வெண்ணு கேட்டாள். அதுக்கு நான் சொன்னது. இப்போ என் மாற்கம் பாற்குறது. சகல சோபாரமும் கொள்ளை

பெரியதாயிருக்கச்சே, இந்தக் கசியாமிலே என்ன மாற்கம் பாற்கத் தக்கதுயிருக்குது. சகலமும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் போலே ஆச்சுதே. நான் சொல்ல வேண்டியதென்ன யிருக்குதுவென்னு சொன்னேன். அதுக்கவள் சொன்னது. எனக்கு வர வேணடிய விடத்திலே எல்லாரும் யிப்படித்தான் சொல்லுகிறுர்கள். நானுமவடத்திலே வீடு வாசல் சகலமும் போக்கடிச்சுக் கொண்டு வந்திருக்குறேன். நான் குடுக்க வேண்டியவர்கள் விட்டு வச்சு இருக்கிறுர்கள். இப்போ இவடத்திலே அவரவர்களுக்கு நான் குடுக்கயில்லேயா? இப்படி அவரவர்களுக்கு யிருக்கிறது தான். இப்போ எவ்வளவாகிலும் குடுக்க வேணுமெண்ணு சொன்னுள். முசெ தெக்கிருய் யிருந்து கொண்டு உங்களுக்கு மூணு மகசென்களிலே சரக்குகிருக்கிறதாய் கேழ்விப்பட்டோம். ரொக்கமில்லாதே போனுலும் சரக்காகிலும் எவ்வளவாகிலும் குடுயென்று கேட்டான். அதுக்கு நானிருந்து கொண்டு அந்தக் கிடங்கு சாவியை உம்முட கையுலே குடுக்கிறேன். இப்ப தானே நீர் வந்து திறந்து பாத்து, என்ன சரக்குயிருக்குதோ அதை நீரேயெடுத்துக் கொள்ளும். நான் தடை சொல்லத் தக்கனதில்லே. எங்களுக்கு ஒரே கிடங்கு. அதிலிருக்குறது பெட்டிகள், கண்ணுடிகள் பின்னும் வீட்டு சாமானுகளே யல்லாமல் வேறே பின்ன ஒண்ணுமிருது. உமக்கு ஆர் சொல்லியிருக்குறுர்களே அவர்களை நீர் நண்ணு விசாரிச்சு அறிஞ்சுக் கொண்டு, எங்கு சரக்கிருந்தாலும் எடுத்துக் கொள்ளும் என்று சொன்னேன். அதிலே அவனிருந்து கொண்டு, நான் முன்னே புதுச்சேரியிலே, றங்கப்பன் சிலவுக்கு வேண்டியிருக்குது அன்பது ரூபாய் மாத்திரம் குடு என்று கேட்டதற்கு எங்களுக்கே யிந்தவேளை ரொம்ப முத்திகையாய் யிருக்குது பரிச்சேதம் அகப்படாதென்று சொன்ஞன். பிற்பாடு ஒரு ஒப்பிசியெண்ணுலே ஞற்பதுணுயிரம் விருகன் மட்டுக்கும் தட்டுமுட்டும் ............ ரொக்கமாய் சலங்கும் பேரிலே அனுப்பினதை இங்கிலிசுக்காறர் எடுத்துக் கொண்டார்களே. அப்போ ஞன் அன்பது ரூபாய் கேட்டதுக்கு அவகாசமில்லே யென்று சொன்ஞனே. இந்த தட்டுமுட்டு இப்பே எங்கேயிருந்து வந்ததுன்னு சொன்ஞள். அதுக்கு ஞன் சொன்னது. அவர் ஞளையிலே என்ன நடந்துதோ என்ன சொன்னஞரோ, அவர் ஞளைய கணக்கு வழக்குகள், குடுக்கல் வாங்கல், சங்கதியுடனே சேந்தது. நானுனென்னு மறியேன் யென்னு சொன்னதுக்கு, நல்லது; நீ வீட்டுக்கு போவென்னு சொல்லி போட்டு, முசே தொத்தல் வீட்டுக்கு, விருந்து சாப்பாட்டுக்கு போனுள். அப்போ முசே தெசியுடனே நான் சொன்னது. மதாமுடனே ஆர் வந்து என்ன பிஞத்திஞர்களோ தெரியாது. அதைப்பிடிச்சுக் கொண்டு சரிப் போனபடி எல்லாம் சொல்லுகிறுர்கள். இந்த சங்கதிகளெல்லாம் அவர் என் மனுஷஞரானபடியிஞலே அவர் ஞளையிலே குடுக்கல் வாங்கல் கணக்கு வழக்குகளுடனே யிந்த சங்கதிகளஞென்னு அறியேன். அந்தக் கணக்கப்பிள்ளை, காரியக்காறன் இங்கு ஆருமில்லே. கணக்கு வழக்கு சீட்டு ஞட்டுகளுடனே சேந்தது. இவடத்திலே சிறுது வந்தும், சிறுது வராதேயும் இருக்குது. இது சங்கதி இப்போ அறிய வேணுமென்ஞல் கணக்குப்பிள்ளை, காரியக்காறன், கணக்கு வழக்குகளையும் அழைச்சு பார்த்தறிய வேண்டியதே யல்லாமல் மைத்தப்படி தெரியாது அல்ல வெண்ணும், குடுக்க வேண்டியிருந்தால், குடுக்கிறது வாங்கினதுக்கும் இது காலமா? இந்தப் பிறதேசத்தில் காலமே போருததாய் யிருக்கிறது. உங்களுக்காருவது வந்து சொல்லியிருக்குறுர்களா? அதை விசாரிச்சுயிருந்தால் ஏட்டிக்கு போட்டியாய் சம்மதி பண்ணுகுறேும். இப்பவும் மதாமுக்கு நான் சொன்ன பிறகாரம் வசிதமாய் நீரெப்படி தெரியப்பட சொல்லவேணுமோ அப்படி சொல்ல வேணுமென்னு சொன்ன{த்}துக்கு, அப்படியே சொல்லுகுறனென்று சொன்ஞன். அதும்பேரிலே அவனை அனுப்பிவிச்சுக்

கொண்டு பிறையாத்துக்கு வந்தேன். இந்தனுள் சாயங்காலம் அஞ்சு மணிக்கு தயங்கம்பாடி சின்னத்துரை வொறடத்திலே தயங்கம்பாடி கொவுற்ணதோரா யிருக்குருன்கிற சேதி கேட்டு அவரைக் கண்டு பேச வேணுமென்று போனவிடத்திலே, துரையும், சின்னத் துரையும், பின்னும் ரெண்டு கொமுசலியேரும், நாற்காலியும் பேரிலே உற்கார்ந்து பேசிக்கொண்டிருக்கச்சே, ஞன் போய் ஆசாரம் பண்ணினேன். அவர்களெல்லாரும் எழுந்திருந்து றெம்ப ஆசாரம் பண்ணி, நாற்காலியும் பேரிலே உற்காரச் சொல்லி, தாங்களும் உற்காந்தார்கள். துரை யிருந்து கொண்டு இவடத்திலே வந்த விடத்திலேயும் உங்கள் மனதுக்கு றெம்ப கிலேசம் வந்துது என்று உபசாரம் சொன்ஞர். அதுக்கு நான் சொன்னது. எங்களுடைய அதிஸ்டம் எசமான் அவடத்திலே போயும், இவடம் வந்த விடத்திலே, பிள்ளையாண்டான் கூட்டியிருக்கிறதுக்கு எங்களுட கஷ்டகாலம். அப்படியிருக்குதென்று சொன்ன பிற்பாடு வேலூர்ச் சேதி என்ன? என்று கேட்டார். அதுக்கு ஞன் சொன்னது. ஞன் கேட்ட சேதி வேலூர் மிறுத்தி சல்லிகான் சமாதானமாய் போக வேணுமென்கிறதுனலே மமுதல்லிக்கு ருசா விட்ட ............ ம்மமுதலிகான் சொன்னது. பதிமூனு லஷ்சம் ரூபாயும் அமில்தார் மிறுத்தி சல்லிகான் குமாரத்தியையும் குடுத்து, கோட்டையிலே டாணு கூட போட்டு, வேணுமென்னு சொல்லி யனுப்பினதாகவும், கோட்டைக்கு வெளியிலே யிறங்கியிருக்கிற இங்கிலிசுக்காறர்களுக்கும், மிறுத்திசல்லிகான் வெளியிலே வந்து, மமுதல்லிக்கு சொல்லி அனுப்பினதுமில்லாமல், நீங்கள் கேழ்க்கற மட்டுக்கும் என் கையிலே யில்லே. லஷ்ஷம் ரூபாயும், யென் பெண்ணும் தருகுறேன். கோட்டையிலே உங்கள் டாணு[59] போடக்கூடாதென்றும் கோட்டையிலே உள்ள டாணு போட்டதுண்டானல், ஞன் வெளியிலே அல்லவா வரவேணும் என்று சொல்லி அனுப்பினதுக்கு, ம்மமுதல்லி சம்மதிக்காமல், கோட்டைக்கு தெக்கலாரிட்டு மோற்சா போட்டு, சண்டை பண்ணுகுறது என்னு சொன்னதுக்கு எவ்வளவு ராணுவுண்டெண்ணு கேழ்குருர்னென்னு கேட்டார். ரெண்டாயிரம் சொல்தாது, மனுஷர், சிப்பாய்கள் உண்டெண்ணு சொல்லுகுருர்களென்று சொன்னேன். கோட்டையிலே எவ்வளவு உண்டென்று சொல்லுகுருர்களேன்னு கேட்டார். அதுக்கு ஞன் சொன்னது. மிறுத்திசல்லிகான் சண்டையிலே துணிஞ்சுதானிருக்குருன். கோட்டையிலே ரஸ்து[60] தாட்சியில்லாம யிருக்குது. பீரங்கி சுடுகிறதுக்கு மனுஷர் அன்பது பேர், கம்மாள ரிருக்குருர்கள். உள்ள மட்டும் ராணுவம் யிருக்குது. நவாயித்துக்காறருக்கு அங்கே கோட்டை தவிர வேறே கோட்டையில்லாதபடியினுலே கொடுக்க சத்திலே விடத்தக்கதில்லே என்னு சொன்னதுக்கு, ஞனும் யிப்படி காபுறு கேழ்விப்பட்டேனென்னு சொன்ஞர். பிற்பாடு சந்தாசாய்பு பெண்சாதி சமாசாரம் என்ன என்று கேட்டார். ஞன் சொன்னேன். புதுச்சேரிக்கு கோட்டை, விட பத்து ஞளைக்கு முன்னே, ருத்திரி பிறகேத்தேறி[61] திருட்டுதனமாய் இங்கிலிசுக்காற கப்பலுக்கு தெரியாமல் பாயெடுத்தோடி வந்து நாகப்பட்டணம் துறையிலே யிறங்கி, அவடத்திலும் யிருக்கிறதுக்கில்லாமல் யாழ்ப்பாணம் போய் சேந்தாளென்னும், சந்தாசாய்பு பெண்சாதியை ம்மமுதலிகான் தானிருக்கிற யிடத்துக்கு வந்திருக்கச் சொல்லி அழைச்சான். ஞன் உன் கீழே வந்திருக்கிறதில், சென்னப்பட்டணம் போயிருக்க போறேனென்று சொன்ஞள். ஆனல் உனக்கெங்கே சரிப் (போறதுக்குதோ) அங்கே போயிரு என்று சொன்ஞன். இப்பவும் தன் தட்டுமுட்டுடென சென்னபட்டணத்திலே போயிருக்குருள். அவர்களுக்கு இங்கிலீஸ்காறரும் மரியாதை நடப்பிச்சுக் கொண்டு

வாரூர்களெண்ணு சொல்லி, லோகாபிரமமாய் பேசிக் கொண்டிருந்து பிற்பாடு துரையுடனே ஞான் சொன்னது. தாங்களுடனே ஞலு விசேஷம் தனிச்சுக் கொண்டு பேச வேணுமென்று கேட்டுக் கொண்டவுடனே எழுந்திருந்து, யிப்பால் வந்து என்ன சங்கதி? என்னு கேட்டார். எங்களுடைய அன்னிதத்தை இதுவரையிலே தங்களுடனே சொல்லிக் கொண்டதில்லேயே. ஆகையால் தாங்கள் யிதுகளெல்லாம் அறிந்திருக்க வேணுமெண்ணு சொல்லி, தங்களுடனே சொல்ல வந்தேன். தாங்கள் தயவு பண்ணி கேழ்க்க வேணுமெண்ணு சொல்லி புதுச்சேரியிலே எங்கள் தகப்பஞரிருக்கிற போது சீமா மூலச்சங்கதிகளிலேயும், வற்த்தக சங்கதிகளிலேயும், கும்பனிச் சங்கதிகளிலேயும் பின்னும் வெள்ளக்காறர் சங்கதிகளிலேயும், நாங்கள் குடுக்க வேண்டியதுமுண்டு அவர்கள் குடுக்க வேண்டியதுமுண்டு. இதுகளெல்லாம் அவர் யறிஞ்ச சங்கதிகளே யல்லாமல், நாஞெென்னு மறிஞ்சதில்லே. அல்லவென்னு [[ ம்]] ஒரு சங்கதி யறிய வேணுமென்ஞல் சிறுது கணக்கு இவடத்திலேயிருக்கிறது. சிறுது வெளிகளிலேயிருக்கிது. இதுகளெழுதின கணக்கப்பிள்ளேகள், காரியக்காறர்கள் கலாபத்துஞலே ஞலாயிடங்களிலே இருக்குஞர்கள். இதுகளெல்லாம் சேர படிச்சு விசாரிச்சு அறிய வேண்டியது. அல்லவென்று குடுக்கிறதுக்கும் வாங்கிறதுக்கும் இப்போ எங்களுக்கு ஞஞ விதமாய் வந்த சேதிகளும் தாங்கள் கேழ்விப்பட்டிருக்கிறீர்கள். ஆகையால் இவடத்திலே ஆராகிலும் குடுக்க வேண்டியவர்கள் வாங்க வேண்டியவர்கள் வந்து சொல்லிக் கொண்டது உண்டாஞல் நாங்கள் தகாஷ்[62] பண்ணி சொல்ல வேண்டியது. புதுச்சேரிக்கு பிருஞ்சுக்காறன் நிஜேச்சபடி வரப்பட்ட குடுக்கல் வாங்கல் கணக்கு வழக்குகள் பேசித் தீத்துக் கொள்ளுகிறதே யல்லாமல் இவடத்திலே தாங்கள் இடங்கொடாமல் சொல்ல வேண்டியதென்னும் உபசாரமாய் சொல்லி கொண்டதுக்கு அவரும் அப்படியே செய்யுரேம். நீங்களொண்ணுத்துக்கும் யோசனேபண்ண கவையில்லேயெண்ணு உபசாரமாய்ச் சொல்லிப்போட்டு கோட்டைக்குப் போய் விட்டார். ஞனும் யனுப்பிவிச்சுக் கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

இந்தஞள், மாயவரத்திலேயிருந்து குலசேகரம் வெங்கிட்ட ஞருனப்பையர் வந்து சொன்னது. ஞன் முத்து மல்லா ரெட்டியாரண்டே போயிருந்தேன். அங்கே நடந்த பிறஸ்தாபம் யென்ணென்னு சொன்னது. பிள்ளேயவர்க்கும் உங்களுக்கும் வெகுநாளாய் அனேகம் கிறத்தியமாய் அன்ஞேன்னிய ஸ்னேகிதமாய் இருக்க பிள்ளேயவர்கள் காலம் பண்ணி போன போது உங்களுக்கு காகிதமெழுதியிருக்க, ஒரு மனுஷராகிலும் ஒரு காகிதமாகிலும் அனுப்பாமல் போனீர்கள். பிற்பாடும் சிறுது சங்கதிகளுக்கும் காகிதம் யெழுதியிருந்தும் அதுக்கும் தாமிஷம் பண்ணீர்கள் யெண்ணு சொன்னத்துக்கு அவர் சொன்னது. அப்போ யெனக்கு மெத்தப் பிறமையாயிருந்தது. இவடத்துயானவர்களும் ரொம்ப நோவுட்டு களஞ்சிருந்தது. அதுஞலேயே அப்படியிருந்தது. ஆஞல் இனிமேல் நடக்குங் காரிய கிரிகைகளிலே தெரியப்போகுது. இப்போ ஞன் என்ன சொன்ஞலும் நிசமாகாது எண்ணும் இதுக்கு அடுத்ததாய் பின்னும் பரிகார உத்தரவுகளும் உபசாரமாய் சொன்னதாக சொன்ஞர். மத்தியானத்துக்கு மாயவரத்துக்கு போய் பத்து ஞளேயிலே வருகுரேமெண்ணு சொல்லி அனுப்பிவிச்சுக்கொண்டு போஞர்.

## விஷ ஞ அற்ப்பசி மீ யஅ உ சுக்கிறவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ ஙய உ

இந்தனாள், வழுதாவூர் சீமை னாட்டு மடுக்கொறை ராமு ரெட்டியார் குமாரன், அண்ணாசாமி காலம் பண்ணிப் போனதுக்கு, துக்கம் விசாரித்துப் போட்டு எருக்கட்டாஞ் சேரிக்குப் போனான்.

## விஷ ஞ அற்ப்பசி மீ யகூ உ சனிவாரம் : சதளளசாயக ஆண்டு, ஒயித்தெம்பர் மீ ஙக உ

திருப்பாபூரிலிருந்து சக்கரையப் பிள்ளை, அக்கப் பிள்ளை கையிலே காகிதமனுப்பிவிச்சார். அந்த காகிதத்தில் அண்ணாசாமி காலம் பண்ணிப் போனதுக்கு உபசாரமெழுதி முன் புதுச்சேரி வறதராச பெருமாளுக்கு சம்பாஷணைப் பிடித்தம் நடக்குறதுக்கு விசுவனாத ரெட்டியார், சிவனாத ரெட்டியார் பின்னும் அவடத்திலிருக்கப்பட்டவர்களுக்கு சிபாரிசு காகிதம் மெழுதி அனுப்பினதுக்கு, அவர்கள் நடப்பியாத படியினாலே நாம் திருவந்திபுரத்துக்குப் போயிருந்து சம்பரோஷவணம் மத்ததும் நடப்பிக்க தாம் நடப்பிக்குறதுக்கும் மாற்கம் பண்ணினேன் யெண்ணு எழுதியிருந்தது.

## விஷ ஞ அற்ப்பசி மீ உய உ ஆதிவாரம் : சதளளசாயக ஆண்டு, னொவெம்பர் மீ க உ

இந்தனாள் காலத்தாலே, சிதம்பரம் பஞ்சமால், திருவதி பஞ்சமால், குத்தகை வாங்கின சாமருயன் பறங்கிப்பேட்டையிலிருந்து அற்காறுவு[63] அனுப்பின காகிதம் வந்துது. அந்த காகித வயணம். அண்ணாசாமி காலம் பண்ணி போனதுக்கு உபசாரம் எழுதியிருந்துது. நரசிங்கராயர் அனுப்பின காகிதத்திலேயும் உபசாரம் எழுதி, பறங்கிப்பேட்டை நிலுவைச் சம்மதிக்கு சாமாருயனுக்கும் காகிதம் எழுதி அனுப்பச் சொல்லி எழுதியிருந்துது. நமசிவாயமும் யெழுதி அனுப்பின ஒலையிலே நமக்குச் சேந்திருந்த முத்தப்ப முதலி வீட்டுக்கு இவன் இச்சைப்படிக்குத் தான் குடியிருக்க போறேமென்று தகருரு சொல்லுகிறதாகவும் பின்னும் சிறுது பேர் தீந்து போயிருக்கிற சங்கதிகளுக்கு கூட, தகருறு சொல்லுகுறதாகவும் இதுகளுக்கெல்லாம் சாமருயருக்கு காகிதமெழுதி அனுப்பச் சொல்லியும் எழுதியிருந்தது. நரசிங்கராயருக்கு ஒரு காகிதமும் நமசிவாய முதலிக்கு ஒரு காகிதமும் எழுதி அற்காறு கையிலே குடுத்தனுப்பிவிச்சோம்.

## விஷ ஞ அற்ப்பசி மீ உக உ சோமவாரம் : சதளளசாயக ஆண்டு, னொவெம்பர் மீ உ உ

இந்தனாள் மத்தியானம், மடுக்கொறை ருமு ரெட்டியார் குமாரனுக்கு விருந்து பண்ணிவிச்சோம். இந்தனாள் சாயங்காலம், சக்கரையப் பிள்ளைக்கு உபசாரமாய் காகிதமெழுதி அக்கப் பிள்ளை கையிலே கொடுத்தனுப்பி விச்சோம். சவுபாக்கிவதி நன்னாச்சி கொட்டுப் பாளையத்துக்கு போனாள்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ உஉ வ மங்களவாரம் : சதளளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ ங வ

இந்தனுள் .எ. பிள்ளையவர்கள் மாசிகம் இத்தினி ஞள் பண்ணிக் கொண்டு வந்த அண்ணுசாமி காலம் பண்ணிப் போனபடியினுலே சிரஞ்சீவி அய்யாசாமியைக்[64] கொண்டு பண்ணிவிச்சோம். ஞகப்பட்டணம் சின்ன ஞயக்கர் அண்டையிலேயிருந்து சுப்பா சாஸ்திரி காகிதம் கொண்டு வந்து குடுத்தார். அந்த காகிதத்திலே (மேற்படி) சமாச்சாரம்[65] யெழுதியிருந்தது. கந்தப் பிள்ளைக்கும் காகிதம் யெழுதி கொண்டு வந்து கொடுத்தார்கள்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ உங வ புத்வாரம் : சதளளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ ச வ

இந்தனுள் காலமே, ஞகப்பட்டணம் சின்ன ஞயக்கரண்டையிலே யிருக்கிற சுப்பா சாஸ்திரியார் கொண்டு வந்த காகிதத்தில் யெழுதியிருக்க கூடிய லாபம் எழுதி அனுப்பிவிச்சதுக்கு, ஞமும் உபசாரமாய் மேற்படி யெழுதி யனுப்பிவிச்சோம். முன் விக்கிரம ஸ்ரீ அற்பசி மீ, கோட்டையை யெடுத்தபோது கோட்டைக்குள்ளே யிருக்கக்கூடாத படியினுலே வெளியிலேற்றப்படுகிறதுக்கு, இங்கிறிசுக்காறர் எங்கும் சுத்திக் கொண்டு, கஷன் வைச்சுக் கொண்டிருந்தபடியினுலே, முசெ லாலி வெளியே போகச் சொல்லி பலவந்தம் பண்ண படியினுலே, வெங்கடாசல அய்யன் முன்னிலையாய் மேஸ்தர் கற்னுல் கூட்டை கண்டு பேசி, ஞலு டொலியும் சிறுது பேரும் போகத்தக்கதாக உத்தரவு அழைப்பிச்சுக் கொண்டு, பெண்டுகள் பிள்ளை போனயிடத்திலே அனுசரணை பண்ணி தண்டுலே வைச்சுக் கொண்டு ரெண்டாயிரம் வருகன் குடுத்தாலேயல்லாமல் விடுகிறதில்லை என்று சொன்னபடியினுலே சத்துரு கையில் அகப்பட்டு கொண்டபடியினுலே, ரெண்டாயிரம் வருகன் தயங்கம்பாடி போய் சேர்ந்த பிற்பாடு தருகுறேமென்னு சொல்லி, அதுவரைக்கும் நமுஞ சாமீன்[66] சிதம்பரஞத பிள்ளையை வைச்சுப் போட்டு, பெண்டுகள் பிள்ளைகளெல்லாம் தயங்கம்பாடிக்கி வந்த பிற்பாடு அவர்களுக்கு செல்ல வேண்டிய பணத்துக்கு அன்னேரம் யிருக்கிரதல்லாத படியினுலே ஞகப்பட்டணம் பெரிய துபாசி சக்குலூ ஞயக்கர் கையிலே ரெண்டாயிரம் வருகன் வாங்கி கொடுத்து அந்த பணத்துக்கு கந்த பிள்ளை சீட்டெழுதி குடுத்திருந்த படியினுலே அந்த பணத்துக்கு அவரவர் பேருக்கு தங்களுக்கு பண்டமாற்று குடுத்து அனுப்பினுமென்று எழுதி அனுப்பிவிச்சார். கந்தப் பிள்ளையவர்கள் அந்த கடுதாசியை கொடுத்தனுப்பி யிதுக்கு பதிலுத் தரவு யெழுதி அனுப்பிவிக்கச் சொல்லி அனுப்பிவிச்சார். அந்தக் கடுதாசியை வைத்துக் கொண்டு பதில் அனுப்பிச்சதாகவும் இருக்கிற வேளை சமயங்கள் தெரிந்திருந்து தாங்களெழுதி அனுப்பிவிச்சதுண்டானுல் ஞமெழுதி தக்கதென்ன யிருக்குது. அப்படி சத்து லகுவாயிருக்குமானுல் தாங்கள் கேட்டனுப்பின மட்டுக்கும் வைச்சுக் கொண்டிருக்கத் தக்கதில்லை. இப்பவும் காரிய பாகங்கள் மாறப்பட்ட துண்டானுல் தாங்களுக்கு சேந்து போடுவோம் அல்லாமல் நிக்கத் தக்கதில்லையென்னும் யிதுக்கடுத்த ஞாயமாய் உபசாரமாய் எழுதி, கந்தப் பிள்ளை அவர்களண்டை அனுப்பிவிச்சோம். அவர் அந்த காகிதத்தை சின்ன ஞயக்கர் யவர்களண்டை அனுப்பிவிச்சார். இந்த ரெண்டாயிரம் வராகன்லே மேஸ்தர் கற்னுல் அயர்கோட்[67] யவர்களுக்கு சொன்னது. ஆயிரத்தொண்ணூறு போக, குறை யிறனூறு ஆகனும்.

சிதம்பரனுத பிள்ளையிடத்திலே இருந்தது. இந்தனுள் மத்தியானம், பதினெரு மணிக்கு சவுபாக்கியவதி பொன்னுச்சி ஒரு மாசமாய் சரீர சொஸ்தமில்லாமலிருந்து சொஸ்தமாயி, ஸ்நானம் பண்ணி ஆரோக்கியமாயிருக்கிற படியினுலே, சந்தை வெளித் தெருவிலே யிருக்கிற வீட்டுக்குப் போனுள்.

## விஷ ஸ்ரீ அற்ப்பசி மீ௳ உச, உசா ௨ குருவாரம் சனிவாரம்: சதஎளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ ரு, எ ௨

தீவுக்கோட்டை[68] குமரப்ப முதலியாருக்கு சக்கரைபிள்ளை அனுப்பிவிச்ச காகிதமும் நாமும் ஒரு காகிதமெழுதி அன்னப்பன் கையிலே குடுத்து அனுப்பிவிச்சோம். இந்தனுள் மத்தியானம், பனிரெண்டு மணிக்கு ஞகப்பட்டணத்திலேயிருந்து வெங்கிடராமனுயக்கரும் அவருடனே கூட பேர்விளங்கான் ஒருவனும், ஒரு சேவுகனும், கந்தப் பிள்ளை பேருக்கு ஒரு காகிதமொண்ணு கொண்டு வந்ததை படிச்சுப் பாத்துக் கொண்டு, முத்து அவர்களை சாயங்காலம் அழைத்துக் கொண்டு வந்து விட்டு சொன்னதென்னவென்ருல், பணத்துக்கு அவசரமிருக்குது. எப்படியாகிலும் பாத்து அனுப்பிவிக்கவேணுமென்னு யெழுதினுர்களென்று சொன்னுன். ஞமும் அவர்களுடனே லோகாபிரம்மாய்[69] பேசியிருந்து வீட்டுலே தானே அவர்களுக்கு சாப்பாடு முஸ்தீது பண்ணி, சாப்பாடு பண்ணிவிச்சோம். ஆனுல் அவர்கள் சொன்னது. எங்கள் பேரிலே ருச காரியம் பண்ணிக் கொண்டிருந்த கொவர்ணதோர் மனேபனெர் யென்கிறவர் (மேற்படி) மீ௳ யங ௨ முன் ஒயித்தெம்பர் மீ௳ உயரு ௨ ஆதிவாரனுள், கொழும்புக்கு துரைத்தனமாய் கப்பலேறிப் போனுர். இப்ப துரைத்தனம் பண்ணுகிறவர் மனெர் பந்தெல். அவருடைய காரியம் யினிமேல் அறிய வேண்டியதெண்ணும் போலே சொன்னுர்கள்.

## விஷ ஸ்ரீ காற்த்திகை மீ௳ யஉ ௨ குருவாரம்: சதஎளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ யஉ ௨

இந்தனுள் சந்திரகிருணம். சாயங்காலம் யிருபத்து ரெண்டரை ஞழிகைக்கு மேல் சரி சாம ருத்திரி, மூணு ஞழிகைக்கு முன்னே, ஒண்ணே முக்கால் கிருணம். மழை தூரிக் கொண்டே இருந்துது.

## விஷ ஸ்ரீ காற்த்திகை மீ௳ எ ௨ புத்வாரம்: சதஎளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ யஅ ௨

இந்தனுள் காலத்தாலே முன் மீ௳ உய ௨. ஞகப்பட்டணம் சின்ன ஞயக்கர் அண்டையிருந்து அனுப்பிவிச்சு வந்திருந்த வெங்கிடராம ஞயக்கருக்கு காதிமெழுதி அனுப்பிவிச்சோம். அந்த காகிதத்திலே எழுதி அனுப்பினது யெண்ணவெண்ணுல், திருவமுடையா பிள்ளையவர் பேருக்கு யெழுதி அனுப்பிவிச்ச வர்த்தகம் தெரிய வந்தது. கால தேச வர்த்தகம் சகலமும் தங்களுக்கு தெரிஞ்சிருக்கு ருப்போலே. யெப்படி யெங்காகிலும் யெங்கள் தேசத்து யினங்கள் சவுதரிக்கவுடனே யெமக்கு சேந்து போமே அல்லாமல் நிற்க தக்கனதில்லே. தெரிஞ்சறிவிக்க அன்னுருக்கு நாம் விசேஷிச்சு யெழுத வேண்டியதென்ன யிருக்குதென்னு எழுதி அனுப்பிவிச்சோம்.

இந்தனுள் மத்தியானம், முசே போலோ அவர்கள் பெயருக்கு, நம்முட தட்டுமுட்டு இங்கிறிசுக்காறர் எடுத்துக் கொண்ட சங்கதியும், நம்முட கிறயத்துடய சங்கதியுமா யெழுதி, மலேயப்பன் கையிலே குடுத்து ருகப்பட்டணத்துக்கு அனுப்பிவிச்சோம். முன் அற்பசி மீ௳ உயச உ ருச கோபால ருய்க்கர் எழுதி யனுப்பிவிச்ச காகிதத்தில் பெருமுக்கல் கில்லேதார்[70] மீர்சாய்பு காலம் பண்ணிப் போனதாய் எழுதி வந்துது. சென்னப்பட்டணத்திலேயிருந்து முத்தப் பிள்ளேயவர்கள் முன் மீ௳ உயரு உ எழுதின காகிதம் தயங்கம்பாடி கும்பனீர்ச் சேவுகன் கொண்டு வந்து குடுத்தான். அதில் எழுதியிருந்தது. தட்டுமுட்டென சேந்த சங்கதிக்கு, சென‌றல் லார்னெட்டுடனே கண்டு பேசியிருக்கிறதுக்கு. அவர் காரியத்தும் பேரிலே அலுவலாயிருக்கிற படியினுலே, பத்து ருள் செல்லுமெண்ணும், மேஸ்தர் திறெக்கியோர் கொமுசேலியேற் வருகிறதிலே நம்முட தட்டுமுட்டுகளே வாங்கிக் குடுத்தால், கால்வாசி அவரை வச்சு குடுக்குறுமென்னும், அவர் நாளேய திங்களுக்கு குமுசேல் கூடுறதுனுலே பொறுங்கோளென்று சொல்லியிருக்கிருர். இவடத்திலே போன, ஒண்ணு ஒண்ணரை மாசமாய் குமுசேல் கூடகிறதில்லே. குமுசல் கூடின உடனே குமுசேலுக்குக் காகிதம் போட்டு, அறிஞ்சு பாத்து வருகிறதென்னும், பாளேயக்காற பெத்து ருயக்கன் நமக்குக் குடுக்க வேண்டிய இறுனூறு வருகன் சம்மதிக்கு எங்களுக்கு கண்டு பேசினதுக்கு, அவர் குமாரன் சொன்னது. .ள. சேஷாத்திரி பிள்ளே மகரீபத்திலே ஒரு பைகோவுக் குதிரை அனுப்பியிருக்கிறும். சீட்டு மாத்திரம் வர வேணுமெண்ணு சொன்னதாகவும், ருகலிங்கம் சம்மதி. பிள்ளே அவர்கள் மோசம் பண்ணுருர். ஆகையால் தானும் மோசம் பண்ணவேணுமென்குறதாய் கேட்டபடியெல்லாம் யெழுதிக் குடுத்தேனென்னும், நீங்கள் முத்திரையை ஒடைச்சு தட்டுமுட்டுகளெல்லாம் யெடுத்து உருக்கிக் கொண்டீர்களென்னும், அதுக்கு வந்த ஞாயம் இதுக்கும் வரட்டுயென்னும், ரெண்டாயிரம் வருகன் உடமை உருக்கி யெடுத்துக் கொண்டு இருக்கிறீர்களென்னும், இதுக்கு பொன்மலேப் பிள்ளே கையெழுத்து இருக்குதென்னும், அதை நீங்கள் உத்தரிச்சு உங்கள் உடமை யிருக்குறதை வாங்கிக் கொள்ளுங்கோளென்னும், இப்படியாக வெங்கடாச்சல பிள்ளே, சீத்தாராமப் பிள்ளே பிலன் கட்டிக்கொண்டு, இப்படி விஷேசம் நடத்தி தங்களுக்கு காலமிருக்குது என்று நடப்பிக்குருர்கள். அதுக்கு நாம் சொன்னது. உனக்கேது உடமை? இந்த உடமைக்கு எசமான் கந்தப்ப பிள்ளே. யிதும் எங்களதும் கனகம்மாள் உடமை. யொருவேளே அதுமாத்திரம் இவனேச் சேருமே யல்லாமல் மைத்ததுக்கிவனுக்குள்ள கென்ன கவை யிருக்குது? இந்த உடைமை கந்தப் பிள்ளே முத்திரையும் அவர் கணக்கப் பிள்ளே கையெழுத்தும் இருக்க, கனகம்மாள் காலம் பண்ணி போன பிற்பாடு இவருக்கு யெழுதி யனுப்பினதும், இவர் அனுப்பின பதிலு தரவும் இருக்க இவன் முத்திரையை உடைச்சு திருட்டுத்தனமாய் கொண்டு வந்ததுக்கு, அவன் கையெழுத்து ஒட்டம் விட்டு காண்பிச்சு இருக்க, இவன் யெந்த விதத்திலே குடுத்தாலும் வெங்கிடகிஷ்ண பிள்ளே உத்தரவாதம் பண்ணுவார். ருகலிங்கம், சேஷாத்திரி பிள்ளே அவர்கள் சீட்டு ருட்டு சகலமும் உத்தரவாதம் இவன் பண்ணவேணுமென்னு சொல்லி, ருலு பேர் பெரிய மனுஷரும் உறவின் முறையாரும் அறியச் சொல்லி யிருந்தோம். அப்படியிருக்க உறவின் முறையாரை ரெண்டு தரம் கூட்டி அவர்கள் முன்னிலேயாய் குடுக்கவாகிலும், அவர்கள் வசம் பொதுக்கட்டாவாகிலும் சொன்ஞர். அவர்கள் இதெல்லாம் கேட்டு உடமை குடுக்க கூடாது. னச்சின பிள்ளேக்கு யெழுதி யனுப்பி அவரையும் அழைப்பிச்சு, முத்தையும்

கூட வச்சுக்கொண்டு, அவரவர்களது அவரவர் சேர வேண்டியது. உடமை உம்முட வசத்திலே இருக்க, யகூ ௨ காலமே, வெங்கிடகிஷ்ண பிள்ளை தம்பி மகன் வந்து கூட்டி கப்பித்தானுடனே ஞகலிங்கம் கொண்டான். இந்த உடமையைக் கொண்டுவரச் சொன்ஞன். இப்போ கொண்டு போஞலும் தங்களையும் அழைச்சு கேழ்ப்பானென்னு சொன்ஞன். ஆர் கையிலே குடுத்தாலும் வெங்கிடகிஷ்ண பிள்ளை உத்தரவாதம் பண்ணுவாரெண்ணு சொன்ஞேம். அப்படியிருக்க, உடமையை கொண்டுபோய் வெள்ளைக்காறன் வசத்திலே வச்சு, ஊச்சின பிள்ளை அண்டைக்கும் மனுஷரை அனுப்பி, நம்மண்டைக்கும் மனுஷரை அனுப்பி, உங்கள் உடமை இதிலே யிருக்குறதை யெடுத்துக் கொள்ளுங்கோளெண்ணு சொன்ஞர்கள். அதின்பேரிலே அவர் யெழுதி குடுத்த உடம்படிக்கையை இங்கிறீசுப்படுத்தி, ஆராருக்கு சொல்ல வேணுமோ அவர்களுக்கெல்லாம் சொல்லி யிருக்குது. ஞச்சன பிள்ளை அவரும் நடந்த சங்கதி யெழுதி, நமக்கு வரக்கூடாதாய் யெழுதி விட்டார். இந்தவேலை தீத்துக் கொள்ளுகுறதுக்கு காலமல்ல. அவர்களுக்கு காலமாய் யிருக்குது. முன் பின் ஒண்ணும் எண்ணிப் பாற்க்க யில்லை. ஆஞலும் நம்முட உடமை ஒருத்தருக்கு ரெண்டு பேராய் உத்தரவாதம் பண்ணப் போறுர்கள். உறவின் முறையிலே நடந்த சங்கதிக்கு அனேக சாதகம் நடந்திருக்குது. அவர்களைக் கூட்டி நடந்ததும் அவனை ஒண்ணு யெழுதி கையெழுத்துப் போட்டு குடுக்க சொல்லி கேட்டோம். நல்லது. யெழுதித் தாரேமெண்ணு ஒரு ஞள் கூட்டி அட்டவணையும் யெழுதி வச்சோம். மறு ஞளைக்கு கையெழுத்துப் போட்டு குடுக்குறேமென்னு சொன்ஞர்கள். அந்தச் சேதி அவர்கள் அறிஞ்சு யென்னென்னமோ சொல்லிக் கொண்டார்கள். அதின்பேரிலே சத்தே மெது பண்ணுர்கள். நாம் சத்தே கோசமாய் நிஷ்டூரம் சொன்ஞேம். அதின்பேரிலே ஞளைக் கையெழுத்துப் போட்டு தாரேமெண்ணு சொன்ஞர்கள். அது வாங்கிப் போடுவோம். இப்போ வெங்கிடகிஷ்ண பிள்ளைக்கும், ஞகலிங்கத்துக்கும் பயணச் சங்கதியாய் உள்ளுக்குள்ளே கிழிச்சுக் கொண்டிருக்குது. இது சங்கதி ஞகலிங்கம் யெழுதிக்குடுத்த சீட்டும், கணக்கும் கையெழுத்து போட்டது. பொன்மலைப் பிள்ளை கணக்கு எனக்கு இருக்குதாம். அது பத்து எடுத்து சவ்வாது யெழுதிக் குடுத்து அனுப்பிவிக்கவும், வெங்கிடகிருஷ்ண பிள்ளை, சீத்தாராம பிள்ளை, யிவர்கள் இது காரியத்திலே திரியுறதும் நடப்பிக்கிற சங்கதிகள் யெழுதி முடியாது. நாகலிங்கம் பேசுகிற பேச்சுக்கு சுத்திலே ஒண்ணும் யெழுதி இருந்தது. அந்தக் காகிதமும் கொண்டு வந்தவன் வர விசேஷம் சொன்னதென்னவென்ஞல், சென்னப்பட்டணத்திலே ஒரு கப்பலிலே மருந்து, குண்டு வாங்கி, சொல்தாதுகளும் யேத்தி பங்கோலுக்கு அனுப்பிவிக்குறதுக்கு முஸ்தீதாய் இருந்ததாகவும், அப்போ ஒரு கப்பல் வந்ததாகவும், அந்தக் கப்பல் வந்தவுடனே, பத்து ஞழிகையிலே போகத்தக்கதாக, யேத்தி இருக்கிறவர்களெல்லாம் யெறக்கி போட்டதாகவும், அதிஞலே அவிடத்திலே சொல்லிக் கொள்ளுகிறது. பங்கோலிலே இங்கிறீசுக்காரனுடைய மூணு கப்பலும் ஒரு கப்பலில்............ அப்போ பிருஞ்சுக் கப்பல் ........... மேலாக இருபது உருப்படிகள் ............ இல்லாதபடியிஞலே அந்த ............ கப்பல் கப்பித்தான் தன் தட்டுமுட்டு ............ சென்னப்பட்டணம் வந்து ............ கேட்டார்களென்னு சொல்லிக் கொள்ளுகுறுர்கள் ............ உச ௨ ஒயித்தேம்பர் மீ ரு ௨ பிறகேத் ஒண்ணு கடலிலே காத்தும் பிசலுமாக இருந்ததாகவும், அந்தக் காத்திலே சென்னப்பட்டணத்திலே இருந்து சீமைக்கு போன கப்பலிலே மூணு கப்பல் முழுகிப் போச்சென்னும், அந்தக் கப்பல் முசே லெறி முதலாகிய கொமுசலியோர், முறசேன் முதலாகிய பேர் யேறிப் போஞர்களென்னும், அதுக்கு முன்போன கப்பல் யென்ன ஆச்சுயெண்ணும் எதுவும் தெரிய யில்லையெண்ணும், வங்காளத்துக்கு மதாம் லசேல்

பின்னும் ஒப்பிசேமாருக, கப்பித்தான், அபித்தாம் பிறசோனராய் இருக்கப்பட்ட பேர்கள் வெகுபேர்கள் ஒரு கப்பலிலே யேறி போன கப்பல், நடுவழியிலே பத்திக் கொண்டு, கப்பலும் அதின்பேரிலே ஏறிப்போன பேர்களில் கொஞ்ச நஞ்சம் பேர் தப்பி, குறைபேர் சேதப்பட்டு போனதாக சொல்லிக் கொள்ளுகுறதாகவும், பட்டணத்திலே இருக்கப்பட்ட வற்த்தகாள் உத்தியோகஸ்தாள் பின்னும் இருக்கப்பட்ட பேர்கள், தட்டுமுட்டுகள் வெளியிலே பாளேயப்பட்டுகளிலே அனுப்பி வைக்குறதாகவும், அவரவர்கள் கையோடும் காலோடும் யிருக்குறதாகவும், யென்னேரம் காபிருப்பட்டு கொண்டிருக்குருர்களெண்ணும், அவிடத்திலே யிருக்கப்பட்ட பேர்கள் சொல்லிக் கொள்ளுகுறது. அந்தப் பட்டணத்திலே நடத்துகுற அன்னீதங்களும், கேள்வி இல்லாமல் இருக்குறதும், ராச்சியத்திலே நபாபு மம்முதல்லிகான் நடப்பிக்கிற அன்னீதங்களும், குடிகள் அவரவர்கள் குத்தகை வாங்கிக் கொண்டு போனவர்கள், குடிகள் மாடு கண்ணுகளே விற்பிச்சும், கூட வாரம் யெடுத்துக் கொண்டு, தெண்டங் குடுக்கச் சொல்லி அரிக்கிதை பண்ணுகுறதும், பிறம் மத்தியும் சிசு மத்தி பண்ணுகுறதும் போய் பிருது பண்ணிக் கொண்டார். கேள்வி யில்லாமல் போறதும், யிப்படி ராச்சியமெல்லாம் அராசிகப்பட்டு அன்னீதங்கள் நடப்பிக்கிறபடியினுலே, இனிமேல் யிதுக்கும் என்ன விபத்து நடக்குமோயெண்ணு சிறிது பேர் சொல்லிக்கிறதாகவும், தான் வரச்சே திருமுல்லேவாசலிலே இங்கிறிசுக்காரர் கப்பலொண்ணு ஒதுங்கி யிருந்ததை தான் பாத்தாகவும், யிப்படியாக வந்து சொன்ருர். இதல்லாமல், இந்த ஞள் கேழ்விப்பட்ட சேதி. வேலூர் கோட்டையின் பேரிலே நபாபு மம்முதல்லிகானும், மேஸ்தர் கற்ருல் கெலியும் மோர்சா போட்டு சண்டை பண்ண துவக்கினதாகவும், நபாபு மம்முதல்லிகான், கற்ருல் கெலியும் மிறத்து சல்லிகானுக்கு சொல்லி அனுப்பிவிச்சது. யிருபது லஷ்ஷம் ரூபாய் குடுக்கச் சொல்லியும் கோட்டையிலே தன் டாணுயிருக்க வேணுமெண்ணு யிப்படி சொல்லி அனுப்பிவிச்சதாகவும், அதுக்கு மிறுத்தசல்லிகான் கற்ருல் கெலிக்கு தாம் கவில் குடுத்து அனுப்பிவிச்சால், தான் முகதாவிலே வந்து தீத்து கொள்ளுகிறேணெண்ணும் சொல்லி அனுப்பிவிச்சதாகவும், அந்தப்படியே கற்ருல் கெலி கவில் யெழுதி அனுப்பிஞராம். நபாபு மம்முதல்லியை பேட்டி பண்ணிக்கொண்டதாகவும் ........... மம்முதல்லிகான் ........... யெழுதி யிருக்க ............ மிறுத்தசல்லிகான் ............. குடுத்து ............ போயிருக்கு ............... தருகுருேமெண்ணும், கோட்டையிலே டாணு வைக்க கவையில்லேயெண்ணு சொன்னதின்பேரிலே, மம்முதல்லிகான் சம்மதியல்லாத உத்தரவுகளாய் சொன்னதாகவும், அதுக்கு மேஸ்தல் கெலி நான் பேசி தீத்து போடுகுறேணெண்ணும், நான் பிறக்கடுத்த டேராவுக்கு அழைச்சுக்கொண்டு போய் அவர் கண்டு பேசினவிடத்திலே, மிறுத்தசல்லிகான் சொன்னது. நபாவு மம்முதல்லிகான் அக்கிஷம் பேரிலே கோட்டை அபகரிச்சு கொள்ளுகுற நிமித்தியம் யிப்படி வரப்போக சொல்லுகுருர். யென் கையிலே விசேஷிச்சு பணங் காசுகளில்லே. உமக்கு லஷ்ஷம் ரூபாய் குடுக்குறேன். சற்க்காருக்கு அஞ்சு லஷ்ஷம் குடுக்குறேன். கோட்டையிலே நீங்கள் டாணு வச்சதே உண்டாஞல், ஞன் கோட்டையை ஒப்பிச்சுப் போட்டு வெளியிலே அல்லவா போகவேணும். கையில் அதுக்கது சம்மதிக்கிறதில்லே. இதும்பேரிலே ஒரு காசு அகப்படத் தக்கனதில்லே. சம்மதியாயி இந்தப்படி ராசியாஞல் நடப்பியுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு ராசியானபடிக்கு பாத்துக்கொள்ள வேண்டியதேயல்லாமல், நான் சொல்லத்தக்கினது வேறேபடியில்லே யெண்ணு சொன்னதாகவும், ஆஞல் இது சங்கதியெண்ணு சொல்லி அவர், நபாபு அவர்களேக் கண்டு பேசினவிடத்திலே, மிறுத்தசல்லிகானுக்கு காசு விசேஷிச்சு சேந்திருக்குது. அவர் சும்மா கொஞ்சம் குடுக்க தக்கவரல்லர். கையிலே

வந்து சிக்கின மட்டுக்கும் அவனே பத்திரப்படுத்த வேணுமெண்ணும், அவனே தன் கையிலே ஒப்புவிக்க சொல்லி சொன்னதுக்கு கற்ருல் கெலி சொன்னது. நான் கவில்[71] யெழுதி குடுத்ததின் பேரிலே இருக்குறவனே அப்படி செய்ய போகாது. இந்த உடம்படிக்கை உமக்கு ராசி யில்லாதே யெண்ணுல், அவனே மறுபடியும் கோட்டையிலே கொண்டு போய் விட்டு விடுகிறேம். அப்பறம் சண்டை பண்ணி சாதிக்கிறதேயல்லாமல், யிப்படி செய்யப் போகாதெண்ணு சொன்னதின்பேரிலே ஒருத்தருக்கொருத்தர் யிட்டோ பட்டான் விசேஷங்கள் நடந்ததாகவும், அதும்பேரிலே சிறிது சொல்தாதுகளே கூட்டி கோட்டைக்குள்ளே செத்துப் போட்டதாகவும், அதும்பேரிலே மோற்சா போட்டு மிதமில்லாத சண்டை பண்ணதாகவும், கோட்டைக்காரனும் நல்ல சண்டை பண்ணதாகவும், அதிலே யிங்கிலீஸ் தளத்திலே ரொம்ப சேதப்பட்டதாகவும், மாரி காலமானபடியினுலேயேயும், கோட்டையான் ரொம்ப பிலத்திலே யிருக்கிறபடியினுலேயும், பிற்ப்பாடு பாத்துக்கொள்ளுவோமென்கிறதாய் சிறிது பவுஞ்சை அவிடத்திலே வந்து போட்டு, மத்தப் பவுஞ்சுடனே ஆற்காடு வந்து சேந்ததாக கேழ்விப்பட்டோம்.

## விஷ ஸ்ரீ காற்த்திகை மீ௳ கூ உ சுக்கிறவாரம் : சதளளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ உய உ

இந்தனுள் காலமே பறங்கிப்பேட்டையிலிருந்து, கானுக்கோமுட்டி நரசிங்க ருயர் காகிதமும், புழுகரிச்சி நமசிவாய முதலியார் யெழுதி யனுப்பிவிச்ச ஒலேயும் வந்துது. அதில் எழுதி யிருந்த வயணம். சவுதாக குடுத்தது உண்டானுல், நம்முட நிலுவை சலுவைகள், நெடு சந்ததுகளுக்கு தாம் அனுகூலிச்சு, சாத்தியப்படுத்தி குடுக்குறேமென்கிறது, அவிடத்தில் அமில் பண்ணுகுற ஆறுமுகப் பண்டாரம் தம்பி கந்தப்ப பிள்ளே சொன்னதாக எழுதியிருந்தது.

இந்தனுள் சாயங்காலம் வெங்கிடாம்பேட்டையிலிருந்து, சிதம்பரனுத பிள்ளே யெழுதி அனுப்பிவிச்ச காகிதம் வந்து சேந்துது.

வந்த காகித நகல்

வசாறது ருய விசைய ஆனந்த றங்கப்ப

திருவேங்கிட பிள்ளே

ஸ்ரீமது சகல குண சம்பண்ணரான, அகண்டித லஷ்சுமி பிறசன்னரான, மகா மேரு சமான தீரரான, பந்து சன சிந்தாமணிகாறன், ராசமாணிய ஸ்ரீசாஸ்திரி பிள்ளே அவர்கள், அவர்கள் தாங்கள் நினேத்திருந்த நன்மையினுலே, சிதம்பரனுதன் விஷ ஸ்ரீ கார்த்திகை மீ௳ ச உ இம் சுகமே யிருக்கிறேம். தாங்களும் சிரஞ்சீவி அய்யாசுவாமியும் மத்துமுண்டான குழந்தைகளனேவரும் சுகமேயாயிருக்குற சமாச்சாரத்துக்கு யெழுதி அனுப்ப வேண்டியது. நாமும் தங்களுத்தாரம் வாங்கி கொண்டு பாத்துவரவேணுமென்னு இருக்கையிலே, ள. சாமாருயர் அவர்கள் வந்து, வாய்க்கால் கசியா நிமித்தமாக விறுத்தாச்சலம் உடையார் தாலூக்கு பலயந்தாம் போயிருக்குற சேதி வந்தபடியினுலே, மாயூரத்துக்கு வந்து, சீகாழியிலிருந்து அவர்கள் வந்த சமாசாரம் அழைப்பிச்சுக் கொண்டு, அற்பசி மீ௳ யசா உ பந்தருக்கு வந்து கண்டு பேசினவிடத்திலே மனம் கரிச்சுத்தானே

சிறிது சாதகங்கள் நடப்பிச்சவிடத்திலே, சீமா மூலக்குடிகளும் சம்பட்டியாள்களும் வந்து ருசிப்பண்ணிக் கொண்டார்கள். அந்த சமாசாரம் சொன்னுர். அவர்களறிஞ்சு புவனகிரி சீமை, ஞட்டு முத்துக்குமார பாளேயக்காறர் முகாந்திரமாகவும், ராசவட்டம் பண்ணி ள. சாமாருயர் யவர்களும் நாமும் வெங்கிட்டாம் பேட்டைக்கு சமீபம், புவனகிரி சீமை குறிஞ்சிப்பாடிக்கு வந்தவிடத்தில் நயினுறும் வந்து பேட்டி வாங்கிக் கொண்டு, நம்முட பிறஸ்தாபங்களும் நடந்தவிடத்திலே சமரசமாய் தானே ராசியானுர்கள். புவனகிரி சீமை, மன்னுர்கோவில் சீமை நாட்டார், சிதம்பரம் சீமை, கான்ருயகர், ள. ஸ்ரீபதிருயர் முதலான பேர்கள் முன்பாக முன் நடந்த பிறகாரம் அவர் வர, மிராசு அவர் வர வர அனுப்பிவிச்சுக் கொண்டு, அனுகூலிச்சு ருயபிதாப் பிறகாரம் நடந்துகொள்ள தக்கதாக ............ ருச ஸ்ரீ சாமருயரும் மெத்த மனஸ்கரிச்சுத்தானே நடப்பிச்சார்கள். அப்பால் நயினுர் பாளேயத்துக்கு வந்து ஒரு ஞள் யிருந்தும், மனஸ்கரிச்சுதானே பர்வச பூர்வமாய் பேசிக்கொண்டு, சீமைக்குடிகளும் நாமும் வெங்கிட்டாம் பேட்டைக்கு வந்து ..... மாதம் வந்து சேந்தோம். தங்கள் தயவுனுலே சிவபட்டணம் சீமையும் நம்முட வசமிருக்குது. இனிமேல் நடக்குற சமாச்சாரங்களுக்கு யெழுதி யனுப்பிவிக்கிறேம். மெத்தபட்டிருக்கிற வேலூரின்பேரிலே சண்டையாயிருக்குறது. கற்னுல் கெலி உபேஷையாய் யிருக்குருன். வேலூர் வக்கீலு சென்னப்பட்டணத்திலே பேசுருன். பசாலத்து சங்கும் ஏழாயிரம் குதிரையுடனே கோலாரிலேயே யிருக்கிருன். அய்துரு ஞயக்கனும் அய்யாயிரம் குதிரை, பதினுயிரம் எஸ்ராவும் எழுனூறு வெள்ளக்காறரும், இருனூறு குதிரையுடனே பதிரி கூட வந்திருக்கிருன். வரச்சொல்லி வேலூர் பைகாம் நடக்குது. பயத்தினுலே வரமாட்டாமல், பயந்துகொண்டு நபாபை வரச்சொல்லி காகிதமெழுதி கொண்டிருக்குருன். யினிமேல் நடக்குற சமாச்சாரங்களும் பிறகு யெழுதி அனுப்பிவிக்கிறேன். சென்னப்பட்டணத்திலிருந்து முத்தப்பிள்ளே யவர்கள் சமாச்சாரம் வந்திருக்கிறது யெழுத வேண்டியது. ள ருமா ருய சமாச்சாரம் யென்னமாய் யிருக்குறது வயணமாய் யெழுத வேண்டியது. மைத்தப்படி அவிடத்து சுப ஸ்திரிகளுக்கும் பிறவட்டத்திலே யிருக்குற சனங்களுக்கும் எழுதி அனுப்பும்படி செய்யவும் வேணும்.

## விஷ ௵ காற்த்திகை ௴ யக ௨ ஆதிவாரம் : சதளளசாயக ஆண்டு, ஞெவெம்பர் ௴ உஉ ௨

இந்தனுள் சாயங்காலம் பறங்கிப்பேட்டை நமச்சிவாய முதலிக்கும் அமில் கந்தப்ப பிள்ளேக்கும் சவுதா அண்ணியிருவிலே வச்சு நிலுவையுடனே சேந்துது. பாத்து சொல்லி எழுதி யனுப்பிவிச்சோம்.

இந்தனுள் சாயங்காலம் சிதம்பரனுத பிள்ளேக்கு யெழுதி அனுப்பிவிச்ச காகிதத்து நகல்.

ஸ்ரீ மது சகலகுண சம்பண்ணரான அகண்டித
லஷ்சுமி பிறசன்னரான மகா பிறமாணிக்கரான மகாமேரு
சமான தீரரான ள. ச. ஸ்ரீ அத்தணீயர்கள்
சிதம்பரனுத பிள்ளே அவர்களுக்கு

தாங்கள் நினேத்திருந்த நன்மையினுலே வசாருத்த ருய விசைய ஆனந்த றங்கப்ப திருவேங்கடம், விஷ ௵ காற்த்திகை ௴ யக ௨ சிரஞ்சீவி அய்யாசாமி முதலாகிய

சிறியார் பெரியாரானவரும் சுகமே யிருக்கிறோம். தங்கள் சுப சங்கதிகளை ரொம்ப அதிசெயங்களுக்கு யெழுதி யனுப்பின காகிதம் வந்து குடுத்து சகலமும் தெரியவந்துது. மேற்படி மீ௳ ங ல் வெங்கிட்டாம்பேட்டை போய் சேந்தோமெண்ணும், ௭. சாமருயர் முன்னிலையாக நயினர் பரவச் சற்வமாக முன்னிருந்த பிறகாரம் நடப்பிக்கிறோமெண்ணு சொன்னதாகவும் யெழுதி வந்ததுக்கு மிகுதியும் சந்தோஷமாச்சுது. யினிமேலும் பிறசித்தமில்லாமல் நடக்கதக்கதாக சென சம்மதியாக நடந்துகொள்ள வேணுமெண்ணும், பின்னும் உபசாரமாய் யெழுதி அனுப்பினோம். ஆகையால் இவிடத்து பந்தமானவர்களுக்கும் இவிடத்திலே வேணுமென்குற காரியங்களுக்கும் யெழுதி அனுப்பும் படி செய்யவும் வேணும்.

## விஷ ஷு காற்த்திகை மீ௳ யஉ ௳ சோமவாரம் : சதஎளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ உங ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. கூடலூர், பறங்கிப்பேட்டை, தயங்கம்பாடி, னுகப்பட்டிணம் இதுகளிலே யிருக்குற பிருஞ்சுக்காறர் பிறிசேனர்களை, சென்னப்பட்டணத்துக்கு கொண்டு போக புதுச்சேரிக்கு கொண்டு வந்ததாகவும், மேஸ்தர் சவிசெட்டு யெழுதி யனுப்புனதின் பேரிலே அவன் வந்து கூடலூர், பறங்கிப்பேட்டையில் இருந்தவர்களை போக சொல்லிப்போட்டு, நேத்து சாயங்காலம் தரங்கம்பாடி வந்து சேந்ததாக கேழ்விப்பட்டோம். ருத்திரி காத்தும் மழையும் சுருக்காய் எங்கெங்கேயோ பெருஞ்காத்து அடிச்ச சாடையாய் கண்டுது.

## விஷ ஷு காற்த்திகை மீ௳ யச ௳ புத்வாரம் : சதஎளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ உரு ௳

இந்தனுள் காலமே, தரங்கம்பாடி சக்கரத்தாருக்கு மெழுகுதிரி வைக்குற கந்தீல் கூடு உ அப்பாவு கையிலே குடுத்து அவருக்கு றெக்காது சொல்லி குடுத்தனுப்பிவச்சதுக்கு, அவர் அதை வாங்கிக் கொண்டு பதிலுக்கு ரொம்ப உபசாரமாய் ரொம்ப றெக்காது சொல்லியனுப்பிவிச்சார்.

## விஷ ஷு காற்த்திகை மீ௳ யரு ௳ குருவாரம் : சதஎளசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ உசா ௳

இந்தனுள் காலமே, அப்பாவுவை தரங்கம்பாடி கோட்டைக்கு போய் நேத்து சாயங்காலம் முசே லத்தூர் சமுசாரத்துடனேயும், தன் தட்டுமுட்டுகளையும் சென்னப்பட்டணத்திலே யிருந்து சலங்கும்பேரிலே வந்திறங்கி, நமக்கு றெக்காது சொல்லி அனுப்பிவிச்சதுக்கு, பதிலுக்கு உபசாரமாய் றெக்காது சொல்லச் சொல்லி அனுப்பிவிச்சேன். போய் சொன்னதுக்கு அவரும் உபசாரம் சொல்லி, எல்லாத்துக்கும் னுன் பிறையாத்துக்கு வந்து, திருவேங்கடத்தை கண்டுபேசி போறேனெண்ணு சொன்னுன் யென்குறதாக வந்து சொன்னுன்.

## விஷ ஸ்ரீ கார்த்திகை மீ௳ யஅ உ ஆதிவாரம் : சதளஎசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ உகூ உ

இந்தனுள் காலமே கோட்டைக்கு போய், மதாம் லத்தூருக்கு றெக்காது சொல்லச் சொல்லி அப்பாவுவை அனுப்பிவிச்சேன். அவன் போய் சொன்னதுக்கு அவள் சொன்னது. தாங்கள் ரொம்ப மிசுராவலாய் போனேனென்ணும், குடிக்க கஞ்சி யில்லையெண்ணும், எங்களுக்கு நல்ல சமையத்துக்கு உதவுனேவெண்ணும், என் புருஷன் தலை தப்புவிச்சீர்களெண்ணும், இப்ப யெங்களுக்கு எவ்வளவாகிலும் குடுக்க வேணுமெண்ணும், நீங்கள் சாப்பிடுகிற சாப்பாடுலே யெங்களுக்கு குடுக்க வேணுமெண்ணும், இப்படியில்லாமல் தயங்கம்பாடி வந்து சேந்த ஆன பிற்பாடு அவரை அனுப்பிவிச்சுக்கொண்டு பிறப்பட்டு ............ யிருக்குற இடத்துக்கு போய் போறசாது சொன்ன உபசாரம் சொல்லி, ஞன் இருக்குறேன். நீங்கள் குடுக்க வேண்டிய பணங்காசுக்கு குடுக்கதக்கதில்லை. நீங்கள் வீடிச்சுப்போது வாங்கிக் கொள்ளுகுறது. சத்தியமாய் அதுக்கு 〈முன்னே〉 கேழ்ப்பேனென்னு யோசனை பண்ண தக்கதில்லை. யெந்தனுள் வாரேனென்னு சொல்லியனுப்பிவிச்சதும், வீட்டுக்கு போய் முசே ............ அவர் சொன்னது. நல்ல சேதி வந்து ............ வெளியிலே பிறப்பட்டவர், சரீர ஆரோக்கியத்துடனே இருக்க சொல்லேன்னு சொன்னதாக அப்படி வந்து சேதிகளெல்லாம் சொன்ஞன்.

## விஷ ஸ்ரீ கார்த்திகை மீ௳ யகூ உ சோமவாரம் : சதளஎசாயக ஆண்டு, ஞெவெம்பர் மீ௳ ஙய உ

இந்தனுள் காலத்தாலே, அப்பாவு கோட்டைக்கு முசே லத்தூரண்டைக்கு போனவிடத்திலே முசே லத்தூரு சொன்னது. தன் தட்டுமுட்டு நாகப்பட்டணம் போய் சேந்து யிருக்குது. அது போய் எடுப்பிச்சுக் கொண்டு வருகுறதுக்கு சிலவுக்கு, யின்னேரம் எவ்வளவாகிலும் உங்கள் சிலவோட சிலவாய் குடுக்கவேணுமெண்ணு சொன்னதாகவும், அதுக்கு அப்பாவு சொன்னது. யின்னேரம் யெங்களுக்கும் சிலவு காரியம் ரொம்ப முத்திரிகையாய் யிருக்குதென்னு சொன்னதுக்கு, ஞன் போறசாது பண்ணயில்லை. ஒதவுனல் குடுங்கோளெண்ணு சொன்ஞள். அதின்பேரிலே அனுப்பிவிச்சுக் கொண்டு வந்து, என்னுடனே யிது சங்கதிகளாய் கேட்டதாய் சொன்ஞன்.

## விஷ ஸ்ரீ கார்த்திகை மீ௳ உய உ மங்களவாரம் : சதளஎசாயக ஆண்டு, திசெம்பர் மீ௳ மு உ

இந்தனுள் காலமே ஞன் கோட்டைக்கு முசே லத்தூரண்டைக்கு போனவிடத்திலே அவர் சொன்னது. சென்னப்பட்டணத்திலே நம்முட தட்டுமுட்டு காரியக்காரரிலே கெட்டுப் போச்சென்னும், ஆனல் இப்போதைக்கு ............ யில்லை ............ பாற்க்க வேணுமெண்ணும், தையி மாசம் ............ பிருஞ்சுக்காரன் ............ கபுறு வந்து ............ யிப்படி லோகாபிரம்மாய் பேசிக்கொண்டிருந்து, நாகப்பட்டணத்துக்கு போய் தட்டு முட்டு இருக்குறதை எடுப்பிச்சு, ............ தோப்புத்துறையிலிருந்து வரவேண்டியதுக்கு

சிலவுக்கு எப்படியாகிலும் குடுக்க வேணுமெண்ணு சொல்லி கேட்டதுக்கு, யிப்படி யிருக்கப்பட்டதிலே காரியம் உமக்கு தெரிஞ்சிருக்குறதுக்கும், ஆனால் நான் செய்ய வேண்டியதென்ன? சொல்லி யனுப்பச் சொல்லி ........... ஆசாரம் பண்ணேன் அவரும் ஆசாரம் பண்ணுன். ........... எவ்வளவாகிலும் குடுத்தாலல்லாமல் ........... ண்ணு சொன்ஞன். அதுக்கு யிப்ப நமக்கு ........... அவனைச் சொல்லி இப்ப உதவமாட்டாது யெண்ணு சொல்லி அனுப்பிவிச்சுக்கொண்டு, முசே போசேத்து வீட்டுக்கு போய் அவரைக் கண்டு ஆசாரம் பண்ண உடனே, அவரும் பண்ணுர். நாற்காலி மேலே உற்கார்ந்து லோகாபிரம்மாய் பேசிக்கொண்டிருந்து அனுப்பிவிச்சுக் கொண்டு, பதினெண்ணரை மணிக்கு வீட்டுக்கு வந்தேன்.

## கார்த்திகை உஉ குருவாரம் திசேம்புரு ங

இந்தனுள் மத்தியானம், நரசாபுரத்திலே யிருந்து மத்தால் ரெட்டியாரண்டையிலே யிருந்து வெங்கிட்ட ரும ஞயக்கன், ஒருத்தன் பிருஞ்சுக்காரன் சேதிகளும் நம்முட சேதிகளும் விசாரிச்சு போக வந்தவன் சொன்ன சேதி. மத்தால் ரெட்டி நரசாபுரத்திலே யிருக்குறதாகவும், இங்கிலீசுக்காறர், பிருஞ்சுக்காறர் பேத்திரிகள் கோட்டைகள், பட்டணங்களைப் பிடிச்சது பேர் வயணம். நரசாபுரம், ஏனம், தீஷசீமை, கொட்டைப்பாளையம், கடக்குதுரு, குண்டூரு, கொண்டைவீடு, நிசாம் பட்டணம் யிதுகளெல்லாம் கோட்டையும் பட்டணத்திலே யிருக்கப்பட்ட குடிகள் வீடுகளுள்பட இடிஞ்சு நிர்ஷபணுப்பட்டதாகவும், மச்சிலி பந்தலும் துர்க்கமதில்லி ருயன்கிறதும் கோட்டை தவிர, மத்ததுக்கெல்லாம் பிடிச்சுப் போட்டதாகவும், மச்சிலி பந்தரிலே யிருக்குற இங்கிலிசுக்காறரை கோட்டையை விட்டுபோட்டு சென்னப்பட்டணம் வந்து சேர சொல்லி யெழுதி வந்ததாகவும், அவிடத்திலே சொல்லிக் கொள்ளுகுறதாகவும், மத்தால் ரெட்டிக்கு தட்டுமுட்டு பணங்காசுகளிலிலே ரொம்ப சேதப்பட்டு போனதாகவும், வழிகளிலே காகித பத்திரம் கொண்டு வருகுற பிறயாசமானபடியினுலே, யென்னை உங்களுக்கு முகவசனத்திலே சொல்லச் சொன்ஞரென்னு சொன்ஞர். நாமும் அவருக்கு கோடிம லாபமாய் காகிதம் யெழுதிக் குடுத்து, இவிடத்து சங்கதிகளெல்லாம் வந்தவுடனே வாக்கு விசேஷமாய் சொல்லி யனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ காற்த்திகை மீ உரு உ ஆதிவாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் மீ சா உ

இந்தனுள் காலமே ஆறரை மணிக்கு, நம்முட வீட்டு வேலைக்காரி எல்லி யென்கிறவள் கெற்ப்பமாய் யிருந்து ஆண்பிள்ளை பிறந்து, ஞளா ஞள் விழுந்து போச்சுது. பிற்பாடு அவளுக்கு சன்னியும் பேரிலே யிசிவு கண்டுயிருந்து இந்தனுள் மரணமானுள். நடக்கவேண்டிய பிறகாரம், தகனம் மத்தது பண்ணிவிச்சு போட்டோம். இந்தனுள் சாயங்காலம் நாமும், சிரஞ்சீவி அய்யாசாமியும் கொட்டுபாளையத்துக்கு சவாரி போய், ஏழுமணிக்கு வீடு வந்து சேந்தோம்.

## விஷ ஸ்ரீ கார்த்திகை மீ௳ உசா ௳ சோமவாரம்: சதஎளசாயக ஆண்டு, திசெம்பர் மீ௳ எ ௳

இந்தனுள் சாயங்காலம், தரங்கம்பாடி கும்பனீர் சேவுகன் கையிலே, சென்னப்பட்டணத்துக்கு முத்தப் பிள்ளேயவர்களுக்கு முன்வந்த காகிதத்துக்கு பதில் காகிதமும், அய்யத்தம்பி வெங்கிடாசல பிள்ளேக்கு உபசாரமாய் ஒரு காகிதமும், யெழுதி குடுத்து யனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ கார்த்திகை மீ௳ உள ௳ மங்களவாரம்: சதஎளசாயக ஆண்டு, திசெம்பர் மீ௳ அ ௳

இந்தனுள் சாயங்காலம் ஞலு மணிக்கு, தரங்கம்பாடிக்கு கும்பனீர் கணக்கு உத்தியோகமும், ஞாயங்கள் தீக்கிற உத்தியோகத்திலே யிருக்கிற முத்தய்யா பிள்ளே யென்குறவர், சரீர சொஸ்தமில்லாமல் யிருக்குறதாக அவரவர்கள் போய் மெனவுருர்கள் யென்குற சேதி கேழ்க்கப்பட்டபடியினுலே, அவர் நம்முட வீட்டுக்கு தன் தாய் வரபோக இருக்குறபடியினுலே இதுவரைக்கும் ஒருவிசையாகிலும் போகாதில்லாதபடியினுலே, ஒரு தரம் போய் விசாரிச்சு வருவோமென்குறதாக போனவிடத்தில், அவரும் ரொம்ப மரியாதை பண்ணி உபசாரங்களாய் சொன்னதும்பேரிலே லோகாபிரம்மாய் பேசிக்கொண்டிருக்கச்சே, தட்டுலே பாக்கு வெத்திலேயும் வெகுமதியும் கொண்டு வந்து வச்சு, நீங்களொரு விசையும் வராதபடியினுலே, தாங்கள் இதை அங்கீரிக்கவேணுமெண்ணு ரெம்ப உபசாரமாய் சொன்ஞர்கள். அதுக்கு நாம் வெகுமானம் குடுக்க வேண்டியதென்ன? மனது காறணமேயல்லாமல் மைத்தபடி யென்ன யிருக்குது? யினி வேளேயாகட்டும் யென்குறதாய் பரிகரிச்சு சொல்லி போட்டு, பாக்கு வெத்திலே மாத்திரம் வாங்கிக் கொண்டு அனுப்பிவிச்சுக் கொண்டேன். அவிடத்திலே திருவேங்கிடத்தா பிள்ளேயும் இருந்தார். அப்பால் முசே லத்தூரண்டை போனவிடத்தில் சிலவுக்கு ரொம்ப முத்திரிகையாய் இருக்குது. எவ்வளவாகிலும் குடுக்கவேணுமெண்ணு அவர் சொன்னதுக்கு, இந்த வேளே ஒரு காசு ஆகிலும் வுசுப்பட மாட்டாதுயெண்ணு சொன்னதுக்கு, தை பிறந்தவுடனேயாகிலும் யெவ்வளவாகிலும் குடுக்கவேணுமெண்ணு கேட்டதுக்கு, ஞன் நிஷ்கரிசை ஒண்ணும் சொல்லமாட்டேன். குடுக்குறதுக்கு எப்போ லகுபடுதோ, அப்போ குடுக்குறேணெண்ணு சொல்லி அனுப்பிவிச்சுக்கொண்டு வந்து விட்டேன்.

## விஷ ஸ்ரீ கார்த்திகை மீ௳ ஙய ௳ சுக்கிரவாரம்: சதஎளசாயக ஆண்டு, திசெம்பர் மீ௳ யக ௳

இந்தனுள் சாயங்காலம், தரங்கம்பாடி கோவற்னதோர் தோட்டத்திலே வந்து யிருக்கச்சே, மெழுகு திரி வைக்கிற பெரிய வீதிற் ரெண்டு, அப்பாவு கையிலே குடுத்து துரைக்கு கொண்டுபோய் குடுத்து றெக்காது சொன்னவிடத்திலே, அவரும் சந்தோஷமாய் தானே வாங்கிக் கொண்டு, பதிலுக்கு றெக்காது சொல்லியனுப்பிவிச்சார்.

### விஷ ௵ மார்கழி ௴ ௬ ௳ சனிவாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் ௴ ௰௨ ௳

இந்தனுள் விசேஷிதாய் ஒரு சேதியும் கேழ்விபட யில்லே.

### விஷ ௵ மார்கழி ௴ ௫ ௳ புத்வாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் ௴ ௰௪ ௳

இந்தனுள் சாயங்காலம் வெங்கிட்டாம்பேட்டைக்கு, சிதம்பரனுத பிள்ளேக்கு கேட்பும் லாபமாய் காகிதமெழுதி, ⟨மேற்படி⟩ யார் மனுஷன் கையிலே அனுப்பிவிச்சோம்.

### விஷ ௵ மார்கழி ௴ ௮ ௳ சனிவாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் ௴ ௰௯ ௳

இந்தனுள் காலமே, நம்முட திருவேங்கிடபுரம் தோட்டக்கார வயித்தி கையில் அனுப்பின காகித வயணம். பறங்கிப்பேட்டை புழுக்காச்சி நமசிவாய முதலிக்கு ஒரு காகிதம், அக்கிருரம் அண்ணுவய்யர் வெங்கிடாசலத்துக்கு ஒரு காகிதம், மாத்தூர்பாளேயம் எல்ல முதலி வாத்தியாருக்கு ஒரு காகிதம், மானிய நிமித்தம் பாப்புசத்திரம் ஞுருயணப்பய்யருக்கு ஒரு காகிதம், பொம்மையாபாளேயம் பாலேய்ய சுவாமியாருக்கு கேட்பும் லாப காகிதமும் அனுப்பிவிச்சோம்.

இந்தனுள் சாயங்காலம், தரங்கம்பாடி பெரிய துரையும், மையோரும் நம்முட வீட்டுக்கு கிட்ட இருக்குற தோட்டத்தில் வந்து, குளத்திலே மீன் பிடிக்கிற வேடிக்கை பாத்துக் கொண்டிருக்கச்சே, ஞுன் போய் ஆசாரம் பண்ணினவுடனே கோவறனதோரும், மையோரும், மிகுந்த பஷ்ஷத்துடனே ஆசாரம் பண்ணுர்கள். ஒரு மணி நேரம் மட்டும் லோகாபிரம்மாய் பேசிக்கொண்டிருந்து அவர்கள் அனுப்பிவிச்சுக் கொண்டு கோட்டைக்கு போனுர்கள். ஞுனும் மனுப்பிவிச்சுக் கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

### விஷ ௵ மார்கழி ௴ ௯ ௳ ஆதிவாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் ௴ ௨௭ ௳

இந்தனுள் சாயங்காலம் அக்கிருரம், பனந்தோப்பு முத்துறங்க கிருமணிக்கும் திருக்காமி கிருமணிக்கும் ஒரு வருஷத்துக்கு னூறு ரூபாய் தீத்துக் குடுத்தோம். சவுபாக்கியவதி குழந்தைக்கு நித்தம் ரெண்டு விசை, மூனு விசை பேதியாகி கொண்டு வருகுறதுக்கு, ருயப்பன் சொஸ்தப்படுத்துகிறேணெண்ணு அபிஷகம் குடுத்ததின்பேரிலே முன் ௭ முதல் நித்தம் னூரு விசை, னூத்தன்பது விசை பேதியாகிக் கொண்டு வருகிது. இந்தனுள் சாயங்காலம், கிஷ்ண பிள்ளே வயித்தீஸ்சுவரன் கோவிலிலே யிருந்து வந்தார்.

### விஷ ௵ மார்கழி ௴ ௰ ௳ சோமவாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் ௴ ௨௧ ௳

இந்தனுள் சாயங்காலம், வெங்கிட்டாம்பேட்டையிலிருந்து சிதம்பரனுத பிள்ளே யெழுதி அனுப்பின காகிதத்தில் யெழுதி இருந்துது. வேலூரின்பேரிலே லஷ்கார் யிறங்கி

இதுவரைக்கும் சண்டையாய் தானே இருக்குது. முறத்துசல்லேகான் அய்யிதர் ஞயக்கனுக்கு பவுஞ்சு மத்தது அனுப்பச் சொல்லி யெழுதினுர். அதின்பேரிலே சிறிது பவுஞ்சு வருகுதெண்ணும், வானம்பாடி திருவத்தூர் கில்லா வாங்கிக்கொண்டு, யிப்பால் வருகுருர்யெண்குற சமாச்சாரம் வந்துதுயெண்ணும், கருங்குழி கோட்டையிலே பிருஞ்சுக்காரர் யிறனூறு பேரை மட்டுக்கும் கையிது பண்ணி வச்சிருந்தார்கள். அவர்கள் ருத்திரியிலே வெளியே புறப்பட்டு இங்கிறிசுக்காறர் கையிலே யிருந்த ஆயுதங்களே பிடிங்கி கொண்டு, அங்கே யிருந்தவர்கள் யெல்லாரையும் சின்னுபின்னப்படுத்தி, அன்னேரமே வெளியே பிறப்பட்டு கில்லா காலி பண்ணிபோட்டு, வெளியிலே தாம் தூம் பண்ணி, கொள்ளேயிட்டு, யேதேயிச்சையாய் பிறப்பட்டு போய்விட்டார்களாம். சிறிது பேர் வெள்ளக்காறர் இது வழியாய் வந்து அகப்பட்டு, கூடலூரிலே கொண்டு போய் சேத்தார்கள். இந்த சேதி ஆற்காட்டுக்கு போய், நபாபு மம்முதல்லிகான் அவர்களண்டையிலே இருந்தது. அவர்கள் பிறப்பட்டு மூலேக்கு மூலே தேடுகுருர்களெண்ணும், இதல்லாமல் கப்பல் வருகுற சேதி சறுருய் யெண்ணி, சென்னப்பட்டணம் கில்லாவுக்கு சக்கீரா போடுகுருர்கள். கூடலூர் தெருக்களிலே மோற்சா போடுகுருர்களெண்ணும், பிருஞ்சுக்காரர் கூடலூர், பறங்கிப்பேட்டை பின்னும் அங்கேயிருக்குறவர்கள் யிருக்க வாணும். பின்னே யெங்கேயாகிலும் போகச்சொல்லி சுறுக்கு பண்ணுகுருர்களெண்ணும்; கூடலூர், தேவனும்பட்டிணத்தில் யிருக்குற வற்த்தகாள், உத்தியோகஸ்தாள், குடிகள் யிவர்கள் சிறிது பேர், தட்டுமுட்டுகள் யிவிடத்துக்கு அனுப்புகுறதுக்கு எத்தினம் பண்ணி சாகா வந்து பார்க்குருர்களெண்ணும், சலாபத்து சங்கு சமாச்சாரம் கோலார் முன்பா சலப்பு கோட்டை அந்த பிருந்தியங்களிலே யிருக்குருர்களெண்ணும் யெழுதி யிருந்துது. சவுபாக்கியவதி குழந்தைக்கு நேத்தைய பிறகாரம் இருந்துது.

அய்யாசாமிக்கு பிருன்சு படிப்பிக்கிற
மேஸ்தர் முசே வுலப்பாம் எழுதி
வச்சது. சதளளசாயஉம் ஆண்டு
லீவுறைப்[72] பாத்து சொன்னது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சனேர் | ௴ மு | சுக்கிறவாரம் | தேதி | ஙயக | பகல்மணி | கூ | ருத்திரி | யரு |
| பெவுரேர் | ௴ மு | சோமவாரம் | ” | உயஅ | ” | கூ | ” | யரு |
| மாரிஸ் | ௴ மு | சோமவாரம் | ” | ஙயக | ” | யஉ | ” | யஉ |
| அபிரீல் | ௴ மு | குருவாரம் | ” | ஙய | ” | யங | ” | யக |
| மாயு | ௴ மு | சனிவாரம் | ” | ஙக | ” | யசா | ” | அ |
| சூனி | ௴ மு | மங்களவாரம் | ” | ஙய | ” | யசா | ” | அ |
| சூலி | ௴ மு | குருவாரம் | ” | ஙயக | ” | யசா | ” | அ |
| அகோஸ்து | ௴ மு | ஆதிவாரம் | ” | ஙயக | ” | யச | ” | ய |
| செத்தாம்புர் | ௴ மு | புத்வாரம் | ” | ஙய | ” | யஉ | ” | யஉ |
| ஒக்த்தோம்புர் | ௴ மு | சுக்ரவாரம் | ” | ஙயக | ” | ய | ” | யச |
| ஞெவாம்புர் | ௴ மு | சோமவாரம் | ” | ஙய | ” | கூ | ” | யரு |
| தெசாம்பர் | ௴ மு | புத்வாரம் | ” | ஙயக | ” | அ | ” | யசா |

## விஷ ஸ்ரீ மார்கழி மீ௳ யக ௳ மங்களவாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் மீ௳ உஉ ௳

இந்தனுள் காலமே ஆசாரியார் யவர்கள் பெண்சாதி மேற்படி மீ௳ உஉ ௳ ஆதிவாரனுள் காலம்பண்ணி போனதுக்கு, 〈மேற்படி〉 வெங்கிட்டருயரை யனுப்பிவிச்சு வரச்சொல்லி அனுப்பிவிச்சோம். அவருக்கு பங்காளத்து யிலாச்சர் ஒண்ணு குடுத்து துக்க சங்கதி சொல்லி வரச்சொன்னோம்.

## விஷ ஸ்ரீ மார்கழி மீ௳ யகூ ௳ புத்வாரம்: சதளளசாயக ஆண்டு, திசெம்பர் மீ௳ ஙய ௳

யிந்தனுள் சாயங்காலம், நம்முட தட்டுமுட்டு நிமித்தியமாயி சென்னப்பட்டணத்துக்கு போன முத்தப் பிள்ளே வந்து சேந்தார். அவர் சொன்ன வயணம். விக்கிரம வருஷம் புரட்டாசி மீ௳ யஉ ௳ நம்முட தட்டு முட்டு ஒரு மரப்பெட்டியிலே போட்டு, கையிலே சிறிது பைகளிலே நகையும், பவழம் முதலாகிய தட்டுமுட்டு யெடுத்து, அதிர்ருமரு கொண்டு போய் சேரச்சொல்லி போனோம். கஸ்தூரி செட்டி, பிருஞ்சு பிறிசேனர் ............ ............ சதளளசாய மாசி மீ௳ யஉ ௳ சாயங்காலம் ............ காத்தும் மழையும் வரக்கண்டு பிற்பாடு நிண்ணு போச்சு. சாயங்காலம் ஆலமர காவத்துறை இவிடத்திலே யிறங்கி சாப்பிட்டு போவோமெண்ணு ............ வெள்ளக்காறரும் அதிலே தட்டுமுட்டு யென்னவெண்ணு வந்த ............ வெள்ளக்காற மனுஷருக்கெண்ணு, அதின்பேரிலே இவரையும் இவன் கையிலே யிருந்த சாமான்களேயும் யெடுத்துக் கொண்டுபோய், அதுக்கு எசமானுய் யிருந்த ஆள் கையிலே கொண்டு போய் விட்டான். அதனே அவன் கையில் வாங்கி வரவும், கொண்டு வந்த இந்த வுடமை ஆருதுயெண்ணு கேட்க, ஆனந்தரங்க பிள்ளேயவர்களது யெண்ணு சொன்னுன். இன்னம் ரெண்டு பேர் காரியக்காரவர் யிருந்து சத்துரர்களே யெங்கே யெண்ணு கேட்டான். இங்கே தான் போன மங்களபிள்ளே, கஸ்தூரி செட்டி ரெண்டு பேரும் யிருக்குறன் யெண்ணு சொன்னுன். அதின்பேரிலே எங்கள் ரெண்டு பேரையும் அழைச்சுபோய், இன்னம் என்ன வந்திருக்குது யெண்ணு கேட்டான். ஒரு மரப்பெட்டியிலே தட்டுமுட்டு வந்திருக்குது யெண்ணு சொன்னோம். சென்னப்பட்டணம் போனுல் இது போனவசத்திலே வராது. ஞன் பாத்துவிட்டு விடுகுறேனெண்ணு சொல்லி, எங்களே காவல் வச்சு, இதிலேயிருந்த பெட்டியை யெடுத்து வந்து கோட்டைக்குள்ளே வைச்சுக் கொண்டு, மறுனுள் காவலிலே யிருக்குற யெங்களே அழைச்சு வைச்சுக் கொண்டு, பொட்டியை திறக்க சொன்னுன். நாங்கள் யெப்படி திறப்போமெண்ணு சொன்னதுக்கு, நான் பாத்து மறுபடி சாவி போட்டு கொள்ளுங்கோள் யெண்ணு சொன்னுன். அதின்பேரிலே கட்டையால் அடித்து பொட்டியை திறந்து காண்பிச்சோம். அதுக்குள்ளாக யிருந்த செம்பை வைச்சுபோயி தானும் திறந்து அதுக்குள் யிருந்த நகையை கண்டு, ஒண்ணெண்ணுக யெடுத்துப் பாத்து அசீசாயிதாப்படிக்கு சரி பாத்து, தானும் ஒப்பிசரியார் வயணம் யெழுதிக்கொண்டு, அதிலே பைகளிலேயிருந்த நகைகளே பாத்து யெழுதிக் கொண்டு, மறுபடியும் பொட்டியிலே போட்டு சாவியை குடுத்துவிட்டு, நாங்கள் கையெழுத்துப்போட போனுல், உங்கள் கையிலே முத்திரை மோதிரம் யில்லே. யென் முத்திரை போட்டு வைக்குறேனெண்ணு எழுதிபோட்டு வச்சுக் கொண்டான். கையிலே வாங்கிக் கொண்ட பூட்டை மாத்திரம் அவிழ்த்து பாத்து, யெழுதி கொள்ள யில்லே. எங்களே போய் சாப்பிட்டு வரச் சொன்னுன்.

பிறகு அவன் துபாசி வீரருயனுடனே வச்சிருந்ததாகவும், குடுத்தால் உங்களுடனே குடுத்துவிடுகுறேமெண்ணு சொன்ஞன். எங்கள் யெசமான் உத்தரவு யில்லாமல் யெப்படி பேசுவோமெண்ணு சொன்னதுக்கு, இந்த மூட்டைக்கு நான் எசமான். நாளை குடுத்துதும் யில்லாவிட்டாலும் ஒருத்தரும் யில்லேயே, யென்ன செய்யலாமெண்ணும், யிப்போ ஞன் ............ பிக்கட்டுடனே சொல்லியிருக்குறேம். நீங்களும் ரூபாய் கொண்டு போகக் கொள்ளுங்கள். உங்கள் உடமையை குடுத்துவிடுவாணெண்ணு சொல்லி, பேருக்கு ரெண்டு விருகன் விழுக்காடு, மூணு பேருக்கு ஆறு விருகன் குடுத்து அனுப்பிவிட்டார். அவிடம் விட்டு பிறப்பட்டு சென்னப்பட்டணம் போய் சேந்தோம். பிற்பாடு சாவடி வெங்கடாச்சல பிள்ளே சிறிது காகிதமும் கொண்டு வந்தார். அது நேத்து முத்துகிஷ்ண பிள்ளே, அய்யதம்பி பிள்ளே, வெங்கடாசல பிள்ளே, சாவடி வெங்கிடகிஷ்ண பிள்ளே, வேங்கிட பிள்ளே பின்னும் யிருக்குற பெரிய மனுஷர்களெல்லாம் கண்டு பேசினேம். அவர்கள் பேசுவோமெண்ணும், நாங்கள் பேசப்போகாதெண்ணும், இது வெள்ளக்காறர் வழியிலே பேசவேணுமெண்ணும், இப்படியாக ஞஞவிதமாக சொன்ஞர்கள். அப்படியிருக்க மேஸ்தர் பிக்கட்டு அவர்கள் கூத்தியார் சாக்கிசேன் யென்கிறவளே கண்டு பேசினல், அவள் வழியிலே காரியமாகுமெண்ணு சொன்ஞர்கள். அதின்பேரிலே அவள் துபாசி பச்சைய பிள்ளேயை வச்சு கண்டுபேசி, ஒரு உருப்படி ஒண்ணு வாங்கிவர கேட்டதுக்கு, பித்திசாம் நடந்த சங்கதியாய் யெழுதிக்கொண்டு, மதாம் மொறசேன் யண்டைக்குபோய் ⟨பேட்டி⟩ பண்ணிக்கொண்டு ஆறு ரூபாயும் குடுத்து பித்திசாமை குடுத்தோம். அவள் அதை வாங்கி கொண்டு, இந்த பித்திசாம் மேஸ்தர் பிக்கட்டு கையிலே குடுத்து, உங்கள் காரியமாய் பண்ணிகுடுக்குறேமெண்ணு சொன்ஞள். அவளுக்கு சொன்னது. பவளத்து மாலே ஆயிரம் வருகனும், அவள் துபாசி பச்சைய்ய பிள்ளேக்கு அன்னூறு வருகன் பேசினது. பிற்பாடு மதாம் சாக்கிசேன் சொன்னது. இந்த பித்திசாம் மேஸ்தர் பிக்கட்டு அவர்கள் கையிலே குடுத்தேன். அவர் அதை பாத்துக்கொண்டு நல்லது; அப்படியே ஆகட்டுமெண்ணு சொன்ஞரெண்ணு சொன்ஞள். அதின்பேரிலே அவளண்டையிலே காத்துக்கொண்டிருந்தோம். அப்படியிருக்கப்பட ரெண்டு தரம் தோஞயை யவர்களுடனே சொன்னதுக்கு, நல்லது ஆகட்டுமெண்ணு சொன்ஞள். பிற்பாடு மேஸ்தர் பிக்கட்டு யவர்கள் புதுச்சேரிக்கு போய் வந்தவுடனே, உங்களுடைய கையிலே குடுத்துவிடுகிறேணெண்ணு சொல்லுகுறர். அதுவரைக்கும் மனம் பொறுங்கோளெண்ணு சொன்ஞள். நல்லதுயெண்ணு சொல்லியிருந்தோம். இப்படியிருக்க புதுச்சேரி பட்டணம் பிடிச்சு, சிறிது ஞள் பொறுத்து மேஸ்தர் பிக்கட்டு யவர்கள் சென்னப்பட்டணத்துக்கு வந்து சேந்தார். பிற்பாடு புதுச்சேரியிலிருந்து இவன் அவர்கள் காகிதத்திலே, ஞங்கள் யிவடத்திலே மேஸ்தர் பிக்கட்டவர்களே கண்டு பேசினேம். அவர் ஆதரிச்ச விசேஷமாய் சொல்லியிருக்குறர்களாம். போய் கண்டு பேசுங்கோள்னு யெழுதி வந்தது. அப்படியே மறுபடியும் இந்த சேதி மதாம் சாசுக்கேனுடனே சொன்னதுக்கு, நல்லதென்னு துரையவர்கள் சொன்னது. நல்லது ஆகட்டுமென்னும், அவரும் புதுச்சேரிக்கு சரிபிடிச்ச வேலேயிலே யிருக்குறர். ஆகையால் பேசக்கூடாதிருந்தது. யிப்படி யிருக்க மதாம் சாக்கசேன் உடம்பு சொஸ்தமில்லாமல் பறங்கிமலேக்கு போயி யிருந்தாள். அவிடத்திலே காத்துக் கொண்டிருந்தோம். இப்படியே மாதம் இதோ அதோவெண்ணு சொல்லிக்கொண்டு வந்தார்கள். பிற்பாடு பின்னும் மொரு பித்திசாம் யெழுதி, அவள் துபாசி பச்சைய பிள்ளேயையும் அழைச்சுக்கொண்டு, ரெண்டும் சேத்து அவளுக்கு கொண்டுபோய், மேஸ்தர் பிக்கட்டு அவர்களுக்கு நசர் வச்சு பித்திசாம் குடுத்தோம். அதைப்பாத்துக் கொண்டு நல்லது;

முத்துகிஷ்ண முதலியாரை கண்டு பேசுங்கோளெண்ணு சொன்ஞர். பிற்ப்பாடு முத்துகிஷ்ண முதலியாரை கண்டு பேசிஞேம். அவரும் பத்து ஞள் கூட கோட்டைக்கு அழைச்சு போய் துரையை காண்பிச்சு கொள்ளச்சே, ஒரு ஞள் நாங்கள் வேதனைகள் யடைந்துகொண்டு இருக்குரேமெண்ணு சொன்னதுக்கு, முத்துகிஷ்ண முதலியாரை உள்ளே யழைச்சு போய் சிறிதுநேரம் பேசியிருந்து, பிற்பாடு வெளியே வந்து துரையவர்கள் சொல்லுகுறது. இது ஆயக்காறரை சேந்து போச்சுதுயெண்ணு சொல்லுகுருரெண்ணு சொன்ஞர். இத்தனை நாளும் தாரேம் யென்ன செய்ய போரேமெண்ணு சொன்னதுக்கு, இதுவல்லாமல் மறுத்து கொள்ளகூடாது. ஆஞல் ஞாயத்தின் அளவிலே இந்த கடமையை, ஆயக்காறர் முன்னிலையாய் பேசிப் பாருங்கோளெண்ணு சொன்ஞர். அந்த விசேஷத்தை கேட்டுக்கொண்டு, பச்சையப்ப முதலியாருடனே சோமவாரம் வந்து கண்டு பேசி, போகச் சொன்ஞேன்னு சொல்லி வந்து முத்துகிஷ்ண முதலியாரை கண்டு பேசி, நீங்கள் ஆர் வழியிலேயாகிலும் பேசிக் கொள்ளுங்கோளெண்ணு சொல்லிப் போட்டு போஞர். இந்த வொண்ணொரு தரம் யிவர்கள் யிப்படி சொன்ஞல் செய்ய வேண்டிய தென்னவெண்ஞல், முசே லெறி யவர்களுடனே சேதியை சொல்லி, அவர் சொல்லி அதை அறியவேணுமெண்ணு அவர் யிருக்க, கும்பினீர் தோட்டம் வந்தோம். அவிடத்திலே துபாசிகள் யோசனை பண்ணுமிடத்தில் அவர்கள் சொன்னது. முசே லெறியுடனே சொல்லி காரியமில்லை. யிவடத்திலே மேஸ்தர் பிக்கட்டு அவர்கள் வசத்திலே, முசே லெறி பேச்சே ஆதிக்கமாய் யிருக்குது. ஆகையால் அவராலே போகவேணுமெண்ணு சொன்ஞர்கள். அப்பறம் அவர்களுடைய துபாசி புறப்பட்டு அவர் முன்னிலையாய் கண்டு, லாசு தட்டுமுட்டுடனே சொன்னதுக்கு, இந்த கணமே நானே வாங்கி குடுத்துப் போறேணெண்ணும், மத்தது ரெண்டு விழுக்காடு குடுத்தால் 〈ஆச்சு〉 யெண்ணு சொன்ஞன். அதுக்கு நல்லது யெண்ணு சம்மதிச்சோம். பிற்பாடு அந்த வயணமெல்லாம் யெழுதி வைக்கச் சொல்லி தானே யெழுதிக்கொண்டார். இந்த தடவை சங்கதிக்கு மேஸ்தர் பிக்கட்டு யவர்களை கண்டு பேசிஞ நல்லதெண்ணு சொல்லிவிச்சதுக்கு நீங்கள் யெங்கும் போகாமல் யிங்கே தானே காத்துக்கொண்டு இருங்கோளெண்ணு சொன்ஞர். அதின்பேரிலே காத்துக்கொண்டு யிருக்குரேமெண்ணு ........... இது முதலான சேதிகள். ஆனி மீ௳ மு ஞள் போனவிடத்திலே திருவெட்டீஸ்வரன் கோவிலிலே காலடி வெங்கிடாசல பிள்ளை, பொன்மலை பிள்ளை, கஸ்தூரி செட்டி யிவர்கள் சொன்ஞர்களெண்ணும் பிற்பாடு மறுஞள் சென்னப்பட்டணம் கும்பினீர் தோட்டத்திலே யிறங்கியிருக்குற முசே லாசு யண்டைக்குப் போய் காண்பிச்சுக் கொண்டு இந்த ஞயங்களெல்லாம் சொல்லி யிப்படி இருந்ததாம். இதை தெரியதுக்கு மெய்தான்; ஞன் யெப்படியும் வாங்கி குடுத்துத் தாறேன் பின்னே ஒரு ஞளிலே ஆகாது. நீங்கள் இதுக்கு ஒண்ணும் யோசனை பண்ண தேவையில்லை. ஆஞல் நாலிலே, மூணுலே ஒரு தரம் வரும். யிவர்கள் யென்னேரம் யென்னன்டையிலே காத்திருக்கட்டும் யெண்ணு சொன்ஞன். அப்படியே ஆகட்டும். உம்மை நம்பி இருக்குரேமெண்ணு சொன்னதுக்கு, கைபோட்டு யெப்படியும் ஞன் வாங்கிக் குடுப்பேன். யென்னையல்லாமல் பின்னவன் ஒருவராலே ஆகாதெண்ணு சொன்ஞன். அதின்பிற்பாடு அனுப்பிவிச்சுக் கொண்டு திருவட்டீசுவரன் கோவில் சேந்தோம். அண்ணு மறுஞள் அங்கேயிருந்து ஆனி மீ௳ ரு சென்னப்பட்டணத்திலே திருமலைய பிள்ளை யிருந்த வீட்டிலே போய் சேந்தோம். அண்ணு ருத்திரி அய்யத்தம்பி, வெங்கிடாச்சல பிள்ளை முதலாகிய பேர்கள் வந்தார்கள். மறுஞள் முத்துகிஷ்ண முதலி அவர்கள் வீட்டுக்கு போய், அவரை கண்டு பேசினதுக்கு யென்ஞலே ஒண்ணும் யில்லை. இந்த துரை சுபாவம் நாமாய் சொன்ஞல் கெட்டுப்போம்; ஆகையால்

அவர் கேட்டதுக்கு மாத்திரம் ⟨த்திரம்⟩ சொல்லுகுறதேயல்லாமல் வேறே யில்லே. அப்படியிருக்க நான் ரெண்டு தரம் பேச்சுகளுக்கு ஆசாரமாய் சொல்லயில்லே. இப்பவும் நீங்களாச்சும் வழியிலே கண்டு பேசியிருக்கிறீர்களே, அவர் பேச்சு துரை கையிலே வர காணப்படுகையிலே கொஞ்சமாய் யிருக்குது. அவர் வழியிலே கவையாக வேணும். அப்படி சொல்லுகுறேனெண்ணு உபசாரமாய் சொன்னன். அவருக்கு எப்படி உபசாரமாய் சொல்ல வேணுமோ அப்படியெல்லாம் சொல்லி யனுப்பிவிச்சுக்கொண்டு வீட்டுக்கு வந்தோம். பிற்ப்பாடு அய்யதம்பி வெங்கிடாசல பிள்ளே வீட்டுக்கு போயிருந்து, வார்த்தை சொல்லி போகச்சே, புதுசாய் வாங்கின அண்டை வீட்டிலே அழைச்சு போய், இந்த வீடு நீங்கள் இருக்குறதுக்கு முஸ்தீது பண்ணிவிக்குறேனெண்ணு சொன்னர். கவையில்லே. நம்முட வீடும் இருக்கச்சே, அதென்னும் இதென்னும் பேதமாக இருக்க கவையில்லேயெண்ணு சொன்னேம். ஆனல் கச்சேரியில் முஸ்தீது பண்ணிவிக்கிறேனெண்ணு சொன்னர். நல்லதெண்ணு சொன்னேம். அப்போ அங்கே ஒரு வெள்ளேக்குதிரையையும், ஒரு சோடு காடி மாடும் கட்டி வச்சிருந்தது. அதை காண்பிச்சு அண்ணசாமிக்கு அனுப்பிவிய்யுங்கோளெண்ணு சொன்னன். அதுகென்ன, பிற்பாடு ஆகட்டும்யெண்ணு உபசாரம் சொன்னேம். பிற்ப்பாடு வெளியிலே யிருந்து பேசிக்கொண்டிருக்கச்சே, தங்க பூப்போட்ட மேல் உருப்படி, சோடு ரெண்டும், சந்தன விசிறி ஒண்ணும் குடுத்தார். அனுப்பிவிச்சுக் கொண்டு வளவுக்கு வந்துவிட்டோம். மறு ஞள் காலமே அந்த திரையையும், வெள்ளிமுளறியும், காடிமாடும் நாமிருக்குற விடத்திலே கொண்டு வந்து கொடுத்தார். அவருக்கு அதுக்குதக்க உபசாரம் சொல்லி யனுப்பிவிச்சோம். பிற்ப்பாடு முசே லாசண்டையிலே கண்டுபேசிக் கொண்டு வரச்சே, ஞலு ஞள் போகட்டும், ரெண்டு ஞள் போகட்டும் யெண்ணு சொல்லிக்கொண்டு வந்தான். அப்படியிருக்க இவன் மெதுவிலே வருகுறன் யென்குறதாய், முசே லெறியை கண்டு பேசி, அவருடனே தட்டு முட்டு சங்கதிக்கு யெப்படி சொல்ல வேணுமோ அப்படி சொல்லி மனம் நம்பி இருக்குரேமெண்ணு சொன்னதுக்கு நல்லது. லாசு யென்ன சொன்னரென்னு கேட்டார். ஞன் யெப்படியும் வாங்கித் தருகிறேனெண்ணு சொல்லிக் கொண்டு வருகுறர் யெண்ணு சொன்னேம். முன்னேயும் ஞன் சொல்லியிருக்குறேன். இப்பவும் சொல்லுகுறேன் யெண்ணு சொன்னர். நல்லதுயெண்ணு அனுப்பிவிச்சுக் கொண்டு வெளியே வந்தேன். முசே லெறியவர்கள், முசே லாசு சாம்பிருவிலே போய் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். மறு ஞள் போய் முசே லாசுவைக் கண்டு பேசினேம். நீங்கள் பதற வேண்டாம். ஞலு நாளேக்குள்ளே ஞன் யெப்படியும் வாங்கி குடுப்பேன். என் தலேயை அறுத்து வைச்சு வாங்குவேன். நீங்கள் ஆருடனேயும் சொல்லவேணுமெண்ணு சொன்னன். அப்படியும் சிறுது ஞள் பாத்தோம். இதுஞல் தாமிஷமேயல்லாமல் காரியத்தை காணேமெண்ணு தோத்தி, யிது யிப்படி யிருக்கட்டும். இன்னம் ஒரு வழியிலே பிறேத்தனம் பண்ணி, மேஸ்தர் பிக்கட்டு யவர்களுக்கு பித்திசாம் குடுப்போமெண்ணு ஒரு யோசனே பண்ணி, அவரை கண்டு பேசினேம். அதிலேயும் காரிய சாதகமாய் யிருக்க யில்லே. யிப்படி யிருக்கச்சே, துலுக்க வேஷம் போட்டுக் கொண்டிருக்கிற பிளமேன் யென்கிறவன் வந்து, ஞன் முசே மயாரன் யண்டையிலே போயிருந்தேன். அவிடத்திலே யிந்த பேச்சு பிரஸ்தாபம் நடந்துது. அப்போ யென்னே பாத்து பிளமேன் யவர்கள், உடமை சங்கதிக்கு முசே லாசு மாரிபத்திலே பேசுகுறர்கள். அந்த சங்கதி ஞன் அறியேன். அவர்கள் மனுஷர் வந்து விசாரிச்சிருக்குது, அவரண்டைக்கு நாளே நான் வந்து கண்டு பேசுகுறேனெண்ணு சொன்னர் யெண்ணு சொன்னர். அப்படியா! நாமே அவரை கண்டு பேசுவோம் மென்கிறதிலே, ருத்திரி ஒன்பது

மணிக்கு அவர் வீட்டுக்கு போய், அவரை கண்டு பேசினேம். அவர் தங்கள் காரியம் லாசு வழியிலே பிறேத்தனம் பண்ணுகுறுர்களே, யெப்படி யிருக்குதெண்ணு கேட்டார். அவர் அனுகூலம் பண்ணி குடுக்குறேமெண்ணு சொல்லியிருக்குறுரெண்ணு சொன்னேம். இந்த கவை ஒருக்காலும் அவராலே ஆகாது. அவர் பிறிசனேரானபடியினுலே ஞாயமாய் எடுத்து உத்தாரம் சொல்லக் கூடாது. முசே லாலி யவர்கள் புதுச்சேரியிலே இருக்கச்சே, மேஸ்தர் பிக்கட்டுக்கு இந்த சங்கதிக்கு யெழுதி யனுப்பிவிச்சாரெண்ணும் யெழுதி யனுப்பிவிச்சார். இவிடத்திலே ஞன் இந்த ஞாயம் பேசினேன். அப்போ நடந்த சங்கதிகள் வேறே. ஆனல் இப்போ புதுச்சேரி போய்விட்டது ஆகிலும், ஞாயத்துனளவிலே யெடுத்துக் கொள்ளகூடாது. ஞன் பிறிசனேரல்ல. அந்த காகிதமும் யென் கையிலே யிருக்குது. ஆகையால் ஞன் பேசுவேன், அதுக்கு அவர் தடை சொன்ஞல், அந்த ஞாயம் குமுசலிலே பேசுவேன் யெண்ணு சொன்ஞர்.

## விஷ ஸ்ரீ மார்கழி மீ உக உ சுக்கிரவாரம்: சதளளசாயஉ ஆண்டு, சனேர் மீ க உ

இந்தனுள் காலமே சநேர் பண்டிகையானபடியினுலே, நம்முட பிருஞ்சுக்காரரெல்லாம் தில்லையாடிக்கு போய், கும்பனிர் தோட்டத்திலே யிறங்கி யிருந்தவிடத்திலே, அவிடத்தில் போயி, அவிடத்திலே யிருந்த முசே திபோஷேத்து, முசே தொத்தேன், முசே பிஷாற், முசே சேகக்கத்தி, முசே செல்மியாக்கு, மதாம் மனுவாள் முதலாகிய பேர்களுக்கு உபசாரம் சொல்லி, பூச்செண்டு குடுத்து சந்திச்சோம். சந்திக்கச்சே நாம் சொன்னது யென்னவெண்ஞல், வர்ற வருஷ யின்ஞளைக்கு சாமியுட தயவினுலே யெல்லாரும் நம்முட புதுச்சேரிக்கு போயி சேந்து, யிந்த பண்டிகை அவிடத்திலே கொண்டாட தக்கதாக சாமி கடாஷ்ஷம் பண்ணவேணுமெண்ணு ஞம் சொன்னதுக்கு, அவர்களும் மெய்தான். நீர் சொல்லுகுறபடிக்கு சாமி தயவு பண்ணுவார் ஆனுலும் இதுவரை இக்கஷ்ட காலம்தான். பின்னும் ரெண்டு மூணு மாசத்திலே கப்பல் வரும். ஞம் சுகப்படுவோமெண்ணும், அவர்களும் பதிலு வுபசாரம் சொன்ஞர்கள். மத்தியானத்துக்கு மேலே, ஞலு மணி முதல் தயங்கம்பாடி கோட்டைக்குள்ளே குவர்னதோர் முசே ஆபஸ்த்தன் யென்குறவர் யண்டையிலே சந்திக்கவேணுமெண்ணு, கோட்டைக்கு உள் காம்பவுண்டண்டைக்கு போகையில், ஞம் வர்ற சமாச்சாரம் கேட்டு, வுறுக்காந்திருந்தவர் யெழுந்திருந்து, வுபசாரமாயி ஞம் குடுத்த பூச்செண்டை வாங்கிக் கொண்டு, வுருக்காரச் சொல்லி சொன்னமாத்திரத்திலே, ஞம் அவரை பாத்து சொன்னது யென்னவெண்ஞல் இந்த வருஷம் நம்முட பண்டிகை இவிடத்தில் கொண்டாட தக்கதாக சாமி கடாட்ஷம் பண்ஞர். அல்லாமலும் நம்முட பட்டணம் யெடுபட்டு பட்டதினுலே, ஞங்கள் நம்முட தினமார்க்கது ருசா கொடியிண்ட ஆசராவிலே வந்திருந்து ராச்சியம் பண்ணுகுறேம். நீரும் நல்ல மனுஷர்ராகையால், சகல செனங்களும் நன்மையாயி உள்ள மட்டுக்கும் சந்தோஷமா யிருக்குதென்னும் சொன்னதுக்கு, அவரும் பதிலுக்கு இன்னம் கொஞ்சம் நாளையிலே நீங்கள் உங்கள் பட்டணத்தை சேந்து சுகப்படுவீர்களெண்ணு சொல்லி, இவிடத்திலே நீங்கள் யிருக்குறபடியினுலே, வுங்களை பாத்து வேறு பேர் யிருக்குறுர்கள். இதிலேயும் சிறுது பேர் யிவிடத்திலே வந்திருந்த பேர், வடக்கே தெற்கே போனதாயி கேழ்கப்பட்டுதென்னு கொவர்னதோர்

சொன்னதாகவும், கொஞ்சம் வுண்டாயிருக்குமே, நாமும் சொல்லியபடி ஒரு மணி நேரம் மட்டும் றெம்ப தயவாய் பேசிக்கொண்டு யிருக்கச்சே, பன்னீர் கொண்டுவந்தார்கள். நான் அந்த பன்னீரை வாங்கிக் கொண்டு, நமக்கும் தெளிச்சு, பாக்கு வெத்திலே குடுத்து, மிகுதியாய் வுபசாரம் சொல்லி யெழுந்திருந்து, சாம்புறு வாசப்படி மட்டும் வந்து அனுப்பிவிச்சுக் கொண்டு, அவருடன் போய் வாரேனெண்ணு வெளியே வந்து, அவருக்கு முன், யெட்டு ஞாழிகைக்கு பிறையாறு வீடு வந்து சேந்தோம். இந்தனுள் வேலூர் செய்தி கேழ்விப்பட்டது யென்னவென்றால், பசாலத்து சங்கு யண்டையிலே யிருக்குற அய்துரு ஞயக்கனும், அய்யாயிரம் குதிரையும், முன்னூறு காறுபாறுகளும், வெள்ளக்காறர் ரெண்டாயிரம் பேருமாகி, வேலூர் முற்றுகை சர்காவுக்கு மத்ததாயிரம். வருகுற மாசம் இங்கிறிசுக்காறர்களுடைய வக்கீல், மேஸ்தர் பிக்கட்டுக்கு யெழுதி யனுப்பினதாகவும், அந்த சேதிபடி கூட்டு சென்னப்பட்டணத்திலே குமுசேல் கூடி, மாசம் மூணு லஷ்சம் தண்டுக்கு சிலவு செஞ்சு ஞலஞ்சு மாசமாச்சுது. ஆயிரம் பேர் மட்டுக்கும் வெள்ளக்காரர் சேதம்பட்டுது. இதுவரைக்கும் கோட்டைக்கு யெதுவும் ஆகவில்லே. ஆகையால் அவர்களே வந்து மத்தது ஆனுர்களேயானுல், கோட்டை வாங்குறதும் மேற்படி மாசம் தண்டு கேழ்க்க மாட்டாதுயெண்ணு, கற்ஞல் கெலி குமாந்தானுக்கும் தாக்கீதாய் யெழுதி கேளெண்ணு யெழுதி, கோட்டை வாங்குறது அல்லவெண்ஞல், சமாதானத்திலாவது கோட்டை வாங்குறது, யென்னதுக்கும் சொல்ல காகிதமும், அல்லாரும் கையெழுத்து போட்டு யனுப்பிவிச்சு மருந்து, குண்டு விஸ்தாரமாகி அனுப்பிவிச்சதாகவும், அந்த காகிதம் பாத்த மாத்திரத்தில், உள்ளுக்குள்ளே முறத்து சல்லிகானுக்கு சொல்லி அனுப்பிவிச்சு ஞலு பேர்களினுலே வச்சு, பொம்பு போயி உள்ளே விழத்தக்கதாக, ரெண்டு ஞள் அகோறதிக்கப்பட்டபடியினுலே, மிறுத்துசல்லிகானும் அதயிரியப்பட்டு, குமாந்தான் சொல்லுக்குள்ளே அகப்பட்டதுக்கு சம்மதிபட்டு, ருயமாலிலே முறத்துசல்லிகான் யிருக்குறதாகவும், அவர் பெண்டுகள் பிள்ளைகள் அவரண்டை விட்டு, கில்லா சாகிறு சீமைக்குள்ளே, அவர் கேட்ட சீமை லஷ்ஷம் ரூபாய்க்கு விட்டு, கில்லா மம்முதல்லிகானுக்கு தேவை யில்லையெண்ணும், இங்கிலிசுக்காரர் வசத்திலே யிருக்குதென்னு அவர்களும் வச்சிருந்து, ஞலு ஞளைக்கு வச்சிருந்து அப்பால் விடுகுற போது, முறத்துசல்லிகான் வசத்திலே தானே குடுத்துது யெண்ணும் வுடம்படிக்கை பேசி தீந்து, சென்னப்பட்டணத்துக்கும் குமுசேல் கடதாசியும் அழைப்பிச்சுக் குடுத்து, மார்கழி மீ௳ யக ௳ கற்ஞல் கில்லி குமாந்தான் வேலூர் கோட்டைக்குள்ளே போயி, முறத்துசல்லிகானை வேலூர் ருயமாலிலே கொண்டுபோய் வச்சு, கோட்டைகாரரெல்லாம் கும்பினி முத்திரை யிட்டு, மனுஷரையும் வச்சு, முறத்துசல்லிகான் மனுஷர் யிருக்குற சேவுகரெல்லாம் வெளியே போகச் சொல்லி, கோட்டை வாசல் கொத்தளம் கீழ் யிருக்குற மலையிலே யிருக்குற டாணு குமாந்தான் மனுஷர் யனுப்பிவிச்சு, தண்டை ரெண்டாய் பிரிச்சு, படிக்கு திசாறுக் கடைக்கு பிரிச்சு, பாதி ஆறணி மேலேயும் யனுப்பிவிச்சதாயும், மம்முதல்லிகான் ஆற்காட்டிலேதானே யிருக்குறதாய் சேதி கேழ்க்கப்பட்டது.

## விஷ ௵ மார்கழி மீ௳ உஉ ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு, சனேர் மீ௳ உ ௳

காலமே யெட்டு மணிக்கு, பிறையாத்திலே யிருந்து தயங்கம்பாடி கோட்டைக்கு போகையில், சின்னத் துரை குசேவொயேர் யண்டையிலே போய் காணச்சே, அவரும்

யெழுந்திருந்து வுபசாரம் சொல்லி வுறுக்காரச் சொல்லி, அவர் சொன்ன வுத்திரவு. வுங்களுக்கு இவிடத்திலே வாசம் பண்ணதக்கதாகவும் யிருக்குது யெண்ணு சொன்ன மாத்திரத்திலே, ளும் பதிலுக்கு சொன்னது. யெந்தெந்த வேளையிலே யெவிடத்திலே வாசம் பண்ணத்தக்கதாக சாமி கடாஷ்ஷம் யிருக்குதோ, அவிடத்திலே வாசம் பண்ண வேணுமேயல்லாமல், நம்முட யிச்சைப்படிக்கு ஒண்ணும் நடக்க மாட்டாதே யெண்ணு சொல்ல, அவரும் மெய்தானே யெண்ணு சொல்லி, ஆனாலும் இவிடத்திலே தங்களுக்கும் நம்மாலே ஆகவேண்டிய காரியம் யென்னமாகிலும் வுண்டா யிருந்தால், சொல்லி யனுப்பிவிச்சதே வுண்டானால், நல்ல மனசோட வுங்களுக்கு செய்து குடுப்போம். நீங்கள் வந்து பெரிய மனுஷர். வுங்களுக்கு ளனும் யேதொரு காரியமும் செய்து குடுக்குறது. நம்மோடு ஆள்யெண்ணு இப்படி மிகுதியாகவும் வுபசாரம் சொல்லி யனுப்பிவிட்டார். அப்பால் நாம் போய் சக்கிரத்தார், சம்பா கோவில் பாதிரிமார், பின்னையும் இருக்கப்பட்ட பிருஞ்சுக்காறர், மதாம் வெடுத்தலுமி முதலாகிய பேர்களையும் சந்திச்சு, அவர்கள் சொன்ன வுபசாரத்துக்கு பதில் வுபசாரம் சொல்லி போட்டு பிறையாத்துக்கு வரவேணுமெண்ணு பிறப்பட்டு, முசே போறிணி யென்குறவர்களுக்கும் சொல்லி, ளன் காணவேணுமெண்ணு விசாரிக்கச் சொல்ல, அவர் வீட்டிலே யில்லையெண்ணு சொன்னமாத்திரத்திலே, செவ்வையாயி பிறப்பட்டு பிறையாத்துக்கு வந்து சேந்தோம்.

## விஷ ஸ்ரீ மார்கழி மீ உரு ௨ அங்காரகவாரம்: சதஎளசாயஉ ஆண்டு, சனேர் மீ ரு ௨

இந்தனாள் காலமே கோட்டை மையோர் சொல்லியனுப்பிவிச்சதாவது. தாங்கள் கோட்டைக்கு வந்து யெண்ணையும் வந்து வீட்டிலே விசாரிச்சீர்களாம். அந்நேரம் ளும் வீட்டிலே யில்லையெண்ணு தங்கள் மனதிலே தாங்கலாய் யிருக்குமே. ஆகையால் ளனும் தங்களவன், வீடும் தங்களுடையது. ஆகையால் தாங்கள் யெப்போ வரவேணுமோ அப்ப வரலாமெண்ணு வுபசாரமாய் சொல்லி யனுப்பிவிச்சபடியினாலே, ளும் ஒருவிசை போயி அவர் யில்லாதபடியினாலேயும், அவரண்டை ளும் ஒரு விசையும் போகாதபடியினாலேயும், அவருக்கும் நம்மைத் தொட்டு யிதுவரைக்கும் பிறையோசம் யில்லாதபடியினாலேயும், ளும் போனால் யென்னமாகிலும் கொண்டு போறது வுயத்தமல்லாவா வெண்ணு யோசனை பண்ணி, நம்முட அப்பாவுவையும், ருச கோபாலனையும் கூட ரெண்டு பேரையும், கோட்டை மைய்யோரை சந்திச்சு வரச்சொல்லி, பங்காளத்து பட்டுப் பட்டாய் மடித்தான் ஒண்ணு குடுத்து கண்டு வார்த்தை சொல்லி வரச்சொல்லி யனுப்பி வருகுற மீ தில்லையாடி வரை போய் சொல்லியனுப்பிவிச்சு, அந்த வஸ்திரமும் குடுத்து கண்டு வார்த்தை சொல்லுகையில், அவர் சொன்னதரிவதாவது. ள பிள்ளையவர்கள் நம்முட வளவுக்கு வந்த போது, ளும் பட்டிலே யில்லையெண்ணு ஒருவேளை மனதிலே தாங்கலாய் இருக்குமே யாகையால், நம்முட பேரிலே பஷ்ஷம் வரவுத் தெரியப்பட சொல்லியும், இவிடத்திலே இந்நேரம் யென்னாலே ஆகவேண்டிய காரியம் யிருந்தாலும், தங்கள் காரியமாவது யென் சுய காரியமாயும், உங்கள் மனுஷராயிருந்து யெந்த கவையும் செய்து குடுக்கதக்கனவெண்ணும், இப்படி அநேக வுபசாரம் சொல்லி, பிள்ளையவர்களுக்கு சொல்லுங்கோளெண்ணு பாக்கு வெத்திலை, பன்னீர் முதலியவைகள் குடுத்து உபசரிச்சு அனுப்பிவிச்சு, தங்களுக்கு யென்ன வுபசாரம் சொல்லவேணுமோ, அந்த வுபசாரம் சொல்லிபோட்டு வந்தோமெண்ணு சொன்னார்கள்.

விஷ ஷூ தை மீ௳ க ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு, சனோர் மீ௳ ய ௨

சங்கராந்தி பண்டிகை

இந்தனுள் காலமே யெட்டு மணிக்கு, தெற்குவகுப்பு பாளையக்காறன், கஸ்தூரி னுயக்கர், நம்மண்டை வந்து சந்திச்சு போகவேணுமெண்ணு, அவர் காரியக்காரர் வந்து சமயம் யெப்படி யிருக்குதெண்ணு பாத்துவரச் சொன்னுரெண்ணு வந்து, பாத்து போயி சமயமாய் யிருக்குதுயெண்ணு சொன்னமாத்திரத்திலே, அந்த கஸ்தூரி னுயக்கர் வந்து வுபசாரம் சொன்னதாவது. மகா ருச ருச ஸ்ரீ பிள்ளையவர்களும் தெய்வீகமாகிப் போனதும், பட்டணம் எடுபட்டு போனதும், சகல வுபசாரமும் தோத்து, யிவிடத்திலே வந்தும் சுகமாய் யிருக்குறதுக்கு யில்லாமல், சிரஞ்சீவி அண்ணுசாமியாகிலும் சீவனுடனே யிருக்குறதும் யல்லாமல், யிப்படி மகத்தாயி விசாரம் தங்களுக்கு வந்து சம்பவிச்சதுக்கு, தாங்கள் மகா புருஷரானதாலும், மகா தயிரிசாலி யாகையாலும் யிப்படி அநேகவிதமாகிய காரிய பாகங்களை பாத்திருக்குறபடியினுலே, தாங்கள் தயிரியப்படுத்திக் கொண்டீர்களேயல்லாமல், மைத்தொருவர்களானுல் அதைரீயப்பட்டு சீவனைக்கூட விட்டுவிடுவார்களெண்ணு அவர் சொல்ல, அதுக்கு னும் சொன்னது. யிதுகளெல்லாம் வந்து சாமியாலே வரப்பட்ட காரியமேயல்லாமல், மனுஷர்களாலே ஆக வேண்டியதல்லவே. சாமியானவர் மனுஷருக்கு புத்தியும், விவேகமும் குடுத்திருக்குறது, ஒருத்தருக்கு ஒரு ஆபத்து வந்த வேளையிலே தயிரியப்படுத்தி கொள்ளுகுறதுக்கும், தனக்கு கஷ்ட காலம் வந்தபோது தான் தேறுதலை பண்ணிக்கொள்ளாமல் போனுல், அப்பால் அப்பாலே விவேகமாவது, தயிரியமாவது, புத்தியாவது யென்னயிருக்குது? நமக்கு வந்த கஷ்டமாவது, சந்தோஷமாவது, னும் அனுபவிக்க வேண்டியதல்லாமல், அதுக்கு பின்வாங்கினுல் நம்மைவிட்டு போமா? யெண்ணு சொன்ன மாத்திரத்திலே, அவரும் மெய்தானென்னு ஒத்துக் கொண்டு சந்தோஷப்பட்டு, யிவ்வளவு தெறந்து தேறுதலாய் பண்ணிக்கொண்டது தங்களுக்கடுத்ததே யல்லாமல், மைத்தொருவருக்கு வராதுயெண்ணு சொல்லி, ஆனுல் யிந்த வேளை யிப்படி யிருதல்லவா? யின்னம் கொஞ்சம் னுளையிலே சாமியானவர் சகல சிரேயிது தயவு பண்ணப் போருர். அந்த சிரேயீசுக்கு குறிகளும் கேட்கப்படுகுது. கப்பல் சமாச்சாரமும் சுருக்காயி சொல்லுகுருர்களல்லவா? ஆகையால் தாங்கள் தயவுபண்ணி இந்த பஷ்ஷமும் அந்த காரணையுமே யெப்போதும் யிருக்கத்தக்கதாக தயவுபண்ணி நடப்பிக்க வேணுமெண்ணு, மிகுதியாய் வுபசாரம் சொல்லி கேட்டுக்கொண்ட படியினுலே, நாமும் அதுக்கு யென்ன வுபசாரம் சொல்லவேணுமோ அப்படி சொன்ன மாத்திரத்திலே, அவரும் யனுப்பிவிச்சுக் கொண்டு சிலவு வாங்கிக் கொண்டு, தம்முட வீட்டிலே போயி, பதினஞ்சு ஆளும் பேரிலே அரிசி, காயிகறிகள், பழவகைகள் முதலாகிய தினுசு முஸ்தீது பண்ணி, அவருடைய தளவாயி, காரியக்காறர் முதலாகிய பேர்களையும் கூட கட்டி அனுப்பிவிச்சு வுபசாரம் சொல்லுகையில், நாமும் பதிலுக்கு சொல்லவேண்டிய வுத்திரவு சொல்லி, ........... வந்தவர்களுக்கும் மைத்தும் குடுத்தனுப்பினேம்.

## விஷ ஸ்ரீ தை மீ உ ஹ சோமவாரனுள் : சதளளசாயஉ ஆண்டு, சனேர் மீ யக ஹ

இந்தனுள் காலமே பத்து மணிக்கு, வடக்கு வகுப்பு பாளேயக்கார மனுஷன், காரியக்காறர் வந்து சமயம் பாத்து போயி, அவிடத்திலே யிருந்து பிறப்படச்சே, சங்கீத மேளமுடனே யிப்படி யழைச்சு வர, ஆயுத முஸ்தீபுடனே ருமருயன் யென்குறவர் குதிரை யேறிக்கொண்டு, சகல சம்பிரமத்துடனேயும் யிருபது ஆளுக்கு தலே மேலே அலுப்பால் யெடுப்பிச்சுக்கொண்டு, நம்மண்டைக்கு வந்து வுபசாரங்கள் சொன்னதாவது. லஷ்மி பத்தியுள்ளவராகையால் ஒரு கஸப்பட்டிருக்கும். இன்னம் கொஞ்சம் ஞளேயிலே ஞங்கள் பார்க்கத்தக்கதாயும், யெங்கள் யெல்லாரையும் றஷ்சிக்க தக்கதாகவும் சாமி தயவு பண்ண போருர். ஆகையால் ஞங்கள் சாவுற காலமும், யெங்கள் பேரிலே பஷ்ஷம் வச்சு நடப்பிக்க வேணுமெண்ணு சொல்லுகையிலே, ஞமும் அதுக்கு பதிலும் சொன்னது. நம்மாலே ஆகவேண்டிய வுபகாரங்கள் யென்ன வுண்டோ, அது காலம் காலமுமாய் ஞமும் வுபாரு பண்ணுவோம். நம்மாலே ஆகவேண்டிய காரியம் ஒருக்காலும் தாஷ்ஷி வரத்தக்கதில்லேயெண்ணு பின்னேயும் யென்ன வுத்திரவு சொல்ல சொல்ல வேணுமோ, அந்த வுத்திரவு சொன்னதின் பேரிலே, அவர்களுக்கு சிலவு வாங்கிக் கொண்டு வெத்திலே, பாக்கு வாங்கிக்கொண்டு போயிட்டார்கள். மத்தியானத்துக்கு மேலே ஞலு மணிக்கு கோட்டைக்கு போகவேணுமெண்ணு போகையில், தயங்கம்பாடி கோட்டைக்கு சமீபத்தில், ஆத்தைக் கிட்டே போகையில், மேற்படி கோட்டை பெரிய துரை முசே ஆபஸ்த்தேன் யென்குறவர், அதுக்கு சமீபத்திலே நம்மை கண்ட மாத்திரத்திலே, ஆபஸ்த்தேன் கொவர்னதோரும் ஆசாரம் பண்ண, நாமும் பதிலு ஆசாரம் பண்ண, அவர் குதிரையும் நம்முட குதிரையுமாய் முன்னே பின்னே வர யல்ல. இது குதிரையில்லாத படியினுலேயும், அவருக்கும் நமக்கும் மத்தியான படியினுலேயும், அவரும் மனுஷரும் ஆறு துவக்கி, பிறையாத்துக்கு கும்பினிர் தோட்டம் வர பரியந்தம் சிறிது நேரம் வர, வழி வருகுற மட்டுக்கும் லோகாபிரம்மாய் பேசிக்கொண்டு வரச்சே, குதிரை யிறங்கி, அவரும் நாமுமாய் போய், இந்த குதிரையும், அந்த குதிரையுமாயி அப்பால் நிறுத்தி, மெதுகிலே கொண்டு கொண்டு தோட்டம் வந்து சேந்த பிற்ப்பாடு, அவர் போக ஷேமங்களாயிச் சொன்னதாவது. தாம் யாழ்பாணத்திலே யிருந்தபோது தம்முட சங்கதியும், அவிடத்திலே யிருக்கப்பட்டவர்களுடைய குணங்களும், அவிடத்தே அதிசயங்களும் அவிடம்விட்டு பிறப்பட்டபோது இவிடத்திலே வரவேணுமெண்ணும் வழியிலே தாம்பட்ட கஷ்டமும், அப்பால் மயிசூர் வந்து சேந்துது, மயிசூரிலே அவிடத்திலே யிருந்து வரச்சே, தாம் துலுக்க வேஷம் போட்டுக்கொண்டு பிறப்பட்டது, காடு சேந்த யிடங்களிலே யிருக்கப்பட்ட துஷ்டர்களும், மிருகங்கள் கண்ட விதங்களும், பஷ்ஷிகளும் விதங்களும், யிப்படியாக அநேக ரக கதைகளும் சொல்லி, அப்பால் திருக்கடையூர் வந்து சேந்ததும், ஆயக்காறர் தோந்தறை பண்ணதும்மாயி, அதையும் தள்ளிக்கொண்டு தயங்கம்பாடி வந்து சேந்ததுமாய், யிப்படியாக தோஞ தோட்டத்திலே பிரஸ்தாபம் பண்ணிக்கொண்டு யிருக்கையில், அஸ்தமிச்சு போச்சுது. நாமும் வீட்டுக்கு வந்து விட்டோம் யெண்ணு சொன்ஞர்கள்.

## விஷ ஸ்ரீ தை மீ ங ௨ அங்கராகவாரம்: சதளளசாயஉ ஆண்டு, சனோ் மீ யஉ ௨

இந்தநாள் மத்தியானம், பறங்கிப்பேட்டை பக்கிரி சாயுபு யென்குறவர், ஞகூர் .......... க்கு போயி வரச்சே பொறையாறு சோனக தோட்டத்திலே சருங்கு வீட்டிலே யிறங்கி, நமக்கு சலாம் சொல்லி யனுப்பிவிச்சு, மத்தியானத்துக்கு மேலே ஞலு மணிக்கு பக்கிரி சாயுபும், தோக்குதோா் மிய்யா யென்குறவரும், பின்னேயும் ஞலு ரெண்டு பெரிய மனுஷருமாய், பத்து பதினேஞ்சு பேர் கும்பலுடனே வந்து கண்டார்கள். கண்ட மாத்திரத்திலே அவர்கள் சொன்னதாவது. யிந்த யீண்டகஞர் துறைக்குள்ளே ள. ள. பிள்ளேயவர்கள் கிறதி சம்பாதிச்சது போலவும், அவர்கள் மானிச்சு தயவுபண்ணல், அவர்கள் தயவு பண்ணுகுருப்போல, அவர்கள் அனுபோகத்தை போலவும், அவர்கள் அதிகாரத்தை போலவும், அவர்கள் வுங்களுக்கு யில்லாத செனங்களிராதெண்ணும், பின்னும் ள. ள. பிள்ளேயவர்கள் குணதிசயத்தை கொண்டாடி, அப்பால் யிப்போ யிருக்குறதுக்குள்ளே, தங்களேப்போல் யிவ்வளவு தயிரியமும், சமத்தும், சகல சவுகரியமும் நஷ்டப்பட்டு போயி, சிரஞ்சீவி அண்ணசாமி கூட யிருக்குறதுயில்லாமல், அவரும் யிறந்து போயிருக்கத்தக்கதாகவும், இந்த காலத்திலே பெரியவர்களுடைய கிரதி பிரதிஷ்டதுக்கு தாஷிப்படிக்கு, இப்போதும் நல்ல காலத்திலே வுள்ளபடி நடந்துதோ, அந்தப்படி நிறவயிச்சுக் கொண்டு வருகுறது வெகு பிறயோசனம் யெண்ணும், யிப்படியாக பின்னும் வெகு பேர்கள் வந்ததாய், யெங்களேயெல்லாம் வச்சு சவறஷ்ஷணே பண்ணத்தக்கதாக சாமி கடாஷ்ஷிக்க போருர். அதுக்கு திஷ்டாந்திரம் யெங்களுக்கு நடக்குற கிரிகையிலே தெரிஞ்சு கொண்டோமெண்ணும், இப்படியாகவும் அனேகவிதமாயி சந்தோஷப்பட்டு ஞளே வருகுறேமெண்ணு சிலவுக்கு வாங்கிக்கொண்டு, அவர் யிறங்கி யிருக்குற சாகாவுக்கு போனர்கள். அப்பாலே ருத்திரி யேழு மணிக்கு பத்து பதினஞ்சு பேருக்கு, சீதா மைத்தது அனுப்பிவிச்சோம். அதுக்கு மிகுதியும் வுபசாரம் சொல்லி யனுப்பினர்யெண்ணு வந்து சொன்னர்கள்.

## விஷ ஸ்ரீ தை மீ சா ௨ புத்வாரநள்: சதளளசாயஉ ஆண்டு, சனோ் மீ யங ௨

இந்தநாள் மத்தியானம் ஞகப்பட்டிணத்திலே, சின்ன ஞயக்கர்ரண்டையிலே சேவுகன் வெங்கடேசன் யென்குறவன் காகிதம் கொண்டு வந்தான். அந்த காகிதத்திலே யெழுதி யிருந்த மத்தப்படியாவது, அவிடத்திலே குமுசலியேருக்கு பங்காளத்து சிலுமிலித்தான் ஞளஞ்சுதான் வேண்டியிருக்குயெண்ணும், நம்முட வசத்திலே மூணு பக்கமும் விதி ரகுவளேவு வச்ச சூரியப்படிறையாயி மகா காந்தியாயிருக்கப்பட்ட லாந்த கூண்டு மேலே, தமக்கு வெகு அபிலாஷையாய் யிருக்குறதாகவும், அவளுடைய பந்து கிருஷ்ணருயர் யென்குறவர், இதுக்கு முன் இவிடத்துக்கு வந்தபோது, அந்த லாந்தர் யேத்தி யிருக்கச்சே, அவர் பாத்து இந்த லாந்தர் பிரகாசமும் அதினுடைய வொளியும் அவர் பாத்து வரச்சொன்னர். ஆகையால் தயவுபண்ணி அனுப்பிவிக்க வேணும். யிப்படிப்பட்டது யெண்ணு அவர் யெழுதுகையில், வேறே அப்படிப்பட்டது அகப்படாத வஸ்துவானபடியினலே, அந்த லாந்தர் கூண்டை தானே, ஞகப்பட்டண சக்குலு ஞயக்கர் குமாரர் சின்ன ஞயக்கருக்கு யனுப்பிவிச்சோம். பங்காளத்து பட்டு சிலிமிலித்தான் யிவிடத்திலே விசாரிக்குமிடத்தில் அகப்படாதபடியினலே இவிடத்தில் அகப்பட்டதெண்ணு பதில் காகிதம் யெழுதி குடுத்தனுப்பிவிச்சோம்.

## விஷ ௵ தை ௴ எ ௳ சனிவாரம் : சதளளசாயஉ ஆண்டு, சனேர் ௴ யசா ௳

இந்தனுள் மத்தியானம், அமரகோந்தியிலே யிருந்து அச்சுத விசைய ருகவ னுயக்கர்ரவர்களண்டையிலே யிருந்து வந்த பிருமணன் வெங்கடேச அய்யனும், நம்மாழ் யென்குற சேகுவனுமாய், யிவர்கள் ரெண்டு பேரும் கொண்டு வந்த வஸ்திரமும், கண்ணுடிப்பட்டு சகண்டையாய் பாகையும், ருது வேஷ்டியும் முதலாகிய வஸ்திரமும், காகிதமும் கொண்டு வந்தார்கள்

காகிதத்திலே ஸ்ரீ பிள்ளேயவர்கள் காலம் பண்ணிப்போன சமாச்சாரத்தை கண்டு, மிகுதியும் தாபந்தமாயி, யெங்கள் யெசமான் போயிட்டாரே, அவர் போனதுக்கும், ள. பிள்ளேயவர்கள் தயவுனுலே யின்னொருவருக்கும் அவர்கள் நம்பியிருக்குறதுக்கு, தெய்வ சங்கடமாய் பட்டிருந்ததல்லவா? யினிமேல் வந்து நீங்கள் தயவு பண்ணி நடப்பிச்சுக் கொண்டு வரவேணுமென்குறதாயி உபசாரமாயி யெழுதி யனுப்பிவிச்சார்.

## விஷ ௵ தை ௴ யஉ ௳ பிறகச்சுபதிவாரம் : சதளளசாயஉ ஆண்டு, சனேர் ௴ உக ௳

இந்தனுள் காலமே, அமரகோந்தியிலே யிருந்து அச்சுத விசைய ருகவ னுயக்கரண்டையிலே யிருந்து, வஸ்திரமும் காகிதமும் கொண்டுவந்த வெங்கிடேசய்யனும், நம்மாழ் யென்குற சேவுகனுக்கும், யிவர்கள் ரெண்டு பேருக்கும் ரெண்டு பாகை வெகுமானம் பண்ணி, னுயக்கருக்கு ஒரு கண்ணுடியும், ஒரு அத்தர்தானும், அதுக்கு வைக்குற பகரும், ரெண்டு சீமை தந்த விசிறியும் குடுத்து, அவர் யெழுதி யனுப்பிவிச்ச காகிதத்துக்கு பதில் காகிதமும் யெழுதி குடுத்து, வரவேணுற வரைப் பண்ணி அனுப்பிவிட்டோம்.

இந்தனுள் மத்தியானம் சென்னப்பட்டணம் அய்யத்தம்பி, வெங்கிடாச்சல பிள்ளே, சிறிய தாய் குமாரன் ............ னும், புதுச்சேரியிலே குமாந்தானுய் யிருந்த சவுச்சட்டு யென்குற இங்கிறிசு வெள்ளக்காறன் துபாசி சின்னத்தம்பி யென்குறவர் அவர்கள் ரெண்டுமாயி வந்து கண்டு, அய்யத்தம்பி வெங்கடாச்சல பிள்ளே குடுத்தாரெண்ணு சொல்லி, அவர் காகிதமும் நம்முட கையிலே குடுத்தார்கள். அந்த காகிதத்தை வாங்கிக் கொண்டு, அந்த காகிதத்து மத்தது அறிஞ்சு கொண்டு, மத்தியானம் நம்முட சாப்புடச் சொல்லி சாப்பாடு பண்ணிவிச்சு, மத்தியானத்துக்கு மேலே அவர்களே அனுப்பிவிச்சுக்கொண்டு, னுளே அமாவாசையான படியினுலே சங்கமுகஸ்தானத்துக்கு போயிட்டார்கள்.

## விஷ ௵ தை ௴ யஅ ௳ புத்வாரனுள் : சதளளசாயஉ ஆண்டு, சனேர் ௴ உகூ ௳

இந்தனுள் காலமே, னுகப்பட்டணம் சக்குலு னுயக்கர் ஆசாரியார், நாமிருக்குற யிடத்துக்கு வந்து ஆசீர்வாதம் சொல்லி, ரெண்டு னுழி பரியந்தம் பேசிக்கொண்டிருந்து போயிட்டார். பிற்ப்பாடு அவருக்கும், கூட வந்தவர்களுக்கும், சீதா மைத்தும் குடுத்தனுப்பிவிச்சோம்.

## விஷு ளு தை மீ௳ உஉ ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு, சனேர் மீ௳ ஙக ௳

இந்தனுள் மத்தியானத்துக்கு மேலே, ஞாளைய தினம் ள. பிள்ளையவர்களுக்கு ஆப்பிதீகமானபடியினுலே, கந்த பிள்ளையவர்களையும், சிதம்பரனுத பிள்ளை, சிதம்பரத்திலேயிருந்து நன்னுச்சியையும் அழைச்சு வரத்தக்கதாக, முத்தப் பிள்ளையை யனுப்பிவிச்சு, எருக்கிட்டாஞ்சாவடியிலே யிருக்குற திருவேங்கடத்தா பிள்ளை, கந்தப்ப முதலி, அப்பு முதலி, பெரியண்ண முதலி, தாண்டவருய பிள்ளை, நயினுர் யிவர்களுக்கு சொல்லி வரச்சொல்லி, அப்பாவுவையும், ருச கோபாலனேயும் அனுப்பிவிச்சு, அவர்களும் சூரிய உதயத்துக்கு வருகுறேமெண்ணு சொன்னதாக வந்து சொன்னுர்கள்.

## விஷு ளு தை மீ௳ உங ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு மீ௳ மு ௳

இந்தனுள் காலமே, ள.ள. பிள்ளையவர்களுக்கு வருஷ திதியானபடியினுலே, சூரிய உதயத்துக்கு சவுபாக்கியவதி பொன்னுச்சி, நன்னுச்சி, கந்தப் பிள்ளை, சிதம்பரனுத பிள்ளை முதலாகிய பேர்களும் வந்தார்கள். பத்து ஞழிகைக்கு வந்தவாசி திருவேங்கிடத்தா பிள்ளையும் வந்து, குமாரனும், அப்பு முதலியாரும், திருவம்பல நயினுரும் வந்தார்கள். தெற்கு வகுப்பு பாளையக்காரர் கஸ்தூரி ஞயக்கர், அரிசி, காய்கறி, உலுப்பா யனுப்பிவிச்சார். பதிஞேரு ஞழிகைக்கு திதி செய்யத்தக்கதாக ஆரம்பிச்சு, மேற்படி நசுக்கார் யேழு பேருக்கும் கடுக்கன், சோமன், சோடு குல்லா முதலாகிய சாம கிரியைகள் விதி வச்சதாக குடுத்து யனுப்பிவிக்க, பதனுறு ஞழிகை சென்னுது. பிற்ப்பாடு வந்த பிருமணுளுக்கெல்லாம் பூரி குடுத்து ஆச்சிஸ்த்தாள், தீஷித்தாள், உத்தியோகஸ்தாள் முதலிய பேர்களுக்கு சீதா குடுத்து, பதினெட்டாம் ஞழிகைக்கு முன் யெழுதப்பட்ட பேர்களுக்கும் மத்தும் வந்த பேர்களோடும் போசனம் பண்ணி, சந்தனம், புஷ்பம், தாம்பூலம் குடுத்து, யெல்லாம் போறதாய் யிருந்தார்கள். சாயங்காலம் திருவேங்கடத்தா பிள்ளை, அப்பு முதலி, நயினுர் அவர்களை யனுப்பிவிச்சுக் கொண்டு போனுர்கள். ருத்திரிக்கு கோபாலசாமி முதலான ஆசிஸ்தானர், உத்தியோகஸ்தாள், ஞருயண சாஸ்திரியார் முதலாகிய சாஸ்திரிமார்களுக்கும், திருவேங்கடபுரம் அக்கிரஹாரத்தாருக்கும், மங்கம்மாள்புரம் அக்கிரஹாரத்தாருக்கும், வஸ்திரம் குடுத்து அனுப்பிவிச்சோம்.

## விஷு ளு தை மீ௳ உச ௳ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு மீ௳ உ ௳

இந்தனுள் காலமே, சிதம்பரனுத பிள்ளை, சவுபாக்கியவதி நன்னுச்சி, வெங்கட்டம்மாள் பேட்டைக்கு போகத்தக்கதாக, கொட்டுப்பாளையத்துக்கு போய், அவடத்து காரியங்களுக்கும் திட்டப்படுத்திப் போட்டு, அவரவர்களை அனுப்பிவிச்சுக் கொண்டு, சூரிய உதயத்துக்கு வருகுறேமெண்ணு அனுப்பிவிச்சுக் கொண்டு போனுர்கள்.

## விஷ ஸ்ரீ தை மீ உசா ௳ வியாழக்கிழமை : சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு மீ ச ௳

இந்தனுள் காலமே சிதம்பரனுத பிள்ளையும், சவுபாக்கியவதி நன்னுச்சியும் வெங்கட்டாம்பேட்டைக்கு போகத்தக்கதாக கொட்டுப்பாளையத்திலிருந்து வந்தார்கள். முன் உயங சாயங்காலம், இவிடத்திலே சிதம்பரனுத பிள்ளை வந்திருக்கச்சே கோபால்சாமியுடனே சொல்லி, வெங்கிட்டாம்பேட்டை பாளையக்காரருக்கும் மருமகனுக்கும் சமாதானமாச்சுதே, சவுபாக்கியவதி நன்னுச்சியையும் அவிடத்திலே அழைச்சுக் கொண்டு வரத்தக்கதாக, வெங்கிடாபதி, வெங்கடாச்சல பிள்ளையும் அனுப்பிவிச்சிருக்கிறுர். அந்தப்படிக்கு அனுப்பிவிக்க வேணுமெண்ணு சொன்னுரெண்ணு சொன்னுர். அப்படியாக இருக்கவேணும். சொன்னபடிக்கு சாயங்காலம், அவர்களுக்கும் வந்தவர்களுக்கும் வெகுமதி பண்ணி அனுப்பிவிச்சோம். அவர்களும் ருத்திரிக்கு திருக்கடையூரிலேயிருந்து அப்பறம் சாரி போனுர்கள்.

## விஷ ஸ்ரீ தை மீ உகூ ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு மீ எ ௳

இந்தனுள் சாயங்காலம் திருவேங்கடத்தா பிள்ளை குமாரத்திக்கு, சீமந்த கலியாணமானது. வந்து அழைப்பிச்சபடியினுலே, சாயங்காலம் நாமும், கந்தப் பிள்ளை, அய்யாசாமி, முத்தபிள்ளை முதலாகிய பேருடனே போயிருந்து, வஸ்திரங்களும் குடுத்து ஏழுமணி வரைக்கும் யிருந்து வந்தோம். இந்தனுள் காலமே சிரஞ்சீவி சுந்தரத்துக்கு காது குத்துனேம்.

## விஷ ஸ்ரீ தை மீ ஙய ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு மீ அ ௳

இந்தனுள் மத்தியானம், நேத்து சாயங்காலம் வரச்சே, ளுளை மத்தியானத்துக்கு சாப்பிட வரவேணுமெண்ணு சொல்லி, ளுமும் வருகுறேமெண்ணு சொல்லி வந்தபடியினுலே, மத்தியானம் திருவேங்கிடத்தா பிள்ளை வீட்டுக்கு, ளுமும், அய்யாசாமி, முத்தபிள்ளை முதலாகிய பேர்களுடனே போயி, விருந்து சாப்பிட்டு, ருத்திரிக்கும் அங்கே கச்சேரி பண்ணி, கேளிக்கை பாத்துக்கொண்டு யிருந்து, பதினேரு மணிக்கு சாப்பிட்டு, பனிரெண்டு மணிக்கு வீட்டுக்கு வந்தோம்.

## விஷ ஸ்ரீ மாசி மீ உ ௳ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு மீ ய ௳

இந்தனுள் காலமே, மயிசூருக்கு மசுக்கரையிலேயிருந்து, கோவைக்கு வந்து அங்கேயிருந்து, மயிசூரிலே யிருக்குற பிருஞ்சுக்காறர் ரெயாலுக்கு குமாந்தானுய் வந்த முசே செவல்லியே தெமோயி யென்குறவர் பேருக்கு, அவிடத்திலே யிருக்குற திறகோஸ்களுக்கு தலவனுயிருக்குற முசே யீக்கிலுக்கும், விஸ்பு பாதிரி லொராஞ்சுக்கும் காகித மெழுதி, சாராயக்கிடங்கு வெங்கடேச பிள்ளை மச்சான் ............ பாணன் கையிலே குடுத்து அனுப்பிவிச்சோம்.

## Copie de la lettre écrite par Mr Desforges Boucher à Mr Moracin, datée à l' Isle de France le 25 Juillet 1761

Monsieur

Mr le chevalier de Mouhi, qui passe aux Indes sur une expédition particulière dans le dessein de se rendre à la côte de Coromandel, se charge de vous faire parvenir la présente. Je souhaite plus que je n'espère que vous la receviez incessamment. Les deux bots qu'a expédiés de Negapatam le sieur Dumon ont eu le bonheur de se rendre ici. Nous avons été vivement touchés d'apprendre la prise de Pondichéry que, selon tout ce que nous apprenons de l'Inde, n'eût jamais dû tomber en la puissance de nos ennemis. L'ouragan du 27 Janvier 1760 avoit causé tant de dommage à notre escadre que Mr le comte d'Aché s'est trouvé hors d'état de sortir du port pour aller, avec une forte escadre, secourir cette importante place, et six vaisseaux, selon moi, eussent suffi en janvier dernier, si ce général avoit voulu suivre mes avis en allant seulement se montrer à la côte comme le Conseil l'en avoit sommé en octobre 1760. Il ne l'a pas voulu faire et tout est perdu. Nos généraux de terre et de mer auront de furieux comptes à rendre. Mr d'Aché a repassé en France, l'année dernière sur la frégate la Diligente. Mr d' Ee guille et les officiers de la marine du Roy sont rappelés. Ce chef d'escadre est remplacé par Mr le chevalier de St Georges, chef d'escadre, qui est arrivé icy sur la frégate la Fidèle. Quatre vaisseaux de 60 à 74 pièces de canon nous sont annoncés. Le Vaillant, qui en est un, vient d'arriver. Le Bertin est attendu à chaque instant et les deux autres le suivent de près. Tous nos vaisseaux échoués dans l'ouragan sont relevés et armés, et Mr de St. Georges se dispose avec toute la diligence possible à paroitre incessamment aux Indes dans une posture respectable et nous nous flattons tous que les ennemis ne jouiront pas longtems du fruit de leurs conquêtes. Le Roy ayant révoqué tous les pouvoirs de Mr de Lally, sa Majesté a jugé à propos de m'envoyer les provisions de gouverneur en son nom, en me donnant le commandement général. Ainsi, il n'y aura dorénavant aucune discussion entre les généraux. Mr de St Georges et moi travaillons de concert avec le zèle que doivent avoir des bons citoyens pour réparer nos pertes, à quoi nous espérons parvenir sous peu. Il est bien essentiel, Mr, que les François qui occupent encore la forteresse de Gingi et celle de Tiagat s'y soutiennent jusqu'à l'arrivée de notre escadre sur

laquelle il s'embarquera plusieurs bataillons des troupes du Roy qui sont déjà rendus ici. Mr de Bussy est arrivé à Paris en bonne santé. Le Roy l'a fait maréchal de camp, et je crois que vous entendrez bientôt parler de lui. Soutenez, Mr, nos bons François dans leur disgrâce. Vous êtes plus propre que personne à les [sic] leur faire supporter par la confiance qu'ils ont en vous. Assurez les que leur sort va bientôt changer de [?]. Vous recevrez incessamment des avis plus détaillérs. Nous sommes icy dans une assés bonne position en tout genre pour désirer plustôt que de craindre la visite des ennemis et suis, Mr, etc.

Reçue à Trinquebart, le 10 février 1762.

## ஸ்ரீ ரும செயம்

### விஷ ௵ மாசி ௴ உ ௳ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு ௴ ய ௳

இந்தனுள் கோவையிலேயிருந்து கரைவழியாய் தரங்கம்பாடிக்கு, முசே மொறசேன் அவர்களுக்கு, மசுக்கரையிலே துரைத்தனம் பண்ணப்பட்ட முசே தெப்போருஷ் அனுப்பிவிச்ச காகிதம் வந்து சேந்துதை, இவிடத்திலே யிருக்கப்பட்ட பிறுஞ்சுக்காரர் அதைபாத்து, முசே மொறசேன் அவர்கள் யிடத்திலே யில்லாதபடியினுலே, இதை ஆர் பார்கிறது யென்னு யோசிக்குமிடத்தில், முசே பியாங்கோர், ஞன் அவருடைய சக்கரத்தாரானபடியினுலே பார்க்குறேணெண்ணு காகிதத்தை பிரிச்சு பாத்து, இவிடத்திலே யிருக்கப்பட்ட பிறுஞ்சுக்காரர் அனைவருக்கும் அறிவிச்சு, யெல்லாருக்கும் சந்தோஷத்தை அடைஞ்சுது. பிற்ப்பாடு அங்கேயிருந்த வந்த கடிதாசி படிக்கு ஒண்ணெழுதி, முசே மொறசேன் அவர்கள் துபாசி ஆண்டியப்பன் கையில் குடுத்து, நம்மண்டைக்கு அனுப்பிவிச்சார். அந்த கடுதாசிப்படிக்கு முன் காகிதத்திலே பிறுஞ்செழுத்திலே யெழுதியிருக்குது. அதை பாத்துக்கொள்ளவும்.

அந்தக் கடுதாசுப்படிக்கு
தமிழ்ப்படுத்தினது

சதளளசாயக ஆண்டு சூலி ௴ உயரு ௳ முசே மொறசேனுக்கு முசே தெப்போறேஷ் மசுக்கரையிலேயிருந்து யெழுதி யனுப்பிவிச்சது. முசே ஷெவாலியோ் தெமொய் யென்குறவரை, பருத்திக்கோல்யெர்[73] கப்பலிலே யீந்தைக்கு வரத்தக்கதாக அனுப்பிவிச்சோம். அவர் கையிலே ஒரு காகிதம் உமக்கு அனுப்பியிருக்குறோம். அந்த காகிதம் உமக்கு சேந்து யிருக்குமெண்ணு ஞன் நினேச்சுயிருக்குறேன். ஞகப்பட்டிணத்திலேயிருந்து முசே திமோ அனுப்பிவிச்ச பொத்து ரெண்டு சிந்தாதிரையாய் வந்து சேந்துது.

புதுச்சேரி கோட்டை போன சேதி கேட்டு ஞங்கள் ரொம்ப விசாரத்தை அடைந்தோம். ஆனுல் இவிடத்திலே வந்த போத்துலே யிறங்கின செனங்கள் சொல்லிக்கொள்ளுகிறது. நமக்கு சத்துருவாய் யிருக்குற இங்கிலிசுக்காறன் கோட்டையை பிடிச்சுக் கொள்ளமாட்டான். சதளஎசாய ஆண்டு சநோ் மீ௳ உயஎ ௨ பிறமாதி ௵ தை மீ௳ யஎ ௨ காத்தும் பிசலும் கண்டு, கொந்ததேஷ் என்கிறவருடைய பிலன் பெத்த யிஸ்காதர் புதுச்சேரிக்கு வருகுறதுக்கு யில்லாமல் தடைபட்டுது. சதளஎசாய ஆண்டு ஒயித்தேம்பர் மீ௳ விக்கிறம ௵ அற்பசி மீ௳ த்தையிலே ஞங்கள் யோசனைப் பண்ணி, கொந்துதேஷ் யென்குறவரை புதுச்சேரிக்கு போகச்சொன்னபடிக்கு அவர் பிலத்துலே அந்த ஆறுகப்பலுடனே வந்தால், சத்துருவானவனும் ஓடிப் போவான். கோட்டையும் தப்பும். அவர் வராதபடியினுலே கோட்டை போச்சுதுயெண்ணு நினைக்குறோம். ஆனுல் இவிடத்திலே கடலுக்கும் கரைக்கும் யெசமான்களாய் யிருந்த பேர்கள், சீமையிலே வந்த வுத்தாரம் பண்ணவேண்டியிருக்கும். அந்த வருஷத்திலே சீமையிலே யிருந்து வந்ததிலே, ஷெந்து யென்குற பிறகாத்துலே கொந்துதேஷ் யென்குறவர் சீமைக்கு போய் விட்டார். லெகூல் யென்கிறவரையும் ருசாவுடைய கப்பல் ஒப்பிசியால்மார்களையும், சீமைக்கு வந்துவிடச் சொல்லி ஒடுதி வந்துது. பிதெல் யென்குற பிறகாத்துலே, முசே ஷெருசொஸ்சு கொந்துதெதேஷ் யென்கிறவரிடத்துக்கு வந்தார். ஞங்கள் அறுபது எழுபத்தைஞ்சு பீரங்கி யிருக்குற கப்பல், நாலினுடைய வரத்தை பாத்துக்கொண்டிருக்குறோம். இந்த ஞளிலே வலியாம் யென்குற கப்பல் வந்து சேந்துது. பெடுத்தே யென்குற கப்பல் ஒரு ஞழிகையிலே வந்து சேர கண்டோம். குறை ரெண்டு கப்பலும், ஞளை ஞளண்றைக்கு வந்து சேரும். நம்முடைய இஸ்காதர் பெருங்காத்திலே அடிபட்டு சேதப்பட்டதெல்லாம் மறுபடி முஸ்தீது பண்ணி, சண்டை ஆளுமாறுடனே முஸ்தீதாய் யிருக்குது. முசே ஷெஞசோற்சும் நாமும் அதித்துரையாய் முஸ்தீது பண்ணுகுறோம். சீக்கிரத்திலே வெகு பிலத்துடனே யீந்தையை காணத்தக்கதாக, ஞம் உனக்கு நிச்சயமாய் யறிவிக்கிறேன். யிப்போ சத்துருவின் கையிலே அகப்பட்டுயிருக்குற பட்டணங்கள், ரொம்ப ஞள் அவர்கள் கையிலே யிருக்கமாட்டாது. முன் கோந்துதல்லிக்கு குடுத்திருந்த ஒடுதியும், அவரையும் தள்ளி யிந்த யீந்தைக்கு கொமாந்தாம் ஷெணரலாய் ஆளத்தக்கதாக, யெனக்கு ஒடுதி வந்துது. ஆனுல் யிந்த ஷெணரால் காலத்திலே, வேறே ஒருத்தர் பேச்சு நடக்கமாட்டாது. முசே ஷெஞ்சோறனும், நாமும் ருசாவினுடைய காரியத்திலேயும், ராச்சியத்துக்கு விசுவாசத்துடனே பிறையாசப்படத்தக்கதாக, யீந்தையிலே இதுவரைக்கும் வந்த சேதங்களெல்லாம், கொஞ்ச ஞளையிலே நம்மை அடையத்தக்கதாக காத்துக் கொண்டிருக்கிறோம். உமக்கு அறிவிக்கதக்கதாவது. செஞ்சியும், தியாகதுற்க்கமும் நம்முடவர்கள் வசத்திலே யிருக்குறதை, அவர்களுக்கு தயிரியங் குடுத்து ஞங்கள் வருமட்டுக்கும் வச்சுக்கொண்டிருக்கவும். நம்முடைய யிஸ்காதரிலே இவிடத்திலோர் ருசாவினுடைய சொலுதாதுகளை விஸ்தாரமாய் யேத்தி வந்து, யீந்தையிலே யிறக்குறோம். முசே புசி சிந்தாததுரையாய் சீமை போய் சேந்தார். ருசாவானவர் மறேஷால் தெகாம் யென்குற யெடம் குடுத்தார். இன்னும் கொஞ்ச ஞளையிலே, நீர் யிந்த யீந்தையிலே காணலாம். ஆனுல் யிப்போ, நீர் யீந்தையிலே யிருக்கப்பட்ட பிருஞ்சுக்காறரை, நீர் சமத்தானபடியினுலேயும், உம்மிடத்திலே அவர்களுக்கு நம்பிக்கை யிருக்குறது படியினுலேயும், அவர்களை சம்ரஷ்ஷணை பண்ணிக்கொண்டு வரவேண்டியது. அவர்கள் யெல்லாருக்கும் நீர் சொல்லலாம். பின்னவர் கொஞ்ச ஞளையிலே சகல சந்தோஷத்தையும்

அடைவீர்களென்னும், இன்னும் கொஞ்ச ஞளேயிலே, இதுகளெல்லாம் விசிதமாய் தெரியத்தக்கதாக யெழுதி யனுப்பிவிக்கிறேம். ஞங்கள் லிவிடத்திலே சகல பிலத்துடனே சந்தோஷத்துடனே யிச்சேசுக் கொண்டிருக்குறேம். சத்துருவான இங்கிலிசுக்காறர் கப்பல் யிவிடத்திலே காணத்தக்கதாக யிருந்தபடி, பிருஞ்சிலே யெழுதியிருந்ததை தமிழ்ப் படுத்தினது.

## ஸ்ரீ ரும செயம்

விஷ ஷு மாசி மீ உ உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு, பிவறேறு மீ ய உ

முன் யெழுதுனபடிக்கு காகிதத்துக்கு அதுவரைக்கும் மோரிசுலே யிருந்தது. நம்ம கொமுசலியோர் பிருஞ்சுகாறருக்கு இஸ்காதர் யினிமேலே யிருக்குற கப்பல் சொன்ஞர்கள்.

*கப்பல் பெரும் பீரங்கி வயணம்*

| கப்பல் | பீரங்கி | கப்பல் | பீரங்கி |
|---|---|---|---|
| பிறவு | அய | லத்தீவு | சாயச |
| தொப்பென்றெவால் | எயச | லீவுஷித்துரு | சாயச |
| வலியாம் | எயச | லசீல் | சாயச |
| யேதுவார் | எயச | லுத்தீல் | சாயச |
| பொகுதுனெ | எயச | வறுவீக்கு | சாயச |
| சோதியாகது | அயச | லெபெடுந்தேன் | சாயச |
| பிபிஞெத்தொரா | எயச | தெளியீது | சாயச |
| கொந்துயிரவான்சு | எயச | சன்லுயி | சாய |
| சந்தோர் | எயச | லூக்கிதெரஸியாம் | சாய |
| றெஞெமே | சாயச | லூக்கிபிறகொஞ்ஞிய | சாய |
| வாளுரைசோரம் | சாயச | | |
| *ஆக கப்பல் யக* | | *ஆக கப்பல் ய* | |

| கப்பல் | பீரங்கி | | |
|---|---|---|---|
| தூக்கி துறுஷாம்ஷோம் | சாய | இதல்லாமல் பிறகாத்து .. | ச |
| லெ லீசு | சாய | | |
| லெ கோந்தே | ருயச | ஆக உறுப்படி .. | ஙய |
| லெ பெனி | ருயச | | |
| லெ மசீவு | ருயச | | |
| *ஆக கப்பல் ரு* | | | |

### விஷ ஷூ மாசி மீ௳ ய ௳ வியாழக்கிழமை: சதளஎசாயஉ ஆண்டு, பிவறேறு மீ௳ யஅ ௳

இந்தனுள் சாயங்காலம் ஆறு மணிக்கு, மூய்தாறுலேயிருந்து ருமாஞ்சி பண்டிதர் வந்தார். ஆனுல் முன் விக்கிறம வருஷம் தை மீ௳ னும் புதுச்சேரி விட்டு வந்தபோது

### விஷ ஷூ மாசி மீ௳ யக ௳ வெள்ளிக்கிழமை: சதளஎசாயஉ ஆண்டு, பிவறேறு மீ௳ யசூ ௳

இந்தனுள் ருத்திரி பதினெட்டு ஞழிகைக்கு புத்துருேஸ்வமாச்சு. அன்னேரம் பஞ்சாங்ககாரரையும், முத்தய்ய பிள்ளையும் அழைச்சுவரச் சொல்லியவர்களும் வந்தார்கள். அன்னேரமே சின்னவாயி பிள்ளையும் ஞழிகை நஷ்ஷகிரைப்பண்ணி, சாதக கணிப்பும் யெழுதி வைத்தார்கள். அன்னேரம் வந்தவர்களுக்கு பாக்கு, வெத்திலே குடுத்து யனுப்பிவிச்சோம்.

### விஷ ஷூ மாசி மீ௳ யசூ ௳ சனிவாரம்: சதளஎசாயஉ ஆண்டு, பிவறேறு மீ௳ உஎ ௳

இந்தனுள் காலமே, புத்துருேஸ்வம் கொண்டாட வேண்டியதன்படியினுலே, நம்முடைய பந்துகள் திருவேங்கடத்தா பிள்ளை முதலாகிய பேர்களும் அப்பு முதலியும் பின்னும் வந்திருக்கிறவர்களும் தயங்கம்பாடியாய் யிருக்குறவரும், உத்தியோகஸ்தாள், முத்தய்யா பிள்ளை, யிருள பிள்ளை, சின்னதம்பியா பிள்ளையவர்களும் முதலாகிய விருந்தினர்களும், வந்தவர்களை உபசாரம் சொல்லி யிந்த பிள்ளை யோகசாலியாய் யிருப்பானென்னும், இதுமுதல் கொண்டு சாபக்காலமில்லையெண்ணும், யிப்படி அனேகவிதமாய் சொன்னுர்கள். அவரவர்களுக்கு உபசாரம் சொல்லி, பாக்கு, வெத்திலே குடுத்து யனுப்பிவிச்சு, ஒன்பது ஞழிகைக்கு தானம் பண்ணி, சாதக பத்திரிகைகள் யெழுதி, கோபாலசாமி கொண்டுவந்து ருதாரசாதக தர்ம விதி வந்தாக செய்து, பிசதானம் கொண்டு வேறே பிருமணுளுக்கு குடுப்பிச்சி, கோபாலசாமி யின்னும் சிறிதுபேர்களுக்கு வஸ்திரங்களை குடுத்து, மத்தியானத்துக்கு நம்முடைய பந்துக்கள், அன்னிய கிறஸ்தவரும் சாப்பாடு பண்ணிவிச்சு, சந்தனம், புஷ்பம், பாக்கு, வெத்திலே குடுப்பிச்சு அவரவர்களும் யனுப்பிவிச்சுக்கொண்டு போனுர்கள். ஆனுல் சோசியாள் சொன்னது. யிந்த பிள்ளை யோகசாலியாய் இருப்பானென்னும், பாட்டனைப் போலயும், மச்சை மறுபிறப்பெடுத்து தத்துருபமாய் யிருக்குறபடியினுலே, அவரே வந்து பிறந்தாரெண்ணும், யிப்படியாக சொன்னதுமில்லாமல், ஆனுல் யிந்த ருசாவுக்கு பிலாரிஷ்டறதெல்லவேணும், அது தப்பினுல் யோகசாலியாய் ஆயுசுடனே யிருப்பானென்னு சொன்னுர்கள்.

### விஷ ஷூ மாசி மீ௳ உய ௳ ஆதிவாரம்: சதளஎசாயஉ ஆண்டு, பிவறேறு மீ௳ உஅ ௳

இந்தனுள் மத்தியானம், சிசுவுக்கு மந்ததம் போலே கண்டு, அதின்பேரிலே சயித்தியம் கண்டுது. அதுக்கு பெரியவர்களுக்கு கண்டால், எந்த சிகீஷை பண்ணுவார்களோ அந்தப்படி சிகஷ்ஷை பண்ணியும், சயித்தியம் வாங்காமல், ருத்திரி

ஞழிகை அஞ்சு ஞழிகைக்கு ஆத்துமம் புரிஞ்சு போச்சுது. அதுக்கு ஆயிசு சுறுக்கு ஆனபடியினுலே, வேண்டியது யென்ன யிருக்கு யெண்ணு தயிரியப்படுத்திக் கொண்டும், அன்னேரம் மசானத்துக்கு பந்துக்களோடு கூடப்போய் அடக்கம் பண்ணி போட்டு வந்தோம்.

## விஷ ஷீ மாசி மீ உச உ வியாழக்கிழமை: சதளளசாயஉ ஆண்டு, மாரிசு மீ ச உ

இந்தனுள் எ. ருமாஞ்சி பண்டிதர் கையில் அனுப்பிவிச்ச காகிதங்களுக்கு வயணம். சிதம்பரம் அமில் சாமாருயருக்கு யிறுனூறு வருகன் முவாதிலா குடுக்கச் சொல்லி யெழுதி யனுப்பிவிச்ச காகிதம் – க. மேற்படி நாட்டு தேவருப்பிள்ளேக்கு யெழுதி யனுப்பிவிச்ச காகிதம் – க. புவனகிரி சீர்மை நாட்டு வெங்கிட்டருயருக்கு யெழுதி யனுப்பிவிச்ச காகிதம் – க. பறங்கிப்பேட்டை ஆணிக்காற செனுற்த்தன பண்டிதனுக்கு னூறு விருகன் அனுப்பிவிக்கச் சொல்லி யெழுதி யனுப்பின காகிதம் – க. கானு முதலிக்கு குதிரை சம்மதம் யென்னூரு ரூபாய்க்கு யெழுதின காகிதம் – க. பூந்தமல்லி விஸ்வனுத நயினருக்கு முன்னூறு வருகனுக்கு யெழுதின காகிதம் – க. மயிலாப்பூர் மொய்தீன்சாய்பு மேற்படி நமக்கு வரவேண்டிய பணத்துக்கு யெழுதி யனுப்பின காகிதம் – க. யிதுவு மேற்படி வருஷம் மாசி மீ ... தஸ்திர மூட்டையிலிருந்து யெடுத்து நானூறு .......... யனுப்பி வைக்கிறது யெழுதி குடுத்து, ஆயிரத்தன்பது ரூபாயி கடன் முறியும், அதுக்கு சென்னப்பட்டணத்துக்கு கணக்கும், ருமாஞ்சி பண்டிதர் கொண்டு போனுர்.

## விஷ ஷீ மாசி மீ யச உ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு, மாரிசு மீ சா உ

இந்தனுள் காலமே, ருமாஞ்சி பண்டிதர் மேலே யெழுதியிருக்குற காகிதங்கள் யெல்லாம் கொண்டு கொண்டு, அது கவை சேகரிச்சு கொண்டு, யிருபது ஞளேயிலே வந்து சேருகுறேமெண்ணு அனுப்பிவிச்சுக் கொண்டு போனுர். யிவர்களுக்கு யென்ன லேகாமாத்து பண்ணியும், பறங்கிப்பேட்டை ஆணிக்காற நயினுர் பேரிலேயும், பூந்தமல்லி விஸ்வநாதனுலே, யிந்த ஞள் வேளேயை குறிச்சு, அதுக்குகந்ததாய் அவர்களுக்கு யெழுதி யனுப்பிவிச்சோம்.

## விஷ ஷீ பைங்குனி மீ உசா உ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு, அபிரேல் மீ ச உ

இந்தனுள் தரங்கம்பாடியயைச் சேந்த பிறையாத்திலே, மத்தியானம் மூணு மணிக்கு முசே மொறசேன் துபாசி, அன்னப்பன் வந்து சொன்ன சேதி. பத்து ஞழிகைக்கு ஞகப்பட்டணத்துக்கு துறை பிடிச்சு, ஒரு பிறகாத்து ஒல்லாந்த கொடி போட்டுக் கொண்டு ஒடி வந்தான். வரச்சே பின்னேயும் அநேகம் சினுல்கள‌ெல்லாம்[74] அடையாளம் காண்பிச்சுக் கொண்டு வந்தான். அந்த அடையாளம் அவிடத்திலே யிருக்குற பேர்களுக்கு தெரியாமல் போச்சுது. பிற்ப்பாடு துறை வந்து வைச்சு பிடிச்சு, ஒல்லாந்த கொடியை வாங்கி போட்டு

வெள்ளை கொடியை போட்டு, கோட்டைகாரனுக்கு பதிமூனு பீரங்கி போட்டு ஆசாரம் பண்ணுனன். கோட்டைக்காரனும் பதிலுக்கு பீரங்கி போட்டு ஆசாரம் பண்ணி கட்டுமரமும், சலங்கும் விட்டார்கள். அதிலே அவிடத்திலே யிருக்குற முசே திமோவுக்கு காகிதம் வந்துது. அவர் அந்த காகிதத்தை பாத்துக்கொண்டு, இதோ நம்முடைய இஸ்காதர் மிகுந்த பிலத்துடனே வந்துது. அந்த இஸ்காதரை விட்டு, இவிடத்து கபறு கொண்டு வந்த பிறகோத்தார் காட்டுமிது யெண்ணு, அந்த ஷிணம் தரங்கம்பாடியிலே யிருக்குற முசே செல்மியாக்கு, மதாம் மொறசேனுக்கும், பின்னும் ரெண்டொருத்தருக்கும் யென் கையிலே காகிதமும் குடுத்து, இந்த ஷணம் போவெண்ணு யனுப்பிவிச்சார். ருமம் பதினேரு மணிக்கு அவிடம் விட்டு பிறப்பட்டு அதித்துரையாய் வந்தேன். இந்த சங்கதிகளெல்லாம் உங்களுடனே சொல்லிப் போட்டு பேசவேண்டுமென்குறதாக வந்தேனெண்ணு சொன்னுன். ஆனல் ரொம்ப சந்தோஷமாச்சுது. அவர் யெழுதி குடுத்த காகிதம் யெங்கே? யெண்ணு கேட்டேன். அப்போது காகிதம் அவர் குடுத்தது யெண்ணு காண்பிச்சான். அதை பாத்து நல்லது. அவர்களுக்கு யிந்த காகிதத்தை சீக்கிறத்துக்கு கொண்டுபோய் குடுயெண்ணு யனுப்பிவிச்சோம்.

சாயங்காலம் கேழ்க்கப்பட்ட சேதி. யிந்த காகிதங்கள் அவரவர்கள் பாத்துக்கொண்டதாகவும், முசே செல்மியாக்கு மகனும், பேர்விளங்கான் ரெண்டு ஒப்பிசியமார்களும், ருகப்பட்டணத்துக்கு போனர்களெண்ணு கேழ்க்கப்பட்டது. ருத்திரி பிலோத்து தே காருசியும், சிறிது பேர் மறனேர்களும், இவிடத்திலே யிருந்து போனதாய் கேழ்விப்பட்டோம். யிந்த பிறகாத்து பேர் பிலேல். கப்பித்தான் பேர் லஷேஷ் யென்னு சொல்லிக் கொண்டார்கள்.

## விஷ ௵ பைங்குனி ௴ ௨௭ ௨ சோமவாரம்: ௧௲௭௱௪௰௨ ஆண்டு, அபிரேல் ௴ ரு ௨

இந்தனள் காலத்தாலே எட்டுமணிக்கு, தரங்கம்பாடி கோட்டையில் யிருக்குற நம்முட பிருஞ்சுக்காறர் யண்டையிலே, யிந்த கப்பலே சேதி அறியலாமெண்ணு போனவிடத்திலே, முசே திப்போறிஷித்து, தொத்தேள், மதாம் வெடுத்தலுமி, மதாம் மொறசோன், மதாம் பரிதி, முசே லத்தூறு யிவர்கள் வீட்டுக்கு போய், லோகாபிரம்மாய் பேசிக்கொண்டிருந்தவிடத்திலே அவர்கள் சொன்னது. யிப்போ ருகப்பட்டணத்துக்கு வந்த பிறகேத்து கப்பல் சமீபிச்சு வந்திருக்குது. அந்த சேதி கொண்டு வந்துது. யிதிலே முசே மொதாவும், பின்னேயும் ரெண்டொரு ஒப்பிசியேமாரும் யிறங்கினர்கள். கப்பலி சமீபத்திலே யின்ன யிடத்திலே வந்திருக்குதெண்ணு, இவிடத்துக்கு யெழுதி யனுப்ப யில்லை. ஆகையால் ருலு நாள் ஆறு ருளைக்குள்ளாக, யெப்போ வருமோ தெரியாதென்னு சொன்னர்கள். இந்தனள் சூரிய உதய முதலாக, காரைக்கால், அதைச் சேந்த கிருமங்களிலே யிருக்குற செனங்கள் வலசை பிறப்பட்டு, செனங்களிலே யிவிடத்திலேயும் வெகுபேர் வந்து கொண்டே யிருக்குருர்கள். மத்தியானம் கேழ்விப்பட்ட சேதி. இவிடத்திலே யிருந்து ஆரோ மோதாவுடைய வுத்தாரத்தின் பேரிலே, பேர்விளங்கான் தோரணம் வச்சதாகவும், தமுக்கு போடுவிச்சு குடிகளையெல்லாம் வந்து சேரச் சொல்லி சொன்னதாகவும் கேழ்க்கப்பட்டது. யிந்த சேதி யின்னம் யறிஞ்சு யெழுத வேண்டியது. ஆனல் யிப்படி தோரணம் வச்சவனும், இதுக்கு உத்தாரம் குடுத்தவனும், பெரிய மனுஷன்;

மகா புத்திசாலியென்னும், இது யெவ்வளவு காரியமெண்ணுச் செய்தானென்னும், இன்னம் கப்பல் வந்து சேரயில்லேயென்னும், முன்னுதாக யிப்படி செய்யலாமா? யெண்ணும், யெதினுலே யென்னமா யிருக்கும்? இதுனுலே அநேகம் மனதாஷ்சியாய் யிருக்குமெண்ணும், பலவிதமாய் வெள்ளக்காரரேனப்பட்டு வெகுபேர் சொல்லிக் கொண்டார்கள். யிவிடத்திலே யிருக்குற தமிழர், கிறிஸ்துவர் அவரவர்கள் யினிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு, யின்ன யின்னபடியெண்ணு யெழுதுகிற யிவர்களும், சீமைகளே கட்டவேணுமெண்ணு யெத்தினிக்கிற பேர்களும், அதிகாரமெனபடுத்திக் கொள்ளுகுற பேர்களும், யிதுகளுக்கு அவரவர்கள் வெள்ளக்காறரை அனுசரிக்கிற பேர்களும் சம்பாவுலு கோவிலார் பேச்சு ஒத்துப்பாத்து நடக்குமெண்ணும், செனங்களும், போக்குவரத்து, கூட்ட ளுட்டங்களும் பாத்து, ஆனுல் முன் புதுச்சேரி பட்டணம் அழிஞ்சு பாற்த்ததுக்கு முன்னுதாக, யிப்படிதான் சின்ன மனுஷர் பிரபாலியரும் யோசனேயும் யெண்ணினேம். அந்தப்படிக்கு பிறயோசனத்தை குறிச்சுது. துரைகள் அந்தப்படி கேழ்குறது அப்படி நடந்தும், பெரிய மனுஷருடைய யோசனே யில்லாமல் முன்பின் நடந்த காரியங்களே பாருமலும், யெசமானுடைய காரியமெப்படி போனுலும், பிறயோசனமான காரியமாக சேவுகன் முதல், யெசமான் முதல் யிப்படி நடந்தபடியினுலே அந்த பட்டணம் போய், அதை சேந்த ருச்சியமும் போய், துரைகளும் கையிலே ஆகாதவர்களெண்ணும் வச்சுக்கொண்டு, இதுக்குள்பட பெரிய மனுஷாள், வற்த்தகாள், உத்தியோகஸ்தாள், குடிகள், சகல செனங்களும், சர்வமும் போக்கடிச்சு கொண்டு, யிந்த ருச்சியத்திலே பிருன்சு மகா ருசாவுடைய கிறதியும், ஷாத்திரியமும் போக்கடிச்சுது, யெடுபட்டு போச்சுது. யிப்போ நூதனமாய் இதுகளுடைய சாத்திரமும், கிறதியும் பிறகாசிக்க பண்ணிவிச்சு, சத்துருக்களே செயிச்சு, சகல செனங்களேயும் ஆதரிக்கும்படியாய் பிலத்துடனே வருகுறபடியினுலே, இதுக்கு யெசமானுக யிருக்கப்பட்டவர்களும், சவுரியமும், புத்தியும், சத்தியத்துடனேயும் யிருக்கப்பட்டவர்கள் வருவாரே யல்லாமல், காரியங்கள் அவர்கள் யெண்ணத்தின்படியே நடக்கமாட்டாது. அல்லவெண்ணு அந்தப்படியே நடந்தால், இந்த ருச்சியத்தை பிடிச்ச சகல காலத்துக்கும் தக்கதாக, இன்னம் சனங்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்குறதுக்கு சுவாமியினுலே வரப்பட்ட காரியமா யிருக்குமென்னு, புத்திசாலியாய் யிருக்கப்பட்ட பேர்கள் சொல்லிக் கொண்டார்கள். கேழ்விப்பட்ட சேதியை யெழுதி வச்சோம்.

## விஷ ஸ்ரீ பைங்குனி மீ உஅ ௳ மங்களவாரம் : சதளளசாயஉ ஆண்டு, அபிரேல் மீ ச ௳

## ஸ்ரீ ருமசெயம்

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி நேத்து ருத்திரி, சேதி போறதும் ரெண்டு பேரும் சீமைக்கு போகத்தக்கதாக ளுகைப்பட்டணத்துக்கு முஸ்தீதாய் யிருக்குது; அதிலே தட்டு முட்டு யெல்லாம், அதில் போகத்தக்கதாக, கேழ்விப்பட்டுதே, பின்னும் சிறிது வெள்ளக்காறரும் போனதாய் கேழ்விப்பட்டோம். மத்தியானம் பதினேரு ளுழிகைக்கு வந்த சேதி வெங்கிடராமன் ளுகைப்பட்டணத்துக் போறதுக்கு பயணமாயி வளவுக்கு வந்து சொன்னது. ருத்திரி முசே முதாவண்டையிலே யிருந்து, நம்மையும் சின்னப்பய்யனும் வரச்சொல்லி ஓலே வந்துது. அதின்பேரிலே பிறையாத்திலே யிருந்த பிருஞ்சுக்காறரையும் கண்டு பேசினேம். அவர்களும் போக வேண்டியதெண்ணு சொன்னுர்கள்.

அதும் பேரிலே நாமும் சின்னப்பய்யனும் பயணப்பட்டு போகவேணுமெண்ணு வந்தோமெண்ணு சொன்னுர். காலத்தாலே கோட்டையிலே அனுப்பிவிச்சுக் கொண்டு போனவிடத்திலே, சின்னப்பய்யன் அங்கியையும் பிரம்பையும் யெடுத்துக் கொண்டு போவோமா யெண்ணு கேட்டார். யிப்போ யென்னத்தை யெடுத்துக் கொண்டு போறது யெண்ணு சொன்னேண்ணும் சொன்னுர். யிப்படி வாற்த்தை சொல்லி கொண்டு யிருக்கச்சே, சின்னப்பய்யர் பயணமாய் வந்தார். வந்து நாமும் ருகப்பட்டணத்துக்கு வரச்சொல்லி வந்தபடியினுலே போய் வருகுரேுமெண்ணு சொன்னுர். அரை ருழிகைக்கெல்லாம் தெற்கு வகுப்பு பாளையக்காறனே, சசியப்ப ருயக்கர் குமாரன் கஸ்தூரி ருயக்கரும் பயணமாய் வந்தார். ரெண்டு ருழிகை மட்டும் லோகாபிரம்மாய் வாற்த்தை சொல்லிக் கொண்டிருந்து, பாக்கு, வெத்திலை வாங்கிக் கொண்டு, நம்முட டொலி சின்னப்பய்யர் யிரவலாக வாங்கிக் கொண்டு பயணமனுப்பிவிச்சுக் கொண்டு போனுர்கள். யிவிடத்திலே பயணமனுப்பி கொண்டு போகச்சே, மூணு பல்லக்கு, ருலு குதிரை, அம்பது பேர் சேவுகர், பாங்கா யிவ்வளவு சம்பிறமத்துடனே போனதாய் கேழ்விப்பட்டோம். யிவர்களுக்கு ஓலை வந்த சேதி விசாரிக்குமிடத்தில், முசே முதாவு துபாசி நயினியப்பன், முதாவு உத்தாரம் யெண்ணு யெழுதி யனுப்பிவிச்சதாகவும், தாங்கள் போய் காரைக்கால் சீமையை கட்டி, சிப்பந்தி வச்சு, றசீது, றச வற்த்தகாள் தங்கள் வழியிலே சேரத்தக்க திட்டம் பண்ணிக்கொள்ள தக்கதாகவும் பின்னும் யேதோ ............ யெல்லாம் சிந்திக்கிறதாக, போனதாக கேழ்க்கப்பட்டு, ருகப்பட்டணத்துக்கு முசே பொலோ அவர்களுக்கு, கந்தன் கையிலே காகிதத்தை குடுத்து, கொடி முந்திரி குலை ஒன்பதும் யனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ பைங்குனி மீ உகூ ௳ புத்வாரம் : சதளளசாயஉ ஆண்டு, அபிரேல் மீ எ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. காரைக்கால் தோரணம் ஒண்ணு ............ வாத்தியார் மலையப்பன் ............ கித்தாரி கோவைப்பிறகாசன் காகிதம் யெழுதி யிருந்ததாகவும், அதை வச்சுக்கொண்டு யிப்போ ............ ணம் வச்சார்களெண்ணும், தோரணம் வச்சு ருகப்பட்டணத்துலே முசே முதா அவருடனே சொன்னதாகவும், யிப்படி ஆர் செய்யச் சொன்னுர்? யெண்ணு கோபம் பண்ணதாகவும், அதின்பேரிலே ஓடிப்போய் வந்ததாகவும், காரைக்கால் தோரணம் வச்சதும், விட்டுப் போட்டு யெல்லாரும் தயங்கம்பாடிக்கு வந்துவிட்டதாகவும், இதுக்கு முந்தானுள் ராத்திரியே எச்சரிக்கை போட்டு ஓடிப்போனதாகவும், தைக்கார சிவலிங்கச் செட்டி மத்தும் யிருக்குற பேரும் யிந்த சேதி கேட்டு மறுபடி மனுஷனை யனுப்பிவிச்சு சம்மதம் பண்ணதாகவும், சென்னப்பட்டணம் அய்யத்தம்பி, வெங்கடாசலப் பிள்ளைக்கு நெல்லு நிமித்தியம், அவர் மனுஷன் சோகப்பன், சேவுகர், தரகர் உள்ளவர் காரைக்காலிலே யிருந்து நெல்லு யேத்தி அனுப்பிவிச்சுக் கொண்டிருந்தவர் தோரணம் வச்ச கிறிஸ்துவர்கள் அடிச்சுக் கொண்டு தொரத்திவிட்டார்கள். கையிலே யிருந்த பணங்காசும் பிடுங்கிக் கொண்டார்கள். ஓடிவந்து எடுக்கமாட்டார்கள் யெண்ணு சொல்லி ............ காரைக்கால் போய் சேந்ததாகவும், அவர்களது ............ அரிசி கொள்ளை போனதாகவும், நெல்லு கரையிலே யிருந்ததாகவும் ............ பிடிவந்து கிடந்ததெல்லாம் படகிலே யேத்தி முஸ்தீது பண்ணி வித்ததாகவும், காரைக்கால் கிருமம் பத்தும் மத்தும், கை வாங்கி யிருக்குற

சோனகனே பிடிச்சு, நல்ல அடி அடிச்சு, அவன் கையிலே அறனூறு எழுனூறு வருகன் மட்டுக்கும் வாங்கி, யிப்படி கொள்ளெ நடந்ததாம். இதல்லாமல் தயங்கம்பாடி வடக்கு வகுப்பு பாளெயக்காரன் ராமனுதன் யென்குறவன் கோடிச்சேரி முதலான கிருமங்களில் ரூலாயிர கல நெல்லு மட்டும் கொள்ளெயிட்டு கொண்டு வந்ததாகவும், யிந்த சேதிகள் வடக்கே யெழுதி அனுப்பிவிச்சதாக, கேழ்விப்பட்ட சேதியை யெழுதி வச்சேன்.

இந்தனுள் ருத்திரி ஏழுமணிக்கு, சீகாழியிலே யிருந்த அரும்பாத்தை சோனுசல பிள்ளெ, ருகப்பட்டணத்துக்கு கப்பல் வந்த சேதி கேட்டு வந்தவர், நாமிருக்குற விடத்துக்கு வந்தார். வந்தவிடத்தில் லோகாபிரம்மாய் வாற்த்தை சொல்லிக் கொண்டிருக்கச்சே, ருகப்பட்டிணத்திலேயிருந்து காகிதம் வந்து, அதைக்கொண்டு நம்முட கையிலே குடுத்தார். அதிலே யெழுதி யிருந்துது. பிறகாத்து வந்ததும் முசே புத் முதலாகிய பேர் யிறங்கி, அது தீனி தட்டு முட்டுக்கு சேதிக்கு மெதுவானதாகவும் திருவேங்கடபிள்ளெ மனுஷன் காத்துக்கொண்டிருக்குற இஸ்காதரும் வரும். கோவைப்பிரகாசன் பேச்சுகள் யெதுபார்க்குறவர் கப்பல் யின்னு ருளெயிலே பயணமெண்ணும், வந்திருக்குறதை பின்னே யெழுதி, யிது முதலான சேதிகள் யிருந்துது. ருத்திரி அவர் பிறபஞ்சர் வீட்டுக்கு போய் மெனவி விட்டு, பிருமனுளுக்கு அனுப்பினதுக்கு அங்கு வர அனுப்பிவிச்சோம்.

## விஷ ஸ்ரீ பைங்குனி மீ ௩ய ௨ வியாழக்கிழமை : சதளளசாயஉ ஆண்டு, அபிரேல் மீ அ ௨

இந்தனுள் சோனுச்சல பிள்ளெ தேரடி வீதியிலே வீடு அமத்திக் கொண்டு போனர். சாயங்காலம் வந்து, கந்தப்ப முதலி சொஸ்தமில்லாமல் யிருந்தபடியால், விசாரிச்சு வந்ததாக கேழ்விப்பட்டோம். ருத்திரி யேழு மணிக்கு, ருகப்பட்டணத்துக்கு முசே புலோ அவர்களுக்கு, யிந்த கந்தன் வந்து குடுத்த காகிதம். அந்த காகிதத்திலே யெழுதியிருந்த வயணம்.

# ஸ்ரீ ரும செயம்

விஷு ஷு பங்குனி மீ ஙயக ௳க்கு சதளளசாயஉக்கு
அபிரேல் மீ க ௳ முதல் சித்திரபானு ஷு அற்பசி மீ
யச ௳க்கு சதளளசாயஉக்கு ஒயித்தேம்புறு மீ
உயங வரைக்கும் தஸ்திரம்

**BNP: Mss. Indien, No. 155, fls.1-101.**
**TNSA: Mss, Public Department, Sundries, vol.186, fls.1-149.**

## சித்திரபானு ஷு சித்திரை மீ உ வக்கு ஆதிவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அபிரேல் மீ யக உ

...... தையா பிள்ளை றசீது அனுப்பிவிச்சார். பிடவை, சீலே சாமானுகள் கொ...... [முன்]னே வந்து சேந்துது. நாஙயத் தினம் பெரியம்மாளுக்குத் திதியானபடியினலே ..... ருயர் கையிலே சிலவுக்கு குடுத்து, சகல சாமானும் முஸ்தீது பண்ணச் சொன்னேம். கோட்டையிலே ஞமிறங்கியிருக்குற வீட்டுக்கு யெதிரே இருக்கிற, பாதிரி மத்தொமவர்களை போய் கண்டு லோகாபிறமமாய் பேசிக் கொண்டு யிருக்கச்சே, கப்பல் சேதி யென்ன வெண்ணு கேட்டதுக்கு அவர் சொன்னது. இந்த பிறகாத்து வரச்சே யிஸ்காதர் மோரிசிலே தான் இருக்குது. நாங்களும் புறப்படுகிறேம் முன்னே போய் சேதி அறிஞ்சு கொண்டு வரவெண்ணு அனுப்பிவிச்சார்கள். ஆனல், இவனுக்கு ஒரு சேதி. நாகப்பட்டணம் துறை வைச்சு பிடிச்சு, ஒன்பது மணி நேரத்துக்கு, காகிதக் கட்டு அவித்து பாத்து, அதிலே இருக்கிற பிறகாரம் நடந்து கொள்ள சொல்லி குடுத்தாகவும், அந்தபடி(க்கு) அவித்து பாத்து, அதிலே இருந்தபடி முசே முதாவையும், சிறுது பணம் எறக்கி போட்டு, இவிடத்து சேதிகளெல்லாம் விசாரித்துக் கொண்டு, பிறிசேனர் இல்லாத பேர் முசே செலுமுனியா(க்கு) குமாரனுடனேயும் சிறுது பேரையும் யேத்திக் கொண்டு, அதிலே யெழுதி யிருந்த படிக்கு, இவன் ஒளிந்து அவன் வரச்சே, பிடிச்சுக் கொண்டு வந்த இங்கிலிசுகாறருடைய சுலுப்பிலே இருந்த நாலு பேர், இங்கிறிசுக்காறர் கையிலே கையெழுத்து வாங்கிக் கொண்டு, நாகப்பட்டணம் துறையிலே யிறக்கிப் போட்டு, பிஞ்சுகளையும் யிறக்கிவிட்டு, அந்த சுலுப்பையும் கூடக் கொண்டு ஒடி போனுன். மிந்தி அந்த காகிதத்திலே ரெண்டு காகிதம் இருந்துது. அதிலே ஒரு காகிதத்தை [3] இராவிலே வந்து பிரிச்சு பாற்கிறது. அந்த காகிதத்திலே யெழுதி

யிருக்கப்பட்ட இடத்திலே இஸ்காதர் இருக்கும். அவ்விடம் வந்து சேர்வது. அவிடத்திலே யில்லாவிட்டால் ரெண்டாவது காகிதம் பாத்துக் கொண்டு யெழுதியிருக்கப்பட்ட இடத்திலே ஸ்காதர்யிருக்கும். அங்கே வந்து சேருவது. அவிடத்திலில்லாவிட்டால் மோரிசு வந்து சேருகிறது... ... .....இருக்குது. ஆகையால் இஸ்காதர் சின்னம் யெங்கே யிருக்க வேணுமெண்ணும் தெரியாது. யோசிச்சுப்பாத்தால்.. .....த்திலே வரவேணும். யிதல்லாலே. முசே புசி வருகிற இஸ்காதருக்கு வழி பாத்துக் கொண்டு இருக்குரு போலன்று..... ழுயண்ணு சொன்னுன். இதல்லாமல், வெள்ளக்காறர், சிறுது பேர் சோல்தாது குதிரை பிச்சி காலமானபடியினுலே, அமாவாசை முறுவம் போன பிறகு .... யெண்ணு இப்படி னுவிதமாய் சொல்லுகிறுர்கள். கேழ்விப்பட்டதை யெழுதி வைச்சேன். சாயங்காலம் ஆறுமணிக்கு சவுபாக்கியவதி பொன்னுச்சி அம்மாளும் கோட்டையிலே நாம் யிருக்கும்மிடத்திலே அழைப்பிச்சு கொண்டோம் இதல்லாமல் நேத்து ருத்திரி, வேங்கிட்டாம் பேட்டையிலிருந்து சிதம்பரனுத பிள்ளை காகிதமும், சிரஞ்சீவி நன்னுச்சியம்மாள் காகிதமும் வந்தது. அதிலே யெழுதியிருந்தது. காரைக்கால் தோரணம் வந்தது. புதுச்சேரியார் தயங்கம்பாடியிலே யிருக்கிற பேர் வ⟨ச்சி⟩ந்ததாகவும், அது நிமித்தியத்திலே அவர்களைப் பிடிக்க சிறுது புவுஞ்சு வருகுறதாகவும், இன்னம் பின்னுலே பாரி பவுஞ்சு வருகுறதாகவும், ஆகையால் யெச்சரிக்கையாய் கோட்டையிலே யிருக்க வேணு{ம்}மெண்ணும், நறுக்கோட்டு பேட்டும் மால் பெட்டியும் வைச்சு வந்தோமே, அதுக்கு மனுஷரை அனுப்பிவிச்சோம். அதை பத்திரமாய் வந்து அனுப்பிவிக்கச் சொல்லி யெழுதி வந்தது.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ ங உ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு அபிரேல் மீ யஉ உ

இந்தனுள், பெரியம்மாளுக்கு திதி யானபடியினுலே சிரஞ்சீவி அய்யாசாமி முதலாகிய பேரினவரும், பிறையாத்துக்கு வந்து, திதி வேளைக்கு சம்பிறமாக தானே குடுத்து, மத்தியான⟨ ம்⟩ சாப்பிட்டு, சாயங்காலம் கோட்டைக்கு போக வேணுமெண்ணு இருக்கச்சே, தெற்கு வரும்படி பாளையக்காறன், நாகப்பட்டணத்திலேயிருந்து, வந்தவாசி திருவேங்கடத்தா பிள்ளை யண்டையிலேயிருந்து, ஒலைக் கொண்டு வந்தான். அதிலே யெழுதியிருந்தது. நாம் போய் முசே முதா அவர்களைக் கண்டு பேசினுேமே, அவருக்கு நம்முட சலாம் சொன்னதாகவும், அவர் யெங்கே இருக்கிறுர்களெண்ணு{ம்} கேட்டதாகவும், பிறையாத்திலே...யும் அவர்களை பாற்க வேணுமே...ண்ணு சொன்னதாகவும், இஸ்காதர் ரெம்ப மிகுதியான வாற்த்தை சொன்னதாகவும், இப்படியாக யெழுதி இருந்துது. சாயங்காலம், நாமும் சீரஞ்சீவி அய்யாசாமியும், கந்த பிள்ளையும் கோட்டைக்குப் போய் சேந்தோம்.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ ச உ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு அபிரேல் மீ யங உ

இந்தனுள் காலமே, முசே பித்துவால் வீட்டுக்கு போயிருந்தோம். அவருடனே லோகாபிறம்மமாய் பேசியிருந்த விடத்திலே அவர் சொன்னது.

யெல்லாக் கணக்குகளும் யெழுதி சீமைக்கு அனுப்பிவிட்டோம். உங்கள் சீமாமூல கணக்கு மாத்திரம் அனுப்ப இல்லே. இதுவரைக்கும் அந்த கணக்கை தொட இல்லே. பிள்ளேயவர்கள் யிருக்கச்சே கும்மாந்தர்[75] முனேயத்துக்கும், சாமினுத பிற பத்துக்கும், அரும்பாதை பத்துக்கும், றசீதும் வயணங்களும் கேட்டதுக்கு இதோ அதோ யெண்ணு சொல்லிக்கொண்டு வந்தார். அப்ப தானே இன்னல் தீந்து யெழுதிப் போய்விடும். இப்பவும் அதுகளுக்கு றசீது இல்லாவிட்டாலும், சாதக பாதந்துடனே கணக்குக் கொண்டு வந்து குடுத்தார். கணக்கு தீந்து யெழுதிப் போடுகிறேன். இதிலே இருக்குறதுனலே லஷத்து சிலவான றூபாய் நிலுவைக்கு வயணமென்னது கேட்டான். இதுகளுக்கும், முன் நீர் கேட்ட வயணத்துக்கும், கணக்கு வழக்குகளெல்லாம் யிருக்குது. இதனலே எங்களுக்கு சீமாமூலத்திலே பதிமூணு லஷ்சம் றூபாய் வரவேணும். அதுக்கு கும்பினீருக்கு குடுக்க வேண்டிய நாலு லஷ்சம் றூபாய் போக, குறை ஒன்பது லஷ்சம் றூபாய் நமக்கு தர வேண்டி இருக்குது யெண்ணு சொன்னதுக்கு, அது கும்பனியாருக்கு யென்ன கவையிருக்குது. ஆர் பேரிலே வரவேணுமோ, அவர்கள் கையிலே வாங்கிக் கொள்ளச் சொல்லுவார்கள் யெண்ணு சொன்னல், எங்களுக்கென்ன கவையாயிருக்குது. யெங்கள் கையிலே இருந்த சீமையும் பிடிச்சுக் கொண்டு, குமுசாறுகளே[76] யனுப்பி விச்சு, சீமா மூலம் விசாரிச்சு, பதிமூணு...ம் நிலுவை இரண்டு பாத்துக் கொண்டு, யெங்கள் கையிலே ஒரு காசாகிலும் குடுக்கவே யில்லயெண்ணு திட்டம் பண்ணி, அமுலும் பண்ணிக் கொண்டு போற உங்களுக்கு இந்த பணம் ஆர் குடுக்க வேணுமெண்ணு சொன்ன{த்}துக்கு, அந்த கணக்குகளே யெல்லாம் யெடுத்து இது முசே புலோ கொடுத்த கணக்கு, இது முசே னுவார் குடுத்த....ளெண்ணும், நண்ணய் இன்னம் பாத்ததுக்கு லஸ்ஆ .... கணக்கிலே எழுபது ஞயிரத்து சிலவான ம(த்த) றூபாய்..... ர். இதல்லாமல் உங்கள் மு(து)லிலே ரெண்டு லஷ்சம் றூபாய் பத்தெ யெழுதி யிருக்குறர்களெண்ணு சொன்னர். ஆனல் அந்த நிலுவை கூட, இவர் வரவா இருக்க, ஆர் உத்தரவாதம் பண்ண வேணும். பாத்துக் கொள்ளும். மத்த சங்கதிகளுக்கு கணக்கு வழக்குகள் சாலமும் இருக்குதுயெண்ணு சொன்னத்துக்கு. இதனல் யிந்த சங்கதிகள் யெல்லாம் யெனக்கு நண்ணய் தெரியாது. இப்பவும் இந்த கணக்குகள் யெல்லாம் சீமைக்கு கணக்கு தீத்து யெழுதி யனுப்பச் சொல்லி, யெழுதி வந்து இருக்குது. இருபது ஞளேயிலே அனுப்பிவிக்கவேணும். ரெண்டு மூணு ஞளேயிலே கண்டு கொண்டு வந்தால், எழுதி தீத்து போடலாமெண்ணு சொன்னன். கணக்கு அப்படியோ, அந்த கணக்கு யெடுத்து சேகரிச்சுக் கொண்டு வருகுறேன் யெண்ணு சொல்லி அனுப்பிவிச்சுக் கொண்டு, வீட்டுக்கு வந்தோம்.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ ரு உ புத்வாரம்: சதஎளசாயஉ ஆண்டு அபிரேல் மீ யச உ

இந்தனள் புத்வாறமானபடியினலே, சிரஞ்சீவி அய்யாசாமியும், நாமும், பிறையாத்துக்கு வந்து மத்தியானத்துக்கு அறப்பிங்கனம் பண்ணிக் கொண்டு, சாயங்காலம் கோட்டைக்கு போக வேணுமெண்ணு இருக்கச்சே, சின்னயா பிள்⟨ளே⟩ வந்து ஒரு ஓலே கொண்டு வந்து காண்பிச்சார். அந்த ஓலே வந்தவாசி திருவேங்கிடத்தா பிள்ளே யெழுதினது. அதிலேயெழுதி இருந்தது யென்னவென்னல். முசே முதா அவர்கள் ரெம்ப தயவாயிருக்குறதாகவும், வெளிபாளேயத்திலே இருக்கிறதாகவும், இங்கிறிசுக்காற

மனுஷராலே யென்ன செய்ய வேண்டியதெண்ணும் வீண் காபிரு[77]பட்டதாகவும், கோட்டையிலே ஒத்து வருமாவெண்ணு⟨ம்⟩ நீங்கள் கோட்டையிலேயிருந்து கெற்ப்பமா இருக்கிற பெண்களை மாத்திரம் வெளியிலே வைக்கச் சொல்லியும், தஞ்சாவூரிலே அகப்பட்டிருந்த பாதிரி வந்தானென்னும் அவன் சொன்னது. மயிசூர் அயிதுருனனும்[78] நம்முட வெள்ளக்காற பவுஞ்சும் இவடத்துக்கு வருகிறது(க்கு) பயணமா யிருக்குறார்களெண்ணும், யெழுதி அதை துரையவர்களுடனே சொன்னோம். அவர் ரொம்ப கோபிச்சு கொண்டு இப்படி பொய் யெழுதிவாரார்களாவெண்ணு சொல்லி உனக்கு யெழுதச் சொன்னார். இனிமே இப்படிப்பட்ட பொய் யெழுத வாணும். சகல சேதியும் நண்ண விசாரிச்சு யெழுத சொன்னாரெண்ணும், பெரிய முதலியார் நாம் இல்லாததுனாலே கலியாணம் நிறுத்தி போடுறோ மெண்ணு சொன்னதாய் யெழுதி நீயே முன்னினச்ச⟨த்⟩தை விட ஆயிரம் பங்கு, அதனமாக நடக்குமெண்ணும், இதுவிடத்திலேயிருந்து யெல்லாம், திட்டம் பண்ணி அனுப்பிவிக்கிறோமெண்ணும் அறுமாசுகளும் வாதிட்டப்படி தேதி யனுப்பிவிக்கிறோமெண்ணும், கந்தப்ப முதலியாருக்கு சரீர சொஸ்தமாயிருக்குற சேதி யெழுதி அனுப்பச் சொல்லியும், அவருக்கு கோட்டையில பத்து வருமாவெண்ணும், சரீரத்தை பக்குவமாய் பாத்துக் கொள்ள சொல்லியும் இவிடத்து காரியங்களெல்லாம் அனுகூலமாயிருக்குதுயெண்ணு சொல்லச் சொல்லியும், வெள்ளி சேர்க்கு விக்கிற விலை ரு க்கு விழுக்காடு க. ஆக நல்ல வெள்ளியாக இருக்குதெண்ணு நயினத்தை முதலிக்கு சொல்லச் சொல்லியும், தமக்கு கழுத்துலே கண்ட கட்டி சொஸ்தமாய், சவரம் பண்ணிக் கொண்டு, ஸ்நானம் பண்ணினோம். அறப்பிங்கனம் பண்ணிக்கொண்டோமெண்ணு சொல்ல சொல்லியும், இது முதலானதுகள் எழுதி இருந்துது. அதை பார்த்து நல்ல சேதிகளேண்ணு ஓலையை குடுத்து விட்டோம். ஆனாலிவன் இந்த ஓலையைக் காண்பிச்சதும் அவன் கை சாடையும் கண் சாடையும் பாத்தால் தங்களுக்குச் சகல அதிகாரமும் யோகமும் வந்ததாயும், அந்த பிறதி வீட்டை நாம் அறிய வேணுமெண்ணு காண்பிச்சதாக தோத்தப்பட்டது. இதுவுமல்லாமல் தஞ்சாவூர் ருசா முதலான இந்த சோன தேசத்திலேயுள்ள சகல செனங்களும், மற்றும் சென்னப்பட்டணம், ஆற்க்காடு முதலாகிய இந்த ராசியத்திலுள்ள சகல செனங்களும் சொல்லிக் கொள்ளுகுற தென்னவென்றால் சேதி அறிய ஒரு பிறகேத்து வந்தால், அதிலே இன்ன சேதி, கப்பல் இன்ன இவடத்திலே வந்துது, இன்னார் வந்தார் யெண்குறது. ஒண்ணும் தெரியாது ருசா முன்பாக இந்த கிறிஸ்தவர் சின்ன மனுஷரான படியினாலே, முன் பின் பாராமல், பாதிரிகளுடத்திலே எல்லாரும் பெரிய மனுஷராக வேணுமெண்ணு, ஆசையிலே முழுகி யிருக்கிறவர்களான படியினாலே, முன் பின் பாராமல் எவன் முந்துகுறானோ வெண்குற ஆத்திரத்துனாலே, காரைக்காலிலே தோர்ணம் வச்சார்கள். சின்னப்பய்யனும் வந்தவாசி திருவேங்கிடத்தா பிள்ளையும்.... பார். புத்தி இல்லாதவர்களான படியினாலேயும், கூடின பேர்கள் பாரியல்லாத படியினாலேயும், பேராசை கொண்ட படியினாலேயும், சம்பிறதாயங்கள் யல்லாதபடியானாலேயும், இவர்களும் ஆத்திரப்பட்டு, யெல்லாரும் குதிரை யுருணவும் பாங்காவும் ஊதிக் கொண்டு போனார்கள். இப்படி யெல்லாம் செய்த படியினாலே, கப்பல் வர தாமிஷப்பட்டு வர யிருந்த பேர்களை, இதிலே தோர்ணம் வச்சார்கள். ஓடிபோன படியினாலே, மறுபடி எதிரி பலக்காயிச்சுப் கொண்ட படியினாலே, தங்களை வழிகட்டிப் பிடிப்பார்கள் என்கிற பயத்தினாலே, அவிடத்திலே யிருக்குறார்களெண்ணும் ஸ்ரீ ஆனந்தறங்க பிள்ளை அவர்கள் குமாரன் பாரம்பரியமாய் பெரிய மனுஷரானபடியினாலேயும், பாளையுனுடைய மஸ்தகத்தை யேதிக்குற பலம்

சிம்மக்குட்டிக்குத் தெரியுமே அல்லாமல், நாயு(க்)கும் நரிக்கும் தெரியுமாவெண்ணும் அதிகாரத்துக்கு வுடையவர்களாயிருந்துது மட்டில்லாமல் திரசுமாய் விசாரிச்சு, பலன்களே அறிஞ்சு, ஒரு காரியும் செய்ய வேணுமெண்ணு யெண்ணி, நாம் ஒண்ணும் அறியோமெண்ணுப்போலே இருந்தார்களெண்ணும், சோணுசலப்பிள்ளேயும் சிறு பிள்ளேப் புத்தியாய் வரப்பட்டானென்னும், இப்படி அனேகம் விதமாயி சொல்லிக் கொண்ட சேதிகள், அறுக்காறுகள் போக்குவரத்துக்காரர் போரிலே சொல்லச்சே கேழ்விப்பட்டோம். இது சேதிகள் இவர்களும் கேழ்விப்பட்டிருக்கிறதாகையால் அச்சப்பட்டும், அங்கங்கே இப்படிச் சொல்லிக் கொள்ளுகிறுர்களெண்ணும், வழியே போற சிப்பாயைக் கண்டு உளரிக்கொண்டு, கோட்டைக்கு ஒடிப்போனுர்கள். இது சேதிகளெல்லாம் கேழ்விப்பட்டு இவர்களுக்கு தயிரியமாக எழுதினுன். இந்த சின்னப் பிள்ளேயும் சின்ன மனுஷனுன படியினுலே, இதுனளவிலே சகல சாம்பிருச்சியமும் வந்ததாய் முழுகி, யிந்தனுழிகை வரைக்கும் இருந்தவிடத்திலே இராமல் கிடந்த விடத்திலே கிடவாமல் இருந்தவன், இத்தனேயும் மறந்து, பாண்டவர்களிருக்கப்பட்ட ஆறணியத்துக்கு, திரீயோதரன் அயிசுபரியத்துடனே பெருமை காண்பிக்க கோறி யாத்திரை பிறப்பட்ட கதைப் போல, இந்த ஓலேயைக் காண்பிச்சான். ஆகிலும் இந்த கதைக்குள்ள பல, இவறுகளுக்கு வருமெண்ணு யெண்ணுகிறேன்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ ௫ ௳ வியாழக்கிழமை: ௧௭௪௪ ஆண்டு அபிரேல் ௴ ௰௫ ௳

இந்தனுள் விந்தையாக ஒண்ணும் கேழ்விப்பட இல்லே.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ ௭ ௳ சுக்கிற வாரம்: ௧௭௪௪ ஆண்டு அபிரேல் ௴ ௰௬ ௳

வெற்று வரிசை

## சித்திரபானு ௵ சித்திரை ௴ ௮ ௳ சனிவாரம்: ௧௭௪௪ ஆண்டு அபிரேல் ௴ ௰௭ ௳

வெற்றுப் பக்கம்

## சித்திரபானு ௵ சித்திரை ௴ ௯ ௳ ஆதிவாரம்: ௧௭௪௪ ஆண்டு அபிரேல் ௴ ௰௮ ௳

இந்தனுள் காலத்தாலே [3] அம்மாள்ளவர்களுக்கு, காலத்தாலே ரெண்டு தரம் பேதியாச்சுது. மிளகு கறுக்கு குடுத்தோம். பிறப்பாடும் பேதி கண்டுது. அரிசி கறுக்கும் குடுத்தும், பதினஞ்சு ஞுழிகைக்கு மேலே சுத்த தண்ணீயாய் ரெண்டு மூணு தரம் பேதியாச்சுது. அதின் பேரிலே சலவை கண்டுது. இருபத்து ரெண்டு ஞுழிகைக்கு நாம் கோட்டையிலே இருக்கச்சே, முருகன் வந்து அம்மாளுக்கு பேதி கண்டுது;

சீக்கிறதுக்கு அழைச்சு வரச் சொன்னுர்கள் என்று சொன்னுன். அந்த ஷணம் பிறப்பட்டு பிறையாறு வந்து சேந்தோம். உடனே பூபதி, சிந்தாமணி வசந்தம் காயியும் நச்சு விஷேதங்களேன் உண்டோ அதுகளெல்லாம் வச்சுக் குடுத்தோம். யிருபத்தஞ்சு நாழிகைக்கு தாதுயிருந்து போச்சுது. பின்னும் யென்ன சிறுவுடைமைகள் பண்ண வேணுமோ, அந்த யெத்தனமே யெல்லாம் பண்ணுேம். ருத்திரி சாமத்துக்கு ஆத்துமாவானது பிறிஞ்சு, பகவானுடைய திருவடிகளிலே சேந்துது. ஆனுல் இந்த மகா பாக்கியவதியாகிய யென்னுட தாயார் வைகுண்ட பிருப்பத்தியான மாத்திரத்திலே இந்த துக்கம்தன்றி, இருந்த துக்கத்தையே எழுத முடியாது. ஆகிலும் சொற்க்கம் தைப்பதர்ணம் மூன்று முழுகி போருப் போலப்படியோ அப்படியே இருந்தது. இண்ணைய தினம் சுத்தி ஆதிவாரம். பஞ்சமி—சாய. விபம். ரு.பா.[3] சுப ளுள் யெமோ இது. வணி கர்ணம் உயக. தியாச்சிலு பூர்ணம். எற இந்த சுபதின ருத்திரி சாமத்துக்கு விருஷ லக்கினத்திலே தற்கால கிறக நீல அசுபதி ஙய; சூரியன் அவிட்டம் சல சகதிரின சித்திரை உய; செவ்வாய் அ; சுபதின மூல காரியம்; புதன் அசுபதி; முன்காலே குரு; அசுபதி சா; சுக்கிறன் ரேவதி உல; சனி ய; பறணி ஙல; குரு ச; விசாகம் க; ல கேது; இப்படிப்பட்ட தினத்திலே சுவாமினுடைய பாதத்திலே சேந்தாள்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ ய ௨ சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அபிரேல் ௴ யகூ ௨

இந்தளுள் தகன தினமானபடியினுலே, இந்த பட்டணத்தில் லுண்டாகிய சகல செனங்களும் வந்தார்கள். நம்முட புதுச்சேரியிலிருந்து வந்த சகல செனங்களும் வந்தார்கள். ஆசாரியார் யவர்கள் வந்து, திருச்சூரண பரிபாரணம் செய்யவிச்சு, தந்த பல்லக்கும் பேரிலே, கொம்புகள் தப்பு வாங்க, தாரைகள் முதலாகிய வாத்திய கோஷங்களுடனே, இரு பாரிச சத்திலும் தென்ன மட்டை, வாழமரம் பிடிச்சு வரத் தக்கதாக, பாற்க்காறர், துபாசிகள், சுட்டுக் கொண்டு வரத்தக்கதாக சகல செனங்களும் பின்னவர் நடை பாதையின் மேலே பத்து ளுழிகைக்கு புறப்பட்டு பனிரெண்டு ளுழிகைக்கு மசானத்திலே செய்ய வேண்டிய சடங்குகளெல்லாம் செய்து, தகனமானவுடனே வீட்டுக்கு வந்து ஸ்நானம் பண்ணி பந்துக்களோடு கூட சாப்பிட்டோம். ஆனால் சகல செனங்களும் சொல்லிக் கொண்டது. விக்கிறம ௵ தை ௴ ஙஉ ௨ ஸ்ரீ........... அவர்கள் காலம் பண்ணிப் போனதும், சறுவ பாரமும் இங்கிறிசுக்காறர் கையிலே அகப்பட்டுப் போனதும், தேசப்பிரிவிஷமாய் இந்த தயங்கம்பாடியை சேந்த பிறையாத்திலே வந்திருக்கிறவிடத்திலே, விஷ ௵ புரட்டாசி ௴ மு ௨ அண்ணுசாமி காலம் பண்ணி போனதாகிலும், மகத்தாகிய விசாரம். அந்த விசாரமே இன்னும் யிருக்கச்சே, இப்போ இந்த மகா பாக்கியவதியான புண்ணியவல்லி இந்த கருசாபாரம் வறிச்சு, எல்லாரையும் அரவணேச்சுக் கொண்டு வந்த வேளேயிலே, இவர்களுக்கு யெப்படி நடப்பிக்க வேணுமோ அப்படி நடப்பிச்சுக் கொண்டு வந்தாள். இந்த அம்மாளு நடத்திய யோகமும் நடத்தையும் ஆருக்கும் வராது. இவள் யிறந்து போய் விட்டு முசாரத்துக்கு பெரியவர்கள் இல்லாமல் போச்சுது. துக்கத்துக்கு முன்னுலே நடந்த காரியமும், மறந்து போக பண்ணிப் போட்டாளெண்ணும், இப்படி அவரவர்கள் சொல்லிக் கொண்டதிலே கேழ்வியான தாமிசத்திலே ஒரு பங்கு யெழுதி வச்சேன். இது சங்கதிகளெல்லாம் நான் தானே யெழுதலாகாதெண்கிறதிலே, சுருக்கமாய் பாதியை யெழுத வேண்டிய சங்கதிகளாக எழுதி வைச்சேன்.

## சித்திரபானு ஷு சித்திரை மீ௳ யக ௳ மங்களவாரம்: சதஎளசாயஉ ஆண்டு அபிரேல் மீ௳ உய ௳

இந்தனுள் சஞ்சயன தினமான படியினுலே, காலமே வீட்டிலே நடக்க வேண்டிய கிறியைகள் நடப்பிச்சு, சயனத்துக்கு வேண்டிய சாமக்கிறிகள் எடுப்புச்சுக் கொண்டு, சகல செனங்களும் வந்தாக, சஞ்சயனவதி வந்தாக, நடப்பிச்சு வீட்டுக்கு வந்து, ஸ்நானம் பண்ணி, மத்தியானத்துக்கு இன பந்துக்களுடனே கூட சாப்பிட்டு, பத்தொன்பது ழுழிகைக்கு தலைக்கு படி கொண்டு, எல்லாருக்கும் பாக்கு வெத்திலை குடுத்து, அவரவர்களை அனுப்பிவிச்சோம்.

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நேத்தைய தினம் நாகப்பட்டணத்துக்கு நம்முட பிருஞ்சுக் கப்பல் ஒண்ணு வந்ததாகச் சொன்னுர்கள். அதினுட சங்கதி விசாரிச்சு எழுத வேண்டியது.

## சித்திரபானு ஷு சித்திரை மீ௳ யஉ ௳ புத்வாரம்: சதஎளசாயஉ ஆண்டு அபிரேல் மீ௳ உக ௳

இந்தனுள் விந்தைகளாய் ஒண்ணும் கேழ்க்கப்பட யில்லை.

## சித்திரபானு ஷு சித்திரை மீ௳ யங ௳ குருவாரம்: சதஎளசாயஉ ஆண்டு அபிரேல் மீ௳ உஉ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நேத்தைய தினம் மத்தியானத்துக்கு வந்த கப்பல், தன்னிலே சிறுது பிடவைக் கட்டுகளும் யேத்திக் கொண்டு, சாயங்காலத்திலே ஓடிப் போனதாய் கேழ்க்கப்பட்டுது. இன்னம் விசாரித்தறிய வேண்டியது.

அம்மாளவர்கள் தெய்வீகமான சேதிக்கு நம்முட பந்துக்களனைவரும் அறிய, ஓலை அனுப்பிவிட்டோம்.

இந்த சிலவு முதலு கோர, ராமாஞ்சி பண்டிதர், முத்து வெங்கிட்டராமா செட்டியார், முத்து கவரை செட்டியார், மடுக்குறை ருமு ரெட்டியார் இவர்களுக்கு காகிதம் அனுப்பிவிச்சோம்.

## சித்திரபானு ஷு சித்திரை மீ௳ யச ௳ சுக்கிறவாரம்: சதஎளசாயஉ ஆண்டு அபிரேல் மீ௳ உங ௳

இந்தனுள் கேழ்வியானது. நாகப்பட்டணத்துக்கு வந்த கப்பல் பெரிய கப்பலேண்ணும், சுமாரில்[79] போட்டு வந்துதெண்ணும், இஸ்காதர் சீக்கிறத்துக்கு வருமெண்ணும் சொன்னுர்கள். ஆனுல் இதை யோசிச்சு பாற்குமிடத்தில் முன் வந்த பிறகாத்து மூணு ளுளிலிருந்து ஓடிப்போச்சுதே, அது இங்கிறிசு கப்பலுக்கு பயந்து ஓடிப்போய், மேலாக இருந்து வந்ததாய் காணுதே யல்லாமல், நூதனமாய் வந்ததாய்க் காண இல்லை. ஆனுல் தோத்தினதை யெழுதி வைச்சேன். இனிமேல் நடக்க வேண்டிய காரியத்தினுல அறிய வேண்டியது.

சித்திரபானு ௵ சித்திரை ௴ யரு ௨ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அபிரேல் ௴ உச ௨

இந்தனுள் கேழ்வியான சேதி. முசே போர்சே, மதாம் மொதாவு, நேத்து, ⟨நேத்து⟩ ருத்திரி தயங்கம்பாடிக்கு வந்ததாய் சொன்னுர்கள். அதின்பேரிலே நம்முட அப்பாவுவை அழைப்பிச்சு, நீ போய் அவர்களுக்கு நம்முட றெக்காது சொல்லி, சொல்லத்தக்கன உத்தரவு சொல்லிப் போட்டு, வரச் சொல்லி அனுப்பி விச்சோம். அப்பாவு சொன்னது. இவடத்திலே இருக்கிற வெள்ளக்காறர், பாதிரிகள், தமிழர், யெல்லாரும் வந்து வெகு கூட்டங்களாய் இருக்கிறதாகவும், தான் போய், இப்படியான அவர்களும், இவடத்திலே இருக்கிற அவர், உமக்கு றெக்காது சொல்லி வரச்சொன்னுர். தாம் வருகுறதுக்கு அவர்கள் தாயார் காலம் பண்ணி நாலு நாளாச்சுது. அதின்பேரிலே வரக்கூடாமல் என்னே போகச் சொன்னுர். நீர் நாகப்பட்டணத்துக்கு போனு போலாச்சுதே; அவடத்திலே தானே நம்முட இஸ்காதர் வரும். அப்போ யாதொரு பிறஸ்தாபம் வந்தாலும், நாங்கள் இவடத்திலே யதிபதியா யிருக்குற யெங்களுடைய ஞாயத்துக்கு, உமக்கு சகலமும் தெரிஞ்சிருக்கிறதானபடியினுலே, அவர்களுக்கு தெரியபடுத்தி, முசே மோதா ⟨முசே மோதா⟩ அவர்களுக்கும் சொல்லி விசாரிச்சு கொள்ளவேணுமெண்ணு சொன்னத்துக்கு, பிள்ளே அவர்கள் காலம் பண்ணிப்போன சேதி நான் அறிவேன். பிறபாடு இப்படியெல்லாம் நடந்துதாவெண்ணு உபசாரம் சொல்லி, யேது காரியத்துக்கும் நாமிருக்கிரேும். நம்மாலே இன்ன காரியத்தினதாய் நடப்பிப்போம். நம்முடைய றெக்காது சொல்ல, சென்னப்பட்டணத்து சேதி யென்ன யெண்ணு சொன்னதின்பேரிலே அனுப்பிவிச்சுக் கொண்டு மதாம் மோதா வண்டைக்குப் போய் றெக்காது சொல்லி, தங்களண்டை இவரு இறந்ததுக்கு றெம்ப அபேஷையாய்[80] யிருக்குறர். அவர்களுடைய தாயார் காலம் பண்ணி நாலு ளுளான படியினுலே என்னே அனுப்பிவிச்சாரெண்ணு சொன்னத்துக்கு அப்படியா வெண்ணு, றெம்ப அங்காலச்சு, அவர் வரக் கவை இல்லே. என்னுடைய றெக்காது றெம்ப சொல்லு யெண்ணு சொன்ஞன். நீர் நாகப்பட்டணத்துக்குப் போரூப் போலாச்சுதே, முசே மோதா அவர்களுக்கு யெங்களுடைய ஞாயமெல்லாம் தெரியச் சொல்லி துரைகளுக்கும் காகித பத்திரங்களே யனுப்பச் சொல்லி சொன்னத்துக்கு, அப்படி யென்ன; உடனே சொல்லி காகிதம் அனுப்பிவிக்கிறுர்களெண்ணு றெம்ப உபசாரமாய் சொன்ஞனென்று வந்து சொன்ஞன். நாங்கள் மூனு மணிக்கு பயணமாய் நாகப்பட்டணத்துக்கு போரேுமெண்ணு சொன்ஞனென்னும் சொன்ஞன். அந்தபடிக்குத் தானே மூனு மணிக்கு பயணமாய் நாகப்பட்டணத்துக்கு பயணமாய் போய் விட்டார்கள். இதல்லாமல் சாயங்காலம் மஸச்சி வீட்டு குடுத்தேன்கிறவன் போற்செ பின்னே மயிலாப்பூரிலே இருந்து கூட வந்தவன், சதிரங்கபட்டணத்திலே நிலச்சாட்சி வெங்கடாசல பிள்ளே ஒலே குடுத்தாரெண்ணு கொண்டு வந்தான். அந்த ஒலேயிலே நாகலிங்கம் அண்ணன் செங்கல்பட்டுலே உடம்பு சொஸ்தமில்லாம லிருந்தாணெண்ணும் அதின்பேரிலே காணச் சொல்லி விசதம் போருணெண்ணும், தனக்கும் ஒரு பிணேச் சொல்லி வைச்சுப் போகச் சொன்னதாகவும், அதின்பேரிலே தானே அவடத்திலே இருக்கிறதாகவும், முத்துயென்கிறவன் தன்னே மோசம் பண்ணி ⟨மோசம் பண்ணி⟩ போட்டி போட்டு வந்ததாகவும், இது முதலான சேதிகள் யெழுதி இருந்தது. இவன் விவேகம் இவ்வளவு யெண்ணு யெண்ணிக் கொண்டோம்.

ஆனல் அந்த முத்து யென்கிறவன் சொன்ன சேதி. சென்னப்பட்டணத்திலே நாகப்பட்டணத்துக்கு பிருஞ்சு கப்பல் ஒண்ணு வந்த பிறகு, பட்டணத்திலே ரொம்ப அலேச்சல்பட்டுது யெண்ணும், அதின்பேரிலே பிக்கட்டு வந்த கப்பல் ஒண்ணு திருட்டுக் கப்பல். நீங்கள் பயப்பட வேண்டாமெண்ணு பெரிய மனுஷரை அழைப்பிச்சு தயிரியம் சொன்னதாகவும், அந்தப்படிக்கு கடிதாசி யெழுதி அதின் பேரிலே சோனகர்கள் நிண்ணதாகவும், சிறிது பேர் வீடுகளே விக்கிறதுக்கு யெத்தனிச்சதாகவும், அவர்களே விக்க வேண்டாமெண்ணு தாக்கீது பண்ணதாகவும், இப்படியிருக்க கோயம்பேட்டிலே[81] திருநாள் வந்ததாகவும், அதை முன்னிட்டுக் கொண்டு சகல செனங்களும் தட்டு முட்டு பணங் காசுகளெல்லாம் வெளிப்படுத்தினதாகவும், செனங்கள் கையொடுங் காலோடும் இருக்கிறதாகவும், மறைவாஅஞ்சு கப்பலும், ஒரு சுலுப்புடனே சிறிது பேர் ⟨சிறிது பேர்⟩ வெள்ளக்காறரையும் யேத்திக் கொண்டு, ஆட்டும் மாட்டும் யேத்தி பயணமாய் கிழக்கே பாயெடுத்து ஒடி போனதாகவும், பிறப்பாடு ரெண்டு கப்பல் முஸ்தீது பண்ணி அனுப்பிவிச்சதாகவும், இன்னவிடத்துக்கு போச்சுதெண்ணு தெரியவிலேயெண்ணும் நரியங்காட்டிலே இருந்த வெள்ளக்காறரெல்லாரையும் கோட்டையிலே அழைப்பிச்சுக் கொண்டதாகவும், கோட்டையெல்லாம் முஸ்தீது பண்ணுகிறதாகவும், புதுச்சேரியிலே இருந்து கொண்டு போய் கடலோரத்திலே அடுக்கியிருந்த பெரிய பீரங்கிகளெல்லாம், கோட்டை மேலே ஏத்துறதாகவும், கொத்தளங்கள் பேரிலே மொடுத்தே வைக்க முஸ்தீது பண்ணுகிறதாகவும், கிளாசு சேவகர் சிறிது இடத்திலே மண்ணுலே இருந்ததை கல்லிலும் சுண்ணும்பிலே கட்டுறதாகவும், கோட்டைக்கு விஸ்தாரமாய் சேர்க்குறதாகவும், வேலே விஸ்தாரமாய் செய்கிறதாகவும், நபாபு மம்முதல்லி ஆற்க்காட்டிலே இருக்கிறதாகவும், வெள்ளேக்காறர் சிறுது பேரை அவ்விடத்துக்கு அனுப்பி வச்சதாகவும், மருந்து, குண்டு, பீரங்கி, விஸ்தாரமாய் அனுப்பிவிக்கிறதாயும், பவுஞ்சும் பிராஞ்சுக்காறரும் பின்னுலே வருகிறதாகவும், அவரவர்கள் சொல்லி கொள்ளுகிறதாகவும், இன்னம் துறையிலே ஒரு மனுஷர் கப்பலும், ரெண்டு கப்பல் மாயமாயிருக்குது அதுவும் யிருக்கிறதாகவும், இன்னம் சிறுது குதிரைக்காரரையும் சிபாயிகளேயும் சம்மணம் தீத்து ஆற்க்காட்டுக்கு அனுப்பிவிக்கிறதாகவும் சொன்னுன். கேழ்வியானதை எழுதி வைச்சேன். இதல்லாமல் அரண்மனேக்காரர் வந்ததாகவும், பெரிய மனுஷர் சிறுது பேர் தட்டுமுட்டு பணம் காசுகள் பழவேற்க்காட்டுக்கு கொண்டு போய் வச்சதாகவும், அவர்கள் இங்கே வைக்க வாணும்; வைச்சால் கும்பினீர் அறிய வைக்கச் சொல்லியும் சொன்னதாய் கேழ்க்கப்பட்டுது. நபாபு மம்முதல்லிகான் அறுக்காறு ரெண்டு பேர் நாகப்பட்டணம் சேதி விசாரிச்சுக்கொண்டு, இந்தனுள் இவ்விடத்துக்கு வந்து விசாரித்துக்கொண்டு போனுர்கள்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ யசா ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அபிரேல் ௴ உரு ௨

இந்தனுள் கேழ்விபட்ட சேதி யொரு சோனகன் வந்து சொன்னது. தான் மிந்தானுலே, ருகைப்பட்டணம் மிருந்து வந்தேனென்னும், அவ்விடத்துக்கு ஒரு சோனகன் வற்த்தக கப்பல் வந்தது யெண்ணும் அவன் சொன்னது. தான் வரச்சே, திருக்கணுமலேயண்டையிலிருந்து முப்பது கப்பல் சிகப்பு கொடி

போட்டுக்கொண்டு இருந்ததாகவும், அவர்கள் தன் கப்பல் பிடிச்சுக் கொண்டதாகவும், பிருஞ்சு கப்பல்காரனே வழியிலே கண்டுயா? யெண்ணுக் கேட்டதாகவும், நாங்கள் கண்டதில்லேயெண்ணு சொன்னதாவும், நீங்கள் பொய்யா சொல்லுகிறீர்களென்னு சொல்லி, மூணு நாள் கப்பலே வச்சுக் கொண்டு சோதிச்சு பாத்துக் கொண்டு, இவ்விடத்திலே யிந்த விதமாய் கப்பல்காரர் இருக்கிருர்களெண்ணு, ஒருத்தருக்கும் சொல்ல வேண்டாமெண்ணு, சொல்லிவிட்டு விட்டதாகவும் சொன்னுனென்னு சொன்னுன். இதல்லாமல் நேத்திய தினம், தயங்கம்பாடி துறைக்கு நேராய் துறை பிடிச்சு ஒரு சுலுப்புக்காரன் ஒடி வந்ததாகவும், அதைக்கண்டு கட்டுமரம் விடப்பட்டதாகவும், அந்த சுலுப்பு மறுபடியும் மேலாக ஒடினதாகவும், ஒசந்து ஒடச்சே ஒரு கப்பல்காரன் ரெண்டு பீரங்கி போட்டதாகவும், அந்த மட்டிலே நிண்ணதாகவும், அந்த கப்பலுக்கும் மேலாக அஞ்சு கப்பல் கண்டதாகவும், கட்டுமரக்காரன் சுலுப்பை பிடிச்சு கடுதாசி குடுத்தாகவும், அதுக்கு அவன் பதிலு தாம் யெழுதிதாகவும், தான் ஒடச்சே ஒரு கப்பல் கண்டதாகவும், மேலாக அஞ்சு கப்பல் யிருக்கிறதாகவும், பின்னும் தொலேவிலே கோழி முட்டை போலே யேழெட்டுக் காணுகிறதாகவும், யெழுதி அனுப்புனுணெண்ணு சொன்னுர்கள். இதை யோசிச்சு பாத்தால் அந்த சுலுப்புக்காரன் கண்ட ஆறு கப்பலும் இங்கீலிசு கப்பலாய் காணுது. அவன் பிறுமிச்சாய் போலே யெழுதினது பரியாசம் பண்ணதாகக் காணுது.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ யஎ உ சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அபிரேல் மீ உசா உ

இந்தனுள் கேழ்வியான சேதி. நேத்து ருத்திரி, ஆறு ஞழிகைக்கு ஒரு பல்லக்குகாரனும், ஒரு இங்கிலிசுக்காரனும், பத்து பேர் பாறக்காரரும்[82] வந்து நெல்லு கடைக்கு அப்பாலே யிருக்கும் சாவடியிலே வந்து இறங்கினதாய் கேழ்க்கப்பட்டு, உடனே மனுஷரை அனுப்பி விசாரிச்சோம். அவன் பறங்கிப் பேட்டையிலிருந்து நாகப்பட்டிணத்துக்கு போறதாய் வந்து சொன்னுர்கள். இதல்லாமல் பிருஞ்சுக்காரர் இஸ்காது வருகுறதுக்கு தாமிஷம் யென்னவெண்ணுல், முசே புசி ஆறு கப்பலுடனே பிறப்பட்டதாகவும், அதிலே ஒரு கப்பல் நீரோட்டத்திலே போனதாகவும், குறை அஞ்சு கப்பலுடனே வருகிறதாகவும், அது நிமித்திம் காத்துக் கொண்டுயிருக்கிறதாகவும், ஆகையால் வைகாசி மீ கடசியிலே வருமேண்ணும், இப்படி சில வெள்ளக்காரர் சொன்னதாக கேழ்விப்பட்டு, சேவுகன் அன்னப்பன் சொன்னது. நபாபு மம்முதல்லிகான் திருச்சிராப்பள்ளி வருகிறதுக்கு பயணமாய் ஆற்காட்டிலே இருந்து தண்டுடனே பிறப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்தானென்னு சொன்னுன்.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ யஅ உ மங்களவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அபிரேல் மீ உஎ உ

இந்தனுள், சோணுசலப் பிள்ளேயை நாகப்பட்டணத்துக்கு வரச்சொல்லி, முசே முதா அவர்களுடைய காகிதம் வந்ததாகவும், போக யெத்தனமாயிருந்ததாய் கேழ்விப்பட்டுது.

### சித்திரபானு ஷு சித்திரை மீ யகூ உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு அபிரேல் மீ உ அ உ

இந்தனுள், முச்சிய நம்புலு இவடத்துக்கு வந்தும் வராமலிருக்க, மெஸாகப் பயணமாய் போய் விட்டார். வேறே சேதிகள் கேழ்க்கப்பட இல்லே.

### சித்திரபானு ஷு சித்திரை மீ உய உ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு அபிரேல் மீ உகூ உ

இந்தனுள் கேழ்வியான சேதி. பத்து பதினஞ்சு ஞளேக்கு முன்னுதாக நாகபட்டிணத்து கற்னுல் குமாரன், ஆரோ ஒரு செட்டி முன்னிலேயாக, துரைக்கு பதினேயாயிரம் வராகன் குடுக்கரேும்; பெரிய துபாசித்தனமதுக்கு யெப்போதும் ரெக்கத்தில் குடுக்கிறது யெண்ணு பேசினதாகவும், அதுக்கு அந்த நாகபட்டணத்து உலாந்து[83] பெரிய துரை நாலு நாள் மெது பண்ணி, பிறப்பாடு அந்த செட்டியை அழைப்பிச்சு, பதினேயாயிரம் விராகனும் தா. அப்படியே உத்தியோகம் குடுப்பிக்கிரேமெண்ணு கேட்டதாகவும், அதின்பேரிலே அவன் வந்து கேட்டதாகவும், யென் கையிலே பணம் இல்லேயென்னு சொன்னதாகவும், அந்த சேதி அவன் துரையுடனே சொன்னதாகவும், அந்த செட்டியை காவல் பண்ணதாகவும், அதின்பேரிலே அவன் சொன்னத்தை நான் சொன்னேன். அவனே கேட்டு வாங்கிக்கொள். யென்னே யேன் காவல் வச்சிருக்குறீர்கள்? ஆயிரம் வராகன் கொடுத்து காவல் விடுதலே பண்ணி கொண்டதாகவும், பிறப்பாடு, சின்னப்பய்யனே காவல் வைச்சதாகவும், ரெண்டு நாள் சாப்பாட்டுக்கு கூட விடவில்லேயெண்ணும், பிறப்பாடு விடுதலேயாச்செண்ணு கேழ்விப்பட்டது. விடுதலேயான செய்தி இன்னபடியெண்ணு விசாரிச்சு யெழுத வேண்டியது.

இதல்லாமல், சோனுசல பிள்ளே தங்கள் தாயாருக்கு, உடம்பு சொஸ்தமில்லே. இவடத்துக்கு அழைச்சு வரவேணும். டொலி வேணுமெண்ணு கேட்டனுப்பிவிச்சான். நல்லதெண்ணு டொலி குடுத்தனுப்பிவிச்சோம். அவர் நேத்துக்காலமே தானே, தில்லேயாடி போயிருந்தார். இப்படி இருக்கிண்ணு காலமே கோபால சுவாமி வந்து சொன்னது. ருத்திரிக்கு பத்து ஞாழிகைக்கு சோனுசல பிள்ளேயை டொலி முஸ்தீது பண்ணி, சின்ன அய்யாவு யென்கிறவன் ஒரு குதிரையும், வேலுக்கு குதிரை ஒண்ணுமாய், பிறப்பிட்டு வழிவிட பெரு வழியாய் நாகப்பட்டணத்துக்கு போனுரெண்ணு சொன்னுர். சாயங்காலம் கேழ்வியான சேதி. சோனுசலப் பிள்ளே டொலிப் போனவுடன் சொன்னது. தாங்கள் எட்டுப் பேர் போயிண்டர் சீகாழிக்கு போகவேணுமெண்ணு அழைச்சு போனதாகவும், தில்லேயாடிக்கு போன பிறப்பாடு நாகப்பட்டணத்துக்கு போக வேணுமெண்ணு சொன்னதாகவும், சிலவுக்கு அஞ்சு பணம் கூலி சொன்னதாகவும், அதின்பேரிலே நாலு பேர் சாப்பிட இல்லேயெண்ணு சொன்னதாகவும், அவர்களுக்கு கோயிலிலே ஒரு பணம் குடுத்து சாப்பாடு வாங்கி குடுத்தாகவும், அவர்கள் சாப்பிட, வேறொருத்தருக்கு முன்னுதாக, குறை நாலு பேர் போயிண்டறண்டைக்கு டொலி யெடுத்துக் கொண்டு பயணமாய் போனதாகவும், இதிலே இவர்கள் நாலும், கூலி பேராதெண்ணு அடிச்சுப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், அதிலே தான், ஒருவன் மாத்திரம் பெரிய மனுஷருடனே சேந்த பேச்சு, இப்படி மோசம் பண்ணலாமாவெண்ணு

சுருக்கு வழியே தேடிக் கொண்டு பிறப்பட்டதாகவும், யெங்குங் காணுததாகவும், அப்புறம் காட்டுச்சேரியிலே[84] இருக்கிற பேர் பிடிச்சுக் கொண்டதாகவும், அவர்களுக்கு நல்ல வாற்த்தை சொல்லி அப்புறம் போகச்சே, சோணுசலப் பிள்ளையை காணுமல், அப்பாவு யென்குறவன் நாலஞ்சு பேருடனே இவனெரு வழியாய் போகச்சே, தன்னை கண்டு ரெண்டு ஒதச்சு கொண்டதாகவும், ஏன் பயப்படுகிறீர்கள்? யிங்கே போய் யிருக்குமெண்ணு சொன்னதாகவும், வந்து பாத்து கொண்டு எங்கே யெண்ணு கேட்டதாகவும், நான் காணேணெண்ணு தேடிக்கொண்டு போனதாகவும், அவடத்திலே அந்த ஞலு பேர் போனதிலே ஒருத்தனை வழியிலே கண்டதாகவும், குறுக்கு வழியாய் மெரிச்சு நடந்த படியினுலே, காலுகளிலே முள்ளு தச்சுக் கொண்டு நடக்க மாட்டாமல் விழுந்து போனுனென்று சொல்லி, குறை மூணு பேரும் சொல்லி யெடுத்துக் கொண்டு போறதாகவும் சொன்னுன். ஆனுல் நான் போகவா யெண்ணு கேட்டதுக்கு யெந்த வழியேண்ணு காண்பாய்? வழியை வுட்டு பெரு வழியாய்[85] போறவர்களை யெப்படி காண்பாயெண்ணு சொன்னுன். இதுனுல ஊருக்கு வருகுறீயாயெண்ணு கேட்டேன். நான் நடக்க மாட்டேன். நீ போ யெண்ணு சொன்னுன். நான் வந்து விட்டேனென்னு சொன்னுன். அப்புறம் யென்ன அவதியாய் போய் சேந்தார்களோ விசாரிச்சு யெழுத வேண்டியது. இதல்லாமல் இந்தனுள் சாயங்காலம், எரிக்கட்டாஞ்சேரியிலே பெரியண்ண முதலியார் குமாரனுக்கு கலியாணத்துக்கு காவணக்கால் ஏழாங்கால் கூடினதாக கேழ்க்கப்பட்டது.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ௳ உக ௳ சுக்கிறவாரம்: சதஎளசாயஉ ஆண்டு அபிரேல் மீ௳ ஙய ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்திலே முசே முதா மயிசூர் அயிதுருனுன் தண்டுக்கும் இவடத்து தலமைக்கு ஒரு துலுக்கன் வழியிலே சேவுகர் வைக்குறதாகவும், வந்தவாசி திருவேங்கடத்தா பிள்ளைக்கு முசே முதா சிறோப்பா[86] குடுத்தாகவும், அவர்கள் வட்டத்தாரெல்லாம் றெம்ப சந்தோஷத்தை அடைஞ்சிருக்குறதாகவும், அதை விசாரிக்குமிடத்தில் முன்னே முசே முதாவுக்கு இவருக்கும் போதாதிருந்ததாகவும், முசே போர்சே போன பிறப்பாடு அவருக்கும் இவருக்கும் சமாதானம் பண்ணி சிரேப்பா இவர் கொண்டு போய் குடுத்து வாங்கிக் கொண்டதாகவும், இதல்லாமல் கப்பல் சேதி, ஞகப்பட்டணத்துக்கு வந்த பிறகாத்து, இஸ்காதர் மசுக்கரையிலே[87] இருக்கச்சே பிறப்பட்டுதெண்ணும், முசே புசி வருகுறவர் நடைபாத்துக் கொண்டு வருகுறதாகவும், அந்த பிறகாத்து மூணு ஞள் இருந்து போய்விட்டது. அது தான் மறுப்படி மேலாக யெங்கேயோ இருந்து வந்து, பிடவையும் தண்ணீரும் யேத்திக் கொண்டு, மூணு ஞள் இருந்து ஓடிப் போனது யெண்ணும், அது இன்னம் ஒரு தரம் வருமெண்ணும், அப்போ முசே முதா அவர் பெண்சாதி யேறிப் போவார்களெண்ணும், இதிலே இல்லாவிட்டால், மசுக்கரைக்கே ஓடிப்போமெண்ணும், ஆகையால் இஸ்காதாவர் ஒரு மாசமோ, ரெண்டு மாசமோ, மூணு மாசமோ, நாலு மாசுமோ, அஞ்சு மாசமோ எப்ப போவார்ண்ணு தெரியாதெண்ணும், முசே முதா இவடத்திலே தானே இஸ்காதர் வர மட்டும் இருப்பாரென்னும், இப்படி நானுவிதமாக வெள்ளக்காறருக்குள்ளே பெரிய மனுஷர் சொல்லிக் கொண்டதாகவும் கேழ்க்கப்பட்டுது.

சாயங்காலம் அஞ்சு மணிக்கு, முசே லத்தூறு வந்து சிறுது லோகாபிறம்மாய் பேசி இருந்து, அனுப்பிவிச்சுக் கொண்டு போனூர். இதல்லாமல் ருத்திரிக்கு எட்டு மணிக்கு, சின்னியாபிள்ளை வந்து சொன்னது. நாகப்பட்டணத்துக்கு போயிருந்த திருவேங்கடத்தா பிள்ளை அண்டையிலே இருந்து, பதினொரு மணிக்கு ஓலை வந்ததாகவும் அதிலே யெழுதி இருந்தது. இந்த முசே முதா அவர்கள் ஒரு சாதிராவும், ஒரு சகலாத்தும் வெகுமதி பண்ணதாகவும், இவடத்து காரியங்களை விசாரிக்க வந்ததாகவும், அவன் சொந்த துபாசிக்கு கொடுத்து தலைப்பாகை வெகுமதி பண்ணதாகவும், கொஞ்ச நாளையிலே காரியங்களெல்லாம் அனுச்கூலமாய் நடக்குமெண்ணு வெகு புஷ்டியாய் யெழுதி இருந்தது யெண்ணும், இந்தச் சேதி மதாம் வெடுத்தலுமிக்கும், மதாம் புறுணியேயுக்கும், உங்களுக்கும் கந்தப்ப முதலி, பெரியண்ண முதலிக்கும் சொல்லி, திட்டம் பண்ணி இருந்தது. நாள் இல்லாததுனலே அவருக்கு ஓலை கொண்டு வந்து குடுத்தாகவும், வெகுமதி குடுக்கச்சே சின்னப்பய்யன் இல்லையெண்ணும் முன்னலே இவருக்கும் முசே முதாவுக்கும் சத்தாகாதெண்ணும்போச்சே, வந்த பிற்பாடு தெரியச் சொன்னதாகவும், அதின்பேரிலே இவடத்துக்கு யெசமானுக்கு வெகுமதி குடுத்தாகவும், ஒரு காரியமில்லாமல் குடுப்பானு? கப்பல் சீக்கிறதுக்கு வருகிறதுக்கு, இல்லாவிட்டால் இவர் இத்தனை புஷ்டியாய் யெழுதுவாராவெண்ணும் உங்களுக்கேற்க்க எப்படி இருக்குதென்னும், இப்படியாக னுவித உச்சாயங்களாய் சொன்னர். இதையல்லாம் கேட்டு இதுக்கிதவான உத்திரவாதங்கள் சொல்லிக் கொண்டிருந்தோம். இதல்லாமல் ராமலிங்கப் பிள்ளை முந்தானுள் சாயங்காலம் நாகப்பட்டணத்து வெளிப்பாளையத்திலே வந்து சேந்தானெண்ணும், மேற்படி அவன் மனுஷர் யெற்க்கவே முசே முதா கண்டு பேசி, அவர் உத்தாரத்தின் பேரிலே அழைப்பிச்சதாகவும் போர்சே போன பிற்பாடு போனதாகவும், சோனுசல பிள்ளை போனவர், அன்னு ருத்திரி அவர் ஒரு வழியிலேயும் அவர் மனுஷர் ஒரு வழியுமாக போயினதாகவும், அண்ணு ருத்திரி அரியாங்குப்பத்திலே இருந்ததாகவும், அப்புறம் போன சேதி, சேர்ந்த சேதி, வர இல்லையெண்ணும் இவர் காரியம் அனுகூலமாய்த்தானே கூடக் கூடுமெண்ணும் இது முதலான சேதிகளாய் சொன்னுன்.

இந்தனுள் இந்த பிறையாத்து திருமுடி அயினரப்பனுக்கு உச்சவம் நடந்து. ருத்திரி இரதோச்ச படி வெச்ச கையாகத் தானே நடந்தது. ஆனுல் இண்ணைய தினம் போக கலிப்பட்டதும், மண்ணலே குதிரையும், இலையும், தொட்டிலும் கொண்டு போனது மிதமில்லை. இதிலே மேளதாள சம்பிறமத்துடனே கொண்டு போன பேர் அனேகம்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ உஉ ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ க ௳

இந்தனுள் காலத்தாலே சோனுசல பிள்ளைக்கு குடுத்த டொலி கொண்டு வந்தான். அந்த பல்லக்குகாறன் சொன்னது. தாங்கள் சீயாழிக்கு[88] போறதுக்கு யெண்ணு அழைச்சுப் போய், ருத்திரிக்கு நாகப்பட்டணத்துக்கு போக வேணுமெண்ணு சொன்னர். சாப்பாடு னலு பேருக்கு இல்லையெண்ணு சொன்னேம். கோயிலிலே சோறு வாங்கி குடுத்தார். சாப்பிட்டு வருமுன்னே பயணம் புறப்பட்டார். நாங்கள் நாலு பேரும் யெடுத்துக் கொண்டு போனேம். வழி தப்பி நடந்தபடியினலே ஒருத்தன் விழுந்து போனுன். குறை மூணு பேரிலே எடுத்து போனேம். அப்புரம் நடந்து போய், பாவடங்குடியிலே தெற்கு

வரும்படி பாளையக்காறன் வீட்டிலே இறங்கிஞேம். அவன் ரெண்டு ஞள் வைச்சிருந்து நேத்து பொழுது போன பிறகு நம்முட குதிரை குடுத்து அனுப்பிவிச்சார். அதின்பேரிலே அவிடம் விட்டு பயணமாய் நாகப்பட்டணத்துக்கு போஞர். எங்களை டொலி இங்கே கொண்டு போய் குடுக்கச் சொன்ஞரென்னு சொன்ஞன். இதல்லாமல் சாயங்காலம், வந்தவாசி திருவேங்கிடத்தா பிள்ளை அண்டையிலே இருந்து ஒலை வந்துது. அந்த ஒலையிலே யெழுதி இருந்தது. அம்மாளவர்கள் காலம் பண்ணி போனதுக்கு உபாரமும், திரு நாருயண பெலிக்கு தாமும் வருகுரேமெண்ணும், உய குருவாரஞள், பதிஞேரு மணிக்கு துரையவர்கள் முசே முதா அவர்களை அழைச்சனுப்பிவிச்சு, ரெண்டு கெசம் சிகப்பு சகலாத்தும்[89], ஒரு சாதுராவும்[90] வெகுமானம் பண்ணி, கும்பினீர் மனிதஞய் யென்கிட்டே யிருந்து, கும்பனீர் காரியங்கள் பாற்க்குறதுக்கு, சறுவத்திர செனவாளும் அறிய வேண்டி, வெகுமானம் பண்ணிஞனென்னு வெகுமானம் பண்ணிஞர்கள். மைத்தும் சேதியெல்லாம், ஞன் முகதாவிலே[91] வந்து பேசிக் கொள்ளுகிறனென்னு, யெழுதி இருந்துதுஞலே, இன்னம் கப்பல் வருகுறது இன்ன இடமென்னு தெரியவில்லை. வந்தாலும் துரைகள் குமுசலியேர் முதலாகிய பெரிய மனுஷர்கள் போவார்கள். அப்போ யெப்படி நடக்க வேணுமோ அது நடக்கப் போகுது. இப்போ இவஞேடு துரையும், இவர்களெல்லாம் காரியங்களுக்கு யிங்கே குடுத்தும் வெகுமதி வாங்கிறதும், இதிலே சந்தோஷம் குறித்து மெத்த ஆச்சரியமாயிருக்குது. இது இனிமேல் யென்ஞயிடுமோ அறிய வேண்டியது. இதல்லாமல் சாயங்காலம் கந்தப்ப முதலியார் வந்து துக்கம் விசாரிச்சு லோகாபிறம்மாய் பேசி இருந்து வளவுக்கும் போஞர்.

பின்னையும் கேழ்விப்பட்ட சேதி யென்னவென்ருல், நபாபும் மமுதல்லிகான் பவுஞ்சு, ஆறணியின் பேரிலே எறங்கியிருக்கிறதாகவும், யின்னம் உடன்படிக்கை தீரயில்லையெண்ணும், சென்னபட்டணத்து இங்கிலுசுக்காறர் மமுதல்லிகான் பேரிலே பணத்து ரொம்ப சுருக்கு பண்ணுகுருர்களெண்ணும், அங்கங்கே கில்லாவுகளிலே[92] இருக்கிற வெள்ளைக்காரறைக் கொண்டு அழைப்பிச்சுக் கொள்ளுகிறதாகவும் சொன்ஞர்கள். இதல்லாமல் போன மாசத்திலே, பசலாபத்து சங்கும் அயிதுறுஞனும், பவுஞ்சுடனே சீமைக்கு போய் சண்டை பண்ணி, பீரங்கியோடு அயிதுருஞனுக்கு அந்த சுபா குடுத்தாக கேழ்விப்பட்டிருந்தோமே, பிறப்பாடு பெரிய வள்ளாபுரம் வாங்கி சின்ன வள்ளாபுரத்திலே சண்டை நடக்குறதாக இருந்த சேதி சொன்ஞர்களே, இப்போ அந்த அய்துருஞன் பவுஞ்சும் பேரிலே, மருட்டியர் குதிரை வந்து விழுந்ததாக, இங்கிலிசுக்காரர் சொல்லுகிறதாக சொன்ஞர்கள். இது மெய்யான சேதியாய் இருக்க வேணும். இங்கிலிசுக்காரர் பிறப்பிடுகுறத்து சமுசியமில்லை. யேதுஞலே யெண்ஞல், அய்துருஞன் பிருஞ்சு பவுஞ்சுடனே வருகிறவர் சுருக்கிலே யிறுக்குதே, அதன்பேரிலே பிறப்பிச்சதாய் காணுது. இதல்லாமல் சலாபத்து சங்கும் மருட்டியரும் கூடி, ஆற்க்காட்டு சுபா கட்ட வருகிறதாகவும், கேழ்வியான சேதியை யெழுதி வைச்சேன்.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ உங ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ உ ௨

இந்தஞள் ஒரு சேதியும் கேழ்விப்பட இல்லை. ஆஞல் நாளையதினம், பெலி கற்பதினமானபடியிஞலே அதுக்கு வேண்டிய சஞ்சாரம் முஸ்தீது பண்ணிவிக்குற அலுவலிலே இருந்தோம்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ உச ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ ங ௳

இந்தனுள், அம்மாளவர்களுக்கு திருனுள் வைக்குறது நடக்கும்படிக்கு, உதயமாய் ரெண்டு ளுழிகைக்கு உள்ளாக, சித்தம்பலசெட்டி குளத்துமேட்டிலே, முஸ்தீது பண்ணி யிருக்கிற இடத்துக்கு போய், அவடத்திலே நடக்க வேண்டிய கிறியைகள் அறிய, வோம் மந்திரம், தந்திரலோபம், தானலோபம் வராமல், உள்ள மட்டும் விதி வந்ததாய் சம்பிறம்மமாய் நடப்பிச்சு, ஒரு ளுழிகை பொழுதுக்கு, தலைக்குப் படி கொண்டு, அன்னியாள் கையிலே ஒண்ணும் வாங்காமல் நிறுத்திப் போட்டு, சகலமான பேருக்கும் தாம்பூலம் குடுப்பிச்சு, மேளதாளம் நடக்க, சங்கீதங்களுடனே பிறப்பட்டு, வளவுக்கு வந்து சேந்து, யெல்லாருக்கும் தாம்பூலம் குடுத்து, அவரவர்களை அனுப்பிவிக்கத்தக்க பேரை அனுப்பிவிச்சு, பந்துக்களுடனே கூட சாப்பிட்டு, அவரவர்கள் வளவுக்கு அனுப்பிவிச்சோம்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ உரு ௳ செவ்வாய்கிழமை: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ ச ௳

இந்தனுள் காலமே சிதம்பரனுதப் பிள்ளை அண்டையிலே இருந்து வந்த காகிதத்திலே, நபாபு ம்மமுதலிகான் ஆறணியும் பேரிலே சண்டை நடக்கிறதாகவும், அது ஆன உடனே தெற்கே வருகுறதாகவும், அதுக்கு முன்னுதாக, விருண ருயன் சிறுது குதிரையும் பாறுவும் பத்து ளுளைக்குள்ளதாக தெற்கே வருகிறதாகவும், வந்தாலெண்ண நடக்குமோ அது தெரியாதெண்ணும், நீங்கள் யிருக்குற யெச்சரிக்கையிலே இருக்க வேணுமெண்ணும் யெழுதி வந்தது.

இதல்லாமல், மானுசி பண்டிதர் அனுப்பின காகிதத்திலே ளுட்டார்[93] னூத்தன்பது வராகனுக்கு யெழுதிக் குடுத்து, சாமருயனுடனே சொல்லி விட்டதாகவும், அவன் தாமிஷம் சொல்லியிருக்குருணெண்ணும், தாசீல்தாறனை[94] அல்லாமல் குடுக்கக் கூடாதெண்ணும், அவனை கண்டு வாற்த்தை சொல்லி நாலு ளுளையிலே அனுப்பிவிக்குறெதெண்ணும், இப்படியாக யெழுதி வந்துது. திருவேங்கிடத்தா பிள்ளை அண்டையிலே இருந்து வந்ததிலே எழுதி இருந்தது. கருமாந்திரத்துக்கு வரக்கூடாததுக்கு உபசாரமும், இவடத்திலே நடக்க வேண்டிய காரியங்களுக்கு பேச்சு வாற்த்தைகள் நடப்பிக்குறபடியினுலே உத்தாரம் வாங்க கூட இல்லை. பத்து ளுளைக்குள்ளே ஒரு காரியமும் கவை நடக்கும் போலே காணுது. நடக்குற காரியத்துக்கு தக்கதாய் இன்னம் நாலு ளுளையிலே சுவிஸ்தாரமாக[95] யெழுதி அனுப்பிவிக்குறேனென்னு யெழுதி இருந்தது. இதல்லாமல் அவரண்டையிலே இருந்து வந்த ரெட்டி சொன்னது. திருவேங்கிடத்தா பிள்ளை உங்களுக்கு சொல்லச் சொன்னுர். ரெண்டு மூணு ளுளையிலே முசே முதா அவர்கள் காகிதம் வாங்கி அனுப்பிவிக்குருேம். அப்போ, நாம் சொல்லி அனுப்பிவிக்குறபடிக்கி நடப்பிக்கச் சொல்லியும், இன்னம் கொஞ்சம் ளுளையிலே எல்லா காரியமும், அனுச்கூலமரய் படுமெண்குறதாய் சொல்லச் சொன்னுரெண்குறதாய் சொன்னுன். ஆனுல் இவருடைய எண்ணம் தமக்கு இவரே யெசமானுயும் இவரைத் தொட்டு எல்லாக் கதையும் நமக்கு அனுக்கூலமானதாயும், தம்மை தொட்டு நம்முட காரியத்துக்கு அனுக்கூலம் பண்ணி குடுக்கிறதாகவும் காண்பிக்குறதாக யெண்ணிக் கொண்டேன்.

இந்தனுள் விளக்கு வைச்சவுடனே, பெரியண்ண முதலியும், சொக்கப்ப முதலியும் வந்து, பாக்கு வைச்சு உபசாரம் சொல்லி, நாளைய தினத்துக்கு தம்முட குமாரனுக்கு கலியாண முகூற்த்தம். அதுக்கு யெப்படியாகிலும் வர வேணுமெண்ணு அழைச்சார்கள்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ உசா ௳ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ ரு ௳

இந்தனுள் அஞ்சி பரிகாரம் பண்ணி, நம்முடவர்களுடனே கூட அறப்பிங்கனம் பண்ணிக் கொண்டு சாப்பிட்டோம். கேழ்விப்பட்ட சேதியென்னவெனில், இலத்தூர் வெங்கடாசலனும் அவன் பங்காளிக்கும் ஆகாமல், குளத்தூர் சாவடியிலே போய் சேந்தார்களாம். அவன் பங்காளி உய்யலுவார் பாளேயம் போய் சேந்தானும். அதின்பேரிலே உய்யலுவார் மத்ததுப் பண்ணி, இதுனுலே உடனே வந்து குளத்தூர்காரரிடம் போரிலே இறங்கினதாகவும், அதின்பேரிலே அவர்கள் செடியிலே இருந்து சுட்டதாகவும், உய்யலுவார் மனுஷனிலே ஒருவன் செத்தாகவும், ரெண்டு மூணு பேருக்கு காயமானதாகவும், அதின்பேரிலே அவர்கள் திரும்பப் போய், பின்னும் பலன் கூட்டிக் கொண்டு பீரங்கியும் கொண்டு போறதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ உள ௳ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ சா ௳

இந்தனுள் மத்தியானத்துக்கு மேலே, ருமு ரெட்டியார் குமாரனும், தீவுக்கோட்டை குமரப்ப முதலி தமையன் சின்னத்தம்பியானவனும், வந்து மௌனவிப் போனுர்கள். நாலு மணிக்கி மேலே, நாம் பெரியண்ண முதலியார் வீட்டு கலியாணத்துக்கு போனேம். அவடத்திலே பந்தலிலே சங்கீதம் கேட்டுக் கொண்டிருக்கச்சே, விளக்கு வைச்சவுடனே ஒரு சேவுகன் வந்து துரையிருக்குருரெண்ணு சொன்னுன்.

பிற்ப்பாடு அப்பத்தானே போனுரெண்ணு வந்து சொன்னுன். சத்து நொடி பொறுத்து இங்கே தான், இதோ வந்தாரெண்ணு சொன்னுன். அவரும் முசே பிசாருமாக வந்தார்கள். அவர்களுக்கு ஆசாரம் பண்ணினேம். அவர்களும் ஆசாரம் பண்ணுர்கள். பிற்ப்பாடு துரை ஒரு நாற்காலியிலும், முசே பிசார் ஒரு நாற்காலியிலும், நாம் ஒரு நாற்காலியிலும், கேளிக்கை பாத்துக் கொண்டு இருந்தோம். அப்படி இருக்கச்சே, முத்தையா பிள்ளேயும், சின்னத்தம்பி பிள்ளேயும், வந்து நிண்ணுக் கொண்டிருந்தார்கள். அப்போ பெரியண்ண முதலி, துரைக்கு ஒரு போக்காயும், முப்பது நாற்பது வாழைப்பழம், ஒரு சதுராவும் குடுத்தார். அதை வாங்கிக் கொண்டு, தேவடியாக்களுக்கு ஒரு வராகன் குடுத்துப் போட்டு போனுர். நாமும் அனுப்பிவிச்சுக் கொண்டு வளவுக்கு வந்தோம். இதல்லாமல், முன் இருபத்தோராந் தேதியிலே, ருமலிங்க பிள்ளே நாகப்பட்டணத்துக்கு வந்து சேந்ததாய் யெழுதி இருந்தோமே, அது விசாரிக்குமிடத்தில் பொய்யாய் போச்சுது. அவன் வந்ததே இல்லே. இதல்லாமல், நம்முட அப்பாவு, முசே லத்தூருக்கு சாய்மானப் பெட்டியை வந்து குடுக்க, கோட்டைக்கு போனவிடத்திலே, முசே வெடுத்தலாமைக் கண்டு, முசே முதாவுக்கு யெழுத வேண்டிய தீத்தூறு யென்னவென்னு கேட்டதுக்கு, அவன் சொன்னது. அவனுக்கு யென்ன காரியத்துக்கு யெழுத வேண்டியது?

அவனென்ன கும்பனீர் காரியத்திலேயாய் வந்தான்? பரித்திலோயராய் வந்தான். வந்தவிடத்திலே நம்முட இஸ்காதரை கண்டான். அவர்கள் இதிலே காகிதம் போட்டார்கள். இவனுக்கு யென்ன அதிகாரம்? இவனைத்தொட்டு இருக்க வேண்டியதென்ன இருக்குது? தமிழவரைப்போல புத்தி கெட்டவர்கள் ஆருமில்லே. ஆனால் இந்த தமிழரை மோசம் பண்ணிப் போட்டு போகப் போங்களென்னும், நீங்கள் மோசம் போகக் போறீர்கள். உங்கள் ஞாயமெல்லாம் யெழுதி வைச்சிருந்தால், இன்னம் கொஞ்ச ஞாளெயிலே நம்முட இஸ்காதர் வரும். அதிலே முசே திப்போனுறெ வருகுறார். அவர் கையிலே குடுத்து சொல்லிக் கொண்டால், உங்களதிகாரம் உங்களுக்கு வரும். உங்கள் சங்கதி யெல்லாருக்கும் தெரியும். இதனாலே நடக்க வேண்டிய தொண்ணுமில்லே. இது இருக்கட்டுமென்னும் அவர்களுக்கு முசே சூசன் சிறுது பணம் கொடுக்க வேணுமே, அது வந்து சேந்துதா? அந்த பணத்துக்கு எல்லாருக்கும் குடுத்து விடுகுறார்கள். யெனக்கு சிறுது பணமும் குடுக்க வேணும். இது என் தமையன் கையிலே குடுத்து விட்டார்களா? உங்களுக்கு அந்த பணம் சேராவிட்டால், அந்த கணக்கை பாத்து வந்து சொன்னால் என் தமையனுக்கு யெழுதி, அவனுக்கும் பணம் வாங்கி அழைப்புக்குறேனென்னு சொன்னான். அது நான் கேட்டு வந்து சொல்லுகுறேனென்னு சொல்லி வந்தேனென்னு சொன்னான்.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ உஅ ௳ சுக்கிறவாரம்: சதஎளசாயஉ ஆண்டு மாயி மீ எ ௳

இந்தநாள், முசே சின்ன லத்தூறுக்குடைய தோட்டத்திலே இருந்த பெரிய சாய்மானப் பொட்டி ரெண்டுலே, ஒண்ணு அப்பாவு கொண்டு போய் குடுத்து வந்தான். நாம் கேட்ட போது குடுத்து விடுகுறேமென்ணு சொன்னான்.

நாகப்பட்டணம் சக்குலுனன் குமாரன், சின்னய்யன் அவர்கள் காலம் பண்ணிப் போனதுக்கு, துக்க உபசாரமாய் காகிதமும், மதாம் முதாவையும் வெடுத்தலுமியையும் அனுப்பிவிச்சார். இது கொண்டு வந்தார்களென்னு சொன்ன சேதி. தியாகப்ப முதலி, துரை அவர்களுக்கு யென்னென்னமோ சொல்லிப் பணம் வாங்கலாமெண்குறதாய் காவல் பண்ணதாகவும், சிறுது பணம் குடுத்தால் உத்தியோகம் குடுக்குறேமெண்ணு சொன்னதாகவும், யென் கையிலே ஒரு காசு இல்லே. உங்கள் உத்தியோகமே வாணுமெண்ணு சொன்னதாகவும், அஞ்சாறு நாள் பொறுத்து தியாகப்ப முதலி பேரிலே றெம்ப கோபம் பண்ணி, ஒருவர் அழைப்பிச்சு காவல் விட்டு, நீர் இவடத்துக்கு வரப் போக இரும். யெங்கே போய் வரவேணுமோ அங்கே போய் வாரும். இப்போ பத்தாவியிலே இருந்துக் கட்டுமரம் வந்துது. அதிலே காகிதம் வந்திருக்குது. இன்னம் பத்து ஞாளெயிலே கப்பல் வரும். வந்தவுடனே உன் தகப்பனுருக்கு யிருந்த உத்தியோகம் உனக்கு குடுக்குறேமெண்ணு சொன்னதாகவும், அதின் பேரிலே வீட்டுக்கு வந்து சந்தோஷமாய் யிருக்கிறதாகவும், இந்த சேதியெல்லாம் உங்களுக்கு சொல்லச் சொன்னானென்னும் சொன்னார்.

இதல்லாமல், நாலு ஞாளெக்கி முன்னதாக வந்த, சாவடி மணியக்காறன் அழகப்ப முதலி சொன்னது. திருவம்பல செட்டிக்கும் கோயிலாடி கிஷ்ணமருய்யனுக்கும் வியாச்சியப்பட்டு அதின்பேரிலே நாகப்பட்டணத்திலே முசே போலோ அவர்களுடனே,

கிஷ்ணமருய்யன் போய் சொல்லிக் கொண்டதாகவும், அதன்பேரிலே திருவம்பல செட்டியை அழைப்பிச்சதாகவும் அவனும் போனதாகவும், இருவர் வாக்கு மூலம் கேட்டு உங்கள் விபகாரம் நாம் நேமிக்கப்பட்ட மனுஷர் சொன்னப்படி கேட்டுப் போங்கோ யெண்ணு சொன்னத்துக்கு, நல்லதெண்ணு சொன்னதாகவும், மாயபுரத்திலே உங்கச் சாட்சி, பாப்புருயர், அழகிய மணவாள செட்டி, மணி முதலியார், அழகப்ப முதலி இவர்கள் பேருக்கும், உங்கள் கணக்கு பாத்து தீத்து சொன்னபடி கேழ்க்குறது. கேளாவிட்டால், அவரவர் தாம் இவ்வளவெண்ணு, இவன் சீட்டு அவன் கையிலும், அவன் சீட்டு இவன் கையிலும், றெண்டு பேர் கையிலும் ஒரு சீட்டு, தாம் வாங்கியும் இவர்கள் மூணு பேருக்கும் ஒரு காகிதம் யெழுதி, இந்த அபராத சீட்டையும் குடுத்து அனுப்பிவிச்சதாகவும், அந்த காகிதம் பாப்புருயர்ண்டைக்கு வந்து சேந்ததாகவும், அவர் பாத்துக் கொண்டு தங்களுக்கு சொல்ல இல்லையெண்ணும், பத்து ஞளைக்கி பிறகு வழக்காளிகள் ரெண்டு பேரும் வந்து, இந்த சேதிகள் சொன்னதாகவும், அந்த காகிதம் வாங்கி வந்தால், பாத்துக் கொண்டு சொல்லுகுரேமெண்ணு சொன்னதாகவும், அந்த காகிதம் போய் கேட்டதாகவும், சந்திரருயன் சொன்னது. காகிதம் எங்கள் பேருக்கு வந்தது. அதிலே இவர்கள் பேரும் யெழுதி இருக்குது. ஆனல் இங்கே வந்தால் காண்பிக்குரேமெண்ணு சொன்னதாகவும், அதன்பேரிலே தாங்கள் போனதாகவும் சந்திரருயர் கடுதாசி காண்பிக்க வேண்டியதென்ன? உங்களை கூட இருந்து தீத்துப் போடச் சொல்லி யெழுதி இருக்குது யெண்ணு சொன்னதாகவும், நாம் இருக்குறவிடத்தில் இருந்து தீர்க்கச் சொன்னதாகவும், அதுக்கு சம்மதியாமல், முசே புலோ அவர்களுக்கு இந்த சேதியெழுதி அனுப்புனேம். இன்னம் இது உத்தாரமா இல்லையென்னு சொன்னர்.

## சித்திரபானு ஸ்ரீ சித்திரை மீ௳ உகூ உ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ௳ அ உ

இந்தனள், நம்முட அப்பாவு கோட்டைக்கு போனவிடத்திலே, நாகப்பட்டணத்துக்கு பிறகேத்து வந்தவுடனே, இங்கே யிருந்து போன வெள்ளக்காறரிலே சிறுது பேர் வந்ததாகவும், அவர்கள் வீடு வீடாய் மெனவுறதாகவும், முசே முதாவு சேதி சத்து பரியாசமாய்ச் சொல்லிக் கொள்ளுகுறதாகவும், பியாங்கோர் யென்கிறவன் சொன்னது. யென்ன இந்த தமிழரெல்லாரும் முசே முதாவண்டையிலே யென்ன காரியமிருக்குது யெண்ணு போயிருக்குரர்கள். அவன் பரித்திலோராய் வந்திருக்குரன். வந்தவிடத்தில் ஒரு பிறளிப்பண்ணிக் கொண்டிருக்கிரன். இவர்கள் மோசம் போகப் போருர்கள். அவர்களுக்கு நாமும் சொல்லி அனுப்பிவிச்சோம். நீங்கள் மோசம் போகப் போறீர்கள். இதை யெண்ணத் தேவை இல்லையா? சீமையிலே இருந்து போனீர்கள்; காரியமாய் வந்தால் கும்பனியர் காகிதமாவது அல்லவெண்ணல், நம்முட இஸ்காதர் இருக்குருரே அதுக்கு யெசமான் முசே திபோருஷ் இருக்குருரே, அவர்கள் காகிதமாவது இங்கே யிருக்குறவர்களுக்கு கொண்டு வந்தாஞ? இதை யெண்ணி பாற்க்கத் தேவையில்லையா? யெண்ணும் இப்படியாகவும் இன்னமொருக்கால் அந்த பிறகாத்து வரும். அப்போ, இவனும் இவன் பெண்டாட்டியும், ஏறிப் போய் விடுவார்களெண்ணும், பின்னும் அனேகவிதமாகச் சொன்னதாகவும் சொன்னன்.

சாயங்காலம் ஆறு மணிக்கி, திருவேங்கிடத்தா பிள்ளை மனுஷன் நாகப்பட்டணத்திலே இருந்து, முசே முதா அவர்களுக்கு காகிதமும் திருவேங்கடத்தா பிள்ளைக்கு ஓலையும், கொண்டு வந்து குடுத்தான். முசே முதா அவர்கள் காகிதத்திலே எழுதி இருந்துது. நான் கேழ்விப்பட்டேன். திருவேங்கடத்தா பிள்ளை சொந்த தகப்பன் விழுந்து போனதும், தாயார் விழுந்து போனதும் கேட்டு யெனக்கு மிகுந்த விசாரத்தை குடுத்துது. ஆனால் சொல்லுகுறேன். இது கவலையாயிருக்க வேணுமெண்ணார். தைரியமாய் இருக்குற இடத்திலே இரும். நீர் நிச்சயமாய் யிருக்கலாம். நம்முட இஸ்காதர் வந்தவுடனே, அதிலே ⟨அதிலே⟩ வரப்பட்ட பிருஞ்சுக்காற யெசமான்களிலே, யின்னாராலே இன்ன உபகாரமெல்லாம், உங்கள் காகிதத்துடனே சேந்துது இருக்கப்பண்ணி குடும் யென்னும், உங்கள் தகப்பனார் செய்திருந்தபடி நன்மைக்கு, இவர்கள் அந்த நன்றி அறிஞ்சு செய்யப்பட்ட காரியத்துக்காக, அவர்களுக்கு சொல்லுகுறதுக்கு நான் ஒருக்காலும் தக்க நாதியில்லை. யென்னேரமும் நீர் இருக்குற யேத்தத்துடனே இருக்க வேணுமெண்ணு பிருத்திச்சுக் கொண்டிருக்குறேன். சதளளசாயஉ ஆண்டு மாயி மீ௳ க தேதி நாகப்பட்டணத்திலே திருவேங்கடத்தா பிள்ளை யெழுதி அனுப்பின ஓலை வயணம். முசே முதா அவர்கள் கையிலே சிறுது பேச்சு யெழுதிக் கொண்டு இருக்கச்சே, தங்களுடைய விஸ்தாபம் நடந்தது. அப்போ அம்மாள் வைகுண்டப் பிருப்த்தியான சேதி கேட்டு, மெத்த அங்காலாச்சி, தங்களுக்கு ஒரு காகிதமெழுதி குடுத்தான். அந்த காகிதம் பாத்துக் கொள்ளச்சே சேதிகள் தெரிய வருமே, தாங்கள் மறு காகிதம் மெத்த உபசாரமாய் யெழுதி அனுப்ப வேண்டியது. திருவேங்கடத்தா பிள்ளை அவர் தமையன் குமாரர் வெங்கிடாசலப் பிள்ளைக்கு யெழுதின ஓலை வயணம். அப்பா பிள்ளை அவர்களுக்கு முசே முதா அவர்கள் காகிதமும், நம்முட ஓலையும் குடுத்து அனுப்பிவிச்சோம். அதைக் கொண்டு போய் குடுத்து மறு கடதாசிகள் முசே முதா அவர்களுக்கு மெத்த உபசாரமாய் யெழுதி, அதிலே தகப்பனார், தாயார், தம்பி விழுந்து போனார்கள். சகலத்துக்கும் தாய், தகப்பன் தாங்களாயிருந்து யென்னை வச்சு நடப்பிக்க வேண்டியது. தங்கள் பேரிலே பாரம். தங்களை பாற்க்க வேணுமென்னு றெம்ப அபிலாஷையாயிருக்குறேன். வருகுற வழி சாரம்மில்லாதபடி வருந்துகிறதுக்கு முன்னே, பாற்க்க வேண்டியதாயிருக்குது. தாங்கள் வரச் சொல்லி உத்தாரம் பண்ணினால் மேலே வழியாகிலும், சுத்தி வருகுறேனென்னு உபசாரமாய் யெழுதச் சொன்னோம்.

## சித்திரபானு ௵ சித்திரை மீ௳ ௰௧ ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ௳ கூ ௨

இந்தனாள் பத்து நாழிகைக்கு, நயினார் மனுஷன் ருமலிங்கனென்குறவன் வந்து, முசே முறுஷாம் அய்துறுனான் தண்டுக்கு போயிருந்தவன், காலமே எரிக்கட்டாஞ்சேரி வந்து சேந்து சாப்பிட்டு, ஒரு காகிதம் யெழுதி யென் கையிலே குடுத்து, சீக்கிறத்துக்கு நாகப்பட்டிணத்திலே முசே முதாவு அவர்களுக்கு குடுக்கச் சொன்னார். கொண்டு போறேனேன்னு சொன்னான். இவன் வந்த சேதி விசாரிச்சால். முசே முதா காகிதம் வரச்சொல்லி போனதாகவும். இவனுடனே கூடப் போன முசே தேசமுத்தேன் நாலஞ்சு நாளைக்கு முன்னுதாகவே வந்து. நாகப்பட்டிணத்துக்கு போனதாகவும், இவனுடனே கூடப் போன சொல்தாதுகள் பின்னாலே வருகுறதாகவும், இவன் நாகப்பட்டிணத்துக்கு போறதாகவும் சொன்னார்கள். இதல்லாமல் அய்துறுனானும் பிருஞ்சுக்காரரும்

வள்ளாபுரத்திலே சண்டை பண்ணி, சமாதானமாய் பதிமூணு லக்ஷம் ரூபாய்க்கு தீந்து தண்டு வாங்கி வந்ததாகவும், இவர்கள் இறங்கின விடத்திலே, வள்ளாபுறத்தான் முருட்டியருக்கு சொல்லி, அனுப்பிவிச்ச விடத்திலே பிற்பாடு அவர்கள் வந்ததாகவும், எங்களுக்கும் யேதாகிலும் குடுயேண்ணு கேட்டதாகவும், அதின்பேரிலே அயிதுறுனுனுக்கு சொல்லி அனுப்பிவிச்சதாகவும், பாளேயத்தை திருப்பிக் கொண்டு போய், மருட்டியர் பேரிலே சண்டை பண்ணுகுறதாகவும், சமாதானமானவுடனே மயிசூருக்கு போறதாகவும், மயிசூரிலே இருங்கோளெண்ணும், அது நிமித்தியம் போறதாகவும் சொன்னுர்கள். முசே மறுஷாம் வந்து, இந்த பிறகாத்து வந்த சேந்த சேதி, கேட்டவுடனே பிறப்பட்டதாக சொன்னுர்கள்.

இதெல்லாமல் கேழ்விப்பட்ட சேதி. இங்கிறிசுக்காறர் திருச்சிராப்பள்ளிக்கு பீரங்கிகள், மருந்து, குண்டு விஸ்தாரமாய் அனுப்பிவிக்குறதாகவும், அதை றெம்ப பிலக்க பார்க்குறதாகவும், சென்னப்பட்டணம் போனுலும் திருச்சிராப்பள்ளியை தொட்டு நிறுவகிக்க வேணுமெண்ணும், இவர்கள் பணம் காசு, தட்டுமுட்டுகள் இந்த கோட்டையிலே வைக்க வேணுமெண்ணும் முஸ்தீது பண்ணுகுறதாகவும், நபாபு மம்முதலிகான் சீர்மைகளிலே அனேகம் அன்னீதம் பண்ணி, குடிகளே கெடுத்து போடுகுறதாகவும், விழுப்புறம் சீமை, அமுல் வெங்கிடய்யன், ஆரோ ரெண்டு பேர் பிராமண இஸ்த்தீரிகளே, மூலேயிலே கட்டி போட்டு அடிச்சதாகவும், அதிலே அவர்கள் சீவனே விட்டதாகவும், திருவதிச்சீமையிலே, வழுதிலம்பட்டுலே, ஒரு செட்டிச்சியை கட்டி தூக்கினதாகவும், பிடவை அவிழ்ந்து கீழே விழுந்ததாகவும், சீக்கிறமாயி அவிழ்த்து விட்டு விட்டதாகவும், அவள் பிடவையை கட்டிக்கொண்டு அப்பிறத்திலே கிணறு இருந்ததாகவும், அதிலே விழுந்து செத்து போனதாகவும், செட்டிச்சிக்கள் யிரண்டு பேரை மூலேயிலே கட்டி போட்டதாகவும், இதுக்கு சென்னப்பட்டணத்திலே கேவுனர் பிக்கட்டவர்களுடனே சொல்லிக் கொண்டதாகவும், அவர் நம்முட வேலேயில்லே. நபாபு மம்முதல்லிகான் அண்டையிலே போங்களேன்னு சொன்னதாகவும், அங்கே போய் பிருது பண்ணி கொண்டதாகவும், அவர் அடிச்சி துரத்தி விட்டதாகவும், இப்படி கேள்வியாய் போச்சுதெண்ணும், சிதம்பர சீமையிலே, சாமாருயன் நடப்பிக்குற அன்னீதம் சொல்ல முடியாதெண்ணும், முத்து வெங்கிட்ட ரும ரெட்டியார் சீமை உட்ட வாரிசுகளுக்கு மூணு பங்கு பணம் அறுவு பண்ணதாகவும், அங்கங்கே குடிகள் வலசை வாங்கி போயிருக்கிறதாகவும், பின்னேயும் சீமைகளிலே இருக்கிற அமுல்தாரர், குடிகள் உடமை மாடு, சருவ சோபாரம் வித்து அறுவிட்டுக் கொண்டும் படுத்துக்குற அவதியிலே, நிறுவாகம் இல்லாமல் ஓடிப்போனுல், பெண்கள் கொண்டு வந்து பண்ணுகுற லச்சை மிதமில்லேயெண்ணும் இனிவரையிலே, ருச்சியம் யென்னமா போவெண்ணும், இப்படி கேழ்வி இல்லாமல் ருச்சியமும் நிவாதப் பட்டுப், போறது செனங்கள் பண்ண பாவத்தினுலும் அக்கிறமத்தினுலும். இப்படியாக கேழ்விப்பட்டதை யெழுதி வைச்சேன். இப்ப தானே ருச்சியமும் இப்படிப் போனுல் சனிக்கும் செவ்வாய்க்கும் சம சத்தம். அப்புறம் ருசாவுக்கும் செவ்வாய்க்கும் சம சத்தம். ருகு கேதுவுக்கு கூடி இருக்க, மீனத்துக் கடையில் சனியும் இப்படி, இந்த வருஷமெல்லாம் இருக்க, ருச்சியம் யென்னமா முடியுமோ அறிய வேண்டியது.

இந்தனுள் ருத்திரி சாமத்துக்கு, சோணங்கிபுரம் தோப்படாச்சாரியார் துக்கம் விசாரிக்க வந்தார். வந்தவிடத்திலே லோகாபிறம்மாய் வாறத்தை சொல்லிக் கொண்டு இருந்து, சேதி ரெண்டு சொல்லி பத்தாவிலேயிருந்து, ஒரு பெரிய பீதாம்பரம் வந்திருந்ததைக் குடுத்து உபசாரம் சொல்லி அனுப்பிவிச்சோம்.

## சித்திரபானு ௵ சித்திரை ௴ ௩௧ ௨ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ ௰ ௨

இந்தனுள் சாயங்காலம், முசே சின்ன லத்தூறு வந்து லோகாபிரம்மாய் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கச்சே, இந்த பிறகாத்து வரச்சே, நம்முட இஸ்காதர்கள் மோரிசு விட்டு பிறப்பட இல்லையென்னும், இவடத்து சேதிகளெல்லாம் போயிருக்குது. ஆடி ஆவணி மாசத்தையிலே வரவேணுமெண்ணும், ஆனல் முசே முதாவுக்கு ஒரு காரியமுமில்லை யெண்ணும், கும்பினீர் உத்தியோகம் உண்டு. இவடத்துச் சங்கதிகள் விசாரிச்சு யெழுத வேண்டியதுண்டு. அவ்வளவே அல்லாமல் இவராலே ஒரு காரியமும் நடத்தக்கூடாது. அப்படி இருக்க, இந்த தமிழர் என்னத்தைக் கண்டு? இவரால் ஒரு உத்தியோகம் குடுக்க வாங்க நடக்குமா? இவர்கள் எனக்கு அது வேணும் இது வேணும்யெண்ணு, யென்னத்துக்கு காத்துக் கொண்டிருக்கிருர்கள். பணம் இருந்தால் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறதேயெண்ணும், அப்படி இவனொரு காரியத்துக்கு யெசமானுய் வந்தால், முசே திபோரிஷ் காகிதமாய் கொண்டு வாரானு? இவனென்ன முன்னலே, முசே திமொய் யென்குறவன் கோவையிலே இறங்கி, மயிசூரிலே தண்டிலே இருக்குற பிருஞ்சுக்காறர் இடத்துக்கு வாரது? அவர் மெத்த பெரிய மனுஷர். சன் லூயி[96] முத்திரை போட்டிருக்கிருர். அவர் நான் குமாந்தானுய் யிருக்குறேன்னு சொன்னர். இவர்களுக்கு குமாந்தானுய் யிருக்குற முசே யீக்கிலு சொன்னது. இப்போ இந்த ஊருல யெசமானு யிருக்குற முசே திபோறிஷெ காகிதமாகிலும் குடுத்தார். அப்படி நீர் சொன்னபடிக்கு கேழ்க்குறேமெண்ணு சொன்னர். நாளைக்கு காண்பிக்குறே ணெண்ணு சொன்னர். மறு னுள் கேட்டார். இன்னமொரு நாளைக்கு கொண்டிக்குறே ணெண்ணர். ஆனல் அந்த காகிதம் காண்பிச்சால், உம்முட உத்தாரம் நடக்கும். இல்லாமல் ஒண்ணும் நடக்கமாட்டது யெண்ணு சொன்னர். அதின்பேரிலே, ரெண்டு னுள் பொறுத்து, காகிதமில்லாதபடியினலே இருயென்னு சொல்லாமல் கோவைக்குப் போய்விட்டார். அவிடேயிருந்து சுலுப்பின் மேலேறிப் போய்விட்டான். அப்படி அவரும் ஒரு காகிதமும் கொண்டு வர இல்லை. இவர் சேதி இப்படியாகிலும். இது தெரியாமல், தமிழர் வீணிலே மயங்கி, கெட்டுப் போனர்களெண்ணு இப்படி யெங்கும் பேச்சுப் பேசி இருந்ததாம். விளக்கு வைச்சவுடனே அனுப்பிவிச்சுக் கொண்டு போய்விட்டேன். இப்படி இருக்கச்சே, நேத்தைய தினம் மறுஷாம் அண்டையிலே இருந்து, நாகப்பட்டணத்துக்கு போன ராமலிங்கம் வந்தான். அவன் சொன்னது. கடுதாசி கொண்டு போய் குடுத்தேன். பாத்துக் கொண்டு, பதில் காகிதம் பின்னலே அனுப்புவிக்குறேன் யெண்ணு போகச் சொன்னன். அவிடத்து சேதியெண்ணவெண்ணல் திருவேங்கடத்தா பிள்ளை, சின்னப்பையன், சோனுசல பிள்ளை தூபாசி, முத்தையன், இவர்கள் காத்துக் கொண்டிருக்கிருர். இவர்களை அழைப்போம் அல்லாமல் வேறே இல்லை. கப்பலும் பத்து நாளையிலே வருமெண்ணு சொல்லுகுருர்களெண்ணு சொன்னன்.

## சித்திரபானு ௵ வையாசி ﮿ க ௨ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ﮿ யக ௨

இந்தனுள் நாகப்பட்டணத்திலே இருந்து சோணுசல பிள்ளே அண்டைக்குப் போயிருந்த வெங்கடேசய்யன் வந்தான். அவர் சொன்னது. முசே முதாவுக்கு குமுசல் உத்தியோகமெண்ணும், தண்டு முஸ்தீது போகுறதுக்கு யெசமான் யென்னும், இன்னம் பதினேஞ்சு ஞளேயிலே கப்பல் வருமெண்ணு சொன்ஞர்களெண்னும், வந்தால் இது காரியமெல்லாம், இவர் வழியிலே நடக்குமெண்ணும், இதுனுலே இவர்கள் காத்திருக்கிறதெண்ணு, அவரிடத்திலே அனேகம் சின்னப்பய்யன் பேச்செண்ணு, அவனெரு கஷ்சிக்கும் திருவேங்கடத்தா பிள்ளே, துபாசி நயினியப்பனும், சோணுச்சல பிள்ளேயும் ஒரு கஷ்சியாயிருக்குருர்களெண்ணும், இவர்கள் பேரிலே முசே பொர்சேயும், மதாம் முதாவும் தயவா யிருக்கிருர்களெண்ணும், வீணுகப் போகலே யென்னு இருக்கிருன். அவன் சின்னபய்யன் மாரிபத்திலே பேசி, ராமலிங்கப்பிள்ளேயை வரச்சொல்லி, காகிதம் போயிருக்கிறதாகவும், சோணுசல பிள்ளே இனிமேல் தண்டுக்கு றசீது சேர்க்குறதுக்கு முன்னுதாய், பணம் போட்டு ⟨போட்டு⟩ சேர்க்க வேணுமெண்ணு சொன்னதாகவும், இப்போ ஒரு காசு கையிலே இல்லேயென்னு சொன்னதாகவும், திருவேங்கிடத்தா பிள்ளேயும் கேட்டதாகவும், அவரும் அப்படியே சொன்னதாகவும், ஆனுல் ராமலிங்கப்பிள்ளே முன்னுதாய் பணம் போடுகுறேண்ணு சொன்னதாய் சொல்லியும், யிப்படியாக நடந்த பிற்பாடு, சோணுசல பிள்ளே முசே லெறி யெழுதிக்குடுத்த காகிதம் காண்பிச்சதாகவும், அதை பாத்துக்கொண்டு, ரெண்டு மூணு ஞளேயிலே உன் காரியமெல்லாம் திட்டப்படுத்திப் போடுகுறேணெண்ணு சொன்னதாகவும், இதல்லாமல் ருமாஞ்சி பண்டிதர் வீட்டு பிள்ளேயாண்டானே வைச்சுக் கொண்டு, வெளியே போகவொட்டாமல், முசே முதாவவர்கள் பேருக்கு தயாரான கையிலே, முந்தாஞள் குடுத்ததாகவும், ரெண்டு மூணு ஞள் பொறுத்து றசீதுக்கட்டு குடுக்குறதுக்கு எத்தனம் பண்ணுகுருர்களெண்ணும், நாகப்பட்டணத்தாரை கொஞ்சம் பணம் கேட்டதாகவும், குடுக்குறேமெண்ணு சொன்னதாகவும், இந்த பிறகாத்து வரச்சே, இங்கிறீசுக்காறர் சுலுப்பு ஒண்ணு அகப்பட்டுதே, அதிலே வெகு பணம் இருந்து யெறக்கி இருக்குருர்களெண்ணும், இதுலே இருந்தப் பணம், அஞ்சு லஷ்சம் ரூபாய்க்கு இருந்துதுயெண்ணும், இண்ணேய தினம், முசே சின்ன லத்தூறும் சொன்ஞன். இதல்லாமல், தண்டுக்கு நேத்தைய தினம் சோடா போச்சுதெண்ணும், சோணுசல பிள்ளேயும் நானும் போனேம். முசே முதாவும், போர்செயும் இருந்தார்கள். சலாம் பண்ணிக்கிண்ணு பேசிக் கொண்டிருக்கச்சே சின்னப்பய்யன் வந்தான். வந்தவுடனே சலாம் பண்ணி, காதிலே போய் பேசி, இப்பாலே வந்தான். அவனுட கணக்கன் உறுக்காரச் சொன்ஞன். எதிரே நாற்க்காலியிலே இருந்தான். சோணுசல பிள்ளே நிண்ணபடியே யென்ன இருக்குது யெண்ணு யோசனேயாயிருக்கச்சே, முசே போர்சே பார்த்து இவரையும் உறுக்காறச் சொன்னதாகவும், பிற்ப்பாடு இவரும் ஒரு நாற்காலியிலே இருந்ததாகவும், உடனே முசே முதா யெழுந்திருந்து சின்னப்பய்யனே அழைச்சுக் கொண்டு, சாம்பிருலே இருக்க, யாருக்கோ காகிதம் யெழுதப் போனதாகவும், இப்ப நம் சோணுசல பிள்ளே வந்து விட்டதாகவும், இது காரியத்துக்கெல்லாம் பிள்ளேயும், அவர்களே யெசமானுன முசே முதாவவர்களேயும், அழைப்பிக்கத் தேவையில்லேயாயெண்ணு கேட்டான். சின்னப்பய்யன் நடத்தை செம்மையாயிருக்கயில்லே. அவன் கெட்டுப் போவான். இன்னம் நாலு மூணு நாளேயிலே அழைப்பிக்க யோசனே பண்ணி இருக்குருேமென்னும், இப்போ

யென்ன காரியமிருக்குது? கப்பல் வந்தவுடனே வரலாமெண்ணும், இப்படி பேசி இருந்தோமெண்ணும், ஆகையால் நீங்களொரு காகிதமெழுதி, ஒரு மனுஷனே அனுப்பிவிச்சால், நல்லதுண்ணு தானே சொல்லுகுறதாய் சொன்னான். இந்தப்படி பாத்தால் முன்னே ஆளுகளே தேடி சம்மந்தமானதுகளே எந்த எடுப்பிலே ஆகிலும், அவடத்திலே அதை அழைப்பிக்குற யெடுப்பிலே தோத்துது. இதல்லாமல் பத்து நாளைக்கு முன்னுதாக, சென்னபட்டணத்துக்கு சீமைக் கப்பல் வந்ததாகவும், சொன்னார்கள். அதிலே வந்த சேதிகள் ஒண்ணும் தெரியயில்லே. தெரிஞ்செழுத வேண்டியது. ஆனால் சூசனையாகச் சொல்லுகுறதென்றால் சீமையிலே இங்கிறீசுக்காறர் பேச்சு றெம்ப பலுக்காய் இருக்குறதாய் சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ உ ௯ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ யரு ௯

இந்தனாள் கேழ்விப்பட்ட சேதி. சென்னப்பட்டணத்துக்கு முன் வந்த கப்பலுடனே கூட ஒரு சுலுப்பும் வந்தது. கெவுனர் பிக்கட்டவர்களுக்குத் தானே துரைத்தனமானது நிஷ்யம் பண்ணி வந்ததாகவும் சொன்னார்கள். இதல்லாமல், நாகப்பட்டணத்திலே இருந்து பொன்னன் வந்தான். அவன் சொன்னது. சின்னப்பய்யனுக்கும் திருவேங்கடத்தா பிள்ளைக்கும் இப்போ பேச்சு வார்த்தை யில்லையெண்ணும், அவனொருவனே ஒரு கஷ்சியும், திருவேங்கடத்தா பிள்ளையும், சோனாசல பிள்ளையும் சேந்த துபாசி நயினியப்ப பிள்ளையும், முசே போர்சேயும் ஒரு கஷ்சி யெண்ணும், நம்மை ரெண்டொருத்தர் கேட்டதாகவும், போன காகிதத்துக்கு இன்னம் பதிலு, தரவும் யில்லையாவெண்ணு கேட்டதாகவும், நாலு மூணு நாளையிலே நம்மை அழைப்பிக்குற யோசனையிருக்குதெண்ணும், பதினைஞ்சு நாளையிலே கப்பல் வந்தவுடனே நடக்குமெண்ணும் இப்படியாகச் சொன்னார். இதல்லாமல் சின்னயா பிள்ளை சொன்னது. அவரவர்கள் ஒவ்வொரு உத்தியோகம், போர் யெப்படியோ யிருக்குறதாகவும், அதுக்கு அவனுக்கு நடப்பு சொல்லி இருக்குறதாகவும், அது நடந்த பிறப்பாடு குடுக்கச் சொல்லுகுறதாகவும், அதுனாலே சந்தையாய் காத்திருக்குறதெண்ணும், நீங்களேன் உத்தாரம் குடுக்றீர்கள்? பதினஞ்சு நாளையிலே, உங்கள் மனசுப்படியே நடக்கச்சே, தெரியுமெண்ணு சொல்லுறார்யெண்ணும், இப்போ இவனைத் தொட்டு ஒரு காரியத்தையுங் காணேம்யெண்ணும், ஆனால் இப்போ வந்த பேருக்கு மாத்திரம் உத்தியோகம் நடக்குமே அல்லாமல், இப்போ வராத பேருகளுக்கு ஒருக்காலும் ஒண்ணும் நடவாதென்னும், திருவேங்கிடத்தா பிள்ளைக்கு யெழுதி அனுப்பிவிச்சார். கந்தப்ப முதலியையும், பெரியண்ண முதலியையும், முசே முதா அழைப்பிக்கச் சொன்னதாகவும், அதுக்கு கந்தப்ப முதலிக்கு உடம்பு சொஸ்தமில்லாமல் இருந்த படியினாலேயும், பெரியண்ண முதலியும் சொஸ்தமில்லே, வரமாட்டார் யென்னு தாம் சொன்னதாகவும், அவர்களைத் தொட்டு காரியமிருக்குது. காரியமிருந்தால் வரத் தேவையில்லை வர வேணுண்ணு சொன்னதாகவும், இப்படிக்கு இவர்களுக்கும் காகிதம் அனுப்பிவிச்சாரெண்ணும் இன்னம் ரெண்டு மூணு நாளையிலே அவர்களை வரச் சொல்ல முதா அவர்கள் காகிதம் வருமெண்ணும், இப்படியாகச் சொன்னார். இதல்லாமல் சென்னப்பட்டணம் கற்றால் கூட்டு, றங்கப்பன், சிதம்பரநாத பிள்ளை பேரிலே வரவேண்டிய பணத்துக்கு காகிதம் அனுப்பிவச்சார். அதுக்கு பதிலுத்தாம் அப்படியே கொஞ்ச நாளையிலே, பணம் வந்து சேர அனுப்பிவிப்பாரென்னு உபசாரமா யெழுதி சிதம்பரநாத பிள்ளைக்கும் காகிதமெழுதி அனுப்பிவிச்சோம்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ ௩ ௨ வியாழக்கிழமை: ௪௲௭௱௱௬௰௨ ஆண்டு மாயி ௴ ௰௩ ௨

இந்தனுள், முசே முதாவு அவர்கள் அனுப்பிவிச்ச காகிதத்துக்கு பதில் உபசாரமா யெழுதி, முசே போலோ அவர்களுக்கும் காகிதமெழுதி, முசே முதா அனுப்பிவிச்ச காகிதத்துக்கு பதிலும், அதிலுக்கு பதில் யெழுதின காகிதமும் வைச்சு, அவர் பாத்துக் கொண்டு குடுக்கச் சொன்னபடிக்கு குடுக்கச் சொல்ல, கந்தன் கையிலே குடுத்து, திருவேங்கிடத்தா பிள்ளைக்கும் காகிதம் யெழுதி அனுப்பிவிச்சோம். இதல்லாமல் சாயங்காலம், வெங்கிடம்மா பேட்டையிலே இருந்து வந்த சீட்டிலே, கிஷ்ணருயன் சிதம்பரத்திலே வந்திருக்குறபடியினலே, அவன் வெகு வஞ்சகனுனப்படியினலே, எந்த வேளை எப்படி இருக்குமோ தெரியாது. தாங்களும் மைத்துமுண்டான பேர் பெரிய மனுஷரும் நாலு நாளைக்காகிலும், கோட்டையிலே எச்சரிக்கையாய் இருக்குறது உத்தமம். சிதம்பரத்திலே குருவய்யன் அனுப்பிவிச்ச ஓலையிலே கிருஷ்ணருயன் விறுத்தாசலத்துக்கு வந்து, திருமுட்டத்துக்கு வந்து சோமவாரனுள் காலமே சிதம்பரம் வந்து சேந்து, சாமருயனை லஷ்சம் ரூபாய் குடுக்கச் சொல்லி ரெம்ப னுள் வைச்சு இருக்குது. இவர் நாட்டவரையெல்லாம் மறிச்சிருக்கிருர். இன்னம் நாலஞ்சு னுள் இருப்பின் மேலே காணுது. பின்னலே நடக்குற சேதி அனுப்பிவிக்குறேனென்னு யெழுதி இருந்தது.

இந்தனுள் சாயங்காலம், மடுக்குறை ராமு ரெட்டி சேவுகன் வந்து சொன்னது. கிருஷ்ணருயன் சிதம்பரத்திலே வந்தாரே இன்னம் சிறுது பவுஞ்சு பின்னலே வருகுது. இவன் வந்த காரியம். தயங்கம்பாடியைச் சேர்ந்த கிராமத்திலே யிருக்கிற புதுச்சேரியிலே இருந்து வந்திருக்கிற தமிழரை பிடிக்க வேணுமென்னு சேதி கேட்டோமெண்ணும் உங்களுக்கு பெரியண்ண முதலியாருக்கும் சொல்லி வரச் சொன்னுறென்னு சொன்னன்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ ௫ ௨ சுக்கிறவாரம்: ௪௲௭௱௱௬௰௨ ஆண்டு மாயி ௴ ௰௪ ௨

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. சிதம்பரத்திலே கிருஷ்ணருயன், சாமருயனை விலங்கு போட்டதாகவும், சேதுருயன் யென்குறவனை விலங்கு போட்டதாவும், சொன்னுர்கள். இதல்லாமல் நாகப்பட்டணத்துலே யிருந்து காகிதம் கொண்டு போன கந்தன் வந்தான். காகிதம் கொண்டு போய், முசே போலோ அவர்களுக்கு காகிதம் குடுத்தான். போலோ வாங்கி பாத்துக்கொண்டு, னுளை காலமே வாவெண்ணு சொன்னுர். மறுனுள் காலமே போனேன். முசே முதா காகிதத்தை முத்திரை போட்டு யென் கையிலே குடுத்து யிங்கே வராதேண்ணு சொல்லாதே, நீ கொண்டு போய், பின்னை சலாம்[97] சொல்லி குடுக்கச் சொன்னுரென்னு குடுத்து மறு காகிதம் கொண்டு வர, மறு காகிதம் தாறேனெண்ணு சொன்னுர். அப்புறம் திருவேங்கிட பிள்ளை அண்டையிலே வந்து அவர் காகிதம் குடுத்தேன். அதைப் பாத்துக்கொண்டார். முசே முதா அவர்கள் காகிதத்தை குடுத்தேன். அவர் கணக்கனுக்கு காண்பிச்சு முதமுதல்ல வரப்பட்ட காரியத்துக்கு ருயருக்கு முத்திரை போடலாகாது. தீத்து உபசாரமா யெழுதி

இருக்குதுயெண்ணு தீத்துரம் யெழுதிக் குடுத்து சிகப்புக் கலரிலே முத்திரை போட்டு வாங்கி வரச் சொன்னுரென்னு சொல்லி காகிதத்தையும் குடுத்தான். அவடத்திலே சொல்லிக் கொள்ளுகிற சேதி. முசே புசி வந்து மோரிசு சேந்ததாகவும், அவர் வரும் மட்டுந்தான் இஸ்காதர் அவடத்திலே காத்துக் கொண்டிருந்ததாகவும், இனிமேல் பதினஞ்சு இருபது ஞாளயிலே கப்பல் காணுமென்கிறதாய் சொல்லிக் கொண்டார்களென்னு சொன்னுன்.

இந்தனுள், முசே முதா அவர்களுக்கு காகிதம் வேறே எழுதி, தீத்துரம் யெழுதி, செகப்பு அரக்கு முத்திரையும் போட்டு, கந்தன் கையிலே குடுத்து, மத்தியானத்துக்கு மேலே அனுப்பிவிச்சோம்.

இந்தனுள், வெங்கிடம்மா பேட்டையிலே யிருந்து ருமாஞ்சி பண்டிதருக்கு காகிதம் அனுப்புனுர். அதிலே யெழுதி இருந்தது. நபாபு மம்முதல்லிகான் திருச்சிராப்பள்ளிக்கு போறதாவும், வெள்ளக்காற பவுஞ்சு நாளைய தினத்துக்கு சிதம்பரத்துக்கு வந்து சேருகிறதாகவும், இருக்கிறதே யெச்சரிக்கையாய் யிருக்கச் சொல்லியும் வந்தது. வந்த சேவகன் சொன்ன சேதி. ஆறணிக்கு போனதாகவும், கோட்டைக்கு நாலு பக்கத்திலும் மோர்சா போட்டு, பீரங்கியும் போம்பும்[98] கண்டு, நாலண்டையலுமிலிருந்து விழுந்ததாகவும், அதிலே மருந்து கிடங்கிலே விழுந்து பத்திக் கொண்டதாகவும், வெகு சேதப்பட்டதாகவும், அதின்பேரிலே கோட்டை கதவை திறந்து விட்டதாகவும், அதின்பேரிலே கோட்டை கைவசபடுத்திக் கொண்டு அதிலேயிருக்கப்பட்ட திருமலைருயர் முதலாயிருக்கப்பட்ட பேரை காவல் பண்ணிக் கொண்டதாகவும், உடனே தண்டு தெற்கே பயணப்பட்டதாகவும் சொன்னுன். பின்னையும் கேழ்விப்பட்டது. நபாபு மமுதல்லிகான் தண்டு போருக்கு வருகிறதாகவும், பின்பு செஞ்சிக்கு வருகிறதாகவும் சொன்னுர்கள். இன்னம் விசாரிச்சு அறிய வேண்டியது. ஆறணி சண்டையிலே கோட்டைக்காறன் வெளியே புறப்பட்டு சண்டை பண்ணதிலே, இங்கிலுசுக்காறக்குள்ளே வெகு பேர் சேதம். முன்னூறு பேர் காயக்காறரெண்ணும் சொன்னுர்கள். இதல்லாமல், சாமருயனை இத்தனை அக்கஷப் பண்ண வேண்டியதென்னவென்னு விசாரித்தால், நாகப்பட்டணத்துக்கு நம்முடைய பிரஞ்சுக்காறருட பிறகாத்து வந்த பிற்பாடு, இவன் சிருது விசேஷம் நடத்தி இருக்கிறதாகவும், இவங்களுக்குள்ளாய் சிறிது பேர் வைச்சு சீமைகள்கட்ட இருக்குருணெண்ணும், கப்பல் வந்தவுடனே இவன் யென்ன தறிவானென்னும் இப்படியான விசேஷங்கள் மம்முதல்லி கேழ்விப் பட்டதின்பேரிலே, இப்படியெல்லாம் நடந்துதுவெண்ணு சொல்லிக் கொண்டார்கள். இந்த சேதிகள் தான் இப்படி சாமருயன் நடத்தி இருப்பானே வெண்ணுல் கிறபிலேயும் சின்னய்ய பிள்ளை சொல்லுகிற விசேஷத்திலுமே ரெட்டி ஒருவன் சின்னய்யா பிள்ளை வீட்டுக்கு, திருவேங்கிடத்தா பிள்ளை அண்டையிலே, நாகப்பட்டணத்துக்கும் சிதம்பரத்துக்கும் போக வர திரிஞ்சான். அவன் சொல்லியிருந்த சாடையிலேயும் திருவேங்கிடத்தா பிள்ளை வழியிலே சாமருயன் சிறிது விசேஷம் நடத்தியிருக்கும் போலே காணுது. அது சும்மா யிராது. நடந்த சங்கதிகள் மாத்திரம் விசாரிச்சு யெழுத வேண்டியது.

இந்தனுள் ஒப்பாரி திருவேங்கிட உடையார் வந்தார். அவர் சொன்னது. திருவம்பல முதலியார் சொன்னுர். கிஷ்ணருயன் பவுஞ்சு தயங்கம்பாடிக்கு வந்து, புதுச்சேரியாரை பிடிக்க வருகுருர்களேன்னும் உங்களுக்கும் சொல்லி யெச்சரிக்கையாயிருக்க வேணுமெண்ணு சொன்னுர்.

முசே இக்கிலு காகிதம் வந்தது.

இந்தனுள், தேவனல்லியிலே[99] அயிதுருனுன் பிருஞ்சுக்காறர் தண்டு, யிக்கிலு அண்டை இருந்து, ரெண்டு பேர் சேவுகர் காகிதம் கொண்டு வந்தார்கள். முசே முதாவுக்கும், பிசாருக்கும், பின்னும் ரெண்டு ஒரு வெள்ளைக்காரருக்கும் கொண்டு வந்த காகிதமும், முசே பிசார் கையிலே குடுத்து பின்னும் அவரவர்கள் காகிதம் அவரவர்களுக்கு குடுத்து, நமக்கு கொண்டு வந்த காகிதம் குடுத்தான். அவன் சொன்ன தேதி. முசே இக்கிலு அண்டையிலே ராமபிள்ளை தம்பி நல்லதம்பி பிள்ளை போயி சேந்ததாகவும், இந்த காகிதம் குடுத்து பத்து நாளையிலே போய் சேரச் சொன்னுர்கள். ஞுங்கள் எட்டு ஞளையிலே வந்து சேந்தோம் யெண்ணு சொன்னுன். தேவனல்லிக்கும் தயங்கம்பாடிக்கும் முப்பது இருகாத வழியுண்டு[100] யென்னு சொன்னுன். அவன் சொன்னது. தாங்கள் வந்த சேதி, திருவண்ணுமலேயிலே கேட்டதும் மம்முதல்லி சிறுது பவுஞ்சுடனே மணலூர்பேட்டையின் பேரிலே திருச்சிராபள்ளிக்கு போனதாய் சொன்னுர்கள். மணலூர்பேட்டையே வந்தோம். வாட்டை சாரையிலே குதிரை அடிவிஸ்தாரங் கண்டுது யெண்ணு சொன்னுர்கள். அரியலூரிலே இருந்து, வேங்கிட்ட நாருயண வாசப்பய்யர் அம்மாள், காலம் பண்ணி போனதுக்கு, காபண வஸ்திரமும் காகிதமும் ஒரு பிருமணண் கொண்டு வந்தார். அவருடனே கூட ருயசம் வெங்கிடாசலய்யனும் வந்தார். அவர் அனுப்பின காகிதத்திலே தம் குமாரனுக்கு கல்யாணமென்னும் அது காரியத்துக்கு வரவேணுமென்னும் யெழுதி யிருந்துது. அதுக்கு பதிலு உபசாரமாய் யெழுதி, கலியாணத்துக்கு வஸ்திரமுங் குடுத்து யனுப்பி வச்சோம்.

அய்துருனுன் பாளையத்திலே இருந்து வந்தவர்கள் சொன்ன சேதி.

தேவனல்லிக்கும் கொத்து கோட்டைக்கும் காதம்—க. இது வழி சுருக்கு காதம்—ரு. இதுக்கும் ருய கோட்டைக்கும் காதம்—ங. இதுக்கும் காவேரிபட்டணத்துக்கும் காதம்—ங. இதுக்கும் சிறீரங்கப்பட்டணத்துக்கும் கணவாய் காதம்—சா. இதுக்கும் திருவண்ணுமலேக்கு காதம்—ங. இதுக்கு திருக்கோவலூர்க்கும் காதம்—உ. இதுக்கும் திருவெண்ணைநல்லூருக்கும் காதம்—க. இதுக்கும் புவனகிரிபட்டணத்துக்கும் காதம்—சா. இதுக்கும் லாலாபேட்டைக்கும் காதம்—க. இதுக்கும் தயங்கம்பாடிக்கும் காதம்—ங.

மம்முதல்லி சேதி

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. ஆரணி கோட்டையிலே மோற்சாவிலே இருந்து போட்ட பொம்புலே, ரொம்ப சேதப்பட்டதாகவும், அதின்பேரிலே பெண்டுகளை அப்புறப்படுத்தினதாகவும், அவர்களை நம்பி முதாவு வந்தால் பாத்துக் கொள்ளுவோமென்னு அனுப்பிவிச்சதாகவும், அவர்கள் வெளிப்பட்டவிடத்திலே மம்முதல்லிகான் கையிலே அனுப்பிவிட்டதாகவும், அதன்பேரிலே செய்யவேண்டியது தோத்தாமல், கோட்டையை ஒப்பிச்சு போட்டதாகவும், திருமலேருயர் முதலான பேர்கள் பிடியாய் அகப்பட்டதாகவும், அவர்கள் பெண்டுக் குஞ்சு குழந்தைகளுடனே கூட அழைச்சுக் கொண்டு கோட்டையிலே தன் மனுஷனை வைச்சு, நெல்லூர்ச் சீமையிலே இருந்த நெசாமுல்லாகான், அபுசல்கான் மகனும் கூட அழைச்சுக் கொண்டு அறனூறு எழுனூறு சொல்தாதுகளும் கூட வர, நபாபு மம்முதல்லிகான் உள்பட ருணுவம் வந்து

திருச்சிராப்பள்ளி கோட்டை சேந்ததாகவும், ஆயிரம் பேர் வெள்ளக்காறரும், ரெண்டாயிரம் பாறுக்காறரும், எழுனூறு யெண்ணூறு குதிரையும்; செஞ்சி வந்து சேந்து, விழுப்புரம் வந்துது. சிதம்பரத்துக்கு வருகுறதாகவும், இதல்லாமல் கொஞ்சம் பவுஞ்சு கூடலூருக்கு வந்து, சிறுது பெரிய மனுஷரும் கூட, சிதம்பரத்துக்கு வருகிறதாகவும் அவ்விடத்திலே ருணுவம் பண்ணிக் கொண்டு, தஞ்சாவூரும் பேரிலே போறதாகவும், மம்முதல்லிகான் திருச்சிராப்பள்ளியிலிருந்து தண்டு முஸ்தீது பண்ணிக்கொண்டு வருகிறதாகவும் கேழ்விப்பட்டோம். கொள்ளடத்துக்கு இக்கறையிலே தஞ்சாவூர் சீமையிலே குறு முகாம் புறப்படுகிறுர்கள். தஞ்சாவூரிலே கோட்டையச் சுத்தி மைதானம் பண்ணி, முஸ்தீது யிருக்கிறதாகவும், சிறிது பணமும் சஞ்சாரம் பண்ணிக் கொண்டு இருக்கிறதாகவும் சொன்ஞர்கள். இனிமேல் என்னமா முடியப்போமோ அறிய வேண்டியது. கொள்ளிடம் தண்ணி அரை அளவும், மார்பளவுக்கு தள்ள, இந்த விதத்திலே பத்து ளுளாய் வருகுது. காவேரி, வீரசோழன்[101] மட்டுக்கும் தண்ணி வந்துது.

## ஆறணி கோட்டை சேதி

முன் சித்திரை மீ௳ உகூ உ சனி வாரம் ஆறணி கோட்டை பிடிச்சுக் கொண்டது.

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. ஆறணி கோட்டைக்கு இங்கிறிசுக்காரர் மோர்சாவிலே யிருந்து பொம்பு விழுந்தது. மருந்துக்கிடங்கு, கூறை வீடு, வைக்கப்போறு இதுகள் பத்திக் கொண்டதிலே, கோட்டையிலே இருக்கிற பேர் ரெம்ப காப்பிருபட்டது. முன்காலத்திலே, ஆற்காடு விட்டு இருந்த கோட்டைக்குள்ளே, குடியாய் வந்திருக்கிற சதுகத்துகான் யென்கிறவன் திருமலேருயண்டைக்கு வந்து, நான் போயி சமாதானம் பேசி வருகுறேனென்னு வந்து பேச அதின்பேரிலே திருமலேருயரை அழைப்பிச்சு, கோட்டை ஒப்புகொள்ளுகுற மம்முதல்லிகான், தன் மனுஷீனே போட்டு சாரை முதலாகியதெல்லாம் பத்திரம் பண்ணிக் கொண்டு, திருமலேருயரை காவல் பண்ணி, திருச்சிராப்பள்ளிக்கு அழைச்சுக் கொண்டு வந்ததாய் கேழ்க்கப்பட்டுது.

இதல்லாமல் நாகப்பட்டணத்திலே இருந்து கந்தன் வந்தான். முசே புலொ அவர்கள் காகிதமும், திருவேங்கிடத்தா பிள்ளே ஒலேயுங் கொண்டு வந்து குடுத்தான். திருவேங்கிடத்தா பிள்ளே ஒலேயிலே யெழுதி இருந்துது. தாங்களனுப்பிவிச்ச காகிதம் முசே முதா அவர்களுக்கு குடுத்து, நாமும் சொல்லதக்கினது சொன்ஞேம். அவர் அந்த காகிதம் பாத்துக் கொண்டு, ரேம்ப சந்தோஷமாய், தம்முட சலாம் சொல்லியெழுதி அனுப்பச் சொன்ஞர். நானும் ஏழெட்டு ஞளேயிலே வருகிறேன். வந்து ரொம்ப சொன்னல் தெரிய வருமென்னு யெழுதியிருந்தது.

முசே புலோ அனுப்பின காகித்திலே யெழுதி இருந்தது. திருவேங்கடத்தா பிள்ளே வயணமாய் யெழுதின காகிதமும், வந்து வாசித்துக் கொண்டு, உம்முட தாயார் விழுந்து போனது அறிஞ்சவுடனே, யெனக்கு ரெம்பவும் மனஸ்தாபமாயிருந்தது. சுவாமி உமக்கு இப்படிப்பட்ட வியாடேலங்கள் குடுத்தால், நாம் செய்ய வேண்டியதென்ன ? ஆனுல் நீர் சுவாமியை தியானிக்க வேண்டியது. இதுகளுக்குள்ளே யெல்லாம் மனதைத் தளர விடவேண்டாம். ஆனுல் நாம் நினேக்குரேம். உமக்கு நல்ல காலம் சமீபிச்சதென்னு.

பின்னும் முசே முதாவு உமக்கு யெழுதின காகிதம் வந்ததுது. பின் மரியாதை பாத்துக் கொண்டு ரெம்பவும் சந்தோஷமாயிருக்கிற மரியாதை ளும் உமக்கு செய்குறோம். நீர் முசே முதாவுக்கும் காகிதம் யெழுதினுலும் பாத்துக் கொண்டு நமக்கு நண்ணுகத்தான் கண்டுது. அந்த காகிதத்தை அவருக்கு குடுத்து அனுப்பிவிட்டோம். நீர் முசே முதாவு முதாலாயிருக்கப்பட்ட, பெரிய மனுஷர் மனதுகள் சந்தோஷம் வரும்படியாய், நடந்து கொண்டு வர வேண்டியது. ளும் முன்போலே தானே, இப்பவும் நல்ல மனதுடனே உங்களுடைய அலுவல்காறனுயிருக்குரேம். அது நீர் கெட்டியாய் நம்பி இரும்.

சதளளசாயஉம் ஆண்டு மாயி மீ யள உ யிக்கீலு காகிதம் வந்துது.

இதல்லாமல், தேவஅல்லியிலே[102] முசே யீக்கிலு தண்டியிலேயிருந்து முசே யிக்கிலு காதிதமும், நல்லதம்பி பிள்ளை காகிதமும், அறுக்காறு ரெண்டு பேர் கொண்டு வந்து குடுத்தார்கள். பின்னையும் முசே முதாவுக்கு, பிசார் குறிம்பிள்ளை, வெள்ளக்காரருக்கு, கந்தப்ப முதலி, பெரியண்ண முதலி, திருவேங்கிடத்தா பிள்ளைக்கு ஒரு காகிதமும், சோணுசல பிள்ளைக்கு ஒரு காகிதமும் கொண்டுவந்து குடுத்தார்கள். நமக்கு நல்லதம்பி பிள்ளை யெழுதின காகிதத்திலே யெழுதியிருந்தது. கப்பல் வந்த சமாச்சாரமும், முசே முதா வந்த சமாச்சாரமும் இங்கிலுசு சுலுப்பு பிடித்த சேதியும் யெழுதி அனுப்ப சொல்லியும். இவ்விடத்து சேதி வள்ளாபுரத்தின் பேரிலே யிறங்கி இருந்தது. அந்த முகாந்தரம் தீந்தது. இனிமேல் தண்டு எந்த பிறத்திலே போமோ தெரியிருப்போலே இல்லை. சிறிது பவுஞ்சு சரி மடங்க, சரிகட்ட, முராரிருயன் பவுஞ்சும் பேரிலே போயிருக்குது. அவர்களுக்கும், இவர்களுக்கும் சண்டையா யிருக்கிறதாயிருக்குது. யெப்படியாமோ தெரியயில்லை. நம்முடைய மனுஷரெல்லாரும் மகிழமிழந்து வழிபாத்துக் கொண்டிருக்கிருர்கள். அப்படியே கப்பல் வந்த சேதி வந்தால் சகலரும் பிறப்பட்டு வந்து விடுவார்கள். மஞட்டியார் குதிரை போனுவுக்கு[103] பயணமாகிப் போச்சுது. இவ்விடத்திலே விசேஷிச்ச காரியமில்லை. மம்முதல்லிகான், சலாபத்து சங்கு முகாந்திரமாய் யிறனூறு பாறக்காரர் இருபத்தஞ்சு குதிரைக்கு மேய்ச்சதாய், அறுக்காறுகள் சேவுகருமாயிருக்கிருர். நம்முட அண்டையிலே வரவேணுமெண்ணு பணங்காசு பேச்சு மூச்சு நடந்து அனுப்பி யிருக்க, சலாபத்து சங்கு தங்கள் மாரிபத்துத்தானே பண்ணிக் கொண்டார். நமக்கு நம்முட செனம் யிருக்கிறது போதும். கப்பல் வந்தால் சறுவத்திர செனமும் நம்மை சேரப் போகிருர்கள். முசே மறுஷாம் இவ்விடத்துக்கு வந்த விடத்திலே, சகலமான வெள்ளக்காறருக்கு சறுவதாருயிக்க வேணுமென்னு பேச்சு வார்த்தை நடந்துது. அப்போ முசே யிக்கிலும் குமந்தான் தம்முடச் சம்மதத்துடனே பிறப்பட்டு போக வேணுமென்னு இருந்தார். இப்படியிருக்கச்சே பாதிரி திலாவது அங்கு ஷாம்பிரத்திலே மறுஷாமுக்கு வழி விட்டார். இந்த சேதி தெரியத்தக்கதாக யெழுதுனேன்.

இதுக்கு முன் அனுப்பின காகிதத்திலே, தங்களுக்கு முசே யீக்கிலு காகிதம் யெழுதி இருக்குருர். அது பாத்துக் கொள்ளச்சே தெரியவரும். தாங்கள் அனுப்பிவிச்ச காகிதம் பாத்துக்கொண்டு, சகல சேதியும் தெரிய வந்து யென்னையும் தம்மண்டை வச்சுக் கொண்டு, சிலவுக்கு கொடுத்து நடப்பிக்குருர். எங்கே இருந்தாலும் யென்னை றஷ்சிக்க வேண்டிய பாரம் தங்களுக்கு. இங்கே ரெண்டாளா போர்கட்டுகள் வைக்குருர்கள். அல்லிகான் சிகாழி மாரிபத்திலே வைக்குறேன். குறைஞ்சா ருசாவும்

சேவுகர்மாறும் நாங்களும் பிறப்பட்டு, பத்து ஞீளயிலே இந்தூருக்கு வந்து சேருவோம் போலே காணுது. முசே திசகுதேனே தயங்கம்பாடிக்கு அனுப்பி இருக்குறர். அவர் வந்து சேந்த அந்தப்படியே பிறப்படுவார் போலே இருக்குது. இப்பவும் உங்கள் வழி பாத்துக் கொண்டு இருக்குறர்கள். நீங்கள் அந்தக் கவை பண்ணி அனுப்பிவிச்சால் பயணம் வருவார்களெண்ணு யெழுதி இருந்துது.

இதல்லாமல், முசே யிக்கிலு யெழுதின காகிதத்திலே, தாமனுப்பிவிச்ச காகிதம் பார்த்துக் கொண்டு, சகலமும் தெரிய வந்தது. நாங்கள் அங்கே வருகிறதுக்கு பயண லெஸ்தாயிருக்குரேம். முசே திசகுதேனே அனுப்பியிருக்கிரேம். அவன் வந்தவுடனே பயணம் புறப்படுகிரேம். வெகு முஸ்தித்துடனே அது சேதி அறிய வும்மை இந்தப்படிக்கு யெங்களுக்கு, இறனூறு குதிரைக்கு அயிதுரு அல்லி கணக்கு பாக்கி குடுத்து இருக்கிறன். ஞங்கள் வரச்சே யேது பாக்கி குடுத்து வரவேணும். அதுக்கு நீர் ஒரு உபகாரம் பண்ண வேணும். யென்னவெண்ணல், இருனூறுக்கு பாக்கி மாத்திரம் அனுப்பி விச்சால் உமக்கு வெகு பேறுண்டு. உங்கள் தகப்பனருக்கு ரெட்டிப்பாய் நடக்கும். உமக்கு யென்ன கவையுண்டோ, அதுக்கு நாங்களிருந்து திட்டப்படுத்தி குடுப்போம். இந்தவகை பண்ணுமல், வந்த அறுக்காறு பின்னலே, ஆதாரம் வந்து சேர அனுப்பிவச்சால் நாங்களும் வந்து சேருகிரேம். இந்தது பாக்கி சேருகுற மடக்கு வழி பார்த்துக் கொண்டுயிருக்குரேம். உம்மை நம்பி கொண்டு இருக்கிரேம். இந்த காகிதம் வந்து சேருகுறதுக்கு முன்னுதாக, கப்பல் வந்து சேர்ந்தால், துப்பாக்கி அனுப்ப தேவை இல்ல. வராமல் போனல் தயவுபண்ணி அனுப்பிவச்சால் உள்ள கிறையம் குடுத்து விடுகிரேம். மைத்த சேதிகள் பின்னலே அனுப்பிவிக்கிரேமெண்ணும் யெழுதி இருந்துது.

இதல்லாமல் கேழ்வியான சேதியென்னவெண்ணல், அய்துறுனன் பெரிய வள்ளாரம் வாங்கி, சின்ன வள்ளாபுரத்தின் பேரிலே சண்டை பண்ணச்சே, கோட்டைகாரனுக்கு நிறுவாகமில்லாமல், மருட்டியர் முருரிருயனுக்கு யெழுதி யனுப்பிவிச்சதாகவும், அவனும் தன் பவுஞ்சுடனே புரவி[104] மடங்க சரி கிட்ட வந்திறங்கினதாகவும், இதுக்கு முன்னுதாக, வள்ளபுரத்தான் மைச்சினன் கோளக்கிரி ராசா யென்குறவர் வந்து சமாதானம் பண்ணி, பதிமுணு லஷ்சம் ரூபாயும், ஒரு பொன் கலேயமும் குடுக்க தீந்ததாகவும், இப்படியிருக்க அய்துருறுனன் பவுஞ்சுலே க பாடம் கட்டத்தக்கதாக, முன்னூரு குதிரையும் மாடுகளும் போட்டு, சில்கட்டு யென்கிற வூரிலே க பாடம் கட்டினதாகவும் அவ்விடத்திலே முருரி ருயன் மனுஷர் வந்து விழுந்து, க பாடத்து மாடும் முன்னூறு குதிரையும் பிடிச்சுக் கொண்டதாகவும், அதின்பேரிலே வெகுவா வச்சு பாத்துக் கொண்டிருக்கச்சே, குடிபண்டை யென்கிற ஊரிலே முருறிருயன் மனுஷர், மூவாயிரம் குதிரை வந்த சேதி வந்ததிலே, அய்துருனன் பவுஞ்சு போய் விழுந்து, நல்ல சண்டை பண்ணி, வெகு சேதப்படுத்தி, ஆயிரம் குதிரை பிடிச்சுக் கொண்டு வந்ததாகவும், பின்னேக்கு சண்டைக்கு இடமாயிருக்கிறதாகவும், சமாதானமாய் போம் எண்ணுப் போலேயும் கேழ்விப்பட்டோம்.

இதல்லாமல், கானுகுமாரனும், கோபால அய்யன் யென்குறவரும், நாற்பதுனயிரம் குதிரையுடன், புறப்பட்டு சிரப்பைக்கு பயணமாய் வரச்சே, சிரப்பையை விட்டுவிடச் சொல்லி, அய்துருனுக்கு காகிதம் அனுப்பினதாகவும், அதுக்கு பதில் நமக்கு

சலாபத்துசங்கு அவர்கள் எழுதியிருக்கிருர். நாம் விடத்தக்கதில்லே யென்னு யெழுதி அனுப்பிச்சதாகவும், அதை பாத்துக் கொண்டு பயணமாய் வரச்சே, ருயகேடி துற்க்கத்துக்கு[105] யெசமான் விழுந்து போனதாகவும், அந்த சேதி வந்ததாகவும், அதின்பேரிலே தண்டு திருப்பிக் கொண்டு, ருயகேடி துற்க்கத்துக்கு, நாஞகுமாரனும், கோபால் அய்யன் யென்கிறவரும் போனதாகவும், சலாபத்து சங்கு அவர்கள் தம்பி, நீசா மல்லிகான் வடக்கே பவுஞ்சுடனே கூடப் போறதாகவும், இப்படி சொல்லிக் கொண்டார். கேழ்வியான சேதி யெழுதி வைச்சேன். இதல்லாமல் இந்த மமுதல்லிகான், இங்கிலிசுக்காரர் தஞ்சாவூரின் பேரிலே வருகிற அவர் வரவிலே, சீகாழி, சுவாமிமலே, வயித்திசுவரன், முதலான சுவாமிகளே தில்லேயாடியிலே கொண்டுவந்து வைக்க, தரங்கம்பாடி துரையை கேட்டார்கள். இண்ணேயத்தினம் குமுசேல் கூடி உத்தாரங் குடுத்தார்களேன்னு சொன்ஞர்கள்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ ரு ௨ சனிவாரம்: சதஎளசாயஉ ஆண்டு மாயி ௴ யரு ௨

இந்தஞள் கேழ்விபட்ட சேதி. நபாபு மமுதல்லிக்கான் முன்னேய ஆதிவாரஞள் சாயங்காலம், அம்பது குதிரையுடனே திருச்சிராப்பள்ளி கோட்டை வந்து சேந்தாரென்கிற சேதி சொன்ஞர்கள். சாமருயன் பெண்டுகள் பிள்ளேகள் யெல்லாம், வெங்கிட்டாம் பேட்டையிலே அனுப்பி இருந்தானே, அவர்களே பத்து நாளேக்கு முன்னுதாக கிஷ்ணருயன் மனுஷர் போயி பிடிச்சு வந்தார்களே, அவர்களேயும் சாமருயனேயும் ரொம்ப கஸ்தி பண்ணுகிறதாக சொன்ஞர்கள். இதல்லாமல், ராமசந்திர ருயன் மாயபுரத்திலே இருந்தவர், சமுசாரத்துடனே தயங்கம்பாடி வந்து சேந்ததாய் சொன்ஞர்கள். பிள்ளேகளேயும், நம்முட ஊரார், அவரவர் மாயபுரம், குத்தாலம், வயித்திசுபரன் கோயில், பின்னேயும், அங்கே அங்கே இருக்கிற பேர்கள், இவ்விடத்திலே இடம் விசாரிச்சு வருகிறதாகவும் சொன்ஞர்கள். இதல்லாமல் துறையூர் முன்ஞலே, பப்பு ரெட்டியை துரத்தி விட்டு குன்னய்யன் தம்பி குமார வேங்கிடாசல ரெட்டியார் கட்டிக் கொண்டாரே, அவருக்கு மூஞு ஞலு வருஷம் நடந்து வந்தது. அதின்பேரிலே பாப்பு ரெட்டியார் குமாரன், முத்து விசைய வருதராச ரெட்டியார், அரியலூரிலே இருந்தாரே, அவர் சிறிது தளம் முஸ்தீது பண்ணிக் கொண்டு, அரியலூர், ராமநத்தம், திருச்சிருபள்ளிக்கு இங்கிலிசுகாரர் மத்ததுக்கும் கோட்டை கும்மாந்தான் தம்பியும், சிறுது பவுஞ்சும் கூட துறையூரின் பேரிலே போய் சண்டை பண்ணதாகவும், அவனுக்கு உடையார் பாளேயத்தான் மத்தது பண்ணி, பவுஞ்சு அனுப்பி விச்சதாகவும், அதின்பேரிலே சண்டை நடக்கச்சே, திருச்சிருப்பள்ளி கோட்டைக் கும்மந்தான் தம்பி விழுந்து போனதாகவும், சேதப்பட்டு முறிஞ்சு அரியலூர் வந்து சேந்ததாகவும், மறுபடியும் அரியலூரார் மத்ததும் பேரிலே போய் சண்டை பண்ணி, உள் வழியாகப் போய், துற்க்கத்தை பிடிச்சுக் கொண்டதாகவும், அதின்பேரிலே நிறுவாகமில்லாமல் குமார வெங்கிடாசல ரெட்டியாரும், தளவாய் முத்துமச்சி ரெட்டியாரும் ஓடியே போயி உடையார்பாளேயம் போய் சேந்ததாகவும், துரையூருக்கு முத்து விசைய வருதராச ரெட்டியாருக்கு பட்டங்கட்டி, தளவாய் வரதருச ரெட்டியார் யிருக்கிறதாகவும், இது நடந்து இருப்பது இருபதஞ்சு ஞளாச்சுது. கேழ்வியான சேதியை யெழுதி வைச்சேன். தஞ்சாவூரிலே இங்கிறிசுகாரரும் மம்முதல்லியும் வருகுறதுஞலே, சண்டை நடக்கும். இவ்விடங்களிலே இருக்கப்பட்ட பேர்கள் அரஞயிருக்கப்பட்ட இடங்களிலே போய் சேரச் சொல்லி, தமுக்கு போட்டதாகவும்,

கோட்டைக்கு வெகு பந்தோபஸ்து பண்ணிகிறதாகவும், சண்டை யெத்தினத்திலே இருக்கிறதாகவும், ஆனுல் ஞலாயிரம் குதிரையென்னும், நல்ல குதிரை ரெண்டாயிரம் குதிரை உண்டெண்ணும், பதினுயிரம் பாற்துபாக்கிறவர் இருக்கிறதாகவும், வெள்ளக்காறர் இரனூறு பேரு உண்டெண்ணும், அறப்பிகள் இரனூறு முன்னூறு பேருக்கு இருக்குருர்களெண்ணும், கிளாசிகள் இருனூறு பேர் வைச்சார்களென்னும், காமாட்டிகள் சிலரையும் ருணுவுகள் விஸ்தாரமாயிருக்குதென்னும் மாஞசிக்கு அதிகாரம் குடுக்கப் போருர்களென்னும், இப்படி சொல்லிக் கொண்டார்கள். இன்னு சூரிய உதையத்துக்கு நல்லதம்பி பிள்ளைக்கு காகிதம் யெழுதி வந்த பாற்க்காரன் கையிலே குடுத்தனுப்பி வச்சோம்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ சா ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ யசா ௨

சாமருயன் சேதி

இந்தனுள் காலத்தாலே, வெங்கிடம்மாள் பேட்டையிலே........... வந்தார். அவர் சொன்னது. சிதம்பரனுதப் பிள்ளை போகச் சொன்னுர். காகிதம் பத்திரம் வரப் போகாது. வந்தால் ரொம்ப மோசம் வரும். ஆகையால் என்னைப் போயி முகதாவிலே சொல்லி வரச் சொன்னுர். யென்னவென்னுல் வெள்ளக்காரர் பவுஞ்சு விஸ்தாரமாக வருகுறதாகவும், நபாபு மம்முதல்லிகான் பவுஞ்சும் வந்து, இண்ணு நாளையிலே சிதம்பரம் வந்து சேருகுறதாகவும், தஞ்சாவூர் ருசா காரியமல்லாமல், தயங்கம்பாடியிலே இருக்கிற புதுச்சேரியார் பேரிலே யுதிஷ்டபடியாய் வருகிறபடியினுலே, தாங்கள் அவ்விடத்திலே சருவதாயிருக்க போகாதெண்ணும், ஆகிலும் பெண்டுகளுக்காகிலும் ஒரு தாவு வடக்கிடம் தெற்கிடம் பார்க்க வேணுமென்னும், இது முதலான சேதி சொல்லச் சொன்னுரெண்ணு சொன்னுன். இதல்லாமல், முன்னுள் சாமாருயன் சேதி யெழுதி இருந்ததிலே விசாரிச்சு யெழுத வேணுமென்னு யெழுதியிருந்ததே, அந்த சேதியெல்லாம், இவன்தான் பேசி, காகிதமும் குடுத்து, வாக்கு விசேஷங்களும் சொல்லி வந்தவன். இவன் நடந்த பூறுவோத்திரமாகும்படி[106] யென்னவென்னு கேட்டதுக்கு, வெங்கிடபதி ரெட்டி சொன்னது. நாகப்பட்டணதுக்கு பிறகாத்து வந்தவுடனே, சமாருயன் காகிதம் திருவேங்கிடத்தா பிள்ளைக்கு வந்துது. அப்ப நம் பதில் காகிதம் குடுத்து, யென்னை அனுப்பிவச்சார்கள். நான் போனவிடத்திலே சாமருயன் சொன்னது. தங்கள் பவுஞ்சு மாத்திரம் அனுப்பிவிச்சால், சீமையும் கைவசப்படுத்தி வைச்சுயிருப்போம். அறுவு பண்ணியிருக்கிற பணத்திலே அம்பதுனுயிரம் ரூபாயும் மேற்படி சாத்தின பதினுருயிரம் கல நெல்லும் முஸ்திதுடனே, நானும் தங்களைச் சேருகுகிறேனென்னும், எப்போதும் நான் தங்களைச் சேர்ந்தவன். காரியத்து நிமித்தம் எதிரியைச் சேர்ந்திருந்தேன். யெப்போ வருகுகிறீர்களோ வென்னு பாத்திருந்தேன். இப்பவும் இந்த முஸ்தீபுடனே வந்து சேருகுறேன்யெண்ணு இது முதலான சேதிகள் சொல்லி மறு உத்தாரங் கொண்டு வரச் சொல்லி இது வயணமெல்லாம் நாருயணன் காகிதமாய், திருவேங்கிடத்தா பிள்ளை பேருக்கு யெழுதிக் குடுத்து யென்னை அனுப்பிவிச்சார்கள். நான் இவ்விடத்திலே வந்து நாகப்பட்டணத்துக்கு போயி, திருவேங்கடத்தா பிள்ளைக்கு இந்த காகிதம் குடுத்து, விசேஷங்களும் சொன்னேன். அதை பாத்துக் கொண்டு, யென்னையும் கூட அழைச்சுப் போயி, முசே முதா அவர்களண்டையிலே, இந்த காகிதமெல்லாம் படிச்சு காண்பிச்சு,

என்னே முன்னே விட்டு, அவன் சொன்னபடி சொல்லச் சொன்னுர். நானும் சொன்னேன். அவர் றொம்ப சந்தோஷப்பட்டு, அன்பதுனுயிரம் ரூபாயும், பதினுருயிரம் கல நெல்லும் கொண்டு வருகுறேணேண்னு சொன்னதிலே, சந்தோஷமாய் யென்னேப் போயி சொல்லச் சொன்னுர். நீ நம்முடைய யெண்ணத்திலே தன் மனசுப் படியே, பத்து நாள், வையாசி ௴ உய (தேதி) க்கு மனம் பொருத்துக் கொண்டு, இப்போ சொன்னபடிக்கு விஷேசத்திலே இருக்க சொல்லுயெண்ணும் சொன்னுர். இந்தப்படி திருவேங்கிடத்தா பிள்ளே யென்னுடனே சொல்லிக், காகிதமும் யெழுதி கொடுத்து, சிலவுக்கு பணமும், கடிதாசி யெழுதி அனுப்பிவச்சார். நான் போயி காகிதமும் குடுத்து, இந்த விசேஷங்களெல்லாம் சொன்னவிடத்திலே, நல்லது; அப்படியே ஆகட்டும். தாசீல்தார் இருக்குருர்களே பொறுங்கோளெண்னு சொல்லி, பிறப்பாடு ஒருத்தனுக்கு நெல்லு அளந்து, அவன் பேரிலே னூறு வருகன் சொல்லி விட்டான். அப்படியிருக்க, இந்த யோசனே நடந்துக் கொண்டு இருக்கச்சே, சாமருயன் தன் பெண்டாட்டி மைத்த பேரையும் வெங்கிட்டாம் பேட்டைக்கு அனுப்பிவிச்சார். தட்டு முட்டு சகலமும் அனுப்பிவிச்சார். வசூலான பணத்திலே சிறிது பணமும், அங்கைக்கி அனுப்பிவிச்சார். அதின்பேரிலே, உள்ளபடி யெப்படியோ தெரிஞ்சு, தாசில்தாரன் சம்பிரதி யெழுதி அனுப்பிவிச்சார். அதின்பேரிலே, கிஷ்ணருயன் வந்து இப்படியெல்லாம் நடப்பிச்சான். பின்னேயும் ஒரு நாள் வராவிட்டால் னூறு வராகனும் கைக்கு வருமேன்னு சொன்னுன். இதல்லாமல் ருமய்யா பிள்ளே தம்பி, நல்லதம்பி பிள்ளே யென்குறவன், சிதம்பரத்திலே சாமருயனன்டையிலே இருந்தான். அவன் இப்போ அய்துருனுன் தண்டிலே, முசே யிக்கிலு கிட்டே போயிருக்குருன். அவனும் இவன் யோசனேயின் பேரிலே, இதை யெடுப்பா சொல்லி, திட்டப்படுத்தி அனுப்பி இருப்பான் போலே காணுது. இது விஷியமாயிருது. விசாரிச்சரிந்தால் தெரியுமென்னும், சாயங்காலம் பெரியண்ண முதலி சொன்னது. முசே பிசார் நாகப்பட்டணத்துக்கு வரச் சொல்லி வந்துதுதாம். அது நிமித்தம் போருர். ரெண்டாம் பேருக்குத் தெரியாதே போருர். தம்முட தோட்டத்திலே தானே இருக்குரூமெண்ணுர். பின்னம் மத்தியானம் இன்னிக்கு கோட்டைக்கு போயி, அங்கே தானே இரண்டாம் பேருக்கு தெரியாதே படுத்திருந்து, தோட்டத்திலே சரி போர பாவணேயாய் குதிரை வண்டி முஸ்தீது பண்ணி வச்சு, ருத்திரிக்கு மட்டுமே யேறப் போறதாய் போயிருக்கிருர்யெண்ணு சொன்னுர். இதல்லாமல், ஆரோ ஒரு வெள்ளேக்காரன் சேவுகன் வந்தான். அவன் சொன்னது. இங்கிலுசுக்காறர் இறுனூறு பேர் வெள்ளக்காறர், நேத்து சாயங்காலம் சிதம்பரம் வந்து சேந்ததாய் சொன்னுனெண்னு சொன்னுர். முசே யீக்கிலு, என் பேருக்கும், கந்தப்ப முதலிக்கும், திருவேங்கிடத்தா பிள்ளே பேருக்கும், ஒரு காகிதம் அனுப்பினுர். அதிலே இறுனூறு துப்பாக்கி அனுப்பச் சொல்லி, யெழுதி இருந்ததுயெண்ணும் சொன்னுர். முசே பிசார் தமக்கு வந்த காகிதத்திலே, கந்தப்ப முதலியாருக்கு ஒரு காகிதம் வந்துது. அதை யென் கையிலே குடுத்தார். நான் கந்தப்ப முதலி கையிலே குடுத்தேன். அதிலே யென்ன யெழுதியிருந்ததுதோ அறிய வேணும். பிசார் தம்முட காகிதத்திலே எழுதியிருந்தது. றங்கப்பிள்ளே தம்பிகளேன்னு ஒருவன் வந்திருக்கிருனும். அவன் ஆரென்னு கேட்டார். அவன் முசே வெடுத்தலுமி அண்டையிலேயிருந்த ருமய பிள்ளே தம்பியண்டைப் பையனென்னு சொன்னேன். ஆனுல் லவனே கட்டியடிச்சு துரத்தி விடச் சொல்லுகிறேன்னு சொன்னுனென்னு சொன்னேன். ஆனுல், இந்த முசே பிசார் இந்த விதத்திலே போனது பார்த்தால் யேதோ ஒரு அச்சத்தின் பேரிலே போனதாய் காணுது. ஆனுல் விசாரிச்சு யெழுத வேணும்.

நாகப்பட்டணத்திலே, சோறுசலப் பிள்ளைக்கு முசே முதாவு வெகுமானம் குடுத்தார்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ எ உ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ யஎ உ

இத்தனள் காலமே, மேற்கித்து தண்டுக்கு, முசே யீக்குலுக்கு நல்ல தம்பி பிள்ளைக்கு காகிதம் யெழுதி, அறுக்கார் கையிலே குடுத்து அனுப்பி விச்சோம். இதல்லாமல், சீகாழி, திருச்செங்கோடு, புன்னிருக்கு, மெய்ஞானபுரம், பிற யிருக்ககப்பட்ட ஸ்தலங்களிலே இருந்து தட்டு முட்டுகள், தில்லையாடிக்கு கோட்டைக்கு, விஸ்தாரமாய் வந்ததாய் சொன்ருர்கள். இதல்லாமல் சாயங்காலம் சின்னபிள்ளை வந்து சொன்னது. நாகப்பட்டணத்திலே இருந்து, திருவேங்கிடத்தா பிள்ளை அண்டையிலே யிருந்து ஒலை வந்துது. அதிலே முன் யக உ வெள்ளிக்கிழமை யன்னைக்கு, சோறுசல பிள்ளைக்கு முசே முதா சிரோப்பாவும், சாதுராவும் குடுத்து வெகுமதி பண்ணதாகவும், அவர் முன்னே சின்னப்பய்யன் வழியிலேயும் சிறிது பேச்சு நடத்தி கொண்டு வந்ததாகவும், அதிலே இணங்கயில்லே யென்னும், தம்முட வழியிலே இணங்கி வெகுமதி ஆனதாகவும், இந்த சேதியெல்லாம் உங்களுக்குச் சொல்லச்சே, யெழுதி வந்துது யென்னு சொன்ருர். அவரண்டையிலேயிருந்து வந்த ஆள் சொன்ன வாக்குமூலம். உலாந்தகாரருக்கு பதினெஞ்சு கப்பல் வருகிறதாகவும், இங்கிறீசுக்காரருக்கு பகைச்சுதென்னும் இங்கிலிசுக்காரருக்கு பதினெஞ்சு கப்பல் வருகிறதாக சொன்னதாகவும், அதின்பேரிலே முசே முதாவை திருவேங்கிடத்தா பிள்ளை இப்படி சொல்லுகிருர்கள். நம்முட கப்பல் சேதி ஒண்ணும் காணுமேவெண்ணும் கேட்டதாகவும், இந்த நாகப்பட்டணத்து முதல் சென்னப்பட்டணம் வரைக்கும் யேகமாய் கப்பல் நமது இருக்கப் பார்க்கப் போரீர்கள். இன்னும் இருபது நாள் மட்டும் மனம் பொருங்கோளேன்னு சொன்னதாகவும் சொன்ருர். இது மெய்யா பொய்யோ. சீகாய்யா பிள்ளை சொன்னதை யெழுதி வைச்சோம். ஆனுல் இந்த வேளை யிவர்களுக்கு, இந்த முசே முதா வெகுமானம் பண்ணுகிறதும், இவர்கள் வாங்கிறதும் மெத்த பெரிசாயிருக்குது. இந்த மனுஷருடைய நடத்தைகளை, இனிமேல் அறிய வேண்டியது. திருவேங்கிடத்தா பிள்ளை, கந்தப்ப முதலி, பெரியண்ண முதலி, சின்னையா பிள்ளை, அப்பு முதலி, மைத்தும் யிருக்கிற பேர் தட்டுமுட்டுகள் கோட்டைக்கு அனுப்பிவிச்சார்கள்யெண்ணு சொன்ருர்கள். இதல்லாமல் சின்னையா பிள்ளை சொன்னது. முதாவுக்கு சின்னப் பய்யன் வழியிலே தஞ்சாவூர் பேச்சு நடக்குறது சம்மதியில்லே. ஆனபடியினுலே, யினிமேல் நடக்குறது நம்முட முன்னிலேயாக நடக்கும். இப்போ தஞ்சாவூருக்கும் பேரிலே மம்முதல்லிகான் வருகுருனே, அது நிமித்தபடி, நம்முடைய பவுஞ்சுடனே மேற்கேயிருக்கிற முசே யீக்குலு பவுஞ்சுடனே தஞ்சாவூராருக்கு மத்தது வரத்தக்கதாக விசேஷம் நடக்குது. அது நிறுத்தியுறத் தக்கதாக முசே யிக்குலுக்கு காகிதம் போயிருக்குது. நம்மை தஞ்சாவூருக்கு போறதுக்கு எந்த முஸ்தீதுண்டோ அந்த முஸ்தீதுடனே ஸதா யிருக்கச் சொல்லி சொன்னதாகவும், திருவேங்கடத்தா பிள்ளை உங்களுடனே சொல்லச் சொன்னுரெண்ணு சொன்ருர். எருக்கஞ்சாவடியிலே தஞ்சாவூரார் குதிரை தானே இருந்ததிலே, இருபது குதிரைக்காரர் பெண்டுகள் பிள்ளைகளை தயங்கம்பாடியைச் சேர்ந்த பள்ளி கிருமத்திலே வைச்சுப் போட்டு தஞ்சாவூருக்கு போனுர்களேன்னு கேழ்விப்பட்டோம். சாமருயனை அழைச்சுக் கொண்டு கிஷ்ணருயன் ஆற்காட்டுக்குப் போறதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ அ உ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ யஅ உ

இந்தனுள் சோணுசலப்பிள்ளை வீட்டு பெண்டுகள், சீகாழியிலே இருந்தவர்கள், எரிக்கட்டாஞ்சேரியிலே அப்பு முதலியார் இருக்குற வீட்டிலே வந்திருக்குறதாகச் சொன்னுர்கள். பின்னை ஒரு சேதியும் கேழ்விப்பட இல்லை.

சோணுசலப்பிள்ளை சங்கதி

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ கூ உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ யகூ உ

இந்தனுள் கேழ்விப்பட்டது. முசே முதாவுடனே, சோணுசல பிள்ளை தம்முட காரியங்களெல்லாம் சொல்லிக் கொண்டதாகவும், அதின்பேரிலே கும்பினிருலே வர வேண்டிய பணம் குடுத்ததாகவும், செய்விக்க ருமலிங்கப் பிள்ளையை யனுப்பிவிச்சுப் போடவும், இவர் உத்தியோகம் இவருக்கு கறார் நடக்கவும், மேற்படி சம்பளம் றுபாய் கேட்டதாகவும், றொக்கத்திலே வாங்கி குடுத்து, சொன்னபடி நடத்துனுல், தருகுருேமென்னு சொன்னதாகவும் வருகிறவர்களுக்கு தெரியச் சொல்லி, உங்கள் கணக்கு வட்டிக் குடுக்க பண்ணுகிருேம்மென்னு சொன்னதாகவும், உன் உத்தியோகம் உமக்கு நடப்பிக்கிருேமென்னு சொன்னதுனுலே, இருபதுனுயிரம் ரூபாய் குடுக்குருேமெண்ணு சொன்னதாகவும், அவன் ஞற்பதுனுயிரம் ரூபா கேட்டதாகவும், இப்போ றொக்கமாய் யெவ்வளவாகிலும் குடுக்க சொல்லியும் கேட்டதாகவும் காரியமான பிறப்பாடு குடுக்குறோம். இப்போ யெழுதி குடுக்கருேமெண்ணு சொன்னதாகவும், இப்படி நடந்து கொண்டு இருந்து, யெந்த வுடம்படிக்கையிலே தீந்து, வெகுமானமாச்சுதெண்ணு தெரியாதொண்ணு சொன்னுர்கள். இதுகளெல்லாம் விசாரிச்சு அறிஞ்சு யெழுத வேணும்.

இதல்லாமல், நாகப்பட்டிணத்திலேயிருந்து நாருயண அய்யங்கார் வந்தார். அவர் சொன்ன சேதி. சக்குலுனுன் அவர்கள் குமாரன் சின்னப்பய்யனை, அவன் துரை, உன் தகப்பன் இருந்த உத்தியோகம் நீர் பாரும். இருபதினுயிரம் வராகன் கொடுக்கச்சொல்லி சுறுக்கு பண்ணதாகவும், அதின்பேரிலே என்னத்த யோசினை பண்ணியோ அப்பாற்பட்டு போய் விட்டதாகவும், இதின்பேரிலே அவர் வீட்டிலே காவல் வைச்சதாகவும் சொன்னுர். இதல்லாமல், ஆசாரியார் குமாரன் வெளிப்பாளையத்திலிருந்து வந்தவர் சொன்ன சேதி. நபாபு மம்முதலிகான் அவ்விடத்துக்கு வந்தவர், பாளையத்திலே இருக்கிறதாகவும் முதாவண்டைக்கு சிறிது பவுஞ்சுடனே வருகுருனென்னு ருசாவுக்கு சொல்லி அனுப்பி வந்ததாகவும், தினம் கொஞ்சமாய் வரத்துப்போக்கு வரவேணும். அழைப்பிச்சுக்கொண்டு பாளையத்துக்கும் பேரிலே, யெல்லா காரியமும் பண்ணதாகவும், அதின்பேரிலே, உடம்படிக்கையாய் மூணு லஷசத்தின் பதினுருயிரம் றூபாய் பேஷ்கஷ்கம்[107] மீதமிருந்து வெகுமானம் அம்பதுனுயிரம் றூபாயும், ஆக நாலு லஷசத்தின் அறுபத்தாருயிரம் றூபாயும் குடுத்தாகவும், முன்சிலவு பாக்கியும் கட்டிக் கொண்டிருக்குருர்களே, இப்போ நாகலாபுறம் சீமையுடனே குடுத்தாகவும், அந்தவிடத்து பாளையக்காரறுக்கு பவுஞ்சு

குறித்தனம் குடுத்தாகவும், அந்த பாளையக்காரர் வழியிலே பத்து பனிரெண்டு லெஷ்சம் றூபாய் வந்ததாகவும், அந்த பாளையக்கார பவுஞ்சும் மம்முதலிகான் யெழுதின பேரிலே, சண்டைக்கு வரச்சொன்னாலும் வருகுறதெண்ணும் உடம்படிக்கை தீர்ந்து வர, சேவுக்காரர், சானவர் கூட அசைக்கு கொண்டு வந்ததாகவும், ஆரணி வந்ததாகவும், பிறப்பாடு பாளைத்துக்கு போக உத்தாரங் குடுத்தாகவும், அனுப்பிவிச்சுக் கொண்டு காஞ்சிபுரம் கருடச் சேவை சேவிச்சு, பாளையம் போய் சேந்ததாகவும் சொன்னார்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ ய ௨ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ உய ௨

இந்தனாள் கேழ்விப்பட்ட சேதி நபாபு மம்முதலிகான் திருச்சிருப்பள்ளி சேந்த உடனே, மறுநாள் சோமவாரத்தன்னைக்கு தஞ்சாவூர் ஸ்தானுபதி போய், காண்பிச்சு கொண்டவிடத்திலே றெம்ப கோபம் பண்ணி, விசேஷித்த விதமாய் பேசி ,கோட்டைக்கு வெளியே போகச்சொன்னதாகவும், அவர் பிறப்பட்டு, தஞ்சாவூர் சேந்து, ருசாவுடனே சொன்னதாகவும், அவர் இதுகளை கேட்ட மாத்திரத்திலே, தமுக்கு போட்டுவிச்சு, பட்டணத்திலே உண்டாகிய செனங்களை காவு பார்த்துக்கொண்டு போறதெண்ணும், சீவனுக்கு துணிஞ்ச பேர் ஆறு மாசத்துக்கு ரேஸ்த்து சேர்த்துக் கொள்ளுகிறதெண்ணும், ரெண்டாயிரம் காமாட்டிகள் வைச்சு, கோட்டை சுத்திலும் முன் இடிச்சு, சுருக்கமாய் இன்னும் இடிக்கிறதாகவும், வெள்ளக்காறர் திட்டமாய் சுத்திலும் கிலாசித்திருக்கிறதாகவும், அங்கங்கே சீமை வழியிலே அய்துருனன் யிருக்கிற குதிரைக்காறர் பவுஞ்சுகளை, கோட்டை வந்து சேரச் சொல்லி யெழுதிப் போய், அவர்களும் பெண்டுகள் பிள்ளைகளை, ஒரு தரவு சேர்த்துப்போட்டு போயி சேருகிறதாகவும், சிறிது ஆட்களை தெற்கே யனுப்பி ஒரு தரவு சேர்த்ததாகவும், சீமை வழிகளிலே யிருக்கிற குடிகள் அவரவர்கள் எச்சரிக்கையாய் இருக்கச் சொல்லி சனங்களிலே, யிருக்கிற ஸ்தீரிகளையும் தட்டும் தரவும் சேர்க்கச் சொல்லியும், இந்தப்படியெல்லாம் திட்டப்படுத்தி, சண்டைக்கு லேசத்திலே யிருக்கிறதாகவும், இதல்லாமல், மம்முதல்லிகான் மங்கள வாரனாள் கிழக்கே ரெண்டு மூணு நாலு வழியிலே சண்டை போட்டதாகவும், சாயங்காலத்தாலே மழையும் காத்தும் கண்டு, சண்டை ஒடிஞ்சு விழுந்ததாகவும், அந்த சேதி கேட்டு மம்முதல்லிகான் றெம்ப மனஸ்தாபமாயிருக்கிறதாகவும், அவர் பெண்சாதி மைத்தும் பேர் தஞ்சாவூர் பேரிலே போக வேண்டாம் ஏதாகிலும் ஒரு உடம்படிக்கையாய் பாத்துக்கொள்ளுகிறதுக்கு சொல்கிறதாகவும், மம்முதல்லிகானும் ஒருபடியாய் தீத்துக்கொள்ளுகிறமென்கிறவும் தொண்டமானை அனுப்பினதாகவும், தஞ்சாவூரும் பேரிலே நான் வரத்தக்கதில்லை. பின்னை இவ்விடத்துக்கு வரச்சொன்னதாகவும் வருகிறேனென்னு சொன்னதாகவும் சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ யக ௨ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ௴ உக ௨

இந்தனாள் திருவேங்கடத்தா பிள்ளை யெழுதின காகிதத்திலே, ஆனி ௴ உய ௨ க்கு கப்பல் வருமெண்ணு சொன்னதாகவும், சும்மாயிருக்கவில்லை; முசே முதாவு யனுப்பிவிட்டிருக்கிறார். அந்த காரியத்திலே யிருக்கிறேனென்னு யெழுதினார்.

## சித்திரபானு ௵ வையாசி ™ யஉ ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ™ உஉ ௳

இந்தனுள் சூரப்ப முதலி வந்து, தன் மைச்சினனுக்கு நயினுத்தே முதலி மகளே பரியம் போடப் போடுகுறேம். நீங்கள் வரவேணுமென்னு பிருத்திச்சார். ஆகையால், ருத்திரி சாமத்துக்கு அவர்கள் வளவுக்குப் போனேம். அவடத்திலே பரியமும் பேசினது; மாப்பிள்ளே வீட்டுக்காறர் னூத்தென்பது வராகன், பெண்வீட்டார் இறநூறு வராகன் பேசி, சபையிலே நகைகளே பிள்ளே வீட்டார் பெண்ணுக்கு போட்டார்கள். இதல்லாமல் விந்தையாய்க் கேழ்விப்பட இல்லே.

## சித்திரபானு ௵ வையாசி ™ யங ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ™ உங ௳

இந்தனுள் விந்தையாய் ஒரு சேதியும் கேழ்விப்பட இல்லே.

## சித்திரபானு ௵ வையாசி ™ யச ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி ™ உச ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்துக்கு நாலஞ்சு நாழிகை வழியிலே, ருமலிங்கப் பிள்ளே வந்திருக்குறதாகவும், அவர் மனுஷர் முசே முதாவும் யண்டையிலே வந்து பேசி, நடந்து, கை ஒசந்து பேசி சோணுசல பிள்ளே காரியமும் கவையுமில்லாமல், தண்டுக் காரியமும் மத்தெல்லாத்தும் நிருவகிச்சுக் கொள்ள, தனக்கு வெகுமதி பண்ணியனுப்பிவிச்சால் முசே இக்கிலு தண்டுக்கு, செலவு போட்டு அழைச்சுக்கொண்டு வரத்தக்கதாக, பேச்சு மூச்சு நடந்து, வெகுமதி கொடுக்கப் போறதாகவும் கேழ்விப்பட்டோம். இன்னும் விசாரிச்சு அறிய வேண்டியது. இதல்லாமல், முன் சித்திரை மாசத்திலே, சென்னப்பட்டணத்திலேயிருந்து, அஞ்சாறு கப்பலும் ஒரு சுலுப்பும் ஆளுகளுடனே புறப்பட்டதே, அதிலே அய்யாதம்பி வெங்கடாசல பிள்ளே யென்கிறவன் வருகிறுணென்னு கேழ்விப்பட்டிருந்தோமே, அந்தக் கப்பல் கண்டி ருசாவுக்கும் மத்ததாய் போனதாகவும், அதிலே கும்பினீர் காரியத்துக்கு எசமானுக மேஸ்தர் பெரச்சர் போனதாகவும், அவருக்கு இது காரியங்களுக்கு துபாசியாய் வெங்கிடாசல பிள்ளே போனதாகவும், குழம்பிலே உலாந்துக்காரருடனே சண்டை பிடிச்சதாகவும், சிறிது பேரை பிடிச்சதாகவும், சொல்லிக்கொண்டார்கள். இன்னும் விசாரிச்சு அறிய வேணும்.

சிதம்பரத்திலே இருந்து கிஷ்ணருயன் சாமருயணே அழைச்சுக் கொண்டு ஆற்காட்டுக்கு போனதாய்ச் சொன்னுர்கள். சூரப்ப முதலி மைச்சான் கலியாணத்துக்கு போய் வந்தோம். சாயங்காலம் முசே சின்ன லத்தூறு வந்தான். லோகாபிரம்மாய் பேசி இருக்கச்சே, முசே முதாவுட வாற்த்தை பிறளியென்றும், இந்த தமிழர் கழுதைகளெண்ணும் சொன்னுன். இதல்லாமல் அப்பாவு கோட்டைக்குப் போன விடத்திலே, முசே பித்துவால் துபாசி....... .... யெண்கிறவன் கண்டு, யென் துரை முசே முதாவுக்கு காகிதம் குடுத்து, நாகப்பட்டணத்துக்கு அனுப்பிவிச்சார். அவிடத்துக்கு போய் காகிதம் குடுத்து மறுகாகிதம் வாங்கிக் கொண்டு, அவிடத்திலே வெள்ளக்காறர்

காகிதமும் வாங்கிக் கொண்டு, பதிலும் விசாரிச்சுக் கொண்டு வந்தேன். அவன் பிளரிப் பண்ணிக் கொண்டிருக்குரன். யெங்கள் துரை அந்த காகிதம் பாத்துப் கொண்டு இவனுலே ஒரு காரியமில்லே. றங்கப்பிள்ளே குமாரனுடனே சொல்லு. உம்மை வரச் சொல்லி காகிதமும், முதாவு அனுப்பிவிச்சாரென்னும் கேழ்விப்பட்டேன். நீர் போகத் தேவையில்லே. தாம் வந்தால் தெரியச் சொல்லுகுறேனென்னு சொன்னதாய் சொன்ஞன்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ யரு ௨ மங்களவாரம்: சதஎளசாயஉ ஆண்டு மாயி ௴ உரு ௨

இந்தனுள் கேழ்வியானதென்னவென்ருல், நாகப்பட்டணம் சக்குலு ருயன் குமாரன் சின்னப்பய்யன், முன்னுலே வெளிப்பட்டு போனவர், மன்னுர்கோவில் போய் சேந்ததாகவும், தஞ்சாவூர் ருசாவுக்கு சேதி சொல்லி அனுப்பி வச்சதாகவும், அவர் அவ்விடத்துக்கு அமில்தாரனுக்கு தாக்கீது யெழுதி விட்டு, யிருக்க மட்டும் சிலவு, சித்தாயம் நடத்துச்சொல்லியும், நூறு சேவுகர் தயாராய் வைக்கச்சொல்லியும், திட்டப்படுத்தி யனுப்பினதாகவும், அவிடத்திலேயிருந்து கொண்டு நாகப்பட்டணத்துக்கு குமுசலியெர் முதலான பேருக்கும், தகப்பனுக்கு பிள்ளேயினிடத்திலே கோபம் தணியும் மட்டும், இவிடத்திலே யிருக்கிறேன். பெண்டுகள் புள்ளேகளிருக்கிருர்கள். மானம் உங்களது யெண்ணு உபசாரமாய் காகிதமெழுதி அனுப்பினதாகவும், இவர் போய்விட்டாரே வீடு முத்திரீச்சி[108] யிருக்கிறதே, பொட்டிகளே கோட்டையிலே யெடுத்து போனதாகவும், யிந்த பொட்டிகளுக்கு மம்முதலிகான் முத்திரை அரக்கு போட்டிருந்தாகவும், வெள்ளேகாரர் முத்திரை சிறிதுக்குப் போட்டிருந்தாகவும், மீதி பொட்டிகளுக்கு வேண்டியதை, யவரவர் அழைச்சனுப்பினதாகவும், குமுசெரியேரிலே சிறுது பேர் பெண்களேயழைப்பிக்க கூடாதென்னு சொன்னதாகவும், அதுக்கு முன்னே யெப்போதோ வொரு பெரிய மனுஷன், வீட்டு பெண்களே அழைப்பிச்சிருக்குது யென்னு சொல்லி காட்டி, மனுஷரை யழைப்பித்து யழைத்து வரச் சொன்னதாகவும், அவர்கள் வந்து அழைத்தாகவும், அதிலே அந்தம்மாள் பேரப்பிள்ளே கட்டாரியை கையிலே வச்சுக்கொண்டு, உங்களேயும் குத்தி, ஞனும் சாகுறேன். பெண்டுகள் வரத்தக்கதில்லே யென்னு சொன்னதாகவும், அந்த விசேஷம் போய் சொன்னதாகவும், வந்த மட்டும் யழைக்கிறதாகவும், நிண்ணதாகவும், பிற்பாடு தியாகப்ப முதலி பேரிலே, றெம்ப கோபம் பண்ணதாகவும், பிற்பாடு யிவரைச் சமாதானம் பண்ணி அழைத்து வர, ஒரு தமிழன் பெரிய மனுஷனேயும் யிப்போது போய் சிப்பாய்களேயும் கூட்டி அனுப்பி விச்சதாகவும் சொன்ஞர்கள். கேட்ட சேதியை யெழுதி வைச்சேன்.

இதுவுமல்லாமல், தையக்காற முத்து தம்பி, நபாபு மம்முதலிகான் தண்டியிலே திரிஞ்சிக் கொண்டிருந்தான். அவன் யிந்த நாள் வந்தான். அவன் சொன்னது. நெல்லூரின் பேரிலே சண்டை பண்ணவிடத்திலே, நசிமுல்லாகான் ஒடிப்போய், உதயகிரியை போய் சேர்ந்ததாகவும், கோட்டையை பிடிச்சிக் கொண்டு குருவப்ப முதலியென்கிறவனேயும், ஒரு கும்பனி வெள்ளக்காரனேயும், ஒரு கும்பனி சிப்பாயையும் வைச்சு போட்டு, அப்பரம் நசிமுல்லாகான் போயிருக்கிற விடத்துக்குப் போனதாகவும், அப்பரம் போய் நசிமுல்லாகானேயும் யழைத்துக்கொண்டு வெங்கிடகிரிக்கு வந்து, அதுக்கு யெசமான்............ அவன் கையிலேயும்............ மத்தும் மலேப்பாளேயக்காறர்

சிறுது பேர் பணங் கொடுக்கயில்லே, சண்டைக்கு வரச் சொன்னுர்களென்னும், சிறுது பேர் பணங் கொடுத்தாகவும், அப்புறம் பொம்மருசா பாளேயத்திலே தங்கள் தயாரா யிருக்கிறவிடத்துக்கு வந்து கச்சவ ருசா கையிலேயும் பணம் வாங்கிக்கொண்டு, ஆனல் யிந்தப் பாளேயக்காறர் வெகுநாளாய் யாருக்கும் பணங்கொடுக்கயில்லே யென்னும், இப்போ இவன் புதுச்சேரி வாங்கின அதிரிலே, இங்கிலுசுக்காறர் பவுஞ்சி நிண்ண சத்தத்திலே, வடக்கித்து பாளேயக்காறர் வழியிலே வெகு பணம் வந்ததாகவும், பள்ளிப்பட்டிலே யிறங்கி யிருக்கச்சே, சீமைகள் சமைந்தாருடைய வக்கில் ரெண்டு பேர் பிருமணுள் துலுக்கத் தாசிகளிடத்திலே திரிஞ்சதாகவும், ஒரு ஞள் களேப்பும் பேரிலே அவளுடைய வீட்டிலே சாப்பிட்டதாகவும், மறுநாள் வெளிக்கி வந்ததாகவும், யிந்த பிருமணுள் ரெண்டு பேரும் நவாபு மம்முதலிகானுக்கு, நாங்கள் இசுலாமாய் போகும். யெங்களுக்கு யொருத்தனுக்கு –எள– ரூபாயும் யொருத்தனுக்கு – அள– ரூபாயும் கடனிருக்கதென்னு சொல்லி அனுப்பினதாகவும், அந்த ஷணம்[109] யிந்த ரூபாய் கொடுத்தனுப்பிவிச்சு, நகருவுடனே[110] கூட பல்லக்கும் அனுப்பி அழைப்பிச்சி, சுன்னத்து[111] பண்ணி, சோபாங்கிஷமும் சோறுங் கொடுத்து, தங்களுக்குள்ளே சேத்துக்கொண்டதாகவும், இவ்விடம் விட்டு வரச்சே, ஆறணிக் கோட்டை திருமலே ருயன் சிறுது பணம் அனுப்பிவிச்சதாகவும், அதை வாங்காமல் தள்ளி போட்டு, கோட்டையின் பேரிலே வந்து யிறங்கினதாகவும், அவர் வெளிப்புறம்பட்டு சண்டை பண்ஞல் யிவர்களாலே நிறுவாகமில்லே யெண்ணும், நாலு மோர்சா போட்டு, பொம்பு போய் விழுந்ததிலே, சிதறி கோட்டையை விட்டுவிட்டதாகவும், பிற்பாடு ஆற்காடு வந்து சேந்ததாகவும், அவிடத்திலே யிவன் கொண்டாட பண்டிகை வந்ததாகவும், யதுக்கு மசூதிக்குப் போகச்சே, சொப்பதார் அல்லிகானுலே முஸ்திது பண்ண பட்ட ரெண்டு யானே கட்டினதின்பேரிலே, யேறச் செய்யறதுக்கு முன் சிதறி மாயொடிஞ்சு விழுந்ததாகவும், யதை முஸ்தீது பண்ணி யேறிக்கொண்டு யானேயின் பேரிலேயும், சகல சமபிறமத்துடனே மாரிமறுத்து முதலாகிய விருதுகளுடனே திருச்சிருப்பள்ளிக்கு அகப்பட்ட ஒசந்த பொட்டிகளே போட்டுக்கொண்டு, விலே ஒசந்த பெத்ததுராய், சிரோப்பாவும் கட்டிக்கொண்டு, வெகு வேடிக்கையாய், தொழுது வரச்சே ஒரு ஞழிகை யென்னும், தகுறுது வருமெண்ணும் சொல்லப்பட்டது. யேதேதோ போய் சுருட்டி அவன் காப்பு அதுக்கு தாமிசப்பட்டு, முத்துக் குச்சிஞலே யலங்கரிக்கப்பட்டதின் பேரிலே யேறிக்கொண்டு வந்ததாகவும், சிறுது வழிவந்த பிற்பாடு தெரு கொஞ்சமாயிருந்த படியிஞலே, யொரு பல்லக்கு யொன்னு மெத்த நேர்த்தியாய் முஸ்தீது பண்ணியிருந்ததகாகவும், அப்போ ஒரு குதிரை சேவுகன் துலுக்கன், நீயாவது யுனக்கு யிது நடக்கவாவுது யென்னு றெம்ப நிந்திச்சி, நீ மண்ணுப் போவாய் யென்னு சொன்னதாகவும், அவனே விலங்கு போடச் சொன்னதாகவும், மூணு நாளேக்குப் பிறகு அவனே அழைப்பிச்சுக் கொண்டதாகவும், அப்போவும் அப்படியே சொன்னதாகவும், அங்கே யிருந்தபேர் இவனுக்குப் பயித்தியம் பிடித்ததென்னு சொன்னதாகவும், அதின் பேரிலே யிவனே விட்டு விட்டதாகவும், வேலூரிலிருந்து மிறுத்திசல்லிகானே, திருச்சிருப்பள்ளிக்கு அழைத்துக் கொண்டுபோக வேணுமென்னு யெத்தினம் பண்ணதாகவு,ம் மிறுத்திசல்லிகான் தனக்குச் சொன்ன பரவசத்தின்படி வைக்கச் சொன்னதாகவும், மத்தப்படிக்கு கற்ஞல் கிலோவென்கிறவர், நான் பிறமாணிக்கம் பண்ணிக் கொடுத்ததை நம்பி கோட்டைவிட்டான். அந்த யுடன்படிக்கைபடி நடத்த வேணுமென்னு பேசினதாகவும் செனருல் லார்னெட் யெண்கிறவர் நமக்கென்ன கவை. நபாபு மம்முதலிகானுக்கு சம்மதியானபடியேயல்லாமல் வேற நாம் பேசப்போமோ. நமக்கு

பணம் அக்கறையல்லாமல் மைத்தது நமக்கு யென்ன அந்தரீகமென்னு சொன்னதாகவும், கெவுனர் பிக்கட்டும் அப்படி செய்யப் போகாது. பேசின படிக்கு நடத்த வேணுமென்னு சொன்னதாகவும், அப்படி கூடாதென்னு சொன்னதாகவும், யதின் பேரிலே கற்னல் கிலோ யனக்கு உத்தியோகம் வராமென்னு சொன்னதாகவும், ஆனல் சீர்மைக்கு போகலாமென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே அவர் தம்மாலாக வேண்டியதொன்றும் இல்லாமயிருந்ததாகவும், இப்படி நடந்தது மெய், பொய்யானல் கெவுனர் பிக்கட்டு பேசினலிவர்களாலே தள்ளக்கூடாது. அவரும் மதில் மேல் பூனேயாய் பேசினவர் ருகவேணும். அதல்லாமல் இவ்வருஷம் வந்த சீர்மை கப்பலிலே, புதுச்சேரி பிடிச்ச சேதி கெவுனர் பிக்கட்டுக்கும், நபாபு மம்முதல்லிகானுக்கும் வெகுமதி வந்ததென்றும் சொன்னர்கள். மைத்த சேதி தெரியல்லேயே. அதிலே சீர்மை பேச்சுடனே சேந்ததும், மம்முதல்லி மனசின்படியே யல்லாமல், நீங்கள் சேவிச்ச பணம் மாத்திரம் வாங்கிக் கொண்டு, அதில் வரப்பட்ட பாதிக்கு அவனே காண்பிக்கறதாக நடந்து வந்திருக்க வேணும். கெவுனர் பிக்கட்டு, சென்றல் லார்னேட்டு முதலியாகிய பேர் யோசிச்சி, இப்படி ஒண்ணேதாகிலும் திட்டப்படுத்தி கொண்டிருக்கவேணும். அல்லது பணத்தளவிலே விசேஷிச்சு, பிறையோசனப்பட்டு நடந்த காரியமாகிலுமாக வேணும். யிந்த சேதி மிறுத்துசல்லிக்கான் கேட்டு வெள்ளக்காரர் சத்தில்லே தப்பினதில்லே. சொன்னபடி நடப்பார்களே யென்கிறதை நம்பி கோட்டை ஒப்பிச்சு சொன்னபடியெல்லாம் கேட்டோம். இவர்களே சத்தியம் தப்பி நடந்தால், நாம் செய்ய வேண்டியதென்ன வென்றுச் சொல்லிக் கொண்டிருந்ததாகவும், அதின்பேரிலே வெள்ளக்காரர் மனுஷர் போய் யழைச்சதாகவும், தங்களுக்குள்ளேயில்லேயே, நீங்கள் அழைக்க காறணமென்ன ? மம்முதலிகான் மனுஷர் வந்து அழைச்சால், நாங்கள் லேஷத்தாயிருக்குறேமென்னு சொன்னதாகவும் அவனுடனே கூட செனமாய் அம்பது பேர் மட்டும் ஆயிதம் பானரி யிருக்குறதாகவும், அவர்கள் அத்தனே பேரும் விழுந்து சீவனே விடுகிறதேயல்லாமல், இனிமேல் வாழ பின்னலே போகறதில்லே யென்கிறதை யறிஞ்சு, அந்த மட்டிலே இருந்தபடியே யிருக்க வச்சிருக்கிறதாகவும், இனிமேல் யென்ன நடக்குமோ அறியவேணுமென்னும், பிற்பாடு வேலூருக்கும் ஆரணிக்கும், நசிமுல்லாகானுக்கும் யெசமான் தத்துவமாய், மன்சொப்புதார்[112], கில்லேதார், இடம் குடுத்து வேலூருக்கு அனுப்பிவிச்சதாகவும், நவாபும் மம்முதலிகான் இவ்விடம் விட்டு பிறப்பட்டு போளூர் வழியாய் வந்து, பவுஞ்செல்லாம் சிதம்பரம் வந்து சேரச்சொல்லி, நூறு குதிரையுடனே திருச்சிராப்பள்ளிப் போய் சேர்ந்ததாகவும், சிதம்பரத்துக்கு வந்து சேர்ந்த வெள்ளேக்காறர், ருள–சாள–பேரென்றும் யெறனூறு காடு குதிரை யென்றும், அன்நூறு துலுக்க குதிரையென்றும் அன்னூறு அறநூறு பானுயென்றும், இதிலே நூத்தென்பது பேர் வெள்ளக்காரர். முந்தாம் நாள் பயணமாய் சென்னப்பட்டணத்துக்குப் போனர்களென்றும், கொஞ்ச பவுஞ்சு கூடலூரிலேயிருக்குதென்னும் சொன்னர்கள். இந்தப்படி கேழ்வியானதை யெழுதி வச்சேன். இதல்லாமல், பாப்பய்ய பிள்ளே ஆற்காட்டிலே அழைச்சிப் போனவனே, செஞ்சியிலே ருயகேடி துற்க்கத்தின் பேரில், யேத்தி விட்டதாய் சொன்னர்கள் .இதல்லாமல் ருட்சியத்திலே நடக்கப்பட்ட குறிகளும் அன்னிதங்களும்:– சித்திரை மாசத்திலே காஞ்சிபுரத்திலே, கெருட சேவைக்கு சென நெருக்கத்திலே, கோபுர வாசலிலே நாலு பேர் பிருமண பிள்ளேகள் மரணமடைந்தார்களென்றும் தோச சவத்தின் கணக்கு சுவாமி தெரு வீதியிலே வரச்சே ருத்திரி தேரிலே கட்டியிருந்த குடை அத்து விழுந்ததென்றும் ஸ்ரீபெரும்புத்தூரிலே, பாஷிக்காறர் சுச்சக்கரத்தின்பேரிலே வீதியின் பேரிலே வரச்சே, றதம் சாஞ்சு தலேகீழாக விழுந்ததாகவும், திருவல்லிகேணியிலே

வேதாந்தசாரியார் விக்கிறகத்தை பிருமணுள் திமுஷத்தின் பேரிலே, திருட்டளவாய் ஒடச்சு போட்டதாகவும், சென்னபட்டணத்திலே கச்சாலேயீசுவரன் கோவில் உச்சவத்துக்கு, கொடை யொடிந்து விழுந்ததாகவும் சொல்லுகிருர்கள். இப்ப இந்த ம்மமுதலிகான் நபாபுதனத்திலே, மிருசத்து திவான், குத்தகை வாங்கியிருக்கிற சாமருயன், வெங்கட்டய்யன், அய்யணசாஸ்திரி, ருமலிங்கய்யன், முத்து வெங்கிடரும ரெட்டி, முத்து மல்லா ரெட்டி இவர்கள் முதலாகிய பின்னேயும் சிறுது பேர், குத்தகை வாங்கியிருக்கிற பேர்கள் நடப்பிக்கிற அன்னிதங்களும், சிறுது இடங்களிலே நடத்துகிற அன்னிதியும், குடிகள் கெட்டலேஞ்சு நொந்து போனதும், யெழுத வேணுமானுல் பார்த்த கதை வியாசற் சொல்ல யெழுதப்பட்ட விக்கினேசுவருக்குள்ளேயும் அடங்காது. சொல்ல வேணுமென்னுல் நூறு வருஷம் சொன்னுலும் முடியாது. ஆகிலும் குடியானவன் இடையர் கூட வாரம் வித்து குடுத்தும், மாடு கண்ணுகள் வித்துக்கொடுத்தும், நெறுவகிக்கயில்லாமல் அடியும், திட்டியும் பொறுக்க மாட்டாமல் ஓடிப்போனுல், பெண்டுகளே பிடித்து வந்து, மூலேயிலே கட்டிப்போட்டு, மரத்திலே தூக்கியடிச்சும், யதிலே புடவையை யவிழ்த்தும் இதிலே சிறுது பேர் செத்தும், செஞ்சி அண்டையிலே பனமலேக்கிட்ட ஒரு கிருமத்திலே துலுக்கன் ஒருவன் அமுல் பண்ணிக் கொண்டிருந்ததாகவும், அதிலேயொரு பிருமணண் சறுவ சோமானியமும் வித்துக்கொடுத்தும், பின்னேயும் நூத்தி யென்பது வராகனே கொடுக்கச்சொல்லி யடிச்சதாகவும், யெனக்கானுல் யொரு காசுயில்லே. யெங்கேயிருந்து குடுப்பேனென்று சொன்னதாகவும், உன் பெண்டாட்டியை வித்து கொடுயென்றும், சொன்னதாகவும், சாப்பாட்டுக்கு வந்தவிடத்திலே பெண்சாதியுடனே சொன்னதாகவும், நல்லது; இந்த நூத்தென்பது வராகனே உன் கையிலே வித்துப் போடுகிறனேன்னு சொன்னதாகவும், அந்த துலுக்கன் நூத்து அம்பது வராகனுங் கொடுத்து, திவாணத்துக்கு வைச்சுக் கொண்டு, அந்த பிருமணன் பெண்சாதியை தன் வீட்டிலே வைச்சுக்கொண்டதாகவும், அந்த பிருமணன் தன் வீட்டே போய்விட்டதாகவும், ருத்திரிக்கு அந்த பிருமணத்தி நாக்கை பிடுங்கி கொண்டு செத்ததாகவும், அந்த பிருமணன் செத்துப் போய்விட்டதாகவும் சொன்ஞர்கள். இப்படி அநேகம் அன்னிதங்கள் நடந்து கொண்டிருக்குது. இதல்லாமல், ஸ்ரீறங்கத்திலே சித்திரை திருநாளுக்கு சுவாமி றதத்தின் பேரிலே வரச்சே, சிகரம் சாய்ந்தது. அப்புறம் றதமும் சாயஞ்சு, சுவாமி விழப்போனதாகவும் சொன்ஞர்கள். இப்படிப்பட்ட சுக ஷீயும் நடக்கிற படியினுலே, இப்போ ருச்சியத்திலே எசமானுயிருக்கப்பட்டவர்களுக்கும், ஞடாகியத்துக்கும் யின்ன நடக்குமோ யறிய வேணும். இதல்லாமல், சூரப்ப முதலி வந்து சொன்னது. யெங்களவர்களுக்குள்ளே நாட்டுகட்டென்று ஒரு திட்டம் பண்ணிக்கொண்டு, யெங்கள் சாதியிலே யேது வழக்கு வந்தாலும் யிதுக்குள்ளே தீருகிறதேன்னு திட்டப்படுத்தி, நாள்தோறும் ரெண்டு வழக்கும் தீர்த்தார்கள். இப்பப்போ தாவீது வறவளாம் பின்னேயும் சிறுது பேர் கூடி, ஒரு சீட்டு யொண்ணு நம்முடையவர்களுக்குள்ளே யெழுதி சண்டை சச்சரவானுலும் பேச்சு வார்த்தையிலேயாகிலும் அனுசரிப்போமெண்ணு சொன்னுல், அம்பது வராகன் அவதாரங் கொடுக்குறதேன்னும் தாங்கள் கையெழுத்துப்போட்டு, பிள்ளேயுஞ் சிறுது பேர் கையெழுத்துப்போட்டு, யென்னண்டைக்கு கையெழுத்துப் போடச் சொல்லி அனுப்பிவிச்சார்கள். யெல்லாம் யோசனே பண்ணி கொண்டு சொல்லுகிறேன்னென்னு அனுப்பி விட்டு, நாஞெரு சீட்டிலே யினிமேலாகிலுஞ் சாருயங் குடிச்சால், அம்பது வராகன் அபராதங் கொடுக்கிறது. சாணியை கரைச்சு ஊத்துகிறதென்னு யெழுதி, நானும் பின்னேயும் அஞ்சாறு பேர் கையெழுத்துப்போட்டு, இந்த சீட்டை

அவர்களண்டைக்கு அனுப்பி, யிதுக்கு நீங்கள் கையெழுத்துப்போட்டால் அதுக்கு நாங்கள் கையெழுத்துப் போட்டு தாரேமென்னு சொல்லியிருக்குரேமென்னு இந்த சீட்டை பாருங்கோளென்னு காண்பிச்சார். இனிமேல் பேசப் போகுரேம். எங்களுக்கு யாதாமொரு வியாச்சியமுண்டானாலும், ஸ்ரீ பிள்ளை அவர்களுடனேயே சொல்லிக் கொண்டால், அவர்கள் தீத்துப் போடுகுறது. இப்போ அவர் இருக்குரர். அங்கே போய் சொல்லிக் கொண்டு தீத்துக் கொள்ளுகிறதும்யெண்ணு பேசப் போரேமெண்ணும் சொன்னன். ஆனல் இந்தச் சீட்டு யெதுக்காக வுண்டானதென்ருல், தெய்வச்சகாயன் குமாரத்தியுடனே, சூரப்ப முதலி சித்தப்பன் குமாரன் போனுனென்கிறதாய், அவன் துபாசி சவுரிருயன் சொல்ல, தெய்வச் சகாயன் சவுரிருயன் பெண்டாட்டியுடனே உண்டுயென்றும் சொல்ல, வழக்குப்பட்ட விடத்திலே, சம்பா கோவில் பாதிரியார் நீங்கள் நம்முட மடத்திலே கூடுங்கள். நாம் கூட இருந்து தீத்துப் போடுகுரேமெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே தயிரியஞத முதலி, சூரப்ப முதலி பின்னையும் நாலஞ்சு பேர் தாவீது வரளாம் முதலியாராகிய பேர்களும் போய் கூடினர்கள். பாதிரியாரும் கூட இருக்கச்சே, இந்த வழக்கை சொன்ன மாத்திரத்திலே, இதல்லாம் மண்ணை வெட்டி தச்சுப் போடுங்கள். ஒண்ணும் சொல்ல வேண்டாம். இந்த மட்டும் நடந்ததுயெல்லாம் போகட்டுயென்றதாகவும் அதின்பேரிலே இனிமேல் அபசாரியெண்ணு சொல்லவும் போகாது. குத்தம் செமத்தவும் போகாது. இந்தப்படிக் கட்டுப் பண்ணி, ஒரு சீட்டுப் பிரசிச்சுப் போடுகுரேமென்னு சொல்லி அதின்பேரிலே இவர்களெல்லாரும் கூடி இந்த சீட்டு யெழுதினது.

## சித்திரபானு ௵ வையாசி ௴ யசா உ புத்வாரம்: சதஎளசாயஉ ஆண்டு மாயி ௴ உசா உ

இந்தனுள் மத்தியானத்துக்கு மேலே, தயங்கம்பாடி துறை பிடிச்சு ஒரு கப்பல் ஒடி வந்துது. கொடியும் நீக்கி ரெண்டு பீரங்கி போட்டான். துரை பிடிச்சு இங்கிறிசுக் கொடி போட்டு, யேழு பீரங்கி போட்டான். கோட்டையிலும் பதிலுக்கு யேழு பீரங்கி போட்டான். அந்தக் கப்பல் இங்கிறிசுக்கப்பல்தான். வங்காளத்திலே சென்னப்பட்டணத்துக்கு வந்து, இவிடத்திலே இரும்பு யேத்திக் கொண்டு போக வந்ததென்னு சொன்னர்கள்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ யஎ உ குருவாரம்: சதஎளசாயஉ ஆண்டு மாயி ௴ உஎ உ

இந்தனுள் காலமே, சென்னப்பட்டணத்திலே யிருந்து வீமஞத பிள்ளை வந்தார். அவர் சொன்னது. நாகப்பட்டணத்துக்கு கப்பல் வந்தவுடனே, காரைக்கால் தோறணம் வச்ச சேதி, அவடத்துக்கு வந்துது. நீங்கள் தோறணம் வச்சீர்களாளெண்ணு துரைகள் முதலான சகல செனங்களும் வெகுவார்த்தையாய் சொல்லி கொண்டார்கள். அப்போ வசவசுப செட்டி போய் துரையவர்களுடனே, யிருபது ஞயிரம் வராகன் மட்டுஞ் சேதமாச்சுதுயென்று சொல்லிக் கொண்டான். அதின்பேரிலே கெவுனர் பிக்கட்டு றெம்ப கோபம் பண்ணி, முத்துக்கிஷ்ண முதலியாரைப் பார்த்து அப்போ தானே, றங்கப் பிள்ளை யவர்களை யிவ்விடத்திலே வைச்சுக்கொள்ள வேணும். அப்பாலே போக விட்டு விட்டதே ஆகாது. இப்பவும் அவர்களைப் பிடிச்சி வந்து யென்ன பண்ணுகிறேன் பாரெண்ணு

சொன்னதாகவும், முத்து கிஷ்ண முதலியார் தன்னுடனே துரையவர்கள், யிப்படியெல்லாமல் கோபிச்சிக்கொண்டு சொன்ஞர். விசாரிச்சறியுங்கோள். அப்படியிராதென்னு சொன்னேன். பிற்பாடு வசவ சுப செட்டி தம்பி காகிதமும், பின்னும் வெள்ளைக்காறர் காகிதமும் வந்தது. அதிலே கிறிஸ்தவர் இப்படி தோறணங்கட்டி கலில் பண்ணுர்கள். வந்தவாசி திருவேங்கிட பிள்ளை மனுஷர் கூட யெண்ணுப் போலேயும் இருந்துது. இது வெள்ளைக்காறர் உத்தரவல்ல. சீமை மனுஷரால் செய்யப்பட்ட வேலையென்னு யெழதி வந்ததுயென்னும், பின்னை அவர்கள் குமாரன், இந்த சோலியை அறிந்ததில்லையென்னு கேழ்விப்பட்ட பிற்பாடு, ஒரு ஞள் முத்துகிஷ்ண முதலியார் சொன்னது. பிள்ளை அவர்கள் குமாரராலே ஒரு பொல்லாப்பும் நடக்கவில்லை. சின்ன மனுஷர் கிறிஸ்தவர், யிப்படி நடத்துஞர்களாம் யெண்ணு துரையவர்களுக்கு சொன்ஞர். அவர்கள் பெரிய மனுஷர். யெதைக் கண்டு அப்படி செய்வார்களென்று சொன்னதாகவும், இதெல்லாமல் கண்டி தேசத்து ருசாவும், உலாந்தக்காறருக்கு குழம்பிலே[113] சண்டை நடந்துக் கொண்டிருக்குதே, அதுக்கு, கண்டி ருசாவுக்கு மத்ததாய் அஞ்சாறு கப்பலும், ஒரு சுலுப்பும் பயணம் பண்ணி, அதுக்கு யேத்துகிறக்கு இங்கிலிசுக்காறருக்குள்ளே, சோல்தாது விசேஷிச்சி யில்லாத படியினலே, பிருஞ்சுக்காறர் பிரிசிநோராய்[114] சிந்தாதரிபேட்டையிலே காவல் வைத்திருந்த பேரிலே சமாதானம் பண்ணி, உலாந்துக்காறர் பேரிலே சண்டைக்கு போறேமென்னும், யென்ன விதமாகவே சமாதானம் பண்ண, அதுக்குள்பட்டு முன்னூறு பேர் மட்டும் கையெழத்துப் போட சம்மதிச்சி, அந்தக் கப்பலின் பேரிலே யேறினதாகவும், அய்யத்தம்பி வெங்கிடாசலப் பிள்ளை அதுக்கு கும்பினி துபாசியாய் போனதாகவும், சென்னப்பட்டணத்துக்கு புதுச்சேரி பிடித்த சேதி வரதுக்கு, பதிலுத் தரவு கொண்டுக் கொண்டு சுலுப்பு வந்ததாகவும், அதிலே பிருஞ்சு கப்பல் வருகுது, அவர்கள் வந்து திரும்ப மட்டும், மேஸ்தர் பிக்கட்டுக்குத்தானே துரைத்தனம் பண்ண வந்ததாகவும், முத்திரையும், பிரம்பும், கத்தியும் வந்ததாகவும், மேஸ்தர் பாலுக்கு இவர்களுக்குள்ளாக யிருக்குறதென்னும், ருசாவுடைய மனுஷர் வாறக் கப்பல் உள்பட ஒரு குறிப் பிறகாரம் நடக்கிறதென்னும் ஈந்தையிலே[115] யிங்கே யார் பேரிலே, சண்டைக்கு போக வேணுமெண்ணுலும், சீமை உத்திரவு அக்கறையில்லை. இவர் மனசுப்படி செய்கிறதென்றும் வங்காளம் முதல் பொம்பாய்[116] வரைக்கும், யிவர் ஒடி திரிகிற பிறகாரம் நடக்குறதென்னும், இப்போ பதினைந்து நாளைக்கு முன்னதாக இவ்விடங்களிலேயிருந்து யொரு கப்பல் வந்தது. அதிலே பிருஞ்சுக் கப்பல் வந்தது அதிலே பிருஞ்சுக் கப்பல் வருகிற சேதி கொண்டு வந்ததென்னும், சொல்தாது ரஸீது விஸ்தாரமாய் சேர்க்கிருர்களென்றும் கோட்டை விஸ்தாரம் வேலை விட்டு பிலக்க கட்டுகுறதாகவும், புதுச்சேரியிலே யிருந்து யெடுத்துக்கொண்டுபோன பெரிய பீரங்கிகளையும், மத்ததையும், கொத்தளங்கள் பேரிலே யேத்துகிறதாகவும், பணங் கேட்டு கும்பனியிலே ரெம்பவான படியினலே, மூன்று நாளைக்கொரு தரம், நாலு நாளைக்கொரு தரம், கூலிக்காறருக்கு கூலி கொடுக்குறதாகவும், பட்டணத்திலே செனங்கள் தட்டுமுட்டு பணங் காசுகளெல்லாம் கொண்டு காட்டிலே பாளையபட்டுலே[117] சேத்ததாகவும், வெங்கல தட்டுமுட்டுகள் உட்பட, வெளியிலே சேத்துப்போட்டார்களென்றும், அவரவர்கள் சாப்பிடுற பீங்கான் கொப்பறையெல்லாம் தவிர வேறென்னுமில்லையென்னும், தானியமொரு கூடை பிடிக்க இல்லையென்றும், கேழ்விப்பட்ட சேதியை யெழுதி வைச்சேன்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ௳ யஅ ௳ சுக்கிறவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு மாயி மீ௳ உஅ ௳

இந்தனுள் விந்தையாய் ஒரு சேதியும் கேழ்விப்பட யில்லை

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ௳ யகூ ௳ சனிவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு மாயி மீ௳ உகூ ௳

இந்தனுள் சூரப்ப முதலி வந்து சொன்னது. நான் கலியாண விருந்து முஸ்தீது பண்ணி, உறமுறையானவருக்கும் விருந்து சொன்னேன். தாவீது அம்மட்டனை விட்டு சாப்பாட்டுக்கு போகக் கவையில்லையெண்ணு சொன்னுன். நல்லது; இருக்கட்டுமெண்ணு இருக்கச்சே, தாவீதும், வறளாம் சவுரிமுத்து பிள்ளையும், பத்து பனிரெண்டு பேர் அங்கிகளைப் போட்டு, துரையண்டைக்குப் போய், தாவீது தன் பெண்டாட்டியை, சூரப்ப முதலி கூப்பிட மாட்டேணெண்ணு சொல்லுகுருனென்று சொன்னுர்கள். அதின் பேரிலே சேவுகனை விட்டு என்ன அழைப்பிச்சார். போனவிடத்திலே துரை சொன்னது. யென்னேரம் உன் பிருதாயிருக்குது. நீ இந்த ஊரிலே இருக்கமாட்டாயென்னு சொன்னுர். யென்னத்துக்கய்யா வெண்ணு கேட்டேன். இவன் பெண்டாட்டியை கூப்பிட மாட்டேணெண்ணு சொல்லுகுருயென்னு கேட்டார். நான் சொல்ல இல்லை. இப்போ அழைச்சுப் போக சொல்லுங்கோளென்னு சொன்னேன். யென் பெண்டாட்டியை செல்லுமியாக்கு பணத்துக்கு ஒளிச்சு வைச்சு ஒண்ணுமில்லையென்னு சொன்னுனே, அந்த உடமையெல்லாம் யெடுத்துப் போட்டு, ஊருக்குப் போய் சொல்லச் சொன்னுன் யெண்ணு சொன்னுன். அதேன் அப்படி செய்தாயென்னு கேட்டார். என் பெண் என் வீட்டிலே வந்துது. சொல்லச் சொன்னேனென்னு சொன்னேன். இருளப் பிள்ளை பெரிய மனுஷன். வீட்டு பெண்டுகளை அப்படி போய் சொல்ல சொல்லப் போகதென்னு சொன்னுன். கனகருய முதலியார் பெண்சாதி பொய் சொல்ல இல்லையா? இதுனுலே என்னவெண்ணு சொன்னேன். நல்லது அவன் பெண்டாட்டியை கூட்டி விடுயெண்ணு சொன்னுன். நல்லதுயெண்ணு வெளியே வந்து விட்டோம். வெளியிலே பெரியண்ண முதலியார் இருந்தார். அவருடனே, துரையுடனே போய் இப்படியே யெண்ணு சொன்னுனெண்ணு சொன்னேன். அவர் அவனை அழைச்சு சிறுபிள்ளை புத்தியா? இப்படி செய்வார்களா? உனக்கு யேத்ததாக பிறையாசப்பட்டான். அப்படி இருக்க, இதென்ன வார்த்தை? யெது நினைச்சே சொன்னுயெண்ணு கேட்டார். அப்போ இருளப்ப பிள்ளை வந்தார். நல்லது மாமா. இந்த சீட்டுக்கு கையெழுத்துப் போட்டால் யென் பெண்சாதியும் இருக்கட்டும். நமக்கும் {நமக்கும்} சமாதானம் தானுயெண்ணு சொன்னுன். நல்லது; சீட்டிலே அம்பது வராகன் அபராதம் வாங்குறது யென்னு யெழுதி இருக்குதே, அதை கும்பனீருக்குயெண்ணு யெழுதுனுல், கையெடுத்துப் போடுறெண்ணு சொன்னேன். அதிலே இருளப் பிள்ளையும் பெரியண்ண முதலியாரும் ஞாயம் தானல்லவா? அபராதம் வாங்கி இவர்கள் எடுத்துக் கொள்ளுகிறதா? கும்பீனிருக்குயெண்ணு யெழுத வேண்டியது தானென்று சொன்னுர்கள். நல்லது அதைக் கிழிச்சு, இந்தப்படி யெழுதி அனுப்பிவிச்சால் போடுகுறீர்களாவெண்ணு கேட்டான். நல்லது யெண்ணு சொன்னேன். அப்படி யெழுதி அனுப்பிவிக்குறேணெண்ணு யெழுதின சீட்டை கிழிச்சு, வேணுமெண்ணு தானல்லவா அவன் நடப்பிக்குறதுக்கு, யெப்படி சம்மதிச்சு வந்தாயெண்ணு சொன்னுர்கள்.

அதின்பேரிலே, மறுபடியும் யெல்லாரும் கூடிக் கொண்டு, துரை அண்டையிலே போய் சொன்ஞர்கள். சூரப்ப முதலி இந்த சீட்டுக்கு கையெழுத்துப் போடமாட்டேமென்கிருயென்று சொன்ஞர்களாம். அப்போ, இருளப்ப பிள்ளே இருந்து கொண்டு, அபராதம் யெழுதின அன்பது வராகனும் கும்பனீருக்கு யெழுதிஞல், கையெழுத்துப் போடுகுறதென்னு சொன்ஞனேண்ணு சொன்ஞனும். மெய்தான். அப்படிதான் செய்ய வேணுமெண்ணு சொன்னதாகவும் பிறப்பட்டு வந்து விட்டார்கள். பிற்ப்பாடு தாவீது ஒரு சேவுகனே அனுப்பி, யென் பெண்சாதியை அனுப்பி வையெண்ணு கேட்டான். இப்போ தானே அழைச்சு போய், கழுத்தைப் பிடிச்சு தள்ளிகிட்டுப் போயெண்ணு சொன்னேனே, அவளும் அவன் தாயாரும்மாள் விசேஷித்த விதமாய் பேசி வருகுறதில்லே யெண்ணு சொன்ஞன். பிற்ப்பாடு சாப்பாட்டு வேளேயிலே வந்து அவளே அனுப்புஞல் அல்லாமல் நீங்கள் இருவரும் சாப்பிடத் தேவையில்லே. தொறையின் பேரிலே இருக்க இருக்கிறதுயெண்ணு சொன்ஞன். அதுக்கு முன்னுதாகத் தானே சாப்பிட்டு இருந்தாள். வெளியிலே போகச் சொல்லி, கதவை சாத்திப்போட்டு, நீ அழைச்சுக்கொண்டு போ யெண்ணு சொல்லியிருந்த பேர்களுக்கு, சாப்பாடு பண்ணிவச்சேன். அப்போ சிறுது பேர் ஓடி வந்தார்கள். அவரவர்கள் வீட்டு பிள்ளேகள் சிறுது பேர் ஓடி வந்தார்கள். இப்படி சீட்டுக்கு கையெழுத்துப் போடாதப்படியிஞலே சாப்பாட்டுக்கு போக வேணுமெண்ணு அம்மட்டனே விட்டு நிசிச்சுப் போட்டு, துரையுடனே சொல்லி, பங்கம் பண்ணி விச்சோமெண்ணு சந்தோஷப்பட்டு கொண்டு இருக்குருர்கள். இதுக்கு அவர்கள் பங்கம் பண்ண யெந்த யெத்தனமுண்டோ அந்த யெத்தனத்திலே இருக்குரேம். அது நீங்களறிஞ்சு இருக்க வேணும். நாளது வரைக்கும் கனகருய முதலியார் வழக்குக்கும், சூரப்ப முதலியார் வழக்குக்கும் இதுகளெல்லாம் உங்கள் வழியிலே தீந்ததே அல்லாமல் வேறல்லவே. இப்பவும் யெங்கள் வழக்கு நீங்கள் தீத்துக் குடுக்க வேணும். இந்தத் துரையும், துபாசிகளும் நடப்பும் பேரிலே பேசுகுருர்கள். நானும் நடப்பும் பேரிலே ஆகிலும் பேச வேணுமெண்ணு இருக்குறேண்ணு சொன்னேன்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ௳ உய ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ௳ ஙய ௨

இந்தனுள் கேழ்விப்பட்டது. உலாந்தக்காறர் கப்பல் பதினேஞ்சு நாளில் குழம்பு வந்து சேர்ந்ததாகவும், இங்கிலீசுக்காரர் கப்பல் பனிரெண்டு திருக்கணுமலேயிலிருக்கிறதாகவும், பிருஞ்சு இஸ்காதரும் ஆனி மாசத்துக்குள்ளே வருமென்னும், ஒருவேளே கண்டியாருக்கு இங்கிலீசுக்காரர் மத்ததுப் பண்ணி இருக்கிறபடியிஞலே, முன்னுதாகத் தானே இவர்களுக்கும் உலாந்தக்காரருக்கும் சண்டையாகும்போலே காணுதென்னும், பிருஞ்சுக் கப்பல் வருகிற மட்டுக்கும் உலாந்தக்காரர் வழிப்பாத்து இருக்குருர்களேன்னும், இப்படியாக சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ௳ உக ௨ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு மாயி மீ௳ ஙக ௨

இந்தனுள், முத்தப்பிள்ளேக்கு சீமந்த கலியாணம் ஆனபடியிஞலே, அங்கே போயிருந்ததுக்கு காரியமா வந்து, வசியேந்தரன் தம்பி, பிற கறண, விதிப்படிக்கி,

ஸ்ரீமந்த புஞ்சவணம் நடப்பிக்க சம்பிறமத்துடனே, மத்தியானம் சாப்பிட்டு, சாயங்காலம் வீட்டுக்கு வந்தோம். அந்த கலியாணத்துக்கு வந்த சபையிலே, வந்தவாசி திருவேங்கடத்தா பிள்ளை, தமையன் பிள்ளை வெங்கடாசலம் சொன்னது. கிறிஸ்துவர் போய், இந்த வூர் துரையுடனே பிருது சொல்லிக் கொண்டார்கள். சவுரி ருயன் பெண்டாட்டியுடனே மலையப்ப முதலியார் குமாரன் அய்யன் போனுன். இதுக்கும் சாதக மனுஷர் அத்தாஷ்சியுடனே சொல்ல, பின்னையும் சிறுது சங்கதி இப்படிபட்டதுயெண்ணு சொல்ல இதுகளிலே ஒருவருக்கொருவர், யேச்சுகள் பிறபேச்சுகள் நடக்க, இத்தனைக்கும் மூக்கும் பேரிலே கை வைச்சுக் கொண்டு கேட்டிருந்தார். இந்த துரையைப் போலே, மனம் பொறுத்து யாரும் கேழ்க்கமாட்டார்கள் யெண்ணும் இதைக் கேட்டு, தாவீதை தீத்துப் போடச் சொன்னதாகவும், தாவீது யெல்லாரையும் கூட்டினதாகவும், சீட்டு யெழுதி கையெழுத்துப் போட்டதாகவும், அதின்பேரிலே சாருயம் யாரும் குடிக்க கவையில்லை. குடிச்சால் அன்பது வராகன் குடுக்க சீட்டு யெழுதினது. இதிலே இவர்களுக்கு நடக்குற லச்சை தயங்கம்பாடியிலே தெருத் தெருவாய் டமாரம் வைச்சடிக்குருர்கள். நேத்தைய தினம், நானும் பெரியண்ண முதலியும், இருளப் பிள்ளை வீட்டுக்குப் போனேம். அவர், இருபது முப்பது பேர் கும்பல் கூட்டி வைச்சுக் கொண்டு, துரை அவர்களுடனே சொல்லுகுறதாய் சொன்னுர்கள். அதை காதாலே கேழ்க்க கூடாது. வாயாலுங் சொல்லக் கூடாது. இந்த விதமாய் தயங்கம்பாடி யெல்லாம் இதையல்லையாம் பேசிக் கொள்ளுகுருர்களெண்ணு சொன்னுன்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ உஉ வ மங்களவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூனி மீ க வ

இந்தனுள் சாயங்காலம் பெரியண்ண முதலியாரும், சின்னய்யா பிள்ளையும் வந்து பேசிக் கொண்டிருக்கச்சே, சொன்ன சேதி. நாகப்பட்டணத்திலே முதாவுனிடத்தில், ருமலிங்கபிள்ளை வெகு கூட்டத்தினுடே திரியுருனென்னும், சோணுசலப் பிள்ளைக்கும், இவருக்கும் சமாதானம் இல்லை. பேச்சு வாற்த்தையுமில்லை யெண்ணும், இவன் காரியமென்ன நடக்க போகுது? யென, இவன் முசே முதா இலஷ்சம் றூபாய் குடுத்தான். அவனுக்கும் கவை நடந்து போச்சுதா? இன்னம் ஒரு மாசத்தையிலே அவன் படப்போகுறது தெரியும் யெண்ணும், முதாவும் காரியத்துடனே தான் இருக்குருரெண்ணும், கும்பனீர்லே பனிரெண்டு பதிமூணு லஷசம் வரவேணுமெண்ணு யெழுதிக் கொண்டிருக்குருனே, ஆரும் அறியார்களா? சீமை வழியிலே யுண்டாகிய ஆடு மாடுகள் யெல்லாம் ஒட்டி வந்து, சம்மதியானபடி விலையெழுதி வச்சிருக்குது யெண்ணும், யெசமான் பேரிலே ஞு காரியமும் {காரியமும்} பண்ணுகுறவன், கெட்டுப் போவானென்னு இப்படி ஞுவிதமாக சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ உங வ புத்வாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூனி மீ உ வ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. ருமலிங்க பிள்ளைக்கும், முதாவுக்கும் இருபதனுயிரம் றூபாய் கடன் வாங்கி குடுத்தாகவும், மயிசூர் தண்டுக்கு போய், சகல அதிகாரம் தன் வசம் பண்ணினுல், தண்டு சிலவுக்கு முன்னுதாய், அன்பதுனுயிரம் றூபாய்

போடுகுறேமெண்ணும், தண்டுக்கு அரும்பாத்தைத்தனமும்[118], சீமைக் கப்பித்தான் அமுல் பண்ணனும். இதுக்கு முசே முதாவைக் கூட வாவெண்ணு சொன்னதாகவும், அவரும் பயணமாயிருக்கிறதாலும் அவர் போகிறதுக்கு தக்கதாக இருக்க, இருக்க யில்லே. பணத்து நிமித்தியமும் பயணம் பண்ணனும்மென்னு சொல்லிக் கொண்டார்கள். இந்தப் படிக்கி சின்னயப் பிள்ளே சொன்னுர்.

## சித்திரபானு ஶ்ரீ வையாசி மீ௨ உச உ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ௨ ங உ

இந்தனுள் கேழ்வியான சேதி. நேத்து சாயங்காலம், சிதம்பரத்திலிருந்து இங்கிலிசுக்காறர், மூணு பல்லக்குக்காறர் தயங்கம்பாடிக்கு வந்ததாகவும், அவர்கள் வந்த காரியம் இன்னதென்னு அறிஞ்சு யெழுத வேண்டியது.

இதல்லாமல், முன்னே பாளேயக்காறர் சேருவையாயிருந்த, தனம் யென்கிறவன் சொன்ன சேதி. சிதம்பரத்திலே அஞ்சாறு ஞளேக்கி முன்னுதாக, கோவில் சுத்து பிறகாரத்து வெளியே, தென்னண்டைய வீதியிலே இருந்த நாமுகப் பிள்ளேயாரை, ஒரு ஒப்பிசேர்[119] ஒரு கருங்கல்லாலே முகத்தில் போட்டதாகவும், ஒரு அண்டைக் கண்ணும், கன்னமும் பேந்து போனதாகவும், சுத்தியினுலே வயத்திலே, ஒரு குத்துக் குத்தினதாகவும், அதன்பேரிலே அந்த ஒப்பிசேர் கிறுகிறு வெண்ணு சுழன்று செத்தாகவும், அவனே அந்த வீதியிலே தானே புதைச்சுப் போட்டதாகவும், அந்த பின்னேயும் நாமுகப் பிள்ளேயாருக்கு பேந்த கண் பக்கம் போக, கண்ணுயிருக்குற கண்ணிலே தண்ணீர் வடிந்ததாகவும், வயித்திலெ குத்தினத்தின் வழியே ரத்தம் பெருக்கெடுத்தாகவும், வெகு சனங்கள் வேறே வேடிக்கை பாற்க்குறதாகவும், தானும் நாலு ஞழிகையிலிருந்து யிருந்து, பாத்தேனென்னும், வெகு உபசாரங்கள் நடக்குறதாகவும் சொன்ஞன். இன்னம் விசாரித்தறிய வேண்டியது.

## சித்திரபானு ஶ்ரீ வையாசி மீ௨ உரு உ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ௨ ச உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. சிதம்பரத்திலேயிருந்து வந்த யிங்கிலிசுக்காரர் மூணு பேரும், ருத்திரி இவ்விடத்திலே யிருந்து இண்ணேக்கி யெட்டு மணிக்கி, நாகப்பட்டிணத்துக்கு போனதாக சொன்ஞர்கள். அவர்கள் வந்த காரியம் இன்னதென்னு தெரியயில்லே. சாருயம் வாங்க வந்தார்களென்றும், பிருஞ்சுக்காரர் பிறிசோனெரை அழைச்சிக்கொண்டுப் போக வந்ததாகவெண்ணும், இப்படி சொல்லிக் கொள்கிருர்கள். இனிமேல் நாகப்பட்டணத்துக்கு போஞர்களே அந்த சேதிகள் யறிஞ்சி யெழுத வேண்டியது. இதல்லாமல், குழம்பிலே உலாந்தைகாறருக்கும், கண்டி ருசாவுக்கும் சண்டையாயிருக்குதே, யெது நாலெயென்ருல், இப்போ யிருக்கிற ருசா, முன் பிடுத்துக்கிசுக்காறர்[120] நாளேயில், எந்த அத்து மட்டும் நடந்துதோ, அந்த சுத்திலே இருக்கிறதெண்ணும், கறுவா வெட்டுகிற பேர்களே அதனே தெண்டிகர் பண்ணக் கவையில்லே யெண்ணும், உள்நாட்டு சரக்கு நாங்கள் விக்க, நீங்கள் கொள்ளுகிறதண்ணும், சலாபம் சந்தியத்திலே குளிக்கிறதெண்ணும், இப்படி

சொன்னதாகவும், அதின்பேரிலே குழம்புத் துரை சொன்னது. யெங்கள் உடமையை யென்ன செய்ய வேணுமோ அது செய்வோமென்னும், உமக்கு முன்னிருந்த ருசாக்களை நாளையிலே, யெப்படி நடந்ததோ அப்படி நடக்குமென்னும், முன் நடந்ததும் பிறதானமாய், போன வருஷம் நடந்தது பிறதானமாவெண்ணும், சலாபம் மதுரையைச் சேர்ந்ததெண்ணும், இப்படி பதிலுத்தீர்வு சொல்லியனுப்பினதாகவும், அதின்பேரிலே நாட்டிலேயிருந்து யொண்ணும் வராமல் கட்டு பண்ணதாகவும், அப்போ கறுவா வேட்டுக்கு போற ருசாவுக்கு, அனுகூலமாய் நடந்ததாகவும், அவர்களிலே பெரிய தனக்காறர் யிருபெத்தேழு பேரைச் சுலுப்பிலேத்தி, வேறே ஒரு துறையிலே யிறக்கி வெச்சுயிருக்குறதாகவும், இவர்களை கல்லைக் கட்டி கடலிலே விட்டு விடுவதாகவும், இதின்பேரிலே கலாபெமிருந்து, ருசா தாம் தானே பிறப்பட்டு, குழம்புக் கோட்டையை பார்க்குறேன்னு பயணப்பட்டதாகவும், அப்போயிருக்கப்பட்ட மந்திரிமார் முதலாகிய சிங்களவரும் நீர் பிறப்பட கவையில்லை. நாங்கள் போய் செயிச்சு வருகுறோமெண்ணு பிறப்பட்டதாவும், உலாந்தைக்காறருக்கு நடக்குற நாடுகளை கட்டி கோட்டை ஸ்தானம் விட்டு, குறையெல்லாம் கட்டுபட்டதாகவும், உலாந்தக்காறர் வெளிப்பிறப்பட்டு சண்டை பண்ணதாகவும், குழம்புக்கப்புறம் காத வழியிலே ஒரு ஆறுயிருக்குதெண்ணும் அதுக்கப்பறம் மறு காடெண்ணும், ஆத்துக்கப்புறம் உலாந்தக்காறர் போனால் தப்பத்தக்கதில்லை யெண்ணும் இப்பிறம் கண்டி தளம் வந்தால் தப்பத்தக்கதில்லையெண்ணும், இந்த அத்திலேயிருக்க, அந்த சேதி பத்தாவியிக்கி[121] போய், அங்கேயிருந்து குழம்பு துரைக்கி தாக்கீது வந்தது. யெந்தை ருசாக்கள் பேரிலே, திரேஷிப்பார்களா? சத்தேறக்குறைய ஒதூர் கிளாசிப் பண்ணிக் கொள்ள வேணுமேயல்லாமல் திரேஷம் வருவிச்சுக் கொள்ளுவாருகளாவெண்ணு, அந்த துரைத்தனத்தை வாங்கிப்போட்டு, நாகப்பட்டணத்து துரைக்கு, துரைத்தனம் அனுப்பினதாகவும், அதின்பேரிலே பழவேற்காட்டுலே துரைத்தனம் பண்ணிணவரை, நாகப்பட்டணத்துக்கு துரையாய் வச்சுப்போட்டு, குழம்புக்கு துரையாய் போய் முன்னிருந்தவனை, பத்தாவிக்கு அனுப்பிவிச்சு, இவன் மாற்க்காமாய் ஸ்தானுதிபதிகளை அனுப்பி, விசேஷம் நடத்தினதாகவும், இப்படியிருக்க கண்டி ருசா, யெந்த விதத்திலே யிவர்களை செயிச்சு, கோட்டையை வாங்க வேணுமெங்கிற யெத்தினத்திலே, சிறுது வெகுமதி கொடுத்து தன் அம்மாளையும் கூட்டி, தஞ்சாஊர் ருசா வண்டைக்கி யனுப்பி, அவர் மத்திலே யிந்த கரையிலிருக்கிற தூத்துக்குடி, பின்னர் நாகப்பட்டணம், இவிடத்திலே கலக்கம் பண்ணி கட்டவும், பேச்சு நடத்தினதாகவும், அவர் அதுக்கு சம்மதியாமல், பதிலுக்கு வெகுமதியனுப்பினதாகவும், இப்படியிருக்க கண்டிய ருசாவினுடைய மந்திரிமாரிலே, ஒருவன் சோனகன், அவன் குமாரனை பயணம் பண்ணி, ரெண்டாயிரம் விருகனுக்கு, றத்தின நகைகள் வெகுமதிக் கொடுத்து, சென்னப்பட்டணத்துக்கு, இங்கிறிசு கெவுனர் பிக்கட்டண்டைக்கி அனுப்பி, யெங்களுக்கு மத்தெத்து பண்ணினால், சிறுது துறை விடுகிறோம். உள்நாட்டுச் சரக்கெல்லாம் நாங்கள் கொண்டு வந்து விக்கிறோம். யெங்கள் கையிலே, நீங்கள் கொள்ளுகிறதுயெண்ணு பேசினதாகவும், அதுக்கு இங்கிசுக்காறர் நாங்கள் உலாந்தக்காறர் பேரிலே சண்டை பண்ணக் கூடாது. அவர்களிருக்கிற துறை நாங்கள் வாங்கக் கூடாது. ஆனாலெங்களுக்கு அலாதியாய் யெங்யெங்களுக்கு ஒரு துறை, விட்டாலதிலே நாங்களிருக்குறோம், சகல சரக்கும் உங்கள் கையிலே கொள்ளுகிறோம். அந்த துறையிலே வற்த்தககாறர் வந்துக் கொள்ளுவார்களேண்ணு சொன்னதாகவும், இப்படியிருக்கச்சே, அப்புறம் நினேச்சால் உங்களுக்கனுகூலமாய் யெப்படி நடத்த வேணுமோ, அப்படி நடத்துகிறோமெண்ணு, சொன்னதாகவும், அதுக்கு அவர்கள் சம்மதிச்சி ........... யெண்குற துறைமுகம் விட,

அதிலே யிவர்கள் போய் யிருந்து அதுக்குத்தக்கதாக மத்தெத்து பண்ண, அஞ்ச ஆறு கப்பலும், சுலுப்பும், சண்டைக்கு ஆளுமாறுடனே போனதாகவும், அவர்களும் போய், அந்த துறை சேர்ந்ததாகவும், அந்த யிங்கிலிசுக் கப்பல்காறரை உலாந்துக்காறர் வந்து நீங்களேன் வந்தீர்களெண்ணு கேட்டதாகவும், நாங்கள் பிருஞ்சுக் கப்பலைத் தேடி வந்தோமென்னு சொன்னதாகவும், பிற்ப்பாடு சிறிது சோல்தாதுகளை யெறக்கினதாவும், இங்கே யெண்ண யெறங்கினீர்களெண்ணு கேட்டதாகவும், ஆசுதாகி நிமித்தியம் யெறங்கினேமென்னு சொன்னதாகவும், யிறங்கியிருக்கச்சே, சிறுது வெள்ளக்காறர், கண்டிய ருசாயிருக்கிற யிடத்துக்குப் போனதாகவும், போனதேது யென்னு கேட்டதாகவும், அவர்களோடிப் போய் விட்டார்களென்னும், சொச்சமிருக்குற பேரை கப்பலில் யேத்திக் கொண்டதாகவும், அந்த யிடங்களிலே திரிகுறதாகவும் ஆனுல் குழம்பிலேயிருக்கிற பேர் யெவ்வளவுவென்றுல், ஆயிரம் பேர் சொல்தாதுகளும், ஆயிரம் பேர் சேவகரும், ரெண்டாயிரம் பேர் சிப்பாய்களென்றும், கண்டிய ருசாயிடத்திலே சிப்பாய்கள் மூவாயிரம் பேர் உண்டெண்ணும், குறை சிங்களவர், பதினுராயிரம் கூடுமெண்ணும், குடிகள் உள்பட நாட்டிலுள்ள பேர் கூடினுல், வெகுபேர் கூடுமெண்ணும், நாட்டிலேயிருந்து சரக்குகள் வருதினுலே இவர்கள் கைவசமாயிருக்கிற, கொஞ்சமிடத்திலிருந்து வந்த பாக்கு, கொஞ்சம் குத்தத்திலேயிருந்துது. அதை ஒரு பண்ணைக்காறர் வாங்கிப் போடுவான். இங்கே போன பண்ணைக்காறறை பிடவை முதலாகிய சறக்குகள் காட்டி........... விலை வித்தெண்ணும், வந்த பண்ணைக்காறருக்கு ........... அவனுக்கு பதினுறுக் குறையாய் விலைப்படிக்கு பத்துப் பதினைஞ்சுமாய் கொடுத்தாகவும், பிறப்பாடு போன துரை சமாதானம் பண்ணி வைச்சதாகவும், முன் ஒரு ஸ்தானுதிபதி அனுப்பினதாகவும், அவனும் வற இல்லையென்னும், மூணுவது ஒரு ஸ்தானுதிபதியை அனுப்பினதாகவும், இதுவரையில் வரயில்லையெண்ணும், அவர்களுக்காக பல வைச்சிருக்குருர்களோ அல்ல வெண்ணும், பேச்சு மூச்சு நடக்குதே தெரியாதெண்ணும் முன் இருந்த துரையை ஒப்பிச்சுப் போட்டால், சமாதானம் யெண்ணு சொல்லுகிருர்களெண்ணும், இப்போ பத்தாவிலே யிருந்து ஒன்பது கப்பல் ஆளுமாறுடனே வந்து, காலி, குழம்பு வந்து சேந்தாகவும், இனிமேல் யென்ன நடக்குமோ அறிய வேணும் இந்த சேதிகள் நாளதியாய் விஸ்தரிச்சு கேழ்வியானதை, ஒடிங்கிச்சி சுருக்கமாய், இதுவும் ஒரு பிறஸ்தாபத்துக்கு வருமென்கிறதை குறிச்சு யெழுதி வைச்சேன்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ உசா உ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ ரு உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. செக்குறுதுக்கி இனிமேல் சிப்பாய்களுக்கெல்லாம் கும்மாந்தன் குடுக்க, இப்போ ரெண்டாயிரம் றூபாய் முசே முதாவுக்கு குடுத்தாகவும், நாலு நாளைக்கி முன்னுதாக ருமலிங்க பிள்ளைக்கு சிரேப்பா குடுத்தாகவும் சொன்னுர்கள். பின்னை ஒண்ணும் கேழ்விப்பட இல்லை.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ உஎ உ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ சா உ

இந்தனுள் கேழ்வியான சேதி. நேத்திய தினம் ஒரு இங்கிலிசுக்காறன், பத்துப் பேர் சிப்பாய்களும், அவனுமாய், தயங்கம்பாடி கோட்டைக்கு வந்ததாகவும்,

இவடத்திலேயிருக்கிற பிறஞ்சுப் பிறிசோனேர்களை சென்னப்பட்டணத்துக்கு வரச்சொன்னதாகவும், நல்லது யெங்களுக்கு ஆறு மாசத்து சம்பளம் வரவேணும். குடுத்தால் வருகுறோமென்னு சொன்னதாகவும், போறதுக்கு சம்மதியாகவும் சொன்னார்கள். இதல்லாமல் சிறுது வெள்ளக்காறர் தீவுக்கோட்டைக்கு போனதாகவும், சிப்பாய்கள் சிறுது பேரை அவடத்துக்கு வழிக்குத் தாகாதாய் வைச்சதாகவும், ஆச்சாபுரத்திலே சிறுது சிப்பாய்கள் தாகாதாய் வச்சதாகவும், கொள்ளிடத்துக்கு இக்கரையிலே ........... சாவடியிலே சிறுது சிப்பாய்களைக் காவல் வச்சதாகவும், வழிகளில் ஒரு சுலுப்பும் நடக்கவில்லையென்னும் சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ உ அ உ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ எ உ

இந்தனாள் ஒரு சேதியும் கேழ்கப்பட யில்லை.

## சித்திரபானு ஸ்ரீ வையாசி மீ உகூ உ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ அ உ

இந்தனாள் கேழ்வியான சேதி. தஞ்சாஊருக்கும், நபாபு ம்மமுதலிகானுக்கும் சமாதான வார்த்தை நடக்குறதாகவும், ஆறணிக் கோட்டை விட்டு விடுகிறது நிமித்தியம் யெண்ணைப்போலயும் பத்து லஷசம் ரூபாய் குடுக்குறோமென்னு ருசா சொல்லுகிறதாகவும், ம்மமுதல்லிகான் சம்மதியாமல் விசேஷிச்சி கேட்குறதாகவும், ஆனால் சண்டைக்கு லெஷத்தாயிருக்கிறோம்[122]. எங்கள் சீமையிலே லூட்டி[123] பண்ணினால், ஆற்க்காடு சுபாவை[124] சேர்ந்த ருச்சியம், மயிசூர் சீமை மட்டும், லூட்டி பண்ணுவோமென்னும் சொல்லுகிறதாகவும், இந்தப்படி இவடத்திலே விசேஷம் நடக்கச்சே, சென்னப்பட்டணத்திலே கெவுனர் மேஸ்தர் பிக்கட்டு உடனே வைக்க, காகித பத்திரத்தின் வழியிலே அவர் சேந்ததுக்கு, நபாபும் பேரில் சமாதானமாகுறதாகவும், சமாதானமாய் தீந்தாகவும், இப்படியாக பத்து பதினஞ்சு நாளாய் சேதியாய்ச் சொல்லிக் கொண்டார்கள். அப்படியிருக்க நம்புட அக்கிரூரம் வெங்கிட்டருயர் அனுப்பிவிச்ச ஓலை, சாயங்காலம் வந்தது. அதிலே யெழுதியிருந்தது. ஙு– காலமே, திருவிடமருதூரண்டையிலே போகச்சே, சென்னப்பட்டணத்திலே யிருந்து தஞ்சாவூர் பிறதாபசிங்கு மகாருசாவுக்கு, வெகுதினுசுகளும் இருபது ஆளெடுத்துப் போறார்கள். மெத்த விலை உசந்ததாம். அதுவும் பல்லக்குல ஒரு பிராமணனும் ருயசம் பாப்பய்யன் குமாரனும், இவர்களெல்லாம் போறார்கள். கெவுனர் பிக்கட்டு முன்னிலையாய் தஞ்சாவூர் பேச்சு சமாதானமாச்சு. நபாபு ம்மமுதலிகானுக்கும் தாக்கீது பேச்சாம். அவடத்திலே கப்பல் சேதிலும் சுறுக்காய் யிருக்குதாம். இப்படியாக உள்ள சேதியாய் கேழ்விப்பட்டேன். வெகுமானமும், கெடியாரமும் பாத்தேன் யென்னு யெழுதியிருந்தது. இன்னம் அறிஞ்சு யெழுத வேணும். யிதல்லாமல் தயங்கம்பாடி கும்பனி கப்பல்லொண்ணு ஒரு பிடுத்திக்கிசுக்காறனுக்கு வித்து, பதிலுக்கு யொரு சுலுப்பும் குறைக்கு ரொக்கம் வாங்கிக் கொண்டதாகவும், அந்த கப்பலுக்கு அவன் தன் கொடி போடச்சே, தயங்கம்பாடி கோயில் பாதிரியும், குமுசலியேரும் போயிருந்ததாகவும், அப்போ மூணு தரம் பீரங்கி சுட்டார்கள்.

இந்தனுள் சாயங்காலம், வறளாம் தம்பி திருச்செல்வருயன் தங்கள் தமையன் குமாரத்திக்கு, நாளைக் காலமே முகூர்த்தம். தாங்கள் யெப்படியாகிலும் வரவேணும். நாங்கள் என்ன குத்தம் பண்ணினுலும் மனம் பொறுத்து வரவேணுமெண்ணு சொல்லியாக்கி வச்சான். நல்லது. அப்படியே வருகுருேம் யெண்ணு சொல்லி, இவன் தம் தமையன் வறளாம் நல்லவர். அவர்கள் வீட்டுக்கு எசமான் அவன் வந்து அழைச்சால், போவோமெண்ணு சொல்லி இருந்தோம். இதல்லாமல் ருத்திரி நாகப்பட்டணத்துக்கு போயிருந்த இங்கிறிசுக்காறர் மூணு பேரும் தயங்கம்பாடி கோட்டை வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வந்து சேர்ந்த காரியம் இங்கும், நாகப்பட்டணத்திலுமிருக்கிறப் பிறசோனரை அழைக்க வந்தார்களென்னும், அதுக்கு இவர்கள் சொல்லுகிறது. இதுவரைக்கும் யெங்களுக்கு சம்பளம் குடாமலே, யெப்படி வரச்சொன்னல் வருவோம். இதுவரைக்கும் சம்பளம் கொடுத்தால் வருவோமென்னு சொன்னதாகவும், அது கவையில்லே. கப்பல் வருகுது. வந்த உடனே அதிலே யெல்லாம் யேறவேணுமென்னும் சொல்லுகிறதாகவும், இவர்கள் பண்ணுகிறது பாத்தால், பிருஞ்சுக்காறருடைய இஸ்காதர் சீக்கிறத்துக்கு வந்ததாயிருக்க வேணும் போலே காணுது. இனிமேல் நடக்கிறது அறிய வேணும்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ ௨௰ ௨ புத்வாரம்: ௧௭௬௨ ஆண்டு சூனி ௴ ௬ ௨

இந்தனுள் காலமே நாகப்பட்டணத்திலேயிருந்து முசியே லேகு, தயங்கம்பாடி கோட்டைக்கு வந்ததாய் சொன்னுர்கள்.

## சித்திரபானு ௵ வையாசி ௴ ௨௰௧ ௨ குருவாரம்: ௧௭௬௨ ஆண்டு சூனி ௴ ௰ ௨

இந்தனுள் கேழ்வியான சேதி முன்னுலே, ஒரு மாசத்துக்கு முன்னுலே, தஞ்சாவூருர், தயங்கம்பாடி கும்பனியிலே, இருபத்தினலு ருத்தல் பீரங்கி, ரெண்டு. ஞகூர் அமில், கனகசபை முதலி முன்னிலையாக பேசி வாங்கி யிருந்தது. அதை நாகூர் வர்த்தகர் முன்னிலையாக பணம் செலுத்தி, பத்து நாளைக்கி முன்னதாக, கட்டு மரத்தும் பேரிலே யேத்தி, நாகூர் சேரி கரையோரமாய் அது யேத்திப் போக வந்த சிப்பாய்கள், நாற்பதன்பது பேர் போகச்சே, காரைக்கால் வழியாய் போகச்சே, இங்கிறிசுக்காறர் சிப்பாய்களை வந்து மறிச்சதாகவும், அதின்பேரிலே வசவப்ப செட்டி தம்பியும், பின்னையும் அங்கேயிருக்கிற பேரும், ஓசனை பண்ணி மறியல் விட்டதாகவும், அவர்கள் போய் நாகூர் சேந்ததாகவும், பீரங்கியும் நாகூர் துறை சேந்ததாகவும் தஞ்சாவூரிலே இருந்து காடி யெருதுகள் வந்து, பீரங்கி ஒண்ணுக்கு இருபத்து நாலு பேர் கட்டி இழுத்துப் போறதாகவும் சொன்னுர்கள். இதல்லாமல், தயங்கம்பாடியிலே வந்திருந்த இங்கிறிசுக்காறரிலே மூணு பேர் நாகப்பட்டணத்துக்கு இருபது பேர் சிப்பாய்கள் கூடப் போனுர்கள். அவர்கள் போனது இன்னத்துக்கு யென்னு தெரியவில்லே. இதல்லாமல் தயங்கம்பாடி கோட்டைக்குள்ளே, வறளாம் அண்ணன் மகனுக்கு, நேத்திய தினம் கலியாணமாய், ஊருகோலம் சம்பிறமாய் ஆனை ஒண்ணு, குதிரை பத்து, பதினஞ்சு; பல்லக்கு நாலு, குமாரவானம் பல்லக்கு மேலே சடைப்பூவுனலே அலங்கரிக்கப்பட்டதாய், யெகாந்த சேவை முஸ்தீது பண்ணதாகவும், அதின்பேரிலே அந்த வூர் பெரிய துபாசி, சின்ன தம்பியாப்

பிள்ளையென்குறவனுக்கு வறளாம் பேரிலே கொஞ்சம் ஆக்கிஷம் உண்டானதாம். அவர் யெடுத்து விட்டதின் பேரிலே, அந்த வூருர் போய் நீங்கள் யேகாந்த சேவை செய்யத் தேவையில்லையென்ருல், உங்களுக்குள்ளே நயினுத்தே முதலி மகன் பெண்சாதி செத்துப் போனதுக்கு, யேகாந்த சேவை கட்டியெடுத்தீர்களே, யெங்கேயாகிலும் பிணத்துக்கு யேகாந்த சேவை கட்டி யெடுத்துண்டா? நீங்கள் மாத்திரம் இப்போ புதுசாய் பிணத்துக்கு யேகாந்த சேவையாய் நடப்பிச்ச படியினுலே, மணத்துக்கு யேகாந்த சேவை கவையில்லையென்னு சொன்னதாகவும், யினிமேல் யிப்படி செய்யதக்கதில்லே யென்னு, உடம்படிக்கை சொல்லி, யேகாந்த சேவை முஸ்தீது பண்ணதாகவும், பிறப்பாடு சின்னதம்பியாப் பிள்ளையும் முத்தய்ய பிள்ளையும் யோசனை பண்ணிக்கொண்டு, கும்பனி சேவகனை யனுப்பி, மாப்புள்ளையும் பெண்ணும் பல்லக்கும் பேரிலே வச்சாப்போல, துரை உத்தரவுமில்லாமல், இப்படி உங்கள யார் பிறப்பிடச் சொன்னது? உங்களுக்கு துரையின் பேரிலே ஆணையிருக்குறது; பிறப்படக் கவையில்லே யென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே வறளாம் ரெம்ப ஆக்கிரப்பட்டு, ரெண்டு மூணு பேரை அழைச்சு போய் முத்தய்ய பிள்ளை அண்டைக்கு போய், யென்னதுக்கு மறிச்சாரென்று கேட்டதாகவும், நாம் அறியோம். துரை உத்தாரமெண்ணு சொன்னதாகவும், இப்படியிருக்கச்சே, துரை கலியாண வேடிக்கை பார்க்க பிறப்பட்டதாகவும், அப்போ வறளாமும் தாவீதும் போய் சொல்லிக்கொண்டதாகவும், நான் தான் சொன்னே னென்னும் இப்பிறம் வந்து, தன் துபாசி குருவப்ப நாய்க்கனை ஆர் மறிச்சதென்னு சேதியொண்ணு கேட்டதாகவும், இத்தனை சம்பவத்துடன் பிறப்பிடுகிறவன் உங்கள் யுத்திரவுல்லாமல் பிறப்படலாமா?வென்னும், துரை உத்தரவின் பேரிலே பிறப்படுங்கோளென்னும், சின்ன தம்பிப் பிள்ளை மறிக்கச் சொன்னுரென்று சொன்னதாகவும், மெய்தான். யிப்படி பிறப்படுகிற பேர்கள் சொல்லத் தேவை யில்லையாவெண்ணு சொல்லச்சே, குருவப்ப நாயக்கன் வழியிலே, அம்பது வராகன் குடுக்கப் பேசினதாகவும், அதின்பேரிலே துரை புறப்படச் சொல்லி உத்தாரங் குடுத்ததாகவும், அங்கே வரச்சே வறளாம் ரெம்ப ஆக்கிறத்துடன் அந்த சேவுகன் யெங்கே? துரை இருபத்தஞ்சு அடி அடிக்கச் சொன்னுரென்னு கூப்பிட்டுக் கொண்டு வந்து, ஊருகோலம் புறப்பட்டதாகவும், அப்போ வறளான் சொன்னது. கண்டதுக்கெல்லாம் பணங் கேழ்க்குறுர்களே? நீ முதலியார் செத்துப் போன பிற்பாடு, அவர் பெண்ஷாதிக்கும் தாவீதுக்கும் வியாச்சியப் பட்டதிலே, பேருக்கு ஆயிரத்தன்நூறு வராகன் விழுக்காடு, மூவாயிரம் வராகன் துரைக்கு கொடுத்திருக்குது. இந்த சின்ன தம்பி பிள்ளை யென்ன வாங்கியிருக்கிருர்? குருவப்ப நாயக்கன் வீடு யெங்கேயிருந்து கட்டினுன்? இருளப்ப பிள்ளை யெடம் வாங்கி யிருக்குறுன். இப்படியிருக்க, இவர்களை தொட்டு யென்ன நிறுவாகம்? இந்த ஊரிலே யில்லாவிட்டால் பின்னெரு ஊர் ஆகட்டும் யெண்ணு, இப்படியெல்லாம் சொன்னதாகவும், இப்படியெல்லாம் நடந்ததாய் சொன்னுர்கள். இந்த தயங்கம்பாடியிலே கப்பல் வரவில்லை. வற்த்தக சாதகமில்லை. ஒரு காரியமில்லை. பள்ளிக்கிருமம்[125], பத்துகிருமம்[126] நடக்கிறதிலே யென்ன வருகுதோ, தீர்வை குத்தகையிலே வருகிறதென்னமோ, இதை கோட்டை கும்பினிர் செலவு பண்ணிக் கொண்டு, சிலவுக்கு ரெம்ப தொகை கவையாயிருக்கிற வேளைக்கு, புதுச்சேரியிலே வந்திருக்கிற கிறிஸ்துவர்களுடைய வழக்குகளே சகல வியாபாரமும் அமுலுமாய்த் தீர்ந்தது. இதிலே வரப்பட்ட பிறையோசனத்திலே அகப்பட்டவர்கள், இன்ன விதத்திலேயாகிலும், இவர்களிட கையிலே சம்பாதிக்கிற எத்தினத்திலே இருக்குறுர்கள். இந்த கிறிஸ்துவருக்கு புதுச்சேரி பட்டணத்திலே சகல செனங்களும்

தெண்டம் பெரும்படி குடுத்தும், இருபது வருஷமாய் வற்த்தகமில்லாமல் பிழைப்பு கெட்டுப்போயும் மெலிந்து போச்சுது. பத்து வருஷமாய் யிவர்களுக்கு நல்ல வறத்து. இந்த பட்டணத்துக்கு விறையமில்லே. எறக்க வெச்சால், முந்தப்பி விச்சப்போர்கள், பாதிரிகள் வழியிலே, உலக்கை உறல் உள்பட கொண்டு வந்து சேத்துக் கொண்டார்கள். கனகருய முதலியின் சம்பாத்தியம், தானயப்ப முதலியார் சம்பாத்தியம், இவடத்தில் இவர் செத்தப் பிறப்பாடு, அந்தப் பணம் தாவீதென்கிறவன் கொண்ட பிள்ளேயாண்டானேயும், அவர் பெண்சாதியையும், இந்த சந்துக்கட்டிலே, வறளாம் சிறுது சுத்திலும், இப்படியெல்லாம் சேந்தபடியினுலே அதை வச்சுக்கொண்டு அடக்கமாயிருக்க கூடாமல், யென்னேறம் கும்பல் கூடுகிறது. நாட்டாமை யெண்ணும் இவனோட அவனோட இவன் போருன். ஆனுல் அவனே குடி குடிச்ச வெறியிலே போருன் சொன்ருன்னென்னும் இந்த வியாச்சியம் துரைகளுடனே சொல்லிகொண்டும், இப்படி திரியுகிருர்களென்னும், வெகு பேர் சொல்ல கேட்டு யெழுதி வச்சேன்.

## சித்திரபானு ௵ ஆனி மீ௳ க ௨ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ௳ யக ௨

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. ம்மது இசுப்புகான் கும்மந்தான் மனுஷர், நாகப்பட்டணம் அவடங்களிலே துப்பாக்கி, பீரங்கி, குண்டு, யீயம், கெந்தகம் இதுகளெல்லாம் வாங்கி, நாகூர் சேத்து, நாகூரிலேயிருந்து படகேத்தி அதிரும்பட்டணம் அந்தவிடங்களிலே எறக்கி, கரை வழியாய் கொண்டு போக யேத்தி, எத்தினம் பண்ணதாகவும், அதின்பேரிலே அமில் கனக சபை முதலியார் இவர் இங்கிலிசுக்காறர் மனுஷர் ஆச்சுதே? இவன் சத்துருவை சேர்ந்ததவனுச்சுதே யென்குறதாக யேத்த ஒட்டாமல் மறிச்சு, தஞ்சாவூர் ருசாவுக்கு யெழுதி யனுப்பிவிச்சதாகவும் அவர் அப்படி மறிக்க கவையில்லே. அவர்கள் நம்மை சேந்திருக்கிருர்கள். இன்னம் அவர்களுக்கு யென்ன வேணுமோ, அதை நம்முட அரமனேக்கு வேண்டியதாயிருந்தாலும் அவர்களுக்கு கொடுக்க சொல்லியும் தாக்கீது வந்தது. அப்படியே அவர்களுக்கு வேண்டியதெல்லாம் யேத்தி அனுப்பிவிக்குருர்களென்னும், தயங்கம்பாடியிலே ஒரு வெள்ளக்காறன் கையிலே, முன்னூறு நானூறு ரூபாயிருக்கும் யீயம் யிருந்து, யிருந்தது வாங்கி அனுப்பிவிச்சதாகவும், அவர் மனுஷன் மனுஷராய் இங்கேயிருக்குருர்கள். பறங்கிப்பேட்டைக்கும் கூடலூருக்கும் நூறு பாறம் கெந்தகத்துக்கு[127], மனுஷரை யனுப்பி யிருக்கிருர்களென்னும், இவர்களேயல்லாமல் ஒரு இங்கிலிசுக்காறனும் நூறு பேர்களும் வந்திருக்கிருர்கள். அவர்களும் இவன் மனுஷனென்னும், மதுரையிலே அவனண்டையிலிருந்து வந்தவன்னென்னும், அவனும் குண்டு, துப்பாக்கி, யீயம் கெந்தகம் இது முதலாகிய தினுசுகள் வாங்கி கொண்டு போக வந்ததாகவும் சொன்னுர்கள். ஆனுல் இவனும் ம்மமுதலிகானுக்குள்ள யாளுச்சுதே. அவனும் யிவ்விடத்துக்கு வராமல் இங்கிலிசுக்காறரை கூட்டிக்கொண்டு அவர்கள் வழியிலே தானே அப்படி யிருக்கவாகவும், மத்தும் குதிரையும் விசேஷிச்சு சேத்ததாகவும்; மருந்து, குண்டு, துப்பாக்கி, பீரங்கிகளும் விஸ்தாரமாய் சேர்க்குறதையும் பாத்தால், அய்துறுனேப் போல தானும் ஒரு தனிமனிதருக்குள் ஆள் தள்ளி செய்யப் போற சாடையாய் காணுது. இன்னம் இந்த சாடைக்கு நடக்குற கிறிகைகளிலே அறிய வேணும்.

## சித்திரபானு ௵ ஆனி ௴ உ ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி ௴ யஉ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. இங்கிறிசுக்காறர் வந்து இவடத்திலேயும், நாகப்பட்டணத்திலேயும் இருக்கிற பிறிசனேரை, சென்னப்பட்டணத்துக்கு வரச்சொல்லி அழைத்தார்களே, அதுக்குப் பிருஞ்சுகாரர் சொன்னது. எங்களுக்கு இதுவரையிலே அவர்கள் சரி போன யிடத்துக்கு போகச் சொன்னீர்களே, முசியே ரபோர் முதலான நாலஞ்சு பேருக்கு, இச்சைப்படி வற்த்தக வியாபாரம் செய்துக் கொள்ளச் சொல்லி கடுதாசி குடுத்தீர்களே, அப்படியிருக்க, நீங்கள் யெந்த ஞாயத்தினலே அழைக்கிறீர்களென்னு கேட்டதாகவும், இனிமேல் சம்பளங் கொடுக்கிறேம். நீங்கள் வராவிட்டால் கேழ்க்குறதில்லே யென்னும், கப்பல் வருகுது. அதிலே யேறவேணுமெண்ணு மேற்படி சொன்னதாகவும், ஆனல் ஞாயமில்லாமல், லோகத்திலே நடத்துறதை நடத்துங்கோளென்னு சொன்னதாகவும், இந்த சேதி சென்னப்பட்டணத்துக்கு யெழுதிப் போயிருக்குதென்னும், இவர்களே யேத்த கப்பல் நாகப்பட்டணத்துக்கு வந்ததாகவும், இதுக்கு உத்தாரம் யென்ன வருமோ, யென்ன நடக்குமோ தெரிய வேணும். இப்படியிருக்க நாகப்பட்டணத்திலேயிருந்த பிறிசனேரில் முசியே மிருயும் நாலஞ்சு ஒப்பிசியேரும் பிறப்பட்டு அவடம் விட்டு போய் விட்டதாகவும், இவடம் தயங்கம்பாடியிலே யிருந்த பேர்க்குள்ளே நாலஞ்சு ஒப்பிசேயரும், சில்லறைக்காறரும் வெளிப்பட்டு போய்விட்டதாகவும், இருக்கிற பேர்களும் யோசனே பண்ணியிருக்கிறதாகவும், பயணமாய் முஸ்தீது பண்ணுகிற பேரும் வியாதியாயிருக்கிறதென்னும் கட்டிலிலே படுத்தபடி பயணமாயிருக்கிற பேருமாயிருக்கிறதாகச் சொன்னர்கள்.

## சித்திரபானு ௵ ஆனி ௴ ங ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி ௴ ஙய ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. சிதம்பரம் குத்தகை[128] சாமாருயன், கிஷ்ணருயன் ஆற்காட்டுக்கு அழைச்சுப் போனவிடத்திலே, மீருசாய்பு பிடிச்சு வைச்சு, நல்ல அடி அடிச்சதாகவும், பிரியைச் சுத்தி அடிச்சதாகவும், விலங்கு போட்டு வைச்சிருக்குறதாகவும், அவனுக்கு குத்தகை ஆறு லஷ்சம் தர ரூபாய் ரெண்டு லஷ்சம், ஆக எட்டு லஷ்சத்துக்கு, ஒன்பது லஷ்சம் வசூல் பண்ணதாகவும், சீமையிலே மூணு லஷ்சம் இன்னம் பாக்கி இருக்குறதாகவும், ஆறு லஷ்சம் ரூபாய்க்கு சொன்னதாகவும், ஆனல் இவன் பண்ண அன்னிதம் மிதமில்லே. அதுக்குத்தக்கதாய் அவனுக்கு வருதுயென்னும் சென்னப்பட்ணத்திலே யிருந்து அவனேத் தூக்கிப் போட வேணுமெண்ணு சேதி வந்ததாகவும், விழுப்புறம் சற்தார் வெங்கிடப்பய்யனேயும், ஆற்காட்டுக்கு அழைப்போய் வச்சிருக்கிறதாகவும், விழுப்புறம் சீமை, ஆச்சாரியார் அய்யண சாஸ்திரியாருக்கு குடுத்தாகவும், மறுபடியும் அவன் தனக்குத் தானே சீமை, யாருதெண்ணு சீமையாருக்கு யெழுதினதாகவும், ஆனல் இவன் நடத்தின அன்னீதத்துக்கு, சுவாமி யென்ன ஆக்கினேகள் கட்டளேயிருவாரென்னும், யினிமேல் நடக்குற தறியவேணுமென்னும், சிதம்பரம் சீமை முதலாகிய சமருயன் குத்தகை சீமையிலே, பாக்கி பணம் மூணு லஷ்சம் ரூபாயும் அவன் கணக்குப்படிக்கு அது பண்ணுகுறதாகவும் சொன்னர்கள்.

இதல்லாமல், நாகப்பட்டணத்திலே ருமலிங்க பிள்ளை, நாற்பது அம்பது பேர் கூட்டநாட்டத்துடனே திரியுறதாகவும், இவர்களிலே அப்பாச்சி ருயன், பகவந்த ருயன், சோகி பண்டிதன், நரோபாஸ்கர் ருயன் இவர்கள் முதலாகிய பிருமணுள் இருபது பேருண்டெண்ணும்; துபாசித்தனம் இன்ஞசி முத்து யெண்ணுகிறவனுக்குயெண்ணும், நித்தம் ஒரு பயணப்படி குடுத்து வருகுருனென்னும், இவர்களிலே, ஒருத்தன் முரட்டியர்களென்றும், ஒருத்தன் நாஞப்பிள்ளையுடைய வக்கீலென்னும், ஒருத்தன் அய்துறுஞன் வக்கீலென்னும் இப்படி பின்னையும் ஆருர் வக்கீலென்னும் பேரிட்டு, இவர்களெல்லாம் தண்டுக்கு வந்திருக்கிறதாகவும், இவர்களை அழைத்துப்போய், முசே முதாவுக்கு இவர்கள் யின்ஞர் யின்ஞருடைய வக்கீலென்னு காண்பிக்கிறதும், பேசுகிறதும், நித்தம்யொரு தரம் இந்தக் கூட்டத்துடனே போறதும், பேசுகிறதும், வர்றதுமாயிருக்குதென்னு சொல்லிக்கொண்டார்கள். ஆஞல் யிவன் யென்ன பேசுகிருனே, அவன் யென்ன சொல்லுகிருனே இது தெரியாது.

ருமலிங்க பிள்ளை அண்டையிலே இருந்து காகிதமும் மனுஷரும் வந்திருக்கிருர்கள். கந்தப்ப முதலியாரண்டைக்கும், நமக்கும் போய் யெல்லாக் கவையும் வேணுமென்னும், ஆனி மீ௳ யஎ உ பயணமாயி, நாகப்பட்டணத்துக்கு போறதாயும், இது ரகசியமெண்ணு சின்ன பிள்ளை சொன்ஞன். வந்தவாசி திருவேங்கிடத்தா பிள்ளை, கந்தப்ப முதலியார், பின்னையும் சில்லறைப்பேர் ஒரு கிடங்கு தயங்கம்பாடி கோட்டைக்குள்ளே வாங்கி, தட்டுமுட்டுகள், பிடவை, சீலை, வெங்கலத் தட்டுமுட்டு போட்டிருக்குறதாகவும், அதிலே நேத்து ருத்திரி, திருடன் வந்து பூந்ததாகவும், ஒரு பெட்டியை கொளுத்தி, மெத்த பிடவைகளும், வெங்கலத் தட்டுமுட்டுகளை யெடுத்து போனதாகவும், அது திருவேங்கடத்தா பிள்ளை, முத்துப்பிள்ளை யிவர்கள் தட்டுமுட்டுலே சேதமெண்ணும், குறைப் பேறுது யொண்ணும் சேதமில்லையெண்ணும் சொன்ஞர்கள். அதை விசாரிக்குமிடத்தில், செம்பு–ரு; சோடுதவலை–உ; கொத்துக் கொட்டுக் கூடை–எ; சீப்படியா–க; துத்தாரி அங்கி–க; சரிகை மாதா பச்சே–ங; வெள்ளி சேற்–உயரு; வெள்ளியின் மேலே முலாம் பண்ணது–க; வெள்ளிக்கறண்டி–க; சில்லறையாக மூணு நாலு உருப்படி; பிடவை, இது தவிர ஆனந்த ருவு மூட்டையிலே போயிருக்குறது. அவன் வாக்கு மூலம் கேட்டு, அறிய வேண்டியது யென்னு யெழுதி, தாம் வெடுத்தலமி யண்டையிலே துபாசி ............ திருவேங்கடப் பிள்ளை தமையன் குமாரன், வெங்கடாசலப் பிள்ளை, அந்தக் கிடங்கிலே பாளையக்காறன் மனுஷனை கூட வச்சு எண்ண, சோதிச்சு யெழுதி சின்னயா பிள்ளை அண்டை யனுப்பிவிச்சார். அதை பாத்து யெழுதி வைச்சது.

இந்தனுள் ஏழு மணிக்கு, கீழே கோட்டையின் பேரிலே, மூணு பீரங்கி கேட்டது. அரை ஞழிகை பொறுத்து தயங்கம்பாடி கோட்டையிலே மூணு பீரங்கி போட்டார்கள். யேன் யெண்ணு விசாரிக்குமிடத்தில், கப்பல் கண்டு தெண்ணும், அது தென்மாற்க்கன் கப்பல் யெண்ணும் யிவர்கள் வருகுற சேதி முன்னுதாக வந்துதெண்ணும் சொன்ஞர்கள். பொழுது விடிஞ்சு பாத்தால் கடலின் பேரிலே கப்பலுங் காணேும். ஒரு சேதியுமில்லை. ஆஞல் கிழக்கே பீரங்கி சத்தம் கேட்டது. இனிமேல் நடக்குற சங்கதி யறிய வேண்டியது.

## சித்திரபானு ௵ ஆனி மீ௳ ச உ சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூனி மீ௳ யச உ

இந்தனுள் கேழ்விப்பட்டது. நாகப்பட்டணத்திலே முசியே முதாவுக்கு, ருமலிங்கப்பிள்ளை பேட்டிக்கு வந்தபோது, அவருக்கு வருகனும், அவர் பெண்சாதிக்கு

யொரு வயிர மோதிரமும் குடுத்தாகவும், அதுக்கு பதிலாக தன் முகாயா ஒரு பிறிசோனரை காண்பிக்க வேணுமென்னும், திருவேங்கிடத்தா பிள்ளை, தெற்கு வகுப்புப் பாளேக்காறன் கூடப் போயிருக்குருனே, அவனே யழைச்சுப்போய் கூடப் பேட்டி பண்ணிவிச்சு, பிற்பாடு, ரெண்டாயிரம் ரூபாய் கொடுக்க வேணுமென்னு சொன்னதாகவும், அதுக்கு தடையென்ன? உமக்கு சரிப்போனபடி செய்யுமென்னு சொன்னதாகவும், நல்லது. ஒருத்தன் கையிலே இறநூறு வருகனுக்கு யொரு வயிர மோதிரமிருக்குது. அதை வாங்கி கொடுக்க வேண்டுமென்னு சொல்லி, உமக்கு யிந்த காரைக்கால் சீர்மையும்[129], இன்னம் சிறுது தெற்கே இருக்கிற சீர்மைக்கும், பாளேக்காறத்தனம் நடக்குற கடுதாசி வாங்கிதாரேமென்னு சொன்னதாகவும், நல்லது. உமக்கு சரிப்போனபடி செய்யுமென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே, அந்த மோதிரத்தை வாங்கி, தான் தானே கொண்டு போய், பாளேயக்காறன் எதிரே நின்னு முசியே முதாவு பெண்சாதி கையிலே குடுத்தாகவும், எட்டு நாள் பொறுத்து மோதிரக்காறன், வருகன் வந்து கேட்டதாகவும், அப்போ பாளேயக்காறன் கேட்டதாகவும், அவன் யிப்போ யென் கையிலே யென்ன யிருக்குது? அங்கேயிருந்து அரிசி வந்தால் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அப்படி சீமை பாளேயக்காறத்தனம் நமக்கானல், யெந்தண்டையாகிலும் வாங்கித் தருகிறேனென்னு சொன்னதாகவும், பிற்பாடு திருவேங்கிடத்தா பிள்ளேயை மறிச்சு கேட்டதாகவும், அதின்பேரிலே அவனுக்கு நல்ல விசேஷம் சொல்லி, என்னுடனே சண்டைப்போட்டு, முசியே முதாவுடனே சொல்லிக் கொள்ளச் சொன்னதாகவும், அவன் அப்படியே சண்டை பண்ணி, முசியே முதாவுடனே போய் சொன்னதாகவும், திருவேங்கிடத்தா பிள்ளேயும் உடனே போனதாகவும், அவர் இதெல்லாம் கேட்டு உள்ளே போய், பெண்சாதியுடன் பேசியிருந்து, கையிலே யிருந்த மோதிரத்தை வாங்கி, யிப்பறம் வந்து, எறிஞ்சி தாறுமாறுமாய், திருவேங்கிடத்தா பிள்ளேயைப் பாத்து சொல்லி, யிப்படி யுள்ளயுன்னே ஆர் வாங்கி கொடுக்க சொன்னுர்? யெடுத்து போவென்னு சொல்லி உள்ளே போய்விட்டதகவும், இந்த மட்டிலே உடமைக்காறனே யெடுத்துக் கொள்ளச் சொல்லி, தாம் வீட்டுக்கு வந்து விட்டதாய் சொன்னுர்கள். இது இன்னம் விசாரித்து அறிய வேணும்.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ ரு உ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ யரு உ

இந்தனுள் கேழ்விப்பட்டது. ரெண்டு நாளேக்கு முன்னுதாக இருந்து, முசே மறுஷாம் சோல்தாது ரெண்டு பேர், சிறுது அபித்தேரும், பிறப்பட்டு ருத்திரியிலே போய் விட்டார்களென்று சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ சா உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ யசா உ

இந்தனுள் யெழுதப்பட்டது. நேத்தைய தினம் முசியே லத்தூறு வந்து பேசியிருந்து, இங்கிலிசுக்காறர் சென்னபட்டணத்துக்கு வறச் சொல்லி யிருக்கிற படியினலே, யிங்கே யிருக்க கூடாது. ஆகையால் தஞ்சாஊருக்குப் போறதுக்கு அவடத்துக்கு காகிதம் அனுப்பி, உத்தாரம் அழைப்பிக்க வேணுமென்னு சொன்னுன்.

## சித்திரபானு ௵ ஆனி ㎖ எ ௨ குருவாரம்: சதஎளசாயஉ ஆண்டு ஜூனி ㎖ யஎ ௨

வெற்றுப் பக்கம்.

## சித்திரபானு ௵ ஆனி ㎖ அ ௨ சுக்கிறவாரம்: சதஎளசாயஉ ஆண்டு ஜூனி ㎖ யஅ ௨

இந்தனாள் கேழ்விப்பட்டது. நாகப்பட்டணம், தயங்கம்பாடியிலேயிருந்து போய்விட்ட பிருஞ்சுக்காறர், தஞ்சாவூர் போய் சேந்ததாகவும், கோட்டைக்குள்ளே விடாமல், மாரியம்மன் கோவிலண்டை விடுதி விட்டு, அவடத்திலே யிவர்களெல்லோரும் சேருகுறதாகவும், அவர்களண்டையிலிருந்து பின்னும் யிவடத்திலே யிருக்குற பேருக்கு, வந்து விடச்சொல்லி காகிதம் வந்ததாகவும், சிறுது பேர் பயணமாயிருக்கிறதாகவும், இந்தச் சேதிகள் யிங்கே யிருந்த இங்கிலிசுக்காறர் யறிந்து, காரைக்காலுக்கு சொல்லியனுப்பி, அம்பது பேர் சிப்பாய்களை அழைப்பிச்சு, திருக்களாச்சேரி சாவடியிலே யனைவரையும் அடைச்சுவிட்டது முதலாக, வடக்குப் பாரிச வரைக்கும், தயங்கம்பாடியை சுத்தியிருக்கிற, பள்ளிகிருமத்துக்கு அப்புறம், தஞ்சாவூருர் கிருமத்திலேயும் ஆளையும் வைச்சு, காகித பத்திரம் கூடச் சோதிக்கிறதாகவும், தெற்கே ஆத்தோரம் முடிய வச்சிருக்கிறதாகவும், இந்தப்படி நாகப்பட்டணத்திலே வைச்சியிருக்கிறதாகவும், சொன்னார்கள். இதல்லாமல் அஸ்தமான சமைய வேளையிலே, சிதம்பரத்திலே இருந்த சிப்பாய்களிலே நாலு பேர், ரெண்டு கொடி பிடிச்சுக் கொண்டு வந்து, பிறையாத்திலே நெல்லு கடையிலிருக்கிற சாவடியிலே இறங்கினார்கள். நீங்களாறேன்னு விசாரிக்குமிடத்தில், காரைக்காலுக்குப் போறோமென்னு சொன்னார்கள். ருத்திரியெல்லாம் பாளையக்காற மனுஷர் வெகு சாக்கிறதையா யிருந்தார்கள்.

## சித்திரபானு ௵ ஆனி ㎖ கூ ௨ சனிவாரம்: சதஎளசாயஉ ஆண்டு ஜூனி ㎖ யகூ ௨

இந்தனாள் காலமே, சாமத்துக்கு நேத்தைய சாயங்காலம் வந்து, பிறையாத்து நெல்லுக்கடை சாவடியிலே இறங்கி இருந்த, சிப்பாய்கள் நூறு பேரும், காரைக்காலுக்குப் போய்விட்டார்கள். இதல்லாமல் முசியே ப்ரேஷம், பின்னையும் நாலஞ்சுபேர் வெள்ளக்காறரும், ருத்திரியே போய் விட்டதாய் சொன்னார்கள்.

இதல்லாமல் கேழ்விப்பட்டது. நாகப்பட்டணத்திலே சேக்தாவூதுட காகித பத்திரம், தஞ்சாவூர் ருசாவுக்குப் போய், அவர் காகிதமும் வந்து, சின்னப்பய்யன் முகாந்திரமாய் சிறுது பேச்சு மூச்சுகளும் நடந்துது. இவனனுப்பின வக்கீலும்[130] தஞ்சாவூரிலே வச்சிருந்தாங்களாமே, அவன் வழியிலே, முசியே முதாவுக்கு வெகுமதி அனுப்ப நடந்திருந்துது தாம் அந்த சேதி, முசியே திமோ கேட்டு, இருவருக்கும் தெரிவிச்சதாகவும், அதின்பேரிலே முசியே திமோ கோவைப்பிறகாசனை அழைச்சி யிப்படி தஞ்சாவூரண்டையிலே இருந்து வருகிற வெகுமதியை தடை பண்ணத் தக்கதாக, இவனை தொட்டு ஆக வேண்டிய தென்னவெண்ணு யெழுதி அனுப்பச் சொன்னதாகவும்,

அதின்பேரிலே இவனைத் தொட்டு ஒண்ணுமில்லை. பத்து பதினொண்ணு நாளிலே யினிமேல் தெரியுமெண்ணும், யென்யென்னமோ யெழுதினதாகவும், அதின்பேரிலே சின்னப்பையன் வக்கீலை அழைப்பிச்சு இப்படியா யிவன் சேதியென்று கேட்டதாகவும், யிப்படி யொருக்காலும் இருது. ஆர் யெழுதினது? அப்படி யிருந்தாலென்ன ஆக்கினை பண்ணுகிறது. இல்லாவிட்டால் யெழுதினவனை ஆக்கினை பண்ணுகிறது? யெண்ணு சொன்னதாகவும், இந்த காகிதத்தை காண்பிச்சதாகவும், அவன் யிதுக்கு நகலும் காகிதமும் அனுப்பினதாகவும், அதை சின்ன பய்யன் பிருஞ்சு படுத்தி, முசியே முதாவுக்கு கொடுத்து, அவனை யொரு ஆக்கின பண்ண வேணுமென்னு சொன்னதாகவும், அந்த ஷணமே யிந்த காகிதத்தை யெடுத்துக் கொண்டு நாகப்பட்டணம் துரையண்டைக்குப் போய் காண்பிச்சு, இப்படி இவனெப்படி யெழுதுவான்? நீர் இவனை யாக்கினை பண்ண வேணும். யில்லாவிட்டால் யெனக்கு உத்தாரங் குடும். நான் ஆக்கினை பண்ணுகிறேன் யென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே கோவைப் பிறகாசனை நாகப்பட்டணத்து துறையழைப்பிச்சு, ரெம்ப கோபம் பண்ணி, சிப்பாய்களைக் கூட்டி தெருக்கு தெரு காண்பிச்சி, இவனை உள்ளே விடத் தேவை யில்லை யெண்ணு, கோட்டைக்கு வெளியே துரத்தி விட்டதாகவும், அவன் வந்து நாகூரிலே இருக்குருனென்னும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ௵ ஆனி ௴ ய ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி ௴ உய ௳

இந்தனுள் கேழ்விப்பட்டது. நாகப்பட்டணத்துக்கு, சுக்கிற வாரனுள் சாயங்காலம், மேலாக யொரு கப்பல் கண்டதாகவும், கோட்டையிலே கொடிப் போட்டு, நச்சுக்குழல்[131] வச்சுப் பாற்த்ததாகவும், கொடி தெரியவில்லை யெண்ணும், அதிலே சாயங்காலமானதும், கோட்டை கொடியை வாங்கிப் போட்டதாகவும், ருத்திரி சாமத்துக்கு துறை வந்து வைச்சுப் பிடிச்சதாகவும், விடிஞ்சுப் பாத்தால் இங்கிலிசு கொடி கப்பலிலே போட்டிருந்ததாவும், அந்த கப்பல் பிறகு இங்கிலிசுக்காறரை யேத்த வந்ததெண்ணும், அதுக்கு இவர்கள் தகருறு சொல்லிக் கொண்டிருந்ததாகவும், அதின்பேரிலே அந்த ஊர் துரையுடனே பிறகு இங்கிலிசுக்காறர் பிறிசேனோர் ஓடிப்போருர்களே, இனிமேல் அவர்கள் போனுல் நீர் உத்திரவாதம் பண்ணுவீராண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே கோட்டையிலே வெளியே விடாமல் தாக்கீது பண்ணதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ௵ ஆனி ௴ யக ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி ௴ உக ௳

இந்தனுள் முசியே சின்ன லத்தூறு, தஞ்சாவூருக்குப் போறதுக்கு காகிதமனுப்பி, உத்தாரம் அழைப்பிக்கச் சொன்னதுக்கு சொக்கலிங்க நாயக்கருக்கு காகிதம் யெழுதி, சாமி அய்யங்காரையும் பயணமாய் அனுப்பிவிச்சோம்.

## சித்திரபானு ௵ ஆனி ௴ யஉ ௳ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி ௴ உஉ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. பிடுத்திக்கீசுகாறர் கப்பல் ஒண்ணு மொசம்பிக்குப் போய் காப்பிரிகளை யேத்திக்கொண்டு கோவைக்கு வரச்சே, மோரீசு பிடித்ததாகவும், அதிலே கடுதாசி போட்டதாகவும், அந்தக் காகித கட்டை மயிசூரிலே தண்டிலே யிருக்கிற

பிருஞ்சுக்காறருக்கு அனுப்பி விச்சதாகவும், அங்கேயிருக்கிற முசியே யிக்குலு ரெண்டு பேர் அறக்காறுகளை பயணம் பண்ணி, காகிதங்கட்டையும் கொடுத்து நாகப்பட்டணத்துக்கு அனுப்பி விச்சதாகவும், வரச்சே இங்கே முகத்துவாரத்தண்டையிலே, காவேரிப்பூம்பட்டணத்தண்டையிலே வரச்சே, இங்கிலிசுக்காறர் மனுஷர் சிப்பாய்கள் கையிலே அகப்பட்டதாகவும், கடுதாசி கட்டு வாங்கிக் கொண்டதாகவும், இது நடந்து அஞ்சு நாள் ஆச்சுதெண்ணு சொன்னார்கள். இது இன்னும் விசாரிச்சு அறிய வேண்டியது. இந்தக் கப்பலிலே முசியே முதாவு தம்பி வந்ததாகவும், இங்கிறிசுக்காறர் கையிலே யகப்பட்டதாகவும், தம் லங்கத்திலே யெழுதி யிருக்கிறதாகவும், அதினாலே அவர்களுக்கு ஒரு சேதியும் அகப்படாது. அவர்களுக்கு தெரியமாட்டாது யெண்ணுஞ் சொன்னார்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ யங ௨ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ உங ௨

இந்தனாள் கேழ்விப்பட்ட சேதி யென்னவென்றால், முன்னாலே சென்னப்பட்டணத்திலேயிருந்து மேஸ்தர் பிக்கட்டு அண்டையிலே வெகுமதியும், மேஸ்தர் தற்ரேபிரியும் வந்ததாகவும், தஞ்சாவூர் ருசாவுக்கும் நபாபு ம்மமுதலிகானுக்கும், யொரு பட்சமாய் சமாதானம் பண்ணி, தீத்துப் போடச்சொல்லி வந்ததாகச் சொன்னார்களே, அவர் வந்து பேசினவிடத்திலே, ருசா பணத்துக்கு சம்மதியாமல், இவர் யெந்த விதத்திலே பணங் கேழ்க்குறார். முன்னாலே, யுங்கள் முன்னிலையாக, சிறுது பணம் வாங்கிக்கொண்டு, ஒன்பது வருஷத்துக்கு துறுப்பாத்து[132] பணம் கவை யில்லையெண்ணு யெழுதிக் கொடுத்திருக்கதேல்லாமல் இவர் நிமித்தியத்திலே பிருஞ்சுக்காறருக்கும் நமக்கும் பகையாய் சந்தா சாய்பு சம்மதியுலேயும், இதுனளவிலே வெகுபணம் விரையமாயிருக்குது. அதன் சீட்டெழுதி வைத்திருக்கிறோம். வெகு சேதம் வந்திருக்குது. அப்படி யிருக்க ஆறணி கோட்டையிலே சிறுது பணம் வைச்சு, யெங்கள் பெரியவர்கள் பிருமணாளுக்கு தானம் பண்ணியிருந்து, கோட்டையை வாங்கிக் கொண்டு, கொள்ளையிட்டு, அதிலே நாலு கோடி திரவியமிருந்தது. அதை யெடுத்துக் கொண்டான். இந்த பணம் யெங்களுக்கு அவன் உத்தரிக்க வேணுமெண்ணு சொன்னதுக்கு, ஆறணி கோட்டையிலே ரெக்கமும், காசும், தட்டும் முட்டும் அன்பது னாயிரம் ரூபாயுக்குமிருந்துது பின்னையும் ஒண்ணுமே யில்லையென்னு சொன்னதாகவும், நாலு கோடி திரவியத்துக்கு கணக்குயிருக்குது. பாத்துக் கொள்ளுங்கோளென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே ருசாவுடனே யொரு உடன்படிக்கை பேசிக்கொண்டு, நபாபு மம்முதலிகானை கண்டு பேசி வருகிறேனென்னு திருச்சிருபள்ளிக்கு போனதாகவும், இந்த சேதிளெல்லாம் நபாபு ம்மமுதல்லிகானுடனே சொன்னதாகவும், அதுக்கு ரெம்ப கோபம் பண்ணி கோடி திரவியம் வாங்குவேண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே பேசி அறுபது லஷ்சம் ரூபாயும், திருச்சிருப்பள்ளியைச் சேர்ந்தது. திருக்காட்டுப்பள்ளியும் அதைக் சேர்ந்த சீமையும், நாகப்பட்டணத்தும் பேரிலே சண்டைக்கு போறதுக்கு; கோட்டை இவணண்டை பாரிசமாய் வழிவிடச் சொல்லியும், இப்படியானால் சமாதானம் யென்னும், மேஸ்தருக்கு பின்னையொரு இங்கிலிசுக்காறனும், கோனேரி பண்டிதனையும், செய்யீது மத்ததேன் யென்கிற துலுக்கரையும், நாற்பது அன்பது காடுது குதிரையும்[133], சிறுது சிப்பாய்களையும் கூட்டி அனுப்பிவிச்சதாகவும், அவர்கள் வரச்சே கண்டியூரண்டையிலே மறிச்சு, ருசாவுக்கு சேதி சொல்லி யனுப்பிவிச்சதாகவும், அதின்பேரிலே மஸ்தாலையும், சொக்கலிங்க

ஞயக்கனேயும், நீங்கள் உங்கள் ருணுவுமுடனே போய், அவர்களை அழைச்சு கொண்டு வாருங்களோன்னு அனுப்பிவிச்சதாகவும், அவர்கள் போய் அழைச்சு வந்து, ஆனந்தவல்லி அம்மன் கோவிலண்டையிலே வச்சு, சேதி சொல்லி அனுப்பிவிட்டதாவும் அவர்களுக்கு அன்னப்பர் வீடு, விடுதி விட்டதாகவும், பிற்பாடு ருசாவுடனே, முன்னெழுதப்பட்ட ம்மமுதலிகான் சொன்னப்படிக்கு, சொன்னதாகவும்; அதின்பேரிலே ருசா சொன்னது. நமக்குத் தான் நாலு கோடி வர வேணும். நாம் ஒரு காசு குடுக்கத் தக்கதில்லே யென்னுர். நாம் சண்டைக்கு லெஸ்தராய் இருக்கிறேம். அவர் கையிலே ஆன மட்டும், அவன் பாற்கட்டுமெண்ணும், நாங்கள் தானம் பண்ண கோட்டையை வாங்கிக் கொண்டு, பிருமணுளேயும் கொண்ணு போட்டால், நாம் செத்தலாகாதெண்ணும், இப்படியெல்லாம் சொல்லி, இவர்கள் நாலு பேரையும் விடுதி விட்ட வீட்டிலே தானே, சுத்தி சேவுகரை வச்சதாகவும், காடுது குதிரைகளேயும் சிப்பாய்களேயும், ஆனந்தவல்லி அம்மன் கோவிலண்டையிலே தானே வைச்சு, சேவுகரை வைச்சதாகவும், யிந்தச் சேதிக்கு, ரெண்டு காடுது குதிறைக்காறன், திருச்சிருப்பள்ளிக்கு போகச்சே, விசயங்களுக்கு சுபைதார்[134] ஆறுமுகத்தா பிள்ளே யென்கிறவனே யனுப்ப, அவர்களே வெட்டிப் போட்டு குதிரையை தஞ்சாவூருக்கு அனுப்பிவிச்சதாகவும்

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ யச ௨ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ உச ௨

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்திலே யிருக்கிற பிருஞ்சுக்காறர், இங்கிலிசுக்காறருடனே நாங்கள் வரத்தக்கதில்லே. நீங்கள் சொன்னபடி நடப்பியாத படியினுலே யெண்ணு சொல்லுகுறதாகவும் முன்னே பிறிசேனர் முதலாகிய பேர் தஞ்சாவூருக்கு போய்விட்ட சேதி, சென்னப்பட்டணத்துக்கு யெழுதினதின் பேரிலே, கெவுனர் பிக்கட்டு ரெம்ப கோபம் பண்ணி, யிப்பொழுது யிருக்கிற பேர்களே கூட கப்பலிலே யேத்தி அனுப்பச் சொல்லி வந்ததாகவும், அதின்பேரிலே எல்லாரையும் யேறச் சொல்லி சொல்லுகிறதாகவும், பலாத்காரமேயாகிலும் யேத்துவோமெண்ணு சொல்லுகிறதாகவும், அதின்பேரிலே சிறுது பேர் ஏறுகிருர்களென்னும், சிறுது பேர் கரை வழி வருகுறேமெண்ணு சொன்னதாகவும், முசே புலோவுக்கும் பர்செயுக்கும் வர கவை யில்லேயெண்ணு பதிலு வந்ததாகவும், முசியே முதாவும் மத்த யிருக்கிற பேர், இப்படி ஞாயமில்லாமல் இங்கிலிசுக்காறர் நடப்பிக்கிருர்கள். உங்கள் கோட்டையிலே யிருக்கிற படியினுலே நீங்களும் இதுக்கு அனுகூலமாய் பேச வேணுமெண்ணு சொன்னதாகவும், நல்லதெண்ணு அனுகூலமாய் தானே சொன்னதாகவும், பிற்ப்பாடு இங்கிலிசுக்காறர் வாற்த்தைக்கு அனுகூலமாய் பேசுகிறதாகவும், ஆகையால் அவன் பண்ணுகிற பலாத்காரமே செயிச்சு போறதாகவும், அங்கே யிருக்கிற பேரை யேத்திக்கொண்டு, தயங்கம்பாடியிலே யிருக்கிற பேரை யேத்த, நாளே நம்மண்டையிலே வருகுருர்களென்னும் சொன்னுர்கள். இதிலே யிந்த தயங்கம்பாடியிலே யிருக்கிற பிறிசேனரிலே, நித்தம் நாலு பேர் ரெண்டு பேராய் போயிக் கொண்டே யிருக்கிருர்கள். இதல்லாமல் சாயங்காலம் முசியே சின்ன லத்தூறு வந்து, இவடத்துக்கு இங்கிலிசுக்காறர் கப்பலிலே நாகப்பட்டணத்திலேயிருக்கிற பிறிசெனரை யேத்திக் கொண்டு, ரெண்டு நாளேயிலே வரும் போலே யிருக்குது. நான் இவடத்திலே யிருந்தால் யோடிப் போய்

வேண்டியதாய் வரும் என சங்கதி காகிதம் யனுப்பியிருக்கிறீர்களே, இன்னம் மறு உத்தாரம் வரயில்லையே, ஆகையால் நான்போறேன். யென் கையிலே ஒரு காகிதங் கொடுத்தால் கொண்டு போறேனென்னு சொன்னுன். நல்லது; இன்னு நாளையிலே உத்தாரம் வராவிட்டாலும், போக பயணமாயிருந்தால் அப்படியே தருகுறேமென்னு சொன்னேம். பின்னையும் லோகாபிரும்மாய் பேசிக்கொண்டிருக்கச்சே அவன் சொன்னது. கப்பல் யிந்த நாகப்பட்டணத்துக்கு வந்துதே, அந்த பிறகேத்து மோறிசு சேந்த பிறப்பாடு, இஸ்காதற் பிறப்படுமேயல்லாமல் அதுக்கு முன்னுதாக பிறப்பட்ட சாடையைக் காணேம். ஆனுல் யெப்படியும் இந்த சூலி–அகோஸ்து வந்து சேரவேணும். யிரேப்பு ருச்சியத்திலே நம்முடையவர்களெல்லாம் ரொம்ப பெலத்துடனே இருக்கிருர்கள். ஆனுல் பிருஞ்சுக்காறருடனே இஸ்பாங்கோல்காறரும், ரேணுத்துங்கிரியும் கூடியிருக்கிருர்கள். ஆகையால் பணத்துக்கு தாட்சியில்லை. இதல்லாமல் இஸ்பாங்கோல் ருசாவும் கப்பல் முஸ்தீது பண்ணி, கடலின் பேரிலே இங்கிறிசுக்காறர் துறைகளுடன்பட்ட அவர்கள் கப்பலெல்லாம் பிடிக்கச் சொன்னதாகவும், அதிலே வெகு கப்பல் பிடிப்பட்டதாகவும் சொன்னுன். இதல்லாமல் கொந்திஸ்தரின் ஒரு கப்பலிலே சீர்மைக்குப் போனதாகவும், சீமைக்கு சமீபத்திலே யிங்கிறிசு கப்பல்காறர் பிடிச்சுக்கொண்டதாகவும், உடனே ரெண்டு மணிநேரத்திலே இஸ்பாங்கோல் கப்பல்காறர் கையிலே இந்த ரெண்டு கப்பலும் அகப்பட்டதாக சொன்னுர்கள்.

### சித்திரபானு ௵ ஆனி ௴ யரு உ சுக்கிறவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூனி ௴ உரு உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. சிதம்பரத்திலே யிறங்கியிருந்த இங்கிறிசுக்காறர் தண்டியிலே, நாமுகப் பிள்ளையார் முகத்தை, ஒப்பிசாற் உடச்சுப் போட்ட னுள் முதல், நித்தம் நாலு ரெண்டு வெள்ளக்காறர் சாகுறுதாவும், தில்லையம்மன் கோவிலண்டையிலே சாரி குதிரைகள் கட்டியிருந்ததாகவும், அவடத்திலேயிருக்கிற மரங்களை வெட்டி, பறையர் குடிசைப் போட்டுக் கொண்டிருக்கிறதாகவும், அவர்களுக்கு ருத்திரியிலே பயங்கரமான ரூபமாய் காணப்படுகிறதாகவும், பயந்து ஒளிகிறதாகவும், ரெண்டு நாள் பீதி காணுகிறதும், சாகுறதும், இப்படி சிறுது பேர் செத்ததாகவும், அதின்பேரிலே பறையர், பொதிமாட்டுக்காறர் போய் விட்டதாகவும், சார குதிரை குமாந்தான், ஒருநாள் சாயங்காலம் அவடத்துக்கு வந்து, குதிரைகளை சாரிச்சுக் கொண்டிருக்கச்சே, பயங்கரமான ஒரு ரூபம் தோத்தினதாகவும் அதின்பேரிலே வீட்டிலே ஒரு போத்திலு சாருயங் கொண்டு வரச்சொல்லி குடிச்சதாகவும், உடனே செத்ததாகவும், இந்தமட்டும் வெள்ளக்காறரிலே செத்தபேர் நூத்தன்பது பேர் மட்டும் உண்டெண்ணும், இன்னம் தொண்ணூறு பேர் வியாதியாய் இருக்குறுர்களேண்ணும் ஆகையால் தண்டு வடக்கே வந்து விடச்சொல்லி, சேதி வந்திருக்குது யெண்ணும் சொன்னுர்கள். இதல்லாமல், சாமருயனை ஆற்க்காட்டுக்கு அழைச்சுக் கொண்டு போனுர்களே, போன விடத்திலே மீர்சையதுடனே பேசி, ஆனவரையிலே லஷத்து அன்பதுதாயிரம் றுபாய் செலுத்தி, அதுக்கு அம்பது ஞயிரம் ரூபாய்க்கு திருபூத்து வாங்கி குடுத்ததாகவும், வருகிற வருஷத்துக்கு எட்டு லஷ்சமாய் திருபூத்துக்கொண்டு சிறப்பாய் வருகுருணெண்ணும், விழுப்புறம் சீமை, அய்யன் சாஸ்திரி மூனு பங்கிலே குத்தகை வாங்கினதாகவும், வேங்கிட்ட அய்யர் ஆற்காட்டிலே கொண்டு போனவனை வெலங்கு போட்டு,

திருவாமத்தூரிலே காவல் பண்ணி, கணக்கு வழக்கு பாக்குறதாகவும், கிஷ்ணருயனே பணத்து நிமித்தியம் ஆற்க்காட்டிலே காவல் பண்ணி யிருக்கிறதாகவும் சொன்னார்கள். யினிமேல் நடக்குறது அறிய வேணும்.

## சித்திரபானு ௵ ஆனி ௴ யசா ௨ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஜூனி ௴ உசா ௨

இந்தனாள் கேழ்விப்பட்ட சேதி யென்னவென்றால், நேத்து ருத்திரி இறநூறு பேர் சிப்பாய்கள், இங்கிலுசுக்காறர் மனுஷர், தில்லையாடியிலிருந்து உதையத்துக்கு பயணமாய், காரைக்காலுக்குப் போய் விட்டதாய் சொன்னார்கள். இதல்லாமல் சாயங்காலம் நம்முடைய கிருமம் திருவேங்கிடபுரத்திலே யிருந்து தோட்டக்காறனும் பட்டணவனும், நல்லி ருசன் தம்பி பிருமணனும் ஒலை கொண்டு வந்தார்கள். இந்த பட்டணவன் ஒரு பிரம்பை பிடி வெட்டிப் போட்டிருக்குது. அதை கொண்டு வந்து நமக்கு அந்திருயம் வைச்சுது இது. ஒரு பறையன் தண்டிலேயிருந்து வந்தவன், ஒரு பணத்துக்கு வித்துப் போட்டான். அதை தங்களுக்கு கொண்டு வந்து கொடுத்தேனென்னு சொன்னான். ஆனால் இது பிருதாய் இருக்குமெண்ணு பாத்தோம். இதை வாங்கி, காச்சி பாக்குமிடத்திலே, சுத்த பொன் பிடியாயிருந்தது. அஞ்சே முக்காலே வீசம் விருக எடையும், எட்டரை மாத்துமாயிருந்தது. இது நம்முட கிருமத்திலேயிருந்து வந்தது. பட்டணவன் தரித்திரன். அவன் கையிலே வந்ததை நமக்கு கொடுக்க வேணுமெண்ணு, அதிலே ஆசைவையாமல், சுவாமியானவர் இந்தப் புத்தியைக் கொடுத்ததினாலே, இது நமக்கு சிரேஷ்டமா யிருக்கமாட்டாது. அதிகாரி சின்னய்யனோட கூட பிரம்புப்பிடியானது, பிரபஞ்ச வஸ்துவாகிய சுவர்ணமானபடியினாலே, இதுவரைக்கும் இருந்த கஷ்டகாலம் போய்விட்டது. இது முதல் சுப காலமெதுவும், இன்னு முதலாக நாளுக்கு நாள் ரொம்ப உசந்து நடந்து கொண்டு வரவே பண்ணும். கப்பலும் தப்பாமல் வரும். காரியங்களும் மென்மேலும் நடக்குமென்கிறதாய், யென் மனதிடனாக அச்சமில்லாமல் யெழுதி வச்சேன். மேற்படி பிள்ளையவர்கள் பாத்து கொண்டு வருகிற, அனுபோக சாஸ்திரபடிக்கு இது திட்டமான குறிப்பு யெண்ணு யெண்ணிக் கொண்டேன். அவர் சொன்னதும் சித்திரபானு வருஷம். முன்னே கூறு போய் பிறக்குற கிரகமாச்சு. ௴ சுபம் பிடிச்சு நடக்குமெண்ணு சொல்லி இருந்த படிக்கி, நடக்குமெண்ணு நிஷ்டகரிசையா யெண்ணிக்கொண்டேன். இண்ணு முதலாக நடக்குற அனுபோகம் பார்த்தறிய வேண்டியது.

## சித்திரபானு ௵ ஆனி ௴ யஎ ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஜூனி ௴ உஎ ௨

இந்தனாள் ஒரு சேதியும் கேழ்க்கப்பட யில்லை.

## சித்திரபானு ௵ ஆனி ௴ யஅ ௨ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஜூனி ௴ உஅ ௨

இந்தனாள் மத்தியானம், இங்கிலிசுக்காறர் கப்பல் நாகப்பட்டிணத்திலேயிருந்த பிறிசேனரை யேத்திக் கொண்டு, தயங்கம்பாடி வந்து சேந்தது. அதிலேயிருந்து இறங்கிய

இங்கிலிசுக்காறனும், இவடத்திலே வந்திருந்த குமுசேலியரும், இங்கே யிருக்கிற பேரை கப்பலின் மேலே யேறச் சொன்னதாகவும், சிறுது பேர் யேறச் சம்மதிச்சதாகவும், சிறுது பேர் கரை வழி போகச் சம்மதிச்சதாகவும், சிறுது பேர் வெளிப்பட்டு போக பதுங்கினதாகவும் இப்படியாகச் சொன்னுர்கள். ஆனுல் நாகப்பட்டணத்திலேயிருந்து யேறின பேர் யெத்தனே யெண்ணு சொன்னுல் ஒன்பது பேர். நாங்கள் குறைப்பேரிலே சிறுது பேர் கரை வழியாய் வருகுறேமெண்ணு சொன்னதாகவும், சிறுது பேர் வர சம்மதியில்லே யெண்ணு சொன்னதாகவும் சொன்னுர்கள். இதல்லாமல், நாகப்பட்டணத்திலே வந்தவாசி திருவேங்கடத்தா பிள்ளே சின்னப்பய்யன், காகிதம் போக்குவரத்து சோதிக்கச் சொல்லி, நாகப்பட்டணத்து துரை வழிக்கு வழி தாக்கீது பண்ணி சோதிக்கிறதாவும், இவர்கள் பேர் சொல்லி, மனுஷர் கூடப் போக்குவரத்து கூடாதெண்ணும் சொன்னுர்கள். ஆனுல் யிது யெதுனலே யெண்ணுல், அவர் யிந்த உத்தாரம் பண்ண வேண்டியது யெண்ணு விசாரிச்சால், நடந்த சேதிகள் விசிதமாய் யகப்படயில்லே. இங்கிறீசுக் குமுசாயிறுகள் போயிருந்தார்களே; அவர்கள், இவர்கள் சிறுது காரியம், முசியே முதாவினுடைய முன்னிலேயாக, மயிசூர் தண்டுக்கும், தஞ்சாவூருக்கும் காகித பத்திரம் நடத்துகிறதாகவும், பின்னேயும் இவர்களெல்லாரும் இத்தனே நாளும் யெங்கே யிருந்தார்கள்; இப்போ இந்த முதாவு வந்த பிறகு யிவர்களுக்கு வேறேயென்ன காரியமிருக்குது யென்னு இப்படி யேதோ சிறுது சங்கதி நடந்திருக்க வேணுமெண்ணு யெண்ணிக் கொண்டோம். விசாரிச்சு யெழுத வேண்டியது.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ யகூ ௨ மங்களவாரம்: சதளஎசாயஉ ஆண்டு சூனி மீ உகூ ௨

இந்தனுள் நம்முட திருவேங்கிடபுரத்துப் பட்டணவர் வியாச்சிய நிமித்தியமாய், நம்முட அப்பாவுவை, தயங்கம்பாடி தென்மாற்க்க பாதிரி ........... அவர்களண்டைக்கு அனுப்பிவிச்சோம். அவர் இந்த விசேஷமும், பின்னேயும் லோகாபிருமமாய் சிறுது வாற்த்தையும் பேசி யிருந்து, இங்கிறிசுக்காறருக்கு சென்னப்பட்டணத்திலே, வெள்ளிக்கிழமைக்கு யேழு சீமைக் கப்பல் வந்தது. அந்த சேதிக்கி அவடத்திலே இருந்து, நமக்கு காகிதமும் வந்தது. இங்கிறிசுக்காறரும் பிருஞ்சுக்காறரும் சீமையிலே ரேம்ப சேதமாய் இருக்கிற வரேலேயும், காயக்காறர் விஸ்தாரமாய், அவரவர்கள் பட்டணத்திலே இருக்கிருர்கள் . ரெண்டு பேருக்கும் பணத்தாஷிசி. இவர்கள் நாலுவிடத்திலே பவுஞ்சும் அவர்கள் நாலுவிடத்திலே பவுஞ்சும் இறங்கியிருக்கிருர்கள். இப்போ பிருஞ்சுக்காறருக்கு இசுபாங்கோலார்[135] சரக்கும் றெணுதஉங்கிறியும்[136] சேர்ந்திருக்கிருர்கள் யெண்ணும், புருஷோம் யென்கிறவர் இங்கிறீசுக்காரருக்கு சேர்ந்திருக்கிருர் யெண்ணும், சென்னப்பட்டணத்துக்கு செனறலாய், மேஸ்தர் திருப்பா என்னும் ஒரு புதியோர் வருகுருரென்னு யெழுதி இருந்தது. இந்த கடுதாசி, சனிக்கிழமையின் கணக்கு. அவடத்திலே பயணப்படுத்த ஒரு சீமைக் கப்பல் வந்தது. அதிலே வந்தாரே, இன்னம் பின்னுலே வருகிற கப்பலிலே வருகிருரோ தெரியாது யெண்ணு சொன்னதாக சொன்னுன். ஆனுல் இந்த சேதி இன்னும் விசாரிச்சு எழுத வேண்டியது. இதல்லாமல், தஞ்சாவூர் ருசா, பிராஞ்சு ருச்சியம், அதிலுள்ள சொல்தாது; இங்கிலிசு ருச்சியம், அதிலுள்ள சொல்தாது; உலாந்தரன் மாற்க்கம் புகுந்து, இசுபாங்கோல் எம்பருதோ இவர்கள் முதாலாகிய தொப்பிக்காறருடைய ருச்சியமும்

அவரவர்களுடையது இத்தனை காத வழியெண்ணும், அதிலிருக்கிற சொல்தாது இவ்வளவு பேரென்னும் யெழுதியனுப்பச் சொல்லி வந்துது. இந்த அலுவலிலே யிருக்குறேனென்னு சொல்லி வூறுகளைப் பாத்து யெழுதினதிலே சிறுது படிச்சுக் காண்பிச்சு சொன்னார்.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ உய உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு சூனி மீ ஙய உ

இந்தனாள் சாயங்காலம், வெளியே சாரிப் போனோம். அப்போ முசியே சின்ன லத்தூறு வீட்டுக்கு வந்து நாம் யில்லையெண்ணு சாமியுடனே சொன்னது. இங்கிறிசுக்காறர் கப்பலின் பேரிலே யேறச்சொல்லி சுறுக்குப் பண்ணுகிறார்கள். நான் கரை வழியே போகத்தக்கதாக அவர்கள் கையிலே பசுப்போற்து[137] வாங்கினேன். ருத்திரிக்கு நானும் பிள்ளையொருவருமாக வெளியே போகயிருக்கிறோம். பெரிய குதிரை கவையில்லை. பையனோடவுடங் குடுக்க வேணுமெண்ணு சொல்லி, அஸ்தமான மட்டும் யிருந்து நான் போறேன். யெப்படியும் குதிரை யனுப்பிவிக்க வேணுமெண்ணு ஒரு மனுஷனை வச்சுவிட்டுப் போனான். நாம் வந்தவுடனே இதுகளை கேட்டு, அந்த ஷணமே குதிரை முஸ்திப்பு பண்ணி, கட்டி அனுப்பிவிச்சோம்.

இன்னைய ருத்திரி, அஞ்சு நாழிகைக்கு மேல், பத்து நாழிகை மட்டும், நல்ல மழை பேஞ்சுது.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ உக உ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ க உ

இந்தனாள் மத்தியானத்தின் பேரிலே, தயங்கம்பாடித் துறைக்கு மேலே, ஒரு கப்பல் கண்டுது. அந்தக் கப்பல் இன்னாருதுனென்னு தெரியாமல், பாத்துக் கொண்டிருந்தார்கள். சாயங்காலம் துறை வந்து பிடிக்கச்சே, தென்மாற்க்கன் கப்பலெண்ணு சொன்னார்கள். ஆறு மணிக்கி துறை பிடிச்சு, பதினஞ்சு பீரங்கி போட்டான். பதிலுக்கு கோட்டையிலும் பதினஞ்சு பீரங்கி போட்டான். அந்தக் கப்பலிலே வட்டக் கொடி போட்டிருந்த படியினாலே துரைத்தனம் வந்துதென்னும், வந்தால் இப்படி பதினஞ்சு பீரங்கி போட்டபடியினாலே, முன்னே துரைத்தனம் பண்ணிப் போன குரூவென்கிறவர் வந்தார் யிப்படி அவர் வந்தால், பாற்க்காரர், வர்த்தகர் யெல்லாகுடியும் கெட்டுப்போம். ஏனெண்ணால், முன்னாலே அவர் துரைத்தனத்திலே அன்னீதம் றொம்ப செய்து, பத்துப் பணம் சம்பாதிச்சார். துரைத்தனம் மாறி போகச்சே பட்டணத்திலே உள்ள பேர் தாங்கள் குடுத்ததெல்லாம் யெழுதி வச்சு, மறிச்சு, குமுசலிலே சொல்லி வாங்கி, றொம்ப லச்சை பண்ணார்களாம். அவர் வந்தாலும் வருவாரெண்ணு, யெல்லாரும் யோசனையில் யிருக்குறார்களென்னு சொன்னார்கள். ஏழு மணிக்கு கட்டு மரத்திலே வந்த காகிதத்தில், சீமைக்கப்பல் தான், வங்காளத்துக்கு போறது. அவடத்து துரைத்தனம் வந்திருக்குதென்னு யெழுதி வந்துதுண்ணு சொன்னார்கள். பிறபாடு துரைத்தனம் வந்திருக்குதெண்ணு பிறமையிலே, முத்தையா பிள்ளை யெண்குறவர், பந்தல் மத்ததுக்குண்டானது வேணுமெண்ணும் துரை யண்டையிலே இன்னேரம் கிட்ட யிருக்குற, இஞ்சினிரை, பந்தல் போடுகுற பேர்

முதலியாகிய ஊழியர் தரவேணுமெண்ணும், அவரை மறிச்சி செய்ய வேண்டிய தென்னவெண்ணு கேட்டதாகவும், அதுவெல்லாம் கவை இல்லே. அலமுசுக்கு மாத்திரம் நாளேக்காலமே முஸ்தீது பண்ணிவை. காலமே நடக்க வேண்டியதுக்கு சொல்லியனுப்பி வைப்பாரென்னு சொன்னதாகவும் சொன்ஞர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ உஉ ௳ சுக்றவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூலி மீ உ ௳

இந்தனுள் காலமே, ஒன்பது மணிக்கு, தயங்கம்பாடியிலே நேத்தைய தினம் வந்த கப்பலிலே, வங்காளத்து துரைத்தனமாய் வந்தவர் இறங்கினுர். கோட்டையிலே வந்து துரை, குமுசலியர் முதலாகிய பேரெல்லாம் கண்டு வாற்த்தை சொல்லிக் கொண்டிருந்து, காகிதம் குடுத்து குமுசலிலே பாத்துக் கொண்டு, இந்த துறைக்கு கப்பல் வர யில்லேயென்னும், வங்காளத்திலே வற்த்தகம் செய்யுறதெண்ணும் சொல்லிக் கொண்டார்கள். எதுனுலேயெண்ணுல் முன்னுலே இந்தத் துறையிலே யிருந்து யேத்திப் போன சரக்கிலே, கிழிச்சலும், பிடுங்கலும், மக்கலும், ஓரப்பும் இப்படி நானுவிதமாய் பழுதாய் போனதாகவும், அதை சீமையிலே சுட்டுப்போட்டு வங்காளத்துக்கு போன கப்பலிலே வந்த சரக்கு வளமிகுந்ததாகவும், ரெம்ப நயமிகுந்ததாகவும், அதின்பேரிலே அந்தச் சரக்கு கப்பல் வருகுறதெண்ணும், இந்த கப்பலுக்கு முன்னுதாக ஒரு கப்பலும், சுலுப்பும் புறப்பட்டதெண்ணும், அது இன்னும் வந்து சேர யில்லேயெண்ணும் சொன்ஞர்கள்.

இதல்லாமல் இந்த கப்பலிலே, வங்காளத்துலே பேத்திரிக்கு துரைத்தனமாய் வந்திறங்கினவர். பிருஞ்சுக்காறனெண்ணும், முன்னாலே புதுச்சேரிக்கு வந்திருக்கிருணெண்ணும், சிறிது நாளாய் தென்மாற்க்கு கும்பினிரிலே சேவிக்கிருரெண்ணும் சொன்ஞர்கள். வந்தவன் கோட்டையிலே, முசியே பிஷாரைக் கண்டு, அப்பாலே அழைச்சுபோய் பேசியிருந்து, ஒரு காகிதங் கொடுத்தாகவும் அது அவன் அண்ணன் தம்பியோ கொடுத்தாகவும், அவன் சொன்னது. சீமையிலே இங்கிறிசுக்காறருக்கும் பிருஞ்சுக்காறருக்கும் ரெம்ப சண்டையென்றும், இங்கிறிசுக்காறர் பேச்சே ரெம்பத் பலத்தாயிருக்கிறதாவும், தான் வரச்சே பிருஞ்சுக் கப்பலே கண்டதில்லே யெண்ணும், ஆனுல் காவு தப்பி அஞ்சு நாளேக்கு சமீபத்திலே, பிருஞ்சுக் கப்பல் ஒண்ணும், சுலுப்பு ஒண்ணும் கண்டதேயல்லாமல், வாற்த்தை நடக்க வில்லேயெண்ணும், இப்படி சொன்னதாகவும் சொன்ஞர்கள். ஆனுல் இவடத்திலே யிருக்கிற நம்முடைய பிருஞ்சுக்காறரை, இந்த கப்பலிலே யெண்ண சேதி யெண்ணு கேட்டால் இதிலே ஒரு சேதியுமில்லே. இவர்களுக்குத் தெரியாது. ஆனுல் பிருஞ்சு ருசாவுக்கும் இவர்கள் ருச்சியத்துக்கும் இருபத்துனுலு நாளேய பயணமாகுமென்னும் இவர்களுக்கென்ன சேதி தெரியப் போகுது. ஆனுல் பிருஞ்சு ருசாவானவர் யென்னேரம் குடிக்கிறதும், சவாரி போறதும், வேட்டைக்கு போறதும் இது வேளேயிலே இருக்குருர். மறுபடியும், தாம் போற போதே, மயக்கத்திலே விழுந்தாரெண்ணும் சொல்லுகிருர்கள். இதுகளெல்லாம் இன்னம் அறிய வேணுமெண்ணும் சொன்ஞர்கள். இதல்லாமல், அக்கரையிலே கப்பல் இல்லேயெண்ணு சொல்லுகுருர்கள். இல்லாதபடியினுலே சீமைக்கு போகத் தக்கதில்லே. இவடத்துக்கு தான் வர வேணும். ஆனுல் மோரிசிலேயிருந்து பிறப்பட்ட சண்டைக் கப்பல் பதினுலும் வர வேணும். ஒரு வேளே முழுகிச்சோ, எந்த வேளேயிலே சென்னப்பட்டணத்துத் துறையிலே வந்து சேர கொண்டுருக்குதோ தெரியாதெண்ணும், யிதுலே அறிஞ்சுக் கொள்ளுங்கோளெண்ணும் சொன்ஞர்கள்.

இதல்லாமல் சீமையிலே, முசே திப்பிளிச்சி சுகமே இருக்குருரெண்ணும் ரெண்டாவது கலியாணம் ஆன பெண்சாதிக்கு, முன்னாலே ஒரு ஆண் பிள்ளை பிறந்துதே, இப்போ ஒரு ஆண் பிள்ளை பிறந்ததெண்ணும் ரெம்ப கிழவனாய் போய் விட்டாரென்றும், முசே புசி ஒரு ........... கலியாணம் பண்ணிணாரென்றும், ரெம்ப சிலவு பண்ணி வெகு பெருமை பண்ணிக் கொண்டு திரியுறாரென்றும், சொன்னார்கள். இது சேதிகளெல்லாம் நன்றாய் விசாரிச்சறிய வேணும்.

இதல்லாமல், நம்முடைய ஆசாரியவர்கள், ரெண்டாந்தாரமாய், வேலப்பிள்ளை ........... உபநயன முகூர்த்தம் சாமத்துக்கு ஆனபடியினாலே, நாமும் நம்முடவர்களுமாய் போயிருந்து முகூர்த்தமாய் போயிருந்து, முகூற்த்தம் நிறைவேறின பிற்ப்பாடு, பதினாலு ணாழிகைக்கு வீட்டுக்கு வந்தோம். ஆனால் இந்த வேளைக்கு தக்கதாய் உள்ள மட்டுக்கும் சம்பிறம்மாய் நடந்தது,

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ௳ உ௩ ௳ சனிவாரம்: சதஎளசாயஉ ஆண்டு சூலி மீ௳ ௩ ௳

இந்தனாள், சின்ன முதலியார் வளத்துக்கொண்ட பிள்ளையாண்டான் தாவீது, அவன் தம்பிக்கி கலியாணத்துக்கு, அவன் சித்தப்பன் சவுரிமுத்து முதலி வந்து, ரெம்ப உபசாரமாய் வரவேணுமெண்ணு பிருத்திச்சபடியினாலே, சாயங்காலம் போய், சத்து நேரம் இருந்து வந்து விட்டோம். ஆனால் இந்த கலியாணத்திலே நடந்த சங்கதிகளென்னவென்றால், முன்னாலே தாவீது, வறளாம் தயிரினாத முதலியார்[138], சவுரிமுத்து முதலி, மைத்தும் இருந்தவர்கள் ஒரு கக்ஷியும், சூரப்ப முதலியார் அவரைச் சேர்ந்தவர்கள் ஒரு கக்ஷியுமாக இருந்தார்களே, இவர்கள் ஒண்ணுக்கொண்ணு சமாதானம் போக வேணுமெண்ணும், தாவீது முதலான பேர்கள் போயி, பாதிரியாருடனே போய் சொல்லி கொண்டதாகவும், அவர் சூரப்ப முதலியை அழைப்பிச்சு சொன்னதாகவும், அவன் சம்மதிச்சதாகவும், பிற்பாடு சம்மதியாமல், சமாதானமில்லாமல் போனதாகவும், பிற்பாடு வறளாம் தாவீதும், சவுரி முத்து முதலியுமாக, சூரப்ப முதலி முதலாக பேருக்கு பாக்கு வைச்சதாகவும், அதின்பேரிலே யிவர்கள் கலியாணத்துக்குப் போனதாகவும், அதை வறளாம் அறிஞ்சு என் கலியாணத்துக்கு இந்த சமாதானமில்லாமல், உங்க கலியாணத்துக்கு சமாதானம் இருக்க வேண்டியதென்ன? யென்னை யல்லாமல் நீ யெப்படி பாக்கு வைப்பாய்? உனக்கு ஆர் பெரியதனம் குடுத்தது? யெண்ணு இதுனளவிலே ஒருத்தருக்கொருத்தர் விசேஷவித்து, வாசகங்கள் நடந்து வெகு, கூக்குரலாய்ச் சண்டையானதாகவும், இந்தச் சேதிகள் அறிஞ்சு பாதிரிகள் இவர்கள் எல்லாரையும் அழைச்சனுப்பி, ஏன் இப்படி யென்னேரம் லச்சை பண்ணி திரியுறீர்கள்? யெப்போவாகிலும் பெரியதனமுண்டா? அது ஒண்ணும் கவையில்லை. சீட்டு யெழுதி இருக்குதே அதையும் கிழிச்சுப் போட்டு, முன் பின் அந்தபடிக்கி நடந்து கொள்ளுகுறதே தீத்து, சமாதானம் பண்ணி, அந்த சீட்டை தயங்கம்பாடி துரையுடனே சொல்லி, கிழிச்சுப் போடுகுறோமெண்ணு சமாதானமாய் வந்து கலியாண முகுற்த்தம் அரை மணி நேரத்துக்கு கோயிலிலே முகுர்த்தமானதாகவும், இவர்கள் யிருதிறவரும் ஏகமாய் சாப்பிட்டதாகவும், பின்னையும் உள்ளுக்குள்ளே சண்டையும், திட்டும் ஒண்ணுக்கொண்ணு நடந்து கொண்டு யிருக்குறதாகவும் சொன்னார்கள்.

இதல்லாமல், கலியாணத்துக்கு போய் வரச்சே, நாம் வெடுத்தலுமி, மதாம் முறசேன் அவர்களண்டையிலே லோகாபிரும்மாய் பேசி இருந்து, அப்புறம் முசே சின்ன லத்தூறு வண்டைக்கு வந்தோம். அவர் வுடனே வாற்த்தை சொல்லி கொண்டிருக்கச்சே நீர் கேட்டபடி ரெண்டு குதிரை குடுத்தால், காஸ்தாரி கூட அனுப்பாமல், பின்னே ஒருத்தருக்குக் குடுக்கலாம் வெண்ணு கேட்டதுக்கு அவன் எனக்கு ரொம்ப ஆப்த்தன். ஆகையால் குடுத்தேன். நீர் மனம் பொறுத்துக் கொள்ளுமெண்ணு சொன்னுன். அங்கே அனுப்பிவிச்சுக் கொண்டு ஏழு மணிக்கி வீட்டுக்கு வந்தோம்.

## சித்திரபானு ௵ ஆனி ௴ உச ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி ௴ ச ௳

இந்தனுள் இங்கிறிசுக் கப்பலிலே, இவடத்திலே இருக்குற பிறிசேனர், சிறுது பேர் ஏறினவர்களை யேத்திக் கொண்டு, சென்னப்பட்டணத்திற்கு பயணமாய் போய் விட்டது. இதல்லாமல் இங்கிறிசுக்காறர் இவர்களை யேத்தி அனுப்ப, குமுசாராய் வந்தவன், நேத்தைய தினம் தயங்கம்பாடி விட்டு பயணமாய், சிதம்பரத்துக்கு போனுன். சிதம்பரத்திலே இருந்து தண்டு யிருக்குற பேர்களும் சென்னப்பட்டத்துக்கு போறதாய் சொன்னுர்கள்.

இதல்லாமல், காரைக்கால் குத்தகை வாங்கி யிருக்கிற வசப்ப செட்டி, ஆறு மாகாணமும்[139] இருபத்தைந்தாயிரம் வராகனுக்கும் எஞ்சிய அய்யாயிரம் வராகனுக்கும், மொத்தம் முப்பத்தியிரத்துக்கு யிருபத்தஞ்சு இருபத்தாறு காணுகுறது பிறையாசமாயிருக்குதெண்ணு சொன்னுர்கள். அப்படி இருக்க அவர் தம்பி சிவலிங்க செட்டி விசாரிப்பிலே, மேற்படி பிள்ளை அமுல் பண்ணி கொண்டு வரச்சே, தெளிந்துரை முத்தெண்கிற பிருமணன், சிறிது குடிகள் தன்னிடத்திலே, முப்பத்தைஞ்சு முப்பத்தாறு காண்பிக்கிறேனென்னு அமுல் பண்ணதாகவும், அப்படி யிருக்க காரைக்கால் கிறிஸ்தவர்கள் தோறணம் இருக்கச்சே, இவர்கள் ஓடிப் போய் விட்டார்கள். அப்போ குடிவாரமும் கொஞ்ச மேல்யாள் தானியமும் மாகாணத்திலே இருந்ததை, அந்தந்த குடிகள் எடுத்துக் கொண்டு போய் விட்டதாகவும், பிற்ப்பாடு இவர்கள், வந்து சேந்த பிற்ப்பாடு குடிகள் அழைப்பிச்சு, நீங்கள் எடுத்துப் போன தானியமெல்லாம் களத்திலே கொண்டு வந்துபோடுங்கோளென்னு சொன்னதாகவும், கணக்குப் பாத்து தீத்துக் கொண்டு, உங்களுடைய மேல்வாரத் தானியத்துக்கு பணமாகிலும், தானியமாகிலும் குடுத்து விடுகிறோம்யெண்ணு சொன்னதாகவும், இப்படி விசேஷம் நடப்பிச்சுக் கொண்டு இருக்கச்சே, சிதம்பரத்துக்கு யெழுதி அனுப்பி, னூறு பேர் சிப்பாய்களை அழைப்பிச்சுக் கொண்டு, எல்லாரையும் கூட வாற்த்தை சொல்லிக் கொண்டு இருக்கச்சே, சிப்பாய்களை விட்டு, சுத்தி சவுக்கு வச்சு, எல்லாரையும் பதிச்சம் பண்ணிக் கொண்டு, தன் மனசுப்படியே கணக்கு தீத்து யெழுதி, அவனவன் பேரிலே இவ்வளவு யெண்ணு குடுக்கச் சொல்லி, இப்படி போட்டுப் அப்படி காலை தூக்கியும் வைச்சுப் பண்ணதிலே, கையைப் பொதச்சு நிக்க வச்சு, முண்டிக்காலிலே வைச்சும், வெகு அரிக்கதைப் பண்ணி, முப்பதனுயிரம் வருகன் மட்டும் தாஸ்தாச்சு தெண்ணும், குடிகள் ரொம்ப நொந்து போனுர்கள்யெண்ணும் யிப்படியிருக்க இவ்வருஷ குத்தகை இவனுக்கே யிருக்குதெண்ணும், பின்னேயும் ரெண்டொருத்தர் பேசுகுறுர்களென்னும், இப்படி இருக்க

ணுலு ஞளைக்கி முன்னுதாக, நல்ல ஞள் கேட்டு குடிகளை அழைச்சனுப்பி, சாகுபடிக்கி தேங்காய் குடுத்ததாகவும், நல்லதென்னு வந்து யெல்லாரும் ஏகோபிச்சு பேசிக் கொண்டு, ஆறு மாகாணத்து குடிகளும் வரிசை வாங்கி ஓடிப் போனுர்கள். அவர்களிலே சிறுது பேர் தயங்கம்பாடியைச் சேர்ந்த கிருமத்தவர்களாயும், குறை பேரும் வந்து சேருகுறதாகவும் இது இது வரைக்கும் ஒரு படி தானியத்துள்ள விலே நாத்து விடபட்டதில்லே யெண்ணும் --------

சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ உரு உ சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூலி மீ ரு உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. தயங்கம்பாடியிலே இருந்த பிறசேனறிலும், அபித்தாமிலேயும் பதினஞ்சு பேர் வெளிப்பட்டதாகவும் அவர்களே அழைச்சுக் கொண்டு போக நாலு பேர் தவிர, அழைச்சுக் கொண்டு போனதாகவும், அவர்கள் திருக்கிளாச்சேரிக்கு சமீபத்தாலே, அந்த ஊரிலே சுத்தி சுத்திக் கொண்டு திரிஞ்சதாகவும், இதிலே பொழுது விடிய நேரமாச்சு. இவர்கள் மோசம் பண்ணுகுறுர்களென்னு அறிஞ்சு, ரெண்டு பேரை காயப்படுத்தி சூழ்ந்ததாகவும், அவர்கள் போய் தானே, யிருக்குற சிப்பாய்களுடனே சொன்னதாகவும், அவர்கள் வந்ததாகவும், நாலு பேர் அகப்பட்டதாகவும், குறை பேர், பதினொரு பேரும் யிப்போ விட்டதாகவும், அகப்பட நாலு பேரையும் காரைக்காலுக்கு கொண்டு போனதாகவும் சொன்ஞர்கள்.

இதல்லாமல் எட்டு ஞளைக்கி முன்னுதாக, கற்ணபுரம் எல்லப்ப செட்டி வந்து சொன்னது. தனக்கும் திருப்பள்ளி செட்டிக்கும் வியாச்சயமும் முன்ஞலே புதுச்சேரியிலே தீந்துதே, அந்தபடிக்கி, எனக்குள்ள பங்குபடிக்கும் பங்கிட்டு குடுக்கச் சொல்லி, சதிரங்கபட்டணத்திலே அந்த துரையுடனே சொல்லச் சொல்லி கொண்டேன். அவர் திருப்பளி செட்டியை அழைச்சனுப்பி, தாக்கீது பண்ணி, பேருக்கு ஒரு மத்திஷ்டன் குறிச்சுக் கொண்டு, ஆஸ்தி யெழுதி வைச்சு, பங்கிட்டுக் கொள்ளச் சொல்லி உத்தாரம் பண்ணிஞர். அதின்பேரிலே அவர் மத்திஷ்டர் வெங்கிடாசல செட்டியும், என் மத்திஷ்டர் நிலச்சால்பு வெங்கிடாசல பிள்ளேயும் குறிச்சு கொண்டோம். நீங்கள் அவருக்கு ஒரு ஓலே குடுக்க வேணுமென்னு சொன்ஞர். வழி சங்கடப்பட்டதிஞலே குடுக்கக்கூடாது. ஆஞல் நம்முட கணக்குத் தீர வேணுமே, முன்ஞலே அவர்களுக்கும் நமக்கும் சிறுது பணம் சித்தம்பல செட்டி கையிலே பொது கூட்டி இருந்தது கூட, அவர்கள் எடுத்துக் கொண்டிருக்குருர்கள். எங்கள் பணத்துக்கு வகை சொல்லி அல்லவா, நீங்கள் பங்கிட்டுக் கொள்ளவேணுமெண்ணு கேட்டதுக்கு, உங்களுக்கு குடுத்துத் தான் நாங்கள் பங்கிட்டுத் கொள்கிறேம். அது வரைக்கும் வற்த்தகர் வசத்திலே பொதுக்கட்டி வைக்கிறேம் என்னு சொன்ஞர். இந்த விசேஷம் நடக்கச்சே சின்னயா பிள்ளே கூட இருந்தார்.

சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ உசா உ மங்களவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூலி மீ சா உ

இந்தனுள்

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ உஎ உ புத்வாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூலி மீ எ உ

இந்தனுள் சின்னய்யா பிள்ளை சொன்ன சேதி. நாகப்பட்டணத்திலேயிருந்து திருவேங்கடத்தா பிள்ளை சொல்லி அனுப்பிவிச்சார். நீங்கள் பின்னே ஒண்ணும் யோசனே பண்ணத் தேவையில்லை. கப்பல் பத்து னுளேயிலே வரும். சலங்குக்கும் எத்தனம் நடந்திருக்குது. இந்த விசேஷம் ஆருடனே சொல்லத் தேவையில்லையெண்ணும் சொல்லி அனுப்பிவிச்சார். இதெல்லாமல் மய்சூர் தண்டும் நெருங்கி வரும். அவடத்திலேயிருந்து, ரெண்டு சோடா வந்தது. முசியே முதாவும், மபியும், கோவையிலேயே இருந்து, இக்குலு தண்டுடனே வந்து சேர்ந்தான். ரமலிங்க பிள்ளை............ வீட்டுலே இருக்குருன். அவன் காரியத்திலே யெழுத்துப் பிடவை முன்னூறு வராகனுக்கு வாங்கி, முசே முதாவுக்கு குடுத்தாகவும், அந்தப் பிடவைகாரனுக்கு பணம் சேராதபடியினுலே சுறுக்குப் பண்ணதாகவும், அதின் பேரிலே அவனே அழைச்சுக் கொண்டு, முசே முதா வண்டை வந்து இந்தப்பிடவை யினத்துக்கு இதை குடுத்து விட்டால், நல்ல பிடவை ஒரு விடத்திலே இருக்குது, வாங்கி வருகுறேனென்னு சொன்னதாகவும், அதுக்கு மெது பண்ணதாகவும் அதிலே அவன் ............ யை மறிச்சு, பணம் குடுத்தாலாச்சுது, இல்லாவிட்டால் குமுசலுக்கு பித்திசாம் போடுவோமென்னு சொன்னதாகவும், அவனுக்கும் எவ்வளவோ பணம் குடுத்து, குறைக்கு உடம்படிக்கை சொன்னதாகவும், இப்படி அவடத்துச் சேதிகளென்னு சொன்னுர்.

## சித்திரபானு ஸ்ரீ ஆனி மீ உஅ உ குருவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூலி மீ அ உ

இந்தனுள் தயங்கம்பாடி கோட்டையிலே பிருஞ்சுக்காறர் பிறிசனரிலே ஒருவன் வடக்கே போய் ஒரு துலுக்கச்சியை அழைச்சுக் கொண்டு வந்திருந்தான். அவன் பேர் முசே திழவா வென்கிறது. ஒபிசால் ............ இருக்குற வீட்டிலே செத்துப் போனுன். அந்தச் சேதி தயங்கம்பாடித் துரைக்கு சொல்லி அனுப்பிவிச்சார். அவர் இதுக்கு யென்னம் நியாதி நடப்பிக்க வேணுமோ அந்தப்படி நடப்பிக்குறேமென்னு சொல்லி அனுப்பினதாகவும், வரிசை தம்பூறு எடுக்க, சொல்தாதுகளெல்லாம் அனுப்பிவிக்க வேணுமெண்ணு சொன்னதாகவும், அந்தப்படியே சாயங்காலம், யென்னக்காறர் வரிசை தர்புறுடனே ............ வந்து, பிருஞ்சுக்காறர் இவடத்திலே இருக்குற பேரெல்லாம் கூட்டி சம்பிறமத்துடனே எடுத்துப்போய், ............ யிலே பொதச்சு பாக்கிகளே சுட்டு ............ இவனுடைய தட்டுகளெல்லாம் முத்திருச்சி, முசே தொலராம் கணக்கு யெழுதிக் கொண்டார். இனிமேல் தயங்கம்பாடி சக்கிறத்தாரை வைச்சுக் கொண்டு, ஏலத்திலே போட்டு, வித்து, இவன் செத்து எடுத்த சிலவு கணக்குகளே, இவன் யெழுதி வைச்ச திஸ்தமிந்துப்படிக்கி[140] நடப்பிக்குறதாய் தீந்ததாகவும் சொன்னுர்கள்.

இதல்லாமல், சாருயக்கிடங்கு சேவுகன், றங்கப்ப னுய்க்கர் வந்து சொன்னது. ரெண்டு மூணு மாசத்துக்கு முன்னே, வெங்கிட்டாம் பேட்டை சீமையிலே வெங்கிடாபதி பிள்ளை இருக்குருர். அவரண்டை இப்போ போனேன். அவர் சொன்னது. திருப்பள்ளி கிருஷ்ண பிள்ளையும் நாமும், சீட்டெழுதி குடுத்து, நயினுத்தே முதலி கையிலே, கிடங்குச் சம்மதிக்கு பணம் வாங்கி யிருந்தோமே அந்த பணத்துக்கு அவனிடம், கிறையமாக

பணத்திலே திருப்பள்ளி கிருஷ்ண பிள்ளை கையிலே சேந்து வந்துதே, அந்த பணத்தை நயினுத்தே முதலியை வாங்கிக் கொள்ளும் யெண்ணு சொன்னதுக்கு, நான் கையிலே வாங்கிக் கொள்ளுகுறேணென்னு சொன்ஞர். பிற்பாடு ரெண்டு மூணு தரம், பணமாஞல் திருப்பள்ளி கிருஷ்ண பிள்ளை கையிலே சேந்து போச்சு. நீர் வாங்கிக் கொள்ளுமென்ணு சொன்னேனே. நாஞக ஒரு காசும் வாங்கினதில்லே. யென்ன குடுத்திருக்குறோம்? இன்னம் யென்ன குடுக்க வேணுமோ? இதுகளெல்லாம் யறிஞ்சு கேக்குற பேச்சாச்சுதென்ணும் தம்முட பெண்சாதிகளேயும், பிள்ளேகளேயும், அவர் குடியிருக்குற வீட்டு மனுஷர் ரெண்டு பேரையும் வச்சுக் கொண்டு, இப்படியெல்லாம் சொன்ஞரென்னும், பிறையாத்திலே சாமிஞத செட்டி வீட்டுக்கு தென்னண்டை வீட்டு திண்ணேயிலே, நம்முடனே கூட கோபால கிருஷ்ணய்யன் தமையன், சீத்தாருமய்யன், அவன் தமையன் பிள்ளே, ........... வெங்கிட்டருயர், பொன்னம்பல பிள்ளே, இவர்கள் யிருக்கச்சே சொன்ஞன். இப்படி யிருக்க, முன்ஞலே நயினுத்தை முதலி மகன், திருப்பள்ளி கிருஷ்ணண் இவடத்திலே இருக்கச்சே, தனக்கு சீட்டுப்படிக்கி பணம் வர வேணுமென்னு கேட்டதாகவும், சேந்து போயிருக்குது, நான் அத்தாஷ்சி குடுத்திருக்குறேன், அதைக் கொண்டு வாரேண்ணு, இவனுக்கும் அவனுக்கும் தகருறு நடந்ததாகவும், அப்போ இவன், அவனுக்கும் பணம் குடுக்க வேண்டியது, கிடக்கிலே யெண்ணுப்போலே சொன்ஞர்கள். நாலு ஞள் போய் பாத்துக் கொள்வோமெண்ணு சொல்லி யிருந்தோம். கணக்கும் போய் விட்டுடும் யெண்ணும் சொல்லி இருந்தான். கணக்கு மறந்ததே போய் போச்சுதே, இந்தப் பணம் இவடத்திலே பொறுப்பு பண்ணுகுற விதமே மெதுவாகுது. அந்த நாளு, நமக்கு அப்போ இருந்த சங்கதிகள் தெரிஞ்சுருந்தால் அப்போவே கண்டிப்பாய் உத்தாரம் சொல்லுவோம்.

இதல்லாமல் கேழ்விப்பட்டது. இக்கிலு தண்டிலே இருந்து காகிதம் ரெண்டு பேர் சோடாக்காறர் கொண்டு வந்ததாகவும், அது ........... வழியிலே சிப்பாய்கள் கையிலே அகப்பட்டதாகவும், அவர்களே சோதிச்சு, மெழுகு சீலேயிலே கட்டியிருந்த காகித கட்டை வாங்கிக் கொண்டு, அவர்கள் ரெண்டு பேரையும், காரைக்காலிலே கொண்டு போய் காவல் பண்ணதாகவும், அந்தக் கடுதாசிக் கட்டை தயங்கம்பாடியிலே இருக்கிற இங்கிறீசுக்காறர், முசே பிசார் கையிலே குடுத்தாகவும், அவன் மெழுகு சீலேயை பிரிச்சு, காகிதத்து மேல் விலாசத்தைப் பாத்து, அந்த கடுதாசி சென்னப்பட்டணத்துக்கு கெவுனேர் பிக்கட்டண்டையில் அனுப்பிவிச்சதாகவும், அதிலே தமிழ்க் கடுதாசி நாலு மூணு இருந்ததாகவும் சொன்ஞர்கள்.

இதல்லாமல், பதினஞ்சு இருபது நாளேக்கு முன்னுதாக, மோறிசு விட்டுப் பிறப்பிட்ட இஸ்காதரிலேயிருந்து ஒரு சுலுப்பு வந்ததாகவும், அந்த சுலுப்பு திருக்கணுமலே அந்தப் பிருந்தியங்களிலே இங்கிறிசு கப்பல்காறர் கையிலே யகப்பட்டதாகவும், அதிலே வந்த சேதி தெரிஞ்சுக் கொண்டு, அவடமிருந்த கப்பல்கள் இவடத்துக்கு வந்து விட்டதாகவும், அந்த சுலுப்பு சென்னப்பட்டணங் கொண்டு போய் அதிலே யிருந்த பேரை யெறக்கி, கோட்டையிலே காவல் பண்ணி, சேதி வெளிக்கி வருமல் பத்திரப்படுத்தினதாகவும் சொன்ஞர்கள். இந்த சேதி இன்னம் விசாரிச்சறிய வேண்டியது.

## சித்திரபானு ஷு ஆனி மீ௳ உகூ ௳ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ கூ ௳

இந்தனுள் எழுதப்பட்டது. முன் பத்து ஞளைக்கு முன்னே சக்குலுனுயன் அவர்கள் குமாரன், சின்னுயன் கருப்பூரிலே இருந்து அனுப்பிவிச்ச காகிதம் ஒரு பிருமணன் கொண்டு வந்தான். அந்த காகிதத்திலே யெழுதி இருந்தது. உடையார் பாளையத்தைச் சேந்த கருப்பூரிலே இருக்குறதாகவும், உடையார் பாளையத்துக்கு போக வேணுமென்னும், பல்லக்கு முஸ்தீது வுண்டென்னும், முஸ்தீதுடனே மனுஷன் கூட அஞ்சாறு துப்பாக்கியும், மருந்தும், குண்டும் அனுப்பிவிக்கச் சொல்லி யெழுதி இருந்தது. அந்தபடிக்கி முஸ்தீது பண்ணி யனுப்பி விட்டோமென்னுல், இவடத்திலே இங்கிறிசுக்காறர் மேற்படி உடனே துப்பாக்கி, மருந்து, குண்டும் பேச்சு பேச யாகாது. பல்லக்கு முஸ்தீது பண்ணி அனுப்புவோமென்னு, அண்ணுசாமி பல்லக்கும், தந்தபல்லக்கும் கொம்பும் அதினுடனே முஸ்தீதும் எடுத்து, பல்லக்கு பிடி முஸ்தீது பண்ணி, பல்லக்குகாறர் மத்தும் யனுப்பிவிக்க, இல்லாது பண்ணி, இவ்விடத்திலே வழிகளிலே இங்கிறிசுக்காறர், பாற்காரர் சுத்திலே இருக்குறபடியினுலேயும், இன்னேரம் நம்முடதென்னு வெளியே போகக் கூடாதபடியினுலேயும், இதுனுலே ஒரு பொல்லாப்பு வந்தால், நல்லதல்ல யென்கிறதிலே நிறுத்திப் போட்டோம். உக்கா முஸ்தீதுடனே குடுத்து, அன்சாரியையும் மேற்படி காகிதம் குடுத்து, வந்த பிருமணுள் பயணம் பண்ணி அனுப்பி விச்சோம்.

## சித்திரபானு ஷு ஆனி மீ௳ நயய ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ ய ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. தஞ்சாவூருருக்கும், ம்மமுதலி, இங்கிறீசுக்காறருக்கும் சாமாதானமானதாகவும், இருபது லட்சமாய் தீந்துதெண்ணும் சொன்னுர்கள். இதுவும் இன்னம் விசாரிச்சறிய வேண்டியது. இதல்லாமல், சிதம்பரத்திலேயிருக்கிற இங்கிறிசுக்காறர் தண்டெல்லாம் பயணம் முஸ்தீது பண்ணுகிறதாகவும், சென்னப்பட்டணத்துக்குப் போகுதெண்ணு திருச்சிராப்பள்ளிக்குப் போய் அங்கேயிருந்து யெவ்விடத்துக்கோ போறதாகவும் சொன்னுர்கள்.

இதல்லாமல், சென்னப்பட்டத்திலே யிருந்து வந்த மூட்டைக்காறன் சொன்னது. இங்கிறிசுக் கப்பல் யேழு கப்பல் தெற்கே வழிகளிலே யிருந்தது. கோவளத்து வோரமாய் யிருக்கவும், அப்போ பிருஞ்சுக்காறர் இஸ்காதர் வந்ததாகவும் அவர்களுக்கும் இவர்களுக்கும் சண்டையானதாகவும், அந்த சண்டையிலே பிருஞ்சுக்காறர் கையிலே இங்கிறிசுக் கப்பல் ரெண்டு அகப்பட்டதாகவும், மூணு கப்பல் முழுகிப் போனதாகவும், ரெண்டு கப்பல் வந்து சென்னப்பட்டணம் சேந்ததாகவும், இப்போ சென்னப்பட்டண துறையிலே நாலஞ்சு கப்பலிருக்கிறதாகவும், அதுக்கு மருந்து, குண்டு, இறனூறு பேர் சொல்தாதுகள் யேத்துகுறதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஷு ஆனி மீ௳ நயக ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ யக ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்திலே கோவைப் பிறகாசன், யென்னமோ பிருஞ்சுக்காறர் வருகுற சேதிகளென்னமோ சொன்னதாகவும்,

அதின்பேரிலே, அங்கே இருக்கிற இங்கிறிசுக்காறன் போய் நாகப்பட்டணத்து துரையிடத்திலே சொல்லச்சே, காவலிலே கட்டி வச்சு, இருநூறு முன்னூறு அடி அடிச்சதாகவும் சொன்னூர்கள். இது விசாரிக்குமிடத்திலே மெய்யாயிருக்கவில்லே. பொய்யாச்சுது.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி *மீ* க ௳ சோமவாரம்: சதஎளசாயஉ ஆண்டு சூலி *மீ* யஉ ௳

இந்தனுள் கேழ்விப்பட்டது. முன்னுலே, வேலூர் மிறுத்தசல்லிகானே ஆற்காட்டிலே காவல் பண்ணி இருந்துதே, அவன் ஒரு மாசத்துக்கு முன்னதாக, காவலாயிருந்த யெறநூறு பேர் சிப்பாய்களாய் யிருந்தவர்களேக்கூட அழைச்சுக்கொண்டு ஓடிப்போய் விட்டதாகவும், சாத்துக் கடை போய் சேர்ந்து அங்கேயிருந்து அய்துருனன் யண்டைக்கு போய் அவனே கண்டு வாற்த்தை சொல்லி, அங்கேயிருந்து பசாலத்து சங்கண்டைக்கு போனதாகவும், அவடத்திலே சிறுது ருசகாரியம் யெத்தனம் பண்ணிக் கொண்டு வருகிறதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி *மீ* உ ௳ மங்களவாரம்: சதஎளசாயஉ ஆண்டு சூலி *மீ* யங ௳

இந்தனுள் கேழ்விப்பட்டது. முன்னுலே விழுப்புரம் அமில் பண்ணிண, வெங்கிட்டருயனே, ஆற்க்காட்டுக்கு அழைச்சுக் கொண்டு போனயிடத்திலே, கோபம் பண்ணி, காலுக்கு விலங்கு போட்டு, அய்யண சாஸ்திரியாரை அமில் குடுத்து, அவன் வசம் பண்ணி, ஆன வரைக்கும் நிலுவை, லஷசத்து முப்பது ஞயிரம் ரூபாயும், அறுவு பண்ணி அனுப்பச் சொல்லி அனுப்பிவிச்சதாகவும், அய்யன் சாஸ்திரி வந்து விழுப்புறத்துக்கு அமில் பண்ணுகிறதாகவும், வெங்கிட்டருயனே திருவாமத்தூர் கோவிலிலே விலங்குடனே காவல் பண்ணி இருக்கிறதாகவும், அவன் வீடு வாசலெல்லாம் முத்திரிச்சு பத்திரம் பண்ணதாகவும், இதுவரைக்கும் எண்ணுயிரம் மாடு மட்டும், எண்பதினுயிரம் கல நெல்லு[141] மட்டும் அகப்பட்டதாகவும், இன்னம் யிடங்களிலே நாற்ப்பது நாயிரம் கல நெல்லு மட்டும் சேருமெண்ணும், இந்த லஷசத்து முப்பது நாயிரம் ரூபாய் தரும் அய்வேசு உண்டெண்ணும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி *மீ* ங ௳ புத்வாரம்: சதஎளசாயஉ ஆண்டு சூலி *மீ* யச ௳

இந்தனுள் கேழ்விப்பட்டது. சாமருயன் ஆற்க்காட்டுக்குப் போனவிடத்திலே, நிலுவை ஆனி *மீ* வரைக்கும் கொடுக்க வேண்டியது லட்சத்து அம்பதுனுயிரம் றூபாய்க்கு, அறுபதினுயிரம் றூபாய் திருபூத்து குடுத்ததாகவும், குறை தொண்ணூராயிரம் ரூபாய்க்கு புது முதலிலே முன்னுதாக செலுத்த உடன்படிக்கை பண்ணிக்கொண்டு, அவடம் விட்டுப் பிறப்பட்டு, திருவதி வந்து, வெங்கிட்டாம்பேட்டை வந்து, பறங்கிப்பேட்டை வந்து, சிதம்பரம் வந்து சேந்ததாக சொன்னுர்கள்.

### சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ௳ ச ௳ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ யரு ௳

இந்தனுள் சாயங்காலம், தயங்கம்பாடியிலே யிருந்த முசே பிறனியெனும், முசே யிக்கிலும், ஒருத்தனும், வங்காளத்துக்கு போறதுக்கு, தென்மாற்க்கன் கப்பலிலே யேறினதாகவும், வங்காளத்து தென்மாற்க்க பேத்திரிக்கு துரையாய் வந்தவர், எறக்கின வெள்ளிப் பொட்டியை யேத்திக் கொண்டு, இவடத்துக்கு வற்த்தகத்துக்கு சிறுது சாருயம் எறக்கிப் போட்டு அதுக்கு சரக்குக் கட்டி வைக்கச் சொல்லி திட்டம் பண்ணி, கப்பலுக்கு யேறிப் போனதாகவும், கப்பலிலே ஏறினவுடனே, ஒன்பது பீரங்கி போட்டதாகவும் சொன்னுர்கள்.

### சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ௳ ரு ௳ சுக்றவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ யசா ௳

இந்தனுள், தயங்கம்பாடிக்கி வந்திருந்த சீமைக் கப்பல், பயணமாய் வங்காளத்துக்கு போய் விட்டுது.

### சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ௳ சா ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ யஎ ௳

இந்தனுள் சாயங்காலம், முசே சின்ன லத்தூறு சென்னபட்டணத்துக்கு பயணமாய் போறதாய் சொன்னுன். இதல்லாமல் வெங்கிட்டருயன் வந்து சொன்னது. நாகப்பட்டணத்திலே இருந்து, சோணுசலப் பிள்ளே மனுஷர் இவடத்திலே வந்து, பிறுஞ்சு தெரிந்த துபாசியாய் வேணுமெண்ணு திரிகுறதாய், கோபால கிஷ்ணய்யன் தமையன் சொன்னதாய்ச் சொன்னுன்.

### சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ௳ எ ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ யஅ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. சிதம்பரத்திலே யிருந்த இங்கிறிசுக்காறர் பவுஞ்செல்லாம், சென்னப்பட்டணத்துக்கு போய் விட்டதாகவும், னூறு பேர் சொல்தாதுகளும், னூறு பேர் சிப்பாய்களும் இருக்கிறதாகவும் சொன்னுர்கள். இவர்கள் எதுக்காக இப்போ எல்லாருக்கும் சென்னப்பட்டணம் போய் சேருகிருர்களெண்ணு விசாரிச்சால், வடக்கேயிருந்து பசலாத்து சங்கு, சலாபத்து சங்கு, அவிடத்துக்கு கலாப நிமித்தம், இங்கிறிசுக்காறர் ம்மமுதலி பவுஞ்சுடனேயும் வந்ததாகவும், வரச்சொல்லி வந்ததாகவும் அது நிமித்தியம் சிறுது பவுஞ்சு அனுப்பிவிக்கத்தக்கதாக அழைப்பிச்சதாகவும் சொன்னுர்கள். இது விசாரிச்சறிய வேண்டியது.

### சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ௳ அ ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ யசூ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. சென்னப்பட்டணத்திலே யெட்டொன்பது கப்பலிருக்கிறதெண்ணும், அந்த கப்பலுகளே சண்டைக்கு தயாறு பண்ணுகிறதாவும்,

சொல்தாதுகள் போதாமல், சிப்பாய்கள் கூட யேத்துறதாகவும், அந்தக் கப்பல் யெங்கே போகுதெண்ணுல், இஸ்பாங்கோல்காறர் கப்பலும் காலி[142]யிலிருந்து மண்ணிலாவுக்கு[143] வந்துதெண்ணும், பிருஞ்சுக்காறர் கப்பல் மணிலா பிடிச்சு, சிலவுகளுக்கு பணம் வாங்கிக் கொண்டு, வங்காளத்துக்கு வர்றதாகவும், இப்படி ஞனுவிதமாய் சொல்லுகிருர்களெண்ணும், அது நிமித்தியத்திலே மண்ணிலாவுக்கு போக முஸ்தீது பண்ணுகிருர்களெண்ணும் சொல்லுகிருர்கள். ஆனல் அவர்களுக்கு யெந்த சேதி வந்துருக்குதோ, எந்தக் கபுறு அகப்பட்டுதோ, யென்னத்துக்காக முஸ்தீது பண்ணுகிருர்களோ, யெங்கே போகுதோ, அறிய வேணுமெண்ணு சொன்ஞர்கள்.

இதல்லாமல், அய்யாசாமியும், பிருஞ்சுப் படிப்பு சொல்லுகுற வாத்தியார் தாவீதும் சொன்னது. சோணுசலப் பிள்ளே பிருஞ்சு தெரிஞ்சவனும் ஒருத்தன், கெட்டிக்காறனும் யொருவனே அனுப்பச் சொல்லி, அப்பு முதலியார் குமாரன், அழகப்ப முதலிக்கு யெழுதி வந்ததாகவும், அவர் மரியாதையாய் வந்தழைச்சதாகவும் தமக்கு தெரியாதெண்ணு சொன்னதாகவும், வீரத்தி மலேயப்பனே அழைச்சதாகவும், அவனும் எனக்கு கூடாது யெண்ணு, தன்னே கேழ்க்க சொன்னதாகவும், தன்னே வந்தழைச்சதாகவும், தனக்கு கூடாதுயெண்ணு சொன்னதாகவும் சொன்ஞன். இதல்லாமல், தயங்கம்பாடியிலே ............ கோயிலண்டையிலே வாசப்படிக்கி மேடை போட்டு, மேஸ்ந்தனும் போட்டு, முஸ்தீதிச்சுது. ருத்திரிக்கி, நம்முட புதுச்சேரி கிறிஸ்துவர் கூடிப், படிக்க வாருர்களெண்ணு சொன்ஞர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ கூ ௳ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ உய ௳

இந்தஞள் கேழ்விப்பட்ட சேதி. நேத்து ருத்திரி, தயங்கம்பாடி கோட்டையிலே ............ கோயிலண்டையிலே வாசாப்பு படிச்ச விடத்திலே துரை முதலாகிய பேரு எல்லாரும் வந்து பாத்தார்கள். இந்த வாசப்புக்கு போன அலீப்பு வாசர் படியெண்ணு சொன்ஞர்கள். இந்த வாசர் படிக்கி வேஷம் போட்டு ஆடின பேர். ருசா வறளாம் தம்பி. பரஞ்சோதி முதல் மந்திரி. ஞானப்பிரகாச முதலி மகன் ரெண்டாவது மந்திரி. அறுளானந்தன் மூணுவது மந்திரி. மீன் சவுரி மகன் மலேயப்பன் நாலாவது மந்திரி. வறளாம் மகன் தெவாபேன் படைத்தலேவன். மீன் சவுரி மகன் சாந்து சேருவைக்காறன். இன்ஞசி முத்து சேவுகர். அஞ்சு பேர் குடிகள், சவுருயன், அலியவறளாம் தம்பி, தெய்வியொம் சில்லற வேஷம் பத்து பதினஞ்சு பேரென்னும், இந்த சிலவெல்லாம் வறளாம் தாவீது, பின்னும் சிறுது பேர் வீதத்திலே போட்டார்களெண்ணும் சொன்ஞர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ ய ௳ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ உக ௳

இந்தஞள் வடக்கே போயிருந்த கந்தன், றங்கன் வந்து சேந்தார்கள். அவன் சொன்னது. சென்னப்பட்டணத்துக்கு அஞ்சாறு கப்பல் வந்ததாகவும், அதிலே காயக்காறர் எறக்கினதாகவும், மறுபடியும் அந்த கப்பலும், பின்னும் இருக்கிற கப்பலும், சண்டைக்கு தயாறு பண்ணி வெள்ளக்காறர் போதாமல், சிப்பாய்களே கூட

யேத்தினதாகவும், அவடத்திலே சொல்லுகிறது. மணிலாவுக்கு போகுதெண்ணும், பின்னேயும் சிப்பாய்கள் சேவுகத்துக்கு வைய்க்குறுர்களேண்ணும், மைத்தும் கில்லாவிலே இருக்கிற பேரை அழைப்பிச்சுக் கொண்டதாகவும், யேன்னென்றுல் வசாலது சங்கு சண்டையிலே இருந்து இறு நூறு பேர் அவர்கள் வந்து பறங்கிமலேயிலே[144] இறங்கி இருக்கிறதாவும், வடக்கே சண்டையிருக்கிறதாவும், அது நிமித்தியம் ரெண்டாயிரம் வெள்ளக்காறரும், சிப்பாய்களும், மருந்து, குண்டு அனுப்பிவிக்கச் சொல்லியும், சீமைப் பணம் விஸ்தாரமாய் வரவேணும். இதுவரைக்கும் ம்மமுதலிகான் பணமே செலுத்தயில்லே. அந்த பணமெல்லாம் அனுப்பிவிக்கவும் இல்லாவிட்டால் ம்மமுதலிகானே அனுப்பிவிக்கிறது. சீமைச் சொல்லி உங்களுக்கு கவையில்லே. உங்களுக்கு ம்மமுதலிகான் குடுக்க வேண்டிய பணம், கணக்கிலுள்ள பிரகாரம், தாம் கொடுத்து விடுகுறேமெண்ணும் இப்படியாக யெழுதி வந்ததாகவும், அது னிமித்தியத்திலே வடக்கே பவுஞ்சு அனுப்பிறதுக்கு, அங்கங்கே யிருக்கிற பேர்களே அழைப்பிச்சதாகவும், சொல்லிக் கொண்டார்களெண்ணு சொன்னுன். இதல்லாமல், எசமானுக்கும் மலேப்பாளேயக்காறருக்கும் சண்டை நடக்குறதாக சொன்னுர்களெண்ணும் சொன்னுன். முத்து வெங்கிட்டரும ரெட்டியார் ரண்டைக்கு போயிருந்தோம். அவர் ஞலு நாள் கழிச்சு இங்கேயிருந்து ஆற்காட்டுக்கு போறேன் வருமட்டும் இரு. வந்தவுடனே குடுத்தனுப்பிவிக்கிறேன். இல்லாவிட்டால் பத்து ஞள் பொருத்து வருகுறேன்னு சொன்னதாகவும் சொன்னுன். இதல்லாமல், னச்சினப்பிள்ளே தம்முட பேத்தியை ஞகலிங்கத்துக்கு குடுக்கப் பரியம் போட்டதாகவும், அவடத்திலே ஆருக்கும் சம்மதி இல்லே. முறமையல்லாத ஞாயமும் செய்குருரெண்ணு சொல்லிக் கொண்டதாகவும் சொன்னுன்.

## சித்திரபானு ஹூ ஆடி மீ௳ யக உ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ உஉ உ

இந்தஞள் சக்குலுஞன் குமாரன், சின்னுன் அண்டையிலே இருந்து காகிதம் கொண்டுக் கொண்டு ஒரு பிருமணண் வந்தார். அதிலே எழுதி இருந்தது. பல்லக்கு முஸ்தீதுக்கு, சகலாத்து, கீளகாயு அறுபட்டு, மெத்தை, தலேகாணி, சுசீணிக்குதுகள் விலேக்கு வாங்கி அனுப்பிவிக்கச் சொல்லி யெழுதி இருந்தது. வந்த பிருமணர் முப்பது வராகன் குடுத்தார். இது வாங்குறதுக்கு காகிதத்திலே எழுத இல்லே யெண்ணு, முப்பது வராகனும் வெச்சார். நல்லது. உம்முட கையிலே இருக்கட்டுமெண்ணு அவர்கள் கையிலிலே தானே குடுத்து வைச்சோம்.

## சித்திரபானு ஹூ ஆடி மீ௳ யஉ உ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு சூலி மீ௳ உங உ

இந்தஞள், பதினெட்டாம் பெருக்கானப் படியிலே, சகல செனங்களும் காவேரி வாய்க்கால் கரையிலே போய் ஸ்நானம் பண்ணுர்கள். பின்னே யொண்ணும் விந்தையாய் கேழ்க்கப்பட இல்லே.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ யங உ சனிவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு சூலி மீ உச உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. காரைக்கால் குத்தகை, இங்கிறிசுக்காரர் மடுத்தென் பறங்கி[145] பாதிரி இவன் வழியாக, வருஷம் ஒண்ணுக்கு இருபத்தையாயிரம் வராகனுகை வாங்கினதாகவும், அதுக்கு அமிலுக்கு கோனேரியாப் பிள்ளேயும் அவன் துபாசி திருவேங்கிடமென்கிறவனும் போனதாகவும், பிறப்பாடு கண்ணறியாபிள்ளே யென்றவர் சென்னபட்டணத்துக்குப் போய் பாதிரியார்களண்டை சொல்லி, இந்த குத்தகை வாங்கப் பிறேத்தனும் பண்ண வர, அவரைத் தானே அமிலுக்கு அனுப்பி விச்சதெனவும், அவர் காரைக்காலுக்கு போய் சேந்து அமில் பண்ணுகுறதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உக உ ஆதிவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ க உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. சிதம்பரத்திலே யிருந்து போன இங்கிறிசுக்காறர். கூடலூர் போய் சேந்து, அவிடத்திலே யிருந்து, நாலு கப்பலின் பேரிலே யேறிப் போனதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உஉ உ சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ உ உ

இந்தனுள் காலமே கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்துக்கு சீமைக் கப்பல் வொண்ணு வந்ததாகவும், பின்னுலே ரெண்டு கப்பல் வருகுறதாகவும், இந்தக் கப்பல் பவழக்காட்டுக்கு[146] போகுறதாகவும், யிதிலே பிருஞ்சுக் கப்பல் சேதி வந்திருக்குமெண்ணும், பின்னுலே வருகுற கப்பலிலே வருகுதெண்ணும், சொல்லுகுறதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உங உ மங்களவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ ங உ

இந்தனுள்

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உச உ புத்வாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ ச உ

இந்தனுள், தஞ்சாவூருக்கு சொக்கலிங்க முதலியண்டை இப்போ போயிருக்கிற சாமி அய்யங்கார் ஒலேக்கொண்டு அன்னப்பன் குடுத்தார்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உரு உ குருவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ ரு உ

இந்தனுள், நச்சணபிள்ளே அவர்கள் தங்கள், குமாரத்தியை ஞகலிங்கத்துக்கு குடுக்குறது, முறமை அல்லாத காரியமானபடியினுலே, அப்படி செய்குறது யுத்தமமானதாவெண்ணு காகிதம் எழுதிக் கந்தப் பிள்ளே அவர்கள் மனுஷன், ஆழ்வார் பிள்ளே கையிலே குடுத்தோம்.

இதல்லாமல், நாகப்பட்டணம் சக்குலுனன் குமாரன், அனுப்பிவிச்ச அய்யன் வசமாக, பச்சை முகமல்[147] சனத்து தலைகாணியும், வந்த ரசீட்டின் சீனியும், வெள்ளை பட்டு குச்சுசாகு பதினென்னும் குடுத்தோம். இதல்லாமல், அவர் அனுப்பிவிச்ச பணத்துக்கு நாலு கிசம் சகலாத்து ஒன்பதே முக்கால் வருகணும், சீன பாலிச்சுறுட்டி[148] ரெண்டுக்கு, பனிரெண்டரை வருகணும், தீர்வை எட்டரைப் பணமும், நீப்பாய் பத்துக்கு ........... வாங்கி குடுத்து, இதுகளெல்லாம் வாகனங்களிலே யேத்தி காகிதமும் யெழுதி குடுத்து பயணமாய் அனுப்பிவிச்சோம்.

இந்தனள் சாயங்காலம், முசியே தோலாரும் துபாசி வந்து, நாகப்பட்டணத்துக்குப் போனர். குதிரை கேழ்க்கச் சொன்னர். தங்கள் வசத்திலேயில்லாவிட்டாலும் பிறத்திலேயாகிலும் வாங்கிக் குடுக்க வேணுமென்கிறதாய் சொன்னாரெண்ணு சொன்னன். நமது ஒண்ணு, முசியே லத்தூறு வாங்கிப் போனன். ஒண்ணு வியாதியா யிருக்குதெண்ணு சொன்னேம். அவன் சொன்ன சேதி. நாகப்பட்டணத்திலே நேத்து யொரு காகிதம், இன்னைக்கி ஒரு காகிதம் வந்துது, இங்கிறிசுக்காறர் வைச்சிருக்கிற சிப்பாய்கள் கையிலே அகப்பட்டதாகவும், அவர்கள் கொண்டு வந்து தயங்கம்பாடியிலே குடுக்கிறதாவும் சொன்னன். இதல்லாமல் பிருஞ்சுக்காறர் கப்பலுடனே, இங்கிறிசுக்காறர் கப்பலுக்கு, யெங்யெங்கேயோ சண்டையானதாகவும், இங்கிறிசுக் கப்பல் முறிஞ்சு, சென்னப்பட்டணத்துக்கு வந்து காயக்காறர் இறங்கி, மறுபடியும் இருக்கிற கப்பல்களெல்லாம் முஸ்தீது பண்ணி, வெள்ளக்காறர் சிப்பாய்களை யேத்தி, வங்காளத்துக்கு போறதாகவும், பிருஞ்சு கப்பலும் வங்காளம் போய் துறை பிடிக்குமெண்ணும், வெள்ளக்காறர் பேசிக்கொண்டதாய் சொன்னன்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உசா ௨ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ சா ௨

இந்தனள் விந்தையாக ஒண்ணும் கேழ்க்கப்பட இல்லை.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உஎ ௨ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ எ ௨

இந்தனள், முசே தோலாரும் நாகப்பட்டணத்துக்கு போகுறதாய் கேழ்விப்பட்டோம். இதல்லாமல் தயங்கம்பாடியிலே ஒரு சுலுப்பும் முஸ்தீது பண்ணி, முசே பிசார் முதலாகிய பேர் முசே ........... யேத்தி, மோரீசுக்குப் பயணமாய் அனுப்பிவிச்சதாகவும், ருத்திரிப் பயணமாய் போனதாகவும் சொன்னர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உஅ ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ அ ௨

இந்தனள்

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ உகூ உ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ கூ உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. தஞ்சாவூர் காரியம் சமாதானமாய் வந்த வெள்ளக்காறர் பின்னுலே, ஆனையும், குதிரையும், பின்னையும் சிறுது வெகுமதியும் அனுப்பிவிச்சதாகவும் அவர்கள் திருச்சிருப்பள்ளிக்கு போய், நபாபு ம்மமுதல்லிகானுக்கு சொல்லி, இந்த வெகுமதி யெல்லாம் குடுத்ததாகவும் அவர் வாங்காமல் சென்னப்பட்டணத்து கெவுனர் பிக்கட்டுக்கு யனுப்பினதாகவும், வந்த டுப்பீர் முதலான வெள்ளக்காறரும், பட்டணத்துக்குப் போனதாகவும், சென்னப்பட்டணத்திலேயிருந்து ம்மமுதல்லிகானை யழைக்க குதிரைக்காறர் வந்ததாகவும், ரெண்டு மூணு னுளையிலே ம்மமுதல்லிகானும் பயணமாய் சென்னப்பட்டணத்துக்கு போறதாகவும், இதல்லாமல் திருச்சிருப்பள்ளியிலே உத்தியோகஸ்தர் முதலான பேர் கையிலே ம்மமுதல்லிகான் தண்டம் வாங்கினதாகவும், இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ ஙய உ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ ய உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி யென்னவென்றுல், நாகப்பட்டணத்திலே உலாந்துக் கப்பல் வந்த பிற்பாடு, அதிலே வந்த செய்தி யின்ன தென்னு வெளிக்கு வரவில்லை. ஆனுல் கப்பல் வந்த நாள் முதல், காலமே எட்டு மணிக்கு குமுசேல் கூடுகுறது. பன்னிரண்டு மணிக்கு கலைகுறது. ரெண்டு மணிக்கு கூடுகுறது. ருத்திரி ஏழு மணிக்கு கலைகுறது. இந்தப்படி எட்டு, பத்து னுள் குமுசல் பண்ணதாகவும், ஒரு னுள் குமுசேல் முசியே முதாவுவை அழைப்பிச்சதாகவும், பிற்பாடு இவர்கள் உற்சாகமாய் இருக்குறதாகவும், இதல்லாமல், உலாந்துக்காறர் வர்த்தகம் பண்ணத் தேவையான. நிலுவை கிலுவை விட்டு யிருக்கிறதை சீக்கிரத்துக்கு அனுப்பியிங்கோள். நீங்கள் சொந்த வர்த்தகம் கூட பண்ணத் தேவையில்லை. பின்னுல் சேதபாதம் வந்தால், யெங்களுக்கு கவையில்லை யெண்ணு இப்படியாக சொன்னதாகவும், வந்த கப்பலிலே மருந்து, குண்டு, துப்பாக்கி, விஸ்தாரமாய் யிறங்கினதாகவும் சொன்னுர்கள். இவடத்திலேயிருக்கிற பிருஞ்சுக்காறரும் உற்சாகமாயிருக்கிறதாகவும், பத்து பதினைஞ்சு நாளையிலே, யெப்படியும் வருமெண்ணும், இதிலே வராவிட்டால் தையி பிறக்கவே அல்லாமல், வரத்தக்கதில்லை யெண்ணும், இப்படியாக சொல்லி கொண்டார்கள். இது விசாரிக்குமிடத்தில் கும்பினிர் தொழில் செய்கிறதேயல்லாமல் படுத்திகுலார்[149] தொழில் செய்ய கவையில்லை யெண்ணு சீமை உத்தாரம் வந்ததாக தாக்கீது பண்ணதாக சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ ஙக உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ யக உ

இந்தனுள் ருத்திரி, சின்ன முதலியார் வளத்துக்கொண்ட தாவீது பேரிலே, குறவஞ்சி[150] கட்டியாடினுர்கள். வி⟨த்⟩துவான் மலையப்பன் பாடினது. பிறையாத்துத் தேரடி வீதியிலே வேஷம் போட்டு, பதினெரு மணிக்கு தொவக்கி, நாலரை மணிக்கு முடிச்சார்கள். இது பாற்க்க எருக்கட்டாஞ்சேரியிலே இருக்குற பேருக்கும், பிறையாத்திலே

இருக்கிற பேருக்கும் சொன்னுர்கள். நமக்கும் சொன்னுர்கள். அக்கிருரத்திலே பிருமணன் வீட்டிலே அம்பது அறவது பேர் மட்டுக்கும் விருந்து பண்ணதாகவும், அதுக்கு வந்த பேர் பூமியப்ப முதலி, பெரியண்ண முதலி குமாரன், அப்பு முதலியார் குமாரன், திருவேங்கிடத்தார் தமையன் குமாரன் வெங்கடாசல பிள்ளே, சாமி பெரியண்ண நயினுர் வளத்துக் கொண்ட திருவம்பல நயினுர் மற்றும் சிறிது பேரும் வறளாம் சவுரிமுத்து முதலாகிய கிறிஸ்துவர் சிறிது பேரும், சாப்பிட்டு போய், குறவஞ்சி பாத்து, பேருக்கொரு பாகை, சோமன் சொரு போட்டதாகவும் ஒரு ஒகிணி போட்டதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆடி மீ௳ ௩௨ ௨ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ௳ ௰௨ ௨

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. முன்னே தஞ்சாவூர் முகத்து இருபது லஷ்சமாய் தீந்தது. இவ்வருஷத்துக்கு ஒரு லஷ்சமும் குறை வருகிற வருஷத்துக்கும், அப்பறத்து வருஷத்துக்கும் குடுக்கவும், அப்பிறம் முன்னுலே நாபாபு மம்முதலி யெழுதிக் குடுத்தப்படிக்கு, நாற்பதுநாயிரம் ரூபாய் விழுக்காடு வாங்கிக் கொள்ளச் சொல்லி, ருசா சொல்லுகிறதாகவும், அவர்கள் இந்த இருபது லஷ்சமும், ரெண்டு வருஷத்து கணக்கெண்ணும் சொன்னதாகவும், மத்தும் சொன்ன படிதானே தீத்துப்போடச் சொல்லியும், இதுக்கு வந்த பேருக்கு நடப்புக்கும், கேவுனற் பிக்கட்டுக்கும் விசேஷிச்சு வரச்சொல்லி, வக்கீலு அவர்கள் பின்னுலே, வெகுமதி அனுப்பினதாகவும், அப்படியே தீந்து போமெண்ணுப் போலேயும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ௳ க ௨ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ௳ ௰௩ ௨

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. முன்னுலே வடக்கே இருந்து சென்னப்பட்டணத்துக்கு குதிரைக்காறரும், ஒரு பெரிய மனுஷனும் வந்து யிருக்கிருர்களெண்ணு யெழுதி இருந்தோமே, அவன் நீசா மல்லி மனுஷனென்னும், அவன் பேர் ............ என்றும் நூறு குதிரையும், முன்னூறு பாய்க்காறரும் வந்துயிருக்குறதாகவும், அவர்களுக்கு படி பத்தறை குடுத்து வைச்சுக் கொண்டிருக்கிறதாகவும், அவர்கள் வந்திருக்கிற காரியம் வெகு பணம் வர வேனுமென்னும் நாசறுசங்கு பணமெல்லாம் புதுச்சேரியிலிருந்துது. அவர்கள் பேரிலே வெகு பணம் வரவேண்டியிருந்தது. இந்த கோட்டையை பிடிச்சு, பிடிச்சுப்போட்டு அதிலிருந்ததெல்லாம் எடுத்துக்கொண்டீர்கள். அந்த பணமெல்லாம் கொடுக்கச் சொல்லியும், ம்மமுதல்லிகான் பேரிலே வெகு பணம் வரணுமெண்ணும், அந்த பணம் கொடுத்தனுப்பச் சொல்லியும், இல்லாவிட்டால் சீமை விட்டு விட்டு, ம்மமுதலியை இவடத்துக்கு அனுப்பிவிக்கிறது. அவனேயாகிலும் உங்களுக்கு இப்பணம் கொடுக்க வேண்டியதிருந்தால், கணக்கிலுள்ளபடி குடுத்து விடுகிரேமெண்ணும் இப்படி விசேஷம் நடக்குறதாகவும் ம்மமுதல்லியும் பத்து நாளிலே சென்னப்பட்டணம் போய்சேருவானென்னும், பிற்பாடு யென்ன விசேஷம் நடக்குமோ தெரியாதென்னும் சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ஷ ஆவணி மீ உ வ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ யச வ

இந்தனுள், திருவேங்கடத்தா பிள்ளை, வெங்கடாசல பிள்ளை சொன்னது. இவிடத்திலே இருந்து பிசார் ஒரு சுலுப்பும் அனுப்பிவிச்சாரே, அது குழம்புக்கு போறதாய் புறப்படபோகுது வாங்கிப் போனுர்கள். அதிலே ............ .யேறினுர்கள். அது தூத்துக்குடிக்குப் போய் கப்பல் சென்னு இருபது ஞளேயிலே வருமெண்ணும் சொல்கிருர்களெண்ணும், இதல்லாமல், நாகப்பட்டணத்திலே இருந்து கப்பலிருக்குற யிடத்துக்கு காகிதக்கட்டு துரை கப்பல் பார்க்கப் போறதுக்குப் போய், கப்பலிலே வைச்சு, அங்கே இருந்து ருத்தியிலே பயணமாக அனுப்பிவிச்சதாகவும், நயினுர்[151], முசே பிசாரை ஊருக்குப் போக வேணுமெண்ணு கேட்டால், இன்னம் பத்துனுள் இருயென்று சொன்னதாகவும், முசே முதாவு கப்பல் பத்து ஞளேயிலே வருகுமெண்ணு சொன்னதாகவும் சொன்ஞன்.

## சித்திரபானு ஷ ஆவணி மீ ங வ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ யரு வ

இந்தனுள், தயங்கம்பாடியிலே இருந்து முன்னுலே வாங்கி இருந்த சுலுப்பை, வங்காளத்துக்குப் பயணமாயனுப்பிவிச்சார்கள். அதிலே, முன்னுலே துரைத்தனம் பண்ண ............ அவருடைய தம்பி, சீமைக்குப் போகப் பயணமாயிருந்த இந்த சுலுப்பிலே ஏறி, வங்காளத்துக்குப் போய் அவடத்திலே இருந்து சீமைக்குப் போற கப்பலிலே ஏறினுர். சாயங்காலம் பயணமான துறைக்கு ............ பீரங்கியும் போட்டு பாயெடுத்தானெண்ணு சொன்னுர்கள்.

## சித்திரபானு ஷ ஆவணி மீ ச வ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ யசா வ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. வடக்கு வகுப்புப் பாளேயக்காறனுடைய விசாரியுக்காறன், வையாபுரி பிள்ளே யென்குறவன், ருத்திரியிலே தீர்வை தராமல் நெல்லு வித்தாகவும், அதின்பேரிலே அவனே பிடிச்சு சேஷாசல செட்டியும், முத்தய்யா பிள்ளேயும் போய் துரையுடனே சொன்னதாகவும், அவன்பேரிலே துரைக்கும் சத்துக் கோபமுண்டுயென்னுப் போலேயும், அதின்பேரிலே அவனேக் காவல் வைச்சு அடிச்சு, காதை அறுத்து, துரத்த வேணுமெண்ணு துரை சொன்னதாகவும், பாளேயக்காறன் அப்படி மரியாதை தப்பாய் நடத்தப் போகாதெண்ணு சொல்லிக் கொண்டதாகவும், அதின்பேரிலே இந்தப் பள்ளிக் கிருமம் பத்திலேயும் இருக்கக் கவை யென்ன யெண்ணு சொன்னதாகச் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஷ ஆவணி மீ ரு வ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ யஎ வ

இந்த நாள் யெழுதப்பட்டது. நாலு நாளேக்கு முன்னுதாக வந்த மனுஷன் சொன்னது. சென்னப்பட்டணத்திலே, ஆறேழு கப்பலிலே, வெள்ளக்காற சிப்பாய்கள்,

காமாட்டிகள், போயிண்டர், கூட இறநூறு பேர், மட்டும் யேறினுர்களெண்ணும் பத்து பல்லக்கும் கூட யேறிச்செண்ணும், இன்ன யிடத்துக்கு போகுதென்னும் தெரிய யில்லே யெண்ணு சொல்லிக் கொள்ளுகிறதாக சொன்ஞன். புதுச்சேரியை சுத்திலும் முத்தால்பேட்டை, சாரம், பாக்கமுடையான்பட்டு, குசப்பாளேயம் இங்கெல்லாம் விஸ்தாரமாய் வீடு கட்டினதாகவும் கந்தப்ப முதலியார், பெரியண்ண முதலியார் மனுஷரையனுப்பி வீடு கட்டுகிறதாகவும், ஒழுகறை முதலிமார், றெம்ப தெருவில் விசிறி கொண்டு திரிகிறதாகவும், கனகசபை முதலி முருங்கப்பாக்கம் குத்தகை வாங்கி கம்பத்தம் போட்டதாகவும், இது விசாரிப்பு, அவன் மச்சான் மண்ணப்ப முதலியெண்ணும், அச்சை குதிரை ஒண்ணு யேறிக்கொண்டு, கனகசபை முதலி திரியுகுறதாகவும், பத்தாள் கைக்குள்ளே இருக்குறபடியினுலே, ருத்திரியிலே சாலேயிலே யிருக்குற மரத்தை, வேணுமெண்ணு வெட்டி கொண்டு, நல்ல கல்லுகள் யிருக்கிறவிடத்திலே பேத்துக் கொண்டு, முருங்கப்பாக்கத்திலே சேர்க்குறதாகவும், பின்னேயும் சிறுது பேர் அவடத்திலே தானே, தங்கள் வீட்டிலே சேத்துப் புதைத்து வைக்கிறதாகவும், வெளிக்கொண்டு போய் சேர்க்குற பேரும் இருக்குருர்களெண்ணும் இப்படி நடக்குதெண்ணும் சொன்ஞன்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ சா உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ யஅ உ

இந்தஞள், நேத்து ருத்திரி, சக்குலூஞன் குமாரன் சின்னயஞண்டைக்கு போயிருந்த முத்து வந்தான். உக்காறக்கு சிலிம்பி, கோட்டு, சிரேப்பாவும் வெள்ளியிலே முஸ்தீது பண்ணி அனுப்பிவிக்கச் சொல்லி ஒன்பது வராகன் குடுத்தாரெண்ணு கொண்டு வந்து குடுத்தான்.

இதல்லாமல், ரெண்டு மூணு ஞளேக்கு முன்னுதாக, நாகப்பட்டணத்துக்கு உலாந்தர் கப்பல் பத்தாவியிலே யிருந்து வந்ததாகவும், அந்த கப்பலிலே பட்டணத்து சனங்களுடைய ஞாயங்களெல்லாம், சின்ன துரையை விசாரிக்கச் சொல்லி வந்ததாகவும், மூணுவது குமுசலியேர் செத்துப் போயிருந்ததாகவும், அவனுக்கு பதில் ஒருவன் வந்ததாகவும் சொன்ஞர்கள். இந்தஞள் நாலு மணிக்கு, பிறையாத்திலே இருக்குற கும்பினித் தோட்டத்திலே தென்னன்டை கடைத் தெரு வீதியிலே, துரை பாற்க்கத் தக்கதாக கம்பம் நட்டு, தொம்பறவர்[152] கூத்தாடிஞர்கள். துரையும் குமுசேலரும் வந்தார்கள். முத்தைய்ய பிள்ளே, சின்னதம்பி பிள்ளே, வடக்கு வகுப்பு பாளேயக்காறரும், மேற்படி சகல செட்டிகளும், மத்தும் இவடத்திலுண்டாகிய தமிழரும், புதுச்சேரியிலே தாவீதும், வறளாம், சூரப்ப முதலி ஆகிய கிறிஸ்துவர்களும் வந்ததாகவும்

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ எ உ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ யகூ உ

இந்தஞள்

## சித்திரபானு ௵ ஆவணி ௴ அ உ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து ௴ உய உ

இந்தனாள் கேழ்விப்பட்டது. சென்னப்பட்டணத்திலே, சண்டை ஆளுமாருடனே போன கப்பல், திரும்ப வந்து விட்டதாகவும், வெள்ளக்காற சிப்பாய்களை யெறக்கிப் போட்டதாகவும், அதன் சம்பளங் குடுத்ததெல்லாம் வாங்கிறதாகவும், சிறிது சிப்பாய்கள் ஓடிப்போனதாகவும், என்ன யிடத்துக்கு எந்த மட்டுக்கும் போச்சுது; எதனாலே வந்து விட்டார்களென்று தெரியவில்லையெண்ணு சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ௵ ஆவணி ௴ கூ உ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து ௴ உக உ

இந்தனாள், சொக்கலிங்க நாயக்கனண்டைக்குப் போயிருந்து சாமி அய்யங்காரண்டைக்குப் போயிருந்த பணயங்கார் வந்தார். அவர் சொன்னது. தஞ்சாவூராருக்கும், மமுதல்லிக்கும் சமாதானமாக இல்லையெண்ணும், சென்னப்பட்டணத்திலே இருந்து சேதிகள் தீந்து வரயில்லையெண்ணும், நவாபு மமுதல்லிகான் சென்னப்பட்டணத்துக்குப் போக, திருச்சிராப்பள்ளிலிருந்து பயணம் பிறப்பட்டு, யேழெட்டு நாளாச்சுதெண்ணும், இத்தனை நாளில் போய் சேருவாரெண்ணும் சொன்னார். சாமி அய்யங்கார் குடுத்த ஓலையும் கொண்டு வந்து குடுத்தார்.

## சித்திரபானு ௵ ஆவணி ௴ ய உ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து ௴ உஉ உ

இந்தனாள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்துக்கு, சுக்கிறவாரத்தன்னைக்கு ஒரு சீமை உலாந்தர் கப்பல் வந்ததாய் சொன்னார்கள்.

இந்தனாள், ரத்திரி அஞ்சு நாழிகைக்கு, பிறையாத்திலே நாம் குடியிருந்த சாமினாதை செட்டி தென்னண்டை வீட்டை விட்டுப்போட்டு, வடவண்டை பாரிசத்திலே முன்னிருந்த வீட்டுக்கு குடி போனோம்.

இதல்லாமல், சக்குலுனன் குமாரன் அண்டையிலே இருந்து காகிதம் வந்துது. அதிலே எழுதி இருந்துது. பத்தாவியிலே இருந்து காகிதம் வந்துது. அதிலே என் தகப்பனாயிருந்த உத்தியோகம், கும்பினீர் துபாசித்தனம், எனக்கு குடுத்தது நடப்பிக்கச் சொல்லி, குமுசலுக்கு எழுதி வந்துது. இந்த சந்தோஷம் தங்களினதானபடியினாலே யெழுதி அனுப்பிவிச்சேனெண்ணு எழுதி இருந்தது.

## சித்திரபானு ௵ ஆவணி ௴ யக உ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து ௴ உங உ

இந்தனாள், தயங்கம்பாடி வற்த்தகர் சேஷாசல செட்டி, துப்பாக்கிகள் அம்பது துரையின் கையில் வாங்கி இருபத்தஞ்சை ருசா சீமை தஞ்சாவூருக்கு அனுப்பிவிச்சார்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ யஉ உ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ உச உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. இவடத்திலே இருந்து தஞ்சாவூருக்கு, சேஷாசல செட்டி அனுப்பிவிச்ச துப்பாக்கிகளெல்லாம், தில்லையாடிக் கப்பலிலே இருக்குற இங்கிலீசுக்காரர் சிப்பாய்கள் பிடிச்சுக் கொண்டு, காரைக்காலிலே கொண்டு போனதாகவும், இந்த சேதி தஞ்சாவூருக்கு அரிக்காறர் சொல்லப் போனதாகவும், தயங்கம்பாடித் துரையுடனே போய் சொன்னதுக்கு, நம்முட எல்லையிலே இருக்குற நாம் எழுதி அனுப்பலாம். தஞ்சாவூர் யெல்லையானபடியினுலே நாம் பேசப் போகாதெண்ணு சொன்னதாகவும், இப்படியாகச் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ யங உ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ உரு உ

இந்தனுள், நாகப்பட்டணத்துக்குப் போயிருந்த கந்தன் வந்தான். அவன் சொன்னது. முசே புலோவைப் போய் காண்பிச்சுக் கொண்டு சலாம் சொன்னதுக்கு, சுகமாயிருக்குருயாயெண்ணு கேட்டு, இங்கேயும் எல்லோரும் சுகமாக இருக்குருர்கள். எனக்காலுல் மார் நோவு. சுவாசமும் ஜெம்பக் காணுது. அதனுலே சொஸ்தமில்லை. பின்னே வேறே விந்தையாய் ஒரு சேதியுமில்லையெண்ணு சொல்லச் சொன்னதாய் சொன்னுன். திருவேங்கடத்தா பிள்ளை சொன்னது. இவ்வருஷத்துக்கு கப்பல் வருகுறதாய் காண இல்லை. அப்போ தானே வந்து விடாமல், விறுதாவா யிருந்துவிட்டோம். கேழ்க்கப் போனுலும் கோவிச்சுக் கொள்ருன். இந்த மாசம், பாத்துக் கொண்டு வந்து விடுகுறேனெண்ணு சொன்னதாகச் சொன்னுன். இதல்லாமல், சோணுசல பிள்ளை நாளிலே முன்னுலே, முசே முதாவண்டைக்கு போக வர இருக்குறதாகவும், ருமலிங்க பிள்ளை சந்தருப்பத்துடனே இருக்குற ஒரு மாசமாய் போறதில்லே யெண்ணும், யெல்லோரும் அகதியிலே இருக்குறதாகவும், கேசவ பெருமாள் பிள்ளை சொன்னது. பிருஞ்சுக் கப்பல் சேதி ஒண்ணும் தெரியயில்லை யெண்ணும், உலாந்தக் கப்பல் மூணு வந்ததாகவும், அதிலே சக்குலுனுன் குமாரனுக்கு துபாசித்தனம் வந்ததாகவும், கும்பினி வர்த்தகத்திலே ஆரை வைக்க வேணுமோ, அவர்களை வைச்சுக் கொள்ளச் சொல்லி வந்திருக்குது யெண்ணும், சொல்லிக் கொண்டார்கள். சின்னயனுரை அழைக்க போனுர்களெண்ணும், இப்படி சொன்னதாகவும் சொன்னுன்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ யச உ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ உசா உ

இந்தனுள் கேழ்விப்பட்டது. பத்து ஞளைக்கு முன்னதாக, சாவடி மானியம் பண்ணின சாந்து யென்கிறவனுக்கு ஆண்டியப்பன் மகன் வசேன், துபாசி சவுரிருயன் வீட்டிலே, ரெண்டு சாந்துக் களறை திருடிக் கொண்டு போனதாகவும், அதின்பேரிலே அவன் மந்திரவாதிகளை அழைப்பிச்சுப் பார்த்தாகவும், அதிலே இவன் பயந்து, அந்தக் களறையைக் குடுத்துவிட்டதாகவும், அதிலே நடுத்துண்டு எங்கே எண்ணு கேட்டதாகவும், நான் அறியேனெண்ணு சொன்னதாகவும், அதிலே அலம்பல் பட்டு ஓடிப் போனதாகவும்,

அவன் அப்பனை பிடிச்சு, லச்சை பண்ணி, பத்து வருகனுக்கு சவுரிருயன் சீட்டு வாங்கி கொண்டதாகவும், இந்த சேதி பாளையக்காறன் கேட்டு, சவுரிருயனை நீயாய் திருட்டுப் பிடிச்சிக்கிறதும், வாங்கிக் கொள்குறதுமா? வென்னு கேட்டதுக்கு உன்னுடனே சொல்லிக் கொண்டாலல்லவோ கேழ்க்க வேணும்? உனக்கென்ன கவை? யென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே சாந்து மணியகாறன் தகப்பனைப் பிடிச்சு பெரிய பாளையக்காறன் காவல் பண்ணிக் கொண்டு உன் மகனை அழைப்பிப்பேண்ணு சொல்லுகுறதாகவும், சாந்து மணியக்காறன் திருமெஞ்ஞானத்திலே இருக்குறதாகவும், சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ௳ யரு உ சுக்கிறவாரம்: சதளஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ௳ உஎ உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்திலே சுத்திதானே தாகணயம் யிருந்த சிப்பாய்களும், தயங்கம்பாடியைச் சுத்திலும் தாகணயம் யிருந்த சிப்பாய்களும் பின்னேயும் அங்கே இருந்த சிப்பாய்களும், எல்லாரும் காரைக்கால் போய் சேந்தாகவும், இவங்களெல்லாரையும், இவடங்களிலே இருக்கிற வெள்ளக்காறர் கூட, சென்னப்பட்டணத்துக்கு வந்து விட சொன்னதாக சொல்லி கொண்டார்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ௳ யசா உ சனிவாரம்: சதளஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ௳ உஅ உ

இந்தனுள், ருமய பிள்ளை தம்பி, நல்லதம்பி யென்குறவன், மயிசூரார் தண்டியிலே இருக்கிற, முசியே இக்கிலு அண்டைக்கு போயிருந்தானே, அவன் பத்து நாளைக்கு முன்னுதாக, சிதம்பரம் வந்து சேந்ததாகவும், அவடத்திலே யிருக்கச்சே, இவனை மிடுக்க யெத்தினம் பண்ணினதாகவும், அதுக்கு முன்னுதாக கொள்ளட்டத்துக்கு புறப்பட்டதாகவும், குதிரை, யெருது ரெண்டு, மூனு சேவுகர் நாலஞ்சு கிசுமுத்துக்காறர் சிறுது புடவை, சீல மூட்டையுடனே வந்து அவன் தகப்பன் முதலான பேர் யிருக்கிற திருமெஞ்ஞானம் வந்து சேந்து இருந்தவன், இந்தனுள் பதிநஞ்சு நாழிகைக்கு, பிறையாத்திலே நாம் யிருக்கிற விடத்துக்கு வந்தான். அவன் சொன்ன சேதி. தான் போயி முசியே இக்கிலு அண்டை சேந்த பிற்பாடு, நூறு ரூபாய் மாசம் ஒண்ணுக்கு சிலவுக்கு கொடுத்து நடப்பிச்சுக் கொண்டு வந்ததாகவும், அவனன்டையிலே தான் துபாசியாயிருந்ததாகவும், முசியே முதாவு வருகிறதுக்கு முன்னுதாக, அவடத்திலே சிறுது பவுஞ்சு முஸ்திது பண்ணிக் கொண்டு, நாலாயிரங் குதிரையும், பதினயிரம் சோம்மும், அய்துருனுக்கு சீமையும் முணு மாசம் பொறுத்து, சம்பளம் வாங்கிக் கொள்ளத் தக்கதாக, உடம்படிக்கை பண்ணிக் கொண்டு, இவடத்துக்கு வருகுறதாய் இருக்கச்சே, அப்போவாகிலும் உங்களுக்கும் மத்தும் சிறுது பேருக்கும் துப்பாக்கி நிமித்தியமாய் யெழுதி அனுப்பிவிச்சது. அதுக்கு நீங்கள் பதில் யெழுதி அனுப்பிவிச்சீர்களே, பிற்பாடு சிறுது துப்பாக்கி விலே நெறுவாய்க்கப்பட்டுது. அதை வாங்கி நீங்கள் யனுப்பிவிச்சீர்களேண்ணு குடுத்தேன். அவரும் சந்தோஷமாய் உங்களுக்கு காகிதமும், முசியே முதாவுக்கு காகிதமும், நான் உங்கள் பேருக்கு அனுப்பின காகிதமும், இவடத்திலே இங்கிறிசுக்காறர் வசத்திலே அகப்பட்டு போய் விட்டதெண்ணும், அப்படி பயணமாயிருக்கச்சே, முசியே முதாவும்

வந்து, நாகப்பட்டணம் சேந்து, காகிதம் அனுப்பிவிச்சாரெண்ணும், அதின்பேரிலே இவர் உத்தாரத்தையும் கப்பலையும் பாத்துக் கொண்டு இருந்தார்களெண்ணும், சிலவுக்கு யிங்கே அயிதுருனுன் குடுக்கிறது போதயில்லே, அதினுலே செனங்கள் கலேஞ்சுப் போகுது யெண்ணு யெழுதினதாகவும், அதுக்கு முசியே முதாவு ரெண்டாயிரம் வராகன் அனுப்பி விச்சதாகவும், அது வந்து சேந்ததாகவும், மறுபடியும் ஒண்ணும் அனுப்ப யில்லேயில்லேயெண்ணும், இதுவரைக்கும் அங்கேயிருந்த பேருக்கும், சிப்பாய்கள் படிக்கு மூணு லஷ்சம் ரூபாய் மட்டும் போட்டிருக்கிறேனென்னும், சீர்மை சண்டையிலே இவனுக்கு மூணு லஷ்ச ரூபாய் வந்துதெண்ணும், அது கூட சிலவிலே விழுந்து போச்சுதெண்ணும், இது அல்லாமல், முருட்டியர்க்கும் அய்துருனுனுக்கும் சண்டை நடக்குதே, முருட்டியரண்டையிலே முன்னூரு பேர் சேர்ந்திருக்குறதாகவும், இவர்கள் அவனுக்கு உன் கையா யிருக்கிருர்களென்னும் அங்கே இருந்து சம்பளம் வருகிறதெண்ணும், நாஞுபிள்ளே அண்டையிலே இருந்து, தங்களண்டை வந்துச் சேரச்சொல்லி காகிதமும் வந்ததாகவும், சலாபத்து சங்கண்டையிலே இருந்தும் அப்படி காகிதம் வந்ததெண்ணும், ஆகையால் நானும் யொரு வெள்ளக்காறனும் வந்தோமெண்ணும், முசியே முதாவை, நீர் இது காரியங்களுக்கு யெசமாஞய் வந்திருப்பீரேயானுல், ஒண்ணு சிலவுக்கு கொடுத்தனுப்பும். இல்லாவிட்டால் நீர் வந்து நிறுவாகம் பண்ணிக்கொள்ளும். எங்களுக்கு உத்தாரம் குடும். நீர் குடுத்த ரெண்டாயிரம் வராகன் குடுத்தனுப்பி விடுகிருேம். எங்களுக்கு சரிப் போன விடத்திலே போயிருந்து, கப்பல் வந்தவுடனே வந்து சேருகிறேமெண்ணும், காகிதமும் யெழதிக் குடுத்து கண்டிப்பாய் கேட்டு வரச் சொண்ணுணெண்ணும், நீர் வந்திருக்கிறதும் பல சேதிகளும் உண்மையாச் சொல்லி அனுப்பச் சொல்லி, கேட்டு வரச் சொன்னுணெண்ணும், அது நிமித்தியம் வந்தோமெண்ணும், இதுக்குத் தாம் போன பிற்பாடு, அவடத்திலே யென்ன யோசனே நடக்குமோ அறிய வேணும்மெண்ணும் சொன்னுன்.

இதல்லாமல், சீர்மை கோட்டை, நாஞ மனுஷர் வசமாய் இருந்தது. அதை வாங்கும் நிமித்தியமாக அய்துருனுனே அழைப்பிச்சார். அப்போ ஒசுக்கோட்டையிலே பேட்டியாச்சுது. அப்போ அவர் சங்கிலிக்கே நபர் வேணும்னு அழைப்பிச்சார். பிற்பாடு சீர்மை சண்டை பண்ணி வாங்கிப் போட்டார்கள். அவர்களுக்கு நிறுவாகமில்லாமல் போய்விட்டார்களென்னும், அந்த சீர்மை, சுபா, அயிதுருனுனுக்கு குடுத்தார். அதிலே இருந்த பீரங்கி முதலாகிய முஸ்தீதுகளெல்லாம், அயிதுருனுனுக்கு தானே குடுத்து விட்டதாகவும், இப்போ வசாலத்து சங்குக்கு சிறுது நசர் குடுத்து, பின்னேயும் சிறுது நசருக்கு ஒட்டிக் கொண்டதாகவும், நானும் அவன் பேரிலே சண்டைக்கு போறதுக்கு மத்தது வரத் திட்டம் பண்ணிக் கொண்டு, ஆக யிவனே போய் சேந்ததாகவும் பிற்பாடு புராணப்புரிச் சீமை, நஞ மகன் வசமாக கட்டிக் கொண்டு இருக்கிற படியினுலே சண்டைக்குப் போக அயிதுருனுனே அழைச்சு அனுப்பினுல் எசமான் உத்தரவு யில்லே. நான் அங்கே வந்தால் இந்த ருச்சியம் அபந்தையாய் போமென்னு யெழுதி அனுப்பி விச்சதாகவும், அதின் பேரிலே கோபமுண்டெண்ணும், இப்போ சலாபத்து சங்கு, நிசாமல்லி, வசாலத்து சங்கு, எல்லாரும் நாஞப்பிள்ளே பேரிலே சண்டைக்குப்போக முஸ்தீது பண்ணுகிருர்களென்னும், இதெல்லாமல் அயிதுருனுன், சின்ன வள்ளாபுரம் கோட்டையில் போயிறங்கி, சண்டை பண்ணச் சொல்லச்சே, அந்த கோட்டைக்காறர் முராரி, மேற்படி மத்ததுக்கு யெழுதி அனுப்பினதாகவும், அவன் வருகுறதுக்கு முன்னுத்தாக சமாதானமாய் தீந்ததாகவும் பிறப்பாடு முராரி தன் பவுஞ்சுடனே வந்து எனக்கு சொன்னு

உடன்படிக்கைப்படி பணம் குடுக்க வேணும்னு கேட்டதாகவும், அதின்பேரிலே ஆனால், நான் இன்னம் பணங் கொடுக்க யில்லே. அயிதுருனை சண்டை பண்ணி துரத்தி விட்டால் அந்தப் பணம் உனக்குக் குடுக்குறேண்ணு சொன்னதாகவும், அப்போ கோட்டைச் சுவரிலே இருந்து, சண்டைபண்ண வேணுமெண்ணு சொன்னதாகவும், அப்படியே கோட்டையிலே யிருந்து, கோட்டைக்காறனும், முராரியும் யேகோபிச்சு சண்டைபண்ணதாகவும், அப்போ முராரி பாளையம் முறிஞ்சதாகவும், கோட்டையும் பிடிச்சுக் கொண்டு அந்த கோட்டையிலே இருந்ததெல்லாம் யெடுத்துக் கொண்டு, தன் மச்சினனை அந்தக் கோட்டையிலே வைச்சதாகவும், உடனே முராரி ........... .கட்டி கொண்டு சண்டை பண்ணிருந்தால், முராரி கில்லாவையே பிடிங்கி கொண்டாகிறதும், முன்னாலே கும்மி னுயக்கன் பாளையம் வரை, அவனைத் துரத்தி பிடிங்கி கொண்டதும், அந்த கில்லாவை வாங்கி, திரும்பி அய்துருனுக்கு குடுத்து நசர் ஆறு லஷசம் ரூபாய் வாங்கி கொண்டதாகவும், அப்புறம் முராரி சீமை, மடுக்குசீமையிலே இறங்கியிருக்கிறதாகவும், சமாதானமாய் போவோமெண்ணால் முராரி சொல்லுகிறது. எனக்கு சமாதானமான மனுஷரை அவன் சீமை கட்டிக் கொண்டு கோட்டை வாங்கிக் கொண்டாலும் போகட்டும். எனக்கு சமமான பேர் இவடத்திலே போய் சேந்து பிழைப்போம். நான் யெத்தனை பேருக்கு மத்தது பண்ணினேன். யெப்படிப்பட்ட காரியங்கள் நடத்தினேன். அவன் யெவ்வளவு பாக்கி தரனும். இவனும் நானுமா சமாதானமாகிறது யெண்ணு சொல்லுகிறதாகவும், இப்படி சொல்லாமல் அவன் கோட்டையை வாங்குறேன்னு இறங்கியிருக்குறதாகவும், இக்கிலுக்கும், முராரி அண்டையிலேயிருக்கிற வெள்ளக்காறருக்கும் யோகோபிச்சு, முராரியைச் சேத்துக் கொண்டு அயிதுருனை செயிச்சு, பிருஞ்சுக்காறர் கப்பல் வந்தவுடனே, முராரி கூட மத்தது பண்ணவும், இப்படி பேச்சு மூச்சு நடக்கிறதாகவும், இப்போ முசியே இக்கிலு அண்டையிலே சேந்து யிருக்கிற வெள்ளக்காறர் அன்னூறு பேரும், இறநூறு குதிரையுமிருக்கிறதாகவும், ஆனால் பின்னேயும், முராரி அண்டையிலேயும் நாஞப்பிள்ளே அண்டையிலேயும், மயிசூர் சீர்மையுலேயும் பின்னேயும், அங்கேயுமிருக்கிற பேர்கள் சுத்துக்கு ரெண்டாயிரம் பேர் மட்டும் உண்டெண்ணும், அயிதுருன் பவுஞ்சு, யெவ்வளவுண்டேணால் யேழாயிரம் யெண்ணும், உயிரிய குதிரையும், பாற்க்காறரும் ருனுவுமாக முப்பதினாயிரம் பேர் மட்டும் உண்டெண்ணும் சொன்னார்கள்.

இதல்லாமல் கேழ்விப்பட்டது. இங்கிறிசுக்காறர் சிப்பாய்கள் யெல்லாரும் பிறப்பட்டு சென்னப்பட்டணத்துக்குப் போறதாய் சொன்னார்கள்.

## சித்திரபானு ஸு ஆவணி மீ யள உ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு அகோஸ்து மீ உகூ உ

இந்தனாள் நடந்த சேதி. வெங்கிட்டருயர் வந்து சொன்னது. இங்கிறிசுக்காறர் அறுக்காறர்கள் சொன்னார். ருத்திரி ருமயப் பிள்ளே தம்பி, நல்லதம்பி பிள்ளேயை சிப்பாய்களும் அறுக்காறுகளும் பிடிக்கப் போனார்களென்று சொன்னார்களெண்ணும் சொன்னார். அப்படியிருக்க அவனே பிடிச்சுக் கொண்டு வந்த சேதி யென்னவென்றால், தயங்கம்பாடியிலே வந்திருக்கிற இங்கிறிசுக்காறன், தவி செட்டியென்கிறவனுடனே, இவடத்திலே யிருக்கிற அவர்கள் அறுக்காரர்கள், இப்படி மயிசூரிலே யிருந்து இக்குலு

துபாசி வந்திருக்கிருன். அவன் சிறுது பணம் கொண்டு வந்து வைச்சுக் கொண்டு ருணுவம் முஸ்தீது பண்ணி அனுப்பவும், பின்னேயும் காரியங்களே குறிச்சு வந்திருக்குருரெண்ணு சொன்னதாகவும், அவன் அஞ்சாறு பேர் சிப்பாய்களேயும், அறுக்காரர்களேயும் அனுப்பி பிடிச்சு வரச் சொன்னதாகவும், ருத்திரி பதினேஞ்சு நாழிகைக்கு, திருமெஞ்ஞானத்துக்குப் போய், நல்லதம்பி பிள்ளே, சங்கீதங் கேட்டுக் கொண்டிருக்கச்சே போய், அறுக்காரர்கள் போய் அழைப்பிச்சதாகவும், அதின்பேரிலே ஒண்ணுக் கொண்ணு விசேஷம் நடந்து, பிடிச்சுக் கட்டிக் கொண்டு, தயங்கம்பாடி கோட்டைக்கு வெளியிலே வச்சிருந்து, உதயமான பிற்பாடு கட்டை அவிழ்த்து விட்டு, கோட்டைக்குள்ளாக தவி செட்டி யென்கிறவன் அண்டையிலே கொண்டுபோய் விட்டதாகவும், அவன் நீ மயிசூரிலிருந்து பணங்காசு விஸ்தாரமாய் கொண்டு வந்தியாம். இவடத்திலே ருணுவத்துக்கு வைக்கப் போறியாம். உன்னே சென்னப்பட்டணத்துக்கு அனுப்பிவிக்கிரும். அங்கே போய் பேசிக் கொள்ளேண்ணு சொன்னதாகவும், நல்லது. இதுக்கு சாதகமென்னது உங்களுக்கு? இது மாத்திரத்தில் விளக்குங்கோள் என வருத்தப்பட்டு போனுன். அவடத்து தண்ணீ ஒத்து வருது வச்சுவிட்டுனு பணம் கொண்டு வந்து, ருணுவம் மட்டும் ........... க்கு சாதகம் கொண்டு வரச் சொன்னதாகவும், இந்த அறுக்காறுகள் தான் வந்து சொன்னுர்களேண்ணு அவர்களே கேட்டதாகவும், புதுச்சேரியார் பெரிய மனுஷர் தான் சொன்னுர்கள். அவர்கள் பொய் சொல்லப்போமாவெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே இந்த வேலே, இவர் இல்லே யெண்ணு முறி கேட்டதாகவும், அந்தப்படிக்கி முறி யெழதிக் கொடுத்ததாகவும் அதின்பேரிலே விட்டு விட்டதாகவும் சொன்னுர்கள். இதல்லாமல் இவன் கையிலே ஒரு வயிர மோதிரம் போட்டிருந்ததாகவும், அதைக் கொடுத்தாகவும், வாங்கிக் கொண்டு விட்டதாகவும் சொன்னுர்கள். இது விசாரிக்குமிடத்தில் முறி யெழுதிக் கொடுத்ததுமில்லே. மோதிரம் கொடுத்ததுமில்லே. பத்து நாழிகைக்கு பிறப்பாடு திருமெஞ்ஞானத்துக்குப் போனதாகவும் சொன்னுர்கள்.

இதல்லாமல், சாயங்காலம் திருச்செல்வருயன் வந்து சொன்னது. பெரியண்ண முதலியார் பெண்சாதி தம்பி மலேயப்பன் குமாரத்தியை, ருசேந்திரனுக்கு குடுக்க அந்தப் பெண் தாயார், சூரப்ப முதலி முதலான பேர், பெரியண்ண முதலியார் பெண்சாதியை அறியாமல், கோயில் பாதிரியார் முன்னிலேயாகச் சொல்லி, ஓலே[153] போட்டிருந்திருந்து இருந்துதை, அந்த அம்மாள் அறிஞ்சு, நான் வந்து நானூறு அன்னூறு வருகன் உடமையையும் போட்டு இருக்க, என்னே அல்லாமல் குடுத்தால், என் உடமை குடுத்து விட்டு கலியாணம் பண்ணிக் கொள்ளட்டுமெண்ணு, துரைக்கு பித்திசாம் குடுத்து, துரை அதைபாத்துக் கொண்டு, பாதிரிக்கு இந்த விவகாரம் தீர்றதுக்கு முன்னுதாக, கலியாணத்துக்கு உத்தாரங் குடுக்க கவை யில்லேயெண்ணு சொல்லி மறிச்சிருந்துதே, அந்த விவகாரம் இப்ப துரை அவர்களுடனே சொல்லிக் கொண்டு, உறமுறையிலே கவையில்லே. பேருக்கு ரெண்டு பேர் மத்திஷ்டரைக் குறிச்சுக் கொண்டு, அவர்கள் சொன்னபடி கேட்டுப் போகச் சொன்னதாகவும், அதின்பேரிலே பெரியண்ண முதலியின் பெண்சாதி பேருக்கும் ருமச்சந்திரனும்; திருச்செல்வருயன் குறிச்சுக் கொண்ட மத்திஷ்டப்படிக்கு, குருவிக்காற ருயப்பன், சாமினுதன்; ராசேந்திரன் குறிச்சுக் கொண்ட மத்தஷ்டர் வறளாம் மலேயப்பனும், வில்வேந்திரனுக்கும், இவர்கள் நாலு பேரும் பிறையாத்திலே திருவாசலிலே இருந்து, கேட்டு, தீத்துச் சொன்னபடி கேட்டுப் போறதாய், தீந்துதெண்ணு சொன்னுன்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ௳ யஅ உ சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ௳ ஙய உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. காவேரி நதியானது, அகண்ட காவேரிக்கு கிழக்கே, மூனு நாழிகை வழிக்கு யிருப்பாம். ஸ்ரீரங்கத்துக்கு மேற்கே, ரெண்டு நாழிகை வழிக்கு அப்புறம் யெடுத்து கொண்டு, கொள்ளடத்திலே விழுந்து போறதாகவும், அது கட்டுகிற நிமித்தியம், தஞ்சாவூர் சீமையிலே, ஆறுகள், சாலேகள், தோப்புகளிலே விஸ்தாரமாய் மரங்கள் வெட்டி போடுறதாகவும், மாறிக் கூடப் போறதாகவும் சொன்னுர்கள். இதல்லாமல் இவ் வருஷம் வந்த வெள்ளம், அஞ்சாறு வருஷமாயில்லே யெண்ணும், வெகுவெள்ளம் வந்து தெண்ணும் சொன்னுர்கள். திருமலேருயன் வாய்க்காலிலே ........... ங்கினுன் யென்கிற ஊர் பிருமணர், ரெண்டு பேர் வந்ததாகவும், அதிலே ஒருவனே மலேப்பாம்பு முழுங்கினதாகவும், அந்தப் பிருமணனே பாம்பு முழுங்குதெண்ணு கூட வந்த பிருமணனுடனே சொன்னதாகவும், அவன் கையை குடுத்து கரையிலே சேத்து, அந்த பாம்பு வாயை கிழித்து, பிருமணனே யெடுத்து போய், வீடு சேந்ததாகவும், மூனு நாளிருந்து செத்து போனதாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ௳ யகூ உ மங்களவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு அகோஸ்து மீ௳ ஙக உ

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. இங்கிறிசுக்காறர் மனுஷன், தவி செட்டி யென்கிறவன், சென்னப்பட்டணத்துக்குப் பயணமாய் போறதாய், அவர்கள் அறுக்காறு ஒருவன் வந்து, இவடத்திலேயிருந்த சிப்பாய்களெல்லாரும் போய் விட்டார்களே, குறையிருக்குற அறுக்காறுகளும், வெள்ளக்காறரும் இப்போ பயணமாய் போருேமென்னு பத்து நாழிகைக்குச் சொல்லிப் போட்டு போனுன்.

இந்தனுள், வாத்தியார் மலேயப்பன், குமாரத்தி ரெண்டு பேருக்கு கலியாணம் பண்ணினுன். அதிலே மூத்த பெண்ணே கனகருய முதலியார் கூட்டத்திலே........... குடுத்தார். இதுக்கு மலேயப்பன் இப்போ னூத்தம்பது வருகன் உடமையிலும், புதுச்சேரிக்கு திரும்பின பிறகு அன்பது வருகன் உடமையிலும் மாப்பிள்ளே பரியமும், ........... இந்த உடன்படிக்கைபடியாகவும், இளேய பொண்ணுக்கு, இப்ப நூறு வருகன் உடமையும் புதுச்சேரிக்கு திரும்பின பிறகு அம்பது வருகனும், மாப்பிள்ளே தங்களினத்திலே ஆனபடியினுலே பரியமும் ........... இந்தபடிக்கு, கலியாணம் நடந்தது. ஆனுல் இதுவரைக்கும் வாத்தியார் மலேயப்பனுக்கும் கனகருய முதலியார் கூட்டத்துக்கும், கொள்ளக் குடுக்க நடந்ததில்லே. இப்போ நூதனமாய் நடந்தெண்ணும் சொன்னுர். இந்த கலியாணத்துக்கு நாமும் போயிருந்து வந்து விட்டோம்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ௳ உய உ புத்வாரம்: சதஎஎசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ க உ

இந்தனுள் வெங்கிட்டருயர், திருமெஞ்ஞானத்துக்கு நல்லதம்பி பிள்ளே அண்டைக்கு போனவிடத்திலே, அவன் சொன்னது. இப்படியெல்லாம் பண்ணவிச்ச

பேர், கந்தப்ப முதலி, நயினூராகிலும், அவர்கள் மனுஷர் வந்து காண்பிச்சுக் குடுத்து பாத்திருக்கிருர்கள். இதெல்லாம் நாளைக்காலமே பிள்ளை அவர்களண்டைக்கு வந்து சொல்லிக் கொண்டு, என்னுடைய காகிதம் வேணுமெண்ணு சொன்னதாகச் சொன்ஞர். இப்படி இருக்க சின்னப்பய்யன் சொன்னது. முசே இக்கிலு அண்டையிலே இருந்து நல்லதம்பி பிள்ளை வெகுபணம் எடுத்துக்கொண்டு வந்ததாகவும், அதின்பேரிலே ஒரு வெள்ளக்காறன் வந்ததாகவும், முசே முதாவுக்கு காகிதம் வந்ததாகவும், அதின்பேரிலே தெற்கு வகுப்புப் பாளையக்காற மனுஷன் இருந்ததாகவும், அவனை பிடிக்கச் சொன்னதாகவும் அவர்கள் பிடிக்கப் போனுர்கள். இவிடத்திலே சாப்பிட போனுர்கள்; யென்னுடனேயும் சொன்னுர்களென்று சொன்னுன். இது பாத்தால் இவர்களுக்கு என்னமோ நடப்பிக்குருப்போலே யிருக்குது. இப்படி இருக்க, விளக்கு வக்குற நேரத்துக்கு சேதி வந்துது. நல்லதம்பி பிள்ளையை பிடிச்சுக் கொண்டுபோய் திருக்கடையூரிலே வச்சிருக்குருர்களெண்ணு சொன்னுர்கள்.

## சித்திரபானு ௵ ஆவணி ௴ உக ௳ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு ௴ உ ௳

இந்தனுள் நல்லதம்பி பிள்ளையை, திருக்கடையூரிலே வைச்சுக்கொண்டு, அவனுட தட்டுமுட்டு, சீலே, இதுகளெல்லாம் யெழுதி, பத்திரம் பண்ணுகுறதாகவும் சொன்னுர்கள். இவனைப் பிடிக்கவும் இவன் தட்டுமுட்டுகளை பத்திரம் பண்ணவும் வேண்டியதென்னவென்ருல், முசே இக்கிலுக்கு மோசம் பண்ணி, சிறிது பணங்காசு எடுத்துகொண்டு வந்ததாகவும், அதன்நிமித்தமும் ஒரு வெள்ளக்காறனை அனுப்பி, முசே முதாவுக்கு ஒரு காகிதமும், தஞ்சாவூர் ருசாவுக்கு ஒரு காகிதமும் அனுப்பிவிச்சதாகவும், அதின்பேரிலே முதாவு மனுஷர், ருசாவினுடைய மனுஷரும் தெற்குவகுப்பு பாளையக்காரன் கஸ்தூரி மனுஷருமாய் பிடிச்சதாகவும், திருக்கடையூர் கொண்டு வந்து சேத்து, யெழுதி அனுப்பிவிச்சதாகவும், உத்தரவு வந்த பிற்பாடு, அனுப்புவாங்களா ? தஞ்சாவூர் கொண்டு போனுங்களா ? முசே முதாவுவண்டை இந்த ஆளை கொண்டு போவாங்களா தெரியாது யெண்ணு சொல்லிக் கொண்டார். இன்னம் விசாரிச்சறிய வேண்டியது.

நாகப்பட்டணத்துக்கு பிருஞ்சு கப்பல் மூணு வந்ததாகவும், மேலாக இருபத்து அஞ்சு கப்பல் யிருக்கிறதாகவும், முசியே முதாவும், சின்னப்பய்யனும், திருவேங்கட பிள்ளையும், கப்பலுக்குப் போய் வந்ததாகவும் உடனே கஸ்தூரி ஞயக்கனை அழைப்பிச்சு கொண்டதாகவும், இப்படியாகச் சொன்னுர்கள். இது விசாரிக்குமிடத்தில் பொய்யாய் போச்சுது. ஆனுல் இந்த விசேஷம் பிறப்பிச்சப்பேர் நம்முட ஊர் கிறிஸ்துவர்கள்ண்ணு சொல்லிக் கொண்டார்கள்.

சென்னப்பட்டணத்து சேதி. வங்காளத்திலே சண்டை ஆகுறதாகவும், கில்லாவிலே இருக்கிற சிப்பாய்கள், வெள்ளக்காறர் யெல்லாரையும் சென்னப்பட்டணத்துக்கு வரச் சொல்லி அழைப்பிச்சதாகவும், நபாபு ம்மமுதல்லிகானை சுறுக்கிலே வரச்சொல்லி, மனுஷன் போயிருக்குறதாகவும், இருக்கிற வெள்ளக்காறர், சிப்பாய்களை கூட்டி, முராரிக்கு அனுப்புகுறதாகவும், ம்மமுதல்லிகான் வந்த பிற்பாடு யென்ன நடக்கவேணுமெண்ணு சொல்லியும், இப்படி சொல்லிக் கொள்ளுகுறதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ உஉ ௳ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ ங ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நல்லதம்பி பிள்ளையை தஞ்சாவூருக்கு கொண்டு போறதாய் சொன்னுர்கள்.

சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ உங ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ ச ௳

வெற்றுப்பக்கம்.

சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ உச ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ ரு ௳

இந்தனுள்

சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ உரு ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ சா ௳

வெற்றுப்பக்கம்

சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ உசா ௳ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ எ ௳

இந்தனுள் விந்தையாய் ஒண்ணும் கேழ்விப்பட இல்லை.

சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ உஎ ௳ புத்வாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ அ ௳

இந்தனுள் நாகப்பட்டணத்திலேயிருந்து, மையோர் அறுக்காறு ஒருவன் வந்தான். அவர் சொன்னது. யினிமேல் கப்பல் வருகுகிறதைப் பாற்க்கவல்லாமல் இப்போயில்லை. ஆனல் இப்போ இக்கிலுக்கும் அய்துருனுக்கும் போதாமலிருக்குது. அதின்பேரிலே அவன் சொல்லி அனுப்பிவிச்சான். நீர் வந்து சிலவு நிறுவகிச்சுக்கொண்டு, யெதிலேயும் இல்லாவிட்டால், உத்தாரம் அனுப்பிவிச்சால், பின்னே யெங்காகிலும் ஒரு யிடம் பார்த்து கொள்ளுகிறேம். கப்பல் வந்தவுடனே வருகிறேமெண்ணு சேதி வந்ததாகவும், அதின்பேரிலே தஞ்சாவூருர் மத்ததுப் பண்ணிக்கொண்டு, அவர்களையும் அழைப்பிச்சுக் கொண்டு, சீமைகளைக்கட்டி செஞ்சி மத்ததுக்கு ஒரு தரவு போய் சேந்துக் கொண்டுயிருக்க வேணுமெண்ணு யெத்தனம், முசியே முதாவு பண்ணுகிறுன். அது

நிமித்தியத்திலே சோணசல பிள்ளைக்கும் ருமலிங்கப் பிள்ளைக்கும் போட்டி தான். இந்த தண்டுக்கு முன்னுதாய், பதினுருயிரம் இருபதுனுயிரம், ருமலிங்கப் பிள்ளைக்கு கொடுக்குறதாய் சொல்லுகிறதாகவும், இதுக்கு அனுகூலமாய் சின்னப்பய்யன் இருக்குறதாகவும் அது நிமித்தியத்திலே, என்னைப்போய் இவடத்திலே, அவர் தமையனுருக்கு தெரிய சொல்லி, அவருக்கு சொல்லி யனுப்பிவிக்கச் சொல்லி சோணசலப் பிள்ளை யனுப்பிவிச்சதாய் சொன்னுர்.

## சித்திரபானு ஸ்ரீ ஆவணி மீ உஅ ௳ குருவாரம்: சதஎளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ கூ ௳

இந்தனுள் லிங்கப்பன்குறவன் வந்தான். அவன் சொன்னது. சாராயக்கிடங்கு மணியம், வெங்கடாசல பிள்ளை மச்சுனன், ஆண்டியப்பனை பரங்கிப்பேட்டையிலே கண்டேன். அவனை யெங்கே போறேயெண்ணு கேட்டேன். நல்லத்தம்பி பிள்ளையுடனே, மயிசூர் இக்கிலு தண்டுக்கு போய் வந்தான். நானுங் கூடப்போய் வந்தேன். இப்போ ஓலை கொடுத்து தன் பெண்சாதியை அழைச்சு வரச்சொன்னுன். போறேண்ணு சொன்னுன். ஆனுல் நல்லத்தம்பி பிள்ளை போனதும் வந்ததும், யென்ன வென்னு கேட்டவிடத்திலே, சிறிது பேச்சுக்கள் சொல்லி உண்மையாய் சொன்ன சேதியென்னவென்ருல், யெங்கள் அண்ணன் பொன்னம்பலம் தயங்கம்பாடியைச் சேர்ந்த பிறையாத்துக்குப் போய், பிள்ளையவர்கள், அப்பாவு பிள்ளையைக் கண்டு, முசியே இக்கிலு தண்டுக்குப்போய் வருகிறேனென்னு சொன்னுன். அதின்பேரிலே, இக்கிலு காகிதமும் பாதிரிக்கொரு காகிதமும் கொடுத்தார்கள். அதை வாங்கிக்கொண்டு வரச்சே, இவனுங்கூட வாரேமெண்ணு சொன்னுன். எல்லாரும் கூடிக்கொண்டு போனேம். போனவிடத்திலே நல்லதம்பி பிள்ளை ஒருவிடத்திலேயிருந்து கொண்டு, பொன்னம்பலத்தை முன்னே போய், இந்த காகிதத்தை முசியே இக்கிலு கையிலே குடுத்து, பிள்ளை அவர்கள் மனுஷன் வந்தவன், உடம்பு சொஸ்தமில்லை. பின்னே வருகுருனேன்னு சொல்லி குடுத்தாகவும், அவன் அப்படியே சொன்னதாகவும் மறுநாள் பத்து வருகன் நசர்[154] வைச்சுக் கண்டதாகவும், இவனை தன்னன்டையிலே துபாசியாய் வைச்சுக்கொண்டு, தன் தண்டுக்கு கொத்தவாலத்தனம்[155] குடுத்தாகவும், அதிலே நாலு பணம் சம்பாதிக்க சிலவு பண்ணதாகவும், பிற்ப்பாடு முருரி பேரிலே சண்டைக்குப் போனவிடத்திலே, ஒரு பெரிய மனுஷன் முன்னிலையாய், சிறுது வட்டம் நடந்து, முசியே இக்கிலுடனே யென்னென்னமோ போதிச்சு, அவன் கையிலே காகிதம் வாங்கிக்கொண்டு, முருரி அண்டைக்குப் போய், சிறிது பேச்சு மூச்சு நடந்து கொண்டு இருக்கச்சே, இந்த சேதி அய்துருனுன் கேட்டு முசியே இக்கிலுவை அழைப்பிச்சனுப்பிவிச்சு, உன் மனுஷன் முருரி அண்டைக்குப் போயிருக்கிருரே, அவன்னன்டையில் உங்களுக்கென்ன கவை? யென்னு கேட்டதாகவும், நான் அறிஞ்சதில்லை. ஆனுல் வடக்கேயிருந்து யொருவன் வந்திருந்தான். உடம்பு சொஸ்தமில்லை யெண்ணு வெங்களூருக்குப் போய்விட்டான். ஆனுல் அவன் யெங்கே போனுனேவெண்ணு சொல்லி, அறிஞ்சுக் கொண்டு வந்து, அந்த ஷணம் ஒரு ஓலையெழுதி, ஆளும் அனுப்பி, நீ அங்கே யிருக்கத் தேவையில்லை. யெங்கேயாகிலும் போய் விடு. யிங்கேயும் வரவேண்டாமெண்ணு யெழுதி அனுப்பினதாகவும், அதை பாத்துக்கொண்டு, அந்த பெரிய மனுஷன் முன்னிலையாக, முருரியைக் கண்டு பேசி, இப்போ சேதி வந்து, நீங்கள் பேசின உடன்படிக்கை படிக்கி ருத்திரி தண்டு கூடச்சே

பின்னே யிங்கே அழைச்சுக்கொண்டு வருகிறேன். ஆனால் இப்போ யேதாகிலுங் கையிலே கொண்டு போய், கொடுக்க வேண்டுமெண்ணு சொன்னதாகவும், நல்லதெண்ணு அய்யாயிரம் ஆருயிரம் வருகனும் அஞ்சு பேர் கொல்லரையும் கூட்டி, நாலு சோபுதாரும்[156], இருபது முப்பது சேவுகருங் கூட்டி அனுப்புவிச்சதாகவும், ருத்திரிக்கி வந்து, தண்டுக்கு நாலு நாழிகை வழியிலே, சேவுகரை யெல்லாம் நீங்கள் இருங்கோள்யெண்ணு நிறுத்திப்போட்டு, ரெண்டு நாழிகை வழி வந்து, ஒரு தோப்புனிடமாய் இருக்கச் சொல்லி ருத்திரி பதிநஞ்சு நாழிகைக்கு அழைச்சுக்கொண்டு வாறேண்ணு சோப்புதாரை நிறுத்திப்போட, தண்டில் தான் இருக்கிற விடத்திலே கொல்லறை வைச்சு பதினஞ்சு நாழிகைக்கு, முசியே இக்கிலு அண்டைக்கு வந்ததாகவும் நீ இன்னம் போய் விடவில்லேயா? இங்கே ஏன் வந்தாய்? இப்போதானே போய்விடு யெண்ணு சொன்னதாகவும், நான் யெப்படி போவேன்? சிலவுக்கு இல்லேயெண்ணு சொன்னதாகவும், பத்து வருகன் சிலவுக்கு குடுத்து, ஒரு யெருது மாடுங் குடுத்து அனுப்பிவிட்டதாகவும், இந்த ஷணம் தான் இருக்கிற வீட்டுக்கு வந்து, குதிரையும் அந்த மாட்டும் பேரிலே கண்டவாளம் முஸ்திது பண்ணிக் கொண்டான். அந்த கொல்லர் இவடத்திலே இருந்து போய், சேவிகத்துக்கு அமர்ந்த பேர்களாம். அவர்களுக்கு பேருக்கு நூறு வருகன் குடுக்குறேமெண்ணு சொல்லி, அவர்களேயும் அழைச்சுக் கொண்டு ருத்திரியிலே புறப்பட்டு வந்ததாகவும், அஞ்சு நாள் ருவும் பகலுமாய் வெங்காளூர்[157] வந்து சேர்ந்ததாகவும், அவடத்திலே ஆயிரம் வருகனுக்கு பிடவை தினிசுகள் வாங்கி, அஞ்சாறு மாட்டும் பேரிலே போட்டு, சேவுகர், கொல்லர் எல்லாரையுங் கூட்டி ருத்திரியிலே ஆயங்குடாமல் அனுப்பிவிட்டதாகவும், அவர்கள் காட்டிலே பிறப்பட்டு, பத்து நாழிகை வழி வந்ததாகவும், அவடத்திலே ஆயக்காறர் முழிச்சுக் கொண்டு, ருத்திரி இருபது ழைிகைக்கு வருவானெண்ணு மறிச்சதாகவும் சொன்னதுக்கு பின்னே வருகிறன், சீட்டும் வருகுது யெண்ணு சொல்லி நடந்ததாகவும், அவர்கள் போக ஒட்டாமல் மறிச்சதாகவும், ஒருத்தனே கட்டி வச்சுப் போட்டு போனதாகவும், மறுநாள் உதயத்துக்கு, வெங்காளூரிலே[158] ஆயக்காறர் மனுஷர், பொதியைப் பார்த்து காணமல், நல்லதம்பி பிள்ளேயை பிடிச்சுக் கேட்டதாகவும், வெள்ளக்காறன், பிடவை, கமுசு, உடுபிடவை, போகுதெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே இவனே அழைச்சுக்கொண்டு, ஆயங் குத்தகைகாறணன்டையிலே விட்டதாகவும், இவனே வைச்சுக் கொண்டு இருபது பேர் சேவுகரை யனுப்பி யெந்த மட்டும் போனலும் திருப்பிக் கொண்டு வரச் சொன்னதாகவும், இரு காத வழி போய், திருப்பிக் கொண்டு வந்து, பொதி அவிழ்ந்து கண்டதாகவும், அப்போ அவனுக்கு வெகுமானமும் குடுத்து அறுபது பொன் தீர்வையுங் கொடுத்து, அவ்விடம் விட்டு பிறப்பட்டு, சேலத்துக்கு வந்து, அவடத்திலே அன்னூறு வருகன் பிடவை வாங்கினதாகவும், அவ்விடம் விட்டு பிறப்பட்டு, வெங்கிட்டாம்பேட்டைக்கு வந்து சேந்து, அவடத்திலே நாலஞ்சு நாளிருந்ததாகவும், அங்கே வெங்கிட்டருமன் வீட்டிலே, இந்த வருகன் பையை வச்சு அங்கிருந்து வரச்சே, அவடத்தில் சிறுது பிடவைகளே வச்சு, குறைப்பிடவையையும் இந்தப் பணமும் கொல்லர் கையிலே கொடுத்து கூடப் பிறப்பட்டு சிதம்பரம் வந்து சேர்ந்ததாகவும், அவடம் விட்டு கொள்ளடத்துக்கு இக்கரையிலேயே கடலேக்காய்நல்லூரிலே வடமலேயார் பிள்ளே அண்டைக்கு வந்து, அங்கே யிருந்து அவன் கையிலே, மூவாயிரம் வருகன் கொடுத்தாகவும், அப்போ அந்த பையை அவழ்த்த விடத்தில், ஒரு பையிலே னூத்தன்பது வருகன் யெடுத்துக் கொண்டு, தையலுக்கு சுருக்கு ஒட்டுப்போட்டு இருந்ததாகவும், அது வெங்கிட்டருமன் வீட்டிலே வைச்ச விடத்திலே யாரோ யெடுத்துக் கொண்டதாய் சொன்னதாகவும், அவடம்

விட்டு சீயாழி வந்து சேர்ந்ததாகவும், அவடத்திலே ஆயம் குப்பய்யன், தீர்வை கொடுக்கச் சொன்னதாயும், ஆயத்துக்கு பத்து வருகன் கொடுத்து, நூறு வருகன் வட்டிக்கு கடன் கொடுத்து, சீட்டு வாங்கிக் கொண்டதாகவும், அவடத்து அமில்தாரின்............க்கு இறனூறு வருகன் கொடுத்து, கடன் சீட்டு வாங்கி கொண்டதாகவும், அவடம் விட்டு பிறப்பட்டு திருமெஞ்ஞானம் வந்து சேந்ததாகவும், அவடத்திலேயும் வெகு சபலம் பண்ணிக் கொண்டு, யென்னேரம் கேளிக்கையிலே இருக்கிறதாகவும், கொண்டு வந்ததெல்லாம், நல்ல மங்காளேன்னு ஒரு தேவடியாள் வைச்சுக் கொண்டு இருக்கிறதாகவும், அவள் வீட்டிலே வச்சுக்கொண்டு இருக்கிறதாகவும், சிலவெல்லாம் அவன் கொடுக்கிறதெண்ணும், முடிப்பு கொண்டு வந்த கொல்லருக்கு சொன்ன படி கொடுக்க யில்லேயெண்ணும், அவர்கள் ரெம்ப லச்சை பண்ணதாகவும், அவர்களுக்கு யெவ்வளவோ கொடுத்து, பிற்பாடு வரச் சொன்னதாகவும் திருக்கடையூர் கோவிலுக்கு அன்பது வருகன் கொடுத்தாகவும், திருமெஞ்ஞானம் கோவிலுக்கு தேர் கட்டி வைக்க நாள் கொண்டதாகவும், இப்படி சொன்ன சேதியாய்ச் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஷு ஆவணி மீ௳ உகூ ௳ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ ய ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. தயங்கம்பாடியிலே இருந்து, தஞ்சாவூருக்கு போன, துப்பாக்கிகளே பிடிச்சுக்கொண்டு, காரைக்காலுக்கு கொண்டு போய், சென்னப்பட்டணத்துக்கு அனுப்பிவிச்சார்களே, அதுக்கு தஞ்சாவூர் ருசா, சென்னப்பட்டணத்துக்கு யெழுதி அனுப்பி விச்சதுக்கு, மறுபடியும் தஞ்சாவூர் கொண்டு போய், சேத்துப் போடச் சொன்னதாகவும், கூடலூர் போய் சேந்து, சிதம்பரம் வந்து சேந்ததாகவும், இப்படியாகச் சொல்லிக் கொண்டார்கள்.

இந்தனுள் சின்னய்ய பிள்ளே அவர்களுக்கு திதி நடந்தது.

## சித்திரபானு ஷு ஆவணி மீ௳ ஙய ௳ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ யக ௳

இந்தனுள்...

## சித்திரபானு ஷு ஆவணி மீ௳ ஙக ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ யஉ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. வறளாம் மைச்சினன் சாமினுதப் பிள்ளே, ஒரு கிறிஸ்துவன் கொல்லத்துக்காறன், சத்தியனுத்தனுக்கும் ஒண்ணுக்கொண்ணு சண்டை போட்டு, அடி தடி மட்டும் வந்து, தயங்கம்பாடித் துரை அண்டைக்குப் போய் சொல்லிக் கொண்டதாகவும், அவர் கேட்டு, யென்னேரம் இவர்கள் வியாச்சியமே வேலேயாயிருக்குது யெண்ணு கோபம் பண்ணி, பேருக்கு பத்து அடி அடிச்சு, தெரித்து விட்டதாய் சொல்லிக் கொண்டார்கள்.

## சித்திரபானு ௵ புரட்டாசி ௴ க ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு ௴ யங ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நேத்து ருத்திரி, காரைக்கால் பிறகாச முதலி குமாரன், சாந்து யென்குறவன், அவன் சிறிய தாய் புருஷன், சவுரிருயனென்குறவனை, ருத்திரி ஒன்பது மணிக்கு, மேக ஆரம்பமான இருட்டிலே, தெருவிலே சல்லாபிச்சுக் கொண்டிருக்கச்சே, கத்தியாலே குத்தினதாகவும், அந்த குத்து துடையிலே பட்டதாகவும், அப்பா! குத்திஞண்டா வெண்ணு அலறிக் கொண்டு, தலைக்கடையிலே வந்து விழுந்ததாகவும், வரச்சே ஒரு குத்து குத்தினதாகவும், அது தப்பிப் போனதாகவும், அதிலே வீட்டிலே யிருந்த பேர் ஒடி வந்ததாகவும், இவன் ஒடுகுறதைக் கண்டதாகவும், அதிலே, யெங்கேயோ பதுங்கி போனதாகவும், இவனை உள்ளே யெடுத்துப் போய், காயங் கட்டினதாகவும் சொன்ஞர்கள். ஆனுல் இருவருக்கும் வந்த பொல்லாப்பு யென்ன வென்னு விசாரிச்சால், பிறகாச முதலியாருக்கு ரெண்டாந் தாரத்தின் பிள்ளை சாந்துவுக்கு, பிறகாச முதலியார்விடத்திலே அன்னூறு வருகன் வந்ததாகவும், அந்த வருகன் கொண்டா ரெட்டி மாரிபத்திலேயும், சவுரிருயன் மாரிபத்திலேயும் இருந்ததாகவும், அந்த பணத்தை சாந்து கேட்டவிடத்திலே, பேச்சு நடந்தது. ஒருவருக்கொருவர் பொல்லப்பானதாக சொன்ஞர்கள். உதையமான பிறப்பட்டு, இந்த சங்கதியெல்லாம் துரைகள் கேட்டு, காயம் பட்டவனை எடுத்து வரச் சொல்லிப் பாத்து, அவன் வீட்டுக்கு அனுப்பிவிச்சு, இவனைத் தேடிப் பாத்துக் காணுமல், கோட்டை வாசப்படியிலே ஒருவனையும் விடாமல் பத்திரம் பண்ணி, இவனும் இவன் பெண்சாதியும், வறளாம் வீட்டிலே யிருந்தபடியினுலே, நாலு பேர் சொல்தாதுகளை யனுப்பி அவன் வீட்டிலே காவல் வச்சு, ஒருத்தரும் வெளியே விடாமல், அவனை ஒப்பிக்கச் சொல்லச் சொன்னதாகவும், அதின்பேரிலே வறளாம் எனக்கென்ன கவையிருக்குது? நான் வேளாங்கண்ணிக்கு போகச்சே, இவனை வீட்டிலே வைச்சுப் போட்டு போனேனே, அதிலே நான் உத்திரவாதம் பண்ண வேண்டியது என்ன? வென்னு பேசினவிடத்திலே, மேற்படி துரை ஒரு நடப்புச் சொல்லி, இருளப்பிள்ளைக்கு யேதோ குடுத்து, சாயங்காலம் அவன் தட்டுமுட்டும், அவன் பெண்சாதியின் யிருக்குற உடமையும், யெழுதி வைக்கச் சொன்னதாகவும், அந்தப்படியே சக்கறத்தார் யெழுதிக் கொண்டு, இதுகள் குமுசலிலே எப்படி தீந்து உத்தாரம் பண்ணுகிருர்களோ, அதுவரைக்கும் உத்திரவாதம் பண்ணவேணுமென்னு, வறளாம் வசம் பண்ணதாகவும், பிற்பாடு காவல் விட்டதாகவும் சொன்ஞர்கள். மூணு மணிக்கு பிறகு, கோட்டையிலே மனுஷரைப் பாத்து விடுகுறதாகவும், சாயங்காலமே அவரவர்கள் யெப்போதும் போலே விட்டதாகவும், குத்தின சாந்து யென்கிறவன் ருத்திரியே கோட்டைக்கு வெளிப்பட்டு, அப்புறம் போய் விட்டதாகவும் சொன்ஞர்கள்.

## சித்திரபானு ௵ புரட்டாசி ௴ உ ௳ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு ௴ யச ௳

இந்தனுள், நம்முட காடி மாடு ரெண்டும், வெங்கிட்டாம் பேட்டைக்கு முன் ௴ உள ௳ க்கு அனுப்பி இருந்தோமே, அதிலே ஒரு மாடு, சீகாழியைக் கிட்ட வாய்க்காலிலே, உசாயிலே அகப்பட்டுக் கொண்டு, வெளியே வரமாட்டமல் ரெண்டு ஞளைக்கி பிறகு, இருக்குதுக்குள்ளமட்டும் சேர்மானப்படுத்தி குடுத்தாகவும், யெடுப்படாமல் அதிலே,

மாட்டும் பேரிலே நிறுத்தின ஆள், கால் பாவாமல் போனதாகவும், அங்கே தானே வைச்சுக் கொண்டு, பில்லு வாயிலே குடுத்தாகவும், கழிச்சல் காணுகுறதாகவும் வந்து சொன்ஞன். இந்த ஷணம் வாரையும், கயிறும் மனுஷரையும் கூட்டி அனுப்பி, ஒரு தரவு சேதி விசாரிக்க சொல்லி, சிலவுக்கு குடுத்து அனுப்பிவிச்சோம். அவர்கள் போய் எடுத்து வந்து, சமீபத்திலே ஒரு சாவடி சேந்து, அவிழ்தம் பசாலே மத்தது குடுத்து, இந்தஞள், செத்து போனதாய் சேதி வந்துது. இந்தஞள் போன வருஷம், புரட்டாசி மீ௳ அண்ணுசாமி காலம் பண்ணி போன தினத்துக்கு, எதிர் வருஷம், இந்த மாசத்திலே, இந்த தினத்திலே, என்ன நடக்குமோவென்னு பாத்து இருந்ததுக்கு, அந்த மிறுத்திவு பலன் மாட்டும் பேரிலே போச்சுது. ஆஞல் தையி மீ௳—த்தையிலே சுப சூசிகமாகவேணும். கண்டால் சித்திரை, வையாசி மீ௳ த்திலே சுபம் கெட்டியாய் பிடிக்கும். அல்லது தோஷம் கண்டால் இன்னம் பாத்து அறிய வேண்டியது.

## சித்திரபானு ௵ புரட்டாசி மீ௳ ௩ ௨ புத்வாரம்: சதளஎசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ யரு ௨

இந்தஞள், சென்னப்பட்டணத்துக்கு போயிருந்த மாஞரியப்பன் வந்தான். அவன் சொன்னது. கேவுனர் பிக்கட்டு சீர்மைக்குப் போருரென்னு சொல்லிக் கொண்டார்கள். ரெண்டுக் கப்பல் பயணம் பண்ணுகிறதாகவும், வங்காளத்துக்கு ஒரு கப்பல் போனதாகவும், நபாபு ம்மமுதலிகான் சென்னபட்டணம் வந்து சேந்ததாகவும், மணிலாவுக்கு போன கப்பல் பத்து ஞூலயிலே வரும். வந்தவுடனே, வடக்கே தண்டு, துலுக்கருக்கு மத்தத்து போறதாகவும், இப்படி சொல்லிக்கொண்டதாய் சொன்ஞன். இதல்லாமல், தெளிசிங்க முதலியார், ரெண்டு சரிகை பையி, சாரி சோடும், கோசுப் பத்திரி பக்கா, முக்கால் சேரு கறுப்புப் பட்டு நூல், கசகசா முக்கால் சேரும் குடுத்து அனுப்புஞர். மாஞரியப்பன் கொண்டு வந்து குடுத்தான்.

## சித்திரபானு ௵ புரட்டாசி மீ௳ ச ௨ குருவாரம்: சதளஎசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ யசா ௨

இந்தஞள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்திலே இருந்து, துரை காகிதம் யெழுதி குடுத்து, ஒரு பிருமணனைப் பயணம் பண்ணி அனுப்பி, சக்குலுஞன் குமாரனை அழைச்சு வரச் சொல்லி சொன்னதாகவும், பத்தாவிலேயிருந்து நயிஞர் உத்தியோகம் அவர் குமாரனுக்கு, அவர் கையிக்கு காகிதம் வாங்கி யனுப்பச் சொல்லி வந்திருக்குறதாகவும், அதின்பேரிலே அனுப்பிவிச்சதாகவும், அதுக்கு, குமுசல் காகிதம் யெல்லாரும், கையெழுத்துப் போட்டு அனுப்பிவிச்சால், வருகுரேமென்னு சொன்னதாகவும், இத்தனை தூரத்திலே யிருந்தால் போக வரச் செல்லுமே, சமீபத்திலே இருந்தாலாவது யெண்ணு சொல்லி வந்ததாகவும், அதின்பேரிலே பிறையாத்துக்கு வருகுறதாகவும், ஆனைக்குடி சாமிஞதப் பிள்ளை வீட்டுக்கு வந்ததாகவும், அவர் சீட்டு குடுத்து விசாரிக்குறதாகவும் சொன்ஞர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ ரு ௨ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ யஎ ௨

இந்தனுள்

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ சா ௨ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ யஅ ௨

இந்தனுள் நாகப்பட்டணத்துக்கு, பத்தாவிலேயிருந்து ஒரு சீமைக்கப்பல் வந்ததாகவும், அது குழம்பு பிடிச்சு வந்ததாகவும் சொன்னுர்கள். அதுனுடைய சேதி அறிய வேணும்.

இதல்லாமல், தயங்கம்பாடிக்கு பிடுத்துக்கீசுக்காறன் வற்த்தகர் சுலுப்பு ஒண்ணு வந்ததாகவும், அதிலே பன்னீர் முதலான சரக்குகள் வந்ததாகவும், அதுக்கு எசமான் இங்கே இருக்குருனென்னு வந்ததாகவும், அவன் பறங்கிப்பேட்டையிலே இருக்குறதாகவும், அவணண்டைக்கு மனுஷர் அனுப்பினதாகவும், வந்தவுடனே சரக்கு எறக்குவார் யெண்ணு சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ எ ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ யகூ ௨

இந்தனுள், நாகப்பட்டணத்திலேயிருந்து, கேசவப் பெருமாள் பிள்ளை தயங்கம்பாடிக்கு வந்து, அந்த துரைக்கு இவடத்திலே இருக்குற பிருஞ்சுக்காறர் கையிலே இருந்த, கண்ணுடி முதலாகிய தினிசுகள் வாங்கி இருந்துது. அதை படகும் பேரிலே யேத்தி, நாகப்பட்டணத்துக்கு அனுப்பிவிட்டு, மத்தியானத்துக்கு இவடத்துக்கு வந்து சாப்பிட்டு, ருத்திரிக்கு எரிக்கட்டாஞ்சேரிக்கு போய் வாரேமென்னு போனுர்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ அ ௨ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ உய ௨

இந்தனுள், தெற்கு வகுப்பு பாளையக்காறன் கஸ்தூரினுன் மனுஷன் ருமசாமி யென்குறவர், வந்து சொன்னது. முன்னுலே நாகப்பட்டணத்துக்கு, முசே முதாவு வந்தவுடனே, சின்னப்பய்யனும் திருவேங்கடத்தா பிள்ளையும் வரச் சொன்னுர்களென்று போனுர்களே, அப்போ யெங்கள் கஸ்தூரினுரையும் அழைச்சுக் கொண்டு போனுர்கள். போனவிடத்திலே முசே முதா சொன்னது. நீங்கள் வந்தீர்களல்லவா? நீங்களெல்லோரும் போங்கோள். கப்பல் வந்தவுடனே வருவீர்கள். இன்ன மாத்திரம் இருக்கட்டுமென்னு சொன்னுன். அனுப்பிவிச்சுக் கொண்டு வந்து விட்டோம். பிறப்பாடு திருவேங்கடத்தா பிள்ளை, இவன் சகல காரியத்துக்கும் வந்ததாகவும், இன்ன மாத்திரம் இருக்கச் சொன்னுன். இதுக்கு இவனுக்கு ஆளை சொல்லி னுழைய வேணுமெண்ணு இருக்கச்சே, முசே புர்சே அவன் மகளும் வருகுருர்களேண்ணு சேதி கேழ்க்கப்பட்டு, அவன் வந்த பிறகு, கவை யனுகூலம் பண்ணிக் கொள்ளலாமென்னும் பிறையாத்திலே யிருக்குற

தன் தமையன் மகனை, வெங்கிடாசல பிள்ளை இருக்கச் சொல்லி யனுப்பி சேரச்சே, தயங்கம்பாடிக்கு வருவார். நீ போய் கண்டு பேசி தெரியச் சொல்லி, சாக்குறதையாய் கட்டிக் காத்துக் கொண்டு இருக்கச் சொல்லி, சொல்லி யனுப்பிவிச்சார். அப்படியே அவரும், அவர் குமாரத்தி, முசே முதாவு பெண்சாதியும் வந்தார்கள். வந்தவுடனே அவர்களைக் கண்டு தெரியச் சொல்லி, அவரைக்கண்டு சொல்லிவச்சு, தன் மாரிபத்திலே எல்லாம் நடப்பிச்சால், இருபதினாயிரம் ரூபாய் மட்டும் யிருக்கப்பண்ணி, குடுக்குறேனெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே திருவேங்கிடத்தா பிள்ளைக்கும் சொந்த துபாசி நயினியப்ப முதலியும் வெகுமதி குடுத்ததாகவும், அதின்பேரிலே சோணாசல பிள்ளையும் ருமலிங்க பிள்ளையும், பின்னையும் யவர்களுக்கு காகித பத்திரமெழுதி, சீக்கிறத்துக்கு வந்தால், அவரவர்கள் உத்தியோகம் அவர்களுக்கு. இல்லாவிட்டால் இனிமேல் ஒரு காரியமும் நடக்கமாட்டாது யெண்ணு எழுதி அனுப்பிவிச்சதாகவும், அதின்பேரிலே யிருபதினாயிரம் ரூபாயும், அவரவர் பேரிலே விதிச்சு யெழுதினதாகவும், இப்படி இருக்க, சோணாசல பிள்ளை வந்து, தம்முட காரியம் சொன்னதையும், அவருக்கு கும்பினிரிலே வரவேண்டிய பணமெல்லாம் வாங்கிக் குடுக்க, ருமலிங்க பிள்ளையை பிடிச்சு தன் வசம் பண்ண, தன் உத்தியோகம் தனக்கு குடுக்க, உமக்கு இன்னது குடுக்குரேமெண்ணு உடம்படிக்கை பண்ணதாகவும், அதுக்கு பதிணுருயிரத்துக்கோ, இருபதனாயிரத்துக்கோ லெத்துறு[159] சாஷ்சி குடுத்ததாகவும், அப்படி இருக்க ஒரு வர்த்தகன், ரெண்டு வயிர மோதிரம் கொண்டு வந்து காண்பிச்சதாகவும், அதிலே ஒண்ணு, முன்னூறு வருகனும், ஒண்ணு இறநூத்தி பதினஞ்சு வருகன். அதிலே முன்னூறு வருகன் மோதிரம், சோணாசல பிள்ளையை குடுக்கச் சொன்னதாகவும், என்ன காரியத்துக்கு கண்டு குடுக்குறது? இப்போ என் கையிலே ஒண்ணுமில்லை யெண்ணு சொன்னதாகவும், அப்படி இருக்க, தான் போய் முசே முதாவும் இருக்கச்சே, மதாமுக்கு அந்த மோதிரத்தை குடுத்து பிறப்பாடு கஸ்தூரி ரயக்கரை, மோதிரத்துக்குப் பணம் கேட்டனுப்பினதாகவும், யெனக்கென்ன கவையிருக்குது? குடுக்கவேணுணு சொன்னதாகவும், அதின்பேரிலே ஒண்ணுக்கொண்ணு கச்சாப்பட்டதாகவும், அதிலே மோதிரக்காறன் பணத்துக்குச் சுறுக்குப் பண்ணதாகவும், இந்த கச்சா தகருறு பேசி தீந்து கஸ்தூரி ரயக்கனுக்கு கவையில்லாமல், திருவேங்கடத்தா பிள்ளை பேரிலே பொறுத்ததாகவும், அந்த மோதிரக்காறனுக்கு பணம் குடுக்க வேணுமே; இதுக்கெப்படி யெண்ணு முசே முதாவுடனே, இந்த பாளையக்காறனுக்கு வெகு பணம் இருக்குது. அவன் குடுக்கறதுக்கு பிறையாசமாயிருக்குது. அதுக்கு அவர் பங்காளி ஒருவன் யிருக்குறன். அவனுக்கு ஒரு வெகுமானம் குடுத்தால் இவன் விட்டதுக்கு வருவானென்னு சொன்னதாகவும், அதுக்கு சம்மதிச்சதாகவும், கஸ்தூரி ரயக்கனுடனே சாப்பிட்டுக் கொண்டு இருந்த பிள்ளையாண்டானை, மித்த பேதம் பண்ணி அழைச்சுப்போய், கப்பல் வந்தவுடனே, காரைக்கால் சீமைக்கு பாளையக்காறத்தனம் குடுத்து, ஒரு வருகனிலே பாகை ஒண்ணு குடுத்ததாகவும், பிற்ப்பாடு கஸ்தூரி ரயக்கன், யென்னை அழைச்சு வந்து இப்படி மோசம் பண்ணலாமா? யெண்ணு கேட்டதாகவும், இந்த வருகன் குடுத்தால் (மேற்படி) ஒனக்கு வெகுமானமும், காகிதமும் வாங்கிக் குடுக்குறேனெண்ணு சொன்னதாகவும், யென் கையிலே ஒண்ணுமில்லை யெண்ணு சொன்னதாகவும், உங்கள் சிறையிலே ஒரு தேவடியாளிருக்குருளே, அவள் உடமையிலே வாங்கிக்குடு யெண்ணு சொன்னதாகவும், எங்கேயாகிலும் உண்டா தேவடியாள் உடமை வாங்கிக் குடுக்கிறது? யெண்ணு சொன்னதாகவும், ஆனால் இனிமேல் இருக்க கவையில்லை, துரை வீட்டுக்கு வர தேவை யில்லையெண்ணு சொன்னதாகவும், நல்லது யெண்ணு வந்து,

வெளிப்பாளையத்து வீட்டிலே இருந்ததாகவும், இந்தச் சேதி யெல்லாம் சின்னப்பய்யனுக்கும் சொல்லி அனுப்பிவிச்சதாகவும், அவன் திருவேங்கடத்தா பிள்ளையிடம் விசேஷம் போய் பண்ணவேணுமென்னு இருக்குறபடியினாலே, முசே முதாவுக்கு தானாய்ச் சொன்னாலே யாகாது யெண்குறதாக, இவரை அழைச்சுக் கொண்டு, முசே பொலோ வீட்டுக்கு அழைச்சுப்போய் இதுகளெல்லாம், யெப்படி கதையாய் சித்தரிச்சுச் சொல்ல வேணுமோ, அப்படி யெல்லாம் சொல்ல, நல்ல கப்பல் வந்தவுடனே, உன் காரியத்திலே நான் இருக்கிறேன். நீ சும்மாயிருயெண்ணு சொல்லி போட சொல்லி, முசே முதாவு தன் வீட்டுக்கு வந்த விடத்திலே, இதுகளெல்லாம் சொல்லி, இதுனாலே வெளியிலே, உன் பேச்சு ரொம்ப கவலையாய்ப் போச்சுதெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே திருவேங்கடத்தா பிள்ளை பேரிலே கோபம் பண்ணதாகவும், மோசத்துக்காறன் பணத்துக்கு, அடமானமில்லாத படியினாலே, கந்தப்ப முதலியின் மூணு பதக்கமும், ஒரு துராயும், ஒரு சிரோப்பாவும் விக்க குடுத்து, ஒரு மனுஷரையும் அனுப்பிவிச்சதாகவும், அதிலே ஒரு பதக்கத்தை யீடு குடுத்ததாகவும், மறு னாள் அந்த பதக்கத்தை விலை தீத்துக் குடுத்து , பின்னே ஒரு பதக்கத்தை எழுபது வருகனுக்கு வித்து, அவனுக்கு குறையுங் குடுத்து விட்டு, சிலவு பண்ணிக் கொண்டதாகவும், அந்த சேதி கந்தப்ப முதலி கேட்டு, ஒரு பிருமணனையும் பின்னையும் ஆரேயோ அனுப்பி இருந்து, வாங்கிக் கொண்டு வரச்சொன்னதாய், அவர்கள் போய் சுறுக்குப் பண்ணதாகவும், அதின்பேரிலே சிறுது நகையும், சிறுது நகை வித்த பணமும் குடுத்து, இந்த வருகனுக்கு இவிடத்துக்கு சொல்லி அனுப்பி, சிறுது தட்டுமுட்டு அழைப்பிச்சு வித்துக் குடுத்தும், காதிலே போட்டிருந்த கடுக்கன் கூட வித்து, யேறிக்கொண்டு போன குதிரையை, ஆரோ வற்த்தகன் கையிலே நூறு வருகனுக்கு அடகு வச்சு வாங்கிக் குடுத்ததாகவும், இப்படி இருக்க இந்த மோதிரத்துக்கு இந்த மட்டுமாச்சுதே, அந்த மோதிரம் சோணாசல பிள்ளை பேருக்கு குடுத்தால், லச்சை வரப்போகுது யெண்கிறதிலே நிறுத்திப் போட்டதாகவும், செக்குறுதியும் றசீதும், சிறிது பணம் குடுக்குறேமெண்ணு சொன்னதாகவும், அதை முசே முதாவு கேட்டதாகவும், நாங்கள் சொன்ன⟨த்⟩திலேயெண்ணு சொல்லி திருவேங்கிடத்தா பிள்ளை அண்டைக்கு வந்து, நான் உன்னுடனே சொன்னா யெப்படி நீ சொல்லுவாய்? உன்னை குத்துறேன் வெட்டுறேன்னு சொல்லிக் கொண்டு திரிஞ்சதாகவும், பிறப்பாடு சோணாசல பிள்ளை, யெனக்கு பேசினப்படி முசே முதாவு கையெழுத்துப்பட காகிதம் வாங்கிக் குடுக்குறேமெண்ணு சொன்னீரே, அந்தப்படியே வாங்கித் தாருமெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே இருவருக்கும் வியாச்சியப்பட்டு, சின்னப்பய்யனுடனே சொல்லிக் கொண்டதாகவும், அவர் யென்னுடனே சொல்ல வேணுமென்னதாகவும், பிறப்பாடு சோணாசல பிள்ளை, சின்னப்பய்யன் வழியிலே காரியமும் நடத்திக் கொள்ளுகிறதாகவும், ருமலிங்கப் பிள்ளை வந்தவுடனே {வந்தவுடனே} முசே முதாவண்டையிலே துபாசித்தனத்துக்கு திருவேங்கிடப் பிள்ளை வந்ததாகவும், அப்போ ருமலிங்கப் பிள்ளை சொன்னது. இவர் துபாசித்தனம் கவையில்லை. யெனக்கு துபாசி வேறே இருக்குருண்ணு சொன்னதாகவும், அவன் காரியமும், தன் துபாசி வழியே பேசிக் கொள்ளுகுறதாகவும், இதல்லாம் சின்னப்பய்யன் வழியே தான், அந்த காகிதபத்திரமெல்லாம் நடக்குறதெண்ணும், இவர் வழியே றங்கோ பண்டிதனை, தஞ்சாவூருக்கு யனுப்பி, ருசா நாலாயிரம் ரூபாயும், ஒரு குதிரையும் வந்ததாகவும், அது தான் இதுவரைக்கும் சிலவு பண்ணிக்கொண்டு வருகுறதெண்ணும், றங்கோ பண்டிதனுக்கும், மதுராந்தக பண்டிதன் அண்ணன் குமாரனுக்கும், மாசம் ரெண்டு

வருகன் சிலவுக்கு குடுத்துக் கொண்டு வருகுருணெண்னும், சின்னப்பய்யனுக்கு பண்ண சிலவெல்லாம் யெழுதி வாங்கச் சொன்ருரென்னும், இப்படி இருக்க, இங்கிறிசுக்காறர் கப்பல் பிறிசேனரை யெத்த வந்துதே, அப்போ சிறுது பேரை வெளியிலே யனுப்ப வேண்டி யிருந்துது. அப்போ சின்னப்பய்யனே அழைப்பிச்சு, அவருடனே சொன்னதாகவும், அவர் சொன்னது. பாளேயக்காறறுட அனுகூலத்தில் நடக்க வேண்டியது. அவனே வில்லங்கம் பண்ணி தெரித்திவிட பாடாப் போயிச்சுண்ணு சொன்னதாகவும், மெய்தான்; திருவேங்கடம் பேச்சு கேட்டு கெட்டுப் போச்சேண்ணு சொல்லி, அவனே யெப்படியும் அழைப்பிக்க வேணுமெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே கஸ்தூரிரங்கனே யழைப்பிச்சு, ............ சொல்ல வேண்டிய விசேஷங்கள் சொல்லி, பிறசேனரை அப்புறப்படுத்த சொன்னதாகவும், அதின்பேரிலே அவர்களேயும் அப்புறப்படுத்தி, போக்குவரத்து காகிதம்கூட, இவர்கள் வழியிலே நடந்து வந்துதெண்னும், இதின்பேரிலே முசே முதாவுக்கு, இவர் பேரிலே றெம்ப சந்தோஷமென்னும், பிற்பாடு ஊருக்குப் போய் வருகுரேனென்னு கேட்டதாகவும், அதுக்கு உத்தாரம் குடுக்கமாட்டோமென்னு சொன்னதாகவும், பத்து ஞளேயிலே வருகுரேனென்னு சொன்னதாகவும் சீக்கிறத்துக்கு வரச்சொல்லி உத்தாரங் குடுத்தாகவும், பிற்பாடு வந்ததாகவும், இதல்லாமல் முசே இக்கிலு தண்டுக்கு போக வேணுமென்னு வேறே மாற்க்கமாய் கொண்டு போக வேணுமெண்ணு சொன்னதாகவும், நல்லதென்னு அரியலூருர் அவடத்து சொல்லி, திட்டப்படுத்தி இருக்குரேமென்னும், இப்போ ருமலிங்க பிள்ளே, றங்கோ பண்டிதன், சின்னப்பய்யன் வழியிலே, வெளியே போக சிறுது யோசனே நடக்குதென்னும், முசே முதா குதிரை, திருவேங்கடத்தா பிள்ளே வசத்திலே விட்டு தீனிச் சிலவுக்கு நித்தம், நாலு பணம் குடுத்து வருகுருனென்னும், இவர் குதிரைச் சிலவு நடந்து போகுதெண்ணும், இவர் சிலவுக்கு யினியும் பணங்குடுத்து வருகுருணென்னும், இது முதலான சேதிகளாய் சொன்ஞன்.

இதல்லாமல் இண்ணேய தினம், வெங்கிட்டருயன் சென்னப்பட்டணத்துக்கு போஞர். அவர் கையிலே யனுப்பின காகிதம், அயய்த்தம்பி வெங்கடாசல பிள்ளே, இறநூறு வருகன் கடஞக அனுப்பச் சொல்லி யெழுதின காகிதம் ஒண்ணு, அவர்களண்டையிலே இருக்குறதுக்கு, சின்ன முதலிக்கு காகிதம் ஒண்ணு, விஷேசமாய் நயினருக்கு முன்ஞலே, ருமாஞ்சி பண்டிதன் கையிலே அனுப்பின காகிதப் படிக்கு, முன்னூறு வருகனுக்கு யெழுதின காகிதமொண்ணு, ருமாஞ்சி பண்டிதனுக்கு காகிதம் ஒண்ணு, இதுகளெல்லாம் கொண்டு போஞர்.

## சித்திரபானு ௵ புரட்டாசி ௴ ௨ ௨ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு ௴ உக ௨

இந்தஞள் சோஞசலப் பிள்ளே துபாசி, மீன்காற சவுரி மகன் சொன்ன சேதி. சோஞசலப் பிள்ளேக்கும், திருவேங்கடத்தா பிள்ளேக்கும் ஆகாதென்னும், தன் கையிலே லெத்துரு வைச்சு யெவ்வளவோ வாங்கி குடுத்து விட்டானென்னு சொன்னதாகவும், முசே பொலோவுக்கு உடம்பு சொஸ்தமில்லேயென்னும், யெல்லாரும் சிலவுக்கு தொக்கடைதானென்னு சொன்ஞன்.

சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ௳ ய, யக, யஉ, யங ௳ புத்வாரம், குருவாரம், சுக்கிரவாரம், சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ உஉ, உங, உச, உரு ௳

இந்தனலு நாளிலே ஒண்ணும் கேழ்க்கப்பட இல்லே

சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ௳ யச ௳ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ உசா ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நாகப்பட்டணத்திலே இருந்து சின்னப்பய்யன், பண்டிகைக்கு தயங்கம்பாடிக்கு போய், அஞ்சாறு ஞளேயிலே வருகுறேனென்னு சொல்லி, நேத்தைய தினம் வந்து சேந்ததாய்ச் சொன்னுர்கள்.

இந்தனுள், மகாநவமிப் பண்டிகை. நாம் பண்டிகை கொண்டாட இல்லே.

சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ௳ யரு ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ உள ௳

இந்தனுள் தயங்கம்பாடிக்கு, சீமையிலே இருந்து பிறப்பட்டு, ஒன்பது மாசமாச்சுதாம் ஒரு சுலுப்பு. அது வந்து துறையை பிடிச்சு, பதிஞேரு பீரங்கி போட்டான். பதிலுக்கு துறையிலிருந்து போட்டான். கப்பித்தானும் இறங்கினுன்.

இதல்லாமல் சக்குலுனுன் குமாரன் சின்னய்யனுர், முன்னுலே கொப்பி, சினேப்போசு, யனுப்பச் சொல்லி, ஒன்பது வருகன் அனுப்பி இருந்தாரே, அதுக்கு ரொக்கம், வெள்ளியிலே சிலிப்பி கொட்டி, சீராப் போச்சு. உரு மூனுக்கும், சேர் ஒண்ணும், வருகன் எடை ஒண்ணரை; சேதாரம் வருகன் எடை ஒண்ணரைக் காசு; வேலே கூலி உள்பட கூடின வருகன் ஒன்பது. இந்த உருப்படி மூணும், அவர் அனுப்பிவிச்ச மனுஷர் மாஞரியப்பனுக்கு அனுப்பி விட்டோம். இந்தனுள் விசெயதிசமி ஆனபடியினுலே, பிறையாத்து சுவாமி பாரி வேட்டைக்குப் போனுர். சேஷாசல செட்டி குதிரை மேலேயும், அவர் குமாரன் பல்லக்கிலும், தஞ்சாவூரிலே இருந்து பணத்துக்கு வந்திருக்குற துப்பாக்கிகாறர் நாற்பது பேர் முன்னே வர, பிறையாத்திலே அவர் சாவடிக்கு வந்து, ருத்திரிக்கு இந்த சம்பிறமத்துடனே கோட்டைக்குப் போனுர்.

சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ௳ யசா ௳ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ௳ உஅ ௳

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. நேத்தைய தினம் வந்த சுலுப்பிலே, முன் செத்துப்போன துரை பேருக்குத்தான், காகித பத்திரிகைகள் வந்துதெண்ணும், அவர் சொந்தத்துக்கு ஒரு பொட்டி வெள்ளி வந்துதெண்ணும், அதை சக்கரித்தர் வீட்டிலே வைச்சார்களெண்ணும், கும்பினிக்கு ரெண்டு பொட்டி வெள்ளியும், இரும்பும், சகாலத்தும் வந்துதெண்ணும், இந்த சுலுப்புக்காறன் வரச்சே, காத்துக்காக

கரைக்கப்பாலே, ரெண்டு மாசங் கூட ஆனதென்னும் கரைக்கிட்டே இங்கிறிசு கப்பல் ரெண்டு கண்டதாகவும், அவர்கள் பிடிச்சு சோதிச்சு விட்டதாகவும், இப்பறம் வரச்சே, திருக்கண்ணுமலேக்கு அண்டையிலே கப்பலிலே, செலாமுனேயிலே நாலு கப்பல், பிருஞ்சுக் கப்பல் இங்கிறிசுக் கொடி போட்டுக் கொண்டு யிருந்ததாகவும், அவர்கள் பிடிச்சுக் கொண்டு பனிரெண்டு மணி நேரம் போட்டு வைச்சதாகவும், தங்கள் சுலுப்பை சோதிச்சு, தங்களே கப்பலிலே கொண்டு போய், பேசிக் கொண்ட பிற்பாடு, தாங்கள் பிருஞ்சுக்காறர். இந்த காகிதத்தைக் கொண்டு முசே முதாவு, பிசார் முதலாகிய பேருக்கு குடுக்கச் சொல்லி குடுத்தாகவும், அந்த காகிதமும் கொண்டு வந்து, இவடத்திலே யிருக்கிற பேருக்கு கொடுத்து நாகப்பட்டணத்துக்கு முசியே முதாவுக்கு, அனுப்பிவிச்சதாகவும் சொல்லிக் கொண்டார்கள். இது இன்னம் விசாரித்தறிய வேண்டியது. மண்ணிலாவுக்கு சிறுது கப்பல் போயிருக்குறதாகவும், சீமையிலே இருந்து, இன்னம் சிறுது கப்பல் வருகுறதாகவும், யோகத்துக்கு தையி பிறக்க, வரும் போலே இருக்குதெண்ணும் சொல்லிக் கொண்டார்கள்.

இது விசாரிக்குமிடத்தில் காகிதம் குடுத்த பேச்சு மாத்திரம் பொய்யெண்ணு சொன்னுர்கள்.

## சித்திரபானு ஸு புரட்டாசி மீ யஎ ௳ புத்வாரம்: சதஎஎசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ உகூ ௳

இந்தனுள், நாகப்பட்டணத்திலே இருந்து, கோழிக்காற முத்து வந்தான். அவன் சொன்னது. அஞ்சாறு ஞளேக்கு முன்னுதாக, ஒரு சோனகன் பிள்ளே வந்துது. அவன் சொன்னது. பிருஞ்சுக்காறர் கப்பல் வந்துது. இங்கிலிசுக்காறர் ஒரு சுலுப்பும் வந்துது. திருக்கணுமலேயண்டையிலே இருந்து இங்கிறிசு கப்பல்காறர் துரத்தினுர்கள். அதின்பேரிலே ஓடிப்போய் விட்டான். அப்பாலே நாலு கப்பல் பிருஞ்சுக் கப்பல் கிடந்தது. அதண்டையிலே போய் சேந்துதுயெண்ணும், தான் கண்டு வந்து சொன்னேன்குறதாக, சொல்லிக் கொண்டதாக சொன்னுன்.

இதல்லாமல், சென்னப்பட்டணத்திலே இருந்து ருமலிங்கப் பிள்ளே, சாமருயனுக்கு நாலாயிரம் றூபாய் கொடுக்க வேணும். அதுக்கு மேஸ்தர் திரேக்கியும் காகிதம் வந்ததாகவும், அதிலே இந்த நாலாயிரம் றூபாயும், ஏறக்குறைய நாலாயிரம் றூபாயிலே, எனக்கு ஆயிரம் றூபாய் கொடுத்து, மூவாயிரம் றூபாய் யெடுத்துக் கொள்ளச் சொன்னதாகவும், அதின்பேரிலே அவர்கள், இவன் இப்படி சொல்லி அனுப்பினபடியினுலே, இது தெரியாமலா யிருக்குமென்குறதாய் சொல்லி, நாகப்பட்டணத்துக்கு காகிதம் வந்ததாகவும், அதின்பேரிலே ருமலிங்கப் பிள்ளே, வெளிப்பட்டு போகப் பாற்க்குருணெண்ணு சொன்னுன்.

## சித்திரபானு ஸு புரட்டாசி மீ யஅ ௳ குருவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு செயித்தேம்புறு மீ ஙய ௳

இந்தனுள், தஞ்சாவூரிலே இருந்து எட்டு நாளேக்கு முன்னுதாக பணத்துக்காக வந்திருந்த அருணகிரியும், அவ்விடத்து லாயித்தனும், பாயி ஒருத்தனும், பத்து

சிப்பாய்களும், பிறையாத்திலே சேஷாசல செட்டி சாவடியிலே யிறங்கி யிருந்தார்களே, அவர்களை மூணு சாமத்துக்கு மேலே வைச்சுக் கொண்டு, மேள தாளத்துடனே கோட்டைக்கு அழைச்சுக்கொண்டு போனார்கள். தயங்கம்பாடி கோட்டைக்கு உள்ளே போன மாத்திரத்திலே............ நாற்பதெம்பது பேர் சிப்பாய்களுடனே, கூட எதிர்கொண்டு அழைச்சுப்போய், துரை சந்திப்பு ஆகச்சே, அஞ்சு பீரங்கி போட்டு, லாயித்தனுக்கு ரெண்டு துண்டு சகலாத்தும் ............ குடுத்து, வருஷா வருஷம் குடுக்கிற திட்டபடிக்கு ............ பணமுங் குடுத்து அனுப்பிவிட்டார்கள்.

சேஷய்யங்கார் குமாரன், சாமி அய்யங்கார், தம்முட வியாச்சி நிமித்தியமாய், காரைக்கால் குத்தகை திருமலைராய அய்யருக்கும், நரசிங்க ராயனுக்கும், மகாசனங்கள் நாட்டாருக்கும், சிபாரிசு காகிதம், வாங்கி கொண்டு போனார்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ யசூ உ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ மு உ

இந்தனாள் கேழ்விப்பட்டது. நேத்தைய தினம், சக்குலுனன் குமாரன் சின்னய்யன், பிறையாத்துக்கு வருகுறோமெண்குறதாய், முத்தைய பிள்ளைக்கு ஒரு ஓலையும், சின்னத்தம்பியா பிள்ளைக்கு ஒரு ஓலையும், இருளப் பிள்ளைக்கு ஒரு ஓலையும், குருவப்பனுக்கு ஒரு ஓலையும், சின்னதம்பி செட்டிக்கு ஒரு ஓலையும் வந்ததாகவும், சந்தை வெளித்தோப்பண்டையிலே, சின்னத் தம்பி செட்டி வீடு முஸ்தீது பண்ணுகுறதாகவும் சொன்னார்கள்.

இந்தனாள் ராத்திரி, நாகப்பட்டணத்திலே இருந்து, சோணாசலப் பிள்ளை அண்டையிலேயிருந்து வெங்கடேசய்யர் வந்தார். அவர் சொன்னது. சேலா முனையிலே, நாலு கப்பல், பிருஞ்சுக் கப்பல் தனிச்செக்காறர் கப்பல் இருக்கிறதாகவும், அப்பாலே பத்து நாளைய ஓட்டத்துக்கப்பறம், இருபத்துநாலு கப்பல் யிருக்குறதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்களெண்ணு சொன்னார். இதல்லாமல் றங்கோ பண்டிதன் சிறுது பவுஞ்சு வச்சு, சீமை கட்ட வேணுமெண்ணு வந்திருந்தானே, அவன் ராமலிங்கப் பிள்ளையைச் சேந்து, முசியே முதாவைக் கொண்டு, மயிசூர் இக்கிலு தண்டுக்குப் போக, இவடத்திலே சிறுது சிப்பந்தியை வைக்கவும், அம்பது துப்பாக்கி விலைக்கி வாங்கவும், சொன்ன செலவெல்லாம் ராமலிங்க பிள்ளை போடவும், இப்போதையிலே ரெண்டாயிரம் ரூபாய் குடுக்கவும், கீழ்பெண்ணாத்தூர் போனவுடனே, ரெண்டாயிரம் ருபாய் கொடுக்கவும், திருவாரூருக்குப் போனவுடனே, நாலாயிரம் றூபாய் குடுக்கவும், யிக்கிலு தண்டு போய் சேந்து, அவன் பிலம் கட்டிக் கொண்டு, சீமைக் கட்ட வேணுமெண்ணு பிறைத்தனம் பண்ணதாகவும், வெள்ளக்காறர் வழிக்கி நல்லதெண்ணு வந்தததை சுத்த வேணுமெண்ணு கொண்டு வரச் சொன்னதாகவும், சத்தியமாய் கையிலே குடுக்கவும் வாங்கவும் இல்லாத படியினாலே, எல்லார் பேச்சும் திரிய ஆத்திலே விழுந்து போச்சுதெண்ணும், ஆகையால் றங்கோ பண்டிதனுக்கு சிலவுக்கு பிறையாசமெண்ணும், அங்கே யிருக்ககூடாதெண்ணும், இருந்தால் கோவை[160] பிருமணன் சங்கதியாய் வந்தாலும் வருமெண்ணும், இதுனாலே வந்துவிட்டானேன்னு, ராமலிங்கப் பிள்ளையை, நாகப்பட்டிணம் துரை, எதுக்கு வெளியிலே விட கவை யில்லையெண்ணு சொன்னதாகவும் சொன்னார்.

இதல்லாமல், நாகப்பட்டணத்திலே விசையதிசமி நடந்த சேதி. யெப்போதும் பட்டணத்திலுண்டாகிய வற்த்தகர், பெரிய மனுஷர், யெல்லாரும் சமபிறமத்துடனே பிறப்பட்டு, பெரிய துபாசி வீட்டுக்கு வந்து, அவருடனே கூட பிறப்பட்டு பாரி வேட்டைக்குப் போய், மறுபடி வீட்டுக்கு வந்து, எல்லாரும் அனுப்பிவிச்சுக் கொண்டு போற வாடிக்கை அப்படி யிருக்க, இவ்வருஷம் சக்கலுனன் குமாரனுக்கு தானே, துபாசித்தனம் குடுக்கச் சொல்லி வந்ததாகவும், அதுனலே தியாக முதலி உடம்பு சொஸ்தமில்லே என்கிறதா யிருந்ததாகவும், அவனுக்கு விஞயக மூற்த்தியா பிள்ளே சொந்த துபாசியும் ஆகாதபடியினலே, அவன் துரையுடனே, இண்ணேய தினம் யெல்லோரும் இப்படி நடக்குறது. தியாகப்ப முதலி உடம்பு சொஸ்தமில்லாமல் இருக்குருனேன்னு சொன்னதாகவும், அவன் பிள்ளே இல்லேயா வெண்ணு சொல்லி, கேட்டனுப்பிவிச்சதாகவும், அதுக்கு உடம்பு சொஸ்தமில்லேயெண்ணு சொன்னதாகவும், ஆனல், நீ பிறப்படு யெண்ணு சொன்னதாகவும், அதுக்கு முன்னூறு வருகன் குடுத்தாகவும், கும்பனீரிலே சிப்பாய்களுக்கு, யெப்போதும் போலே மருந்து வாங்கி குடுத்து, அவர்கள் வரிசை வச்சு துரை வாசலிலே சுடக்குவரிருந்து, றெப்போடுத்து சொல்லி, அவர்கள் தம்முட வீட்டுக்கு வர, வற்த்தகர் பெரிய மனுஷர் யெல்லோரும் வர முஸ்தீது பண்ணிக் கொண்டு, தியாகப்ப முதலி அண்டைக்கு மனுஷரை அனுப்பி, உம்முடைய குமாரனேயாகிலும் அனுப்பி வியுமெண்ணு அனுப்பிவிச்சதாகவும், அவர் குமாரனே அழைச்சு போகச் சொன்னதாகவும், அவன் வீட்டுக்கு போறதேதுவென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே இப்படி வந்தால் கூட, கூட்டிக் கொண்டு போலாமென்னு சொல்லி அனுப்பினதாகவும், நல்லதென்னு சொல்லி அனுப்பினதாகவும் அவர் குமாரன் முஸ்தீதா இருந்ததாகவும், விஞயக மூற்த்தியா பிள்ளே சகல சம்பிறமத்துடனே பிறப்பட்டு, செம்மையாய் நேரத்துக்கு வெளியே போய் விட்டதாகவும், அதின்பேரிலே தியாகப்ப முதலி வெகு வெட்கத்தை யடைஞ்சு, துரை அண்டைக்கு போய் அழுது, இப்படி என்ன மரியாதி தாஷ்சி பண்ணலாமா? வெண்ணு றெம்ப சொல்லிக் கொண்டதாகவும், யினி யென்ன செய்ய வேணும்? மெண்ணு கேட்டதாகவும், சோபுதாரை அனுப்பி வரச்சே, யென் வீட்டுக்கு வந்து போகச் சொல்ல வேணுமென்னு சொன்னதாகவும், இதுக்கு இறநூறு வருகன் குடுத்தாகவும், அதின்பேரிலே சோப்புதாரை அனுப்பிவிச்சு, தியாகப்ப முதலி வீட்டுக்கு போகச் சொல்லி, சொல்லி அனுப்பிவிச்சதாகவும், அப்படியே வந்ததாகவும், வந்து விட்டு கேட்டு, ஒரு பிருமணனுக்கும், விஞயக மூற்த்தியா பிள்ளேக்கும், பின்னே ஆருக்கோ ஒருத்தனுக்கும், பாக்கு வெத்திலே குடுத்து நிறுத்தி போட்டதாகவும், விஞயக மூற்த்தியா பிள்ளே, எல்லாருக்கும் பாக்கு வெத்திலே குடுக்க யில்லேயா? வெண்ணு சொன்னதாகவும், நீங்கள் போங்கள். அவர்கள் இருந்து வருகுருர்களெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே கோபம் பண்ணி, ஒண்ணுக் கொண்ணு விசேஷம் தாறுமாறுகளாய் நடந்ததாகவும், பிற்பாடு எல்லாருக்கும் பாக்கு வெத்திலே குடுத்து அனுப்பிவிச்சதாகவும், பிற்பாடு எல்லாரும் வெளியே பிறப்பட்டு வரச்சே, விஞயக மூற்த்தியா பிள்ளே விசேஷித்த விதமாய் றெம்ப பேசி, ஞளே வர சொல்லிப் போஞன். இவனப்பன் சின்ன ஞயக்கனும் சொல்லிச், சகல சம்பிறமத்துடனும் பிறப்பட்டு, தன் வீட்டுக்கு போய், ருத்திரி பனிரெண்டு மணி மட்டும், கேளிக்கை பார்த்துக் கொண்டிருந்தாகவும் சொன்ஞர்.

இதல்லாமல், இக்கிலு தண்டிலேயிருந்து ஒரு குதிரைக்காறன் வந்ததாகவும், அவன் சொன்னது. அய்துறுனுனுக்கும், இக்கிலுக்கும் முருரி நிமித்தியத்திலே ஆகாமல், நாலு நாழிகை வழி இப்பாலே, பாளையத்துடனே கூட இறங்கி இருக்கிறதாகச் சொன்னதாய் சொன்னுர்.

## சித்திரபானு ௵ புரட்டாசி ௴ உய ௨ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் ௴ உ ௨

இந்தனுள், சக்குலுனுன் குமாரன் சின்னய்யன் ஒருகமங்கலம் வந்து சேந்து, இண்ணைய தினம் நான் போறது, ஞளையத்தினம் வருகுரேமென்னு சொல்லி யனுப்பிவிச்சார். மத்தியானத்துக்கு மேலே முத்தையா பிள்ளையும், சின்ன தம்பியும், திருவேங்கடத்தா பிள்ளை குமாரன், பின்னையும் சிறுது பேர்கள் வந்து விசாரித்தாகவும் சொன்னுர்கள்.

## சித்திரபானு ௵ புரட்டாசி ௴ உக ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் ௴ ங ௨

இந்தனுள் காலத்தாலே, சின்னய்யன் பிறையாத்திலே, சந்தைவெளி தோப்புலே, சின்னத்தம்பி செட்டி வீட்டிலே வந்து எறங்கினுர். அந்த சேதி கேட்டு நம்முட அப்பாவு வந்து, பொன்மலை பிள்ளையும் அனுப்பி இப்படியே யேகமாய் அல்லாதாய் ஒரு விடுதியிலே எறங்கலாமா? வெண்ணு, கேட்டு அனுப்பிவிச்சோம். நாமாய் வரயில்லை. முத்தையா பிள்ளை அமத்தி, அவடத்திலே வரச் சொன்னுர். ஆகையால் வந்ததே அல்லாமல், நாம் யிப்படி நம்முட வீடு யிருக்க, யிறங்க தக்கதில்லையெண்ணு சொல்லி அனுப்பிவிச்சு, பதினுறு ஞழிகைக்கு மட்டும், அவரும் கிஷ்ணருயனும் வந்தார்கள். வந்து ரெண்டு ஞழிகைக்கு மட்டும் பேசி இருந்து, நாமிறங்கின வீட்டுக்காறன் சாப்பாட்டுக்குச் சொன்னுன். அவனுக்கு நல்லதென்னு சொல்லிப் போட்டேன். நீங்களதுக்கு உத்தாரம் குடுக்க வேணுமெண்ணு சொல்லி அனுப்பிவிச்சுக் கொண்டு போய் கந்த பிள்ளை இறங்கி இருக்குற விடத்துக்கு போய், விசாரிச்சுப் போட்டு, தம்முட விடுதிக்கு இறங்கினுர். ருத்திரிக்கு இவடத்துக்கு வந்து சாப்பிட்டுப் போட்டு, தம்முட விடுதிக்குப் போனுர். அவர் சொன்னது. நாகப்பட்டணத்திலே இருந்து, சின்னத்துரை காகிதம் வந்துது. அதிலே நாலு மூணு ஞளையிலே, குமுசல் காகிதம் அனுப்பி வைக்கிரேம். பேச்சு மூச்சு நடந்திருக்குது. கப்பல்காறனும் அழைப்பிக்க யில்லையா? யெனக்கு காகிதம் குடுங்களேன்னு சுறுக்கு பண்ணுகுருன் யெண்ணு சேதியும், காகிதம் வந்ததாய் சொன்னுர்.

இதல்லாமல், முத்து வள்ளி மகனுர் சடகோபாலுனுன் காகிதம் கொண்டு வந்தான். அந்த காகிதத்திலே யெழுதி இருந்தது யென்னவென்ருல், அவடத்திலே தண்ணி யில்லாமல், யிட்ட பயிர் காஞ்சு போகுதெண்ணும். குடிக்க தண்ணி யில்லையெண்ணும், கருங்குழி சீமை நிபாதமாக்கிப் போட்டார்கள். ஆகையால் குடிகள் போய், முத்து வெங்கட்டரும ரெட்டி பேரில் பிருது பண்ணினுர்கள். அதின்பேரிலே கருங்குழி சீமையை யெட்டு பங்காக்கி, வட மகாணம் குடிகள் வசம் பண்ண, கருங்குழிச் சீமையும் குடிகள்

வசம் பண்ணி எட்டிலொரு பங்கு முத்து ருமை ரெட்டியாருக்கு குடுத்து, தாசிலாக்கி விட்டிருக்கிறதாகவும், அவரும் ஆற்காட்டிலே தான், இண்ணை வரைக்கும் காத்திருக்கிறதாகவும், அவரும் அசுப்பூர் சீர்மை இவர் வசமாயிருச்சுதே, அதுவும் குடிக்குத்தகை பண்ணிப் போட்டார்களெண்ணும், முத்துமல்லா ரெட்டியார் இன்னம் இவ்விடத்திலே தானே இருக்கிருரெண்ணும், மைத்த அமுல்தாறரெல்லாம் இன்னம் ஆற்க்காட்டிலே தானே இருக்கிருர்களெண்ணும், நபாபு ம்மமுதலிகானும் பட்டணத்திலே தானே இருக்கிருர். பட்டணத்திலே யிருந்து ஒரு முகிலன் வந்திருக்கிருனே, அவனுக்கும் நபாபுக்கும் சமாதானமாச்சுதாம். யினி ரெண்டு பேரும், ஆற்காட்டுக்கு வருகுறதாய் சொல்லுகிருர்களேண்ணு யெழுதியிருந்தது.

## சித்திரபானு ஷு புரட்டாசி மீ௳ உஉ ட சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ ச ட

இந்தனுள், சின்ன ஞயக்கர் தயங்கம்பாடி கோட்டைக்கு, துரை பேட்டிக்குப் போய், துரைக்கு ரெண்டு சுறுட்டி நசர் வைச்சதாகவும், அவர் ............ குடுத்தாகவும், மத்தியானத்துக்கு முத்தையா பிள்ளை வீட்டிலே சாப்பிட்டு, சாயங்காலம் விடுதி வந்ததாய் சொல்லி அனுப்பிவிச்சார். ருத்திரிக்கு, இவ்விடத்துக்கு சாப்பாட்டுக்கு வந்தார். அவர் சொன்னது, வடக்கே இருந்து, சென்னப்பட்டணத்துக்கு வந்திருக்கிற நபாபு அசனல்லி கானேன்குறவர், மத்தது நிமித்தியும் வந்திருந்தாரே, அவருக்கு இங்கிறிசுக்காறர், னூறு பேர் வெள்ளக்காறரும், ஆயிரம் சிப்பாய்களும், பத்து பீரங்கியும், மருந்து, குண்டுகளும் குடுத்து, பயணப்படுத்தி அனுப்பிவிச்சார்களெண்ணும் சொன்ஞர்.

இண்ணைய தினம், பெரியண்ண நயினுர் குமாரன், எரிக்கட்டாஞ்சேரியிலே வந்திருந்தாரே, செஞ்சிக்கு பயணமாய், அவர்க்கு திரையின் பேரிலும், அவர் தேவடியாள் டொலியிலும் போனதாய்ச் சொன்ஞர்கள். இதல்லாமல், றங்கோ பண்டிதன், சனிவாரச் சாயங்காலம், பிறையாத்து அக்கிருரத்தண்டையிலே சேவுகனே கண்டதாகவும், தன்னே கண்ட சேதி சொல்லவானுமெண்ணு சொன்னதாகவும், சொன்னதாய் சொன்ஞன். அவரும் வெங்கிட்டருயன் யென்கிறவரும், பயணமாய் வடக்கே இண்ணைய தினம் போய் விட்டதாய் சொன்ஞர்கள். றங்க முதலி தாயாருக்கு கறமாந்திரமென்னு சொன்ஞர்கள். அதுக்கு ஒரு முரிஷிப்பாகை ஒண்ணு அனுப்பிவிச்சோம்.

## சித்திரபானு ஷு புரட்டாசி மீ௳ உங ட மங்களவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ ரு ட

இந்தனுள் கேழ்விப்பட்ட சேதி. தயங்கம்பாடியைச் சேர்ந்த சாந்தங்குடியிலே[161] நேத்து ருத்திரி, பாலர் வாசாப்பு படிச்சதாகச் சொன்ஞர்கள்.

இதல்லாமல், முசே சின்ன லத்தூறு பெண்சாதி பத்து ஞளைக்கி முன்னுதாக ஏழா மாசத்திலே பிள்ளை சுலுவிலே வெளியே பிறந்ததாகவும், அந்த பிள்ளைக்கு தலையிலே ரெண்டு கொம்பு இருந்ததாகவும், வாயிலே ரெண்டு பல்லு இருந்ததாகவும், ஒரு கையை ஒசர யெடுத்துக் கொண்டு, ஒரு கையை வாயாலே வைச்சுக் கொண்டு, ஒரு காலை நீட்டிக் கொண்டு, ஒரு காலை மடக்கிக் கொண்டு இருந்ததாகவும், வயித்திலே தானே

செத்துப் போனதாகவும், அதின்பேரிலே அவளுக்கு சயித்தியம் கண்டுது. அதுக்கு, சகல பிறத்தன அவிழ்தம், காயிப்பியம் முதலானதுக்கு நுஷ்டைகள், அனேகம் செய்தும், இண்ணைய தினம் ரெண்டு மணிக்கு, மரணமடைந்தாள் யென்கிற சேதி வந்து சொன்னார்கள். அதின்பேரிலே நாம் சாயங்காலம் போய் அவன் வீட்டிலே விசாரிச்சோம். அங்கே இல்லை. முசே செலுமியாக்கு வீட்டிலே இருக்குறார்யென்னார்கள். அங்கே போய் விசாரிச்சோம். அவனுடைய தாபந்தமானல் ஒரு விதத்திலே யெழுதி முடியாது. அவனுக்கு உபசாரமாய் வெகு விசேஷங்கள் பேசி இருக்கச்சே செலுமியாக்கு, நீ நாகப்பட்டணத்துக்குப் போக இல்லையா? வென்னு கேட்டான். நான் போக இல்லையெண்ணு சொன்னேன். உன் மனுஷன் அவடத்திலேயிருந்து சேதி அனுப்ப இல்லையா? யெண்ணு கேட்டான். யெங்கள் மனுஷருமில்லை, ஒரு சேதியும் தெரியாதெண்ணு சொல்லி, இந்த சுலுப்புக்காறன், செலா முனையிலே நாலு கப்பல்காறர் கண்டதாகவும், அதிலே உங்களுக்கெல்லாம் காகிதம் வந்ததாகவும் சொன்னார்களே, உங்களுக்கு சேதி தெரியுமே யென்னவெண்ணு கேட்டோம். அவன் சொன்னது. மெய்தான், கப்பல் கண்டதாய் சொல்லுகிறார்கள். கடுதாசி ஒரு துணுக்கையாகிலும் ஆருக்கும் வர யில்லையெண்ணு சொன்னான். ருமலிங்க பிள்ளை சேதி யென்ன யெண்ணு கேட்டான். சுகமாய் நாகப்பட்டணத்திலே இருக்கிறானென்னு சொன்னோம். அதிலே அங்கே யிருந்த வெள்ளக்காறரெல்லாம், மெத்த திருடன், மோசக்காறன். கப்பல் வந்தால் அவனை ஒருக்காலும் சேர்க்க தக்கதில்லை. அவனை தொட்டு அனேகம் கவை கெட்டுப் போச்சுது யெண்ணு சொன்னார்கள். அதிலே லத்தூறு சொன்னது. அவன் தான் முன்னே வந்திருப்பான். வருகிற துரைகளுக்கு கையிலே குடுத்தால் அவன் தான் பெரிய மனுஷனுயிருக்கப் போறான். பிருஞ்சுக்காறருக்கு ஒரு பத்தமிருக்குதாவெண்ணு சொன்னான். இப்படி சிறுசு விசேஷம் நடந்து பிறப்பாடு, அனுப்பிவிச்சுக் கொண்டு வளவுக்கு வந்து விட்டோம்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ உச ௨ புத்வாரம்: சதஎஎசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ சா ௨

இந்தனாள், முசே சின்ன லத்தூறு பெண்சாதியை காலத்தாலே அடக்கம் பண்ணதாய் சொன்னார்கள். அதின்பேரிலே நம்முட அப்பாவுவை அனுப்பிவிச்சு உபசாரம் சொல்லி வரச் சொன்னோம். போய் உபசாரம் சொன்னவிடத்திலே அவன் பெண்சாதி வளர்த்த நாயை, ஆருக்கும் குடாமல் வச்சிடுங்கோளெண்ணு குடுத்தார். ஆனால் அவருடைய கிலேசம் ஒருமிதத்திலே இல்லையெண்ணு சொன்னான்.

இதல்லாமல் கேழ்விப்பட்டது. சென்னப்பட்டணத்திலே இருந்து ஒரு இங்கிலிசுக்காறனும் கோப்பு வெங்கட்டருயனும் விசெயதிசமி யெண்ணைக்கு, பணத்து நிமித்தியம் வந்ததாய்ச் சொன்னார்கள். இன்னம் விசாரித்து எழுத வேண்டியது.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ உரு ௨ குருவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ எ ௨

இந்தனாள் கேழ்விப்பட்டது. நேத்து ருத்திரி, பனிரெண்டு மணிக்கு எரிக்கட்டாஞ்சேரியிலே, பெரியண்ண முதலி செத்து போனதாக சொன்னார்கள். மத்தியானத்துக்கும் மேலே, நாம் போய் துக்கம் சொல்லி, சாயங்காலம் வீட்டுக்கு வந்தோம்.

ருத்திரி நாலு ஞழிகைக்கு, சக்குலுஞன் குமாரன், சின்னப்பய்யன் இறக்கியிருக்கிற விடுதிக்குப் போய், வாற்த்தை சொல்லிக் கொண்டிருந்து. பிற்பாடு வளவுக்கு வந்தோம்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ௳ உசா ௨ சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ அ ௨

இந்தஞள் சாயங்காலம், தயங்கம்பாடி துறைக்கு நேராய் மேலாக, மூணு கப்பல் கண்டு, தெற்கே ஒடிப்போச்சுது. இந்த கப்பல் இங்கிறிசுக்காறர் கப்பல் யெண்ணு சொன்ஞர்கள். ருத்திரி பத்து நாழிகைக்கு கடலின் பேரிலே, அந்த கப்பலிலே ஒரு பீரங்கி கேழ்க்கப்பட்டது.

இதல்லாமல், பெரியண்ண முதலியாருக்கு சஞ்சயணமாய், ருத்திரிக்கு தலைக் கட்டிக் கொண்டார்களெண்ணு சொன்ஞர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ௳ உஎ ௨ சனிவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ கூ ௨

இந்தஞள் கேழ்விப்பட்டது. நேத்தைய தினம் போன இங்கிறிசுக் கப்பல், வாஞ்சியூர் துறைக்கு மேலக்கிடக்கிறதாய் சொன்ஞர்கள்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ௳ உஅ ௨ ஆதிவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ ய ௨

இந்தஞள் சென்னப்பட்டணத்துக்கு போயிருந்த வெங்கிட்டருயர், அய்யத்தம்பி வெங்கிடாசல பிள்ளைக்கும் தெளிசிங்க முதிலியாருக்கும் காகிதங் கொடுத்து, ருமாஞ்சி பண்டிதர் கூடக் கண்டு பேசின விடத்திலே, நல்லது; அப்படியே குடுத்தனுப்பி விக்கிறேம். சத்தியாய் நாகபட்டிணத்திலே ஆதிகேசவப் பெருமாள் பிள்ளை பேரிலே, ஞத்தி பதினெட்டு வருகன் குடுக்க வேணும். அந்த சீட்டும் கடுதாசியும் அனுப்பிவிச்சேன். அதை வட்டியும் முதலும் வாங்கிக் கொள்ளுங்கோள். குடாவிட்டால் சீக்கிறத்துக்கு சேதி 'அனுப்பிவிய்யுங்கோள் யெண்ணு காகிதம் அனுப்பியிருக்கிருர். அந்தப்படிக்கு கேட்டு வருகிறதும், பாத்தும் யெழுதி அனுப்பிவிச்சால், பிற்ப்பாடு தான் இவடத்துக்கு கவை அனுகூலம் பண்ணிக்கொண்டு வர வேண்டியது யெண்ணு யெழுதி, மன்ஞனை அனுப்பிவிச்சார்கள். அவன் சொன்னது. சென்னப்பட்டணத்துக்கு ஒரு கப்பல் சண்டையிலே முரிஞ்சு வந்ததாகவும், அதிலே காயக்காறர் இறங்கினதாகவும், திருக்கண்ஞமலை அண்டையிலே, ரெண்டு கப்பலும் ஒரு சுலுப்பும் வந்ததாகவும், அங்கே பிருஞ்சு கப்பல் நாலு வந்ததாகவும், சண்டையானதாகவும், ஒரு கப்பல் தப்பி வந்ததாகவும், ஒரு கப்பலும் சுலுப்பும் யென்னமாய் போச்சுதோ தெரியாதெண்ணும், அதின் பிறப்பாடு மூணு கப்பல் முஸ்தீதுபண்ணி அனுப்புவிச்சதாகவும், சொல்லி கொண்டதாய் சொன்ஞன். ம்மமுதல்லிகான் சென்னப்பட்டணத்திலே, கும்பனிர் தோட்டத்திலே இறங்கி இருக்கிறதாகவும், சலாபத்து சங்கு அண்டையிலே இருந்து வந்த முகிலன், ஒரு சுலுப்பிலே யேறிப் போனதாகவும், கேவுனர் பிக்கட்டு சீமைக்கு

பயணமாயிருக்கிறதாகவும், கோட்டை முஸ்தீது பண்ணிக் கொண்டே யிருக்கிறதாகவும், நெல்லூர் சீமையை, தோறம் பாளையக்காறர் கட்டிக் கொள்கிறதாகவும், அது நிமித்தியம் சிறுது சிப்பாய்களை அனுப்பிவிச்சதாகவும், பிருஞ்சுக்காறர் வந்து விட்டார்களென்கிற சேதி அறிஞ்சு, அவசர அவசரமாய் அதிலே ஏறி இருக்கிருர்களெண்ணும், இங்கிறிசு வெள்ளக்காறரும், சிப்பாய்களும் தேவணும்பட்டணம் வந்து சேருகுறதாகவும், தான் வரச்சே தஞ்சாவூருக்கு பணத்துக்கு போன மேஸ்தர் ருப்பிரிகோப்பும், வெங்கடாசல அய்யனும் பணத்துக்கு உடன்படிக்கையாய், வெகுமானமும் வாங்கிக்கொண்டு போறதாகவும், இப்படியாகச் சொன்ஞன். இதல்லாமல் தாண்டவருய பிள்ளை தம்பி, நாருயணப் பிள்ளை பெண்சாதி, காலம் பண்ணிப் போனதாகவும் சொன்ஞன்.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ உகூ ௳ சோமவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ யக ௳

இந்தஞள் ஒரு சேதியும் கேழ்க்கப்பட இல்லே.

## சித்திரபானு ஸ்ரீ புரட்டாசி மீ ஙய ௳ மங்களவாரம்: சதஎஎசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ யஉ ௳

இந்தஞள் கேழ்விப்பட்ட சேதி யென்னவென்ஞல், சக்குலுஞன் குமாரன் சின்னப்பய்யனே அழைக்கத்தக்கதாக, நாகப்பட்டணம் துரை அனுப்பிவிச்சதாக எழுதி, நாருயணப்பய்யனும், விஞயகமூற்த்தியா பிள்ளேயும் வந்ததாய் கேழ்விப்பட்டோம். அவர்கள் துரைக்கு காகிதம் பத்திரம் கொண்டு வந்து குடுத்து அழைச்சதாகவும், யென்னே யேன் யிப்படி வரச் சொல்லுகுறீர்? அவர் நடப்பிச்ச அன்னீதம் யிருக்கட்டும். தியாகப்ப முதலி நடப்பிச்ச காரியத்து யென்ன விசாரிச்சார்? யென் மனுஷனேக் காவல் வச்சு, வீடு வாசல் முத்தரிச்சு, தான்ய தவசமெல்லாம் யெடுத்துக் கொண்டு இருக்குருரே, அதைக் குடுத்து விட்டு அவனே யேன் காவல் விட்டு விடவில்லே. இன்னம் இவர் வஞ்சனேயிலே அனுப்பி அழைப்பிச்சால், நான் யெப்படி வருவேன்? யென்னு சொல்ல, அவர்களுக்கும் இவர்களுக்கும் வெகு விசேஷம் நடந்து, பிற்ப்பாடு இதுகளெல்லாம் செம்மையாய் நடப்பிச்சு, குமுசல் காகிதம் வந்தால் வருவேன் இல்லாவிட்டால் வரத் தக்கதில்லேயென்னு சொன்னதாகவும், நல்லது; துரைக்கு தெரியச் சொல்லி, அப்படியே ஆகட்டுமெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே சாயங்காலம், பயணமாய் நாகப்பட்டணத்துக்கு போய் விட்டதாகவும், இதல்லாமல் குமுசலியர் இவடத்திலே ஒவ்வொரு மனிதர் வந்ததாகவும், அவர்கள் சொல்லி அனுப்பிவிச்சது. நீ மோசம் போருய். குமுசல் காகிதம் வந்தால் வரவாணுமெண்ணு சொன்னதாகவும், அவர்களும் பதிலு உத்தாரம் வாங்கிக் கொண்டு போனதாகவும், கப்பல் அஞ்சாறு ஞளேயிலே பயணமாயிருக்குதென்னு போலேயும், அந்த கப்பல்காறன் றெம்ப சுறுக்கு பண்ணுகுறதாகவும், இன்னம் ரெண்டு ஞளேயிலே மறுபடி வருவார்களென்னும் இப்படியாகச் சொன்ஞர்கள்.

## சித்திரபானு ௵ புரட்டாசி மீ௳ ௩௧ ௨ புத்வாரம்: ௪௲௭௱௬௰௨ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ ௰௨ ௨

இந்தனுள் உதையத்துக்கு, அய்யத்தம்பி வெங்கிடாசலப் பிள்ளை அனுப்பிவிச்ச சீட்டும், கடுதாசியும் குடுத்து, கேசவப் பெருமாள் பிள்ளையைக் கண்டு பேசிக் கொண்டு, முசே போலோ அவர்களும் கண்டு பேசிக் கொண்டு, முசே முதாவு பின்னையும் இருக்குற வெள்ளக்காறரும் கண்டு வரச்சொல்லி, நம்முட அப்பாவுவை அனுப்பிவிச்சோம். நாகப்பட்டணத்திற்கு சாயங்காலம், தரகு வெங்கடேசய்யனும், திருவம்பல செட்டி தம்பி, முத்தைய செட்டியும் வந்து பேசிக் கொண்டிருக்கச்சே, திருவம்பல செட்டி தம்பி சொன்னது. பத்து பதினஞ்சு ஞளைக்கி முன்னுதாக, கோயிலாடி கிஷ்ணமருயன், தஞ்சாவூர் ருசா மட்டும் பிறேத்தனம் பண்ணி, ஒரு அரிக்காறனை அழைச்சு வந்து, யென்னை மறிச்சு, கணக்கு வழக்கு தீர்க்கச் சொல்லி, ஞலு ஞள் சாப்பிட ஒட்டாமல் மறிச்சுக் கொண்டு இருந்ததாகவும், அதின்பேரிலே முசே புலோ அவர்களுக்கும், மதாம் புலோவுக்கும் காகிதம் யெழுதி அனுப்பிவிச்சதாகவும், அதின்பேரிலே அவர் பிறையாத்திலே றங்கப்பிள்ளை குமாரனுக்கு யெழுதி அனுப்பினதாகவும், யெழுதி அனுப்பிவிக்க சொல்லுவோமெண்ணு சொன்னதாகவும், கால தாமிஷமாய் போகுமென்னு சொன்னதாகவும், பிற்ப்பாடு சின்னப்பய்யனை அழைச்சனுப்பிவிச்சு, தம்முட காகிதமாய், தஞ்சாவூர் ருசாவுக்கு யெழுதி அனுப்பிவிச்சதாகவும், அவர் அந்த ஷணம் அந்த சீமை சுபைதாருக்கு தாக்கீது யெழுதி புதுச்சேரியாருக்கு குடுக்கல் வாங்கலுடனே சேந்த சம்மதிக்கு, இவடத்திலே கேட்டால் தள்ளி விடுகுறதெண்ணும், சொஸ்தமான பிற்ப்பாடு தீத்துக் கொள்ள வேண்டியது யெண்ணும் யெழுதி, முசே பொலோ அவர்களுக்கும் உபசாரமாய் எழுதினதாகவும் அந்த காகிதம் வந்த பிற்பாடு அந்த அரிக்காறன் போய் விட்டதாகவும், இதுக்கு சாவடி மணியம் அழகப்ப முதலி, அவனுக்கு அனுகூலமாய் யிப்படியெல்லாம் நடப்பிச்சானென்னும், அவனுக்கும் எங்களுக்கும் ஆகாது ஆனப்படியினுலே இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் முசே போலே அவனுக்கு யெழுதி {யெழுதி} அனுப்பிவிச்சோம். அவன் மெத்த தாக்கீது யெழுதி அனுப்பிவிச்சார்.

இதல்லாமல், றங்கப்ப முதலியார் குமாரன், வெங்கிடாசல முதலி, போன வருஷம், அழகிய மணவாள செட்டிக்கு குடுக்க வேண்டிய பணத்துக்கு உள்ள சீட்டு யெழுதி, தங்களவன் ஒருத்தனை அனுப்பிவிச்சார். அவன் வந்து சீட்டை கொடுத்தான். அதைப் பாத்து அழகிய மணவாள செட்டியார், இப்படி யெழுதலாமா ? வெண்ணு தாபந்தப்பட்டார். அதிலே வந்தவன் மறிச்சு, றெம்ப லச்சை பண்ணினுன். அப்போ சூரப்ப முதலியும் வந்திருந்தார். அவர் கூட இருந்து, இன்னேரம் பனிரெண்டு வருகன் குடுக்க சொல்லி, வாங்கிக் கொண்டு போய்விட்டான். அப்படி இருக்க, இப்போ பத்து ஞளைக்கி முன்னுதாக, இங்கிறிசுக்காறர் மனுஷன், சாமி அய்யங்கார்ரென்குறவனுக்கு, தான் கொடுக்க வேண்டிய பணத்துக்கு, வெங்கிடாசல முதலி அழகிய மணவாளன் செட்டி பேரிலே, எழுபது வருகன் குடுக்கச் சொல்லி யெழுதிக் கொடுத்தாகவும், அவன் ஒரு துப்பாக்கிகாறனை அனுப்பி, மறிச்சுக்கொண்டு கோப்பு வெங்கிடாசலய்யன் உத்தாரமெண்ணு, கெவுணர் பிக்கட்டும் பேரிலேயும், திரோக்கி பேரிலேயும் ஆணையிட்டு மறிச்சதாகவும், அதின்பேரிலே அழகிய மணவாள செட்டியார், கோப்பு வெங்கிடாசல அய்யருக்கு உபசாரமாய் காகிதமெழுதி அனுப்பிவிச்சதாகவும், அதின்பேரிலே அவர் இப்படியெண்ணு நாம் அறியோம்யெண்ணு பொன்னுசாமி அய்யங்காரை கோபம் பண்ணினதாகவும், வெங்கிடாசல பிள்ளையும்

நல்ல மனுஷர்; அவருக்கு நாம் சொல்லி அனுப்பிவிக்கிறேமெண்ணு காகிதமனுப்பி அந்த மனுஷனே அழைப்பிச்சுக் கொண்டதாகவும், அந்த சங்கதி முசியே புலோ அவர்களுக்கு எழுதி அனுப்பிவிச்சதாகவும், அவர் வெங்கிடாசல பிள்ளைக்கு ரெம்ப தாக்கீதாய் இப்படியே இங்கிறிசுக்காரறை சேத்துக் கொண்டு இப்படியெல்லாம் செய்யுருயல்லவா? உனக்கென்ன பணமில்லையா? சாவடி விஸ்தாரம் சிலவே நிச்சுக்கட்ட இல்லையா? நல்லது ஆகட்டுமெண்ணு யெழுதினதாகவும், அதின்பேரிலே சும்மா யிருக்கிருக்குருரெண்ணும் சொன்னுர்.

இதல்லாமல், திருவம்பல செட்டி யென்குறவன், இங்கிறிசுக்காறர் பங்கிலே, கப்பல் வியாச்சு பண்ணுகிறதாவும், அதுக்கு சரக்கு, திருவண்ணைநல்லூரிலே இருந்து சரக்கு கூட்டி, சென்னப்பட்டணத்துக்கு அனுப்புகுறதாகவும், திலாறிசும் சுறகாயும் கோட்டைக்குள்ளே வீடு கட்டினதாகவும், சுறகா இங்கிறிசுக்காரறண்டையிலே உத்தியோகம் பண்ண கையெழுத்துப் போட்டிருக்கிறதாகவும், இவர்கள் மாரிபத்திலே, இங்கிறிசுக் கும்பனீருக்கு கொல்லத்துக்காறர் சிதம்பரம், செங்கல் சூளை போட்டு கோட்டைக்கு சல்லு, மணலு, கல்லு கொடுக்கிறதாகவும் கேழ்விப்பட்டிருந்தோம். அந்த சேதிக்கு முத்தைய்ய செட்டியை உன் தமையன், திருவம்பல செட்டி யெங்கே இருக்கிருர்? யெண்ணு கேட்டோம். திருவண்ணைநல்லூரிலே இருக்குருரெண்ணு சொன்னுர். என்ன காரியம்? யெண்ணு கேட்டதுக்கு பைகோவுக்கு[162] ஒரு கப்பல், சிறுது பங்கிலே, பழவேற்காட்டிலே யிருந்தபொழுது, சிறிது சரக்கு போடத் தக்கதாக, முசியே திலாறிசு அழைச்சனுப்பிவிச்சு, சிறுது பணம் குடுத்து சல்லா கூட்டி அனுப்பிவிக்கச் சொன்னுர். கொஞ்சம் பதினஞ்சு இருபது கொடி மாத்திரம் அனுப்பிவிச்சார். அங்கே தானே இருக்குருரெண்ணு சொன்னுன். முசியே திலாறிசு, கோட்டைக்குள்ளே வீடு கட்டி, பாற்க்கத் தக்க வியாபாரம் பண்ணுகிறதாகவும் சொன்னுர்களே யெண்ணு கேட்டதுக்கு, மெய்தான். கட்டி வித்துப் போட்டான். இந்த யோசனை நடந்ததெல்லாம் மெய்தான். நாகப்பட்டணத்துக்கு ஒரு கப்பலும், முசியே முதாவும் வந்த பிற்ப்பாடு, இதெல்லாம் நிறுத்திப் போட்டு, சதிரங்கப்பட்டணத்துக்கு வந்து விட, வீடும் விசாரிச்சு இருந்தது. பிற்ப்பாடு மெதுப்பட்டு அங்கேதானே இருக்கிருர். கப்பல் வந்தவுடனே வந்து விட வேணுமென்கிறதே அல்லாமல், அங்கே இருக்க மனசில்லை. முன்னுலே, முசே முறசென் தயங்கம்பாடியிலே இருக்கச்சே, யென் தமையன் வந்த விடத்திலே, யென்ன இங்கிறிசுக்காறருடைய வற்த்தகர் வரவேணும்? யெண்ணு சொன்னுர். அப்படி யேதய்யா சொன்னது. நான் என் சமுசாரத்துடனே இவடத்திலே யென்னத்துக்கு காத்துக் கொண்டிருக்கிறேன். யெப்போ நம்முடையவர்கள் வருவார்களோ வெண்ணு வழி பாத்துக் கொண்டிருக்குறேன்னு உபசாரமாய் பரிகரிச்சு தெரியச்சொல்லி கொண்டோம். அப்படி யெல்லாரும் சொல்லிக் கொள்ளுகிறது தாண்ணு சொன்னுன். முசியே முறேசன் இங்கிறிசுக்காறரண்டையிலே உத்தியோகம் பண்ணுகிருர் மெய் தானு? வெண்ணு கேட்டார். மெய்தான்; கையெழுத்துப் போட்டது மெய் தான். திலாரிசு சொல்லி அப்படி செய்யப் போகாதெண்ணு, அதின்பேரிலே கெவுனர் பிக்கட்டு அவர்களுக்குத் தெரியச்சொல்லி, பரிகசிச்சுக் கொண்டாணென்னு சொன்னுன். கொல்லத்துக்காற சிதம்பரம், கும்பினிருக்கு செங்கல் சூளை போடுகிருணென்னும் சொன்னுன். இவன் இப்போ யிவிடத்துக்கு வந்தது யேணெண்ணு விசாரிச்சுப் பார்த்தால், தன் காரிய நிமித்தியமும், அழகிய மணவாள செட்டி காரியமாகவும், முசியே புலோ அவர்களுக்கு யெழுதி இருந்ததுக்கு, அவர் இவர்கள் காரியத்துக்காக அவரவர்களுக்கு யெழுதி

அனுப்பிவிச்சதுக்கு, அவருக்கு நன்றி அறிந்து உபசாரமும் சொல்லி, சின்னப்பய்யனும், சந்திராயனேயும் கண்டு பேசிக்கொண்டு போவோமெண்ணும் நாகப்பட்டணத்துக்கு போனவன், அவடத்திலே முசியே புலோவைக் கண்டு பேசி, சின்னப்பய்யன் தயங்கம்பாடியிலே இருக்கிறபடியினலே, இங்கே வந்தவனுக வேணுமெண்ணுப் போல தோத்துது. விசாரிக்குமிடத்தில், மறுபடியும் கோயிலாடி கிருஷ்ணவன் காகிதம் கொண்டு வந்து குடுத்து, கணக்கு தீக்குறதாகவும், அதின்பேரிலே வந்துவிட்டதாகவும், கிருஷ்ணமருயன், சாமருயன், வெங்கிடாச்சலம் சொன்னுன்.

## சித்திரபானு ஸு அற்பசி மீ௳ மு ௨ குருவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ யச ௨

இந்தனுள் இக்கிலு, பாளேயத்திலே இருந்து, சாராயக்கிடங்கு வெங்கிடேச பிள்ளே மைச்சினன், பொன்னம்பலம் வந்தான். அவன் சொன்னது. நல்லதம்பி பிள்ளேயை பெனுகொண்டாவுக்கு, முருரி அண்டைக்கு இக்கிலு அனுப்பியிருந்தானே, அவடத்திலே இவனுக்கு படிச்செலவுங் கொடுத்து வைச்சுக் கொண்டிருந்தான். அப்படியிருக்க அய்துருனன் தண்டு, பாளேயமும் நெருங்கிச்சு. யிப்போ யிவனே அழைச்சு, யெப்போ முசே இக்கிலு பாளேயத்துடனே வருவாரென்னு கேட்டதுக்கு, நெருங்கி வந்தானே, இனிமேல் வந்து சேருவார்கள். அவர்கள் சிறுது பேருக்கு குடுக்க வேண்டியதுண்டு. அதுக்கு முப்பதுனுயிரம் வருகன் மாத்திரம் குடுக்க வேணுமெண்ணு கேட்டதுக்கு, பதினுயிரம் வருகன் இவன் கையிலே குடுத்து, வெள்ளக்காறரும் வந்தவுடனே குடு; பிற்ப்பாடு கொடுக்கச் சொல்லுகிறேன் யெண்ணு சொல்லிப்போட்டு, கோட்டையிலே இருக்கிறவனுக்கு, யென்ன சொல்ல வேணுமோ, அப்படி சொல்லி திட்டப்படுத்திப்போட்டு, நானு குமாரன் அண்டைக்குப்போய், குதிரைக்குட்டி கொண்டு வருகுகிறேனெண்ணு போய்விட்டான். அப்படியிருக்க கோட்டையை நெருங்கினுர்கள். அப்போ கோட்டைக்காறன் நல்லதம்பி பிள்ளேயை இந்த மட்டும் இருங்கள். பாளேயம் வரயில்லேயே, மோசமா பண்ணுகிறீர்களெண்ணு காவல் பண்ணுன். அப்படியிருக்க இந்த சேதி, அய்துருனன் கேட்டு, இக்கிலு அழைப்பிச்சுக் கேட்டான். இல்லே அவன் தெற்கே போய்விட்டானென்னு சொல்லிப்போட்டு, முதாவு வருகுறதாக இருக்குது. நாம் முருரிக்கு மத்தது பண்ணவேணும். ஆனுல் அவர் வரச்சே மோசம் வரும். ஆகையால் நீ அங்கே யிருக்க வேணும்; போய் விடுவெண்ணு, முசியே இக்கிலு நல்லதம்பி பிள்ளேக்கு யெழுதி அனுப்பிவிச்சான். அதைப் பாத்துக் கொண்டு காவலிருக்கிற பேருக்கு பத்து பணம் சிலவழிச்சு, ருத்திரியிலே, பீரங்கியிலே கயத்தைக் கட்டி இவனே இறக்கிவிட வக்கிலேயும் மனுஷரையும் தப்பிவிச்சுக் கொண்டு, இக்கிலு அண்டைக்கு வந்தான். அவன் இங்கே யேன் வந்தாய்? மோசம் வரும்யெண்ணு சிலவுக்கும் கொடுத்து, மாடும் குடுத்து, முசியே முதாவுக்கு காகிதமும் கொடுத்து விட்டான். பிற்ப்பாடு, இவன் சிலவுக்கு கொடுத்த பதினுயிரம் வருகன் யெடுத்துக் கொண்டு வந்த சேதி கேட்டு, உடனே முசியே முதாவுக்கு காகிதம் அனுப்பி, இவனே பிடிச்சு, வருகனே வாங்கி, ஆக்கினேயும் யிடத்தக்கதாக யெழுதி அனுப்பிவிச்சான். வெள்ளக்காறரெல்லாமே இவனே கொல்ல வேணுமென்கிற மட்டுக்கும் நடந்திருக்குது.

இதல்லாமல், பிற்ப்பாடு கோட்டையின் பேரிலே, சண்டை பண்ணி, பெணுகொண்டாவை, அயிதுருஞன் மைச்சுனன் மீர்சாய்பு வாங்கிஞன். வெள்ளக்காறர்பாளையமும், அயிதுருஞன் பாளையமும் மகுக்கு சீர்மையிலே இருக்குது. பெணுகொண்டாவிலே குதிரைக்காற வெள்ளக்காறரும் இக்கிலும் இருக்கிருன். இதல்லாமல், முராரி கோட்டை குடுத்தியென்கிற கோட்டைக்காறன், கவில்[163] சமாதானம் பேசுகிறதாவும், தான் வரச்சே வெள்ளக்காறர் சம்பளம் கேட்டதாகவும், முராரி கையிலே வாங்கி வந்த பணத்தை சிலவு பண்ணிக் கொள்ளுங்கோள், பிற்ப்பாடு தருகுறேனென்னு சொன்னதாகவும், அதின்பேரிலே விரோதிச்சு, முசியே இக்கிலுக்கு சொல்லி அனுப்பிவிச்சதாகவும், அவர் வந்த பிற்ப்பாடு யென்ன நடக்குமோவெண்ணும், யெல்லாரும் தஞ்சாவூருக்கு வருகிறதுக்கு இருக்கிருர்கள் தங்கள் வெள்ளக்காறன் தஞ்சாவூர் வருகிறதுக்கும், அங்கே யிருக்குறதுக்கும் யெழுதி அனுப்பிவிச்சப் பிறகு உடுப்பு யெடுத்து வரச்சொன்ஞணெண்ணும், ஆஞல் யிவர்கள் வந்து விட்டால், அவர்களுக்கு யென்ன பலம் யிருந்தாலும், போம்பு யெடுப்பட்டு காணும். ஆகையால் சமாதானமாய் போகவேணும். இப்படியாகச் சொன்ஞன்.

## சித்திரபானு ௵ அற்பசி ௴ உ ௨ சுக்கிறவாரம்: சதஎளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் ௴ யரு ௨

இந்தஞள், ருமய பிள்ளை தம்பியுடனே, தஞ்சாவூருக்கு கூடப் போன சாந்து யென்குறவன் வந்தான். அவன் சொன்ன சேதி. நல்லதம்பி பிள்ளை திருமெஞ்ஞானத்துக்கு வந்து நாலஞ்சு நாளாச்சு. ரெண்டு நாளைக்கி முன்னுதாக கொட்டுப்பாளையத்துக்கு வந்தான். ராமஞயக்கனை கண்டு பேசிக் கொண்டு போகச்சே, அவன் வெய்யாலாச்சுதே, இந்த கொடையை பிடிச்சுக் கொண்டு போமேண்ணு, ஒரு பெரிய சீனக் கொடை குடுத்தான். வெளியே வந்து குதிரை உம்முது தாஞ? குதிரை விடுமெண்ணு சொன்ஞன். இவனும் குதிரையை விட்டான். விட்ட மாத்திரத்திலே குதிரை யெடுத்துப் போட்டு விழுந்து, தலைப்பாகை ஒரண்டை, இவநோரண்டையாக விழுந்து, சீக்கிறத்திலே யெழுந்திருந்து, முஸ்தீது பண்ணிக் கொண்டு, மறுபடி குதிரை மேலே யேறிக்கொண்டு, இப்பறம் வந்து, பிறையாத்துக்கு பிள்ளையவர்களண்டைக்கு போய், வருவோமெண்ணு நடந்ததாகவும், அப்போ வீரப் பிள்ளை வீட்டுப் பிள்ளையாண்டான், அங்கே போகவாணும். முன்னே போனப்போ மரியாதை பண்ண யில்லையெண்ணு வீரப்பிள்ளை சொல்லச் சொன்ஞரெண்ணு சொன்ஞன். மெய் தான் யெண்ணு, திரும்பிக் கொண்டு ளிக்கட்டாஞ்சேரிக்கு போய், அங்கே இருக்கிறவர்கள் வீட்டுக்குப் போய், அப்பு முதலியார் வீட்டுக்குப் போனவிடத்திலே, அழகப்ப முதலி, மத்தியானத்துக்கு விருந்து பண்ணிவிச்சு பூக்கொண்டை போட்டு எடுத்த துப்பட்டி, பத்து வருகன் பொறும். அதையுங் கொடுத்து, ஒரு சாரங்குடுத்து, ஆயிரம் ரூபாய் பாத்தியங் கேட்டான். நல்லது யென்னு சொல்லிப்போட்டு, திருமெஞ்ஞானத்துக்குப் போய் விட்டான். அந்த குடையும், சதா விடாமல் பிடிச்சுக்கொண்டு திரிகுருன். இதல்லாமல், இவனைப் பிடிச்சுக்கொண்டு போனது முதல், நடந்தத்து யென்னவெண்ஞல், இவனை பிடிக்குறதுக்கு, முசியே முதாவு தஞ்சாவூருக்கு காகிதம் அனுப்பி விச்சார். அங்யேயிருந்து அரிக்காறரும், செலவுக்கு அனுப்பிவிச்சார். அதுக்கு முன்னுதாக, தெற்கு வகுப்பு பாளையக்காறர் மனுஷரும், முதாவுனுட மனுஷரும் வந்து பிடிச்சார்கள். அவர்களுக்கும், இவர்களுக்கும்

அடி தடி மட்டும் நடந்து, திவாணத்தார் கேழ்க்க, அவர்கள் வசமாய் இவன் லட்ச ரூபாய் நபுறு பத்திரமொண்ணு, சின்னப்பய்யன் காகிதங் கொடுத்து சொன்னதாகவும், அப்படியிருக்க அரிக்காறரும் செலவுக்கும் காகிதங் கொண்டு வந்ததாகவும், அவன் பிடவை, சில மாடு, காவல் பண்ணி, இவனேயும் ரெண்டு குதிரையும் ஒப்பிச்சதாகவும், அவர்கள் அழைச்சுப்போய், தஞ்சாவூரிலே கொண்டு போய், அரிக்காறருக்கெல்லாம் யெசமான் றங்கய்யனுடனே சொன்னதாகவும், அவர் குதிரை லாயத்திலே ஒருயிடத்திலே வைக்கச் சொன்னதாகவும், இதிலே திருக்கடையூர் தம்பிரானும், ........... தம்பிரானும், இவர்கள் அவர்கள் வந்து மகா தனம் வச்சபடி இவர் பேரிலே தப்பிதம் வராது. எப்படியும் விடுதலேப் பண்ணி, அனுப்பிவிட வேணுமெண்ணும், றங்கய்யனுக்கும், அருணகிரி அப்பாவுக்கும் ஒலே அனுப்பினதாகவும், அதல்லாமல் திருமெஞ்ஞானத்திலே யிருக்கிற யிடையருக்கு, அங்கே அரமனே மாடு மேய்க்கிற தாரிகளும், போயிகளும், பந்துக்களான படியினலே, அவர்களேக் கொண்டு சொல்லிவிச்சு, மறு நாள் மூணுவது அரமணேயிலே நங்கய்யன் இருக்கச்சே, அங்கே கொண்டு போய் விட்டதாகவும், நீ தானு மயிசூரிலே யிருந்து வந்தவன்? யெண்ணு கேட்டதாகவும், ஆமெண்ணு சொன்னதாகவும், ஆனந்த றங்கப் பிள்ளே பந்துவா? யெண்ணு கேட்டதாகவும், ஆமெண்ணு சொன்னதாகவும், நல்லது; அங்கே நடந்த சங்கதி யென்ன வெண்ணு கேட்டதாகவும், யென்னே நீ போய் முராரி அண்டையிலே, நாங்கள் வந்து வருகுரேமெண்ணு சொல்லி பேசச் சொன்னர். நான் போய் பேசி சம்பளமும் திட்டப்படுத்தி சொல்லி அனுப்பிவிச்சேன். இவர்கள் இதோ அதோ வருகுறேண்ணு சொல்லிக்கொண்டு வந்தார்கள். அப்படி யிவர்களுக்கு வந்தால், சிலவுக்கு மூவாயிரம் வருகன் கொடுத்தார்கள். இவர்கள் வராத படியினலே, யென்னே காவல் பண்ணி வெச்சுப் போடுகிறேனென்னு இருக்கிருர்கள். இப்படியிருக்க, பாளேயமும் நெருங்கி வந்தது. அப்போது தான் மோசம் வந்துது. நாம் தப்பிச்சுக் கொண்டு போக வேணுமெண்ணு இந்த மூவாயிரம் வருகனும், அவடத்திலே இருக்கிற பேருக்கு சிலவழிச்சு, ருத்திரி பீரங்கியிலே கயறு கட்டி எறக்கி விட்டார்கள். தப்பிவிச்சுக் கொண்டு, முசியே இக்கிலு அண்டையிலே வந்ததாகவும், அவர் அங்கேயிருக்க வாணும், போய் விடுயெண்ணு சொன்னதாகவும், இப்படி மோசம் பண்ணலாமா? வெண்ணு கேட்டதாகவும், சிலவுக்கு கொடுத்து, காகிதமுங் கொடுத்து அனுப்பிவிச்சார். இதோ அவன் கையெழுத்து ........... தாம்மெண்ணு காண்பிச்சதாகவும், அதின்பேரிலே, பெரிய மனுஷன் பேர் சொல்லுகிருன். தம்பிருனும் ஒலேயும் அனுப்பி யிருக்கிருர்களேயெண்ணு, அருணகிரி அப்பாவுடனே சொன்னதாகவும், அரிகிஷ்ணம ஞயக்கன் மகனெருத்தன் ........... யென்கிறவன், இங்கிறிசு, பிடுத்துகிசு, பிருஞ்சு, துலுக்க வாற்த்தை இதெல்லாம் தெரிஞ்சவன். பெரிய மனுஷஞயிருக்குறவன். இவர்கள் மூணு பேரும் கூடி, ருசாவுக்கு தெரியச் சொல்லி, இவனே அவர்கள் மோசம் பண்ணிஞர்கள். அப்படியிருக்க இவன் தப்பிச்சுக் கொண்டு, வந்தாணெண்ணு சொன்னதாகவும், நல்லது; நபுறு பத்திரமெண்ணு சொன்னதாகவும், அப்புறம் ........... இலேயிருக்கிற பிருஞ்சுக்காறருக்கு இவன் இப்படி சொல்லுகிருன். அவன் யெவ்வளவு யெடுத்து வந்தான், அது யெழுதி அனுப்பிவிக்கவும் யெண்ணு யெழுதினதாகவும், அவர்கள் முதாவுக்கு யெழுதி அனுப்பி, உத்தாரம் யெழுதி அழைப்பிக்கிரேமென்னு சொன்னதாகவும் அப்படியே எழுதி அனுப்பிவிச்சதாகவும், இவடத்திலே யிருந்து பத்து ஞள் மட்டும் உத்தாரம் வர யில்லேயெண்ணும், அதின்பேரிலே இவன் அப்படி யேதாகிலும் யிருந்தால் யெழுதி அனுப்பிப்பார்களே, பிருஞ்சுக்காறர் மெத்த திருடர். இப்படி தான் சொல்லுகிறது. ஒருவன் நன்ஞயிருக்க மனம் பிடிக்க மாட்டார்களெண்ணு ரெம்ப நிந்தைகள் சொன்னதாகவும், அவர்கள் கேட்டு,

இதுக்கேத்தப்படி ருசாவுக்குச் சொன்னதாகவும், பிற்ப்பாடு வீரப் பிள்ளேக்கு யெழுதி அனுப்புனர் நூறு வீரர்கள் அழைப்பிச்சு சிலவு பண்ணதாகவும், மறுபடியும் அன்னூறு வருகன் அனுப்பி ........... னுக்கு னூறு வருகன் வச்சு கண்டதாகவும், றங்கய்யனுக்கு இறனூறு வருகனும், அருணகிரி அப்பாவுக்கு இறநூறு வருகனும், நசர் வச்சு தான் உத்திர பிரதி உத்தாரம் நடந்து, றங்கய்யன் வீட்டுக்குப் போய், இருனூறு வருகன் நசர் வச்சுக் கண்டதாகவும், நாம் வாங்கத் தக்கதில்லே யெண்ணு குடுத்து விட்டதாகவும், இதிலே தேவடியாக்களுக்கும், பாட்டகனுக்கும் இறநூறு வருகன் சிலவானதாகவும், அந்த இருநூறு வராகனேயும், அருணகிரி அப்பாவுக்கு வைக்க வருகுருேமெண்ணு சொல்லி அனுப்பினதாகவும், யென்ன கொண்டு வருகிருன்? னென்னு சொன்னதாகவும், தீபாவளிப் பண்டிகையாச்சுதே, வீட்டுக்குப்போய் வந்தவுடனே, அன்னூறு வருகன் குடுக்கிறேனேன்னு சொன்னதாகவும், நல்லதெண்ணு யிருக்கச்சே, முசியே முதாவு காகிதம் மீராவுக்கு வந்து, மீரா காகிதம் ருசாவுக்கு வந்ததாகவும், இந்த காகிதத்திலே யென்ன வரப்போகுது? இவன் பேரிலே தக்கடை முக்கடையாய் வரப்போகுது. பின்ன யென்ன சேதி? வரப் போகுதெண்ணு இவர்கள் மூணு பேரும் ஒசனே பண்ணிக் கொண்டு, அந்த காகிதங் கொண்டு வந்த, மனுஷன் கையிலே குடுத்து அனுப்பிவிட்டதாகவும், பிறகு வடக்கு வகுப்பு பாளேக்காறருக்கு ........... க்கும் எ சிப்பாய், ஒரு பிருமணண் இருந்ததாகவும், அவனே தனக்கும் எ சிப்பாய் இருக்க திட்டப்படுத்தி மாசம் ஒண்ணுக்கு பத்து வருகன் சம்பளம் திட்டம் பண்ணதாகவும், தனக்கும், குதிரைக்கும், சிறுது சிப்பாய்களுக்கும், சேவிகத்துக்கும், சொக்கலிங்க ஞயக்கன், சமேத்து தனக்கு குடுக்கச் சொல்லி கேட்டதாகவும், அவர்கள் ருசாவுக்கு ஆயிரம் வெகுமதி கொண்டு, அப்படியே பேட்டி பண்ணு விச்சு, சொல்லுவோமெண்ணு சொன்னதாகவும், தன் பல்லக்கை சீயாழி பாளேயக்காறன் யெடுத்துக் கொண்டிக்குருன், அது வாங்கி கொடுக்க வேணுமெண்ணு சொன்னதாகவும், றங்கய்யன் அதுக்கொரு காகிதமும் கொடுத்து, அரிக்காறனேயும் கூட்டினதாகவும், அங்கேயிருக்கிற கிதாரிகள், பண்டிகைக்கு உத்தாரங் குடுக்கச் சொல்லி கேட்டதாகவும், அவர்கள் பிணேயிலே அனுப்பினதாகவும், அவர்கள் திருமெஞ்ஞானத்திலே யிருக்குறவர்கள். பிணேயெண்ணும் வரச்சே, பின் குதிரை ஞலிலே ஒண்ணு கொடுக்க வேணுமெண்ணு, றெம்ப பிறேத்தனம் பண்ணதாகவும், அதின்பேரிலே ஒரு குதிரை குடுத்து அனுப்பி, ஒரு மனுஷனேயும் கூட்டி அனுப்பினதாகவும், இது நடந்தது யெண்ணு சொன்ஞன். இதல்லாமல் சாத்துங்கப்பனே, வடக்கு வகுப்பு பாளேயக்காறன் காவலாயிருந்ததாயின் அதுக்கு தஞ்சாவூரிலே, அவர் யோசிப்பு வழியிலே காகிதம் அனுப்பினேம். அதின்பேரிலே விட்டு விட்டாணெண்ணும் சொன்ஞன். இதல்லாமல், முசியே லத்தூறுக்கு சின்னபையன் கையிலே, பத்து வருகன் கொடுத்து, அவன் அரிக்காறன் பின்ஞலே, கூட்டி யனுப்பிவிச்சோம். அவன் கொண்டு போய் குடுத்து, யிந்த ரெக்காது சொல்லச் சொன்ஞரெண்ணு வந்து சொன்ஞன்.

இதல்லாமல், ருத்திரி சக்குலுஞன் குமாரன், சின்னயஞன் அண்டைக்குப் போய், லோகாபிறம்ப வாற்த்தைகள் பேசிக் கொண்டிருக்கச்சே, அவர் சொன்னது. நம்முடவர்கள் காவல் வச்சிருக்குறவர்களே விட்டு, இவடத்துக்கு அனுப்பிவிச்சார். அதிலே நம்முட மருமகனும் வந்தான். குமுசேலியோர், குமுசல் காகிதம் இல்லாமல், வர கவையில்லே யெண்ணு .சொல்லுகுருர்கள். இவனே நம்பப் போகாது. குமுசல் காகிதம் வந்தால் போக வேணும். இல்லாவிட்டால் போகப் போகாதெண்ணு சொன்ஞர். ரெண்டு ஞழிகை இருந்து, வந்து விட்டோம்.

இதல்லாமல் ருத்திரி சின்னப்பய்யன் தயங்கம்பாடி கோட்டையிலே இறநூறு துப்பாக்கி விலைக்கி வாங்கி, தெற்கு வகுப்பு பாளையக்காறன் கஸ்தூரி னுயக்கன் வசத்திலே வச்சுப் போனதாகச் சொன்னுர்கள்.

## சித்திரபானு ஷ்ரீ அற்பசி மீ ௩ ௨ சனிவாரம்: ௧௭௪௯ உ ஆண்டு ஒயித்தெம்பர் மீ ௰௪ ௨

இந்தனுள், நாகப்பட்டணத்துக்கு போயிருந்த, நம்முட அப்பாவு வந்தான். அவன் சொன்னது. கேசவ பெருமாள் பிள்ளைக்கு காகிதம் குடுத்துக் கேட்டதுக்கு, அய்யதம்பி வெங்கடாசலம் பிள்ளைக்கு குடுக்க வேண்டிய பணத்துக்கு, பாக்கி யிருப்பதை சில்லறை வருகனுக்கு அனுப்பிவிச்சேன். குறை இப்படியாகிலும் ஆச்சதுக்கு, திரையாகிலும் அனுப்பி விடுகுறேனெண்ணும், பதில் காகிதம் யெழுதிக் குடுத்தான். முசே போலோ அவர்களைக் கண்டு உபசாரம் சொல்லி பேசிக்கொண்டிருக்கச்சே, தயங்கம்பாடியிலே இருந்து ஒரு சுலுப்புப் போகுது. அதிலே சீமைக்கு கடதாசி போடலாம். அங்கே ஆகிலும் போடுங்கோள், இவடத்துக்காகிலும் அனுப்பிவிச்சால் அனுப்பிவிப்போமெண்ணு சொல்லி, கப்பல் வருகுற மட்டுக்கும், பம்பூரில் யில்லாமல் இருங்கோள். என்னேரம் பிருஞ்சுப் படிக்குறதிலே இரு யென்னு சொன்னுர். இதல்லாமல் முசே முதாவை கண்டு, உபசாரம் சொன்னதுக்கு, அவரும் உபசாரமாய் சொல்லி, எல்லாரும் சுகமாயிருக்கிறீர்களாவென்னு உபசாரம் சொன்னுர். திருவேங்கிடத்தா பிள்ளையும் இருந்தார். ஆனுல், அவன் உத்தரவிலே வர இல்லை என்கிறதுக்கு, யிப்படி சொன்ன உத்தாரமும் கண்டுது. அதைப் பாத்து திருவேங்கடத்தா பிள்ளையுடனே, இவர் வரயில்லை யென்குறதுக்கு போய், உத்தாரம் சொல்லுகுறேனெண்ணு சொன்னேன். இல்லை; அவருக்கு அந்த மனசு இல்லையென்னு, லோகாகுடியாய் பேசிக் கொண்டிருந்து, முசே பூர்சேயை கண்டதுக்கு, அவர் றெம்ப உபசாரம் சொல்லி, ரெண்டு காகிதம் கொண்டு வந்து காண்பிச்சார். அது முசே தீப்வுனுல், பிள்ளையவர்களுக்கு குடுக்க வேண்டியது, கும்பனீர் குமுசல் காகிதம் ரெண்டாயிரம் எழுதிக் குடுத்தது. அதை வச்சு, முன்னுல் சிலவான வருகன் வாங்கி இருந்து, யெழுதி குடுத்ததும் காண்பிச்சு, இந்த யேற்பாடு கந்த பிள்ளைக்கு சொல்லி, இந்த வட்டியும் முதலும் குடுத்து, சீட்டை வாங்கிக் கொண்டு போகச் சொல்லு. இல்லாவிட்டால் இந்த குமுசல் சீட்டுக்கும், வாங்கின பணத்துக்கும் சரியாய் யெனக்கு வந்ததாய் யெழுதிக் குடுத்தால், இந்த வேலை யெப்படியாகிலும் பணம் குடுக்க சொல்லுவேன். இந்த வேலை சிலவுக்கு மெத்த வருத்தமா இருந்துது யெண்ணு சொன்னுர்கள். நல்லது; அவருக்கு சொல்லுகுறேனெண்ணு சொன்னேன். மதாம் முதாவு, மதாம் பூர்சே இவர்களுக்கும் உபசாரம் சொன்னேன். பிற்பாடு யெல்லாரும் பேசிக் கொண்டிருக்கச்சே, முசே முதாவு பிருஞ்சிலே இவர்களுக்குப் பணமில்லையாவெண்ணு கேட்டார். அதுக்கு மதாம் புர்சே அவர்களுக்கு ஒரு காசில்லை. நானு விதத்திலும் போய் விட்டதென்னு பேசிக் கொண்டார்கள். பிற்பாடு பேசி இருந்து வந்தார். நான் ஊருக்கு, இப்போ போறேனெண்ணு அனுப்பிவிச்சுக் கொண்டேன். அப்போ, முன் சொன்ன முறுக்கு இல்லாமல், வணக்கமாய் உத்தாரம் சொன்னுர். அது பார்த்தால், திருவேங்கடத்தா பிள்ளை அப்பாலே போய் பேசி இருந்தது, நம்முட விசேஷமாயிருக்கும். நீர் உத்தரவிலே கடின வாற்த்தையை கண்டு, இவருக்கு வரயில்லை என்கிற கடுப்பு இருக்குருப்போலே, இருக்குது யென்னும் சொன்னுன். அது நாங்கள் உமக்கு யென்னமோ சொல்லி

இருக்குறுர் போலே இருக்கும். நீர் அதைக் காண, யெந்த உத்தரவாய்ச் சொல்லி, வேணுமென்கிறதாய் யென்னென்னமோ சொன்னதின் பேரிலே, அவன் நல்ல விசேஷம் சொன்னதாய் கண்டுது. ஆனபடியினுலே, இவர்கள் ஆறேழு மாசமாய் இருக்கிறதுலே, இவர்கள் எடுத்த எடுப்பு நடக்காதபடியினுலேயும், வெளியிலே றெம்ப கவலையாய் சொல்லிக் கொள்ளுகிறபடியினுலேயும், நாம் போகாமல் இருக்குறதுனுலே, வெளிக்கொரு கெவுறுவம்மாய்ச் சொல்லிக் கொள்ளுகிறபடியினுலே, இவர்கள் என்னென்னமோ, நம்முடன் பேரிலே குரோதம் தோத்தவும், தங்களடத்திலே விசுவாசமுண்டாகவும், சொல்லி இருக்க வேணுமெண்ணு தோத்துது.

இதல்லாமல், முசியே திமோ அண்டைக்குப்போய், உபசாரம் சொன்னதுக்கு பதினெட்டு மாசமாய் வருத நீங்கள் இப்போ வந்தீர்களா? யென்னே தொட்டு ஆக வேண்டியதென்ன? உங்களுக்கு முசியே புலோ யிருக்குறுர். அவரண்டைக்குப் போ. இருட்டோட சமயாமாயிருக்க பேசிக் கொள்ளலாமெண்ணு சொன்னுர். நீரெப்படி சொல்லுவீர்கள்? உம்மண்டைக்குத்தான் வந்து பாத்து போக வேணுமெண்ணு வந்துது யெண்ணு உபசாரமாய் சொன்னேன். அப்போ உன் பேரென்ன? வெண்ணு கேட்டு எழுதிக் கொண்டான். அனுப்பிவிச்சுக் கொண்டு வந்து விட்டேன். ஆனுல் அவனேப் பாத்தால், இதுவரைக்கும் யென்ன யெண்ணு சொன்னுன். தன்னண்டையிலே வரயில்லே யெண்ணும், இதல்லாமல், காரைக்கால் சங்கதிக்கு கிறிஸ்துவருக்கு காகிதம் யெழுதிக் கொடுத்தானே, அதினளவிலே றெம்ப அல்லேகளாய் நடந்துப் போச்சுதே. அதின்பேரிலே, நாமும் கலகமாய்ச் சொல்லிக் கொண்டதாகச் சொல்லியிருப்பார்கள். கோவைப் பிறகாசனும் யென்னென்னமோ சொல்லியிருப்பான். கிறிஸ்துவர் பேரிலே விசுவாசம் பிறக்க, பாதிரிகளும் நம்முட பேரிலே, விரோதம் பிறக்கச் சொல்லி இருப்பார்களேண்ணு தோத்துது. ஆனுல் இவர்கள் நடத்தி இருக்கிற காரியமும், அதினுலே பிறுஞ்சுக்காறர் பேச்சு அல்லேப்பட்டதும், தமிழர்ப்பட்ட அவதியும், வருகிற பேர் விசாரிச்சால், எந்த விதமாய் உத்தரிப்பார்களோ. இவர்கள் சின்ன மனுஷரான படியினுலே, இப்படியெல்லாம் நடப்பிச்சார்கள். அப்படியிருந்தும், தாங்கள் மெத்த பெரிய மனுஷர் யெண்ணுப்போலவும், தாங்கள் நிறுவகிச்ச காரியம், றெம்ப உண்டு யெண்ணும் போலவும், இனிமேல் தங்களேயல்லாமல் வேறே யில்லேயெண்ணும், தாங்கள் சொன்ன பேருக்கு காரியமெண்ணும், இப்படி நினேச்சுக் கொண்டிருக்கிறுர்கள். இவர்களண்டையிலே சேந்திருக்கிற பேரும், பேராசை கொண்டிருக்கிறபடியினுலே, அதுக்கு தக்கனவைகள் நடத்துகிறுர்கள். ஆனுல் சுவாமியானவர், அவனவன் செய்த நன்மை துன்மைக்கீடாக, யென்ன நினேச்சு இருக்குறுரோ, அப்படி நடக்கப்போகுது. ஆண்டவனுனவர் ஆயிசு குடுத்து வச்சிருந்தால், அதைப் பார்க்கலாம்.

## சித்திரபானு ௵ அற்பசி ௴ ச உ ஆதிவாரம்: சதஎளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் ௴ யஎ உ

இதல்லாமல், நேத்து ருத்திரி, சின்னபய்யன் ஞகப்பட்டணத்துக்கு போனதாக சொன்னுர்கள். முசே முதாவு, ரெண்டு மூணு காகிதம் சுருக்காய் வரச்சொல்லி வந்ததாகவும், அதின்பேரிலே போனதாகவும் சொன்னுர்கள். யென்ன காரியமோ அறிய வேண்டியது.

இந்தனுள், இருபத்தோறு நாழிகைக்கு மேலே, சூரியக் கிருணம் பிடிச்சு, இருபத்தேழு நாழிகை விட்டுப் போச்சுது. இண்ணேய தினம் மேகம் ரொம்பவும் மழையுமானபடியினலே, கிருணம் பிடிச்சதும் விட்டதும் தெரியயில்லே. இதல்லாமல் தஞ்சாவூரிலே இங்கிறிசுக்காறருக்கு ஒப்பு கொண்ட பணத்துக்கு, இப்போ, ஏழு லஷ்சம் ரூபாய் குடுக்க வேண்டி இருக்குதே, அதுக்கு குடுக்க வேணுமேயெண்ணு, காடவருயன், ஐயப்ப பிள்ளேயும் இருக்கப்பட்ட போர்களே அழைச்சனுப்பி, நீங்களெல்லோரும் ஒரு வருஷத்து சம்பளம் விட்டு விட வேணுமெண்ணு கேட்டதாகவும், ஒரு வருஷத்து சம்பளம் விட்டு விட்டால் யெப்படி நிறுவாகுமெண்ணு சொன்னதாகவும், அப்போ மானுசி யெழுந்திருந்து மகாருசாவே! நான் இந்த ஒரு வருஷத்துக்கும், யென் பெண்டாட்டி பிள்ளேயாகிலும் வித்து, நிறுவாகம் பண்ணி கொள்ளுகிறேன். எல்லாரும் அதுக்கு சம்மதித்தாலாச்சுது. இல்லாவிட்டால் என் வசத்திலே ஒப்புவிய்யும். நான் யேத்துக் கொண்டு, குடுத்து விடுகிறேணெண்ணு சொன்னதாகவும், அப்போ எல்லாரும், யோசனே பண்ணிக்கொண்டு, இவன் கையிலே ஒப்பிச்சால், அதம் பண்ணிப் போடுவான். பிறப்பாடு பாத்துக் கொள்ளுவோமெண்ணு சம்மதிச்சு, ஒரு வருஷத்து சம்பளம் விட்டு விட்டதாய் யெழுதிக் குடுத்ததாகவும், அதுக்கு சொக்கலிங்க சேர்வைக்காறன்[164] மாத்திரம் சம்மதியாமல், அவர்கள் திருடர் பாதி, சிப்பந்தி வச்சு பாதி, சிப்பந்தி திருட குறை போர்கள். நான் அப்படி அல்ல. வாக்கிலே யெனக்குள்ள பணம், இப்போ குடுத்து விட்டால், பின்னே ஒரு இடம் பாத்துக் கொள்ளுகிறேன். அல்லது உள்ள சம்பளம், சீமை மேலே, தனக்காக யெப்போதும் போலே, பூரணி பிறப்பிச்சாலிருக்குமெண்ணு சொன்னதாகவும், அதின்பேரிலே ருசா, ரொம்ப கோபம் பண்ணி இருக்கிறதாகவும், அவடத்திலே இருக்கிற போர் இந்த வேலே சம்மதியும். இனிமேல் பாத்துக் கொள்ளுவோமேண்ணு கூட சொன்னதாகவும், அதுக்கு சம்மதியாமல் இருக்கிறதாகவும், மகாநவமிக்கு மகாருசா அவர்கள் பேட்டி யில்லேயெண்ணு சொல்லி கொண்டார்கள்.

## சித்திரபானு ௵ அற்பசி ௴ ரு ௳ சோமவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் ௴ யஅ ௳

இந்தனுள் சாயங்காலம், னுகப்பட்டணத்திலே பீரங்கி சத்தம் கேழ்க்கப்பட்டது. வேறே ஒரு சேதியும் இல்லே.

## சித்திரபானு ௵ அற்பசி ௴ சா ௳ மங்களவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் ௴ உயகூ ௳

இந்தனுள் கேழ்விப்பட்டது. நேத்து சாயங்காலம், பீரங்கி சத்தம் னுகப்பட்டணத்திலேயிருந்து கேழ்விப்பட்டதே, அது அங்கே இருந்தது கப்பல் யெண்ணும், பத்தாவியிக்கு போச்சுதெண்ணும் சொன்னுர்கள். அதிலே சக்குலு னுயக்கன் குமாரன் சின்னபய்யன் வராதபடியினலே, அவன் பேரிலே குத்தமாகவும், தாம் யென்ன யெழுதனுலும் வராமலிருக்கிறதும், அதுக்குகந்ததாய், யென்ன யெழுத வேணுமோ, அப்படி துரை யெழுதினதாகவும், குமுசெல்வியேர் நடந்த சங்கதியும், அவன் பேரிலே நேரமில்லாமலும், துரையுடைய மோச நினேப்பும், யெழுதி இருக்கிறதாகவும், சின்னய்யனும், தம்முட சங்கதிகளுக்கு, தாம் யெழுதினதாகவும் சொல்லி கொண்டார்கள்.

இதல்லாமல், சென்னப்பட்டணத்துக்கு, அய்யத்தம்பி வெங்கிடாசலப் பிள்ளைக்கு காகிதமும், கேசவப்பெருமாள் மருமகன் அனுப்பின காகிதமும், அவர் பேரிலே வர வேண்டிய பணத்துக்கு அனுப்பின சீட்டும், காகிதமும், பதிலுக்கு வர பாளையக்காரனுக்கு காகிதம், நச்சின பிள்ளைக்கு காகிதமும், மாருஞ்சி பண்டிதர் வெங்கிட்டருயர்க்கு யெழுதி, போயிண்ட மன்னன் கையிலே குடுத்து அனுப்பிவிச்சோம்.

இதல்லாமல், சின்ன லத்தூறு அழைச்சனுப்பினதுக்கு, நம்முட அப்பாவுவை அனுப்பிவிச்சோம். அவன் போய் கண்டு பேசின விடத்திலே, நானந்த ஊருக்குப் போறேன். சொக்கலிங்க ருய்க்கன் அத்தாசி குடுக்கவேணும். இப்ப பத்து பேர் சொல்தாதுகள் வருகிருர்கள். அவர்கள் வைத்துக் கொண்டு வருகிறேன். நான் வந்து தாமும், நாமும் பேசிக் கொண்டு, எப்படி நடக்க வேணுமோ, அப்படி யோசனை பண்ணிக் கொள்ளலாம். இந்தப்படி நடக்கத் தக்கதாக யெழுதிக் குடுக்க வேணுமென்கிறதாய், சொன்ருணென்னு சொன்ருன். அப்படியே, முன் சொல்லப்பட்ட சேதி யெழுதின படிக்கு, சொக்கலிங்க ருயக்கனுக்கு யெழுதி குடுத்தோம். அந்த காகிதத்தை சாயங்காலம், அப்பாவு கொண்டு போய் கொடுத்து, வாற்த்தை சொல்லிக்கொண்டு இருக்கச்சே, அவன் சொன்னது. துல்லூசு ஒரு சுலுப்பு முஸ்திது பண்ணி, தயங்கம்பாடி ஆத்திலே இருக்குது. யெப்போ எந்த வேளையிலேயும், மோரிசுக்கு பயணமாய் போகுது. அவரவர்கள் கடுதாசு போடுகிருர்கள். இது ரெண்டாம் பேருக்கு தெரியாது. இதை ஆருக்கும் சொல்லப் போகாது யெண்ணு சொல்லி, இப்போ கரையின் முகாயிலே, பிருஞ்சுக்காறர் கப்பல் மூணு நாலும், ஒரு சுலுப்பும் இருக்குது. இங்கிறிசுக்காரர் கப்பல் ரெண்டும், ஒரு சுலுப்பும் வந்தது. அதைப் பத்தி சண்டை பண்ணுர்கள். ஒண்ணு முழுகிப் போச்சுது. ஒண்ணு அகப்பட்டுது. ஒண்ணு சென்னப்பட்டணத்துக்கு, பாய்மரம் சேதப்பட்டுப் போய் சேந்துது. அப்ப, அந்த நாலு மூணுமாய் நாலுவிடத்திலே இருந்து கொண்டு, மேலாகத் திரியுருர்கள். இதனுலே கூட பொழுது போனுல், கடக்கரை தீரும் முதல், சிப்பாய்களைக் காவல் வச்சு காணுது. குதிரையில் ருத்திரி முழுவதும் திரியுகிருர்கள். மேஸ்தர் ழேனருல், பிக்கட்டும், சீர்மைக்குப் பயணமாயிருந்து, வர வருகிறதை பாத்துக் கொண்டு, தை மீ௳ போறதாய் பயணமனுப்பியாச்சுது. ஆகையால், முசியே முதாவும் கொஞ்ச நாளைக்கி, யின்னம் சிறுது துப்பாக்கிக்காரர், முஸ்தீது பண்ணிக் கொண்டு, மயிசூர் தண்டுக்கு, முசியே இக்குலு பாளையத்துக்கு போய் விடுவான். அங்கே யிருக்கிற பாளையம், சேதாரம் பண்ணிக் கொண்டு, இங்கே நெருங்குவார்கள். கப்பலும் சீக்கிரமாக காணப்படுமென்னு சொல்லியும், யிதெல்லாம் தஞ்சாவூர் ருசா, உளருய சொல்தாது அனுப்பிவிக்க தக்கதாக திட்டப்படுத்தி, முசியே முதாவு அண்டைக்கு, சிறுது பணம் அனுப்பி வைச்சார். அதை வாங்கிக் கொண்டு, அந்த மட்டும், பேச்சு அனுப்பாமல் போனுன். நான் இப்போ, ........... இருபது முப்பது பேர் மட்டுமாகிலும் கூப்பிட்டுக் கொண்டு, போறேன்னு சொன்ருணெண்ணும் வந்து சொன்ருன்.

சித்திரபானு ௵ அற்பசி மீ௳ எ, அ, சூ ௳ புத்வாரம், குருவாரம், சுக்கிறவாரம்: சதளளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ௳ உய, உக, உஉ ௳

இந்த மூணு நாளும் வேறே ஒரு சேதியும் கேழ்க்கப்பட இல்லை. நித்தம் மழை பெய்து கொண்டிருந்தது.

சித்திரபானு ஷ அற்பசி மீ ய உ சனிவாரம்: சதஎளசாயஉ ஆண்டு ஒயித்தெம்பர் மீ உங உ

இந்தனுள், சூரப்ப முதலியார், இந்த தயங்கம்பாடியிலே புகயிலே தீருவைக் குத்தகை, நாலு பங்காளி ............ இருக்கிறுர்களே, அதிலே போன வருஷத்திலே ஆதாயம் வந்திருக்குது. அதனுலே கரையோரம் போறுமெண்ணு விசேஷித்து பேசி ............ க் கொண்டிருந்தோம். அந் நிமி⟨ஷ⟩ ............ த்துக் கணக்கு, இதோ பாத்துக் கொண்டு ............ அந்தப்படி ஒடுதியே[165] ............

**முற்றிற்று**

# ஆய்வுக் குறிப்புகள்

1. யாதஸ்து அல்லது இயாதாத்து (Yaddast) என்ற உருது சொல் தமிழில் கையாளப்பட்டுள்ளது. இதன் பொருள் ஞாபகக் குறிப்பு என்பதாகும். காண்க: Tamil Lexicon, Chennai, 1982, Vol.6, P. 3399.

2. விஷித் தெ ஷெனரால் Visite de General என்று பிரெஞ்சில் குறிப்பிடுகிறார். ஜெனரல் அவர்களின் வருகை என்று பொருள்.

3. மோர்சா போட்டு என்றால் படைகளை நிறுத்தி என்று பொருள்.

4. மொடுத்தியே Mortier என்ற பிரெஞ்சு சொல். உயர் கோணங்களில் குண்டுகளை அனுப்பும் பீரங்கி அல்லது வெடி கருவி என்று பொருள்.

5. ரசீயம் Ration என்ற பிரெஞ்சு சொல். பங்கீடு என்று பொருள்.

6. சக்கிறத்தார் Sécrétaire என்ற பிரெஞ்சு சொல். செயலாளர், காரியதரிசி என்று பொருள்.

7. ஒடுதி Ordre என்ற பிரெஞ்சு சொல். வரிசைக் கிரமம், உத்தரவு, கட்டளை என்று பொருள்.

8. தண்டு என்பதற்கு சேனை, படை என்று பொருள் கொள்க.

9. கர்ணால் கூட்டு Colonel Coote என்ற ஆங்கிலேய தளபதி புதுச்சேரியை 15 ஜனவரி 1761 ஆம் ஆண்டு கைப்பற்றினான். இவரது இயற்பெயர் கர்னால் அயர்கூட் என்பதாகும். புதுச்சேரி முற்றுகை தொடர்பான இவரது விவரங்களை காண்க. Robert Orme, History of the Military Transactions of the British Nation in Indostan from the Year MDCCXLV, Vol.II, Madras 1861, pp.665-738.

10. கப்பித்துலசாம் Capitulation என்ற பிரெஞ்சு சொல். புதுச்சேரி நகரை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்க நிபந்தனைகள் கொண்ட ஒப்பந்தம் என்று பொருள்.

11. வெறன் Veron என்ற பெயர் கொண்ட பிரெஞ்சுக்காரர்.

12. மறெனர் Marins என்ற பிரெஞ்சு சொல். மாலுமி என்று பொருள்.

13. ரெஷத்து : படைக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் எனக் கொள்க.

14. தினசரி தைஸ்தர் மூட்டை: தஸ்த்திரம் என்றால் ஆவணம், பதிவேடு என்று பொருள். Tamil Lexicon, Chennai, 1982, Vol.III, P.1820.

15. துவான் Douane என்ற பிரெஞ்சு சொல். சுங்கச் சாவடி என்று பொருள்.

16. மத்தலோது Matelot என்ற பிரெஞ்சு சொல். கப்பல் ஆள் அல்லது கப்பலோட்டி என்று பொருள்.

17. தினசரி தஸ்தர் : தஸ்திரம் என்பது ஆவணங்களை ஒரு துணியில் கட்டி அலுவலகத்தில் வைப்பது. தினசரி பதிவேடு எனவும் கொள்ளலாம். தஸ்திரத்து கணக்கு என்றால் அரசாங்க கணக்கு எனவும் பொருள்படும். தின சரிதை தஸ்திரமெல்லாம் என்று சந்திப்பிழை கொண்டு பக்கம் 79ல் கோபால கிருஷ்ணன் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். ஓர்சே. ம. கோபாலகிருஷ்ணன், ஆனந்தரங்க பிள்ளையின் இறுதி நாட்களும், புதுச்சேரியின் வீழ்ச்சியும், *வரலாறு,* பிப்ரவரி–ஆகஸ்டு **1996**, பக்கம் **73–81**.

18. சேஷ்டர் : சிரேஷ்டர் என்றும் அழைக்கப்படும். சிறந்தவர் என்றும் பொருள் படும். இவ்விடத்தில் ஏசு சபை குருக்களின் தலைவர் என்று கொள்க.

19. மேஸ்தர் பிக்கெட்டு Major Pigot என்ற ஆங்கிலேய கவர்னர்.

20. கர்னால் கோட்டு Colonel Coot என்ற ஆங்கிலேய இராணுவ தளபதி.

21. சுப்பிரீயோர் Supérieur என்ற பிரெஞ்சு சொல். மேலதிகாரி என்று பொருள்.

22. சொல்தாதுகள் Soldats என்ற பிரெஞ்சு சொல். போர்வீரன் என்று பொருள்.

23. அபித்தாம் Habitants என்ற பிரெஞ்சு சொல். குடியிருப்பவர்கள் என்று பொருள். அம்பிலுயர் Employes என்ற பிரெஞ்சு சொல்லுக்கு வேலையாட்கள் என்று பொருள்.

24. புருஷ்வா Bourgeois என்ற பிரெஞ்சு சொல். பணக்காரன் என்று பொருள்.

25. கும்பினிர் Compagnie என்ற பிரெஞ்சு சொல்லுக்கு கம்பெனி எனக் கொள்க.

26. காடுது குதிரைகள்: காடுது Garde என்ற பிரெஞ்சு சொல்லுடன் வருவதால் காவல் புரியும் அல்லது மெய்க்காப்பாள குதிரைக்காரன் என்று பொருள்.

27. சாம்பிறா Chambre என்ற பிரெஞ்சு சொல் தங்கும் அறை என்று பொருள்.

28. ரெப்பு சாம்பலுடனே Chambre de Repos என்ற பிரெஞ்சு சொல். ஓய்வெடுக்கும் அறை என்று பொருள்.

29. கொன்சேலியேர் Conseiller என்ற பிரெஞ்சு சொல் ஆலோசனை கூறுபவர் என்று பொருள்.

30. பெமிலுக்கள்: பமீயி Famille என்ற பிரெஞ்சு சொல்லில் இருந்து பிறந்துள்ளது. குடும்பம் என்று பொருள்.

31. மக்குவா : முக்குவர் என்ற சொல். கடலில் மூழ்குபவர் அல்லது படகில் பணிபுரிவோர். Hobson - Jobson, P.592.

32. இகுப்பித்தால் : ஒஸ்பித்தால் Hospital என்ற பிரெஞ்சு சொல். வயோதிக நோயாளிகளை பராமரிக்கும் இடம். மருத்துவமனை.

33. தந்தசுத்தி பண்ணி : பல் துலக்கி விட்டு

34. சலுதியாய். விரைவாய், அவசரமாக, சீக்கிரமாக, வேகமாக விரட்டுதல்.

35. கடன் சீட்டு : சீட்டு என்றால் சன்மானம். கடன் கொடுத்ததிற்கு அத்தாட்சியாக எழுதி வாங்கும் தாள்.

36. டொலி : தூக்கிச் செல்லும் மஞ்சம். பல்லக்கு போன்று மிகவும் வசதியாக இல்லாமல், சாதாரணமானது. கம்புகளைக் கொண்டு நடுவில் ஒரு தொங்கும் இருக்கை கொண்டது.

37. திருவதி பண்டிதர்: திருவதி என்பது திருவாரூரைக் குறிக்கும். தஞ்சைக்கு வடக்கே பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிவஸ்தலம். அந்த ஊரைச் சேர்ந்த பண்டிதர் என்று பொருள்.

38. கொவர்ணதோர் Governador என்ற போர்ச்சுக்கீசிய சொல்லில் இருந்து பிறந்தது. ஆளுநர் என்று பொருள்.

39. சுஷ்தீசு : முய்ஸ்த்தீஸ் Justice என்ற பிரெஞ்சு சொல். நீதி, நியாயம் என்று பொருள்.

40. பெத்திஷாம்: Petition என்ற பிரெஞ்சு சொல். விண்ணப்பம் அல்லது மனு என்று பொருள்.

41. அண்ணாசாமி என்பவர் ஆனந்த ரங்க பிள்ளையின் மூத்த மகன். 7 ஜனவரி 1748 ல் பிறந்துள்ளார். அன்னாரது பிறந்த ஜாதக குறிப்பை ரங்கப் பிள்ளை தன் நாட்குறிப்பில் குறித்துள்ளார். அண்ணாசாமிக்கு காது குத்தும் விழா அக்டோபர் 1750 ம் ஆண்டு நடைபெற்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

42. நன்னாச்சி இவள் ரங்கபிள்ளையின் இரண்டாவது மகள். இவள் திருமணம் 2 ஜனவரி 1750 ல் நடைபெற்றது.

43. பொன்னாச்சி, ரங்கப்பிள்ளையின் மூன்றாவது மகள். இவளது கணவர் பெயர் கந்தப்பிள்ளை. இவளது சீமந்தம் 4 ஜூன் 1758 ஆம் ஆண்டு நடந்தது.

44. கோவிலடி என்ற ஊர் தஞ்சாவூர் தாலுக்காவில் உள்ளது.

45. மெம்முவார் Mémoires என்ற பிரெஞ்சு சொல். பங்கெடுத்த நிகழ்ச்சி குறிப்புகள். ஞாபகம் அல்லது நினைவுக் குறிப்புகள் என பொருள்படும்.

46. வில்லங்கம் அல்லாமல்: தடை ஏதும் இல்லாமல். கிரியாவின் தற்கால தமிழ் அகராதி. சென்னை, பக்கம் 942.

47. கப்பித்தான் Capitaine என்ற பிரெஞ்சு சொல். தலைவன் என்று பொருள்.

48. வியாச்சியமும்: காரணமாக கொண்டு.

49. பாயெடுத்து : பாய்மரச் சீலைக் கட்டி

50. கரமாந்திரம் : இறந்தோருக்கு செய்யும் சடங்கு, ஈமச் சடங்கு கிரியாக்கர்மங்கள் என்றும் உத்திரகிரியை என்றும் சொல்லப்படும்.

51. தினமார்க: டென்மார்க்கு என்ற நாட்டைச் சார்ந்த.

52. மையோரும்: மேயர் Maire என்ற பிரெஞ்சு சொல். நகரத் தந்தை என்று குறிப்பிடுவது.

53. சொரோத்திரியமாக: சரோத்திரியம் என்று தமிழில் வழங்கும் சொல். பிராமணர்களுக்கு சலுகை அடிப்படையில் வழங்கப்படும் நிலம் மற்றும் கிராமங்கள்.

54. மணியம்: கிராமத் தலைவன். கிராம வருவாயை பெறுபவன். கோயில், மடங்களையும் மேற்பார்வையிடும் வேலையை செய்பவன்.

55. அமில் வாங்கி: நில வருவாயை வசூலிக்கும் பொறுப்பு பெற்று.

56. சம்மன்: நியாய ஸ்தலத்து அதிகாரியின் அழைப்பு கட்டளை.

57. ஷாம்புராக்குள்ளே: சாம்புரு Chambre என்ற பிரெஞ்சு சொல். அறைக்குள்ளே.

58. சாம்பிரு: முன்சுட்டிய சொல். குறிப்பு எண் 57 காண்க.

59. டாணு: டாணா என்ற உருது சொல்லில் இருந்து பிறந்தது. காவல் போட்டு, காவற் சேவகன் நிறுத்தி என்று பொருள்.

60. ரசீது: அத்தாட்சி சீட்டு.

61. பிறகேத்து: Frégate என்ற பிரெஞ்சு சொல். விரைவாக செல்லும் கப்பல். ஒன்று அல்லது இரண்டு தளங்களை உடையது. அதிகமாக ராணுவ பொருட்களையும், ஆட்களையும் ஏற்றிக் கொண்டு பதினெட்டாம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டது.

62. தகாஷ்: தகா பண்ணி, ஏமாற்றி விட்டு.

63. அற்காறுவு: அற்க்காரா Harkara என்ற உருது சொல். ஒற்றன், தூதுவன் என்று பொருள்படும். வெள்ளி தடி பிடித்து கட்டியங் கூறுவோன்.

64. அய்யாசாமி: ஆனந்தரங்க பிள்ளையின் இளைய மகன். இவன் ஆனந்தரங்க பிள்ளையின் முகச் சாயலை கொண்டிருந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ARP Diary, Vol.IX, p.298.

65. சமாச்சாரம்: செய்தி, விஷயம்.

66. சாமீன்: காவலில் இருப்பவரை நிபந்தனைக்கு உட்பட்டும், உத்திரவாதம் தந்தும் விடுவித்துக் கொள்ளும் முறை.

67. அயர்க்கோட் Eyre Coote என்ற ஆங்கிலேய ராணுவ அதிகாரி. Henry Vansittart, A Narrative of the Transactions in Bengal, 1760-1766, Reprint, Calcutta 1976, p.560.

68. தீவுக்கோட்டை: தேவிக்கோட்டை என்ற இடம். கொள்ளிடம் கடலில் கலக்கும் இடத்தில் தீவாக அமைந்துள்ளது. அங்கு ஒரு கோட்டை இருந்ததாகவும், அதன் சுற்றளவு ஒரு மைல் தூரம் என்றும் சுவர்களின் உயரம் 18 அடி என்றும் சொல்லப்பட்டுள்ளது. தஞ்சை மன்னரிடமிருந்து 1749 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் பெற்றனர். Srinivasan, Maratha Rule in the Carnatic, P.263.

69. லோகாபிரம்மாய்: உலக காரியங்களைப் பற்றி.

70. பெருமுக்கல் கில்லேதார்: பெருமுக்கல் என்ற ஊர் திண்டிவனத்துக்கு தென்கிழக்கே ஒன்பது கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. கில்லேதார் என்றால் கோட்டையின் காவல் தலைவர் என்று மராட்டியர் காலத்தில் வழங்கப்பட்டது.

71. கவில்: கவுல் என்ற அரபு சொல். எழுத்து மூலமாக வழங்கப்படும் குத்தகை ஆணை.

72. லீவுரை: லீவ்ரே Livre என்ற பிரெஞ்சு சொல். புத்தகம், சுவடி என்று பொருள்.

73. படுத்திக்கொல்லேர் Particulier என்ற பிரெஞ்சு சொல். குறிப்பிட்ட ஒருவருக்கு சொந்தமானது என்று பொருள்.

74. சினால்கள்: சிங்நால் Signal என்ற பிரெஞ்சு சொல். அடையாளக் குறிகள் என்று பொருள்.

75. கும்மாந்தான்: Commandant என்ற பிரெஞ்சு சொல். படைத்தலைவன் என்று பொருள்.

76. குமுசாறுகள்: Commissaire என்ற பிரெஞ்சு சொல். விசாரணை அதிகாரி என்று பொருள்.

77. காப்பிராப்பட்டதாகவும்: கலக்கம் கொண்டு, கலவர உணர்வு.

78. அய்துருனான்: மைசூரை ஆண்ட அய்தர் அலி மன்னன். (1722–1782)

79. சுமாரில்: Summer என்ற பிரெஞ்சு சொல். வேனிற் காலம் என்று பொருள்.

80. அபேஷையாய்: விரும்பியபடி, தார்ப்பரியத்தினாலே.

81. கோயம்பேடு: சென்னைக்கும், பூந்தமல்லிக்கும் இடையே உள்ள ஊர்.

82. பாற்க்காரர்: காலாட் படை வீரர்கள்.

83. நாகப்பட்டணத்து உலாந்து துரை: உலாந்தர் என்ற சொல் டச்சுக்காரர்களை குறிக்கும். 1690 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் டச்சு கிழக்கிந்திய கம்பனியின் தலைமை வாணிப ஸ்தலமாக (Hoofd Kantoor) நாகப்பட்டணம் செயல்படத் துவங்கியது. அப்போது டச்சுக் கவர்னர் அங்கு நிரந்தரமாக தங்கினார். அவரை நாகப்பட்டணத்து உலாந்து துரை என்று சொல்வர். வணிக ஆலோசனை வழங்க டச்சுக்காரர்களைக் கொண்ட ஒரு குழுவும் அங்கு செயல்பட்டு வந்தது.

84. காட்டுச்சேரி: மாயவரம் தாலுக்காவில் உள்ளது.

85. பெருவழியாய்: பெரும்பாதை.

86. சிரோப்பா: சிரப் (Syrup ?) பழரசம்

87. மசுக்கரை: Mascareignes என்ற துறைமுகம்.

88. சீயாழி: சீர்காழி என இன்று அழைக்கப்படும் ஊர். தஞ்சை மாவட்டத்தில் உள்ளது.

89. சகலாத்து: Escarlata என்ற போர்ச்சுகீசிய சொல்லில் இருந்து சகலாத்து என்ற சொல் பிறந்துள்ளது. ஒருவகை கம்பளி துணி. கட்டிலின் மேலே பொதுவாக இடப்படும் துணி. ஆங்கிலத்தில் Broad Cloth என்று சொல்லுவர்.

90. சாதுரா: சாதுரம் என்றால் தேர் என்று பொருள்.

91. முகதாவிலே: முகதா – ஒரு கிராமத்திற்கு நிச்சயிக்கப்பட்ட மொத்த தீர்வை. முகத்திலே முகத்தைப் பார்த்து என பொருள் கொள்க.

92. கில்லாவுகளிலே: கில்லா என்ற மராத்தி சொல்லுக்கு கோட்டை என்று பொருள். கோட்டைகளிலே எனக் கொள்க.

93. நாட்டார்: ஒவ்வொரு சாதிகளின் தலைவரை நாட்டார் என்று புதுச்சேரியில் அழைத்தனர். இவர்களை சாதிமக்கள் ஏற்றுக் கொண்ட பின் தலைமை துபாசி நியமிப்பார். உயர் சாதி தலைவர்கள் மகா நாட்டார் என அழைக்கப்பட்டனர். Tsukasa Mizushima, Nattar in Pondicherry in Mid-Eighteenth Century, Proceedings of the Fifth International Seminar on Tamil Studies, Madras, 1981, Vol-II. PP.14-48.

94. தாசில்தாரன்: தாசில் Tahsil என்ற உருது சொல். தாலுக்காவை குறிக்கும். அங்கு அரசிறை தண்டும் அதிகாரி என பொருள்.

95. சுவிஸ்தாரமாக: சுவிஸ்சாளம். அதிக விசாலமாக.

96. சன்லூயி முத்திரை: St. Louis புனித லூயிஸ் என எழுதப்படும். பிரான்சு ராச முத்திரை என பொருள்படும்.

97. சலாம்: வணக்கம்.

98. போம்பு கண்டு: Bombe என்ற பிரெஞ்சு சொல். வெடிகுண்டு என்று பொருள்.

99. தேவனல்லியிலே: தேவனஹள்ளி என்ற ஊர் கர்நாடக மாநிலத்தில் உள்ளது.

100. இருகாத வழி: இரண்டு மைல் தூரத்தில். காண்க. போன்சுலே வம்ச சரித்திரம் தமிழாக்கம் பக்கம் 98.

101. வீரசோழன்: காவிரியின் கிளை நதிகளில் ஒன்று.

102. தேவனல்லியிலே: முன்சுட்டிய குறிப்பு எண் 99 காண்க.

103. போனா: இன்று புனே என்று அழைக்கப்படும் நகரம் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளது. அந்நாளில் மராட்டியர்களின் தலைமை இடம்.

104. புரவி மடங்க: குதிரைகளெல்லாம் வீழ்ந்து போக.

105. துர்க்கம்: கோட்டை.

106. பூருவோத்திரமாகும்படி: முன் நிகழ்ச்சி.

107. பேஷ்கஷ்சு: Pescush என்ற பாரசீக வார்த்தை. வரி என்று பொருள்.

108. வீடு முத்திரைச்சு : வீடு முத்திரை செய்தல்.

109. ஷனம்: கணம் என்று தமிழில் சொல்லப்படுவது. அந்தநேரத்தில் என்று பொருள் கொள்க.

110. நகராவுடனே: மெய்க்காப்பாளன் முரசுடனே.

111. சுன்னத்: விருத்தசேதனம்.

112. மன்சொப்புதார்: முகலாய ராணுவ அதிகாரி. ஒரு குறிப்பிட்ட எண்களைக் கொண்ட குதிரைகளை பராமரித்து வந்த குதிரைப்படைத் தலைவன். போரின்போது முகலாய மன்னருக்கு குதிரை வழங்கி உதவி செய்பவன். சில இடங்களில் ஜாகீர் நிலங்களையும் கொண்ட அதிகாரி என்றும் பொருள்படும்.

113. குளம்பிலே: இலங்கையில் உள்ள கொழும்பு என்ற துறைமுகம்.

114. பிறிசனோராய்: Prisonnier என்ற பிரெஞ்சு சொல். போர்க் கைதிகள் என்று பொருள்.

115. ஈந்தையிலே: Inde என்ற பிரெஞ்சு சொல். இந்தியா என்று பொருள்.

116. பொம்பாய்: மகாராஷ்டிராவிலுள்ள பம்பாய் என்ற துறைமுகம். ஆங்கிலேயரின் வாணிப ஸ்தலமாக செயல்பட்டது. தற்போது மும்பை என அழைக்கப்படுகிறது.

117. பாளையப்பட்டுலே: பாளையம் அல்லது பாளையப்பட்டு என்ற சொல்.

118. அரும்பாத்தைத்தனம் : ராணுவ வீரர்களுக்கு சம்பளம் கொடுத்தல் மற்றும் ராணுவத்துக்கு உணவுப் பொருட்களையும் வழங்கும் பொறுப்பு உடையவர். பிரெஞ்சில் அர்மே என்றால் படை. பத்தர் என்றால் கல்தூண். அரும்பாத்தை என்ற சொல் இந்த இரண்டு சொற்களிலிருந்து பிறக்கிறது. படைக்கு தூண் என்று பொருள்பெறும். படைக்கு உதவுதல் பொருட்டு நியமிக்கப்படும் ஆளுக்கு அரும்பாத்தை என்கிறோம். 8 டிசம்பர் 1753 ஆம் ஆண்டு புதுச்சேரியில் அரும்பாத்தையாக பரசுராம பிள்ளை பணிபுரிந்துள்ளார். இவர் 500 குதிரைகள், 300 வீரர்கள், 10,000 ரூபாய் பிரெஞ்சுக்காரர்கள் கேட்டபோது கொடுத்து உதவியதாக ஆனந்தரங்க பிள்ளை நாட்குறிப்பில் காண்கிறோம்.

119. ஒப்பிசேர்: Officier என்ற பிரெஞ்சு சொல். அதிகாரி என்று பொருள்.

120. பிடுத்துகீசுக்காறர்: போர்ச்சுக்கீசியர்கள் என்று பொருள்.

121. பத்தாவி: டச்சுக் கிழக்கிந்திய கம்பெனியின் வாணிப ஸ்தலமாக 1619 ஆம் ஆண்டு முதல் செயல்பட்ட துறைமுகம். இந்தோனேசியாவில் உள்ளது. இன்று ஜகார்த்தா என அழைக்கப்படுகிறது.

122. லெஷேத்தா இருக்குறோம்: ஷத்தோம் – காலாட் படை. இங்கு Loisir என்ற பிரெஞ்சு சொல்லுடன் வந்து சற்று நேரத்தை பொழுது போக்காக கழிக்கிறோம் என்று பொருள்.

123. லூட்டி: கொள்ளையிடுதல்.

124. சுபா: மராட்டிய சொல்லில் இருந்து பிறந்தது. பல சீமைகளைக் கொண்டது ஒரு சுபா. மராட்டியர் ஆட்சிக்காலத்தில் பெரிய அளவிலான ஒரு நிலப்பரப்பு கொண்ட ஒரு பகுதி. தஞ்சை மன்னரின் ஆட்சிப்பரப்பு ஐந்து சுபாக்களை கொண்டது. முறையே பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மாயவரம், திருவையாறு.

125. பள்ளிக்கிராமம்: கோயிற்குரிய கிராமம்.

126. பத்துக்கிராமம்: வயல் நிலங்களைக் கொண்ட கிராமம்.

127. கெந்தகம்: கந்தகம் எனப்படும் உலோகம்.

128. குத்தகை: Gutta என்ற உருது சொல்லில் இருந்து பிறந்தது. ஒப்பந்தம் என்று பொருள்.

129. சீர்மை : சீமை என்றும் வழங்கப்படும். விஜய நகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் ஒரு பகுதிக்கு பெயராக வழங்கப்பட்டது.

130. வக்கீல்: அதிகாரம் பெற்ற தரணி. தூதுவன் அல்லது முகவர் என்று பொருள் படும்.

131. நச்சுக் குழல்: கப்பல் பார்க்கிற நச்சுக் குழல் என்று ஆனந்த ரங்கப் பிள்ளை குறிப்பிடுகிறார். எனவே மாலுமியின் தொலை நோக்கி என அறிகிறோம். ARP Diary, Vol.III, P.258.

132. துருப்பாத்து: Tributaire என்ற பிரெஞ்சு சொல் கப்பம் கட்டுகிற, கீழ்ப்படிந்த என பொருள் கொள்ளலாம்.

133. காடுது குதிரை: முன் சுட்டிய குறிப்பு எண் 26 காண்க.

134. சுபைதார்: சுபா என்ற நிருவாக அமைப்பின் அரசியல் அதிகாரி. ராணுவத் துறையும் இவர் அதிகாரவரம்பிலிருந்தது. சுபேதார் என்றும் முகலாய மராட்டிய ஆவணங்களில் காணப்படுகிறது.

135. இஸ்பாங்கோலார்: ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று பொருள்.

136. ரெணுதவுங்கிரியும்: Rhenanine Thuringe பிரெஞ்சு சொல்லை உபயோகித்துள்ளார்.

137. பசுப்போர்த்து: Passeport பிரெஞ்சு சொல். கடவுச் சீட்டு என்று பொருள்.

138. தயிரியனாத முதலியார்: முன் துபாசியாய் இருந்த பெத்ரோ கனகராய முதலியார் வழி வந்தவர். லூயிபிரகாச முதலியாரின் மகன். 27 ஜுன் 1765 ல் சாவடி துபாசியாக எட்டு பகோடா சம்பளத்தில் இருந்ததாக பிரெஞ்சு ஆவணங்களில் காண்கிறோம். Edmond Gaudart, Catalogue des Quelques, Op.cit, Document No.230. தயிரியநாதமுதலியார் புதுச்சேரி சாவடி நீதிமன்றத்தில் தலைமை தமிழ் மொழி பெயர்ப்பாளராக பணிபுரிந்தார். பின்னர் சாவடி நீதிமன்றத்திலிருந்து போலீசு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு தலைமை தமிழ் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் மனைவி பெயர் ஞானபூம்மாள். இவர்களுக்கு 11 பிப்ரவரி 1780 ல் ஒரு மகன் பிறந்தான். அவர் பெயர் தியாகு முதலியார். தன் தந்தை இறந்தபின்பு போலீசு நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக தன் தகப்பனாருக்கு பதில் 1816 ஆம் ஆண்டுவரை பணிபுரிந்தார். காண்க. மன்னர்மன்னன், (தொகுப்பு) புதுவை புகழ் மணிகள், சென்னை 1979, பக்கம் 86–87.

139. ஆறுமகாணம்: மராட்டியர் ஆட்சியில் பல கிராமங்களைச் சேர்ந்த ஒரு பகுதிக்கு மகாணம் என்று பெயர்.

140. திஸ்தமென்து: Testamento என்ற போர்ச்சுக்கீசிய சொல். மரண சாசனம் அல்லது உயில் என்று பொருள்.

141. கல நெல்: நெல் அளக்க பயன்படுத்தப்பட்ட ஓர் அளவை. இரண்டு மரக்கால் கொண்டது ஒரு கலம்.

142. காலி: இலங்கையிலுள்ள காலி என்ற துறைமுகம்.

143. மண்ணிலா: பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மணிலா என்ற துறைமுகம். வாணிப விவரங்களுக்கு காண்க. AN, Mss. Memoire de Guillaume Fevrier $C^2$ -56.

144. பரங்கிமலை: புனித தோமையார் மலை என இன்று அழைக்கப்படும் இந்த இடம் சென்னைக்கு அருகில் உள்ளது. போர்ச்சுக்கீசியர்கள் இங்கு ஓர் ஆலயம் கட்டினார்கள். அவர்கள் வசம் இந்த மலை இருந்ததாக போர்ச்சுக்கீசிய ஆவணங்களில் காண்கிறோம். S. Jeyaseela Stephen, *Portuguese in the Tamil Coast–Historical Explorations in Commerce and Culture, 1507-1749,* Pondicherry 1998, P.265 & 305.

145. பரங்கி: பரங்கி என்ற சொல் பொதுவாக போர்ச்சுக்கீசியர்களை குறிப்பிட்டு பதினாறாம் நூற்றாண்டில் இருந்தது. பின்பு எல்லா ஐரோப்பியர்களையும் குறிப்பிடும் சொல்லாக பயன்படுத்தப்பட்டது.

146. பவழக்காடு: சென்னைக்கு வடக்கே உள்ள பழவேற்காடு என்னும் துறைமுகம். டச்சுக் கிழக்கிந்திய கம்பெனியின் வாணிப ஸ்தலமாக 1609 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது.

147. முகமல்: வெல்வெட்டு என்னும் துணி. வில்தூது என்று ரங்க பிள்ளை தன் நாட்குறிப்பில் குறிப்பிடுகிறார்.

148. சீனா பாலிச்சுருட்டி: சீனாவிலிருந்து வரப்பெற்ற பட்டு துணி சுருள்.

149. படுத்திக்குலார்: முன்சுட்டிய குறிப்பு எண் 73 காண்க.

150. குறவஞ்சி: குறி சொல்லும் குறமகள். அல்லது குறத்தி தன் தலைவிக்கு காதல் முதலியவற்றைப் பற்றி கூறும் ஒரு பிரபந்தம்.

151. நயினார்: கும்பனி சேவுகர்களின் தலைவன்.

152. தொம்பரவர் : தொம்பம் என்றால் கழைக் கூத்து. கழைக் கூத்தாடுபவர்கள் என்று இவண் பொருள் கொள்க.

153. ஓலை : கிறிஸ்தவ திருமணத்துக்கு முன்னதாக மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாடு நடைபெறும் போது திருமண விக்கினங்கள் ஏதாவது இருந்தால் பொதுமக்கள் குருவானவர்க்கு தெரிவிக்க வேண்டி வாசிக்கப்படும் செய்திகள் அடங்கியது.

154. நசர் : நஜீர் Nazr என்ற உருது சொல். காணிக்கை என்று பொருள். பெரும்பாலும் அதிகாரத்தில் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் மேல்மட்டத்தில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்படுவது. See, Records of Fort St. George, Index Country Correspondence, p. 802.

155. கொத்தவால்தனம் : கொத்வால் Cutwal என்ற பாரசீக சொல். நகர காவல் தலைமை அதிகாரி. சில சமயங்களில் சந்தையை மேற்பார்வை பணிக்கொள்ளும் அலுவலர் என்றும் பொருள் படும்.

156. சோப்புதார் : வெள்ளியினால் அலங்கரிக்கப்பட்ட ஒரு தடியை சுமந்து செல்லுபவர்.

157. வெங்களூர்: கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூர். மெக்கன்சி சுவடி. 3119ல் குறிப்பிடப்பட்டுள்ளது. கே.எம். வெங்கட்ட ரமணய்யா, தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு, தஞ்சாவூர், 1987, பக்கம் 34.

158. முன்சுட்டிய குறிப்பு 157

159. லெத்தூரு: Lettre என்ற பிரெஞ்சு சொல். கடிதம், எழுத்து என்று பொருள்படும்.

160. கோவை : கோவா என்னும் துறைமுகம். போர்ச்சுக்கீசியர்களின் தலைமை வாணிப ஸ்தலமாக 1530 ஆம் முதல் செயல்பட்டது.

161. சாத்தன்குடி: தரங்கம்பாடிக்கு அருகில் உள்ள ஊர்.

162. பைகோ : Pegu என்னும் துறைமுகம் (அன்றைய பர்மா) இன்றைய மியான்மரில் உள்ளது. இங்கிருந்து மாணிக்கம், இந்திய கிழக்கு கடற்கரை துறைமுகங்களுக்கு இறக்குமதியானது.

163. கவில் : கவுல் என்ற சொல். வாக்கு குடுத்து என்று பொருள். உடன்படிக்கை எனவும் கொள்ளலாம்.

164. சேர்வைக்காரன் : படைத்தலைவன்.

165. ஒடுதி : Ordre என்ற பிரெஞ்சு சொல் ஆணை, கட்டளை என்று பொருள்.

# இணைப்புகள்

## எண் 1

TNSA, Letters from Fort St. George, 1762, Document No. 11

To CHARLES TURNER ESQ
CHIEF AT CUDDALORE

SIR

We have received your letter dated 5th instant

From the estimate you make of the expense to repair the washing godown and choultries at Bandepolam we approve of your putting the same into execution as soon as possible.

You have our permission to take from Pondicherry such of the articles remaining there as may be of use at Cuddalore of which you are to make a valuation and acquaint us Mr. Dowsett having our direction to return to Madras what remain to be done at Pondicherry is to be under your charge and you will accordingly employ a conicoply to mange the business.

There being a quantity of gunpowder remaining at Pondicherry you will cause it to be surveyed and report to us the state of it such part as may be fit for service you will immediately send by bullocks to Trichnopoly where that article is wanted and the remainder if any you will send hither if it be worth transporting

You are in future to pay the monthly charges according to the late regulation of which you have been acquainted.

The servants you represent to be necesary for the Garrison and Hospital you have our leave to entertain

Your Several Indents are ordered to be complied with by the first opportunity

FORT ST GEROGE
27 January 1762

WE ARE SIR
SIR
Your affectionate friends
GEROGE PIGOT & COUNCIL

## எண் 2

TNSA, Letters from Fort St. George, 1762, Document No. 12.

To MR ROBERT DOWSETT

SIR

As we think your stay at Pondicherry no longer necessary you will on receipt hereof transmit to Mr Turner, the chief of Cuddalore an account of the several articles remaining and make the same over incharge to such person as be may appointed to receive them which done you are to report to Madras.

FORT ST GEROGE
27 January 1762

WE ARE SIR
SIR
Your affectionate friends
GEROGE PIGOT & COUNCIL

## எண் 3

TNSA Letters to Fort St. George, Vol. XLII, pp. 53-54.

TO THE HONOURABLE GEORGE PIGOT ESQ

PRESIDENT AND GOVERNOR & COUNCIL OF FORT ST. GEORGE

HONOURABLE SIRS

This waits on you with the accounts of this settlement for the month of March and agreeable to your directions I enclose a list of old materials received from Pondicherry with their valuation I am with respect.

CUDDALORE
15 April 1762

HONBLE SIR & SIRS
Your most Obedient humble Servant
CHARLES TURNER

## எண் 4

*TNSA, Letters to Fort St. George,* Vol.XLII, pp. 53-54.

## Account of Sundry Old Materials Received from Pondicherry to Cuddalore, March 31st 1762

| Number and Item | Size and Price | | Total Estimate (Pagoda, Panam and Kasu) |
|---|---|---|---|
| A: TEAK | 9 Teak timbers | 18 @ 3 ps each | 27-00-00 |
| | 3 Teak timbers | 18 @ $1\frac{1}{2}$ ,, | 4-18-00 |
| | 13 Teak timbers | 15 @ $1\frac{1}{2}$ ,, | 19-18-00 |
| | 20 Teak timbers | 10 @ $\frac{1}{2}$ ,, | 10-00-00 |
| | 15 Country teak | 14 @ 1 ,, | 6-00-00 |
| B: COUNTRY TIMBER | 7 Timbers | from 14 to 16 @ $\frac{3}{4}$ | 5-09-00 |
| | 6 Timbers | from 14 to 16 @ 1 | 6-00-00 |
| | 6 Timbers | 9 7/8 @ - | 5-09-00 |
| | 8 Timbers | from 3 to 5 @ $\frac{1}{4}$ | 2-00-00 |
| C: OTHERS | 3 Country planks | $\frac{1}{2}$ length breadth thickness | 1-18-00 |
| | 1 Angely plank | 13 2 10 | 4-00-00 |
| | 2 Centry box frames | | 2-00-00 |
| | 1 Teak railed door | | 5-00-00 |
| | 1 Teak with Palmeira railes | | 2-00-00 |
| D: GATES | | length breath | |
| | 1 pair | $12\frac{3}{4}$ $4\frac{3}{4}$ | 15-00-00 |
| | 1 pair | $14\frac{3}{4}$ $4\frac{1}{4}$ | 15-00-00 |
| | 1 pair | 20 $6\frac{3}{4}$ | 40-00-00 |
| | 1 pair | 12 $5\frac{1}{4}$ | 5-00-00 |
| | 2 pair | 9 $6\frac{1}{4}$ | 5-00-00 |
| E: MISCELLANEOUS | 13 planks | | 5-00-00 |
| | 1 large table | | 2-00-00 |
| | 1 door fixed with glasses | | 3-00-00 |
| | 1 transport carriage | | 12-00-00 |
| | 6 broken ladders | | 6-00-00 |
| | 1 screen | | 2-00-00 |
| | 13 pounder gun with its carriage | | 15-00-00 |
| F: PALMEIRAS | | length | |
| | 1515 | 8 & 9 @ 4 ps | 60-21-48 |
| | 1485 palmeiras | 10 to 11 @ 6 ps | 89-03-48 |
| | 1510 | 12 to 14 @ 8 ps | 120-28-64 |
| | 215 | 16 to 27 @ 10 ps | 21-18-00 |
| | 510 single | 10 @ $3\frac{1}{2}$ | 17-30-48 |
| | 190 single | 12 @ 6 | 11-14-32 |
| | 375 single | 18 @ 9 | 63-00-00 |
| | 250 | 10 @ 5 | 12-18-00 |
| | 750 | 13 @ 6 | 45-00-00 |

## எண் 5

IOLR, Military Consultations, Vol. XVII, 28th December, 1762.

### DETAILS OF PLUNDER EXPENDITURE INCURRED IN PONDICHERRY BY THE ENGLISH, 1761-1762

| Number of labourers and carriage employed | Wages paid (in Panam and kasu) |
|---|---|
| 45 carpenters | 142-00 |
| 89 smiths | 182-00 |
| 1145 cooleys | 1432-00 |
| 1 kanakkupillai for 1/2 month | 6-00 |
| 73 boats at 50 panams per boat | 3650-00 |
| 200 carts at 18 panams per cart | 3600-00 |
| 15 catamarams | 193-40 |
| Total | 9205-40 |

# அருஞ்சொற்பொருள்

## அ

| | | |
|---|---|---|
| அகண்டித | – | குறைவுபடாத, நிறைவுடைய, இடைவிடாது |
| அஞ்சுகாதவழி | – | ஐந்து ஊர்களை மிக கடினமாக கடந்து |
| அஞ்சுசாதி | – | தட்டான், கண்ணான், சிற்பன், தச்சன், கொல்லன். இவர்களை கம்மாளர் என்றும் கூறுவார்கள். |
| அமில்தாரர் | – | நில வருவாயை வசூலிக்கும் பொறுப்பு அதிகாரி |
| அரும்பாத்தை | – | ராணுவீரர்களுக்கு சம்பளம் கொடுத்தும் மற்றும் உணவு பொருட்களை வழங்கும் பொறுப்பு உள்ள அதிகாரி |
| அறப்பிங்கனம் | – | (அப்யங்னம்) எண்ணெய் தேய்த்து நீராடல் |
| அலம்பல் | – | ஆரவாரம், உபத்திரம் |
| அனுமரணம் | – | உடன்கட்டை ஏறுதல் |
| அஷ்டமி | – | எட்டாம் நாள் |
| அச்சாரம் | – | முன்பணம் |
| அரிக்கீது | – | வீணாகி |
| அட்சதை | – | முளை உடையாத அரிசி |
| அக்கிரகாரம் | – | பார்ப்பனத் தெரு |
| அண்டையில் | – | பக்கத்தில், இடத்தில் |
| அதம்பண்ணி | – | அழித்து |
| அதிசயமான | – | வியக்கத்தக்க |
| அப்போ | – | அப்பொழுது |
| அபேட்சையாய் | – | விரும்பி |
| அய்சுவரியமும் | – | செல்வமும் |
| அரிக்காருடனே | – | ஒற்றருடன் |
| அன்னீதம் | – | தவறு |
| அன்னீதமான | – | நியாயமற்ற |
| அனுகிரகத்திலே | – | திருவருளால் |
| அநேகம் | – | பல |

## ஆ

| | | |
|---|---|---|
| ஆப்த | – | நம்பகமான |
| ஆயாசம் | – | வருத்தம் |
| ஆயுசு | – | ஆயுள் |
| ஆயத்தம் | – | முன்னேற்பாடு |
| ஆர் | – | யார் |
| ஆஸ்தி | – | சொத்து |
| ஆஸ்திபாஸ்தி | – | சொத்துக்கள் |

## இ

இசமான் – எஜமான், தலைவன்
இண்ணு – இன்று
இந்தப்பிரகாரம் – இங்ஙனம்
இருக்கச்சே – இருக்கும் பொழுது

## உ

உச்சவம் – திருவிழா
உடம்படிக்கை – உடன்படிக்கை
உத்தரகிரியை – இறந்தவர்களுக்கு செய்யும் சடங்கு
உத்தியோகம் – வேலை, பணி
உத்தரவு – இசைவாணை
உபசாரங்கள் – மரியாதைகள்
உபத்திரம் – தொல்லை
உம்மைத்தொட்டு – உம்மால்
உம்மோடகூட – உம்முடன்
உலாந்தகாரர் – டச்சுக்காரர்
உறுக்காந்தார் – உட்காந்தார்
உண்டி – காசோலை, தொகை அனுப்புதற்குரிய தொகை
உத்தாரம் – ஆணை
உபேக்ஷை – புறக்கணித்தல்

## எ, ஏ

எத்தினம் – முயற்சி
எவனண்டை – யாரிடம்
ஏகாதேசி – பதினோராம் நாள்

## க, கா, கி

கடுதாசி – மடல், காகிதம்
கவில் – குத்தகை
கலம் – இரண்டு மரக்கால் கொண்டது ஒரு கலம்
கபுறு – செய்தி
காசு – முப்பத்திரெண்டு காசு கொண்டது ஒரு பணம்.
காபிறாப்பட்டு – குழப்பம் அடைந்து
காரிபாரி – அரசரின் மெய்காப்பாளரின் தலைவன்
கில்லா – கோட்டை
கில்லேதார் – கோட்டை காவலன்

## கு, கூ

குமாந்தான் – படைத்தலைவன்
குமாரத்தி – மகள்
குத்தகை – ஒப்பந்தம்
குடிவாரம் – நிலத்தை உழுது பயிர் செய்ய குடிகளுக்கு உரிமை
கூர்னிசு – வணக்கம்
கூட – உடன்

## கெ, கொ

கெவுனர் – ஆளுநர்
கெர்ப்பம் – கருவுறல்
கொத்தவால் – நகர தலைமை போலீஸ் அதிகாரி

## ச

சகாயம் – உதவி
சங்கடம் – வருத்தம்
சங்கமுகம் – காவிரி கடலோடு கலக்கும் இடம்
சங்கேதம் – குறிப்பு
சச்சரவு – கலகம்
சடங்குகள் – செயல்கள்
சத்துநேரம் – சிறிது நேரம்
சந்தியிலே – நேரத்திலே
சம்பிரமத்துடனே – மரியாதையோடு
சம்பத்துடனே – செல்வத்துடன்
சமுசயத்தில் – ஐயத்தில்
சமுசாரம் – மனைவி
சரீரம் – உடம்பு
சவரட்சணை – காப்பாற்றுதல்
சவுபாக்கியவதி – மங்கலச் சொல்
சகலகுண சம்பண்ணன்– நற்குணங்கள் எல்லாம் நிரம்பியவன்
சகலாத்து – கம்பளித் துணி
சப்தமி – ஏழாம் நாள்
சஷ்டி – ஆறாம் நாள்
சம்பிறவி – தலைமை கணக்கன்
சலுதியாய் – விரைவாய்
சலாம் – வணக்கம்
சலங்கு – ஒருவகை படகு
சக்கரம் – பத்து பணம் கொண்டது ஒரு சக்கரம்
சங்கீத மேளம் – நாதஸ்வரங்களுடன் பொருந்திய மேளம்
சதுர்த்தி – நான்காம் நாள்

சதுர்த்தசி – பதிநான்காம் நாள்
சன்னது – அரசாங்க முத்திரையுடன் கூடிய ஆணை
சசேயணம் – பால் தெளித்தலாகிய ஈமச் சடங்கு

## சா

சாகீர் – அரசாங்க ஊழியத்தின் பொருட்டு நிலத்தின் வருவாயை பாரம்பரியமாய் அனுபவிக்க முகமதியர்களின் ஆட்சியில் விடப்பட்டு வந்த நிலமானிய வகை.
சாவடி – அரசாங்க நியாய ஸ்தலம்
சாமத்திலே – இரவிலே

## சி, சீ, சு

சிப்பாய் – இந்திய போர் சேவகன்
சிமுதயமாய் – அடர்ந்து
சிரேஷ்டர் – சிறந்தவர்
சிரஞ்சீவி – வாழ்த்து அடைமொழி
சில்லறை மனுஷன் – சாதாரண மக்கள்
சீமை – தேசம்
சீவனை – உயிரை
சுத்திக்கொண்டு – முற்றுகையிட்டு
சுலும்புக்கு – அழிவுவேலைக்கு
சுருக்காய் – விரைவில்
சுலும்பு – தொந்தரவுகள்
சுபா – நாட்டின் உட்பிரிவு
சுபாதார் – சுபாவின் அரசியல் அதிகாரி ராணுவத் துறையும் இவர் அதிகார வரம்பில் இருந்தது.
சுன்னத்து – விருத்த சேதனம்

## செ, சே, சொ, சோ

செனனம் – பிறப்பு
சேத்து – சேர்த்து
சேவுகம் – அலுவல்
சேர்வைக்காரன் – படைத்தலைவன்
சேர் – எட்டே கால் சேர் கொண்டது ஒரு மரக்கால். ஐந்து சேர் கொண்டது ஒரு வீசை.
சொல்லச்சே – சொல்லும் பொழுது
சொஸ்தமாய் – சுகமாக
சோப்புதார் – கதாயுதம் தாங்குவோன்
சோரபாரியாய் – கொள்ளை

## டா, டொ

டாணையம் – சேனை
டாணு – காவல்
டொலி – தூக்கிச் செல்லும் மஞ்சம்

## த, தா

தண்டு – சேனை, படை
தஸ்தர் – ஆவணம், பதிவேடு
தப்பு – ஒரு சிறு பறை
தசமி – பத்தாம் நாள்
தாக்கீது – உத்தரவு, ஆணை
தார்ப்பரியம் – கருத்து
தாபனம் – உறுதி செய்து

## தி

தினம் – நாள்
திவான் – முதன்மந்திரி
திவிதியை – இரண்டாம் நாள்
திருதியை – மூன்றாம் நாள்
திரையோதசரி – பதிமூன்றாம் நாள்

## து

துப்பாக்கி – சுடும் கருவி
துர்க்கம் – கோட்டை
துபாசி – இரண்டு மொழி பேசுபவர், மொழிபெயர்ப்பாளர்
துர்க்கம் – கோட்டை
துவாதசி – பனிரெண்டாம் நாள் வளர்பிறை
துரைத்தனம் – ஆளுநரான அதிகாரம்

## தெ, தே

தெரிசனம் – தரிசனம்
தெய்வீகமானார் – இறந்தார்
தேவடியாள் – தேவதாசி

## ந, நா, நி

| | | |
|---|---|---|
| நமஸ்காரம் | – | வணக்கம் |
| நகராவுடனே | – | மெய்க்காப்பாளர் முரசுடனே |
| நயினார் | – | கும்பனி சேவுகர்களின் தலைவன் |
| நசர் | – | காணிக்கை |
| நவமி | – | ஒன்பதாம் நாள் |
| நாகப்பட்டணம் வராகன் | – | சக்கரம் 28 $\frac{3}{4}$ பணம் |
| நாட்டார் | – | சாதித் தலைவர் |
| நிமித்தியம் | – | பொருட்டு |
| நிமித்தியமில்லாமல் | – | நேரமில்லாமல் |
| நிஷ்கரிசை | – | உறுதி, நிச்சயம் |

## ப

| | | |
|---|---|---|
| பத்திரம் | – | உறுதிமொழி |
| பல்லக்கிலே | – | சிவிகையில் |
| பதினெட்டாம் பெருக்கு | – | ஆடி மாதம் பதினெட்டாம் நாள். காவிரி பெருக்கு விழா |
| பந்துசென போதகர் | – | உறவினர்களை காப்பவர். |
| பஞ்சமி | – | ஐந்தாம் நாள் |
| பவுஞ்சு | – | சேனை |
| பணம் | – | முப்பத்தாறு காசு கொண்டது ஒரு பணம் |
| பலம் | – | எட்டு பலம் கொண்டது ஒரு சேர் |
| பர்வாணா | – | அரசன் ஆணை |
| பள்ளிக்கிராமம் | – | கோவிலுக்கு உரிய கிராமம் |
| பத்து கிராமம் | – | வயல்வெளிகள் கொண்ட கிராமம் |
| பரியம் | – | திருமண நிச்சய சடங்கு |
| பந்தர் | – | துறைமுகம் |
| பரங்கிப்பேட்டைவராகன் | – | இரண்டு சக்கரம் மற்றும் எட்டு பணம் கொண்டது |

## பா

| | | |
|---|---|---|
| பாற்காரர் | – | காலாட்படை வீரர் |
| பாளையம் | – | அரசனுக்கு வேண்டிய காலத்தில் உதவவேண்டும் என்ற நிபந்தனையுடன் விடப்பட்ட ஊர் தொகுதி. |
| பாளையக்காரர் | – | பாளையப்பட்டு என்றும் அழைக்கப்படும் பாளையத்தை நிர்வகிப்பவர் |
| பாத்தியம் | – | உரிமை |
| பாதிரி | – | கிருஸ்த்துவ சமய போதகர் |

## பி, பூ, பே

| | | |
|---|---|---|
| பிகாடிச்சு | – | மாறுபட்டு |
| பிறேத்தனம் | – | முயற்சி |
| பிராந்தியத்தில் | – | நாட்டில் |
| பிறாது | – | முறையிட்டு விண்ணப்பம் |
| பிரதமை | – | முதல் திதி |
| பிகாடிச்சு | – | விரோதமாகி |
| பூர்வோத்திரம் | – | முன்நிகழ்ச்சி |
| பூர்வீகம் | – | முன்னைய நிலை |
| பூவிராகன் | – | நாற்பத்தைந்து பணம் கொண்டது ஒரு பூவிராகன் |
| பேஷ்கஷ் | – | வரி |

## ம, மா, மு, மே

| | | |
|---|---|---|
| மகாநவமி | – | நவராத்திரி இறுதி நாள் |
| மணியம் | – | கிராமத் தலைவன் |
| மகாநாட்டார் | – | சாதித் தலைவன் |
| மாசிகம் | – | இறந்தோருக்குச் செய்யும் மாதந்திரச் சடங்கு |
| மானியம் | – | நிலத் தீர்வையை இனாமாக தருதல் |
| மாகாணம் | – | பல கிராமங்களை சேர்ந்த பகுதி |
| மாரிபத்திலே | – | அவர் வழியிலே |
| முகதாவிலே | – | முன்னிலையிலே |
| முகமல் | – | வெல்வெட்டு |
| முகமன் வார்த்தை | – | உபசாரம் |
| முகதலை | – | கைமாற்று கடன் |
| முறி | – | ஓலையில் எழுதிய ரசீது |
| மேல்வாரம் | – | நிலவருவாயில் நிலச் சொந்தக்காரரின் பாகம் |

## யா, யு

| | | |
|---|---|---|
| யாதஸ்து | – | நினைவு குறிப்பு |
| யாசனம் | – | யாகம் செய்வித்தல் |
| யுகாதி | – | தெலுங்கர் வருடப்பிறப்பு |

## ர, ரா

| | | |
|---|---|---|
| ரஜத் | – | அரபு மாதம். முகமதியரின் ஏழாவது மாதம். ஏப்ரல் மாதத்திற்குரிய காலம் |
| ராஜமானிய | – | அரசரால் மதிக்கத்தக்க |

## ல

லக்கோடா – அரக்கு வைத்த உரைகள்
லட்சை – வெட்கம்
லஷ்மி பிரசன்னரான – செல்வம் பெருந்தோன்றுதல்

## வ, வா

வக்கீல் – அதிகாரம் பெற்ற தரணி, முகவர், தூதுவர்
வராகன் – நாற்பத்தைந்து பணம் கொண்டது ஒரு வராகன்
வர்த்தமானம் – செய்தி
வஜாரத்து மாப்பு – அரச குடும்பத்தைச் சேர்ந்த பெருமக்கள்
வாசாப்பு – சிரிப்பு அல்லது சோக நாடகம்

## வி, வீ

வில்லங்கம் இல்லாமல் – தடையில்லாமல்
வியாச்சியம் – வழக்கு
விஜயதசமி – மகாளைய அமாவாசைக்கு பிறகு வரும் வளர்பிறை பத்தாம் நாள்
வீசை – ஐந்து சேர் கொண்டது ஓர் வீசை

# ஆய்வடங்கல்

## I. சுவடிகள்

பிரான்சு

### ARCHIVES NATIONALES, PARIS

Mss, Mémoire de Guillaume Fevrier, C2-56.

### BIBLIOTHÈQUE NATIONALE, PARIS

Mss, Indien, Nos. 154 bis, 155, 158.

இந்தியா

### TAMILNADU STATE ARCHIVES, CHENNAI

Mss, Public Department, (Sundries) vol. 186.

Mss, Letters to Fort St. Geroge, 1762.

Mss, South Arcot District Collectorate Records, 18505-141, Restitution of the French settlements, 1765.

### NATIONAL ARCHIVES OF INDIA, PONDICHERRY

Mss, Eighteenth Century Records, Document No. 436.

### INSTITUT FRANÇAIS, PONDICHERRY

Mss, ET.FR-No.131, Fragment du manuscrit presume original du journal de Thiruvengadam Pillai, nevue d' Ananda Ranga Pillai etc. copies diverses.

## II. அச்சிடப்பட்ட முதன்மைத் தரவுகள்

Diagou, Gnanou, *Arrets du Conseil Supérieur de Pondichéry,* Tome III, 1775-1778; Pondicherry, 1937-1939.

Gaudart,E., *Catalogue de Quelques Documents des Archives de Pondichéry,* Pondicherry, 1931.

———, *Catalogue des Manuscrits des Anciennes Archives de l' Inde Française,* Tome I, 1690-1789; Tome II, 1789-1815; Pondicherry, 1936-42.

Martineau, A., *Lettres et Conventions des Gouverneurs de Pondichéry avec Différents Princes Hindous,1666-1793,* Pondichéry, 1911.

Orme, Robert, *History of the Military Transactions British Nation in Indostan from the Year MDCCXLV,* 2 Vols, Madras, 1861.

Price, Frederick & H. Dodwell, *The Private Diary of Ananda Ranga Pillai,* 12 vols, Madras, 1904-1928.

Vansittart, Henry, *A Narrative of the Transactions in Bengal, 1760-1764,* reprint, Calcutta 1976.

## III. இரண்டாம் நிலை ஆதாரங்கள்

Fred J. Fenzer., *History of the Tranquebar Mission Worked out from the Original Papers,* Tranquebar, 1863.

Hatalkar, V.G., *Relations between the French and the Marathas,* 1666-1815, Bombay, 1958.

Krishnasami Pillai, "The family of Ananda Ranga Pillai: Some Genealogical Data" in *Revue Historique de Pondichéry,* vol. 10, 1972, pp. 21-30.

Mizushima, Tsukasa, "Nattar in Pondicherry in Mid-Eighteenth Century", *Proceedings of the Fifth International Conference-Seminar on Tamil Studies,* Madras, 1981, vol. II, pp. 14-48.

Sastri, Nilakanta., "New pages from Ananda Ranga Pillai's Diary", *Journal of the Madras University,* Vol. XIV, No.2, (reprint) Madras, 1942, pp. 1-16

Srinivasan, C.K., *Maratha Rule in the Carnatic,* Annamali Nagar, 1944.

Stephen, S. Jeyaseela, *Portuguese in the Tamil Coast: Historical Explorations in Commerce and Culture, 1506-1749,* Pondicherry, 1998.

———, (ed) with K.S. Mathew, *Indo-French Relations,* Delhi, 1999.

———, "Un Inedit de l' Histoire de Pondichéry: Le Journal de Thiruvengadam Pillai", *Le Trait-d'Union,* Juilliet, 1995, p.5.

———, "Socio-Economic Role of Dubash Pedro Kanakaraya Mudaliar in the French Colony of Pondicherry: A Study in Resilience", *Revue Historique de Pondichéry,* vol XVIII, 1995, pp. 15-32.

———, "Historic Textiles of Pondicherry: Weaving and the Trading World under the French Flag', *PILC Journal of Dravidic Studies,* VI, 1, January 1996, pp.93-124.

———, "Urbanism and the Chequered Existence of the Indo-French Town of Pondicherry, 1674-1793 ", *Revue Historique de Pondichéry,* Vol. XIX, 1996, pp. 29-64.

———, "Urban Growth of Pondicherry and the French: A Study of the Town Plans, 1702-1798", in K.S. Mathew & S. Jeyaseela Stephen, *Indo French Relations,* Indian Council of Historical Research, Monograph Series 2, Delhi, 1999, pp. 109-123.

Subramaniam, K.R. *The Maratha Rajas of Tanjore,* Thanjavur, 1928.

Tamil Lexicon, University of Madras, Chennai, 1982

Yule C.H.& Burnell A.C., *Hobson-Jobson: A Glossary of Colloquial Anglo-Indian Words and Phrases and of Kindered Terms,* London, 1903.

## IV. தமிழ் நூல்களும், கட்டுரைகளும்

கோபாலகிருஷ்ணன், "ஆனந்தரங்க பிள்ளையின் இறுதி நாட்களும், புதுச்சேரியின் வீழ்ச்சியும்", *வரலாறு,* பிப்ரவரி–ஆகஸ்டு 1996, பக்கம் 73–81.

ஜெயசீல ஸ்டீபன், எஸ். தமிழில் நாட்குறிப்புகள்: செய்தி இதழ்களின் முன்னோடிகள் (பதினெட்டாம் நூற்றாண்டு), புதுச்சேரி, 1999.

———, முத்துவிஜய திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு, 1794–1796, புதுச்சேரி, 1999.

மன்னர்மன்னன், (தொகுப்பு) புதுவை புகழ் மணிகள், சென்னை 1979.

சுப்பிரமணியன், ந. ஆனந்தரங்கக் கோவை, சென்னை, 1955.

வெங்கட்டரமணய்யா, கே.எம்., தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு, மெக்கன்ஸி சுவடி டி.3180, தஞ்சாவூர், 1987.

# சொல் அகராதி


| | |
|---|---|
| அக்கப் பிள்ளை | 22 |
| அச்சுத விசய ராகவ நாயக்கர் | 46 |
| அபராத சீட்டு | 77 |
| அப்பாவு | 1, 30, 31, 33, 67, 76 |
| அப்பு முதலியார் | 2, 47 |
| அப்பாச்சி ராயன் | 113 |
| அபுசல்கான் | 85 |
| அபித்தாம் | 4, 114 |
| அமரகுந்தி | 46 |
| அமுல் | 17, 28, 111 |
| அமுல்தாரன் | 96, 163 |
| அன்னப்பன் | 24, 54 |
| அண்ணாசாமி | 1, 9, 12, 13, 22, 39, 43, 45, 65, 129, 153 |
| அண்ணாவையர் | 34 |
| அரிசி | 57 |
| அரியாங்குப்பம் | 72 |
| அரியலூர் | 85, 89 |
| அய்யத்தம்பி | 17, 46, 95 |
| அய்யண்ண சாஸ்திரி | 17 |
| அய்யாசாமி | 23, 29, 32, 35, 61 |
| அரும்பாத்தை | 62 |
| அறுக்காறு | 22, 68, 87 |
| அருணாச்சல செட்டி | 16 |
| அருளானந்தன் | 132 |
| அருணகிரி | 159 |
| அய்தர் நாயக்கன் | 35, 63, 73, 85, 88 |
| அம்பலவச் செட்டி | 2 |
| அம்பிலுயர் | 2 |
| அழகப்பன் | 2 |
| அழகப்ப முதலி | 167 |
| அழகியமணவாளச் செட்டி | 77 |
| ஆனந்தரங்கப் பிள்ளை | 2, 5, 6, 36, 63 |
| ஆனந்தரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை | 28, 29 |
| ஆறுமுக பண்டாரம் | 28 |
| ஆறுமுகத்தா பிள்ளை | 118 |
| ஆறுமாகாணம் | 126 |
| ஆரணி | 41, 23, 84 |
| ஆண்டியப்பன் | 50, 141 |
| ஆயுத பூசை | 12 |
| ஆற்காடு | 16, 35, 63, 68, 73, 163 |
| ஆபஸ்தன் | 40, 44 |
| ஆதிகேசவ பெருமாள் | 16 |
| இக்கிலு | 85, 88, 169 |

| | |
|---|---|
| இசுப்பித்தால் முத்தப் பிள்ளை | 7 |
| இருளப்பிள்ளை | 102 |
| இரும்பு | 100, 158 |
| இஸ்காதர் | 61, 67, 71, 76 |
| இஸ்பாங்கோல்காரர் | 119, 121, 132 |
| இன்னாசி முத்து | 132 |
| ஈயம் | 111 |
| உல்லாந்தக்காரர் | 54, 92, 101, 103 |
| உல்லாந்த துரை | 70 |
| உடையார்பாளையம் | 129 |
| உப்பளம் | 16 |
| உதயகிரி | 96 |
| எல்ல முதலி | 34 |
| எல்லச்சியா பிள்ளை | 5, 15 |
| எருக்கட்டாஞ்சேரி | 18, 71, 78, 154, 163 |
| ஏனம் | 32 |
| கனகராயமுதலி | 102, 111 |
| கனகசபை முதலி | 109, 111, 139 |
| கனகம்மாள் | 25 |
| கருப்பூர் | 129 |
| கந்தப்ப முதலியார் | 1, 10, 18, 82 |
| கந்தப்ப பிள்ளை | 13, 28 |
| கண்டிராசா | 95, 101, 105 |
| கர்ணால்கூட்டு | 2, 4, 23 |
| கருங்குழி | 35, 162 |
| கஸ்தூரி செட்டி | 38 |
| கஸ்தூரி நாயக்கர் | 43, 47, 155 |
| கட்டுமரம் | 69, 76 |
| கலியாணம் | 71 |
| காவேரி | 12, 133 |
| காவேரிப்பட்டினம் | 85 |
| காவிரிப்பூம்பட்டினம் | 117 |
| காஞ்சிபுரம் | 94 |
| காடவராயன் | 12, 13 |
| காப்பிரிகள் | 116 |
| காளத்தியம்மாள் | 1 |
| காரைக்கால் | 55, 57, 61, 63, 108, 109 |
| காட்டுச்சேரி | 71 |
| கில்லேதார் | 25 |
| கிறிஸ்துவர் | 56, 63, 110, 125, 139, 174 |
| கிருஷ்ண பிள்ளை | 15, 18 |
| கிருஷ்ண செட்டி | 12 |
| கீரைத்தோட்டம் | 2 |
| குமரப்ப முதலி | 24 |
| குமரப்ப நாயக்கர் | 110 |
| குழந்தை | 1 |
| குண்டூர் | 32 |
| குளத்தூர் சாவடி | 75 |
| குத்தாலம் | 89 |

| | |
|---|---|
| குருவப்ப முதலி | 96 |
| கும்பனீர் தோட்டம் | 17 |
| குறவஞ்சி | 136 |
| கூடலூர் | 9, 30, 35, 151 |
| கேசவபெருமாள் பிள்ளை | 141, 176 |
| கொழும்பு | 24, 105 |
| கொட்டுப்பாளையம் | 12, 17, 18, 47 |
| கொவற்ணமா | 4 |
| கொன்சேலியர் | 4, 14, 25 |
| கொள்ளிடம் | 86, 142, 146 |
| கோவை | 48, 50 |
| கோவைப்பிரகாசன் | 57, 115, 116 |
| கோபாலசுவாமி | 47, 53 |
| கோவிலடி | 12, 76 |
| கோட்டை | 4 |
| கோவர்ணதோர் | 11, 14, 20, 33, 40 |
| கோலார் | 35 |
| கோடிச்சேரி | 58 |
| ஞானமுதலியார் | 136 |
| ஞானப்பிரகாச முதலியார் | 27 |
| சக்குலுனான் | 16, 23 |
| சவுரிமுத்து | 102 |
| சலாபத்து சங்கு | 87, 89 |
| சம்பாக்கோவில் பாதிரிகள் | 4, 42 |
| சாம்பசிவ பிள்ளை | 10 |
| சாம்பசிவ சாஸ்திரிகள் | 10 |
| சர்க்கரைப் பிள்ளை | 22, 24 |
| சதுரங்கப்பட்டிணம் | 9, 67, 126 |
| சாமினாத பிள்ளை | 17, 153 |
| சாமினாத செட்டி | 128 |
| சாராயக் கிடங்கு | 18 |
| சரவண முதலி | 8 |
| சந்திரகிரகணம் | 24 |
| சந்தா சாய்பு | 20, 117 |
| சவுரிராயன் | 152 |
| சாமராயன் | 79, 82 |
| சாத்தங்குடி | 163 |
| சாவடிக்கப்பித்தான் | 14 |
| சின்னப்பையன் | 70, 81 |
| சின்ன தம்பி | 46, 75 |
| சின்ன நாயக்கர் | 16, 23, 24, 45 |
| சின்ன முதலி | 8 |
| சிதம்பரம் | 29, 47, 83, 84 |
| சிதம்பரனாத பிள்ளை | 8, 10, 23, 24, 28, 34, 47, 82 |
| சிதம்பர பிள்ளை | 10 |
| சிவலிங்கச் செட்டி | 57, 125 |
| சிவனு ரெட்டி | 17 |
| சித்தம்பலச் செட்டி | 126 |
| சிந்தாதிரிப்பேட்டை | 101, 102 |

| | |
|---|---|
| சீகாழி | 9, 28, 22, 89, 93 |
| சீத்தாராமன் | 14 |
| சீத்தாரம பிள்ளை | 25, 26 |
| சுப்பா சாஸ்திரி | 23 |
| சுவாமிமலை | 89 |
| சுஸ்தீசு | 11, 12 |
| சூரப்ப முதலியார் | 95, 99, 100, 102, 177 |
| செஞ்சி | 84, 86, 99, 148, 163 |
| செம்பு | 113 |
| சென்னபட்டணம் | 9, 13, 15, 16, 20, 26, 29, 30, 31, 36, 176 |
| செல்மியாக்கு | 40, 55 |
| செங்கழுநீர்ப்பட்டு | 15, 18 |
| சேஷாசல செட்டி | 2, 7 |
| சேஷாத்திரி பிள்ளை | 25 |
| சொக்கப்ப முதலியார் | 75 |
| சோணாச்சல பிள்ளை | 2, 58, 64, 81 |
| தயிரியனாத முதலியார் | 100, 124 |
| தரங்கம்பாடி | 3, 17, 20, 25, 30, 31 |
| தஞ்சாவூர் | 12, 63, 86 |
| தாவீது | 100, 102, 110, 124 |
| தாசில்தாரன் | 74, 91 |
| திருக்கடையூர் | 44, 48, 151 |
| திருக்கணாமலை | 68, 103, 128 |
| திருக்காமி கிராமணி | 34 |
| திருக்கோவிலூர் | 85 |
| திருக்களாஞ்சேரி சாவடி | 112, 126 |
| திருக்காட்டுப்பள்ளி | 117 |
| திருவல்லிக்கேணி | 98 |
| திருவண்ணாமலை | 85 |
| திருவம்பல செட்டி | 77, 168 |
| திருவத்தியூர் | 35 |
| திருமுல்லைவாசல் | 27 |
| திருவேங்கிடபுரம் | 17, 34, 47, 120 |
| திருவேங்கிடத்தா பிள்ளை | 33, 47, 81 |
| திருச்சிராப்பள்ளி | 69, 79, 86 |
| திருவையாறு | 12 |
| திருமெய்ஞ்ஞானம் | 142, 151, 166 |
| தியாகப்ப முதலி | 76, 96, 161 |
| தில்லையாடி | 10, 42, 70, 170 |
| திருவம்பல நாயக்கர் | 47 |
| திருவமுடையாப் பிள்ளை | 24 |
| திருவந்திபுரம் | 22 |
| தினமார்க்க பெரியதுரை | 17 |
| தினசரி தஸ்திரம் | 3 |
| திருப்பாப்புலியூர் | 9, 22 |
| திருவாலங்காடு | 10 |
| திருவாமத்தூர் | 120 |
| திருவதி | 22, 79 |
| திருவிடைமருதூர் | 108 |

| | |
|---|---|
| திருச்செல்வராயன் | 109, 145 |
| திருவெண்ணைநல்லூர் | 85, 168 |
| தீவுக்கோட்டை | 24, 75, 108 |
| தீபாவளி | 16 |
| துளசி மகாராசா | 12, 13 |
| துருப்பாத்து | 117, 119 |
| துலோராம் | 2 |
| துவான் | 3 |
| துறையூர் | 89 |
| தெய்வசகாயன் | 100 |
| தேவனல்லி | 85, 87 |
| தேவனாம்பட்டினம் | 35 |
| தேவடியாள்கள் | 75 |
| தோப்புதுரை | 31 |
| பக்கிரிசாய்பு | 45 |
| பச்சையப்ப பிள்ளை | 37 |
| பரங்கிமலை | 37, 133 |
| பரங்கிப்பேட்டை | 22, 29, 30, 34, 35, 45, 54 |
| பட்டணவர் | 3 |
| படகு | 3 |
| பங்கோல் | 26, 36 |
| பழவேற்காடு | 68 |
| பனமலை | 99 |
| பரஞ்சோதி | 132 |
| பத்தாவி | 76, 80, 106, 107, 139, 154, 175 |
| பாளையக்காரர் | 17, 25, 29, 47, 48, 57, 93, 172, 173 |
| பாப்பு பிள்ளை | 2 |
| பாப்பைய்ய பிள்ளை | 98 |
| பாலைய்ய சாமி | 34 |
| பாவடங்குடி | 72 |
| பிக்கட்டு | 13, 37, 79, 128, 153, 165 |
| பித்துவால் | 61 |
| பிறையாறு | 17, 20, 30, 41 |
| பிரதாபசிங்கு | 108 |
| பிடுத்துக்கீசுக்காரர் | 105 |
| பியாங்கோர் | 50 |
| பீரங்கி | 2, 3 |
| புதுச்சேரி | 9, 21, 37, 51, 53 |
| புலோ | 58, 62 |
| புசி | 14, 51 |
| புசேத்து | 1, 32 |
| புதுவைப்பட்டணம் | 1 |
| புகையிலைக்கிடங்கு | 2 |
| புவனகிரி | 29, 54 |
| பூமியப்ப முதலியார் | 18 |
| பூந்தமல்லி | 54 |
| பெரியண்ண முதலியார் | 47, 82 |
| பெத்துநாயக்கன் | 25 |
| பெண்ணாத்தூர் | 10 |

பெருமுக்கல் 25
பெனுகொண்டா 169
பொன்னாச்சி 12, 47
பொம்மய்யபாளையம் 34
பொம்மராசாபாளையம் 97
பொம்பாய் 31
பொன்மலைப்பிள்ளை 38
பொன்னம்பல பிள்ளை 128
பொன்னம்பல செட்டி 259
பொன்னாச்சி 12, 47
போனா 87
போளூர் 98
பேரளம் 140
பைகோ 25
நச்சினப் பிள்ளை 13, 26
நன்னாச்சி 12, 17, 18, 22, 45, 47, 48
நரசிங்கராயர் 22, 28
நயினாத்தே முதலி 110, 128
நயினார் 2, 3
நமச்சிவாய முதலி 29, 34
நரசபுரம் 32
நரியங்காடு 68
நயினியப்ப பிள்ளை 82
நாகப்பட்டிணம் 9, 16, 20, 22, 23, 24, 30, 31, 50, 78
நாகலிங்கம் 14, 25, 26
நாகூர் 45, 109, 111, 116
நாட்டார் 17, 74
நாராயணப்பையர் 166
நிசாம்பட்டணம் 32
நிசாமல்லிக்கான் 85, 96
நெல் 130, 138
நெல்லூர் 85, 96, 126
நெல்லுக்கடை 115
மங்கம்மாள்புரம் 47
மம்முதல்லிகான் 20, 27, 35, 68, 73, 79, 84, 93, 94, 97
மதுரை 106
மதுராந்தகபண்டிதர் 156
மகக்கரை 50, 71
மணிலா 132, 153
மணியம் 17
மணியக்காரன் 76
மலையப்பன் 25
மயிசூர் 44, 80, 104, 108
மயிலாப்பூர் 54, 67
மன்னப்பெருமாள் முதலி 2
மன்னார்கோவில் 96
மணலூர்ப்பேட்டை 85
மணி முதலியார் 77
மராட்டியர் 79, 87, 143

| | |
|---|---|
| மலையப்ப முதலி | 104 |
| மச்சிலிப்பந்தர் | 32 |
| மத்தால்ரெட்டி | 32 |
| மடுகரை | 22, 66 |
| மக்கசேன் | 19 |
| மரக்காணம் | 18 |
| மாயவரம் | 21, 28, 89 |
| மாரியம்மன்கோவில் | 2, 115 |
| மாரானாசி ஐயர் | 12 |
| மானோசியப்பா | 13 |
| மாணாசிபண்டிதர் | 74 |
| மிருத்தசல்லிகான் | 20, 27, 41, 97, 130 |
| மீர்சாய்பு | 25, 166 |
| முதா | 56, 62, 77, 104 |
| முந்திரிகுலை | 57 |
| முராரிராயர் | 87, 88, 144 |
| முத்துகவரச் செட்டி | 66 |
| முத்துகுமரன் | 2 |
| முத்தப்பன் | 9 |
| முத்தப்ப முதலி | 22 |
| முத்தப்பிள்ளை | 13, 14, 16, 18, 29, 33, 36 |
| முத்துகிருஷ்ண முதலி | 38, 100, 101 |
| முத்துமல்லா ரெட்டி | 15, 21, 99 |
| முத்துவெங்கட்ராம ரெட்டி | 15, 99 |
| முத்துரங்க கிராமணி | 34 |
| முறசேன் | 14, 50, 54 |
| மெச்சியபிள்ளை | 10 |
| மெய்ஞ்ஞானபுரம் | 92 |
| மொசம்பி | 116 |
| மொய்தீன்சாய்பு | 54 |
| மோரீசு | 60, 116 |
| யாழ்ப்பாணம் | 20, 44 |
| றங்கோ பண்டிதர் | 156 |
| ருமாஞ்சி பண்டிதர் | 15, 33, 54, 81, 157 |
| ருமலிங்கபிள்ளை | 72, 81 |
| ருமு ரெட்டி | 17, 22 |
| ருசேந்திர அய்யன் | 2 |
| ருகவம்மாள் | 13 |
| ரமணப்பிள்ளை | 15 |
| ரங்கப்பன் | 18 |
| ராமராயன் | 14 |
| ராமநத்தம் | 89 |
| ராசகோபால நாயக்கர் | 15, 25 |
| லல்லி | 3, 5, 6, 23, 40 |
| லத்தூறு | 31, 33, 55, 81 |
| லாசு | 1, 39, 40 |
| லாலாபேட்டை | 85 |
| லெனுவார் | 14 |
| லெறி | 2, 11, 14, 38, 39, 81 |

| | |
|---|---|
| வந்தவாசி திருவேங்கடத்தா பிள்ளை | 113 |
| வயித்தீஸ்வரன் கோவில் | 34, 89 |
| வழுதாவூர் | 17, 22 |
| வள்ளாபுரம் | 79, 88 |
| வழக்காளிகள் | 77 |
| வழுதிலம்பட்டு | 79 |
| வண்ணாந்துறை | 1 |
| வானூர் | 17 |
| வில்லியனூர் | 17 |
| வில்லியநல்லூர் வாசற்படி | 4 |
| விருத்தாச்சலம் | 28 |
| விழுப்புரம் | 79, 130 |
| விஜயதசமி | 12, 13, 164 |
| விஸ்வநாத நயினார் | 54 |
| வீமநாயக்கன்பாளையம் | 13 |
| வீரராயன் | 37 |
| வெரேன் | 3 |
| வெங்களூர் | 149, 150 |
| வெங்கட்டகிரி | 96 |
| வெங்கடாச்சலய்யன் | 2, 23 |
| வெங்கிட்டநாராயணையர் | 15, 21 |
| வெங்கிடகிருஷ்ணபிள்ளை | 14, 26, 37 |
| வெங்கிட்டராயர் | 10, 36, 130 |
| வெங்கிட்டபிள்ளை | 9 |
| வெங்கிட்டாம்மாள்பேட்டை | 9, 10, 28, 29, 30, 34, 47 |
| வெங்கிட்ட ரெட்டி | 18 |
| வெங்கிடாச்சலபிள்ளை | 14, 15, 17, 37, 38 |
| வெள்ளி | 158 |
| வெளிப்பாளையம் | 62, 72, 93 |
| வேல்பிள்ளை | 15 |
| வேலூர் | 20, 29, 34, 41 |
| ஸ்ரீபெரும்பத்தூர் | 98 |
| ஸ்ரீரங்கம் | 12, 99 |
| ஸ்ரீரங்கப்பட்டினம் | 85 |

இந்த நூலில் கி.பி. 1760–1762 ஆம் ஆண்டுக்குட்பட்ட காலத்தில் ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை எழுதிய நாட்குறிப்பின் சுவடி மூலமும், ஆய்வுக் குறிப்பும் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி நகரம் 17 ஜனவரி 1761–ல் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்ட பின்பு தமிழர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் நிலமை என்னவாயிற்று என்பதை அறிய இந்தநாட்குறிப்பு உதவுகிறது. டேனீஷ் கம்பெனியின் தலைமை வாணிப இடமான தரங்கம்பாடியில் தங்கியிருந்த இந்த காலத்தில் நடந்த அன்றாட நிகழ்வுகள் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் அரசியல், வாணிபம், கலாச்சாரம், சமுதாயம் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய கிழக்கிந்தியக் கம்பெனிகளின் வாணிப நிலமை, ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர், மைசூர், ஐதராபாத் ஆகிய தலைநகரங்களில் நடந்த நிகழ்ச்சிகளும், மன்னர்களிடையே நிலவிவந்த அரசியல் நிலமையும், இதனிடையே ஏற்பட்ட போர்கள், முற்றுகைகள், வெற்றி தோல்வி, ராணுவ நடவடிக்கைகள் இவை அனைத்தையும் நாட்குறிப்பாளர் தெரிவித்துள்ளபடியால், தென்னிந்திய வரலாற்றை சரியாக எழுத இது ஓர் அரிய கருவூலம் என்பதில் ஐயமில்லை. பாரீசு, சென்னை, புதுச்சேரி ஆகிய இடங்களிலுள்ள பல்வேறு காகிதக் கையெழுத்துச் சுவடிகளை ஒப்பிட்டு தொகுத்து வழங்கியுள்ளது இந்த முதல் தொகுதியின் சிறப்பாகும்.

எஸ். ஜெயசீல ஸ்டீபன் ஓர் வரலாற்றறிஞர். தற்போது தூரக்கிழக்கு நாடுகளுக்கான பிரெஞ்சு ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுச்சேரி மையத்தில் பணிபுரிந்து வருகிறார். இவர் The Coromandel Coast and Its Hinterland : Economy, Society and Political System, 1500-1600 (ISBN 81-73-4-076-1), New Delhi, 1997; Portuguese in the Tamil Coast : Historical Explorations in Commerce and Culture, 1507-1749, (ISBN 81-87382-00-7), Pondicherry, 1998; தமிழில் நாட்குறிப்புகள் (18 ஆம் நூற்றாண்டு) : செய்தி இதழ்களின் முன்னோடிகள், (புதுச்சேரி, 1999) மற்றும் முத்து விஜய திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு 1794–1796, (புதுச்சேரி, 1999) என்ற நான்கு நூல்களின் ஆசிரியர், மேலும் Indo-French Relations (ISBN 81-7307-061-X) Indian Council of Historical Research Monograph Series-II, New Delhi, 1999 என்ற நூலையும் பதிப்பு செய்துள்ளார். போர்ச்சுகீசியம், டச்சு மற்றும் பிரெஞ்சு மொழிகளைக் கற்று பல ஆண்டுகளாக ஐரோப்பாவிலுள்ள ஆவணக் காப்பகங்களிலுள்ள வரலாற்றுத் தரவுகளைத் திரட்டி தமிழகத்தின் பொருளாதார மற்றும் சமுதாய வரலாற்று ஆராய்ச்சி செய்துள்ளார். அமெரிக்காவிலுள்ள நெபுராஸ்கா லிங்கன் பல்கலைக்கழகத்தில் மறிதரு பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார். இவர் இந்திய தேசிய வரலாற்று கவுன்சில், புதுடெல்லி (1990), குல்பன்கின் பவுண்டேஷன், போர்ச்சுக்கல் (1991). பன்னாட்டு விவகாரங்கள், அமெரிக்கா (1996) டொயோட்டோ பவுண்டேஷன், ஜப்பான் (1996), மலேசியச் சமூகவியல் சங்கம், மலேசியா (1998), எம்.இ.பி. பிரான்ஸ், (1999) ஆகியவற்றின் ஆராய்ச்சி விருதுகளைப் பெற்றவர். இவரது பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் பன்னாட்டு ஏடுகளில் வெளிவந்துள்ளன.

ISBN - 81- 85452 - 13 - x